த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—408

# ஜப்பானிய வரலாறு

(பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்

புலவர் பேரா. கோ. தங்கவேலு, எம்.ஏ., பி.லிட்.,
பதிப்பாசிரியர்,
தமிழ்நாட்டு வரலாற்று வெளியீட்டகம்,
குறளகம், சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — January, 1973
Revised Edition — December, 1977
Number of Copies — 2000

T.N.T.B.S. (C.P.) No. 408



**HISTORY OF JAPAN**

G. THANGAVELU

**Price Rs. 7-50**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed by*
BHAGAT PRINTERS,
55, Railway Station Road,
Alandur, Madras-600 016.

# அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினை ந்தாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்களின் பாடங்கள் அனைத் தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். நாடு முழுவதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், மெய்ப்பொருளியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய பல துறைகளில் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான 'ஜப்பானிய வரலாறு' என்னும் இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் வெளியான 408ஆவது வெளியீடாகும். தமிழ் மக்களின் பேராதரவினாலும் தமிழைப் பயிற்சிமொழியாகக் கொண்டவர்களின் நல்லூக்கத் தினாலும் இதன் முந்தைய பதிப்புப் படிகள் அனைத்தும் விற்பனை யாகிவிட்டன. ஆதலின், இப்பொழுது இந் நூல் மீண்டும் வெளி வருகிறது. இந் நூல் மைய அரசு கல்வி சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த் தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம்பெற வேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கலையியற் பாடங்களையும் தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள் அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளர வேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழ கத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

செ. அரங்கநாயகம்

ஜப்பானின் மூடிய கதவுகள் வலுக்கட்டாயமாகத் திறக்கப்பட்ட தால் மீண்டும் ஜப்பானியர் வெளியுலகோடு தொடர்புகொள்ள முற்பட்டனர். மேலை நாகரிகமும் அறிவியலும் அந்நாட்டினுள் புகுந்தன.

கி. பி. 1867ஆம் ஆண்டில் படையாட்சி முறை ஒழிக்கப் பட்டதால் இதுவரை நடைமுறையிலிருந்த இரட்டையாட்சிமுறை அழிந்து மாமன்னரின் நேர்முக ஆட்சி ஏற்பட்டது. கி. பி. 1868ஆம் ஆண்டில் மாமன்னர் தமது பண்டுரிமைகளை மீட்டு, முழு ஆட்சிப் பொறுப்பையும் தானே ஏற்று அரியணையிலமர்ந்து ஆட்சி செய்யத் தலைப்பட்டார். இந் நிகழ்ச்சியே அந் நாட்டு வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்ததெனலாம். 1869ஆம் ஆண்டு முதல் 1912ஆம் ஆண்டு வரை அந் நாட்டில் ஏற்பட்ட மேசி ஆண்டுமானம் (மேஜி சகாப்தம்) அந் நாட்டு வரலாற்றை முழுமையாக மாற்றியமைத்துவிட்டது. இதனால் அந் நாட்டு அரசியல், பொருளியல், குமுகம், சமயம், கல்வி முதலிய துறைகளிலும் வியத்தகு மாற்றங்களும், விரைவான முன்னேற்றங்களும் ஏற்பட்டன. இத்தகைய மாற்றங்கள் பிற நாட்டு வரலாற்றில் ஏற்படும்போது மன்னரின் நிலைமை ஆட்டங் கண்டதை அறிவோம். ஆனால், அவற்றிற்கு மாறாக இக் காலத்தின் கருத்தாவாக விளங்கிய மேசி மாமன்னரை மக்கள் தெய்வத்தின் திருவுருவாய்க்கொண்டு எல்லை யில்லாப் பத்தியில் ஆழ்ந்து போற்றினர். எனவேதான் இவ்வாண்டுமானத்தை உலக வரலாற்றிலேயே மிகச் சிறந்த காலமாகக் கருதுகிறோம். இவ்வாண்டுமானத்தின் முடிந்த விளைவு ஜப்பான் ஒரு ‘புதுமை நாடாக்கப்பட்டதுதான்’.

இதுவரை ஒரு சின்னஞ்சிறு நாடாகவும், ஆசிய இனத்தைச் சேர்ந்த மக்களைக் கொண்டதாகவும், மேலைநாடுகளால் தாழ்வாகக் கருதிப் புறக்கணிக்கப்பட்டதுவுமான ஜப்பான், 1894–95ஆம் ஆண்டில் சீனாவுடனும் 1904–05ஆம் ஆண்டில் உருசியாவுடனும் போரிட்டு வெற்றிபெற்றது. இப் போர்களால் அதன் நிலப் பரப்பும், செல்வமும், செல்வாக்கும் அதிகரித்ததோடு நிறச் செருக்குக் கொண்ட பிரிட்டனும் 1902ஆம் ஆண்டில் அதனுடன் ஒரு வாணிக உடன்படிக்கை செய்துகொண்டதெனில், ஜப்பான் வல்லரசுகளால் மதிக்கப்படும் ஒரு வல்லரசாக மாறிவிட்டதை யன்றோ நமக்குப் புலப்படுத்துகிறது! முதல் உலகப் போருக்குப் பின் அதன் பெருமையும் வலிமையும் மேலும் உயர்ந்தன. ஆளுமை மனப்பான்மையால், சீனாவை எதிர்த்து இரண்டாம் முறையாக (1937–45) அது மேற்கொண்ட போரே அதனை

இரண்டாம் உலகப் போரில் மூழ்கச் செய்துவிட்டது. இதன் முடிவுதான் நேசநாடுகளில் ஒன்ருன அமெரிக்கா, இரோசிமா விலும் நாகசாகியிலும் தனது அஞ்சத்தக்க அணுக்குண்டுகளை வீசி ஜப்பானை எல்லையில்லாத் துன்பத்துள் ஆழ்த்தி இரண்டாம் உலகப்போருக்கு ஒரு முடிவு கண்டது.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜப்பான் நேச நாடுகளின் மேலாளுமையின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. ஏறத் தாழ ஏழு ஆண்டுகட்குப் பின் நேச நாடுகளின் கைகளிலிருந்து விடுபட்டு 1952ஆம் ஆண்டு, ஏப்ரல் முதல் ஒரு தன்னுரிமை பெற்ற நாடாக வாழத் தொடங்கியது. அன்றிலிருந்து இன்று வரை இந்த இருபதாண்டுகளில் ஜப்பான் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் வெற்றிகளையும் நாம் ஊன்றி நோக்கினுல், அந் நாட்டு மக்களின் தளரா வுழைப்பும், தன்னம்பிக்கையும், கடமையுணர்வும், மாந்தக் குமுகாயத்தில் அவர்கள் கொண்டுள்ள பற்றும் பாசமுமே கரணியமாமென்பதை அறியலாம். பல்லாயிரக்கணக்கான சின்னஞ்சிறு தீவுகளையும், எண்ணிறந்த இயற்கையிடர்ப்பாடுகளையும் கொண்டுள்ள ஜப்பானின் மொத்த நிலப்பரப்பு இந்திய நிலப்பரப்பில் ஒன்பதிலொரு பங்கேயாகும். இதில் காடு கரம்புகள், மேடுபள்ளங்கள் எண்பது விழுக்காடாகும். உலக நிலப்பரப்பில் 0·3 விழுக்காட்டிற்கும் குறைவான நிலப்பரப்பைக் கொண்டுள்ள ஜப்பான் நாடு, இன்று உலகத்தின் கவனத்தையெல்லாம் தன்பால் ஈர்க்கும் ஆற்றலைப் பெற்றுவிட்டது. குறிப்பாக, அதன் தொழில்நுட்பக் கருவிகள் அறிவியல் துறையில் உலக நாடுகளில் முதலிடம் பெற்று விளங்கும் அமெரிக்க நாட்டுச் சந்தைகளில் பெருமளவில் விற்கப் படுகின்றன. தன் படைவலியால் மேலை வல்லரசு நாடுகளொடு தானும் ஒன்ருக வைத்து மதிக்கப்படுகிறது.

இவையேயன்றிக் கல்வி, பண்பாடு, ஒழுக்கம், உலகச்சமைதி, பிறநாடுகளுக்குதவும் மாந்தநேயம் முதலியவற்றிலும் ஜப்பான் முதலிடம் பெறுகிறது. இத்தகைய நிறுவனங்களில் தான் உறுப் பாண்மை பெற்றுச் சிறந்த பணிகளைச் செய்து வருகிறது. 1970ஆம் ஆண்டில் ஜப்பானில் உலகப் பொருட்காட்சி (Expo '70) தொடங்கியபோது உலக நாடுகளின் கவனமனைத்தும் அதன் பக்கம் திரும்பியது. இவ்வரங்கில் எழுபத்தேழு நாடுகள் பங்கேற்றன. இதுவரை ஆசியாவிலேயே இத்தகைய மாபெரும் பொருட்காட்சி நடந்ததேயில்லை யெனலாம். இது 'மாந்தக் குமுகாயத்தின் முன்னேற்றத்திற்கும் ஒற்றுமைக்குமான நம்பிக் கையின் உருவம்' எனப் பலரும் புகழ்ந்தனர். இதைப் போலவே விளையாட்டரங்கிலும் ஜப்பான் முன்னின்று உலக நட்புறவை

இதன்மூலம் வளர்க்கிறது. 1967ஆம் ஆண்டு பன்னாட்டு விளையாட்டரங்கம் (Olimpic Sports) தோக்கியோவில் அமைக்கப்பட்டது.

இவ்வாறு ஜப்பான் புதுமை அறிவியற் கலைகளில் மிக விரைவாக முன்னேறியிருந்தாலும் தனது பண்டைய கலைகளையும், பண்பாட்டையும் பொன்னேபோல் போற்றிக் காக்கிறது. இன்று ஒன்றிய நாடுகளவை (U.N.O.)யில் ஜப்பான் தீவிரப் பங்கேற்று, உலக மக்களின் நல்வாழ்வுக்கும் ஒற்றுமைக்கும் சிறந்த பணிகளை ஆற்றி வருகிறது. அறிவியல், கலையியல், பண்பியல், படையியல், பன்னாட்டு உறவியல் முதலியன எல்லாவற்றிலும் சிறந்தோங்கி நின்று, ஒவ்வொரு நாளும் உலகமக்களின் கவனத்தைத் தன்பால் ஈர்த்துக் கொண்டிருக்கும் ஜப்பானிய நாட்டு வரலாற்றின் கருக்கம், அந் நாட்டு மக்களிடமுள்ள தன்னம்பிக்கை, தளராவுழைப்பு, அன்பு, பண்பு, அரச பத்தி ஆகியவையேயாகும். எனவே, இந் நாட்டு வரலாற்றை எந் நாட்டு மக்களும் அறிந்து கொள்ள வேண்டியது மாந்தநேயக் கடமையாகும்.

கோ. தங்கவேலு

# பொருளடக்கம்

## படவிளக்க அட்டவணை

# ஜப்பானிய வரலாறு

# 1. நிலவியலும் மக்கள் வாழ்க்கையும்

## நில அமைப்பு

உலகெலாம் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும்போது உதய சூரியனைக் கண்டு மகிழும் நாடு ஜப்பான் நாடாகும். எனவே, இதனை உதய சூரியன் நாடு என்கிறோம். ஐரோப்பாவின் வடமேற்கிலமைந்துள்ள பிரிட்டானியத் தீவுகளைப் போலவே ஆசியாவின் கீழ்த்திசையில் ஒரு பிறைவடிவத்தைப் போல சங்கிலித்தொடரெனக் கோர்த்து நிற்கும் மூவாயிரத்து முந்நூறு தீவுகளைக் கொண்டதே ஜப்பான் நாடு. இஃது ஏறத்தாழ 3,77,384 சதுரக் கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. ஜப்பான் 31° வட குறுங்கோட்டிலிருந்து 45° வட குறுங்கோடு வரையில் பரவியுள்ளது. வடக்கிலிருந்து தெற்கு வரை 2,400 கிலோ மீட்டர் தொலைவுள்ளது. அஃதாவது ஜப்பானின் பரப்பு அமெரிக்க ஒன்றிய நாடுகளின் (U.S.A.) பரப்பளவில் இருபத்தைந்தில் ஒரு மடங்கும், இந்திய நிலப்பரப்பில் ஒன்பதில் ஒரு மடங்கும், ஆனால் பிரிட்டனைப்போல் ஒன்றரை மடங்கு அதிகமாகவும் உள்ளது. ஜப்பான் நாட்டின் மொத்தப் பரப்பளவில் ஏறத்தாழ எண்பது விழுக்காடு காடுகளும் மலைகளும் படர்ந்துள்ளன. எஞ்சியுள்ளதில் பதினெட்டு விழுக்காடு நிலம் ஆற்றுப் படுகைகளாகவும், வண்டல் மண் படிந்த ஆற்றுச் சமவெளிகளாகவும் காணப்படுகின்றது. இச் சமவெளிகளில்தான் ஜப்பானியர் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பயிரிட்டுக் கொள்கின்றனர். சுருங்கக் கூறின் ஜப்பானின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ ஆறிலொரு பகுதியே வேளாண்மைக்கு ஏற்றதாக இருக்கிறது. ஒவ்வொரு சதுரக் கல்லுக்கும் ஒன்பது கல் நீளமுள்ள கடற்கரை இருப்பதால் மீன் வகைகள் இவர்களின் உணவுப் பற்றாக்குறையை ஒருவாறு நிரப்புகின்றது.

### தோற்றமும் அமைப்பும்

ஜப்பான் பலவாயிரம் தீவுகளைக் கூட்டமாகத் தன்னகத்தே கொண்டிருந்தபோதிலும் அவற்றில் தலையாயனவாக நான்கு

பெரும் தீவுகளைக் கொள்ளலாம். அவை வடக்கேயுள்ள ஒக்கைதோ, நடுவிலுள்ள ஒன்சு, தெற்கிலுள்ள சிக்கொக்கு, குயூசு ஆகியவை யாம். ஒக்கைதோ 78,513 ச.கி.மீ. பரப்பளவும், ஒன்சு 2,30,722 ச.கி.மீ. பரப்பளவும், சிக்கொக்கு 18,772 ச.கி.மீ. பரப்பளவும், குயூசு 41,993 ச.கி.மீ. பரப்பளவும் கொண்டவையாகும். (ஜப்பான் உலக நிலப்பரப்பில் 0·3%-க்கும் குறைவாகவே உள்ளது.) இத் தீவுகள் யாவும் ஆசியாவின் கடற்கரையிலுள்ள காம்சட்காவிற்கும் தென்கோடியிலுள்ள மலேயாத் தீவக் குறைக்கும் இடையிலும், வடக்கிலுள்ள குர்லித் தீவுக் கூட்டத்திற்கும், தெற்கிலுள்ள தைவான் அல்லது பார்மோசாத் தீவுக்குமிடையிலும் பரவியுள்ளன. ஜப்பான் நாட்டின் தோற்றம் பற்றி அந்நாட்டில் வழங்கப்படும் தொன்மங்கள் (Puranas) பல விரிவான கதைகளைக் கூறுகின்றன. இத் தீவுக் கூட்டங்கள் இசனுகி, இசனுமி ஆகிய பழந் தம்பதியர் தேவுலகத்திற்கும் புவியுலகத்திற்கும் இடையில் நின்று கொண்டு மணிகள் பதிக்கப்பட்ட, தேவப் பெருமை பொருந்திய ஈட்டியொன்றினைப் புவியுலகத்திலுள்ள கடலில் ஊன்றியிழுக்கும் போது அவ்வீட்டியிலிருந்து சிதறிய நீர்த்துளிகள்தாம் ஜப்பானியத் தீவுகளாயினவென்று இத் தொன்மங்கள் புகல்கின்றன இவர்கள் கதிரவனைப் பகலிலும், வெண்ணிலவை இரவிலும் இத் தீவுகளை ஆளும்படிப் பணித்தார்கள். மற்றும் நீர், நிலம், தீ, வளி, வான் ஆகிய ஆற்றல்களைப் படைத்த தேவதைகளும் இத் தீவில் ஆங்காங்கே தோன்றின. இவற்றிற்கெல்லாம் தலைமையேற்ற அகசிட்டு என்னும் தேவதையின் பெயரனே அகசிடனசு எனப்படும் கதிரவனுவான். இவன் ஒரு குகையில் மறைந்திருந்து மீண்டும் எழுந்த நாளிலிருந்து இவனைத் தங்கள் தலைவனாக ஜப்பானியர் போற்றத் தொடங்கினர். இவனுடைய வழித்தோன்றலே ஜப்பானிய நாட்டின் முதற் பேரரசரான சிம்மு தென்னோ ஆவார். எனவே தான் ஜப்பானியர் தங்கள் அரசரைத் தேவன் வழி வந்தவரென்றும், உதய சூரியன் வழி வந்தவரென்றும் கொண்டு உதயசூரியனை வணங்குகின்றனர்.

நிலநூல் வல்லுநர்கள் இந்த ஜப்பானியத் தீவுகள் கடல்களின் இடையிலே அலைகளின் மோதலால் ஏற்பட்டவை என்கின்றனர். நிலநூலறிஞர் வில்லிசு (Willis) என்பார் ஆறு கோடி ஆண்டுகளுக்கு முன் விரிந்து கிடந்த நிலப்பரப்பின் பெரும்பகுதி பசிபிக் மாகடலுள் ஆழ்ந்துவிட்ட தென்றும், எஞ்சியதே இன்றைய ஜப்பான் என்றும் கருதுகிறார். எனவேதான் எஞ்சியுள்ள நிலப் பரப்பில் அடிக்கடி எரிமலைகள் குமுறுகின்றனவென்றும், ஜப்பானில் உள்ள மலைகளில் பல ஏறத்தாழ ஆறு கோடி ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டவையென்றும் இவர் ஊகிக்கின்றார்.

ஜப்பான் தீவுகளின் கிழக்குக் கடலோரப் பகுதிகள் ஏறத்தாழ 20,000 அடியிலிருந்து 30,000 அடி வரை ஆழமுள்ளவை. தோக்கியோ வளைகுடாவுக்குப் பக்கத்திலுள்ள பசிபிக் மாகடலின் ஆழம் 34,600 அடியாகவுள்ளது. எனவேதான் ஜப்பான் நாட்டில் காணப்படும் மலையுச்சிகள் கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ ஏழு அல்லது எட்டுக் கல் உயரமுள்ளன. இவ்வாறு கடல்மட்டத்தி லிருந்து மிக உயரமான இடங்களில் மலையுச்சிகள் அமைந்திருப்ப தாலும், அவை ஒன்றோடொன்று பின்னிக் கிடப்பதாலும், இடை யிடையே விரைந்தோடும் ஆறுகளைக் கொண்டிருப்பதாலும், நாற் புறமும் ஆழமான கடல்களால் சூழப்பட்டிருப்பதாலும் அடிக்கடி ஜப்பானில் நிலநடுக்கங்களும், எரிமலைக் குமுறல்களும், புயற் காற்றுகளும், ஆறுகளின் பெயர்ச்சிகளும் ஏற்படுகின்றன. ஆண் டொன்றுக்கு ஏறத்தாழ 1500 நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. அஃதாவது நாளொன்றுக்கு ஏறத்தாழ நான்கு நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. கி.பி. 1596-லிருந்து இன்றுவரை இருபத்தொரு மிகப்பெரும் நிலநடுக்கங்கள் தோன்றி மிகப் பேரளவில் அழிவை யுண்டாக்கியுள்ளன. இவற்றில் இறந்தவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்கா.

ஜப்பானின் கடற்கரை ஏறத்தாழ 27,200 கிலோ மீட்டர் நீளமுள்ளது. அஃதாவது இதன் நிலப்பரப்பில் ஒவ்வொரு 13.5 சதுரக் கிலோ மீட்டருக்கும் ஒரு கிலோ மீட்டர் கடற்கரை உள்ளது. தாழ்ந்த நிலப்பரப்புகளும் சமவெளிகளும் இக் கடற் கரையோரங்களில் அமைந்திருப்பதால் ஜப்பானியக் கடற்கரைக்கு மிகுந்த முகாமை ஏற்பட்டிருக்கிறது. அதிகமான விளைநிலங்களும் அதிக மக்கள் தொகையைக் கொண்ட நகரங்களும் இக் கடற்கரை யோரங்களில்தாம் அமைந்துள்ளன. எனவேதான் ஜப்பான் நாட்டு மக்கள் சிறந்த மீகாமன்களாகவும், மீன் பிடிப்பவர்களாக வும் திகழ்கின்றனர். ஜப்பானியத் தீவுகள் ஆசியாக் கண்டம் முடியும் பகுதியிலிருந்து கடலாற் பிரிக்கப்பட்டு, கடல்களாற் சூழப்பட்டு, நீண்ட கடற்கரைகளைக் கொண்டு அக் கடற்கரை முழுவதும் பத்தாயிரம் அடிக்குக் குறையாத கடல் ஆழத்தைக் கொண்டிருப்பதால் இவற்றைக் கடலலைத் தீவுகள் என்கின்றனர்.

## தட்பவெப்பம்

ஜப்பான் 31° நிலக்குறுங்கோட்டிலிருந்து 45° நிலக் குறுங் கோடு வரையிலும், 30° நிலநேர்க் கோட்டிலிருந்து 50° நில நேர்க்கோடு வரையிலும் பரவியிருக்கிறது. இதன் நாற்புறமும் கடல் சூழ்ந்திருக்கிறது. இதன் நிலப்பரப்பில் 65% காடுகளும் மலைகளும் நிறைந்துள்ளன. இவற்றில் காணப்படும் உயரமான

மலைமுகடுகளும், தாழ்வான பள்ளத்தாக்குகளும், இவற்றிடையே ஓடும் குறுகிய—ஆனால் விரைவான ஆறுகளும் உலகத்திலேயே மிக விரைவான நீரோட்டத்தைப் பெற்றுள்ளன.

ஜப்பான் தீவுகள் வட சீனாவைப் போலவே சம தட்பவெப்ப மண்டலத்தில் அமைந்துள்ளன. தென்கிழக்குப் பருவக் காற்றினால் கோடைக் காலத்தில் இத் தீவுகள் எல்லாவற்றிலும் மழை பெய்த போதிலும் தெற்கு, தென்கிழக்குப் பகுதிகளில் அதிக மழை பெய்கிறது. பொதுவாக ஜப்பானில் ஆண்டொன்றுக்கு 1,000 முதல் 2,500 மில்லி மீட்டர் வரை மழை பெய்கிறது. குளிர் காலத்தில் வடக்கேயுள்ள ஒக்கைதோத் தீவின் மேற்குப் பாகத்தில் அதிக மழை பெய்கிறது. ஜப்பானின் தென்கிழக்குக் கரை யோரத்தில் 'கியூரோசிவோ' என்னும் வெப்ப நீரோட்டம் ஓடுகிறது. அதேபோல் ஒக்கைதோ, ஒன்சுத் தீவுகளின் கிழக்கு ஓரமாகக் குளிர்ந்த 'கியூரைல்' நீரோட்டம் செல்கிறது. இவ்விரண்டு நீரோட்டங்களும் சந்திக்கும் இடத்தில் மூடுபனிகள் ஏற்படுகின்றன.

பொதுவாகவே ஜப்பானின் தட்பமும் வெப்பமும் கடுமையற்றுக் காணப்படுகின்றன. வேனிற்காலம் வெப்பமாகவும் புழுக்கமாகவும் இருக்கிறது. இது பொதுவாக மழைக்காலத்தைத் தொடர்ந்து ஜூன் மாத நடுவில் தொடங்கி, ஏறத்தாழ நான்கு கிழமைக் காலம் நீடிக்கிறது. ஜப்பானில் வேனிற்காலமும், இலையுதிர் காலமும்தான் மிகச் சிறந்த பருவங்களாகும். இப் பருவங்களில் கதிரவனொளி இதமாக இருக்கும். இளவேனிற் காலத்தில் செர்ரி மரங்கள் பூத்துக் குலுங்கும் அழகும், இலையுதிர் காலத்தில் வண்ண இலைகள் உதிரும் அழகும் கண்கொள்ளாக் காட்சிகள் ஆகும். ஜப்பான் இத்தகைய அற்புதமான தட்பவெப்பங்களைக் கொண்டுள்ளதற்குக் கீழ்க்கண்ட நான்கு வகைக் கரணியங்களைக் கூறலாம்: 1. மழைக்காலத்தில் மையச் சைபீரியாவிலிருந்தும், மஞ்சூரியாவிலிருந்தும் ஜப்பானை நோக்கிக் குளிர்காற்று வீசுகிறது. 2. ஜப்பானின் வடக்கேயுள்ள ஒக்காட்சுக் கடலிலிருந்தும், வட கிழக்கேயுள்ள பசிபிக் மாகடலிலிருந்தும், குளிர்ந்த காற்று ஜப்பானை நோக்கி வீசுகிறது. 3. கோடைக் காலத்தில் குறிப்பாகப் பசிபிக் மாகடலிலிருந்து ஜப்பானை நோக்கி வீசும் காற்று கோடையின் வெப்பத்தைத் தணிக்கிறது. 4. குளிர் காலத்தில் சீனாவின் நடுவிலுள்ள யாங்கிடிசியாங் பள்ளத்தாக்கிலிருந்து ஜப்பானை நோக்கி வீசும் வெப்பக் காற்று ஜப்பானின் கடுங் குளிரைக் குறைக்கிறது. இவ்வாறு நிலப்பகுதிகளிலிருந்து வீசும் காற்று தட்பத்தைக் குறைக்கவும், நீர்ப் பகுதியிலிருந்து வீசும்

குளிர் காற்று வெப்பத்தைக் குறைக்கவும் உதவி, ஜப்பானை மிதத் தட்பவெப்ப நாடாக வைத்திருப்பதோடு நல்ல மழை பெய்யவும் உதவுகின்றன. இவற்றைத் தவிர ஜப்பானின் மிதமான பருவங்களுக்கு அத் தீவுகளைச் சூழ்ந்துள்ள கடல்களும், தட்பவெப்ப நீரூற்றுகளும், அத் தீவுகளின் மொத்தப் பரப்பில் அறுபத்தைந்து விழுக்காடு பரவியுள்ள காடுகளும் காரணங்களாகும். ஜப்பான் கடல் எப்பொழுதும் வெப்பமாகவே இருக்கும். எனவே, குளிர் காலத்தில் இக் கடற்காற்று ஜப்பானை நோக்கி வீசுவதால் இதமான வெப்பநிலை ஏற்படுகிறது. அத்துடன் குளிர் காலத்திலும் ஜப்பானில் மழை பெய்ய இவ் வெப்பக் காற்று உதவுகிறது.

ஜப்பானில் அடிக்கடி புயற்காற்றுகள் ஏற்படுகின்றன. ஜப்பான் தீவுகளின் அமைப்பாலும், நாற்புறமும் கடல்களிலிருந்து ஜப்பானை நோக்கி வீசும் காற்றுகள் ஒன்றோடொன்று மோதிக் கொள்வதாலும் இத்தகைய புயற்காற்றுகள் ஏற்படுகின்றன. இவை குறிப்பாகக் குளிர்காலங்களில்தாம் அதிகமாக ஏற்படுகின்றன. இதனால் சில சமயங்களில் ஜப்பானிலுள்ள ஆறுகள் பெருக்கெடுத்துக் கரைபுரண்டோடி நெல்வயல்களையும், பழமரங்களையும், தோட்டங்களையும் அழித்து, வீடுகளையும் இடிந்து விழச் செய்கின்றன.

கோடை மிகக் கடுமையாக இருக்கும்போது ஜப்பானியர் உயர்ந்த மலையுச்சிகளிலுள்ள கோடை வாழிடங்களுக்குச் செல்வர். கோடைக் காலத்தில் வட ஜப்பானில் 65°F-லிருந்து 68°F-க்குக் கீழாகவும், மைய-தென் ஜப்பானில் 77°F-லிருந்து 80°F-க்குக் கீழாகவும் வெப்பம் இருக்கும். குளிர் காலத்தில் வட ஜப்பானில் 14°F-க்குக் கீழும், மைய ஜப்பானில் 38°F-க்குக் கீழும், தென் ஜப்பானில் 45°F-க்குக் கீழும் வெப்பம் இருக்கும். எனவே, வடக்கில் ஆண்டொன்றுக்கு 120-லிருந்து 130 நாள்களும், நடுவிலும் தெற்கிலும் 260 நாள்களும் நல்ல பருவ காலமாகவும் பயிரிடுவதற்கேற்ற காலமாகவும் இருக்கும். அஃதாவது வடக்கை விட மைய, தென் ஜப்பானிய நாடுகள் இரண்டு மடங்கு வேளாண்மைக்கேற்ற நல்ல பருவங்களைப் பெற்றிருக்கின்றன.

ஜப்பானில் மிக அதிக மழையைப் பெறும் இடங்கள் மூன்று ஆகும். அவை: 1. தென் கிழக்கேயிருந்து வீசும் பசிபிக் மாகடற் காற்றைப் பெறும் ஃபூசியாமா வரையுள்ள நிலப்பரப்பு. 2. ஜப்பான் கடலிலிருந்து வீசும் பருவக் காற்றைப் பெறும் ஃபூசியாமாவிலிருந்து அகிதா வரையுள்ள நிலப்பரப்பு. 3. மைய ஜப்பானில் ஒன்சுத் தீவில் உயர்ந்த நிலப்பரப்புகள். இவ்விடங்களில்

ஏறத்தாழ 120 அங்குலத்திற்கும் மேலாக மழைபெய்கிறது. ஆனல், ஒன்சுத் தீவின் வடபகுதியும், ஒக்கைதோத் தீவும் குறைந்த அளவே மழையைப் பெறுகின்றன. மழைக்காலத்தில் ஒக்கை தோவிலுள்ள சப்போரோவில் 367 சென்டிமீட்டர் பனி பெய்கிறது. எனவே, டிசம்பரிலிருந்து மார்ச்சு வரை நான்கு மாதங்கள் ஒக்கைதோத் தீவின் பெரும்பகுதி பனியால் மூடப்பட்டிருக்கும். ஆண்டின் 120 நாள்களே இத் தீவில் பனி மழை பெய்வதில்லே. ஜப்பானுக்குப் பேரழகைக் கொடுப்பது பனிபடர்ந்த மலேகளும், ஏரிகளும், பாறையின் இடுக்குப்பாதைகளும், புரண்டோடும் ஆறுகளும், கரடுமுருடான மலேயுச்சிகளும், இயற்கையான மலே அருவிகளும், அடர்ந்த காடுகளும், ஓங்கி வளர்ந்த மரங்களுமே யாகும். எனவேதான் ஜப்பானே எத் திசையிலிருந்து நோக்கினுலும் வனப்பான பசுமைத் தோற்றத்தையே காண்கிருேம்.

## மலேகள்

ஜப்பான் நிலப்பரப்பில் ஏறத்தாழ 80% காடுகளும் மலேகளு மாகும். ஒவ்வொரு தீவிலும் மலேத்தொடர்களின் சந்திப்புகள் பல இருக்கின்றன. இம் மலேத்தொடர்கள் கோடு கிழித்தாற் போல் நேர் நேராகச் செல்லாமல் தாறுமாருகச் சென்று பலவிடங் களில் பாமீர் முடிச்சுப்போல் கூடுகின்றன. அவ் வகையான மலே முடிச்சுகளில் குறிப்பிடத்தக்கவை ஒக்கைதோத் தீவிலுள்ள ஒக்கைதோ மலே முடிச்சும், ஒன்சுத் தீவிலுள்ள கிஃபூ (Gifu) மலே முடிச்சும் ஆகும். கிஃபூ மலேமுடிச்சுக்கு அண்மையிலுள்ள நிலப் பரப்பு, காற்றின் அழுத்தத்தை அதிகமாகக் கொண்டிருப்பதால் அங்கு உலகிலேயே மிகப்பெரிய ஃப்யூசியாமா எரிமலே அமைந்திருக் கிறது. இதனே 'உறங்கும் எரிமலே' என்பர். இந்த எரிமலேயின் உயரம் 3,776 மீட்டராகும். இம் மலே கடைசியாக 1707-ல் குமுறியது. மொத்தத்தில் ஜப்பான் நாட்டில் 196 எரிமலேகள் உள்ளன. அவற்றில் 58 மலேகள் இன்னும் குமுறுகின்றன. இந்த எரிமலேகளில் தோன்றும் ஊற்றுகள் வெந்நீரூற்றுகளாகவே இருக் கின்றன. மேலும் இந் நீரூற்றுகள் கனிப்பொருள்களேயும் அடித்துக்கொண்டு வருவதால் மருத்துவத்திற்கும், சுற்றுலாப் பயணங்களுக்கும் பயன்படுகின்றன. ஜப்பானிலுள்ள மலேகளில் 250 மலேகள் 2,000 மீ. உயரத்திற்கு மேற்பட்டவை.

## காடுகள்

ஜப்பானின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பாகம் அஃதாவது 75 மில்லியன் எக்டேர்கள் இயற்கைக் காடுகளாய் உள்ளன. மொத்தக் காட்டு நிலப்பரப்பில் நான்கில் ஒரு பங்கில்

செயற்கைக் காடுகளை ஜப்பானியர் உண்டாக்கியிருக்கின்றனர். இக் காடுகளிலிருந்துதாம் நாட்டிற்குத் தேவையான கட்டட மரங்கள், தாள்கூழ், வீட்டிற்குப் பயன்படும் எரி பொருள்கள் முதலியன கிடைக்கின்றன. ஆயினும், ஜப்பானுக்குப் பயன்படும் மர வகைகளில் பெரும்பாகம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. சிற்றூர்ப் பகுதிகளைத் தவிர நகர்ப்புறங்களில் கட்டடங்கள் கட்டவும், எரிபொருள்களுக்கும் மரங்கள் அதிகமாகப் பயன்படுவதில்லை. இங்கெல்லாம் மின்சாரத்தையே எரி பொருளாகப் பயன்படுத்துகின்றனர். கட்டடங்கள் பைஞ்சுதையால் கட்டப்படுகின்றன.

## ஆறுகள்

ஜப்பான் நாட்டில் ஓடும் ஆறுகள் வேகமாக, குறைந்த தொலைவே ஓடும் ஆறுகளாகும். எனவே, இவ் வாறுகள் பாயும் நிலப்பரப்பில் குறுகலான சமவெளி நிலங்களும், கப்பலோட்டத்திற்குப் பயன்படும் ஆழமான நீரோட்டங்களும் ஏற்பட்டுள்ளன. ஜப்பானில் ஓடும் 24 பெரிய ஆறுகளில் 8 ஆறுகள் 100 கல் நீளத்திற்குள்ளும், 14 ஆறுகள் 100 கல்லிலிருந்து 200 கல் நீளத்திற்குள்ளும் ஓடுகின்றன. ஒக்கைதோவிலுள்ள இசிகாரி ஆறும், ஒன்சுவிலுள்ள சினுமோ ஆறும் 200 கல் நீளத்திற்கு மேல் ஓடுகின்றன. ஆறுகள் மிக உயரமான இடங்களிலிருந்து பள்ளத்தை நோக்கிக் குறுகிய தொலைவிற்கு விரைவாக ஓடுவதால் மின்விசை உருவாக்குவதற்குப் பெரிதும் பயன்படுகின்றன. ஆனல், மழைக் காலங்களிலும் பனி உருகி ஓடுங் காலங்களிலும் இவை கரைபுரண்டு சேதங்களை விளைவிக்கின்றன.

## மக்கள் இனம்

இன்றைய ஜப்பானிய மக்கள் மங்கோலிய இனத்தின் வழிவந்தவர்கள் என மாந்தனூல் வல்லுநர் கருதுகின்றனர். ஆனல், இவர்களை இன்ன இனத்திலிருந்து வந்தவர்கள்தாம் எனத் துல்லியமாகக் கூற முடியாது. இன்று ஜப்பான் தீவுகளின் வடக்கிலமைந்துள்ள ஒக்கைதோத் தீவிலுள்ள ஐநு பழங்குடி மக்கள் ஒரு காலத்தில் ஜப்பான் முழுவதும் பரவியிருந்தார்கள். அவர்களின் வழித்தோன்றியவரே இன்றைய ஜப்பானிய மக்கள் ஆவர். ஆனல், மாந்தனூற்படி கூர்ந்து அன்வயப்படுத்தி நோக்கும் போது மங்கோலிய, நைசீரிய, எத்தனிய இனம் முதலிய பலதரப்பட்ட இனங்களின் சேர்க்கையாலுண்டான ஒரு கலப்பினத்தவரே ஜப்பானியர் என்பது தெளிவாகிறது.

இன்றைய ஜப்பானில் 1965ஆம் ஆண்டுக் கணக்குப்படி 9,82,74,961 மக்கள் வாழ்கின்றார்கள். இதில் சிக்கொக்குத் தீவில் மட்டும் பாதிப்பேர் வாழ்கின்றார்கள். பெருகிவரும் மக்கள் தொகையை நோக்கும்போது, இறப்புமேனி (விகிதம்) குறைந்து வருவதன் கரணியமாக, 1970ஆம் ஆண்டில் ஏறத்தாழ 10.3 கோடி மக்கள் ஜப்பானில் இருப்பார்கள் என்று அறிகிறோம். உலக மக்கள் தொகையில் ஜப்பான் ஏழாவது இடத்தைப் பெறுகின்றது. ஒரு சதுரக் கிலோமீட்டருக்கு 266 பேர் வாழ்கின்றனர். இதற்கு அடுத்து மக்கள் நெருக்கமுள்ள நாடுகள் நெதர்லாந்தும் பெல்சியமுமாகும். ஆனால், நடைமுறையில் நோக்கும்போது உலகிலேயே மிக அதிகமான மக்கள் நெருக்கம் கொண்ட நாடு ஜப்பான்தான். ஏனெனில், இந் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 65% காடுகளாகும். வேளாண்மைக்கேற்ற நிலம் மொத்த நிலப்பரப்பில் 16% ஆகும். ஆண்டுதோறும் ஏறத்தாழ பத்து இலக்கம் குழந்தைகள் பிறக்கின்றன. எனவே, ஜப்பான் நாட்டில் குடும்பக்கட்டுப்பாடு முறை பின்பற்றப்படுவதோடு ஒவ்வொரு ஜப்பானியனும் உழைப்பையே தன் மூச்சாகக் கொண்டு வாழ்ந்து உணவுச் சிக்கலைத் தீர்க்க முயல்கிறான். எனவேதான் மிகக்குறுகிய நிலப்பரப்பில் வாழும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட ஜப்பான், பெரு நிலப்பரப்பும் வாழும் வகைகளும் பெற்ற நாடுகளைவிட வளமாக வாழ்கிறது.

## வேளாண்மை

ஒரு காலத்தில் தேசியப் பொருளியல் அமைப்பின் முதுகெலும்பாய் விளங்கிய வேளாண்மை இன்று ஜப்பான் நாட்டின் இரண்டாந்தொழிலாய் மாறிவிட்டது. வேளாண்மைக்கேற்ற நிலம் மொத்த நிலப்பரப்பில் 16% என்பதனைப் பார்த்தோம். பத்துக் கோடி மக்களுக்கு மேல் வாழும் ஜப்பான் நாட்டின் உணவுப் பெருக்கம் போதிய அளவினதாக இல்லை. ஆயினும் ஜப்பானியர் புதுமையான முறையில் பயிரிடுவதால் ஓரளவு உணவுச் சிக்கல் குறைந்திருக்கிறது. ஜப்பானிய மக்களில் 33% வேளாண்மையில் ஈடுபட்டிருக்கின்றனர். 1955-ல் மொத்தத் தேசிய வருமானத்தில் வேளாண்மையின் வரவு 17.8% வந்தது. ஆனால் 1964-ல் 8.9% ஆகக் குறைந்துவிட்டது. ஏனெனில் 33% உள்ள வேளாளரின் குடும்பங்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் வேளாண்மையைத் துணைத் தொழிலாகக் கொண்டு விட்டனர். பொதுவாக மொத்த மக்கள் தொகையில் 22% வேளாண்மையிலும், 37% இயந்திரத்தொழில்களிலும், எஞ்சியுள்ளவர்களில் 4% தொகையினர் வேளாண்மையல்லாத தொழில்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஜப்பானில் உள்ள மொத்த விளைநிலம் 15 மில்லியன் ஏக்கர் தான். இங்கு விளைவிக்கப்படும் பயிர்களில் குறிப்பிடத்தக்கது நெல் ஆகும். உழவர்கள் சராசரி 2½ ஏக்கர் அளவுள்ள பண்ணை களாக இந் நிலங்களைப் பிரித்துப் பயிரிடுகின்றனர். உழவர்கள் தாங்கள் உழுது பயிரிடும் நிலங்களுக்குச் சொந்தக்காரர்களா யிருக்கிறார்கள். சமவெளி நிலங்களிலன்றி, மலைச்சரிவுகளிலும் மிகப்பெரிய படிக்கட்டுகளைப் போல் செதுக்கப்பட்டுள்ள மலைப்படிகளிலும் பயிரிடுகின்றனர். சிறுசிறு குன்றுகளையும், சிறிய மலைகளையும்கூட விளைநிலங்களாக மாற்றித் தீவிர நெருக்க மான சாகுபடி முறைகளைக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு நெருக்கமான இடங்களில் பயிரிடுவதற்கு இயந்திரக் கருவிகளைப் பயன்படுத்த முடியவில்லை. ஆனால், விளைநிலம் அதிக மாக இருக்கக்கூடிய ஒக்கைதோ போன்ற பகுதிகளில் புதிய இயந்திரக் கருவிகள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஜப்பானியர்களின் முகாமையான உணவாகிய அரிசி விளைப்பு ஓரளவு உயர்ந்திருக்கிறது. மொத்த விளைநிலத்தில் 85% நெல் பயிரிடப்படுகிறது. இதன் விளைப்பு சற்றேறக்குறைய 1½ கோடிக் கல்லெடை (Ton) ஆகும். நீர்ப்பாசன ஏந்துகள் இல்லாத இடங் களில் கோதுமை, பார்லி, சோயாபீன்சு, உருளைக்கிழங்கு முதலியன பயிரிடப்படுகின்றன. முசுக்கொட்டை மரங்களை வளர்த்தும், பட்டுப் பூச்சிகளை வளர்த்தும் ஆண்டொன்றுக்கு 13,000 கல்லெடை பட்டு உருவாக்கப்படுகிறது. தென் ஜப்பான் மலைச் சரிவுகளில் தேயிலை அதிகமாகப் பயிரிடப்படுகிறது.

ஒசாகோவுக்கு வடக்கிலுள்ள கொய்டோ நகரம் தேயிலை வாணிகத்திற்குப் பெயர் பெற்றதாகும். காடுகளில் மரங்களை வெட்டித் தாள்கூழ் உருவாக்கம், தீப்பெட்டிகள் செய்தல் முதலிய தொழில்களை இம் மக்கள் மேற்கொண்டுள்ளனர். நாகோயா நகரம் தீப்பெட்டிகள், பீங்கான் பொருள்கள் ஆகிய வற்றிற்குப் புகழ்பெற்றதாகும்.

ஜப்பானில் நல்ல மேய்ச்சல் நிலங்கள் இல்லாததால் கால் நடை வளர்ப்புக் குறைந்து காணப்படுகிறது. 1965-ல் பால் தரும் மாடுகள் 12,89,000 ஆகவும், இறைச்சிக்காகப் பயன்படக் கூடியவை 18,97,000 ஆகவுமிருந்தன. உணவு விளைப்பில் ஜப்பானுக்கு 80% தான் தன்னிறைவு ஏற்பட்டிருக்கின்றது. எஞ்சிய 20% உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து கொள் கிறது. எனவே, ஜப்பானியர்கள் தங்கள் உணவுப் பழக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி இறைச்சியையும், பாற்பண்டங்களையும், மீனையும் அதிகமாக உண்ணத் தொடங்கிவிட்டனர். பட்டுப்

பூச்சி வளர்க்கும் பரம்பரைத் தொழிலைப் படிப்படியாகக் குறைத்துச் சீனவகை ஆரஞ்சுகள், ஆப்பிள், பேரி ஆகியவற்றை அதிக அளவில் பயிரிடுகிறார்கள். இவ்வகைப் பழ விளைச்சல் ஜப்பானில் பெருகி இருப்பதால் சீனவகை ஆரஞ்சுகள், பீச் பழ வகைகள் அதிக அளவில் வெளி நாடுகளுக்கு அனுப்பப்படு கின்றன.

## மீன் பிடிக்கும் தொழில்

ஜப்பானைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் மீன்களும், மீன் வகை களும் செறிந்து காணப்படுகின்றன. தொன்றுதொட்டே ஜப்பானியர் தங்கள் உணவின் பெரும்பகுதியாக மீன்களையே உண்டனர். உலகில் பிடிக்கப்படும் மீன் செல்வத்தில் 50% ஜப்பானில் பிடிக்கப்படுகிறது. மற்ற எந்த நாட்டிலும் இவ்வளவு மீன் பிடிக்கப்படுவதில்லை. மீன் பிடிக்கும் தொழிலில் ஏறத்தாழ 15 இலக்க மக்கள் ஈடுபட்டிருக்கின்றனர். ஜப்பானியர் உண்ணும் இறைச்சிப் புரதங்களில் 57% கடல்வாழ் உயிரினங்களிலிருந்து கிடைக்கிறது. ஜப்பானில் கடலோரங்களிலும், கரைக்கு வெகு தொலைவிலும் மீன் பிடிக்கின்றனர். கடலோரப் பகுதிகளில் மீன் பண்ணைகளையமைத்து மீன் பிடிக்கின்றனர். இத்தகைய மீன் பண்ணைகள் ஆழமில்லாத கடற்பகுதிகளிலும் இப்பொழுது ஏற்படுத்தப்படுகின்றன. ஆழ்கடலில் வெகு தொலைவில் சென்று 'டிராகுலர்' போன்ற புதிய இயந்திரக் கருவிகளைக்கொண்டு மீன் பிடிக்கின்றனர். வடபசிபிக் கடலில் திமிங்கல வேட்டையாட ஜப்பானியர் செல்கின்றனர். தாய்க்கப்பல்களில் சென்று நடுக் கடலில் மீன்பிடித்து அங்கேயே பதப்படுத்தல், தகரப்பெட்டி களில் அடைத்தல் ஆகியவைகளை இயந்திரங்களைக்கொண்டு செய் கின்றனர். இவ்வாறு ஜப்பான் மீன்பிடிக்கும் தொழிலில் வெகுவாக முன்னேறியிருப்பதால் இந்நாட்டு ஏற்றுமதிப் பொருள்களில் மீன் ஏழாவது இடத்தைப் பெறுகின்றது. அத்தோடு புதிய முறையில் மீன் பண்ணைகளையமைத்தல், மீன் பிடித்தல் முதலிய நுணுக்கங் களைத் தென்கிழக்காசியா, இலத்தீன் அமெரிக்கா முதலிய இடங்களில் அமைக்க ஜப்பான் ஒத்துழைத்து வருகிறது.

## பஞ்சாலைத் தொழில்கள்

ஜப்பானில் ஆண்டொன்றுக்கு 340 கோடி சதுரமீட்டர் துணி உருவாக்கம் செய்யப்படுகிறது. ஆயினும் தேவைப்படும் மூலப் பருத்தி, மயிர் முதலியவற்றைப் பெரும்பாலும் அயல் நாடுகளி லிருந்தே இறக்குமதி செய்து கொள்கிறது. பருத்தியை அமெரிக்கா விலிருந்தும், மயிரை ஆஸ்திரேலியாவிலிருந்தும் அதிகம் பெறு

கிறது. சென்ற பத்தாண்டுகளில் இதளிய (இரசாயன) முறையில் தயாரிக்கப்படும் செய்யிழை, துணி உருவாக்கத்தில் அமெரிக்கா வுக்கு அடுத்த இடத்தை ஜப்பான் பெறுகிறது. 1963-ல் உலக உருவாக்கத்தில் ஜப்பான் 21.5% செய்யிழையை உருவாக்கியது. ஆனால், அதே சமயத்தில் ஜப்பானின் பருத்தி, பட்டுத்துணி உருவாக்கம் குறைந்து வருகிறது. 1930ஆம் ஆண்டுக்கு முன்பு உலகப் பட்டு உருவாக்கத்தில் 77% ஜப்பானில் உருவாயிற்று. ஆனால், இன்று ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்குப் போட்டியாக செய்யிழைத் துணி உருவாக்கத்தில் முன்னேறிக் கொண்டிருப்பதால் பருத்தி, பட்டுத்துணி உருவாக்கத்தில் குறைந்துவிட்டது. ஒசாகோ, தோக்கியோ ஆகியவை பட்டு நெசவுக்குப் புகழ்பெற்ற பட்டினங்களாகும்.

## கனிப் பொருள்கள்

ஜப்பானியக் கனிப் பொருள் வரலாற்றில் 1930-க்குப் பிறகு ஒரு பெரிய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. தொலைக்கிழக்கு நாடுகள் எல்லாவற்றிலும் மிக அதிகமான இரும்பையும் எஃகையும் உருவாக்குவதிலும் பயன்படுத்துவதிலும் முதன்மையில் நிற்பது ஜப்பான் நாடுதான். ஆயினும், இவையிரண்டுமே அதன் தேவைக்குப் பற்றுக்குறையாக உள்ளன. ஜப்பான் நாட்டில் கிடைக்கும் கனிப் பொருள்களின் மூலப்பொருள்கள் ஏறத்தாழ 80-லிருந்து 85 மில்லியன் கல்லெடைகள் ஒக்கைதோத் தீவில் கிடைக்கின்றன. மீதியுள்ள கனி மூலங்கள் ஜப்பான் முழுவதும் பரவியுள்ள மலைகளிலும், கரடு முருடான நிலங்களிலும் பரவ லாகக் கிடைக்கின்றன. ஜப்பானில் கிடைக்கும் கனிப்பொருள்கள் அதன் தேவைக்கு மிக மிகக் குறைவாகும். ஜப்பானில் கிடைக்கும் கனி மூலங்கள் யாவும் அமெரிக்க ஒன்றிய நாட்டின் ஓராண்டு உருவாக்கத்திற்குப் பயன்படும் கனி மூலங்களுக்குச் சமமாகும். எனவேதான் ஜப்பானுக்குத் தேவைப்படும் இரும்பு, எஃகு முதலிய மாழை (உலோகம்) களின் மூலப்பொருள்கள் கொரியா, மஞ்சூரியா, ஃபிலிப்பைன் தீவுகள், இந்தியா முதலிய ஆசிய நாடுகளிலிருந்தும், அமெரிக்க ஒன்றிய நாடுகளிலிருந்தும் (U.S.A.) இறக்குமதி செய்யப்படுகின்றன. இரும்பின் மூலப்பொருள்கள் ஜப்பானின் எரிமலைகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. ஜப்பானில் உருவாகும் இரும்பில் 60% கமைசுது, சென்னின் ஆகிய இடங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்றன. இவ்விரு இடங்களும் ஒன்சுத் தீவின் வடகிழக்குக் கடற்கரையில் அமைந் துள்ளன. 1968-ல் ஜப்பானின் எஃகு உருவாக்கம் 670 இலக்கம் கல்லெடை ஆகும். இதில் உலக நாடுகளில் ஜப்பான் மூன்றுவது இடத்தைப் பெறுகின்றது.

இரும்புக்கு அடுத்தபடியாக ஜப்பானில் அதிகமாகப் பயன் படும் மாழை (உலோகம்) செம்பு ஆகும். ஜப்பானில் வளர்ந்துள்ள தொழிற்சாலைகள் பெரும்பாலும் மின்விசையால் இயங்குவதால் செம்பு அதிகமாகத் தேவைப்படுகிறது. இதனைத் தன்னுட்டிலேயே உருவாக்கியும் அயல் நாடுகளிலிருந்து பெற்றும் தேவையை நிறைவு செய்துகொள்கிறது.

உலக நாடுகளில் தொழில் வளர்ச்சியில் தலைசிறந்த நாடு களில் ஒன்ருக ஜப்பான் விளங்கியபோதிலும், அதன் தேவைக் குப் போதுமான நிலக்கரியும் கல்நெய்யும் (Petrol) தன்னுட்டி லேயே கிடைக்கவில்லை. உலக உருவாக்கத்தில் 0·01% கல்நெய் தான் ஜப்பானில் கிடைக்கிறது. உலக உருவாக்கத்தில் 0.4% தான் நிலக்கரி கிடைக்கிறது. ஜப்பானில் கிடைக்கும் கல்நெய் முழுவதும் அதனுடைய ஒரு கிழமைத் தேவையைத்தான் நிறைவு செய்யுமெனில் அதன் கல்நெய் உருவாக்கத்தை ஊகித்துக் கொள்ளலாம். 1968ஆம் ஆண்டில் மட்டும் 15,439 மெகா வாட் கல்நெய்யை இறக்குமதி செய்திருக்கிறது! ஜப்பானில் கிடைக்கும் நிலக்கரி அதன் தேவையை முழுதுமாக நிறைவு செய் கிறதெனலாம். ஒக்கைதோ, குயூசுவின் வடமேற்குப் பகுதி ஆகிய விடங்களில் நிலக்கரி அதிகமாகக் கிடைக்கிறது. கல்நெய்யும் நிலக்கரியும் குறைந்த அளவே கிடைத்தாலும் ஜப்பானில் ஓடும் ஆறுகளும் அருவிகளும் நீர் மின்விசை உருவாக்க அதிகம் பயன் படுவதால் அதன் தொழில் வளர்ச்சித் திறனுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. இதைத் தவிர அனல் மின்சார நிலையங்களும் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வருகின்றன. நீர்மின் விசையில் ஜப்பான் நாடு உலகிலேயே மூன்ருவதாக நிற்கிறது. ஜப்பானின் மின்விசையில் 70% நீர்மின்விசையாலும், எச்சம் எரிபொருளாலும் உருவாக்கப்படுகின்றது. ஜப்பானில் 98% வீடு களுக்கு நீர்மின்விசையும், எச்சம் 2% வீடுகளுக்கு எரிபொருள் மின்விசையும் பயன்படுகின்றன. 1965-ல் தோக்கியோவுக்கு அருகில் அணுமின்நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது. அகிதா, நிகர்த்தா ஆகியவிடங்களில் நிலக்கரி வெட்டியெடுக்கப்படுகிறது. இவ்வீரிடங்களும் ஒன்சுத் தீவின் மேற்குக் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளன. இவை தவிர ஒக்கைதோத் தீவிலும் சிறிதளவு நிலக்கரி கிடைக்கிறது. ஜப்பானில் கிடைக்கும் மண்ணெண்ணெய் முதலியவற்றைத் தூய்மைப்படுத்துவதற்கான நிலையங்கள் பல அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய எண்ணெய்ப் பொருள் களை இவர்கள் அதிகமாக அயல் நாடுகளிலிருந்து வரவழைத்துக் கொள்கிருர்கள். எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலைகளில் பெரும் பகுதி தோக்கியோ, ஓசாகோ முதலிய நகரங்களைச் சுற்றி

அமைக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர வெள்ளி, காரீயம், துத்தநாகம், தகரம், குரோமியம் முதலிய உலோகங்களும் கிடைக்கின்றன.

## ஆலைகள் - போக்குவரத்துகள்

ஜப்பானிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களில் 38% இயந்திரப் பொருள்களாகும். இதற்குக் காரணம் இந்நாடு இரும்பு, எஃகு உருவாக்கத்தில் ஆசியாவிலேயே முதலிடத்தையும், உலகத்தில் மூன்றுவது இடத்தையும் பெறுவதாகும். ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 4.4 கோடிக் கல்லெடை இரும்பு எஃகுப் பொருள்கள் உருவாக்கப்படுகின்றன. ஜப்பானில் அடுத்தபடியாகத் தலைசிறந்து விளங்குவது கப்பல் கட்டும் தொழிலாகும். ஆண்டொன்றுக்கு 24 இலக்கம் கல்லெடையுள்ள கப்பல்கள் ஜப்பானில் கட்டப்படுகின்றன. இஃது உலகக் கப்பல் உருவாக்கத்தில் 44% ஆகும். இத்தகைய கப்பல் கட்டும் தொழில் கோபு, கவாசுகி, சசிபோ, கூரே என்னும் நகரங்களில் சிறப்பாக நடைபெறுகின்றது. ஒகாமா ஜப்பானின் தலைசிறந்த துறைமுகப் பட்டணமாகும். இரும்பு எஃகுத் தொழிலில் உலகத்திலேயே மூன்றுவது இடத்தைப் பெறும் ஜப்பான் ஆண்டொன்றுக்கு 22,80,000 வண்டிகளை (cars) உருவாக்குகின்றது. இவற்றில் மூன்றிலொரு பகுதி பயணிகளுக்குப் பயன்படும் பேருந்துகளாகும். இதில் 50% தென் கிழக்காசியா, இலத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஜப்பானில் ஓடும் அத்தனை வண்டிகளும் 'டீசல்' அல்லது மின்விசையால்தான் ஓடுகின்றன. நீராவியில் ஓடும் வண்டி ஜப்பானில் ஒன்றுகூட இல்லை. ஜப்பானின் தொழில் வளர்ச்சிக்கும் இயந்திர நுண்ணறிவு வளர்ச்சிக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது அந் நாட்டில் ஓடும் தொடர் வண்டிகளே (trains) ஆகும். பொதுத்துறைக் குழுவினால் நிருவகிக்கப்படும் 'ஜப்பான் தேசியத் தொடர் வழியே' இந்நாட்டின் மிகப் பெரிய போக்குவரத்து நிறுவனமாகும். ஜப்பான் நாட்டிலுள்ள தொடர்வண்டிப் போக்குவரத்து 59% சரக்குகளையும், 48.6% பயணிகளையும் ஏற்றிச் செல்கிறது. தோக்கியோவுக்கும், ஒசாகோவுக்கும் இடையில் 515 கிலோ மீட்டர் தொலைவிற்கு மணிக்கு 210 கிலோ மீட்டர் விரைவில் ஓடும் மிகு விரைவுத் தொடர் (Super Express Service) என்னும் தொடர்வண்டி உலகத்திலேயே மிக விரைவாகச் செல்லும் தொடர்வண்டியாகும். இவ் வழி 1964-ல் அக்டோபர் முதல் நாளில் திறக்கப்பட்டது. இஃது மேலும் விரிவுபடுத்தப் பட்டு வருகிறது. இதைத் தவிர 160 தனியார் நிலையங்கள்

நடத்தும் தொடர்வழி நிறுவனங்களும் உள்ளன. சரக்குகளை அனுப்புவதற்கென வாணிகப் போக்குவரத்துத் தொடர்வண்டி ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.

ஜப்பான் உலக வான் வழிகளின் மையச் சந்திப்பாகவும் விளங்குகிறது. தோக்கியோ அனைத்துலக வானூர்தி நிலையமும் (Tokyo International Airlines), ஒசாகோ அனைத்துலக வானூர்தி நிலையமும் ஜப்பானின் தலைசிறந்த வானூர்தி நிலையங்களாகும். 1953-ல் ஜப்பான் வான் வழி (Air Lines) நிறுவப்பட்டது. இஃது அனைத்துலக வான் வழியில் சிறப்புற்று நிற்கிறது.

ஜப்பானில் ஒளிப்படக் கருவிகளும், அறிவியற் கூடங்களுக்குப் பயன்படும் அதிநுட்பமான கண்ணாடிப் பொருள்களும் அதிகமாக உருவாக்கப்படுகின்றன. இதனியப் பொருள்கள் செய்வதிலும், வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிப் (Television) பெட்டிகள், கணிப்பான் (Computor), கடிகாரங்கள் முதலிய பொருள்களைச் செய்வதிலும் ஜப்பான் தலைசிறந்து விளங்குகிறது. இங்கு செய்யப் படும் 'U.H.F. - 5000' என்னும் ஒளிப்படப் பெட்டி 1/500000 நொடியில் துல்லியமாகப் படம் பிடிக்கும் ஆற்றல் வாய்ந்தது. தானியங்கி முறைகள் (Automatic Controlling Systems), பதிவு நாடாக்கள் (Tape Recorders), தொலைக்காட்சிப் பெட்டிகள் (Television Sets), மின்னியங்கி நுண்ணோக்கி (Electronic Microscope) முதலியன செய்வதில் இன்று ஜப்பான் வெகு விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. 1965-ல் ஜப்பானில் உருவாக்கப்பட்ட மின்னியங்கிகளின் (Electronics) மதிப்பு 6120 இலக்கம் கல்லெடைகளாகும். மின்சார இயந்திரப் பொருள்களின் மொத்த ஏற்றுமதி 79.3% ஆகும்.

ஜப்பானியர்களின் வீடுகளில் பயன்படும் மின்சாரக்கருவிகளில் தொலைக் காட்சிப் பெட்டிகள் 94.4%-ம், சலவை இயந்திரங்கள் 75.5%-ம், குளிர் பதனப் பெட்டிகள் 61.6%-ம், துப்புரவு இயந்திரங்கள் 41.2%-ம் ஆகும். மருத்துவ ஆராய்ச்சியில் பயன்படும் உட்குடலைப் படம் பிடிக்கும் கருவிகள் (Cameras), உடலின் மாறுபாடுகளை உணர்த்தும் மின்னியங்கி நுண்ணோக்கி (Electronic Microscope) முதலியவைகளையும், நனிமிகு ஆற்றல் வாய்ந்த ஆடிகளையும் ஜப்பான் உருவாக்குகிறது. இரட்டையாடிகள் (Binoculars), ஒற்றையாடிகள் (Monoculars) முதலியன இன்று ஜப்பானின் தலையாய ஏற்றுமதிப் பொருள்களாகத் திகழ்கின்றன. இவைகள் அமெரிக்கா, செர்மனி, கனடா ஆகிய 'நாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஜப்பானின் தலையாய இறக்குமதிப் பொருள்களில் உணவுப் பொருள்களும், பருத்தி,

கம்பளிப் பொருள்களும் முதலிடம் பெறுகின்றன. உணவுப் பொருள்களில் இந்தியா, இந்தோசீனு, தாய்லாந்து முதலிய நாடுகளிலிருந்து அரிசியையும், கனடாவிலிருந்து கோதுமையையும், சாவகம், கியூபா முதலிய நாடுகளிலிருந்து சர்க்கரையையும் இறக்குமதி செய்து கொள்கிறது. இந்தியா, சீனு, எகிப்து, அமெரிக்க ஒன்றிய நாடுகள் (U.S.A.) முதலியவற்றிலிருந்து பருத்தியையும், மலேயாவிலிருந்து தொய்வத்தையும் (Rubber) ஆஸ்திரேலியாவிலிருந்து கம்பளத்தையும் இறக்குமதி செய்து கொள்கிறது. ஜப்பானிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முதலிடம் பெறுவது மாழைப் பொருள்களும், அறிவியற் கருவிகளும் ஆகும். இதற்கடுத்து நிற்பவை ஆடைகள். ஜப்பானிலிருந்து ஏற்றுமதியாகும் இரும்பு, எஃகுப் பொருள்களும், கப்பல்களும், படகுகளும், மற்றும் மாழைப் பொருள்களும் அதிகமாக வடஅமெரிக்கா, ஐரோப்பா, தொலைக் கிழக்கு நாடுகள், தென் கிழக்காசியா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. பருத்தி ஆடைகள், செயற்கைப் பட்டுத்துணிகள், ஸ்பன்-ரேயான் துணிகள் முதலியவைகளும், வானொலிப் பெட்டிகள், ஒலியியல் கருவிகள், கண்ணாடிப் பொருள்கள், கடிகாரங்கள், பொம்மைகள், இதளிய உரங்கள், தாள், தீப் பெட்டிகள், பீங்கான் பொருள்கள் முதலியனவும், சிறிதளவு தேயிலையும், பதப்படுத்தப்பட்ட மீன் வகையும் ஜப்பானின் ஏற்றுமதிப் பொருள்களாகும். ஜப்பான் இறக்குமதிப் பொருள்களில் அயலகச் செலாவணியை அதிகம் தருவது தூய்மைப்படுத்தாத எண்ணெயும் இரும்புக்கனியுமாகும். இவற்றைத்தவிர மரங்கள், கச்சாப்பருத்தி, கச்சா உரோமம், எரிபொருள் முதலியனவும் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஜப்பானின் தலைநகரம் தோக்கியோ. இது உலகத்திலேயே மிகப்பெரிய நகரமாகும். இங்கு 1,08,69,000 மக்கள் வாழ்கின்ருர்கள். இதனையடுத்து ஆறு பெரிய நகரங்கள் சிறப்புடையனவாம். அவை ஒசாகோ, நாகோயா, ஓக்கோகாமா, கியாத்தோ, கொபே, கித்தா கியூசு முதலியன. இவை யாவும் ஜப்பானின் கடற்கரையோரங்களில் வண்டல் மண் படிந்த சமவெளிப் பரப்பில் அமைந்த நகரங்களாகும். கொபே, ஓக்கோகாமா ஆகிய இரு நகரங்கள் ஆழமான துறைமுகப் பட்டணங்களாகும். தோக்கியோ, ஒசாகோ ஆகிய பெரு நகரங்கள் தொழிற்சாலைகளின் மையங்களாகத் திகழ்கின்றன.

## சமூக நிலை

ஜப்பானியர் பண்டைக் காலந்தொட்டே கூட்டுக் குடும்பங்களாக வாழ்கின்றனர். ஆனுல், இன்றைய ஜப்பானில்

ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியும், நகர்ப்புற வாழ்க்கையும், பண்டைய முறையிலிருந்து இவர்களை மருவி வாழச்செய்திருக்கின்றன. குடியிருப்புப் பற்றுக்குறையின் காரணியமாகக் கூட்டுக் குடும்பங்கள் தனித்து வாழ வேண்டியிருக்கின்றன. மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த ஜப்பானியர் பல அரிய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைக் கையாளுகின்றனர்; இதனுல் ஒரு குடும்பத்தில் இரண்டிலிருந்து மூன்று குழந்தை மேனி பிறக்கின்றன. இதுவே உலகத்தில் மிகக்குறைந்த பிறப்பு மேனியாகும். ஆணுக்கும் பெண்ணுக்கும் குமுகம் (சமூகம்), அரசியல் முதலிய எல்லாத் துறைகளிலும் சம உரிமையளித்துள்ளது. அடுப்படியில் உழன்று கிடந்த ஜப்பானிய மனைவி இன்றைய புதுமை இயந்திரக் கருவிகளினுல் வீட்டு வேலைகளை நொடிப் பொழுதில் முடித்துக்கொண்டு, அதிக ஓய்வைப் பெற்று, பொது வீட்டும் பணிகளிலும் கலைகளிலும் ஈடுபடுகிருள். இதனுல் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாழ்க்கை ஏந்துக்கேற்பப் பொருளீட்டும் ஆற்றல் வளர்ந்திருக்கிறது. ஜப்பானியக் குடும்பங்களில் 91% ஏதாவதொரு வகையான சேமிப்புகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஜப்பானியச் சிற்றூர்களில் வாழும் உழவர்களின் வருமானமும் பெருமளவில் பெருகியுள்ளது. இவர்கள் வேளாண்மையோடு பிற துணை வேலைகளிலும் ஈடுபட்டிருப்பதால் வருவாய்க்கும் வாழ்க்கைமுறைத் தேவைகளுக்கும் கவலையின்றி வாழ்கின்றனர்.

இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஏற்பட்ட மிக முடுக்கமான தொழில் வளர்ச்சியால், தொழில் அடிப்படையில் எண்ணிறந்த தொழிற் கழகங்கள் ஏற்பட்டுள்ளன. இத் தொழிற் கழகங்கள் யாவும் தேசியக் கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஜப்பான் தொழிற்கழகங்களின் பொதுக் கழகம் சோசியோ என்பதும், ஜப்பானியத் தொழிலாளர்களின் மாகழகம் தோமெய்கைகி என்பதும் பெயர் பெற்றவைகளாகும். இவற்றுள் ஜப்பான் தொழிற் கழகங்களின் பொதுக் கழகத்தில் ஜப்பான் அரசு ஊழியர்களின் கழகங்களான அனைத்து ஜப்பானிய அரசுப் பொதுத் தொழிலாளர் கழகமும், தேசியத் தொடர்வழித் (Railway) தொழிலாளர் கழகமும், ஜப்பான் ஆசிரியர் கழகமும் இணைந்துள்ளன. மற்றதில் பஞ்சாலைத் தொழிலாளர் தேசியக் கழகம், மாழைத் தொழிலாளர் கழகங்களின் தேசியக்கழகம், ஜப்பான் மீனவர் கழகம் போன்றவை இடம்பெற்றுள்ளன. இவற்றைத் தவிர பல தன்னுரிமைபெற்ற தொழிற்கழகங்களும் இயங்கி வருகின்றன.

ஜப்பானிய மக்களின் குமுக நலப்பாதுகாப்பில் அரசு அதிகக் கவனம் செலுத்துகிறது. தேசிய வருமானத்தில் 14·1%-ஐ குமுக நலத்திற்குச் செலவிடுகின்றது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு குமுக நலத்திற்கெனத் தீட்டப்படும் சட்டங்களும், ஒதுக்கப்படும் தொகையும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இவற்றால் ஜப்பானியரின் வாழ்க்கைக்குச் சிறந்த உறுதிப்பாடும் ஏற்பட்டிருக்கிறது. முடவர்களும், குருடர்களும், குழந்தைகளும், பெண்களும், அடிமட்டத்திலுள்ள மக்களும் எல்லாவற்றிலும் பாதுகாப்புடன் வாழ முடிகிறது. வாழுநாள் காப்பீட்டு முறையால் குமுகத்தின் எல்லா நிலைகளிலுமுள்ள மக்கள் பெரும்பயன் அடைகிறார்கள். இம் முறையால் மருத்துவ ஏந்துகளும், ஓய்வுக்காலப் பொருளேந்துகளும், முதியவர்கள் பாதுகாப்பு ஏந்தும், குழந்தைகளின் கல்வியேந்தும், தாராளமாகக் கிடைக்கின்றன. இத் திட்டத்தில் தனியாரும் அரசு ஊழியர்களும் குடியானவர்களும் மற்றும் யாவரும் சேர்த்துக் கொள்ளப் படுவதால் மருத்துவ ஏந்து எல்லாருக்கும் கிட்டத்தட்ட ஒரே வகையாகக் கிடைக்கிறது. இதைத்தவிர அரசு மேற்கொண்டுள்ள வீட்டு ஏந்துப் பெருக்கத் திட்டத்தால் குறைந்த இடத்தில் பல மாடிகளைக் கொண்ட நிறைந்த வீடுகளைக் கட்டிக் குடியிருப்புப் பற்றுக்குறை சமாளிக்கப்படுகிறது. இதற்கும் வாழுநாள் காப்பீடு பெரிதும் உதவியாகவுள்ளது.

இன்றைய ஜப்பானில் கல்வி வளர்ச்சி ஏனைய புதிய நாடுகளை விட அதிகமாகக் காணப்படுகிறது. தொடக்கநிலைக் கல்வி உயர் நிலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, அறிவியல் தனிப் பயிற்சிக் கல்வி ஆகியவற்றிற்கு ஜப்பானிய அரசு எல்லா வகை ஏந்துகளும் செய்துள்ளது. கல்வி வளர்ச்சிக்குத் துணையாகப் பல அரிய நூலகங்களும், பொருட்காட்சிச் சாலைகளும், விலங்குக்காட்சிச் சாலைகளும், பயிர்த் தோட்டங்களும், மீன்காட்சிச் சாலைகளும் உள்ளன. பல்கலைக்கழகப் படிப்பிற்குப்பின் அறிவியல் ஆராய்ச்சித் துறையிலும், அணுவாற்றல் நிலையங்களிலும் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. அணுவாற்றலை வேளாண்மை வளர்ச்சிக்கும், செடிகளின் வளர்ச்சிக்கும், மருத்துவத் துறையில் நோய்களைக் குணப்படுத்துவதற்கும் பயன் படுத்தும் ஆராய்ச்சியில் ஜப்பானியர் வெற்றி கண்டு வருகின்றனர். அணுவாற்றல் ஆராய்ச்சித் திட்டங்களோடு, கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதாலும் ஜப்பான் மேலும் வளர்ந்து வருகிறது.

ஜப்பானில் ஏற்படுத்தப்பட்டுள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையங்களால் நிலநடுக்கங்கள், எரிமலைக் கொந்தளிப்பு முதலிய

இயற்கைக் கேடுகளிலிருந்து தப்பி வாழும் மாற்று வழிகளை ஜப்பானியர் அறிகின்றனர். தென்துருவ மண்டல ஆராய்ச்சி களின் பயனாக இயற்கையாற்றல்களையும், இயற்கையின் கேடுகளை யும் தங்களுக்குத் துணையாக எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்று ஆராய்ந்து வருகின்றனர்.

ஜப்பானியர் வெறும் ஆக்க மேதைகளாக மட்டுமல்லாமல், வாழ்க்கையைத் துய்ப்பதிலும் மேதைகளாகத் திகழ்கின்றனர். இவர்களின் இலக்கியங்களும் வெறும் மெய்யுணர்வாகத் (Philosophy) திகழாமல் வாழ்க்கையின்ப நுகர்ச்சிக் கருவூலங்க ளாகத் திகழ்கின்றன. பல மேனாட்டு இலக்கியங்கள் ஜப்பானிய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. சேக்சுபியரின் நாடகங்கள் தால்சுதாயின் கதைகள், கதேயின் கருத்தோட்டங்கள் முதலியன வும் ஜப்பானிய இலக்கியத்தைச் செம்மைபெறச் செய்திருக் கின்றன. தங்கள் மொழியிலும் பல புதிய புதினங்களைப் படைத் திருக்கிறார்கள். பல பாவலர்கள் தோன்றி மக்கள் மனதைக் கவர்ந்திருக்கின்றனர்.

இலக்கியத் துறையைப் போலவே ஓவியக் கலையும், இசைக் கலையும் இன்றைய ஜப்பானிய மக்களை இன்பத்தில் மூழ்கச் செய் கின்றன. பல நாடக அரங்குகள் நாடெங்கிலும் அமைந்துள்ளன. இவ்வரங்குகளில் பண்டைய பொம்மலாட்ட (புன்ராக்கு) நாடகம் முதல், பல பேர் சேர்ந்தாடும் நாட்டிய நாடகம் வரையில் மக்களை மகிழ்விக்கும் பல நாடகங்கள் நடத்தப்படுகின்றன. விளையாட்டு களிலும் ஜப்பானியர் மிகச் சிறந்து விளங்குகின்றனர். பதினெட் டாம் ஒலிம்பிக் விளையாட்டு ஜப்பானின் தலைநகரான தோக்கியோ வில் நடைபெற்றதை நினைவு கூறலாம். மற்போர் முதற்கொண்டு பனிச்சறுக்கு விளையாட்டுவரை பழைமையும் புதுமையும் கலந்த பலவகையான விளையாட்டுகள் ஜப்பானில் நடைபெறுகின்றன.

1947 ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி ஜப்பானியர் மத உரிமை பெற்றார்கள். இதன்படி அரசு குறிப்பிட்ட எந்தச் சமயத் திற்கும் தனிச்சலுகை காட்டுவதோ அல்லது எதிராக நடப்பதோ இயலாது. ஜப்பானில் பெரும்பாலான மக்களால் பின்பற்றப் படும் மதம் பௌத்த மதமாகும். இதனை 5,50,00,000 பேர் பின்பற்றுகின்றனர். கிறித்தவ மதத்தைப் பின்பற்றுவோர் 6,70,000 பேராவர்.

ஜப்பானின் பண்டைய அரசர் கொடிவழியினரையும் தங்கள் முன்னோர்களையும் வழிபடும் முறை நாளடைவில் சிந்தோயியம் எனப்பட்டது. இரண்டாம் உலகப் போரின் போது இது அரசியல்

மதமாகக் கொள்ளப்பட்டது. ஆனால் 1947-க்குப் பிறகு இந்நிலை அகற்றப்பட்டது. சிந்தோயியத்திலுள்ள சடங்குகளை ஜப்பானியர் இன்றும் தங்கள் திருமணங்களில் கடைப் பிடிக்கின்றனர். சிந்தோயியம் ஜப்பானியரின் மனத்தில் நிலைத்து விட்ட இயற்கை வழிபாட்டு மதமாகும். கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் இந்தியாவிலிருந்து சீனம், கொரியா வழியாக ஜப்பானில் பரவியது. பௌத்த மதத்தின் வளர்ச்சியின் காரணியமாக ஜப்பானின் கலைச்செல்வங்களும், அறிவு வளர்ச்சியும் பெருகிக் கொழித்தன. கி. பி. 1549-ல் பிரான்சிசு சேவியர் என்னும் துறவியால் கிறித்தவ சமயம் ஜப்பானில் நுழைந்தது. ஆனால், இம் மதம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டு வரை ஜப்பானில் தடை செய்யப்பட்டிருந்தது. மேலை நாடுகளுக்கு ஜப்பான் திறந்துவிடப் பட்டபின் இம்மதமும் வளர்ச்சியடைந்தது. ஜப்பானில் பின் பற்றப்படும் மற்றொரு மதம் கன்ஃபூசியனியம் என்பதாகும். இம் மதம் கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் அறிமுகமாயிற்று. இதனை ஒழுக்க நெறிகளின் கொள்கைகளடங்கிய ஒரு பண்பாட்டுச் சமயம் எனலாம். இரண்டாம் உலகப் போருக்குப் பின் இம் மதத்தின் கொள்கைகள் குறைந்து வருகின்றன.

# 2. பண்டைய ஜப்பான்

## வரலாற்று மூலங்கள் (Sources)

உலகிலுள்ள பல்வேறு மக்களினத்தின் தோற்றுவாய்களையும், பல்வேறு நாடுகளின் தோற்றங்களையும் அறிவதற்குப் பல வகையான சான்றுகள் உதவுகின்றன. அவற்றுள் முக்கியமாகத் தொன்ம (புராண)ங்களும், புதை பொருள்களும், செவிவழிமரபுச் செய்திகளும், தொல் பழங்காலத்தை (Pre — Historic period) அறிவதற்கு எல்லா நாடுகளின் வரலாற்றிற்கும் பொதுவாகக் கொள்ளப்படும் சான்றுகளாம். ஜப்பானிய வரலாற்றை அறிவதற்குத் தொன்மங்களும், செவிவழிமரபுச் செய்திகளுமே பெரிதும் உதவுகின்றன. ஜப்பானில் கி. பி. 284-ல் தான் முதன் முதலாக எழுதும் முறையும் (Art of writing), அச்சு இயந்திரமும் புழக்கத்தில் வந்தன. அச்சு இயந்திரத்தின் பயனைச் சீனர்கள்தாம் முதன்முதலில் ஜப்பானியருக்கு உணர்த்தினர். கி. பி. 313-லிருந்து 399 வரையில்; ஜப்பானை ஆண்ட நிந்தோகூ (Nintoku) என்பவருக்கு ஆசிரியராய் அமைந்த வாணி (Wani) என்பவரால் தான் ஜப்பானில் முதன்முதலாக வெளியுலகத்தைப் பற்றிய அறிவும் அயலகப் பண்பாடும் ஊட்டப் பட்டன. இவர் கொரியா விலிருந்து ஜப்பானுக்கு வந்தவர். பேரரசர் நிந்தோகூவுக்குப் பிறகுதான் ஜப்பான் நாட்டில் சீன மொழியும், சீனரின் பண்பாடும் அரசவையிலும், குமுகத்திலும் புகுந்தன. சீனாவின் அரசவை யமைப்பையும், அரசியலமைப்பையும் எடுத்துக்காட்டுகளாகக் கொண்டே ஜப்பானில் அரசவையும் அரசுத்துறைகளும் அமைக்கப் பட்டன. இதன் பயனாக ஜப்பானிய நாட்டு வரலாற்றில் கால வரையறை ஒழுங்குபடுத்தப்பட்டது. கி. பி. 4 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஜப்பானிய வரலாற்றையும் அறிய மரபு வழிமுறைகளே சான்றுகளாகப் பயன்படுகின்றன. இந் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட வரலாற்றை அறிவதற்கு ஆவணங்களும் ஒரு சில பட்டையங்களும் சான்றுகளாக உதவுகின்றன.

### அ. அகச்சான்றுகள்

கோசிகி (Kojiki)

இந் நூல் கி. பி. 712-ல் வெளியிடப்பட்டது. கோசிகி என்பதற்குப் 'பண்டைய வரலாற்று ஆவணக் குறிப்பு' என்பது

பொருளாம். ஜப்பானின் பண்டைய தொல் கதைகளையும்' செவிவழி மரபுச் செய்திகளையும் சான்றுகளாகக் கொண்டு பல ஆவணங்கள் தொகுக்கப்பட்டன. இப்பணியை மேற்கொண்டவர் கி. பி. 686 வரை ஜப்பானை ஆண்ட பேரரசர் தெம்மு (Emperor Temmu) என்பவராவார். இதனைத் தொகுத்து முடித்து வெளியிடு முன்பே இப் பேரரசர் இறந்து விட்டதால் இவருக்குப் பின்வந்த பேரரசர்கள் இப் பணியினை மேற்கொண்டனர். ஆயினும் இதனை முழுமையாகத் தொகுத்து நூல் வடிவிலே வெளியிட்டவர் கி.பி. 708-லிருந்து 721 வரை ஜப்பானை ஆண்ட பேரரசி செம்மையோ (Empress Gemmyo) ஆவார். இந் நூல் இதற்குப் பின்னெழுந்த நூல்களைப் போலல்லாமல் சீன மொழியும், சீனப் பண்பாடும், சீன மெய்ப்பொருளும் கலவாத தூய ஜப்பானிய அறிவுக் கருவூலங்களையும், பண்பாட்டையும் கொண்டுள்ளது. இந் நூலில் ஜப்பானியத் தீவுகளின் தோற்றங்களைப் பற்றியும், ஜப்பானை ஆண்ட பண்டைய அரச மரபினர்களைப் பற்றியும், ஜப்பானியரின் குமுக மரபியல்களைப் பற்றியும் விரிவாகக் காணலாம். இதனை பி. எச். சேம்பர்லின் என்பார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.)

நிகோங்கி (Nihongi)

இந் நூல் கோசிகி வெளியிடப்பட்ட எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு அஃதாவது கி. பி. 720-ல் செம்மையோ பேரரசியாரின் காலத்திலேயே வெளியிடப்பட்டது. ஜப்பானிய வரலாற்றைக் காலவரையறை என்னும் அடித்தளத்தின் மேல் அழகுறு மாளிகையாக இந் நூல் கட்டியுள்ளது. கோசிகியில் காணப்படும் செய்திகளும், நிகழ்ச்சிகளும் இதில் காணப்பட்டாலும் கோசிகியைக் காட்டிலும் பல வகையில் இது சிறப்புத் தன்மையுடையதாகும். கோசிகியின் தொன்ம நடைத் தன்மையிலிருந்து மாறி வரலாற்றுக்கு வேண்டிய விரிவான ஆவணக் குறிப்புகளையும், கால வரையறைகளையும், சீனர்களின் இடையீட்டையும், அரச மரபுகளின் வரிசை முறைகளையும் இந் நூல் தெளிவாகவும், அழகாகவும் விளக்குகிறது. ஜப்பானில் சீனர்களின் கலைகளும், ஆட்சி முறையும் கி. பி. 3 ஆம் நூற்றுண்டிலேயே பரவியிருந்தபோதிலும் அவற்றைப் பற்றிக் கோசிகியில் எவ்வகைக் குறிப்புமில்லை. மாறுக அவை யாவும் ஜப்பான் நாட்டு மூலப் பண்புகளாகவே அந் நூலில் காணப்படுகின்றன. ஆனுல், நிகோங்கியில், சீனுவின் இடையீடும், பண்பாட்டு நுழைவும், மெய்ப்பொருள் வளர்ச்சியும் ஜப்பான் வரலாற்றில் இடம் பெற்றதைத் தெளிவாகக் காணலாம். பொதுவாக இவ்விரு நூல்களும் பண்டைய மரபு வழிச் செய்திகளையும் தொன்மங்களையும் அடிப்படையாகக் கொண்

டிருப்பதாலேயே இவை இன்றைய வரலாற்றறிவியலுக்கு ஏற்ற சான்றுகளாகா என்று தள்ளுதற்கு இல்லை.

எங்கிசிகி (Yengishiki)

இஃது ஜப்பானிய குமுகத்தின் பழக்க வழக்கங்களையும், மற்றும் சடங்கு முறைகளையும் விளக்கிக் கூறும் ஒரு நூலாகும். இதனை 'சடங்குகளின் சட்டம்' (Code of Ceremonial Law) என்று கூறலாம். இந் நூல் பண்டைய ஜப்பானிய மக்களின் அன்றாட நடைமுறை வாழ்க்கைக் குறிப்புகளையும், பண்பாட்டியலையும் நாம் அறிவதற்குப் பெரிதும் உதவுகிறது. வரலாறு மாந்தனையே அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுவதால் அம் மாந்தனின் அன்றாட வாழ்க்கை முறையே பிற்கால வரலாறாகிறது. இவ் வாழ்கையில் இந் நூலில் காணப்படும் சமய ஒழுக்கச் சட்டங்கள், நாம் ஜப்பானியரின் வரலாற்றை அறிவதற்கு ஒருவாறு உதவுகின்றன. எனவே இதனையும் ஒரு சான்றாகக் கொள்ளலாம். இதனை இ. எம். சாதோ (E. M. Satow) என்பார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்.

மனியோசு (Manyoshu)

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் ஜப்பானிய நாட்டு வரலாற்றியலும், நிலவியலும் தொகுத்து வெளியிடப்பட்டன. இக் காலத்தில்தான் பண்டைய ஜப்பானிய மக்களின் உள்ளக்கிடக்கையின் பாடலைத் தொகுத்து மனியோசு (Manyoshu) என்னுந் தொகுப்பாக வெளியிட்டார்கள்.

செஞ்சி மொனோகதாரி (Genji-Monogatari)

உலகத்திலேயே நனி மிகு பழைமையான புதினங்களில் ஒன்றான செஞ்சி மொனோகதாரி (Genji-Monogatari) என்னும் நூல் கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இந் நூல் ஜப்பானிய வரலாற்றிற்கு ஏற்ற செய்திகளைத் தருகிறது.

தொல் பொருள்கள்

பிற நாடுகளில் காணப்படுவது போலவே ஜப்பானிலும் புதை பொருள்கள் காணப்படுகின்றன. இவற்றைக்கொண்டு மாந்த வரலாற்றின் காலங்களைக் கற்கலாம். மழைக்காலம் எனப் பிரிப்பது போன்று ஜப்பானிய வரலாற்றின் பண்டைய காலத்தையும் பிரிக்கலாம். திரு. சாதோ என்பவர் கூறும் சான்றுகளிலிருந்து ஜப்பானியப் பேரரசர் ஒருவர் இறந்தவுடன் அவர் பயன் படுத்திய பொருள்களும், அவருடைய வேலையாள்களும் அவருடனே

புதைக்கப்படும் பழக்கத்திற்குப் பதிலாக, அப் பொருள்களையும், அம் மக்களையும் போன்ற உருவங்களைக் களிமண்ணால் செய்து, சுட்டு அவரின் புதைக்குழிக்கருகில் புதைக்கும் பழக்கம் கி. பி. 646-லிருந்துதான் வழக்கத்திற்கு வந்தது என அறிகிறோம்.

இத்தகைய களிமண் உருவங்கள் ஜப்பானில் பலவிடங்களில் காணப்படுகின்றன. குறிப்பாக இவை பேரரசர்களும், அரச குடும்பத்தினரும் வாழ்ந்த நகரங்களில் பெரிதும் காணப் படுகின்றன. கி. பி. 7 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு இத்தகைய பழக்கமும் வழக்காறற்றுப் போய்விட்டது. இதற்குக் கரணியம் புத்த சமயத்தின் வளர்ச்சி ஜப்பானில் அதிகமானதேயாம். எனவே இதற்குப் பிற்பட்ட காலத்தில் ஜப்பானிய வரலாற்றை அறிவதற்குப் புத்த இலக்கியங்களும், ஜப்பானிய நாட்டு சிந்தோ மெய்ப்பொருள் நூல்களும், சீனாவிலிருந்து ஜப்பானில் பரவிய கன்ஃபூசியம் போன்ற மெய்ப்பொருள் நூல்களும் பெரிதும் உதவுகின்றன.

## ஆ. புறச்சான்றுகள்

ஜப்பானைப் பற்றிப் பிறநாடுகளில் காணப்படும் அயல்நாட்டுக் குறிப்புகளைப் புறச்சான்றுகளாகக் கொள்ளலாம். பண்டைய ஜப்பானின் வரலாறு சீனாவை அடிப்படையாகக் கொண்டே வளர்ந்ததால், சீனாவை ஆண்ட அரசர்களின் காலக் குறிப்புகளில் ஜப்பானின் வரலாறும் இடையிடையே பின்னிப்பிணைந்து காணப் படுகின்றது. கி. பி. 284-ல்தான் முதன் முதலாகச் சீனாவிலிருந்து ஜப்பானுக்குள் எழுத்துக் கலையும், அச்சியந்திர முறையும் புகுந்தன என்பதைப் பார்த்தோம். அப்போது ஜப்பானை ஆண்டு கொண்டிருந்த ஓசின் (Ojin-270—310 A.D.) என்பவரால், சீனாவி லிருந்து கொரியா வழியாக ஜப்பானுக்கு வந்த சீனத் தூதுவர்கள் மூலம் கலைகள் வளர்க்கப்பட்டன. இவ்வாறு ஜப்பானுக்குள் வந்த தூதுவர்களில் அசிகி (Ajiki), வாணி முதலியோர் குறிப்பிடத் தக்கவராவர். இவர்களின் வருகையால்தான் ஜப்பானிய வரலாற்றில் ஜப்பானிய வரலாறு கணிக்கப்பட்டது. கி. பி. 400-லிருந்து 405 வரை ஜப்பானை ஆண்ட பேரரசர் இரிச்சு (Emperor Richu) என்பவர்தான் முதன்முதலில் ஜப்பானில் நடந்த அன்றாட முகாமை நிகழ்ச்சிகளை எழுதி அரசவையில் வைத்துக் கண்காணித்தார். இக் குறிப்புகளில் அண்டைய தீவான கொரியாவைப் பற்றியும், பேரரசான சீனாவைப் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. இதைப்போலவே அந்நாடு களிலும் ஜப்பானைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கி. பி. 412-லிருந்து 453 வரை ஜப்பானை ஆண்ட ஆங்கோ (Anko)

பேரரசருக்கு ஏற்பட்ட நோயைத் தீர்ப்பதற்குக் கொரிய நாட்டிலிருந்து வந்த மருத்துவர் சீனநாட்டு மருந்தால் குணப் படுத்தினுர் என்று கூறப்படும் இந் நிகழ்ச்சி கொரியாவிலும் ஜப்பானிலும் ஒரே காலத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

கி. பி. 1542-ல் முதன் முதலாக ஜப்பானுக்குள் நுழைந்த போர்த்துக்கீசியரின் குறிப்புகளும் கி. பி. 1549-ல் கத்தோலிக்கச் சமயத்தைப் பரப்புவதற்கு ஜப்பானுக்குச் சென்ற புனித பிரான்சிசு சவேரியர் (St. Francis Xavier) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பிலும், அவர் எழுதிய மடல்களிலும் ஜப்பானைப் பற்றியும் அக் காலத்தில் ஆண்ட அசிக்கா சோகன்களின் கொடுங்கோலாட்சியைப் பற்றியும் விரிவாகக் காணலாம். இவருக்குப்பின் வந்த ஏசு அவைப் பாதிரியார்களின் மடல்களும் கி. பி. 14 ஆம் நூற்றுண்டின் ஜப்பானிய வரலாற்றையறியச் சிறந்த சான்றுகளாய் உதவுகின்றன.

போர்த்துக்கீசியர் ஜப்பானுக்கு வருவதற்கு முன்பாகவே கி. பி. 1270-ல் நண்ணிலக் கடல் (Mediterranean Sea) வழியாக பாரசீகம், பாமீர்மேட்டுநிலம், கோபிப்பாலைநிலம் ஆகியவற்றைக் கடந்து திபெத்து, சீனு, ஜப்பான், பர்மா ஆகியவற்றைச் சுற்றிக் கொண்டு கிழக்கிந்தியத் தீவுகளின் வழியாக வெனிசு நகரை அடைந்த மார்க்கோபோலோ தாம் உலகைச் சுற்றி வந்ததைப்பற்றி எழுதிய மார்க்கோபோலோவின் பயணங்கள் (Travels of Marcopolo) என்ற நூலில் ஜப்பானியரின் வீரத்தையும் அறிவுத் திறத்தையும் பற்றிச் சீன அரசவையிலும், மற்றும் கீழ்த்திசை நாடுகளிலும் பரவியிருந்த செய்திகளைக் காணலாம். இவற்றிற்குப்பின் பல ஐரோப்பியச் சான்றுகள் ஜப்பானின் வரலாற்றையறிவதற்கு உறுதுணையாய் நிற்கின்றன. எனவே ஜப்பான் பண்டைக் காலந் தொட்டே ஒரு சிறந்த வரலாற்றைப் படைத்து, அதனைப் போற்றிக் காத்து இன்று உலக நாடுகளிடையில் மிகச்சிறந்த இடத்தைப் பெற்று புதுமை வளர்ச்சியிலும் தலைசிறந்த நாடாகத் தலைநிமிர்ந்து நடப்பதைக் காண்கிறோம்.

தாயகம்...?

இன்றைய ஜப்பானிய மக்களின் தாயகம் எது? முன்னோர் யாவர்? என்பன திட்டவட்டமாகத் தெரியவில்லை. இன்று ஒக்கைதோத் தீவில் காணப்படும் ஐநு (Aino) மக்களின் வழிவந்தவர்களே இன்றைய ஜப்பானியர்கள் என்று சிலர் கருது கின்றனர். யமாத்தோ என்று அழைக்கப்படும் இனத்தைச் சேர்ந்தவர்கள் மங்கோலியர், மலேயர், கொரியர் ஆகியோரின்

இனங்களிலிருந்து ஜப்பான் தீவுகளில் குடியேறிய ஒருவகைக் கூட்டினத்தவர்கள் (Mixed Races) என்று ஒரு சிலர் கருதுகின்றனர். மைய ஆசியாவிலிருந்து குடிபெயர்ந்து கைபர், போலன் கணவாய்களின் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்த ஆரிய இனத்தவர்களின் மற்றொரு பிரிவினரே ஜப்பானிலும் குடியேறினார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் சிலர் கருதுகின்றனர்.

கொரியர்

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கொரியர்கள் ஜப்பானில் குடியேறினார்கள். அவர்கள் கொரியாவிலிருந்து குயூசுத்தீவுக்கும், ஒன்சுத்தீவுக்குமிடையில் 34° குறுங்கோட்டில் மேற்கே அமைந்துள்ள திசுஃசிமா (Tsushma), இகி (Iki) ஆகிய தீவுகளின் வழியாக திசுஃசிமா நீரிணைப்பைத் தாண்டி ஜப்பானின் மிக முகாமையான தீவாகிய ஒன்சுத்தீவிலுள்ள யமாத்தோச் சமவெளியில் குடியேறினார்கள். எனவேதான் ஜப்பானிய மன்னர் வழியினர் தங்களை யமாத்தோ இனத்தின் வழித்தோன்றல்கள் என்றழைத்துக் கொள்கின்றனர்.

ஜப்பானிய மன்னர்களின் முடிசூட்டு விழாவில் புனிதப் பொருள்களாகவும், அரசரின் சின்னங்களாகவும் கருதப்படும் குடவக் கண்ணாடி, பிறை வடிவான நகை, நீண்ட வாள் ஆகியவை இன்றும் கொரியச் சவக்குழிகளில் கிடைக்கின்றன. இதில் குடவ (பித்தளை)க் கண்ணாடி சீன அரசரின் சின்னமாகவும் பயன்பட்டிருக்கிறது. எனவே அரசர் சின்னங்களான இவைகளைக் கொண்டு சீனாவுக்கும், கொரியாவுக்கும் இடையேயும் பண்டைய காலந் தொட்டே தொடர்புகள் இருந்திருக்கின்றன என்பது தெளிவாகின்றது.

கொரியர்கள் தங்கள் வரிவடிவ மொழியைச் சீனாவிலிருந்து பெற்றனர். ஆயினும் இவர்கள் சீன இனத்தவர் அல்லர். ஆனால் ஜப்பானியரின் மொழிக்கும்,கொரியரின் மொழிக்கும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இம் மொழி ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு, மொழிநூல் வல்லுநர்கள் ஜப்பானியரைக் கொரியாவிலிருந்து வந்தவர்கள் என்கின்றனர்.

பேராசிரியர் ஒகாகுரா ஒசியாபுரோ (Okakura-Yoshiaburo) என்பார், கொரியர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஜப்பானுக்குள் குடியேறினார்கள் என்றும், அவ்வாறு குடியேறியவர்களில் அரச குலத்தவர்கள், பொதுநிலைக் குடிமக்கள் ஆகிய இரு பிரிவினர் இருந்தனரென்றும், அரச குலத்தினர்

ஜப்பானின் வடக்கேயும், மற்றவர் தெற்கேயும் குடியேறினூர்கள் என்றும் கூறுகிருர். வடக்கே குடியேறிய அரச குலத்தினர் முட்டை வடிவமான அழகிய முகங்களேயும், உறுதியான உறுப்புக்களேயும், உருண்டு திரண்ட உடல்களேயும் பெற்றிருந்தனர் என்றும், மற்றவர் அவ்வாறில்லே என்றும் கூறுகிருர். இவ்வாறு கொரியர்கள் ஜப்பானுக்குள் குடியேறுவதற்கு முன்னரே தங்கள் நாட்டில் அரசியலமைப்பைப் பெற்றிருந்தனரென்பது இப் பேராசிரியர் கூறும் கூற்றிலிருந்து நமக்குப் புலப்படுகிறது.

கொரியா, தெற்கே மிமாஞ (Mimana) மையத்தில் குதாரா (Kudara), வடக்கில் கோமா (Koma) ஆகிய மூன்று மாநிலங்களாகப் பிரிந்திருந்தது. குதாராவுக்கருகில் சிராகி (Shiragi) என்னும் ஒரு தனி மாநிலமும் இருந்தது. குதாராவுக்கு, இன்றைய சிறப்பு வாய்ந்த பட்டினமாகிய சேவுல் (Seoul) என்ற இடமே பண்டைய காலத்தில் வேறு பெயருடன் தலேநகராயிருந்தது. வடக்கேயுள்ள கோமாவுக்கு பிங்கியாங்கு (Pingyong) தலேநகராக இருந்தது. கொரியாவின் இம் மூன்று மாநிலங்களும் சீராகி பிறவிப் பகை நாடாக இருந்தது. சிற்சில சமையங்களில் இம் மூன்று நாடுகளும் தங்களுக்குள்ளேயே போரிட்டுக் கொண்டன. இவைகளேக் கூர்ந்து நோக்கும்போது, அடிக்கடி ஏற்பட்ட அரசியல் போரினுல் அதிலிருந்து அரச குலத்தவரும், குடிமக்களும் அண்டையிலிருந்த ஜப்பான் தீவுக்குள் குடியேறியிருப்பார்கள் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே உள்ளது.

சீஞவின் ஆவணக் குறிப்பான சிச்சி (Shichih) என்பதில் கொரியாவின் வரலாறுபற்றி ஒரு சில குறிப்புகள் காணப் படுகின்றன. சீஞவை ஆண்ட சௌ (Chou) மரபில் வந்த யூ (Wu) என்ற பேரரசன் கொரியாவை சித்சூ (Chitzu) என்ற அதிகாரிக்கு மானியமாக அளித்தான் என்றும், அவ்வதிகாரி கொரியாவின் தலேவஞகி, வடகொரியாவில் சிறந்த நாகரிகத்தைப் பரப்பினுன் என்றும், அவனே பிற்காலத்தில் கொரியாவின் பேரரசஞகிச் சீஞவுக்குத் திறை செலுத்தாமல் தன்னே ஒரு தன்னுரிமை பெற்ற அரசஞக அறிவிப்புச் செய்தான் என்றும் கூறுகிறது. பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு சீஞவின் அரசரான சின் (Chin) மரபைச் சேர்ந்த சிஃவாங்தி (Shih—Hwangti) என்ற பேரரசர் சாந்துங்கு (Shantung) துறைமுகத்திலிருந்து தாயிச முனிவர், சுஃபு (Sufu) என்பவரையும், மூவாயிரம் ஆண்களேயும், பெண்களேயும் எல்லா வகையான கைவினேஞர்களேயும் ஒரு கப்பலிலேற்றி, மற்ருெரு கப்பல் நிறையத் தவசங்களேயும் மற்றும் விதைகளேயும் ஏற்றிக் கொரியாவின் வழியாகச் சென்று, கிழக்கேயுள்ள தீவுகளில்

குடியேறுமாறு கட்டளையிட்டார் என்று சிச்சி கூறுகிறது. கொரியாவிலும், ஜப்பானிலும் காணப்படும் பண்டைய குடவ ஏனங்கள், கருங்கல் வாள்கள் அம்புமுனைகள் முதலியன சீனுவை ஆண்ட சின் அரச மரபினர் காலத்தைச் சேர்ந்தவையாயுள்ளன. எனவே ஜப்பானியரின் பழந்தாயகம் கொரியாவாக இருக்க வேண்டும் என்பது ஓரளவு உறுதிப்படுகிறது.

கி.மு. 33-ல் கொரியாவின் தென் மாநிலமான மிமாஞுவை ஆண்ட அரசரொருவர், ஜப்பானை ஆண்ட பத்தாவது பேரரசர் சுசின் (Sujin 97-30 B.C.) என்பவருக்குத் திறைப் பொருள்களை அனுப்பினர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. புத்த மதம் சீனுவுக்குள் கி.மு. முதல் நூற்றுண்டிலேயே பரவி விட்டது. இது கொரியா வழியாக ஜப்பானுக்குள் பிற்காலத்தில்தான் நுழைந்திருக்க வேண்டும். சீனப் புத்த நூல்களில் வா (Wa) எனப்படும் ஒருவகை இனத்தவரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவர்கள் மிகக் குட்டையானவர்கள் என்பதால் இவர்களைச் 'சித்திரக்குள்ளர்கள்' (Dawrf) என்று இந் நூல்கள் அழைக்கின்றன. இவர்கள் யென் (Yen) என்ற மாநிலத்தில் வாழ்ந்தார்கள் என்றும், இவர்களை ஆண்ட பேரரசனுன மாவீரன்வா (The Great Wa) என்பவன் கொரியாவை வென்றபோது கொரியர்களுக்கும், இந்த 'வா'க்களுக்கும் அஞ்சல் தொடர்புகள் இருந்தனவென்றும் சீனப் புத்த நூல்கள் கூறுகின்றன. கொரியாவின் சவக்குழிகளில் கிடைக்கும் பொருள்களும், நாணயங்களும், இந்த 'யென்' அரசர்களின் நாணயங்களையும், பொருள்களையும் ஒத்திருக்கின்றன. இவற்றையொத்த பொருள்கள் இலூச்சூ (Loochoo) தீவுகளிலும் கிடைக்கின்றன. எனவே 'யென்' மக்கள் கொரியா இலூச்சூத் தீவுகளிலிருந்து ஜப்பானுக்குக் குடிபெயர்ந்த பின் புதிய நாகரிகத்தைப் பெற்றிருக்கலாமென்றும், அல்லது 'யென்கள்' கொரியாவில் குடியேறும்போது கொரியர்கள் விரட்டப்பட்டு, ஜப்பானுக்குள் குடியேறியிருக்கலாம் என்றும் கொள்ளலாம். இத்தகைய குறிப்புகள் மேற்கண்ட 'சிச்சி' என்னும் சீன ஆவணக் குறிப்பிலும் காணப்படுகின்றன. எனவே ஜப்பானியரின் பழந்தாயகம் கொரியாவாக இருக்க வேண்டும் என்பது மேலும் உறுதிப்படுகிறது.

### ஆசியர்

'ஐநு' இனத்தின் முன்னோர் இமயமலையின் தென்பகுதியிலிருந்து ஜப்பானில் குடியேறினுர்களென்றும், தென் சீனு வழியாக ஜப்பானில் குடியேறியவர்கள் 'தாய்' (Thais) இனத்தின் ஒரு பிரிவினரென்றும் அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

மைய ஆசியாவிலிருந்து குடிபெயர்ந்து கைபர், போலன் கணவாய்களின் வழியாக இந்தியாவின் வடமேற்கேயுள்ள சிந்து சமவெளியில் குடியேறிய ஆரிய இனத்தவரின் ஒரு பிரிவினர், மேற்படி சீனுவின் வழியாக ஜப்பானுக்குள் குடியேறினுர்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் சிலர் கூறுகின்றனர். வேதக்கால ஆரியருக்கும் ஜப்பானியருக்கும் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாம்.

## மங்கோலியர்

ஜப்பானியரின் முன்னேர் மங்கோலியரென்றும் ஆராய்ச்சியாளர்களில் ஒரு குழுவார் கருதுகின்றனர். இம் மங்கோலியர் சைபீரியாவைத் தாண்டி சகாலின் (Sakhalen) தீவுகளின் வழியாக ஜப்பானின் வடக்கேயுள்ள ஒக்கைதோவில் குடியேறினர்; அல்லது சகாலினிலிருந்து கிழக்கேயுள்ள ஒக்காத்சுகு (Okhotsk) கடலைத் தாண்டி காம்சட்கா(Kamchatka)த் தீவில் குடியேறி, பின் அங்கிருந்து தென்கிழக்கே சங்கிலித் தொடர் போல் நீண்டுள்ள குரிலி(Kurile) த் தீவுகளின் வழியாக ஜப்பானின் வடபுலமான ஒக்கைதோவில் குடியேறியிருக்கலாம். ஆக மேற்படி ஆசியரும், மங்கோலியரும் கிழக்கேயுள்ள ஜப்பானியத் தீவுகளுக்குக் குடியேறப் பல தீவுகள் நேரடிப் பாதைகளாக்கப்பட்டன வென்பது நிலநூல் காட்டும் உண்மையாகும்.

## மலேயர்

ஆராய்ச்சியாளர்களில் மற்றெரு பிரிவார் ஜப்பானியரின் முன்னேர் மலேயாத்தீவுகளிலிருந்து வந்தனரென்கின்றனர். இம் மலேயர்கள் வடகிழக்கேயுள்ள பிலிப்பைன், பொருநையோத் தீவுகளின் வழியாகச் சீனுவிலுள்ள ஆங்காங்கைத் தாண்டி, பார்மோசா இலூச்சூத் தீவுகளின் வழியாகக் குயூசுத் தீவில் — அஃதாவது ஜப்பானின் தென்பகுதியில் குடியேறினர். ஜப்பானியரின் உணவு முறை சில பழக்கவழக்கங்கள் முதலியவை மலேயரை ஒத்திருப்பதாலும் இவ் வகைக் குடியிருப்பு, நிலநூலின்படி உண்மையாக இருப்பதாலும் ஜப்பானியரின் தாயகம் மலேயாவாக இருக்கலாம் என்பதும் ஓரளவு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனுல், இதற்கும் போதிய சான்றுகள் இல்லை. குயூசுத் தீவில் கிடைக்கும் பழங் கற்கால, மாழைக்கால, இரும்புக்காலப் பொருள்களைக் கொண்டும், மலேயாவே இவர்களின் தாயகம் என்பதை மெய்ப்பிக்க இயலவில்லை. பொதுவாகப் புதைபொருள்கள் ஒரு நாட்டின் பண்டைய வரலாற்றையும், மக்களினத்தின் வகையையும் அறிய உதவும் வரலாற்றுச் சான்றுகளாகப் பயன்

படுகின்றன. சான்றாக, சிந்துவெளியில் தோண்டி எடுக்கப்பட்ட பொருள்கள் திரவிடர் நாகரிகத்தையும், செருமனியிலுள்ள பொக்காசுகோயி என்னுமிடத்தில் தோண்டி எடுக்கப்பட்ட பொருள்கள் ஆரியர் நாகரிகத்தையும் அறிய உதவுகின்றன. ஆனால், ஜப்பானில் கிடைக்கும் எத்தகைய புதைபொருளும் இவர்களின் தாயகத்தையும், தொன்மை இனத்தையும் துல்லியமாக அறிய நமக்குப் பயன்படவில்லை.

### மண்ணின் மைந்தர்

ஆராய்ச்சியாளர்களில் மற்றுமொரு குழுவார் ஜப்பானியர்கள் மேலே கூறப்பட்டவாறு எத்தகைய நாட்டிலிருந்தும் ஜப்பானுக்குள் குடியேறியவர்கள் அல்லரென்றும், ஜப்பான் மண்ணிலேயே தோன்றிய மக்களென்றும் கூறுகின்றனர். அவ்வாறு கொள்வோமானால், அம் மண்ணிலேயே முதன்முதல் தோன்றியவர்கள், இன்று காணப்படும் ஐநு இனத்தவர்களின் முன்னோர்களே ஆவர். இவர்களுக்குப் பின்னரே யமாத்தோக்கள் ஜப்பானில் குடியேறினார்கள். இவ்வாறு குடியேறிய யமாத்தோக்கள் ஐநூக்களை ஒக்கைதோவிலிருந்து வடகிழக்குப் பக்கமாக விரட்டியடித்தனர்.

'ஐநு' மரபினரின் செவிவழிச் செய்தி ஒன்றின் மூலம் இவர்களுக்கு முன்பு, சித்திரக்குள்ளர்கள் எனப்படுவோர் குகைகளில் வாழ்ந்து வந்தார்களென்றும், அவர்களோடு ஐநு இனத்தவர் கலந்து விட்டனரென்றும் கூறப்படுகிறது. இவ்வாறு குகைகளில் வாழும் மக்கள் இன்றும் ஒக்கைதோத் தீவில் காணப்படுகின்றனர். ஐநு இனத்தவர் தொல் ஜப்பானிய மக்கள். அவர்களின் மக்கள் தொகை 1965-ல் பதினைந்தாயிரமே ஆகும். இந்தியாவிலுள்ள பழங்குடி மரபான தோதவர் இனத்தைப் போலவே, இவ் வினமும் அழிந்து கொண்டே போகின்றது. ஐநு இனத்தவரின் உடலமைப்பில் தோல், மயிர் முதலியவற்றை நோக்கும்போது ஆசியாவில் இருக்கும் காகாசியன் (Caucasian) களைப்போல் காணப்படுகின்றனர்.

### கலப்பினத்தவர்

சில ஆராய்ச்சியாளர்கள் ஜப்பானியர்களை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் ஜப்பானில் குடியேறிய மலைநாட்டுக் கலப்பினத்தவர், தென்சீனர் ஆகியோரின் வழித்தோன்றல்களென்றும், வரலாற்றுக் காலத்தில் குறைந்த அளவில் குடியேறிய சீனர், கொரியர் ஆகியோரின் வழித்தோன்றல்களென்றும் கருது

கின்றனர். தொன் மங்கோலியர் கற்காலத்தில் கொரியாவின் வழியாக வந்து ஜப்பானில் குடியேறி, அங்கிருந்த பழங்குடி மக்களோடு கலந்து விட்டனர். இவர்களின் வழித்தோன்றல்களே இன்றைய ஜப்பானிய இனத்தவரென்றும், மஞ்சூரியாவிலிருந்தும், அதற்கப்பாலுள்ள சைபீரியாவிலிருந்தும் வந்த இம் மங்கோலியர் ஜப்பான் இனத்துடன் கலந்தனர்; அவ்வாறு கலந்த இவர்களைத் தூய மங்கோலியர் என்றோ, கொரியர் என்றோ கூற முடியாதென்றும், வரும்போதே கலப்பினங்களாக வந்து ஜப்பானின் பழங்குடி மக்களோடு கலந்தனரென்றும், எனவே இன்றைய ஜப்பானிய இனம், ஒரு கலப்பினமாகும் என்றும், வயவர் சியார்சு சான்சம் (Sir George Sansom) என்பவர் கூறுகிறார்.

ஜப்பானியரின் மிகத் தொன்மைத் தொழிலான வேளாண்மையை இவர்கள் தென் சீனாவிலிருந்து கற்றனர். தென் சீனாவில் சேற்றில் நெற்பயிர் நட்டுப் பயிரிடும் முறை பண்டைய காலத்திலிருந்தே புழக்கத்தில் இருக்கிறது. அதே முறையை ஜப்பானியரும் பின்பற்றுகின்றனர். எனவே இவர்கள் தென் சினர்களின் வழிவந்த கலப்பினத்தவராவரென்று ஆராய்ச்சியாளர்களில் சிலர் கருதுகின்றனர்.

தென் ஜப்பானிலுள்ள மக்கள், வெப்பத்தையே பெரிதும் விரும்புகின்றனர். இவர்களின் வெப்பத்திற்கேற்ற வாழ்க்கை முறை, மலேயர் அல்லது பொலினீசியரின் வாழ்க்கை முறையோடு ஒத்திருக்கிறது. அதே சமையத்தில் வட ஜப்பானிலுள்ள தட்ப நிலையையும், குளிர்ச் சூழலையும் அங்குள்ள மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். இவர்களின் இயற்கைச் சூழலுக்கேற்ற வாழ்க்கை முறை ஆசிய மக்களின் வாழ்க்கை முறையை ஒத்திருக்கிறது. மைய ஜப்பான் நாட்டின் இயற்கை சூழலுக்கேற்ற வாழ்க்கை முறை இவ்விரு பிரிவினரிடமிருந்து மாறுபடுகிறது. பொதுவாக ஜப்பான் நாடு முழுவதும் வாழும் மக்களின் உணவு வகைகள், பேச்சு வழக்குகள், இருப்பிடங்கள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றைக் கூர்ந்து நோக்கினால் ஒரே வகையாக இராமல் பலவகையாகக் காணப்படுகின்றன. எனவே பழங்காலந் தொட்டு ஐரோப்பியர்கள் குடியேறிய காலம் வரை, ஜப்பானில் வந்து குடியேறிய பன்னாட்டு மக்களின் கலப்பினத்தவரே இன்றைய ஜப்பானியர் என்பது பலராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது.

ஜப்பானியரின் முன்னோர் யமாத்தோ எனப்படும் ஓர் இனப் பிரிவைச் சேர்ந்தவரென்றும், அவ்வினத்தவர் கி. பி. முதல் மூன்று அல்லது நான்காவது நூற்றாண்டில் பிற போரிடும் மரபினரை

வென்று தங்களாளுமையை ஏற்படுத்திக் கொண்டனரென்றும் கூறப்படுகிறது. அந்த யமாத்தோ தலைவர்களின் வழித் தோன்றல்களே இன்றைய ஜப்பானிய அரச குடும்பத்தினராவ ரென்றும் ஒப்புக் கொள்ளப்படுகிறது.

## பண்டைய நாகரிகம்

ஜப்பானியரின் பண்டைக்கால வாழ்க்கை முறையை அறிவதற்குத் தொன்மங்கள் சிலவும், சவக்குழிகளும், புதை பொருள்களும் ஓரளவு நமக்குச் சான்றுகளாக உதவுகின்றன. கோசிகியும் நிகோங்கியும் எழுத்து வடிவிலான சான்றுகளாகும். இவற்றைத் தவிர சீன ஆவணக் குறிப்புகள், சீனப் புத்த நூல்கள், கொரியாவின் ஆவணக் குறிப்புகள் முதலியவைகளில் பண்டைக் கால ஜப்பானிய நாகரிகத்தைப் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன.

### உறைவிடங்கள்

பண்டைய பழங்குடி மக்கள் குகைகளிலும், குழிகளிலும் வாழ்ந்தார்களென்றும், அவர்கள் தங்கள் இனத்திற்கேற்ற குழூஉக் குறிகளைப் பெற்றிருந்தார்களென்றும் சாஞய்ச்சிங்கு (Shanhai Ching) என்ற சீன ஆவணக் குறிப்பு கூறுகிறது. பொதுவாக நோக்குமிடத்து நூற்றுக்கணக்கான தீவுகளடங்கிய ஜப்பானிய நாட்டின் பழங்குடி மக்கள் ஒரே இடத்தில் பெருங் கூட்டமாகக் கூடி வாழாமல் ஆங்காங்கே சிதறி வாழ்ந்தனர். எனவேதான் இவர்களின் கூட்டு முயற்சியும், அறிவு முதிர்ச்சியும் ஒருங்கிணைந்து, திட்டமிட்டுக் கட்டும் வீடுகளையும், நகரங்களையும் கட்டப் பயன்படாது போய் விட்டது. தனித்தனியே வாழ்ந்த இவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கிடைக்கும் ஆற்றங்கரையோரங்களிலும், கடற்கரை யோரங்களிலும் தங்கள் வாழிடங்களை அமைத்து வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் வீடுகள் மரக்கொம்புகளால் கட்டப் பட்டு, உலர்ந்த புல்களாலும் தவசத் தாள்களாலும் வேயப் பட்டிருந்தன. இவைகளைக் கட்டுவதற்குக் கயிறுகளுக்குப் பதிலாக நீண்ட கொடிகளையே பயன்படுத்தினார்கள். கருங்கற்களோ, சுட்ட செங்கற்களோ பயன்படுத்தப் படவில்லை. வீடுகள் அடுத்தடுத்துச் சம சதுர வடிவத்தில் கட்டப்பட்டு இரண்டு வீடுகளுக்கும் இடையிலுள்ள இடைவெளியைக் கூரையால் மூடுவார்கள். இதில் ஒரு வீடு வதிவதற்கும், மற்றொரு வீடு பொருள்களை வைப்பதற்கும், பயன்படும். விலங்குகளின் தோல்களும், தாள்களும் இவர் களுக்குப் படுக்கைகளாக உதவின. வாயிற் கதவுகளை இணைப்ப தற்கும், சுவராகப் பயன்படும் மரப்பலகைகளை இணைப்பதற்கும்

இரும்பாணிக்குப் பதிலாக மர ஆணிகளையே பயன்படுத்தினார்கள். கதவுகள் உட்புறமாகத் திறக்கப்பட்டு, வெளிப்புறம் தள்ளி உட்புறம் தாழிடும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தன.

மக்கள் வதிவதற்குக் கட்டப்பட்ட வீடுகளைப் போலவே மன்னருக்கும், மகேசனுக்கும் வீடுகள் அமைக்கப்படும். ஆனால் மன்னரின் வீட்டையும், மகேசனின் வீட்டையும் புனித நாடு (Miya) என்றழைத்தனர்.

உணவும் உடையும்

இவர்களுடைய உணவு வகைகளில் மிக முகாமையானது அரிசியுணவேயாகும். எனவே பண்டைய ஜப்பானின் முகாமைத் தொழில் வேளாண்மையே என்பது தெளிவாகிறது. நாற்புறமும் கடலாற் சூழப்பட்ட ஜப்பானியருக்கு வேளாண்மைக்கு அடுத்தது கடலாகும். மீன், மீனின் வகைகள் ஆகியவற்றைத் தங்கள் உணவு வகையில் பெரும் பகுதியாகக் கொண்டார்கள். காடுகளில் வேட்டையாடுதலும், விலங்குகளின் இறைச்சியை உண்ணலும், அவைகளின் தோல்களை ஆடைகளாகவும், படுக்கைகளாகவும் பயன்படுத்தலும் தொல் ஜப்பானியரின் அன்றாட வாழ்க்கை முறையின் ஒரு பகுதியாகும். அரிசியிலிருந்து வடிக்கப்படும் கஞ்சியிலிருந்து சகே (Sake) எனப்படும் ஒருவகை மதுவை இறக்கினர். ஒரு சில ஆராய்ச்சியாளர்கள் இதனை அயல் நாட்டி லிருந்து இறக்குமதி செய்திருத்தல் வேண்டுமென்று ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர்.

இன்று ஜப்பானில் பெரிதும் வளர்ந்துள்ள தேயிலை (Tea), புகையிலை, குளம்பி (Coffee), முசுக்கொட்டை (மல்பெரி) போன்ற பயிர் வகைகள் பண்டைக் காலத்தில் பயிரிடப் படவில்லை. கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரை ஜப்பானில் பருத்தி பயிரிடப்படவில்லை. ஆரஞ்சு பயிரிடும் முறை முதன் முதலாக சுயெனின் (Suinin = 29 B.C.–70. A.D.) என்னும் பேரரசர் தான் ஜப்பானில் புகுத்தினார். மண்ணால் செய்யப்பட்ட உண்கலங்களையே பெற்றிருந்தனர். ஒரு மரத்தின் இலைகளைக் கொண்டு மதுக் குடிக்கும் குவளைகள் செய்தனர். பால், மோர், தயிர் போன்ற பாற் பொருள்கள் ஆரியரின் முகாமை உணவு வகைகள். ஆனால், ஜப்பானியரின் பழக்கத்தில் இவை யிடம்பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. முசுக்கொட்டை பயிரிடுதல் பட்டுப் பூச்சிகளின் இரைக்காக மேற் கொள்ளப்பட்டது. கி.பி. 16 ஆம் நூற்றாண்டில்தான் புகையிலை பயிரிடும் முறையைப் போர்த்துகீசியர் ஜப்பானுக்குக் கொண்டு வந்தனர். எனவே பண்டைய ஜப்பானியரின் உடை வகைகளைக்

கூர்ந்து நோக்கினால், அவை பட்டு, பருத்தி, தாவரி (கம்பளம்) ஆகியவற்றால் ஆனவைகளாகப் புலப்படவில்லை. தாள் (Paper) செய்யப் பயன்படும் மல்பெரிப் பட்டைகளிலிருந்து எடுக்கப்பட்ட நார்களைக் கொண்டு ஆடைகள் நெய்து அணிந்தார்கள். விலங்கு களின் தோல்களும் இவர்களுக்கு ஆடைகளாகப் பயன்பட்டன.

கோசிகியில் காணப்படும் சான்றுகளைக்கொண்டு நோக்கின் ஜப்பானியர்கள் வட்டுடை, உள்ளங்கி, மேலாடை, தலைப்பாகை ஆகியவற்றை ஆண்களும், பாவாடை, கச்சை, மேலாடை ஆகியவற்றைப் பெண்களும் அணிந்திருந்ததாக அறிகிறோம். ஆனால், இவ்வாடைகள் எதனால் நெய்யப்பட்டனவென்று நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

அணிகலன்கள்

கோசிகியில் காணப்படும் இசனகியும், இசனமியும், மற்றும் பல தொன்மப் படைப்புக்களும், காதணிகள், கழுத்தணிகள், இடுப்புக் கச்சைகள், கொக்கி, கணையாழிகள் முதலிய அணிகலன் களை ஜப்பானியர் அணிந்திருந்தனர். கால்களில் அணியப் படும் வளையங்கள், பிறை வடிவிலான நகைகள் முதலியவற்றையும் விலங்குகளின் கொம்புகள், எலும்புகள் முதலியவற்றாலான வளை வான அணிகலன்கள் முதலியவற்றையும் இவர்கள் அணிந்தனர். இவ்விரு அணிகலன்களுக்கும் முறையே குடதமா (Kutadama), மகதமா (Magatama) என்று பெயர். எளிமையான கண்ணாடிக் கற்கள், படிகங்கள், மணிகள் ஆகியவற்றாலும் அணிகலன்கள் செய்யப்பட்டன. இம் முறை கொரியா, சைபீரியா ஆகிய நாடு களிலிருந்து ஜப்பானுக்குள் வந்ததென்பர். புலி, மான் முதலிய வற்றின் பல், கொம்பு, எலும்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தால் ஒருவகைத் தெய்விக ஆற்றல் ஏற்படு மென்றும், அது பலவகை இன்னல்களிலிருந்து தங்களைக் காப்பாற்றுமென்றும் ஜப்பானியர் நம்பினர். செம்பு, பித்தளை ஆகிய மாழைகளால் செய்யப்பட்ட 'குடதமா' அணிகலன்கள் தங்கம் அல்லது வெள்ளி முலாம் பூசப்பட்டிருக்கும். இத்தகைய அணிகலன்கள் ஜப்பானியரின் சவக்குழிகளில் கண்டெடுக்கப்படு கின்றன. ஓர் அரசன் இறந்துவிட்டால் அவனுடைய உவளகப் (அந்தப்புரம்) பெண்டிரையும், வேலையாள்களையும், பயன்படுத்திய பொருள்களையும் உடன்சேர்த்துப் புதைக்கும் பழக்கத்திற்குப் பதிலாக இவர்களின் உருவங்களைக் களிமண்ணால் செய்து புதைப்பது வழக்கமாயிருந்தது. அத்தகைய களிமண் உருவங்களின் காதுகளிலும், விரல்களிலும், கழுத்திலும் காணப்படும் அணிகலன்

களும் அவர்கள் பயன்படுத்தியதாகக் கருதப்படும் சீப்பு, குடவக் கண்ணுடிகள் முதலியவற்றையும் கொண்டு பண்டைய ஜப்பானியரின் அணி வகைகளை அறியலாம்.

## கருவிகள்

ஜப்பானியர் கருவிகளைப் பயன்படுத்தும் முறையினை நன்கு அறிந்திருந்த போதிலும், அவைகள் எத்தகைய மாழைகளால் செய்யப்பட்டவை யென்பதைத் திட்டவட்டமாகக் கூற இயல வில்லை. கற்களால் செய்யப்பட்ட வாள்களும், வாள் பிடிகளும் ஜப்பானில் கண்டெடுக்கப்படுகின்றன. இவற்றில் குடவத்தாலான கருவிகளும், இரும்பாலான ஈட்டி, தூண்டில் முள் போன்றவை களும், சீனுவை ஆண்ட ஆன் மரபினர் (Han Dynasty = 206 B.C. —214 A.D.) காலத்துக் கருவிகளை ஒத்திருக்கின்றன. கல்லறை களில் மிகவும் பெரியதாகக் காணப்படும் நிந்தோகூவின் (Nintoku =313—399 A.D.) கல்லறை 1,200 அடி நீளமும், 90 அடி உயர மும் உடையது. இதனைச் சுற்றிலும் அகழி உள்ளது. இஃது ஏறத்தாழ எண்பது ஏக்கர் பரப்பளவுள்ளது.

மரங்களை வெட்டுவதற்குப் பயன்பட்ட கோடரிகள், கல் அல்லது மானின் கொம்பால் செய்யப்பட்டவை. ஈட்டி முனை களும், அம்பு முனைகளும் மாழையால் செய்யப்பட்டிருந்தன. இவ் வகையான கருவிகளை ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் காணப்படும் பண்டைய கருவிகளோடு ஒப்பிடலாம். கருவிகளைப் பாதுகாத்து வைப்பதற்காகவும், எதிரிகள் தங்களைத் தாக்கும் போது பாதுகாத்துக் கொள்வதற்கும் ஒருவகைப் பாதுகாப்பான இடத்தை இவர்கள் பெற்றிருந்தார்கள். அவ்விடத்திற்கு சிரோ (Shiro) என்று பெயர்.

## விலங்கினங்கள்

குதிரை, ஜப்பானியரின் முகாமையான வீட்டு விலங்காகக் கருதப்படுகிறது. இது ஏறிச் செல்வதற்கு மட்டும் பயன்படுத்தப் பட்டது. இதைத் தவிர அவர்களின் வீடுகளில் பறவைகளும், நாய்களும் வளர்க்கப்பட்டன. ஆ (பசு), பூனை முதலிய வீட்டு விலங்குகளைப்பற்றி எவ்வகைக் குறிப்புமில்லை. ஆ, ஆரியர்களின் வழிபாட்டு விலங்கு என்பது குறிப்பிடத் தக்கது. ஆனல், ஜப்பானியர் ஆவைப்பற்றி அறிந்திருந்ததாகத் தெரியவில்லை. கலைமான், கரடி, முயல் முதலிய காட்டு விலங்குகளை இவர்கள் வேட்டையாடினர்.

## போக்குவரத்து

ஜப்பானின் இயற்கையமைப்பை நோக்கும்போது பண்டைக் காலத்தில் ஓரிடத்தைக் கடந்து மற்றோர் இடத்திற்குப் போவதற்கு மாந்தன் எவ்வளவு தொல்லைப்பட்டிருப்பான் என்பது தெளிவாகிறது. ஜப்பான், காடுகளாலும், மேடு பள்ளங்களாலும், ஆறுகளாலும், நீரோடைகளாலும் சூழப்பட்ட நாடு. இதனைச் சுற்றிலும் நாற்புறமும் கடல் சூழ்ந்து நிற்கிறது. எனவே உள் நாட்டைத் தொன் மாந்தன் தன் கால்களினாலே நடந்து கடந்தான். சிற்சில சமையங்களில் குதிரைமீது ஏறிச் செல்வான். வண்டிகள் அல்லது சக்கரங்களைக் கொண்ட வண்டிகளைப் போன்ற வேறு அணிகங்களைத் தொன் மாந்தன் அறியான். புத்த சமயம் இந் நாட்டில் நுழையும்போதுதான் வண்டிகளின் பயன் ஜப்பானியருக்குப் புலப்பட்டது. புத்தத் துறவிகள் சீடர்களாலும், எருதுகளாலும், குதிரைகளாலும் இழுக்கப்பட்ட வண்டிகளைப் பயன்படுத்தினர். உள்நாட்டு நீர் நிலைகளைக் கடப்பதற்கும், கடலைக் கடந்து வெளிநாடு செல்வதற்கும் ஓடங்களைப் பயன் படுத்தினார்கள். சுருங்கக் கூறின் தொல் ஜப்பானியன் நிலத்தைக் கடப்பதைவிட, நீரைக் கடப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தான். வரலாற்றிற்கு எட்டிய வரையில் முதன் முதலாக இந் நாட்டில் நீண்ட பாதைகளை அமைத்தவர் கி. பி. 201-லிருந்து 269 வரையில் ஜப்பானை ஆண்ட சிங்கோ (Jinco) என்னும் பேரரசியாவார்.

## சமயம்

ஜப்பானியருடைய மதம் மிக எளிமையான இயற்கை வழிபாட்டு மதமாகும். இம் மதத்தில் மறையியலோ மெய்ப்பொருட் திண்மையோ இல்லை. ஆதவனின் அழகுத் தோற்றத்தையும், பால் நிலவின் பளிங்கு வடிவையும், ஓடும் ஆறுகளையும், உயர்ந்து நின்ற மலைக் குன்றுகளையும், அசையும் மரங்களையும், ஆடும் கொடிகளையும் கண்ட தொல் ஜப்பானியன் அவற்றில் தன்னுள்ளத்தைப் பறிகொடுத்தான். அவற்றிலிருந்து கமழும் நறுமணத்திலே தன் உயிர்ப்பைக் கலக்கச் செய்தான். தன்னைப் போலவே இவ் வியற்கைக்கெல்லாம் உயிரும் உள்ளமும் உள்முக (ஆன்மீக) ஆற்றலும் இருப்பதாகக் கொண்டான். இயற்கையின் எழிலோவியத்தை உள்ளாற்றல் கொண்ட 'முருகென' வழிபட்ட இவனுக்கு, குமுறும் எரிமலைகளும், கொந்தளிக்கும் கடலும், நெஞ்சைக் குலுக்கும் நில நடுக்கங்களும் இவ் வியற்கையின் புன்னகைகளாகவே காணப்பட்டன. எனவேதான் இவ்வியற்கைக் கேடுகளைத் தீய கடவுள்களாகக் கற்பித்து வணங்காமல்,

அழகெனவே வழிபட்டான். மலைகளிலும், பாறைகளிலும், நீரோடைகளிலும், செடிகளிலும், கொடிகளிலும் தெய்விக உயிர்ப்பாற்றல்கள் தங்கியிருப்பதாகக் கருதினான். அவற்றில் தன்னுள்ளத்தைப் பறிகொடுத்து அன்பால் வழிபட்டான். பொதுவாகப் பிற நாடுகளில் காணப்பட்ட தொன் மாந்தன் முதலில் அச்சத்தாலும், பிறகு கரணியத்திற்காகவும், இறுதியாக அன்பிற்காகவும் கடவுளை வழிபட்டான் என்றும் அறிகிறோம்.

மாந்தன் கடவுளுக்கு அஞ்சத் தொடங்கியபோதுதான் அறிவுடைமையும் தொடங்கிற்று என்று விவிலியம் உரைக்கிறது. ஆனால், ஐப்பானியர் இவற்றிற்கெல்லாம் மாறாக இயற்கையைக் காதலித்துக் கடவுள் பத்தியைப் பெற்றனர். எனவே இவர்களின் தொன்மங்களும் இந் நாட்டை அழகு நாடு, இயற்கையணி நாடு, பசும்வயல் நாடு, ஆயிரம் இளவேனில் நாடு என்று புகழ்கின்றன. இத் தொன்மங்களில் வரும் தேவதைகளுக்கு இடப்பட்ட பூவழகி, மரவழகி, கொடியழகி, பருவவழகி ஆகிய பெயர்களையும், தெய்விகம், தீஞ்சுவை, நறுமணம் ஆகிய ஆற்றல்களின் பெயர்களையும் நோக்கினால் ஐப்பானியர் எவ்வாறு இயற்கையில் மனத்தைப் பறி கொடுத்தனரென்பது விளங்கும். இவர்கள் வணங்கிய முழுமுதற் கடவுளை உயர்குணத்தான் (Kami) என்று அழைத்தனர். பிறப்பு—இறப்பு, ஆதன்—பரவாதன் (ஆன்மா—பரமான்மா) உடல்—உயிர் ஆகியவற்றின் வேறுபாடுகளையும், இவற்றிற்கான எத்தகைய பட்டாங்குகளையும் ஐப்பானியர் அறியவில்லை. இவர்களின் தொல் பழங்கதைகளில் வரும் அகசுதசு, அகசுதனசு, இசுமி முதலிய தேவதைகள் எத்தகைய ஆற்றல்களையும், குணங்களையும் பெற்றிருந்தனரென்பது குறிப்பிடப்படவில்லை. இத்தகைய மெய்யுணர்வுக் கொள்கை (தத்துவங்கள்) பிற்காலத்தில் ஐப்பானுக்குள் நுழைந்த கன்ஃபூசிய, புத்த மதங்களாலேயே ஏற்பட்டன.

ஐப்பானியரின் இத்தகைய இயற்கை வழிபாட்டுச் சமய நெறியே 'சின்தோ மதம்' (Sintoism) என வளர்ந்தது. சின்தோ என்பதற்குக் 'கடவுளரின் வழி' என்று பொருள். இது மேற்படி இயற்கையை வழிபடும் முறையில் தொடங்கப்பட்டிருந்தாலும் நாளடைவில் கதிரவனையும், நிலத்தையும் வணங்கும் முறை பிற எல்லா வணக்கத்தையும்விட இதில் மிகுதியாக நிலைத்துவிட்டது. புவியைக்கூட இவர்கள் உயிருள்ள பெரும் பொருளாக ஓ-குனி-தாமா (O-Kuni-Dama) என்று கருதினர். நாளடைவில் புவியை ஆளவந்த அரசனையும் 'பூதேவன்' (Idzumo) என்றனர். எனவே அரசனை வழிபடும் முறை இயற்கை வழிபாடாகவே பழங்

காலத்தில் இருந்திருக்கிறது. மாழைக் காலத்தில் இவ்வரசர்கள் தங்களின் சின்னங்களாகக் கொண்ட குடவக் கண்ணுடி, பிறை வடிவான நகை, நீண்ட வாள் ஆகியவற்றை முறையே கதிர் நிலவு, மின்னல் ஆகியவற்றின் சின்னங்கள் என்றனர். இதனடிப்படையிலே ஜப்பானிய அரசன் தெய்விகக் கொள்கையை பின்பற்றித் தன் ஆட்சிப் பீடத்தைக் கொடிவழிச் சொத்தாக்கிக் கொண்டான். முதன்முதலாக ஜப்பானிய அரச மரபில் வந்த யமாத்தோ அரசர்கள் கதிரவனிலிருந்து வந்ததாகக் கொள்ளப் படுவதும் இவ்வியற்கை மதத்தின் வளர்ச்சியாலேயே ஆகும். இன்றும்கூட ஜப்பான் நாட்டின் ஊர்களில் கிணறுகள் தோண்டும் பொழுதும் வீடுகள் கட்டும் பொழுதும் பூதேவனுக்குச் சாராயம் உணவு வகைகள் முதலியவற்ருேடு, குறிப்பிட்ட வடிவங்களில் கத்தரிக்கப்பட்ட துணிகளேயும், தாள்களேயும் வைத்துப் படைக்கி ருர்கள். ஒவ்வோர் ஊரிலும், நகரத்திலும் நெல் தேவதைக்கும் (Inari), உண்டித் தேவிக்கும் (Ise) கோயில்கள் உள்ளன.

தூய்மையே தொல் ஜப்பானியரின் சமய வழிபாட்டுக்கு முகாமையாகும். இத் தூய்மை ஒருவருக்குக் காயங்கள் ஏற்படும் போதும், நோய்கள் வரும்போதும், ஆண்-பெண் சேர்க்கையின் போதும், மகப்பேற்றின் போதும், சாவின்போதும், சாவைத் தொடும்போதும் கெட்டுவிடுவதாகக் கருதினர்கள். இத் தூய்மைக் கேட்டைத் 'தீட்டு' (Imi) என்று அழைத்தனர். இதனேப் போக்குவதற்கு, புறத் தூய்மை செய்து கொண்டு நோன்பிருத்தல், வழிபடுதல் முதலியவற்றை மேற்கொண்டார்கள். பண்டைய ஜப்பானியரின் வீடுகளில் ஒருவர் மரணமடைந்தால் அவ்வீட்டைத் தீட்டுள்ள வீடாகக் கருதுவர். ஆனல், எவரும் இறந்தோருக்காக அழாமல் கூத்தாடிக் களித்துத் தலே முழுகி தூய்மை பெறுவர். இதனே அடிப்படையாகக் கொண்டுதான் பண்டைய ஜப்பானிய மன்னர்கள் ஒவ்வொருவர் இறக்கும்போதும் அவர் இருந்த அரண்மனேயும், தலேநகரும் தீட்டுக்குள்ளானதாகக் கருதி, வேறு அரண்மனேக்குக் குடியேறித் தலேநகரை மாற்றிக் கொண்டார்கள். இதனேக் கூர்ந்து நோக்கும்போது இறந்த அரசனேயோ அல்லது முன்னேர்களேயோ வழிபடும் முறை ஜப்பானியருக்கு முதலில் இல்லேயென்றும், ஆனல், பின்னர் அது சீனுவிலிருந்து வந்திருக்க வேண்டுமென்றும் கருதப்படுகிறது. இவர்களின் இயற்கை மதம் சின்தோ மெய்யுணர்வில் வளரத் தொடங்கிய போதுதான் அரசனிடத்தில் நம்பிக்கையும் பத்தியும் ஏற்பட்டது என்பதை மேலேயறிந்தோம். அதனடிப்படையில்தான் போர்க்களத்தில் உயிர் நீத்த வீரர்களின் ஆதன்களேயும், அரச குடும்பத்தில் உயிர் நீத்த முன்னேரின் ஆதன்களேயும் வழிபட்டனர். எனவே சின்தோ

மதம் இயற்கை வழிபாட்டோடு அரசனையும் சேர்த்து வழிபடும் வழக்கத்தை ஜப்பானியருக்களித்தது. ஜப்பானியர் அரசனையும், ஆண்டவனையும் வழிபடும்போது குனிந்து அல்லது மண்டியிட்டுக் கைகட்டி வணங்குவர். இன்றும் இவர்களின் இயற்கை வழிபாட்டு முறைகள் தேசியத் திருவிழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன. அவற்றுள் முகாமையானது தமிழர்களின் அறுவடைத் திரு நாளான பொங்கல் விழாவைப் போன்றது. இவர்களும் கதிரவனை வணங்கி அறுவடை செய்து விழாக் கொண்டாடுகின்றனர். பயிர்கள் பூத்துக் குலுங்கும் இளவேனிற் காலத்தை, இவர்கள் இளவேனில் விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

### கன்ஃபூசிய மதம்

இம் மதம் சீனாவில் தோன்றி ஜப்பானுக்குள் பரவியது. இதனைத் தோற்றுவித்தவர் கன்ஃபூசியசு (Confucius-521–479 B.C.) என்பவராவார். ஆன்மீகத் துறையிலிருக்கும் தூய்மையைப் போலவே அரசியல், குமுகம் முதலிய எல்லாத் துறைகளிலும் தூய்மை வேண்டும் என்பதே இச் சமயத்தின் கொள்கையாகும். அஃதாவது ஆன்மீக வழியிலேயே அரசியலும், குமுகமும் ஒழுக வேண்டும். அவ்வாறு ஒழுகலாறு ஏற்படுவதற்கு மெய்யறிவர் களும், தூய நயன்மையாளரும் ஆள்வோராக மாற வேண்டும். மாந்தத் தன்மை (Fen), கடமையும் உரிமையும் (I) ஆகிய பண்புகளைக் கொண்ட மாந்தன் உண்மையான குமுகத் தன்மையைத் (Li) தானே அடைவான். இவ்வாறு தனி:மாந்தன் பெற்ற ஒழுக்கமும் வாய்மையும் (Te) நாட்டை ஒளிமயம் ஆக்கி, இயற்கை அல்லது இறைவனோடு இணைக்கிறது என்பதே இச் சமயத்தின் கருப் பொருளாகும்.

### மன்பதையமைப்பு

தொல் ஜப்பானியரில் வேளாளர், வேட்டையாடுவோர், கைவினைஞர், ஏவலாளர், அடிமைகள் முதலானோர் இருந்தனர். போர்க்களங்களில் தோற்போரையும், குமுகத்தில் தள்ளப்பட்டவர் களையும் அடிமைகளாகக் கொண்டார்கள். மக்களுடைய அரசன், மக்களைப் பாதுகாக்கும் தலைவனாகவும், தூய்மையின் சின்ன மாகவும் காணப்பட்டான். இம் மக்கள் வேளாண்மையையும், வேட்டையாடுதலையும், மீன் பிடித்தலையுமே முகாமைத் தொழில் களாகக் கொண்டிருந்தார்கள். கலைஞர்கள் கூட்டுக் குழுக்களை அமைத்துத் தொழில் செய்தனர். ஆண்களும் பெண்களும் அணிகலன்களோடு தங்கள் முகத்திலும் உடம்பிலும் பச்சை குத்திக் கொள்வதை அழகு என்று கருதினார்கள். மதுவருந்தும்

பழக்கமும், பல பெண்களை மணக்கும் பழக்கமும் இவர்களிடையே காணப்பட்டன. பல பெண்களை மணந்த மக்கள் தலைவனோ, அரசனோ இறந்தால் அவன் சவக்குழியில் அவனுடைய மனைவியரையும் சேர்த்து உயிரோடு புதைத்து விடுவார்கள். இஃதும் தூய்மை கருதியே ஆகும். தனித்தனியே வாழ்ந்த தொல் ஜப்பானியர் வாழ்வின் இன்றியமையாச் சூழலைக் கருதிக் கூட்டுக் குடும்பங்களாக வாழத் தொடங்கினர். ஒவ்வொரு குடும்பத் திற்கும் தாய் அல்லது தந்தை தலைமைப் பதவியை ஏற்கலாம்.

பழங்காலத்தில் அரச பீடமும், குடிமக்களும், ஆட்சி எல்லையும் உறுதிப்படுத்தப்படாமல் வளருந் தருவாயில் காணப்பட்டதால் படைகளும், படைத் தலைவர்களும் நிலையாகக் காணப்படவில்லை. போர் மூளும்போது வேளாளர்களே படை மறவர்களாக மாறுவர். இக் காலத்தில் குமுகத்தைக் கட்டிக் காக்கும் எத்தகைய நிலையான சட்டமும் இல்லை. ஒருவன் குற்றவாளியா என்று கணித்தறிவ தற்குத் தெய்விக ஆற்றலையே நம்பினார்கள். பிறநாடுகளில் காணப்படும் பண்டைய உசாவல் (விசாரணை) முறைகளே இங்கும் காணப்பட்டன. குற்றவாளியை நீரில் எறிதல், நெருப்புருண்டை யைத் தூக்கச் செய்தல் ஆகிய முறைகளைக் கையாண்டு தீர்ப்புக் கூறுவர். பண்டைய ஜப்பானில் எத்தகைய நாணய முறைகளும் காணப்படவில்லை. உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகங்களில் பண்டமாற்று முறையே கையாளப்பட்டது. பண்டைக்கால ஜப்பானியர் தங்களின் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள எத்தகைய மொழியைக் கையாண்டார்களென்பது நமக்கு விளங்கவில்லை. ஆயினும் இவர்களின் புதை பொருள்களிலிருந்து இவர்கள் ஓவிய ஒலி மொழியைக் (Picto Phono Graphic) கையாண்டார்களென அறியலாம்.

பண்டைய ஜப்பானியர், காலத்தைக் கணித்தற்கு எவ்வகைக் கணக்கையும், கருவியையும் பெற்றிருக்கவில்லை. பகலில் கதிரவ னையும் இரவில் சேவல் கூவுவதையும் கொண்டே காலத்தைக் கணித்துக் கொண்டார்கள். இவ்வாறு மாதங்களையும், ஆண்டு களையும் இவர்கள் கணக்கிட்டறியார். தட்ப வெப்ப மாற்றங் களைக் கொண்டு மாதங்களின் மாற்றத்தை அறிந்தார்கள். சீனாவிலிருந்து 'நாட் குறிப்பு முறை' (Calendar) ஜப்பானுக்கு வந்தபின்னரே காலத்தைக் கணித்தறிய ஜப்பானியர் கற்றுக் கொண்டனர்.

**கல்வி**

பண்டைக்கால ஜப்பானிய மக்கள் கல்வியறிவைப் பெற்றிருக்கவில்லை. வேட்டையாடுதல், நிலத்தை உழுது பண்

படுத்துதல் முதலிய அறிவியல்களைப் பெற்றிருந்தார்கள். கி. பி. 284-ல் முதன் முதலாக எழுத்துக் கலையறிவும் (Art of writing) அச்சுக் கலையும் கொரியா வழியாகச் சீனாவிலிருந்து ஜப்பானுக்கு வந்தது. இதற்கு முந்தைய காலங்களில் ஜப்பானில் பேச்சுமொழி வழக்கத்தைத் தவிர, வரிவடிவம் கொண்ட மொழி வழக்கில் இல்லை. எனவே எழுதப்பட்ட நூல்களும் இல்லையாம். கோசிகி, நிகோங்கி ஆகிய நூல்களில் செவி வழியாகக் கேட்டறிந்த பல பண்டைய செய்யுட்கள் இடம் பெற்றிருக்கின்றன. இச் செய்யுட்களைக் கொண்டு ஜப்பானிய மொழியின் மூலமொழி எதுவென்பதை ஆராய்ந்தறிய முடியவில்லை. ஜப்பானியர்களின் முன்னோர் கொரியா வழியாக ஜப்பானுக்குள் குடியேறினார்கள் என்ற கருத்தை ஏற்போமானால் ஜப்பானிய மொழி வட சீனாவின் பழங்குடி மக்களின் மொழியிலிருந்தும் பண்டைய சைபீரிய மக்களின் மொழியிலிருந்தும் பிறந்திருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

# 3. இடைக்கால ஜப்பான்

## ஜப்பான்-சீன, கொரிய உறவுகள்

ஜப்பான் நாட்டின் பண்டைய நாகரிகத் தொட்டில்களாக இசுமோ (Izumo) யமாத்தோ (Yamato) ஆகிய இரண்டு இடங்களும் விளங்குகின்றன. இசுமோ ஒன்சுத்தீவின் தென்மேற்குப் பாகத்தில் கொரியாவை நோக்கி அமைந்துள்ளது. வெளியுலகப் பண்பாடு கொரியாவின் வழியாக இங்கு பரவியது. யமாத்தோ இன்றைய நாரா, கியோத்தோ ஆகிய நகர்களுக்குத் தெற்கில் அமைந்துள்ளது. ஜப்பானியத் தீவுகளின் நடுநாயகமாக விளங்கும் ஒன்சுத்தீவின் நடுவில் யமாத்தோ அமைந்திருப்பதால் இஃது ஜப்பான் நாட்டின் சிறந்த அரசியல் தலைநகரமாக விளங்கியது. ஆனால், ஆராய்ச்சியாளரின் கருத்துப்படி முதன் முதலாக ஜப்பானின் தென்கோடியிலுள்ள குயூசுத் தீவில்தான் அரசியலமைப்பு உருவாகிப் பின் யமாத்தோவுக்குச் சென்று வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. எனவே பண்டைய ஜப்பானிய நாகரிகத்தின் மற்றொரு தொட்டிலாக குயூசுத்தீவு விளங்குகிறது. ஆனால், இத் தீவில் யமாத்தோவில் காணப்படும் ஒரு தரமான குறிப்பிட்ட வளர்ச்சி பெற்ற நாகரிகம் காணப்படவில்லை.

யமாத்தோவிலும் ஒரு சிறந்த குறிப்பிட்ட நாகரிகமும், திடமான அரசியல் வளர்ச்சியும் எடுத்த எடுப்பிலேயே வளர்ந்து விட்டனவென்றும் கூறமுடியாது. ஜப்பானின் பண்டைய தொன்மங்களான கோசிகியும் நிகோங்கியும் கதிர்க் குலத்தின் வழித் தோன்றலான தெம்முவே முதற் பேரரசாக விளங்கினாரென்று கூறினாலும், இப் பேரரசரின் குடும்பம் திடீரென உருவாகிக் கட்டுக் கோப்பான ஒரு பேராட்சியை ஏற்படுத்தி ஜப்பானை ஆளவில்லை. பண்டைய ஜப்பானில் பலதரப்பட்ட குடும்பங்கள் அவரவர் ஆளுகைக்குட்பட்ட இடங்களை ஆண்டு வந்தன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தலைவன் இருந்தான். அத் தலைவனுக்காக அக் குடும்பத்தினர் எதையும் நிறைவேற்ற அணியமாயிருந்தனர். இத்தகைய குடும்பங்களில் ஒன்று பெரும் வலுவும் பேராளுமையும் கொண்டதாக விளங்கியது. அக் குடும்பமே தொடர்ந்து ஆண்டதால் இடையிடையே வலுவிழந்த பல குடும்பங்களும், அக்

குடும்பத்தின் தலைவனிடத்தில் பொறுப்புகளை ஒப்படைத்து அத் தலைவனுக்குக் கீழ்த் தங்கள் ஆளுகைக்குட்பட்ட நிலங்களை நிகராளிகளாகவிருந்து ஆண்டார்கள். இவ்வாறு தனிச்சிறப்புடன் விளங்கிய அந்த ஒரு குடும்பத்தில் தோன்றியவனே பிற்காலத்தில் நாட்டின் பொது அரசனாக அல்லது பேரரசனாக விளங்கியிருக்க வேண்டும். இப் பேரரசனுக்கு இனவழியாகப் பிரிந்த குலத் தலைவர்களும், தொழில் வழியாகப் பிரிந்த குழுகமும் குடி மக்களானார்கள். இதிலிருந்துதான் அரசும், குடிமக்களும், நிலமும், கோன்மையும் தோன்றியிருத்தல் வேண்டும். இத்தகைய தோற்றம் முதன் முதலில் யமாத்தோவில் ஏற்பட்டது. இஃது கி. மு. 660-ல் முதன் முதலாக நிலைநாட்டப்பட்டது. யமாத்தோவின் முதற் பேரரசனாக சிம்மு தென்னோ பட்ட மேற்றார். இவர் கி. மு. 660-லிருந்து 585 வரையில் ஆண்டு தனது 127ஆம் அகவையில் காலமானார்.

இவருக்குப்பின் தொடர்ந்து ஜப்பானியப் பேரரசர்கள் மிகாடோ அல்லது 'தெய்விகப் பேரரசர்' என்ற பட்டத்துடன் ஆளத் தொடங்கினர்.

இவ்வாறு கி. மு. 7 ஆம் நூற்றாண்டிலேயே ஜப்பானில் ஒரு நிலையான ஆட்சி ஏற்பட்டதால் உறுதியாக இக் காலந்தொட்டு அல்லது இதற்கு முன்பிருந்தேகூட பிற அண்டை நாடுகளான சீனா, கொரியா, தைவான், பிலிப்பைன், மலேசியா முதலிய நாடு களுக்கும், ஜப்பானுக்கும் தொடர்புகள் இருந்திருக்க வேண்டும். ஆனால், சில வரலாற்றாசிரியர்கள் ஜப்பானுக்கும், அயல்நாடு களுக்கும் கி. பி. 13 ஆம் நூற்றாண்டில்தான் முதன் முதலாகத் தொடர்பு ஏற்பட்டது என்கின்றனர். வெனிசு நாட்டு வணிகன் மார்க்கோபோலோ (Marcopolo) கி. பி. 1270-ல் நண்ணிலக் கடல் (Mediterranean Sea) வழியாகப் பாரசீகம், பாமீர்ப் பீடபூமி, கோபிப் பாலைநிலம் ஆகியவற்றைக் கடந்து மங்கோலியாவுக்குச் சென்று அதனை ஆண்ட குப்ளாய்கான் (Cubalaikhan) என்ற அரசரின் பணியில் ஏழாண்டுகள் இருந்துவிட்டுப் பின்னர் சீனா, திபெத்து, ஜப்பான், பர்மா, கிழக்கிந்தியத் தீவுகள் ஆகியவற்றைச் சுற்றிக்கொண்டு தன் நாட்டையடைந்தான். தன் செலவைப் பற்றி இவன் எழுதிய மார்க்கோபோலோவின் பயணங்கள் (Travels of Marcopolo) என்ற நூலைக் கண்ட பின்னரே, ஐரோப்பியர்கள் ஜப்பான் என்றொரு நாடு கீழ்த்திசையிலிருப்பதாக அறிந்தார்க ளென்று கூறும் கூற்று ஏற்புடைத்தன்று. மார்க்கோபோலோ ஜப்பானைக் கண்ட இரண்டு நூற்றாண்டுகளுக்குப்பின் வாழ்ந்த ஆங்கில மாப்பாவலன் சேக்சுபியரும், பேகனும் ஜப்பானைப்பற்றித்

தங்கள் நூல்களில் குறிப்பிடவில்லை. இதனால் கி. பி. 15 ஆம் நூற்றாண்டிலும் ஜப்பான் ஐரோப்பியர்களால் அறியப்படவில்லை என்று கூறமுடியுமா?

வரலாற்று அடிப்படையில் நோக்கும்போது, சீனவை வென்ற மங்கோலிய அரசன் குப்ளாய்கான் இரண்டுமுறை படையெடுத்தும் ஜப்பானை வெல்ல முடியாமல் தோற்றிருக்கிறன். ஆனால், ஐரோப்பியர்கள் ஜப்பானுடன் நல்லுறவு கொண்ட பின்னரே அவர்களை ஜப்பானியர் தங்கள் மண்ணில் நுழைய இசைந்தனர். ஜப்பான் வரலாற்றை நோக்கும்போது கி. மு. 660-லேயே அங்கொரு நிலையான அரசியல் ஏற்பட்டதென்பதனையும், அதனை ஆண்ட முதற்பேரரசன் சிம்மு தென்னோ (Jimmu Tenno=660—585 B.C.) என்பதையும் அவனை மக்கள் 'தெய்வீகப் பேரரசர்' (Mikado) என்று போற்றினர்களென்றும் அறிகிறோம். ஜப்பானிய முதற் பேரரசரின் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்பு சீன நாட்டுக் கன்ஃபூசியசும் (Confucius) இந்திய நாட்டின் புத்தரும், பாரசீகப் பேரரசை ஏற்படுத்திய சைரசும் (Cyrus) வாழ்ந்த காலத்திற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பே சிறந்து விளங்கியதை அறிகிறோம். கிரேக்க நாட்டு நாகரிகம் ஐரோப்பாவில் நுழைவதற்கு முன்னும், அசிரியர் (Assyrians) எகிப்து நாட்டின் மீது படையெடுப்பதற்கு முன்னும், கிரேக்கர் சின்ன ஆசியா, சிசிலி, இத்தாலி ஆகிய நாடுகளில் குடியேறுவதற்கு முன்னும், உரோமர் பேரரசர்களால் ஆளப்படுவதற்கு முன்னும், பிரிட்டானியர்களும், மற்ற ஐரோப்பியர்களும் காட்டு விலங்காண்டிகளாயிருந்தபோது ஜப்பானில் ஒரு சீரான ஆட்சி ஏற்படுத்தப்பட்டுப் பேரரசர் ஒருவரால் ஆளப்பட்டது என்றால் அதன் தொன்மையைப் பகுத்தறிவது எங்ஙனம்? சிம்மு தென்னோ ஜப்பானை ஆளும்போது கிரேக்க நாட்டு மெய்யறிவர் தாலெசு (Thales) என்பவர் தன் பட்டாங்கைப் புகட்டினர்.

மிகப் பழங்கால நாகரிகமுடையதாகக் கருதப்படும் சீனவின் வரலாற்றை அறிவதற்கான சான்றுகள் கி. மு. 145-க்குப் பின்னரே சரியாகக் கிடைக்கின்றன. சிதறிக்கிடந்த சீன நாட்டை கி. மு. 221-ல்தான் சீனவின் பெருஞ்சுவரைக்கட்டிய சிஃவாங்தி (Shi-Haung-Ti) முதன்முதலாக ஒன்று சேர்த்தான். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் சீன கொரியாவை வென்றது. கொரியாவை வென்ற அரசன் ஊதி (Wu-Ti=142—86 B.C.) என்பவனுவான். இக் கொரிய நாடு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சீன அரசரால் தன் படையதிகாரி ஒருவருக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டதென்றும், பின் இக் கொரியாவின் மூலமாகச் சீனர்களும்

தாயிய சமயத் துறவிகளும், பல கைவினைஞர்களும் அனுப்பப் பட்டனர்; விதைகளும் அனுப்பப்பட்டனவென்றும், சிச்சி (Shichih) என்னும் ஆவணக் குறிப்பொன்று கூறுகிறது. எனவே, மிகப் பழங்காலத்திலிருந்தே சீனாவுக்கும், ஜப்பானுக்கும் தொடர்பும், பண்பாட்டுக் கலப்புகளும் நிகழ்ந்து வந்தனவென் பதை அறிகிறோம். சிறப்பாகச் சீனாவை ஆண்ட சின் (Chin) அரச மரபினர் காலத்திலிருந்து சீனாவுக்கும் ஜப்பானுக்குமிருந்த உறவு வலுவடைந்து வந்தது. சீனாவின் மாழைக்கால (உலோக கால) நாகரிகத்தைப் போலவே கொரியாவிலும், மாழைக்கால நாக ரிகத்தின் வளர்ச்சியைக் காண்கிறோம். கி. மு. 206-ல் ஆன் மரபினர் (Han Dynasty) சின் மரபினரை வீழ்த்தி, சீனாவின் பேராட்சியை ஏற்றதற்குப் பிறகு ஜப்பானுக்கும் சீனாவுக்குமிருந்த உறவுமுறை தெளிவாகவும், சான்றுடன் நமக்கு வெளிப்படுகிறது. ஆன் அரசர் காலத்து சீன நாகரிகம் மேற்கே காசுபியன் கடலையும், தெற்கே இந்தியாவையும், இஃசியுங்னு (Hsiung-Nu) நாட்டையும், வடமேற்கே மங்கோலிய நாட்டையும் தாண்டிப் பரவியது. கி. மு. 108-ல் கொரியாவின் வடபாகத்தை வென்ற சீனர்கள் அதனை நான்கு மாநிலங்களாகப் பிரித்துச் சீன ஆளுநர்களை ஏற்படுத்திச் சீன நாட்டின் சட்ட திட்டங்களின்படி அவற்றை ஆண்டார்கள். அவற்றுள் மிக முகாமையானது இலகிலியாங்கு (Lakliang) மாநில மாகும். இவ்வாறு கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே சீனர்கள் கொரியாவை வென்று, அதனைத் தங்கள் குடியேற்றமாக மாற்றித் தங்கள் நாட்டின் அரசியல், கலையியல், பண்பாட்டியல் ஆகியவற்றை அங்கு பரப்பினார்கள். இதனைக் கொரியாவிலுள்ள பியனியாங்கு (Pyon Yang) என்னுமிடத்தில் கிடைக்கும் புதை பொருள்கள் வலியுறுத்துகின்றன. இங்கே தோண்டியெடுக்கப்பட்ட குடவம் இரும்பு ஆகிய மாழைப் பொருள்களும், அணிகலன்களும், நாணயங்களும், முத்திரைகளும், மட்பாண்டங்களும் சீனாவின் குடியேற்ற மாநிலமான இலகிலியாங்கிலிருந்து இங்கு ஏறத்தாழ கி. மு. 50-லிருந்து கி. பி. 50-க்குள் பரவியிருக்கவேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். மேலும் இங்குக் கிடைத் துள்ள குடவக் கண்ணாடிகள், வாள்கள், ஈட்டிகள் மற்றும் அணி கலன்கள் ஆகியவை ஆன் அரசர்களின் கலைப் பண்பாட்டுப் பொருள்களாக விளங்குகின்றன. இத்தகைய கலைப் பொருள்கள் கி. மு. முதல் நூற்றாண்டுக்கு முன்பே கொரியாவிலிருந்து ஜப்பானுக்குள் நுழைந்திருக்கவேண்டுமென்றும், ஆனால், சீனரின் கொரிய நாட்டுக் குடியேற்ற மாநிலமான இலகிலியாங்கிலிருந்து ஜப்பானியரின் தெற்கு நாடான குயூசுத் தீவுக்கு நேரடித் தொடர்பு கி. பி. முதல் நூற்றாண்டில்தான் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

இலகிலியாங்கில் பரப்பப்பட்ட சீன நாகரிகத்தை ஜப்பானியர் பெறுவதற்கு ஏதுவாக, முன்னரே ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் அரசியல் தொடர்பிருந்ததை அறிகிறோம். ஆன் அரசர்களின் தலைநகராகிய இலோயாங்கு (Loyang) என்னும் நகரில் காணப்படும் அயல்நாட்டார் வருகைக் குறிப்பேடு ஒன்றில், கி. பி. 57-ல் அந் நகருக்கு வருகை தந்த ஜப்பானிய நாட்டுத் தூதுவரைப்பற்றிய குறிப்பொன்று காணப்படுகிறது. 'வா' (Wa) க்களின் நாடு கொரியாவிற்குத் தென்கிழக்கே பசிபிக் மாகடலின் நடுவிலுள்ள தீவுகளில் அமைந்திருக்கிறது. அந் நாடு நூறு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சீனப் பேரரசன் ஊதி (கி. மு. 140-86) வடகொரியாவைக் கி. மு. 108-ல் வென்றபோது இந்த 'வா'க்கள் கொரிய நாட்டுடன் அஞ்சல் தொடர்புகள் வைத்திருந் தார்கள். அவர்களின் பேரரசன் 'மாவீரன் வா' யமாத்தோவில் வாழ்ந்தான். அவர்தம் வீரர்கள் ஈட்டிகள், கேடயங்கள், மரத் தாலான வில்கள், மூங்கிலாலான அம்புகள் ஆகியவற்றை வைத்தி ருந்தனர். அம்புகளின் முனைகளில் கூரிய எலும்புகள் பதிக்கப் பட்டிருந்தன. ஆண்கள் தங்கள் முகங்களிலும், உடல்களிலும் பச்சை குத்தி அழகுபடுத்திக் கொண்டார்கள். இவர்களுக்குள் பல பிரிவுகளும், நிலைகளும் காணப்பட்டன. சீனர்கள் அரிசிமாவை நறும்பொடியாகத் தங்கள் உடல் முழுவதும் பூசிக்கொள்வது போல், பலவகை வண்ணக் குழம்புகளைத் தங்கள் உடல் முழுவதும் அவர்கள் பூசிக் கொண்டிருந்தார்கள். கி. பி. முதலாம் நூற்றாண்டில் 'வா'க்கள் சீனாவுக்குத் தங்கள் தூதுவர்களை அனுப்பி னார்களென்றும் சில சான்றுகள் கூறுகின்றன. இவர்களிடம் எருதுகளோ அல்லது காட்டு விலங்குகளோ இல்லையென்றும் ஒரே துணியைக் காலிலிருந்து தலை வரை அணிந்து கொள்வார்க ளென்றும், காலில் காலணி (Boots), செருப்பு முதலியன அணி யாமல் நடந்தார்களென்றும், அதிகமான குடிப்பழக்கமும், பல பெண்களை மணக்கும் வழக்கமும், உடையவர்களென்றும், ஆனால், சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டவர்களென்றும் மேலும் அந்தக் குறிப்பு கூறுகிறது. மேற்கண்ட குறிப்பிலிருந்து 'வா' எனப்படும் சித்திரக்குள்ளர்களான ஜப்பானியருக்கும், கொரி யருக்கும் அதிகாரப்படியான தொடர்புகள் இருந்திருக்கின்றன வென்பதும், ஜப்பானியரைக் கொரியர்கள் நேரடியாக அறிந்திருக் கிறார்களென்பதும் தெரிகிறது. கி. பி. 57-ல் ஜப்பானியர் சீன நாட்டிற்குப் பல பரிசுப் பொருள்களோடு ஒரு தூதுவரை அனுப்பி னார்கள். சீன நாட்டு மன்னன் ஒரு முத்திரையையும் நாடாவையும் பரிசாகக் கொடுத்துத் திருப்பி அனுப்பினான் எனவும் மற்றொரு குறிப்புக் கூறுகிறது. ஆனால், கி. மு. 33-லேயே கொரியாவின் தென்மாநிலமான மிமானாவிலிருந்து ஒரு தூதுவன் ஜப்பான்

நாட்டுப் பத்தாவது பேரரசர் சுசின் என்பவரின் அவைக் களத்திற்குச் சென்று பல பரிசுப் பொருள்களை வழங்கினனென்ற மற்றொரு குறிப்பும் காணப்படுகிறது. கி.மு. முதல் நூற்றாண்டில் தான் புத்தமதம் சீனவுக்குள் நுழைந்தது. ஆனால், இம் மதம் கொரியாவின் வழியாக ஜப்பானுக்குள் புகுவதற்கு ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள் ஆகியிருக்கலாம் என்கின்றனர்.

இத்தகைய சான்றுகளைக் கொண்டு நோக்கும்போது சீன ஜப்பானிய உறவு முறை கி. மு. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கி கி. பி. 2 ஆம் நூற்றாண்டு வரை நிலவியிருந்ததென்பது உறுதியாகிறது. கி. பி. 3 ஆம் நூற்றாண்டில் ஜப்பானை ஆண்ட பேரரசி சிங்கோ (கி. பி. 201—269) என்பவர் கொரியாவை வென்றார். கொரியாவிலிருந்த சீன இலக்கியங்களும், கன்ஃபூசிய மதத்தின் கொள்கைகளும் ஜப்பானுக்குள் நுழைந்தன. கி. பி. 285-ல் கொரியாவிலுள்ள குதாரா மாநிலத்திலிருந்து ஜப்பானியப் பேரரசர் கோசின் (Kojin=270—310 A. D.) அவைக்கு வந்த வாணி என்பான் கன்ஃபூசிய சமயத்தின் கொள்கைகளடங்கிய பத்து மடலங்களையும் (Ten Volumes), ஆயிரம் பண்பியற் கட்டுரை (Thousand Character Essay) என்னும் நூலொன்றையும் பரிசாக வழங்கினன். இவனுக்கு முன்னமேயே கொரியாவிலிருந்து வந்த அசிகி (Ajiki) என்ற அறிஞன் சீனமொழி இலக்கியங்களையும், பண்பாட்டையும் ஜப்பானில் பரப்பினன் என்றும் அறிகிறோம். கி. பி. 292-ல் எழுதப்பட்ட வேய்லியோ (Weiliao), கி. பி. 424-ல் எழுதப்பட்ட அவாஃன்சோ (Hou Hansho) ஆகிய சீன ஆவணங்கள் ஜப்பானேடு சீன தொடர்பு கொண்டிருந்ததை மெய்ப்பிக்கின்றன. இவைகளிலிருந்து ஜப்பானியர் அன்றைய நாகரிக உலகில் சிறந்து விளங்கிய சீனவுடன் தொடர்பு கொள்ளுவதில் கொண்டிருந்த ஆர்வத்தையும், ஜப்பானியரின் குமுகப் பழக்க வழக்கங்களையும் நன்கு அறியலாம்.

கி.பி. 475 ஆம் ஆண்டு ஜப்பான், கொரியா, சீன ஆகிய மூன்று நாடுகளிலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் முகாமை வாய்ந்த ஆண்டாகவுள்ளது. அஃதாவது இந்த ஆண்டிற்குப் பிற்பட்ட காலங்களில் இம் மூன்று நாடுகளில் நடந்த நிகழ்ச்சிகள் கால வரிசைப்படி வரலாற்றிற்கு ஒத்து வருகின்றன. கி.பி. 475-லிருந்து கி. பி. 662 வரையிலான சீன ஜப்பானிய உறவு முறைகள் ஐயமின்றிச் சான்றுகளுடன் தெளிவாகக் காணப்படுகின்றன.

## அரசியல் வளர்ச்சி

கோசிகியின் சான்றுப்படி நோக்கும்போது ஜப்பானின் முதற் பேரரசரான சிம்மு தென்னோவுக்கு இத்சுசி (Itsu-se) என்னும் ஓர் தமையன் இருந்தான். இவ்விருவரும் குயூசுத் தீவிலுள்ள தக்காசிவோ மலையுச்சியிலிருந்த தங்கள் அரண்மனையிலிருந்து ஆண்டு வந்தனர். இவ்விரு உடன்பிறந்தவர்கள் பல தீவுகளிலிருந்து தங்களிடம் ஒன்று சேர்ந்த வீரர்களை ஒன்று திரட்டி ஒரு சிறந்த படையை அமைத்தார்கள். இப் படை குயூசுத் தீவுக்கு வடகிழக்கி லிருந்த தோயோ (Toyo) நாட்டின்மீதும் திசுகுசி (Tsukushi) த் தீவின்மீதும் போர் தொடுத்தது. இதற்குப் பின் அகி (Ake) த் தீவைக் கடந்து சென்று தக்காசிமா என்னும் தீவை அடைந் தார்கள். ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு யோதோ ஆற்று முகத் துவாரத்திலுள்ள ஒசாகோ நகரையடைந்து, அங்கிருந்த பழங்குடி மக்களின் தலைவனாகிய நாகசுனே (Nagasune)—நீண்ட கால்களை யுடையவன் என்பவனோடு போரிட்டு, அவனாட்சியைக் கைப்பற்றினர். இப் போரில் சிம்முவின் தமையனான இத்சுசி இறந்து பட்டான். இவ் வெற்றிக்குப் பிறகு தன் தேவுலக வாளின் வலிமையால் பல நூற்றுக்கணக்கான தீவுகளையும் வென்று தன்னடிமைப் படுத்தினார். இவர் வென்றதாகக் கூறப்படும் மன்னர்களையும், நாடுகளையும், மக்களையும் ஆயும்போது அவர்கள் பலதரப்பட்ட இனத்தவர்களாகவும், கூட்டத்தினராகவும் காணப் படுகின்றனர். இவ்வாறு ஜப்பான் தீவுகள் முழுவதையும் வெற்றி கண்ட சிம்மு, ‘பேரரசர்’ என்ற பட்டத்தோடு யமாத்தோ மாநிலத் திலுள்ள காசிபாரா என்னுமிடத்தில் ஓர் அழகிய காவலுள்ள அரண்மனையைக் கட்டி, அதிலிருந்துகொண்டு கி.மு. 660-லிருந்து ஜப்பான் நாட்டை ஆளத் தொடங்கினார். இத்தகைய தொன்மக் கருத்துகளை மேலே கூறப்பட்ட கோசிகி, நிகோங்கி ஆகிய நூல்கள் கூறுகின்றன.

சிம்முவுக்குப் பின் இவருடைய மூன்றாம் மகனான சூசேய் (Suizei) என்பவர் ஜப்பானின் பேரரசரானார். இவர் கி.மு. 581-லிருந்து 549 வரை ஜப்பானை ஆண்டார். சிம்முவுக்குப் புதல்வர்கள் பலரிருந்தும் தனது மூன்றாவது மகனாகிய சூசேயியை, இவர் தேர்ந்தெடுத்துத் தனக்குப்பின் அரசனாகச் செய்ததிலிருந்து மூத்த மகன்தான் பட்டத்திற்கு வரவேண்டும் என்ற விதி ஜப்பானில் இல்லையென்பது தெரிகின்றது. கி. மு. 660-ல் முதற் பேரரசரான சிம்மு தென்னோவிலிருந்து தொடர்ந்த பேரரசர் கொடிவழி இன்றும் ஜப்பானில் நிலைத்திருக்கிறது.

கி.மு. 660-லிருந்து கி.பி. 1868 வரை இம் முறையில் தொடர்ந்து ஆண்ட பேரரசர் நூற்றிருபத்தொருவராகும்.

ஐப்பானின் அரசியல் வளர்ச்சி பற்றி இனிவரும் படலங்களில் ஆங்காங்கே காண்போம். ஆயினும் இதுபற்றி மேலெழுந்த வாரியாக ஒரு சிறிய குறிப்பை இங்குக் காண்போம். ஐப்பானின் அரசியல் வளர்ச்சி சீன நாட்டின் அரசியலைத் தழுவி வளர்ந்தது. சாங் மரபினர் (Shang Dynasty = *1500—1000* B.C.), சோன் மரபினர் (Chon Dynasty = *1000—481* B.C.), சின் மரபினர் (Chin Dynasty = *221—206* B.C.), ஆன் மரபினர் (Han Dynasty = *206* B.C.—*221* A. D.), மூவகையினத்தவர் (*221—589* A.D.), சூய், தாங் மரபினர்கள் (Sui & Tang Dynasties = *589—904* A.D.) ஐவகை மரபினர் (Five Dynasties = *907—960* A. D.), சங் மரபினர் (Sung-Dynasty = *960—1279* A. D.), மங்கோலியப் பேரரசு (*1206—1368* A.D.), மிங்க்சு மரபினர் (Mings Dynasty—*1368—1644* A.D.), மஞ்சு மரபினர் (Manchu Dynasty—*1644—1911* A. D.) முதலிய பலதரப்பட்ட மரபினர்கள் ஆண்டார்கள். ஆனால், ஐப்பானை சிம்மு தென்னுவின் வழிவந்த பேரரசர்களே தொடர்ந்து ஆண்டிருக்கிறார்கள் என்பதை ஐப்பானின் பேரரசர்களின் பட்டியலை நோக்கும்போது நன்கு விளங்கும்.

ஐப்பானின் ஆட்சியதிகாரத்தைப் பல வீர மரபினர் கைப்பற்றி ஆண்ட காலத்திலும் பேரரசருக்கிருந்த மதிப்பும் புகழும் தொடர்ந்து இன்றுவரை நின்றிருக்கிறது. அவரை ஒரு தெய்விகப் பேரரசர் என்று போற்றுகின்றனர். ஆனால், சீனுவில் அரச குடும்பத்தின் வழிவந்தவர்கள் என்பதற்காக மட்டும் அவர்களை மதித்துப் போற்றுவதில்லை. திறமையுள்ள எவரும்—எவனும் அரசனாக வரலாம் என்பது அந் நாட்டின் மரபாகும். கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் சினுவை ஆண்ட சூயி-தாங் மரபினர்கள் காலத்தில் சினுவுக்கும், ஐப்பானுக்கும் ஏற்பட்ட மிக நெருங்கிய தொடர்பால் ஐப்பானிய அரசியல் சீன அரசியல் அமைப்பைப்போல் திருத்தியமைக்கப்பட்டது. ஐப்பானிய அரசியல் சட்டம், கன்ஃபூசிய சமயக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட சீன அரசியல் சட்டத்தைப்போல் மாற்றியமைக்கப்பட்டது. உள்நாட்டுச் சட்டதிட்டங்களும் அற மன்றங்களின் சட்டங்களும் மனவறத்தின் (மனுதருமத்தின்) அடிப்படையில் அமைக்கப்பட்டன. சுருங்கக் கூறின் இக் காலத்திலெழுந்த சட்டதிட்டங்கள் கன்ஃபூசிய புத்த சமய ஒழுகலாறுகளை அடிப்படையாகக் கொண்டவைகளாகும். இதனை ஐப்பானில் அதிதீவிரமாகப் பரப்பியவர் சோதோ தோகு தாயிசி (Shoto-Toku Taishi) என்னும்

இளவரசராவார். இவர் கி. மு. 621-ல் இறந்தார். இதற்குப் பிறகு ஜப்பானின் அதிகாரங்களைக் கைப்பற்றி ஆட்சி பீடத்தை ஆட்டி வைத்த சோகா (Soga) குடும்பத்தினரைக் கி. மு. 645-ல் ஜப்பானியப் பேரரசர் வெளியேற்றினார். கி. பி. 645-லிருந்து 654 வரை ஜப்பானை ஆண்ட 36ஆம் மிகாடோவான கோதோகு (Kotoku) காலத்தில் ஒரு பெரிய சீர்திருத்தம் (Taika=645–650 A. D.) கொண்டுவரப்பட்டது. இச் சீர்திருத்தத்தால் ஜப்பான் அரசியலிலும், பொருளியலிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அதிகாரிகளின் திறம் வாய்ந்த ஒருமுக மைய ஆட்சி முறை ஏற்பட்டது. ஜப்பான் பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாநிலமும் பல மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டது. மாவட்டங்களில் பல நகரங்களிருந்தன. ஆட்சித் துறைக்கு ஆள்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் போட்டித் தேர்வுகள் நடத்தப் பட்டன. உழு நிலங்கள்யாவும் அரசின் உடைமையாக்கப்பட்டன. இதனால் பெருநிலக்கிழார்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. அரசுரிமையாக்கப்பட்ட நிலங்களை அரசர் தன்னுடைய அதிகாரிகளைக் கொண்டு வேளாளர் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளித்தார். ஆயினும் நிலமானியக் கிழார்கள் அடியோடு அழிந்துவிடவில்லை. நிலங்களைச் சீர்திருத்தி அமைத்தபின் நிலவரியும், பல புதிய வரிகளும் விதிக்கப்பட்டன. நாடு முழுவதும் ஒரே வகையான வரி முறையும், நயன்மை (நீதி) முறையும் ஏற்பட்டன. நாட்டில் ஆள்பவரே எல்லாவற்றிற்கும் தலைவர். எல்லா அதிகாரங்களும் அவரிடமிருந்தே பிறந்தன. இவ்வாறு ஜப்பானிய அரசியலில் ஆள்வோர், ஆளப்படுவோர் என இரு வகுப்பாரே இருந்தனர். இத்தகைய அரசியல் மரபு சீனாவை ஆண்ட தங் மரபினரிடமிருந்து பெற்றதாகும்.

இத்தகைய சீர்திருத்தங்கள் சிறிது காலத்திற்குப் பிறகு ஜப்பானில் மாறுதலடைந்தன. சீனாவில் உயர் அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் எவர் வேண்டுமானாலும் பங்கெடுத்துக் கொள்ளலாம். ஆனால், ஜப்பானில் இத்தகைய போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ள அரச குடும்பத்தினரும், உயர்குடிக் கிழார்களுமே இசைவளிக்கப் பட்டார்கள். இதனால் இத்தகைய குடும்பத்தாருக்கும் சிந்தோ, புத்த மடங்களில் இருப்பவர்களுக்கும் குமுகத்தில் தனி மதிப்பும் சலுகைகளும் ஏற்பட்டன. இத்தகைய வகுப்பாருக்குப் பிறப்பின் காரணியமாக உயர்வு ஏற்பட்டது. திறமையை அடிப்படையாகக் கொண்டு உயர் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கும் முறை சீனாவிலிருந்து பின்பற்றப்பட்டும், இஃது ஒரு சில குறிப்பிட்ட இனத்தவர்க்கே உரித்தாக்கப்பட்டும் விட்டதால் இதன்வழி பிற்காலத்தில்

அரசவைக் கிழார்கள் (Kugues), நிலமானியக் கிழார்கள் (Feudal Lords), மடத்தவர், படைக்குலத்தவர் ஆகிய பலரும் தோன்றி ஜப்பானிய மைய ஆட்சியின் வலிமையைச் சிதறடித்தனர். இத்தகைய சீன அரசியல் முறையையும், பிற பண்பாடுகளையும் வெறுத்த ஜப்பானியர்கள் தேசிய உணர்வு பெற்று ஜப்பானிய முறை அரசியல், பண்பாடுகளை வளர்க்க முற்படுவதைப் பிறகு காண்போம். சீன ஆட்சி முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட ஜப்பானிய ஆட்சியாலும், சிந்தோ மதத்தாலும் ஜப்பானில் வளர்ச்சியடைந்த ஃபூசிவாராக்களால் ஜப்பானிய வரலாற்றில் ஏற்பட்ட மாறுதலைப் பற்றியும் இனிக் காண்போம்.

## கோநகரம் நாரா
## (கி. பி. 710—794)

கி. பி. 710-ல் ஜப்பானின் கோநகரம் நாராவுக்கு மாற்றப் பட்டது. இதற்குமுன் கோநகரம் பல இடங்களில் இருந்தது. ஒவ்வோர் அரசனும் இறக்கும்போது அக் கோநகரங்கள் மாற்றப் பட்டன. ஆனால், நாராவில் ஏற்படுத்தப்பட்ட கோநகரம் எண்பது ஆண்டுகள் நிலைத்திருந்து கி. பி. 794-ல் எய்யன் அல்லது கியாத் தோவுக்கு மாற்றப்பட்டது. கோநகரமும் நாராவும் அந் நகரிலே அமைந்த அரண்மனையும், அன்றைய சீனாவை ஆண்ட தங் மர பினரின் தலைநகரமான சங்கன் (Chan Gan) கோநகர் போல் கட்டப்பட்டிருந்தது. இக் கோநகரத்தில் கட்டப்பட்ட கட்டடங் களில் சிறப்பு வாய்ந்தவை அரசர் வணங்கும் புத்தர் கோயிலாகும். இக் கோநகரம் ஒசாகோவுக்கு இருபது கல் தொலைவில் சிறந்தோங்கி நின்று அன்றைய ஜப்பானிய நாகரிகத்தின் இருப்பிடமாய்த் திகழ்ந்தது.

கோநகரம் நாராவுக்கு மாற்றப்பட்டபின் கோநகரில் கட்டப் பட்ட கட்டடங்களைப் போலவே மாநிலங்களிலும் கட்டப்பட்டன. கோநகரத்தில் வளர்ந்த மேனிலை வாழ்க்கை முறை, கலைகள், இலக் கியங்கள் முதலியனவும் மாநிலங்களில் வாழ்ந்த உயரதிகாரிகள், கிழார்கள், பெருநிலப் பண்ணையாளர்கள் முதலியவர்களால் பின் பற்றப்பட்டன. சிறப்பாகப் புத்தக் கோயில்களும் மடங்களும் நாடெங்கிலும் எழுந்தன. புத்தமதம் திடமாக வேரூன்றி நின்றது. இம் மதத்தைப் பின்பற்றுவோர்க்கும், இம் மடங்களில் சேர்ந் தோர்க்கும், அவர்களின் சொத்துக்களுக்கும் வரி விலக்கு அளிக்கப் பட்டது. மக்கள் தொகை பெருகியது. நிலமானிய முறை யாலும், மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் வேளாண்மை வளர்ச்சியும், புதிய குடியேற்ற நாடுகளும் ஏற்பட்டன. குமுகத்தில்

வாழ்வின் தரத்தைப் பொறுத்து மேனிலை வகுப்பார் தோன்றினர். பொதுவாக நோக்குமிடத்து கோநகரம் நாராவின் ஆட்சிக் காலத்தில் நாட்டின் பரப்பளவும், மக்கள் தொகையும், செல்வமும், அரசியலறிவும், வாழ்க்கைத் தரமும், அயல் நாட்டுறவும், கலைச் செல்வமும், அதிகாரிகளின் ஆட்சி முறையும் சிறந்தோங்கி நின்றன. இதனால் பழைய வரிகளை உயர்த்தியும், புதிய வரிகளை விதித்தும் ஆட்சியை நடத்த வேண்டி வந்தது. இப் புதிய வழி முறைகளால் கடைநிலை மக்கள் பெரிதும் துன்புற்றனர். நில அடிமைகளும் வேளாண்மைக் கூலிகளும் ஒரு புறமும் நிலக்கிழார்களும், உயர்நிலை வகுப்பாரும் மற்றொரு புறமும் வளர்ந்து, வாழ்ந்து ஜப்பானியக் குமுகத்தில் மேடு பள்ளங்களை உண்டாக்கியதால் இவற்றைச் சமன் செய்வதற்கு எதிர்காலத்தில் பல நூற்றாண்டுகள் வரை அரசியல் குமுகப் போராட்டங்கள் நிகழ்த்த வேண்டியதாயிற்று. நாரா ஆட்சிக் காலத்தில் சிறந்தோங்கிய புத்த சமயத்தைப் பற்றியும், நிலக்கிழார்களைப் பற்றியும் தனியே காண்போம்.

## கொரியரின் குடியேற்றம்

கொரியநாடு வடக்கே கோமா (Koma) என்றும், நடுவில் குதாரா (Kudara) என்றும், தெற்கில் மிமானா (Mimana) என்றும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அரசர் மூவரால் ஆளப்பட்டது. இவற்றை யடுத்து சிராகி (Shiragi) என்றொரு தனி நாடு மிருந்தது. இது இம் மூன்று நாடுகளுக்கும் பகை நாடு. ஜப்பானின் 21ஆம் மிகாடோவான யூரியாகு (Yuriyaku = 457-479 A.D.) என்பவர் சிராகி மீது படையெடுத்தார்; ஆனால், வெற்றி காண முடியவில்லை. ஒரு நூற்றாண்டிற்குப்பின் சிராகி நாட்டு மன்னன் மிமானாவைத் தாக்கிப் பிடித்துக் கொண்டான். கி. பி. 660-ல் தங் மரபின் (Tang Dynasty) சீனப் பேரரசர் காவோசுங்கு (Kao-Sung) சாந்துங்கு துறைமுகத்தின் வழியாக ஒரு பெரும் படையை அனுப்பிக் குதாராவைக் கைப்பற்றினர். இப் படையெடுப்பில் சிராகி நாட்டுப்படை சீனப் படையுடன் சேர்ந்து கொண்டு குதாராவை எதிர்த்துப் போரிட்டது.

தனது நட்பு நாடான குதாராவை எதிரிகள் கைப்பற்றியதை அறிந்த ஜப்பான் தனது படைகளை அனுப்பி, எதிரிகளை விரட்டிக் குதாராவை மீட்டளித்தது. அத்துடன் குதாராவுக்குப் பாதுகாவலாக ஜப்பான் தன்னுட்டுக் காவற் படையொன்றையும் அம் மாநிலத்தில் நிறுத்தி வைத்தது. ஆனால், இக் காவற் படையை சிராகி, சீனாவின் உதவியுடன் திடீரெனத் தாக்கிக் குதாராவைப்

பிடித்துக் கொண்டது. கி. பி. 662-ல் குதாரா மாநிலம் சிராகி யுடன் இணைக்கப்பட்டது. இதனுல் குதாராவிலிருந்த பலர் ஜப்பானியப் படையுடன் குதாராவைவிட்டு வெளியேறி ஜப்பா னுக்குள் குடியேறினுர்கள். ஜப்பானிய அரசாங்கம் வந்தேறி களாய் (அகதி) வந்த கொரியர்களை அன்போடு தாங்கி அவர்களின் மறு வாழ்விற்கு வழி செய்தது. ஜப்பான் நாட்டின் பல பகுதிகளிலும் இக் கொரிய நாட்டு வந்தேறிகள் குடியேற்றப் பட்டார்கள். இவர்களுக்கு ஜப்பான் அரசு நிலங்களையும், தொழில்களையும் இலவயமாக அளித்ததோடல்லாமல் அவர்களிட மிருந்து எத்தகைய வரியும் தண்டப்பெறவில்லை. இதனையறிந்த பல கொரியர்கள் சிராகியின் ஆட்சிப் பிடியினின்று விடுபட்டு ஜப்பானுக்குள் குடியேறத் தொடங்கினுர்கள். இவ்வகைக் குடி யேற்றம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஜப்பான் நாட்டுக் குறிப்பொன்றில் கி. பி. 717-ல் 1799 கொரியர்களும், கி. பி. 760-ல் 40 கொரியர்களும், 34 ஆண்-பெண் புத்தத் துறவிகளும் குடியேறியதாக அறிகிறோம். இவர்கள் முசாஷி (Musashi) என்னும் மாநிலத்தில் அதிகமாகக் குடியேறினுர்கள். அம் மாநிலத்தில் இவர்கள் குடியேறிய மாவட்டத்திற்குக் 'கொரிய மாவட்டம்' என்று பெயரிடப்பட்டது.

இவ்வாறு ஜப்பான் நாட்டின் பல மாவட்டங்களில் கொரியர் களின் குடியேற்றங்கள் ஏற்பட்டன. இக் கொரியர்களை ஐரோப்பிய வரலாற்றில் பிரெஞ்சு நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்டு நெதர்லாந்து நாட்டில் குடியமர்த்தப்பட்ட மறுப்புச் சமயத்தவர்களுக்கு (Huguenots) ஒப்பிடலாம். தொடக்கத்தில் குடியேறிய கொரியர்களுக்குப் பல சலுகைகளோடு பட்டம் பதவிகளையும் கொடுத்துப் பெருமைப்படுத்தியவர் மிகாடோ தெம்மு ஆவார். இவ்வாறு குடியேறிய கொரியர்களால் நாட்டில் பல வகை நன்மைகள் ஏற்பட்டன. கொரியரின் கலைகளும், பண்பாடும் ஜப்பானிய மண்ணில் விதைக்கப்பட்டன. கடல் கடந்து கொண்டு வரப்பட்ட அவ் விதைகள் ஜப்பானியப் புது மண்ணிலே முளைத்து, வீரியச் செடிகளாய் வளர்ந்து செழித்தோங்கின. இவ்வாறு ஜப்பானின் இடைக்கால வரலாற்றில் தோன்றிய பலவகை மாறுதலுக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் கொரியர் களின் ஜப்பானியக் குடியேற்றம் பெரிதும் உதவியது.

## புத்த மதப் புகவு

ஜப்பானை ஆண்ட 29ஆம் மிகாடோவான கிம்மாய் தென்னே (Kimmei Tenno = 540—571 A.D.) காலத்தில் ஏறத்தாழ கி. பி. 552ஆம் ஆண்டில்தான் முதன் முதலாகப் புத்தமதம்

கொரியாவிலிருந்து ஜப்பானுக்குள் பரவியது. ஆனால், ஆராய்ச்சியாளர்கள் சிலர் கி. பி. 384ஆம் ஆண்டிலேயே இம் மதம் கொரியாவிலிருந்து ஜப்பானுக்குள் பரவியதென்பர். கோசிகி கூறும் சான்றுகளைக் கொண்டு நோக்கினால் கிம்மாய் தென்னோ தன் நாட்டில் புதிதாகப் புகுந்த புத்த மதத்தில் மனத்தைப் பறிகொடுத்தாரென்றும், கி. பி. 552-ல் தன் அவைக்கு வந்த கொரிய நாட்டுத் தூதுவனால் வழங்கப்பட்ட புத்தர் சிலைக்குக் கோயிலெடுத்து வணங்கினாரென்றும் அறிகிறோம். புத்த மதத்தைப் போற்றுவதால் அது பெரிதும் போற்றப்படுகின்ற சீனாவைப் போன்று, தன் நாடும் நாகரிக நாடுகளின் வரிசையில் வைத்து எண்ணப்பட்டுப் பெருமையடையுமென்று இப் பேரரசர் கருதினார். ஆயினும் புதிதாகப் புகுந்த புத்த மதத்தை ஜப்பானியரில் பெரும் பாலோர் எதிர்த்தனர். இச் சமையத்தில் திடீரென ஒரு பெருங் கொள்ளை நோய் பரவி மக்கள் பலர் மாண்டனர். தங்களின் மதத்தைத் துறந்து புதிதாக வந்த புத்த மதத்தைப் போற்றுவதாலேயே அக் கொள்ளை நோய் ஏற்பட்டதாக மக்கள் புரட்சி செய்தனர். எனவே புத்தரின் உருவச்சிலையை நானிவா (Naniwa) நகருக்கண்மையில் கடலில் வீசியெறிந்தனர். புத்தருக்காகக் கட்டப்பட்ட கோயிலும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

இந் நிகழ்ச்சிக்குப் பிறகு ஜப்பானின் 30ஆம் பேரரசரான பிதாத்சு-தென்னோ (Bidatsu-Tenno-572—585 A.D.) என்பவரின் காலத்திலும் கொரியாவிலுள்ள குதாரா மாநில அரசர் சில புத்த சமய நூல்களையும், புத்தத் துறவியொருவரையும், ஒரு தெய்விகப் பயிற்றுனரையும், கற்றச்சன் (சிற்பி) ஒருவனையும், புத்தர் கோயிலையமைக்கும் தச்சனையும் ஜப்பானிய அரசருக்குப் பரிசாக அனுப்பினார். இவர்கள் யாவரும் முன்பு இடிக்கப்பட்ட புத்தர் கோயிலை மீண்டும் கட்டி மடம் அமைத்து அதில் இடம் பெற்றனர். எனவே நானிவா மீண்டும் புத்தரின் புனிதக்கோயில் திகழும் புனித நகராயிற்று. கி. பி. 579-ல் ஜப்பானிலிருந்து குதாராவுக்குச் சென்ற ஜப்பானியத் தூதுவர்கள் அங்கிருந்து கருங்கற்களால் செய்யப்பட்ட புத்தருடைய உருவப் படிமங்கள் (சிலைகள்) சிலவற்றை ஜப்பானுக்குள் கொண்டு வந்தார்கள். இதற்குப் பிறகு புத்தருக்காகப் பல கோயில்களும் மடங்களும் (விஹாரங்களும்) ஜப்பானில் கட்டப்பட்டன.

பிதாத்சு தென்னோவுக்குப் பிறகு ஜப்பானின் அரசரான யொமேய் (Yomei=586—587 A.D.) காலத்தில் ஜப்பானிய அரச குடும்பத்திலும், அரசவையிலும் புத்த சமயத்தை ஏற்றவர்களுக்குக்கும், மறுப்பவர்களுக்குமிடையே ஒரு சமயப் போராட்டம்

நடைபெற்றது. இதில் புத்த சமயத்தை ஏற்றவர்களின் தலைவனாகிய தாய்சின் உமாகோ (Daijin Umako) என்ற தலைமையமைச்சர் ஒரு புறமும், அச் சமயத்தை மறுத்தவர்களின் தலைவனான மொரியா (Moriya) என்பவன் மற்றொரு புறமும் நின்று சச்சரவிட்டுக் கொண்டனர். இச் சமயப் போராட்டம் தொடர்ந்து வலுப்பெற்ற நேரத்தில் பேரரசர் யொமேய் திடீரென நோய் வாய்ப்பட்டார். அந் நோய் நீங்குவதற்காக அவரைப் புத்த சமயத்தின் மும்மணிகளான 'புத்தம்', 'தருமம்', 'சங்கம்' ஆகியவற்றை வேண்டிக் கொள்ளும்படி உமாகோ கேட்டுக்கொண்டார். புத்தமதக்குருக்கள் அவருக்காகப் பன்னாள் வழிபாடு நடத்தியும், அப்பேரரசர் நோய் வாயிலிருந்து மீளாமலே இறந்தார். இதனால் புத்த சமயத்தார் கட்சிக்கும், மொரியா கட்சிக்கும் சமயச் சண்டை வலுத்தது. இச் சண்டையில் மொரியா கொல்லப்பட்டார். அவருடைய கட்சிக்காரர்கள் வலுக்கட்டாயத்தின் பேரில் புத்த சமயத்தை ஏற்றுக் கொண்டார்கள். இது புத்த சமயத்திற்கு ஒரு மாபெரும் வெற்றியாகும்.

யொமேய்க்குப் பிறகு ஜப்பானின் 32ஆம் பேரரசரான சூசன் (Sujun=558—592 A. D.) என்பவரின் காலத்தில் புத்த சமயம் எதிர்ப்பின்றி மிக விரைவாக வளரத் தொடங்கியது. இவருடைய காலத்தில் மென்மேலும் புத்தத் துறவிகள் கொரியாவிலிருந்து ஜப்பானுக்குள் குடியேறினார்கள். தலைமையமைச்சரான உமாகோ தன் திறமை முழுவதையும் பயன்படுத்தி ஜப்பானில் புத்தமதத்தை வளர்த்தார். பல ஜப்பானிய இளைஞர்களைக் கொரியாவிற்கு அனுப்பிப் புத்த சமய மறையியல்களைக் கற்றுத் தேறி வரும்படிச் செய்தார். இவ் விளைஞர்கள் கொரியாவிலுள்ள புத்த மடங்களின் அமைப்பு முறைகளையும், துறவு வாழ்க்கையையும் அறிந்து அவைகளில் பயிற்சியும் பெற்றுத் திரும்பினர். இதற்குப் பின்னரே ஜப்பானில் பல புத்த மடங்களும் தோன்றின. ஆண், பெண் புத்தத் துறவிகளும் தெய்விகப் பயிற்றுனர்களும் (போதகர்) ஏற்பட்டனர்.

சூசனுக்குப் பிறகு ஜப்பானின் 33 ஆம் பேரரசியாகப் பட்டமேற்றவர் காலஞ்சென்ற பேரரசர் யொமேயின் தங்கையான சூய்கோ (Suiko = 593—628 A.D.) என்பவராவார். இப் பேரரசிக்குத் துணையாகப் பட்டத்து இளவரசாக யொமேயின் இரண்டாவது புதல்வரான உமாய்தோ-னோ-ஒ (Umaydo-No-Oji=572—622 A.D.) என்பவர் அமர்த்தப்பட்டார். இவரைப்பற்றிப் பல விந்தைக் கதைகள் இன்றும் ஜப்பானில் வழங்கப்படுகின்றன. குறிப்பாக இவர் புத்தசமய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டின் காரணியமாக

இவரை ஐப்பானியர் 'தெய்விகப் பயிற்றுநர்' (Shotok Taihi) என்று அழைத்தனர். இவருக்கு எண்டிறல் வல்லுநர் (அஷ்டாவதான புருஷர்) என்ற மற்றொரு சிறப்புப் பெயருமுண்டு. இவர் அரசவாணைகளை வெளியிட்டு அவ்வாணைகளின்படி நாடெங்கிலும் புத்தக் கோயில்களைக் கட்டச் செய்தார். இதன் காணியமாக மக்களே முன் வந்து பல புத்தக் கோயில்களைக் கட்டினார்கள். ஒவ்வோர் அரசதிகாரியும் புத்தரின் வெண்கலப் படிமத்தை (சிற்பம்) வைத்திருக்கும்படி கட்டளையிட்டார். இதனைக் கேள்வி யுற்ற கொரிய நாட்டு அரசர் கோமா (Koma) என்பவர் முந்நூறு தங்கக் கட்டிகளைப் புத்தருக்குக் கோயிலெடுக்கக் காணிக்கையாக அளித்தார். இவ்வாறு உமாய்தோ-ஞே-சி ஐப்பானில் தோற்று வித்த புத்த சமய வளர்ச்சி ஒரு சிறந்த மறுமலர்ச்சியை ஏற் படுத்தியதெனலாம். புத்த சமயத்தோடு சீனாவின் கலைகளும், அரசியலமைப்பும் ஐப்பானில் வளர்ந்தன. கி. பி. 623-ல் பேரரசி சுகா புத்த மடங்களைக் கண்காணிக்க மடத்தலைவர்களை அமர்த்தினார்.

கிறித்தவ சமயத்தில் இருப்பது போலவே தலைமை மதகுரு துணை மதகுரு போன்ற பதவிகளை பேரரசியார் சுகா ஏற்படுத் தினார். தலைமை மதகுருவுக்கு சோஃசோ (Sosho) என்றும், சமய வட்டத் தலைவருக்கு சோஃசு (Sozu) என்றும் பெயர். குதாரா நாட்டிலிருந்து வந்து குடியேறிய குவான்கின் (Kwankin) என்னும் புத்தத் துறவியே ஐப்பானில் முதல் தலைமைக் குருவானார். குராபி (Kurabe) நாட்டு தொகுசேகி (Thokuseki) என்பவர் முதல் சமய வட்டத் தலைவராகப் பதவியேற்றார். இச் சமயத் தலைவர்கள் புத்த மடங்களிலுள்ள ஆண்-பெண் புத்தத் துறவிகளைக் கண் காணித்து, சமய ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கச் செய்வர். ஒவ் வொரு துறவியைப்பற்றிய எல்லா விளக்கங்களையும் தொகுத்துப் பதிவேட்டில் பதிந்து வைப்பர். இவ் வரசியார் காலத்தில் புத்த சமயத்தைத் தழுவிய மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்பட்டது. அக் கணக்கின்படி இவர் காலத்தில் 46 புத்தக் கோயில்களும், 1385 ஆண்-பெண் புத்தத் துறவிகளும் ஐப்பானிலிருந்ததாக அறிகிறோம். கி. பி. 626-ல் ஐப்பானில் புத்த சமய வளர்ச்சியின் நந்தையாக விளங்கிய தலைமையமைச்சர் உமாகோ இறந்து விட்டார். இவரை யடுத்து கி. பி. 628-ல் சுகா பேரரசியாரும் இறந்துவிட்டனர். இவர்களின் மறைவுக்குப் பிறகு ஐப்பானிய வரலாற்றில் புத்த மதத்திற்கு இருந்த விரைவு அரசியலைத் திருத்தியமைப்பதில் உண்டாயிற்று.

சுகா பேரரசியார் காலத்தில் கி. பி. 604-ல் ஐப்பான் நாட்டு அரசியல் சட்டம் வகுக்கப்பட்டது. இது பதினேழு பிரிவுகளைக்

கொண்டது. இப் பதினேழு பிரிவுகளிலும் சீன, புத்தமதக் கொள்கைகளைக் காணலாம். இதே காலத்தில்தான் சீனாவில் கடைப்பிடிக்கப்பட்ட காலக்கணிப்பு முறை (Calendar) ஜப்பானில் நடைமுறைக்கு வந்தது. கி. பி. 652-ல் ஜப்பானை ஆண்ட 36ஆம் மிகாடோவான கோதோகு (Kotoku = 645-654 A.D.) என்பவரின் காலத்தில் ஜப்பானிய அரசாங்க அமைப்பைப் பின்பற்றி அதே போன்று அமைக்கப்பட்டது. அதே ஆண்டில்தான் முதன் முதலாக ஜப்பானில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மேற் கொள்ளப்பட்டது. ஜப்பானின் 42ஆம் மிகாடோவான மொம்மு (Mommu = 697-707 A.D.) ஆண்ட காலத்தில் கி.பி. 701-ல் ஜப்பான் நாட்டு அறங்கூறவையத்துச் (நீதிமன்றம்) சட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. இவை தாயிய மதத்தின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு விளங்கின.

கி.பி. 708-லிருந்து 715 வரை ஜப்பானை ஆண்ட பேரரசி செம்மையோ (Gemmyo) காலத்தில் ஜப்பானிய வரலாற்றில் பல குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டன. மைய ஜப்பானிலுள்ள ஒன்சுத்தீவு, ஆட்சியின் மைய இருக்கையாயிற்று. ஒசாகோவுக்குக் கிழக்கே 20 கல் தொலைவிலுள்ள நாரா, ஜப்பான் நாட்டின் தலை நகரமாயிற்று. ஜப்பானின் கலைகள், கலைக் கூடங்கள், இலக்கியங்கள் முதலியன சிறப்புற்று ஓங்கின. சீன மொழியைத் தழுவி ஜப்பானிய மொழி இனி மேலும் வளர்வதை ஜப்பானியர் விரும்ப வில்லை. சீன மொழியில் பல சொற்களும், பல பண்பியல்புகளும், உடன்பாடும், எதிர்மறையும், உரியும், வினையடையும், இடைச் சொல்லும் சொற்றொடரின் இறுதியில் வரும். முக் காலத்தையும் காட்டுவதற்கு ஒரே வினைச்சொல்லைப் பயன்படுத்துவர். ஒருமை, பன்மையைக் காட்டுவதற்கும் ஒரே சொல்லையே பயன்படுத்துவர். இத்தகைய நிலையிலிருந்து ஜப்பானிய மொழியின் இலக்கியமும், இலக்கணமும் மருவி வளரத் தொடங்கின.

இவ்வரசியாரின் காலத்தில் நாராவில் புத்தக் கோயிலொன்று கட்டப்பட்டு உலகத்திலேயே மிகப்பெரிய புத்தரின் உருவப் படிமம் (சிலை) ஒன்று வைக்கப்பட்டது. இப் படிமம் கி.பி. 749-ல் தான் முழுமையாகச் செய்து முடிக்கப்பட்டது. இஃது 380 கல்லெடை நிறையுள்ளது. இப் படிமத்தைச் செய்து முடித்தவர் ஜப்பான் நாட்டு 45ஆம் மிகாடோவான சோமு (Shomu = 724-749 A.D.) என்பவராவார். இது 53 அடி உயரமுள்ளது. காமகுராவிலிருக்கும் புத்தர் படிமத்தைவிட ஏழடி உயரம் அதிக மானது. இப் படிமம் கி.பி. 1180ஆம் ஆண்டிலும் கி.பி. 1567ஆம் ஆண்டிலும் இரண்டு முறை தீக்கிரையாயிற்று. இப் புத்தக் கோயிலை ஜப்பானியர் 'இரக்கமுள்ள கடவுள்' (Wet God) எனப்

போற்றி வருகின்றனர். இப் பேரரசியாரின் காலம் வரலாற்று மாணவர்களுக்கு மிக இன்றியமையாததொன்ருகும். இவருடைய காலத்தில்தான் பண்டைக்காலத் தொன்மங்களேயும், பிற ஆவணக் குறிப்புகளேயும் அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்ட கோசிகி (Record of Ancient Things) என்னும் வரலாற்று நூல் கி.பி. 712-ல் வெளியிடப்பட்டது. மற்ருெரு வரலாற்று நூலாகிய நிகோங்கி (Chronicles of Jappan), கி.பி. 720-ல் வெளியிடப் பட்டது. இவ்விரு நூல்களும் பண்டைய ஜப்பானிய அரசர்களின் காலத்தைக் கணித்தறியவும், பண்டைய மக்களின் பழக்க வழக்கங் களேயும், குமுக நிலேப்பாடுகளேயும் தெரிந்து கொள்ளவும் பெரிதும் உதவுகின்றன. குயூசுத் தீவிலிருந்த சில மரபினர்கள் தங்கள் வல்லாண்மையைக் கிழக்கிலும் யமாத்தோ மாநிலத்திலும் பரப்ப முற்பட்டார்கள். கி.பி. 7ஆம் நூற்ருண்டின் தொடக்கக் காலத்தில் ஜப்பான் ஆட்சி பீடம், யமாத்தோவை மையமாகக் கொண்டு ஜப்பான் முழுவதையும் அடக்கியாளத் தொடங்கியது. யமாத்தோ அரசர்கள் தாங்கள் தாம் ஜப்பானிய மண்ணே ஆள வேண்டுமென்றனர். இதனேக் குயூசுவிலும், பிறவிடங்களிலு மிருந்த கிழார்கள் ஒருசிலர் எதிர்த்தனர். இதற்குத் தீர்வு காணவே பண்டைய தொல் கதைகளேயும், செவிவழிச் செய்தி களேயும் நிலேக்களனுகக் கொண்டு இவ்விரு நூல்களும் தொகுக்கப் பட்டனவென்பர். இவ்விரு நூல்களும் தொகுக்கப்பட்ட கி.பி. எட்டாம் நூற்ருண்டின் தொடக்கக் கால வரலாற்றைச் சீன மொழியும், சீனப் பண்பாடும், சீன அரசியல் முறைகளும் ஆட் கொண்ட காலமாகும். எனவேதான் கி.பி. 720-ல் தொகுக்கப் பட்ட நிகோங்கி சீன மொழியிலேயே எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும் இதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்ட கோசிகியில் ஓரளவு சீன மொழியின் கலப்பில்லே.

## நாணய முறை

ஜப்பானின் இடைக்கால வரலாற்றில் தோன்றிய பல மாறுதல்களில் நாணயங்களே அச்சிட்டு வழங்கும் முறையும் ஒன்ருகும். இதுவரை ஜப்பானியர் தங்களுக்கு வேண்டிய செப்பு நாணயங்களேச் சீனுவிலிருந்தும் கொரியாவிலிருந்தும் பெற்று வந்தனர். தெம்மு பேரரசர் காலத்தில் கி பி. 674-ல் சுசிமா என்னுமிடத்தில் முதன் முதலாக வெள்ளி கண்டு பிடிக்கப்பட்டது. ஆனல், இருபது ஆண்டுகள் கழித்துத்தான் பேரரசி சித்தோ காலத்தில் கி. பி. 794-ல் ஜப்பானில் முதன் முதலாக வெள்ளி நாணயம் வெளியிடப்பட்டது. 43ஆம் மிகாடோவான பேரரசி செம்மையோ காலத்தில் முசாசி மாநிலத்தில் முதன் முதலாகச்

செம்பு கண்டு பிடிக்கப்பட்டது. செம்பு நாணயத்தை வெளியிட்ட பெருமையும் இப் பேரரசியாரையே சாரும். 47ஆம் மிகாடோவான சூனின் (759-765 A.D.) காலத்தில் ஜப்பானில் தங்க நாணயம் வெளியிடப்பட்டது.

## அரசியலறிவு

ஜப்பானில் அரசியலறிவும், அரசியலமைப்பும் சீன அறிவைக் கொண்டே வளர்ந்தன. கி. பி. 1868-ல் 'மேஜி முன்னிலை மீட்சி' ஏற்படும் வரை ஜப்பானிலிருந்த அரசுத் துறைகளும், அலுவலர்களின் பதவி நிலைகளும், சீனுவிலிருந்தது போலவே இருந்தன. தலைமையமைச்சர் (Daito-Daijin), வல முறையமைச்சர் (U. Daijin), இட முறையமைச்சர் (Sa-Daijin) ஆகியோருக்கு உதவியாக எட்டு வாரியங்கள் இருந்தன. இவ்வமைச்சர்களும், வாரியங்களைச் சார்ந்தோரும் தத்தம் துறைகளைக் கண்காணித்துக் கொண்டனர். சீனுவிலிருந்ததைப் போலவே ஜப்பானிலும் இயந்திரம் தன்னுளுமை பெற்றிருந்தது.

மேற்கண்ட எட்டு வாரியங்களைத் தவிர ஆறுவகைப் பதவி நிலைகளும் இருந்தன. அவை நற்பண்பு, மாந்தத் தன்மை, பணிவுடைமை, உண்மை, தூய்மை, அறிவுடைமை என்பனவாம். அவ்வறு வகைப் பதவி ஒவ்வொன்றிலும் மேல்நிலை, கீழ்நிலை ஆகியவைகளுமிருந்தன. ஆகமொத்தம் இம் முறையில் பன்னிருவகைப் பதவி நிலைகள் இருந்தன. இம் முறை நேரடியாகச் சீன அரசியலிலிருந்து ஜப்பானில் கி. பி. 604-ல் சுகா பேரரசியால் புகுத்தப்பட்டது. கோதோகு பேரரசரால் கி. பி. 649-ல் மேலும் விரிவு படுத்தப்பட்டு 19 பதவி நிலைகளாக உயர்த்தப்பட்டன.

பண்டைக் காலந்தொட்டே ஜப்பானின் நுழைவாயிலாக அமைந்தது தாசிஃபூ (Dazifu) எனப்படும் துறைமுகப்பட்டினமாகும். இப் பட்டினம் குயூசுவின் மேற்குக் கடற்கரையில் நாகசாகிக்கு வடக்கே அமைந்திருக்கிறது. இத் துறைமுகத்தின் வழியாகத்தான் ஜப்பானியர் சீனுவுடனும், கொரியாவுடனும் தொடர்பு கொண்டார்கள். இத் துறைமுகப்பட்டினம் குயூசுவிலிருந்த ஒன்பது மாநிலங்களை ஆளும் அரசப் படிநிகராளியின் இருப்பிடமாகவும் தலைநகராகவும் திகழ்ந்தது. இத்தகைய அரசப் படிநிகராளிகளும், துணை ஆளுநர்களும் பொதுவாக அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள்.

இவ்வாறு ஜப்பானின் கல்வி, கலை, அரசியல், குமுக வளர்ச்சி ஆகியவை அன்றைய சீன அறிவின் உதவியினுலேயே மேம்பட்டனவென்பது தெளிவாகிறது. அரசவைப் பணியாளர்கள்

சீருடையணிதல், படையேந்துதல், கிழார்களுக்குப் பட்டங்கள் கொடுத்துப் பெருமைப் படுத்துதல், இயற்கைத் தேவதைகளுக்குப் படைப்பு விழாவெடுத்தல், தேசியத் திருவிழாக்களைக் கொண்டாடுதல் முதலியன சீன நாட்டைப் பின்பற்றியே ஜப்பானில் நடைபெற்றன.

## கல்வி முறை

ஜப்பானியக் கல்வி முறை, சீனக் கல்வி முறையைப் போன்றே திருத்தியமைக்கப்பட்டது. அரசுத் துறைகளில் பணிபுரிவோர் படித்தோராக இருத்தல் வேண்டும். உயர் பதவிகளுக்குப் போட்டியிடுவோர் உயர்தரக் கல்வியில் தேறியவர்களாக இருக்க வேண்டும் என்றும் நெறி முறைகள் வகுக்கப்பட்டன. இவ்வாறு தேறுவதற்கு உயர்தரப் பல்கலைக் கழகங்களும், பல்கலைக் கழகப் பொதுத் தேர்வுகளும் ஏற்படுத்தப்பட்டன. ஜப்பானின் 38ஆம் மிகாடோவான தெஞ்சி (Tenji=668—671A.D.) என்பவரின் காலத்தில்தான் தொடக்கநிலைப்பள்ளிகளும் உயர் நிலைப் பள்ளிகளும் பல்கலைக்கழகங்களும் நிரந்தரமாக்கப்பட்டன. மாநிலவாரியாக அமைக்கப்பட்ட பள்ளிக்கூடங்கள் அம் மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகத்தின் மூலம் செயல்பட்டன. வான நூல், மீகாமன் (மாலுமி)களுக்குப் பயன்படும் விண்கோள்களின் பெயர்ச்சியைக் காட்டும் கல்வி, சீனத்தலைவர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் எழுதும் முறைகள், சீன மொழியின் பண்டைய தரமான நூல்களைக் கட்டாயமாகப் படித்தல், சீன வரலாறு முதலியவைகளும் கற்பிக்கப்பட்டன.

இப் பல்கலைக்கழகங்களில் தனித்தனிப் பாடத் துறைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவ்வவ்வத் துறையில் படிக்கும் மாணவர்கள் தங்கள் துறைப் பாடங்களை வாழ்க்கை முறையில் செயல்படுத்த வாய்ப்பு இருந்தது. சான்றாக, மருத்துவத் துறையிலுள்ள மாணவர்கள் உடற்கூற்றியலையும், மருந்துகளைப் பற்றியும் படித்த பின் அறுவைப் பண்டுவத்திலும் (Operation), மருந்துகள் கொடுப்பதிலும் நடைமுறையில் பயிற்சி பெற்றனர். மேற்கண்ட கல்வி முறை யாவும் சீனவில் நடைமுறையில் இருந்தவையாம். இவ்வாறு கற்றுத் தேறிய மாணவர்களும், அறிஞர்களும்தாம் பிற்காலத்தில் நடைமுறையில் வந்த நிலமானிய முறையையும் படைமானிய முறையையும் இடித்துரைக்கலாயினர். அமைச்சனுயினும், உயரதிகாரியாயினும் அரசனே ஆனாலும்கூட மக்களுக்குத் தீங்கிழைப்போன் மீது குற்றம்சாட்டி, இரண்டகக் குற்ற உசாவுதல் (துரோகக் குற்ற விசாரணை) நடத்த வேண்டு

மென்றனர். இவ்வாறு சீனுவின் மெய்யறிவுக் கல்வி முறை, ஜப்பானில் மக்களாட்சி மலர வழி கோலியது. ஆயினும் வழி வழியாகத் தெய்விக ஆற்றலேயே நம்பி வளர்ந்த ஜப்பானியக் குமுகாயம், பேரரசரின் தெய்விக உரிமைக் கொள்கையை மறுக்க அஞ்சியது.

## குமுகாய வளர்ச்சி

ஜப்பானியக் குமுகாயத்தை நான்கு வகையான பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள். அவை உயர் குடிமக்கள் (Shi), வேளாளர் (No), கைவினைஞர் (Ko), வணிகர் (Sho) என்பனவாம். இந் நான்கு பிரிவு முறைகளும் சீனுவிலிருந்து பின்பற்றப்பட்டவையாகும். இப் பிரிவு முறை தற்காப்புக்காக ஏற்படுத்தப்பட்டது என்பாருமுளர். சீனுவில் படித்த அறிஞர்களே மட்டும் உயர்குடி மக்கள் என்றனர். ஆனுல், ஜப்பானில் அறிஞர்களேயும், படைத் தலைவர்களேயும், பெருநிலக்கிழார்களேயும் உயர்குடி மக்கள் பிரிவில் சேர்த்தனர். உயர்குடி மக்கள் பிரிவில் இடம்பெற்ற வீரர்கள் (Samurai=Bushis) பிற மூன்று பிரிவினரையும் தாழ்வாகக் கருதிஞர்கள். ஜப்பானின் வரலாற்றுச் சூழலில் நாளடைவில் இவ் வீரர்களுக்கு முதலிடமும், பெரு மதிப்பும் ஏற்படத் தொடங்கியதால் இவர்களே குமுகாயத்தை ஆட்டிப் படைக்கும் ஆற்றலாக மாறினர்.

## எய்யன் கோ நகராட்சிக் காலம்
(Heian Kyoto Period—794—1192 A.D.)

ஜப்பானே ஆண்ட ஐம்பதாவது மிகாடோவான கிவாம்மு (Kwammu =782—806 A. D.) காலத்தில் கி. பி. 794-ல் நாரா விலிருந்து கியோத்தோவுக்குக் கோநகரம் மாற்றப்பட்டது. அக் கோநகருக்கு எய்யன்—கியோத்தோ அல்லது எய்யன் என்று பெயருண்டாயிற்று. இத் தலைநகரை மையமாகக் கொண்டு ஜப்பானிய அரசர்கள் ஆளத் தொடங்கியதை எய்யன் ஆட்சிக் காலத்தின் தொடக்கம் என்று குறிப்பிடுவர். இந்த எய்யன் ஆட்சி கி. பி. 1192 வரை தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஒவ் வொரு ஜப்பானிய அரசரும் இறக்கும்போதெல்லாம் தலைநகரை மாற்றும் வழக்கம் ஜப்பானிய அரச குடும்பத்திற்கு உண்டு என்பதை அறிவோம். ஆனுல், முதல் 43 மிகாடோக்கள் இறந்த போதெல்லாம் கோநகரத்தை மாற்றுவதற்குப் பதில் அவர்கள் வாழ்ந்து வந்த அரண்மனைகளே மட்டுமே மாற்றி வந்தார்கள். எனவே கி. பி. 794 வரை ஜப்பானியப் பேரரசர்களின் கோநகரம் யமாத்தோ மாநிலத்திலுள்ள நாராவிலேயே நிலைத்திருந்தது. கி பி 794-ல் இக் கோநகரம்:நாராவிலிருந்து கியோத்தோவுக்கு

மாற்றப்பட்டபோது கியோத்தோவில் பேரரசரின் அரண்மனை களும் மற்றும் கோநகரமும் புதிதாக அமைக்கப்பட்டன. நாராவி லிருந்து கியோத்தோவுக்குக் கோநகரம் மாற்றப்பட்டதற்குப் பல கரணியங்களைக் கூறுவார்கள். அவற்றுள் ஒன்று புதிய வல்லமை யோடு முளைத்த ஃபூசிவாரா, அதா (Hata), தாமியோ (Damiyo) முதலிய குடும்பங்களின் சூழ்ச்சிகளுக்குள்ளாகாமல் அரசியலைக் காக்கவும், சீனப் பண்பாடு கலவாத தனக்கே உரித்தான பண்பு களோடு ஜப்பான் வாழவுமே தன் கோநகரை எய்யனுக்கு மாற்றியது என்பதாம்.

எய்யன் கோநகரம் அன்றைய சீனாவை ஆண்ட தங் மரபினரின் சங்கன் கோநகரைப் போலவே அமைக்கப்பட்டது. இக் காலத்தில் ஏறக்குறைய தங் மரபினர் வீழ்ந்த நிலையில் காணப்பட்டார்கள். எய்யன் கோநகரம் சங்கன் கோதகரைவிடச் சிறிதாக அமைக்கப் பட்டிருந்தாலும் கி. பி. 98ஆம் நூற்றாண்டில் உலகிலிருந்த மிகப் பெரிய பட்டினங்களில் அதுவும் ஒன்றாக இருந்தது. இந் நகரில் பண்பாடு மிக்க மேனிலை வாழ்க்கையைக் கொண்ட அரச குடும்பத்தினரும், கிழார்களும், உயர்குடி மக்களும் வாழத் தொடங்கினர். நாளடைவில் இவர்கள் வாழ்க்கை முறை செல்வச் செருக்கோடும் செருக்கின்றியும் விளங்கியது. இத்தகைய உயர்குடி மக்களின் போலி வாழ்க்கை கோநகரிலே மட்டுமின்றி, மாநிலத் தலைநகர்களுக்கும் பரவியது. தலைநகரம் கியோத்தோவுக்கு மாறிய பிறகு ஜப்பானிய நாட்டுப் பண்பாட்டு வளர்ச்சியிலும் அரசியல், குமுக வளர்ச்சியிலும் ஒரு திருப்பக் கட்டம் ஏற்பட்டதெனலாம். சீன நாகரிகத்தை மாதிரியாகக் கொண்ட ஜப்பானிய நாகரிகம் மாற்றியமைக்கப்பட்டது. தங்கள் நாட்டின் எல்லாத் துறைகளிலும் ஜப்பானியப் பண்பாட்டுத் தனித் தன்மையை ஏற்படுத்த வேண்டுமென்று ஜப்பானியர்கள் கருதினார்கள். சீனாவிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் நுணுக்கங்கள், கலையறிவு, சமயப் பட்டாங்கு, அரசியலமைப்பு முறைகள், எழுத்து முறைகள், ஓவியக் கலைகள், படிம (சிற்ப)க்கலைகள், நுண்கலைகள் முதலியன ஜப்பான் நாட்டின் தன்மயமான பண்பாடுகளாக மாற்றப்பட்டன. ஆயினும் ஜப்பான் நாட்டிற்குத் தேசிய உணர்ச்சியையும், தேசியக் கலைப் பண்பாட்டையும், தேசியக் கல்வி வளர்ச்சியையும், அரசியலமைப்பையும் தந்தது சீனாதான். எனவே பிரிட்டானியர்கள் தங்களின் தேசியக் கலை, அரசியலமைப்பு முதலியவற்றிற்கு, கிரேக்க உரோம நாடுகளுக்குக் கடன் பட்டிருப்பது போலவே சீன நாட்டிற்கு ஜப்பானியர் கடமைப் பட்டிருக்கிறார்கள். சான்றாக, கன்ஃபூசிய சமயத்தின் ஐந்து அரசியல் பட்டாங்குகளான நன்றியுடைமை, செஞ்சோற்றுக்கடன்,

வீரத்துறக்கம், உடன்பிறப்பாண்மை, நட்பு ஒன்றிப்பு ஆகியவற்றின் அடிப்படையில்தான் ஜப்பானின் தேசிய அரசியலமைப்பு முறை ஏற்படுத்தப்பட்டது. ஆயினும் ஜப்பானியர்கள் தங்கள் சொந்தப் பண்பாட்டையும், மூடப் பழக்க வழக்கங்களையும் எப்பொழுதும் நத்தைபோல் தங்கள் முதுகிலேயே சுமந்து நின்றார்கள். அரசர் அன்றாட வாழ்க்கை முறையில் எண்ணில்லாச்சடங்கு முறைகளைப் பின்பற்றினர்.

எய்யன் கோநகர வாழ்க்கைச் சீரும் சிறப்புமாக அமைந்திருந்தது. அரச குடும்பத்தினர் கலையறிவையும், குமுகக் கேளிக்கைகளையும் நாடிச் செல்லத் தொடங்கியவுடன் மாநிலங்களிலிருந்த வீரக் குடிகளின் மீதிருந்த ஆளுமை படிப்படியாகப் பிடியற்றுக் குறையலாயிற்று. அரச குடும்பத்தினரும், அரசவைக் கிழார்களும், பாடல் புனைதல், கேளிக்கைகள் முதலியவற்றில் ஈடுபட்டார்கள். காதல் கதைகள், களவு முறைகள், போலி வாழ்க்கை முறை பற்றிச் சீனவைப் பின்பற்றிப் பல நூல்கள் இவர்களால் எழுதப்பட்டன. கி. பி. 811-ல் எழுதப்பட்ட தக்கெதோரி மொனொகதாரியும், இதனையடுத்து எழுதப்பட்ட செஞ்சி மொனகதாரி (Genji Monogatari—செஞ்சியின் கதை) என்ற காதல் கதையும் பத்தாவது நூற்றாண்டு எய்யன் அரண்மனை வாழ்வைப் பின்னணியாகக் கொண்டு தொகுக்கப்பட்டவையாம். இக் காதல் கதையில் வரும் பாத்திரங்களேயன்றி, அதனுடைய நடையழகும், அரண்மனை மேனிலை வாழ்க்கையைப் பற்றிய சொல்லோவியங்களும் நம்மைப் பெரிதும் கவர்கின்றன. அழகிய கையெழுத்து வளர்ச்சி, மடல்கள் வரைதல் முதலியனவும் இக் காலத்தில் தனக்கே உரித்தான ஒரு புதிய நடையில் வளரத் தொடங்கின. இயற்கையை வண்ண ஓவியங்களாகத் தீட்டுதல், மரங்களையும், மாழைகளையும் கொண்டு படிமங்கள் செய்தல், அழகிய கட்டடங்களைக் கட்டுதல், அரண்மனைகள், கோயில்கள், பூஞ்சோலைகள் முதலியவற்றைப் பெரும் பொருட்செலவில் பேரழகுடன் அமைத்தல் முதலியவற்றால் எய்யன் கோநகர் இயற்கையோடியற்கையாக இணைந்து எழில் மிகும் காட்சியைத் தந்தது. இக் காலத்தில் எழுந்த ஒவ்வொரு கலையும், எழிலோடும், பொலிவோடும் இயற்கையோடு போட்டியிட்டன. இக் காலத்துச் சீனக் கலைகள் துன்பியலை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டன. ஆனால் எய்யன் கலைகளோ இன்ப நுகர்ச்சியைத் தூண்டுவனவாகப் படைக்கப் பட்டன. எனவே துன்பத்தின் சூழலை இன்பமாக மாற்றும் அறிவுப் பொருட் கலைகளே எய்யன் ஆட்சிக் காலத்தில் 'வகா' என்ற 31 சீர் அசைப் பாடல்கள், 5-7-5-7-7 என்ற அமைப்புப் பாடல்கள் அரச குடும்ப மகளிர்,

கிழார்கள், மத குருக்கள் ஆகியோரிடையில் புகழ் பெற்றன. கி. பி. 905-ல் கோகின்சு என்னும் முதற் பாடல் தொகுப்பு நூல் அரச ஆணையின் பேரில் தொகுக்கப்பட்டது.

சமயவொழுக்கம்

எய்யன் ஆட்சிக் காலத்திலும் புத்த சமயமே பெரும்பாலான மக்களால் போற்றப்படும் தலைசிறந்த சமயமாக விளங்கியது. நாடெங்கிலும் புத்தக் கோயில்களும், மடங்களும் நாடொறும் பெருகி வந்தன. இக் காலத்தில் கோயில்களுக்கும், மடங்களுக்கும், அவற்றிலிருப்போருக்கும் தனிப்பட்ட சிறப்பு குமுகாயத்தில் ஏற்பட்டது. அரசர்கள் இத்தகைய கோயில் நிலங்களுக்கும் சொத்துக்களுக்கும் வரி விலக்களித்தார்கள். எனவே இவை நாளும் பெருகலாயின. புத்த சமயத்தில் பலவகையான வழிபாட்டு முறைகள் தோன்றின. நாராவில் கோநகரம் இருந்த போதே புத்த சமயத்தில் ஆறுவகை வழிபாட்டு முறைகள் காணப்பட்டன. இவை மேலும் வளர்ந்து சீனு, ஆசியா, புத்தரின் தாயகமான இந்தியா ஆகியவற்றுடன் கொண்ட தொடர்பால் பெருகலாயின.

அவ்வாறு சிறப்புற்று விளங்கிய வழிபாட்டு முறையில் சீன புத்த வழிபாட்டு முறையும் ஒன்ருகும். இதனை 'தெந்தாய் வழிபாட்டு முறை' (Tendai) என்றனர். இவ் வழிபாட்டு முறையை சைச்சோ (Saicho)என்பவர் ஜப்பானில் பரப்பினுர். இவர் சீனுவில் வழிபாட்டு முறையைக் கற்று அதனேடு ஜப்பானியப் பண்பாட்டுக் கொத்தவாறு சில சடங்குகளையும் சேர்த்து இதனை ஜப்பானில் பரப்பினுர். இவர் இஃகியேய் (Hiyei) மலையில் தனது மடத்தை அமைத்துக் கொண்டு, எய்யன் அரண்மனையோடு தொடர்பு கொண்டு, தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டு இவ் வழிபாட்டு முறையை ஜப்பான் முழுவதும் பரப்பினுர்.

ஜப்பானில் இக் காலத்தில் வளர்ந்த மற்ருெரு வழிபாட்டு முறை 'மெய்வாக்கு' (True Word) என்பதாகும். இவ் வழிபாட்டு முறை இந்தியாவிலிருந்து சீனு வழியாக ஜப்பானுக்குச் சென்றதாகும். இஃது புத்த சமயம் உண்டாகிப் பல ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்ட வழிபாட்டு முறையாகும். இதனை ஜப்பானில் பரப்பியவர் குகை (Kukai) என்பவராவார். இவர் சீனுவுக்குச் சென்று பௌத்த மறையியல்களைக் கற்றுக்கொண்டிருக்கும் போது சீனுவுக்கு வந்திருந்த காசுமீரத்துச் சமய அறிஞர்களிடமிருந்தும் தமிழகத்திலுள்ள காஞ்சியிலிருந்து சீனுவுக்குச் சென்றிருந்த சமய அறிஞர்களிடமிருந்தும் இவ்வழிபாட்டு முறையைக் கற்றறிந்தார். இதன்படி தெய்விக மறைப் பொருள் எல்லாவிடத்திலும், எல்லா

ருக்கும் வெளிப்படையாகக் கற்பிக்கக் கூடியதன்று என்றும், இதனை அடைய விரும்புவோர் தொடர்ந்து அதனை வழுத்திப் பெறும் உள்ள வலிமையாலேயே உண்மையை அறிவர் என்றும் அந்த உண்மையே மெய்ப்பொருள் அல்லது மெய்வாக்கு ஆகும் என்றும் அறிகிறோம். அவ்வாறு மெய்ப்பொருளைக் காணும்போது 'எல்லாவகை உயிரினங்களிலும் இருக்கும் பேரான்மா ஒன்றே' என்பது இவ் வழிபாட்டின் முடிவு ஆகும். இவ் வழிபாட்டு முறையில் பல விந்தைகளும், மந்திர-தந்திர முறைகளும், சடங்குகளும் கையாளப் படுகின்றன. இவ் வழிபாட்டு முறையில் சேருகின்ற ஒருவரை முதலில் தூய்மைப்படுத்தி, தீக்கைக் கொடுத்து, விழாவெடுத்து சமய நுழைவு பெறச் செய்வர். அதற்குப்பின் அவர் மேற்படி மெய்வாக்கு நெறியைப் பின்பற்றித் தொடர்ந்து மந்திரம் ஓதி, சடங்குகளைப் பின்பற்றி மறைவிலிருந்து மறையியலை ஓதி, உள்ளொளியைக் காண்பார்.

கி. பி. 12ஆம் நூற்றாண்டு வரையில் ஜப்பானில் சிறிது சிறிதாக வளர்ந்து வந்த சமய நெறி இந் நூற்றாண்டின் முடிவில் ஒரு புதிய கோட்பாட்டைக் கொண்டு விட்டது. அக் கோட்பாட்டின்படி மாந்தன் தன் இறப்புக்குப் பின் மேற்றிசையிலுள்ள புனிதநாடு (Pure Land) என்னும் வீட்டுலகை அடைகிறான் என்பதாகும். இத்தகைய கோட்பாட்டை புத்த சமயத்தைப் பின் பற்றுபவர்களே ஏற்றுக்கொண்டார்கள். இவ்வாறு ஏற்றபின் இக் கோட்பாட்டை அமிதா புத்தம் அல்லது அமிதா வழிபாடு (Amida Cult) என அறிகிறோம்.

இவ்வாறு புத்த சமய வழிபாட்டில் பலவகை முறைகளும், கொள்கைகளும் தோன்றியதாலும், மடத் தலைவர்கள் அரசவையில் செல்வாக்குப் பெற்றதாலும், அரச குடும்பத்தினரும் அரசவைக் கிழார்களும் சிற்றின்ப வெறியர்களாய் மாறியதாலும், தூய்மையொன்றையே தன் கருப்பொருளாகக் கொண்ட புத்த சமயம் சிதறுண்டு, மக்கள் குமுகாயத்தை ஒன்றிணைக்க முடியாமல் விலகி நின்றது. அரசவையில் உள்ளவர்களைப் போலவே மடத் தலைவர்களும் பொன்னோடும் பொருளோடும் புரண்டு உலகத்தின் வேட்கைகளுக்கு ஆளாகின்றனர். மாநிலங்களில் முளைத்த தாமியோ (Damio) என்ற பண்ணை நிலக்குடியான மரபினரும் சாமுராய் என்ற படைக் குலத்தினரும் தனித்தியங்கிக் கலகங்கள் பல செய்தபோதும் அரசவையைக் கைப்பற்றிய ஃபூசிவாராக் களின்சூழ்ச்சிகளால் குழப்பங்கள் ஏற்பட்டபோதும், இம்மடத்துத் தலைவர்கள் படையேந்தி எய்யன் தெருக்களிலே போரிட்டார்கள் என்றால் இக் காலச் சமயவொழுக்கம் எந்த அளவுக்கு இழிந்து சென்றது என்பதனை ஒருவாறு ஊகிக்கலாம்.

நிலமானிய முறை (Feudalism)

ஜப்பானியக் கோநகரம் கியோத்தோவுக்கு மாற்றப்பட்டு எய்யன் ஆட்சி சிறப்புற்ற போதிலும், யாதொரு முயற்சியும், எவருடைய திட்டமுமின்றி வளர்ந்து வந்த சில குமுகாய ஆற்றல்களை எய்யன் ஆட்சியால் கட்டுப்படுத்த முடியவில்லை. இத்தகைய ஆற்றல்களில் ஃபூசிவாராக்களின் வெறியாட்டமும், பண்ணை நிலக் குடியானவர்களின் (Feudatories) அதிகார வளர்ச்சியும், சாமுராய் (Samurai) எனும் படைக்குலத்தவரின் ஒருங்கிணைப்பு முறையும் குறிப்பிடத்தக்கனவாம். இத்தகைய ஆற்றல்கள் கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் மிக விரைவாக வளர்ந்து அரசரை மங்க வைத்து அதிகாரங்களைக் கைப்பற்றி ஆளத்தொடங்கின. இதற்குக் கீழ்க்கண்ட காரணியங்களைக் கூறலாம்.

எய்யன் ஆட்சிக்காலத்தில் அரசவை வாழ்க்கையின்பத்தை நுகர்வதிலேயே கண்ணும் கருத்துமாயமைந்ததை அறிந்தோம். அஃதாவது அரசனும், அமைச்சர்களும், அதிகார வகுப்பாரும் கோநகரிலும், மாநிலத் தலைநகர்களிலும் இன்பத்தில் ஈடுபட்டுக் கடமையை மறந்து காலத்தைக் கொன்றார்கள். இதனால் கோநகருக்கு வெகு தொலைவிலுள்ள பண்ணை நிலக் குடியான வர்கள் மைய ஆட்சிக்குக் கீழ்ப்படியாமல், தன்னுரிமையோடு பேரதிகாரங்களுடன் வாழ்ந்தார்கள். இவர்களில் முகாமை யானவர்கள் தாமியோ என்ற பண்ணை நிலக் குடியானவ மரபின ராவர். இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு படையை வைத்திருந்தனர். அப் படையினர் அனைவரும் சேர்ந்து சாமுராய் என்ற படைக் குலத்தை அமைத்தனர். இந்தச் சாமுராய்களும், தாமியோக் களும் மைய ஆட்சி வலுவிழக்கும்போதெல்லாம் நாட்டில் குழப்பத்தையும், உள்நாட்டுக் கலகங்களையும் ஏற்படுத்தினர்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகு ஜப்பான் சீனாவுடன் கொண்டிருந்த தொடர்புகளை அறுத்துக் கொண்டது. இதற்குப் பின் ஜப்பானின் அரசியல்முறை, கலைகள் முதலியன ஜப்பானிய நாகரிகத்தின் சின்னங்களாக மாறின. எய்யன் கோநகரம் இத்தகைய நாகரிகச் சின்னங்களின் பிறப்பிடமாய்த் தோன்றியது. அரசவையிலிருந்த குகே (Kuge) என்னும் பிரபுக்களும், அரச குடும்பத்தினரும் இத்தகைய நாகரிகச் சின்னங்களின் காப்பாளர் களாகத் திகழ்ந்தனர். இவர்களின் அன்றாட வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாறுதல்கள் இவர்களைப் பிற மக்களிடமிருந்து தனியே பிரித்துக் காட்டியது. இவர்களும் தங்களைக் குமுகாயத்தின் உச்சியிலிருப்பவர்களென்றும் தனிப் பிறவிகளென்றும் கருதிக்

கொண்டு மக்களோடு கலவாமல் தலைநகர வாழ்விலும் அந் நகரத்திலுள்ள கலைப்பொருள் காட்சிகளிலும், அரண்மனையின்பங்களிலும் ஒன்றிவிட்டனர். எனவே குமுகாயம் அரசவையினரைத் தனியினமாகக் கருதியது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு தொலைவிலுள்ள ஊர்களில் வாழ்ந்த சிலர் நிலத்தையும், செல்வத்தையும், படை வலிமையையும் வாய்ப்பால் பெற்றுப் பெருநிலக்கிழார்களாகவும், ஆட்டிப்படைக்கும் ஆளின்றி ஊட்டி வளர்க்கும் மரம்போல் ஓங்கி வளர்ந்தனர். பொது மக்கள் அரசருக்கு மதிப்பும், அவரது அதிகாரத்தை மதித்து நடக்கும் மனப்பான்மையும் கொண்டிருந்தபோதிலும் வாய்ப்பால் இவ்வாறு பல ஆற்றல்கள் ஆட்சிக்கு எதிராக வளர்ந்தன.

ஜப்பானில் தோன்றிய தேசிய உணர்ச்சியும், கலைவளர்ச்சியும் சீன முறை ஆட்சியை மாற்றியமைத்தன. இதுகாறும் புழக்கத்திலிருந்து வந்த சீன முறை ஆட்சியை மாற்றி ஜப்பானியர் தங்கள் தேசிய முறையில் ஆட்சியை அமைக்கும் போது பல துறைகள் (Departments) புதிதாக எழுந்தன; பல துறைகள் மறைந்தன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அரச குடும்பத்தினரில் சிலரும், அரசரிடத்தில் செல்வாக்குப் பெற்ற சிலரும் தங்கள் நிலங்களுக்கு வரி செலுத்தாமலிருக்க உரிமை பெற்றுர்கள். இவர்களுடைய நிலங்கள் தனியார் சொத்து (Private Property) எனப்பட்டன. இந் நிலங்களை ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகள் வரை ஜப்பானிய அரசர்களால் நாட்டின் பொதுச் சொத்தாக ஆக்க முடியவில்லை. அவ்வப்போது கொண்டு வரப்பட்ட நிலச் சீர்திருத்தங்களின்படி நிலங்கள் உழவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டு அரசு அதிகாரிகளை அமர்த்திக் கண்காணிக்கும் படிச்செய்து வேளாண்மைத்துறை சீர்திருத்தப்பட்ட போதிலும் இத்தகைய தனியார் சொத்துக்களின் மீது அரசு கை வைக்க முடியவில்லை. இவ்வாறு அதிகப் பரப்புள்ள நிலங்களைத் தனிச் சொத்தாக அடைந்தவர்களே பிற்காலத்தில் பெரு நிலக்கிழார்கள் எனப்பட்டனர். இவர்களில் பலர் மைய ஆட்சியின் நேரடிப் பார்வைக்கு அப்பால் சென்று வாழலாயினர். ஒரு சிலரின் மிரட்டலுக்கு அஞ்சி அரசரே அவ்வாறு அவர்களைத் தொலைவிடங்களுக்குச் சென்று வாழும்படிக் கூறினர். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் பெரும்பாலோர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். அரசர், இவர்களுக்குத் தனிச் சொத்துக்களை வழங்கியதோடு மாநிலங்களின் பெரிய பதவிகளையும் வழங்கினர். இவ்வாறு பெரும் பதவிகளையும், பெருநிலப்பரப்பையும் பெற்ற அரச குடும்பத்தினரும், அவரது நண்பர்களும், அரசரிடம் செல்வாக்குப் படைத்தோரும், உயர்நிலைப் பிரபுக்களும், பண்ணை

நிலக் குடியானவர்களும் நாளடைவில் மைய ஆட்சிக்குட்படாமல் ஆங்காங்கே சிற்றரசர் போல் வாழலாயினர். இவர்கள் தங்களின் நிலங்களைப் பயிரிடுவதற்கும், பாதுகாப்பதற்கும் முறையே ஆள்களையும், படைகளையும் அமர்த்திக் கொண்டனர். எனவே ஒவ்வொருவரும் பண்ணைத் தனியுடைமையாளராக (Manorial Lords) வாழ்ந்தனர். பண்ணையையும், படையையும் பெற்று வாழ்ந்த இத்தகையோரது 'நிலமானியப் படை—பண்ணை முறைக்கு' சோஃகென் (Shohen) எனப் பெயர் ஏற்பட்டது. இம் முறையை ஐரோப்பாவில் இடைக்காலத்தில் நிலவிய நிலமானியப் பண்ணை முறைக்கு (Manorial System) ஒப்பிடலாம். ஆனால், ஐரோப்பாவில் நிலவிய இம் முறையில் ஆளுமை பெற்ற நிலமானியக் கிழார்கள் புனிதக் கத்தோலிக்கச் சமயத்தைக் (Holy Roman Church) காப்ப தற்கு அரேபிய முசுலீம்களை எதிர்த்துப் போரிட்டனர். ஆனால், ஜப்பான் நாட்டில் தோன்றிய சோஃகென் முறையால் ஆளுமை பெற்ற பெருநிலப் பிரபுக்கள் அந் நாட்டுப் பழங்குடிகளான ஐநூக்களை எதிர்த்துப்போராடி வேரறுத்தனர். ஐரோப்பாவில் தோன்றிய நிலமானியப் பண்ணை முறை, தன்னிறைவு பெற்ற ஊர்களைக்கொண்டு சிறப்புற்று விளங்கிச் சமயத்தையே அடிப் படையாகக்கொண்டு திகழ்ந்தது. ஆனால், ஜப்பானில் தோன்றிய நிலக்கிழமை முறை கிழார்களின் தன்னலத்தையே அடிப் படையாகக் கொண்டு மக்களைச் சுரண்டி வாழ்ந்து நாளடைவில் அரசியல் அதிகாரத்தையே கைப்பற்றி அரசரைக் கைப்பொம்மையாக்கி விட்டது. ஐரோப்பிய நிலமானிய முறையில் அதிகாரங்கள் படிப்படியாக அமைந்து அரசருக்குக் கட்டுப்பட்டுக் கடமையாற்றியது. ஆனால், ஜப்பானிய முறையில் நிலக்கிழார்கள் வரி செலுத்தாமலும் அரசனுக்குக் கட்டுப் படாமலும், மற்றவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையுணர்ச்சியு மின்றி வாழ்ந்தார்கள்.

புத்த சமயத்தின் வளர்ச்சிக்குப் பெருஞ் சிறப்பு ஏற்பட்ட போது மடங்களின் சொத்துக்களுக்கும், மானியங்களுக்கும் வரி விலக்குத் தரப்பட்டது என்பதை அறிந்தோம். இம் மடங்களில் சேர்ந்தவர்களுக்கும் பல சலுகைகள் வழங்கப்பட்டன. அவர்களின் குற்றங்களுக்குத் தண்டனை விதி விலக்குகளும் சொத்துக்களுக்கு வரி விலக்குகளும் கிடைத்தன. ஜப்பானிய அரசு தேசிய முறையில் மாற்றியமைக்கப்பட்டபோது மடங்களிலிருந்த ஒரு சிலர் மடங்களின் சொத்துக்களையும், நிலங்களையும் தம் வயப்படுத்திக் கொண்டு அவற்றையும் தனியார் சொத்து எனக்கூறி வரி விலக்குப் பெற்றனர். இத்தகையோரும் நிலக்கிழார்களாக மாறி விட்டனர். இவர்களைப் போலவே அரசருக்குத் தாங்கள் ஆற்ற வேண்டிய

அரிய பணிகளுக்காகப் பெரும் பரப்புள்ள நிலங்களை மானியங்களாகப் பெற்றிருந்தோரும், ஜப்பானில் அரசியல் சீர்திருத்தம் ஏற்பட்டபோது அவற்றையும் தனியார் சொத்துக்களாகப் பேராணை விடுக்கும்படிக் கூறி அவற்றிற்கு வரி விலக்குப் பெற்று பெருநிலக்கிழார்களாகி விட்டனர்.

ஜப்பானிய ஆட்சி விரிவாக்கப்பட்டபோது புதிதாக விரிவாக்கப்பட்ட தொலைவெல்லை நாடுகளையும், காடு கரம்புகளையும் ஒரு சிலர் தம் வயப்படுத்திக்கொண்டு தனிச் சொத்தாக்கிக் கொண்டார்கள். இவற்றில் காடுகளுக்கும், மேய்ச்சல் நிலங்களுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டது. பிற்காலத்தில் இக் காடுகளும் மேய்ச்சல் நிலங்களும் பண்படுத்தப்பட்டு, விளை நிலங்களாக்கப்பட்டன. ஆயினும் அவைகளுக்கு முன்பே பெற்றிருந்த வரிச் சலுகையை வைத்துக்கொண்டு சொந்தக்காரர்கள் வரி செலுத்த மறுத்து விட்டார்கள். இத்தகையோரும் நாளடைவில் பெருநிலக்கிழாரானார்கள்.

இவ்வாறு வரி விலக்குப் பெற்ற நிலங்களைத் தனிச் சொத்தாக்கிக் கொண்ட நிலக்கிழார்களிடம், வரி செலுத்தும் நிலக்கிழார்கள் தங்கள் நிலங்கள் முழுவதற்கும் வரி செலுத்த முடியாத காரணியத்தாலும் அல்லது ஒரு சில பகுதிக்கு வரி ஏய்ப்புச் செய்யும் எண்ணத்தாலும் தங்கள் நிலங்களின் ஒரு சில பகுதியையோ அல்லது முழுதுமாகவோ ஒப்படைத்தார்கள். அவ்வாறு ஒப்படைக்கப்படும் நிலங்களையும் நிலக்கிழார்கள் தங்களின் தனிச் சொத்துடன் சேர்த்துக் கொண்டு அவைகளுக்கும் வரி விலக்குப் பெறுவர். இவ்வாறு ஒப்படைத்தப் பின்னும் நிலக்கிழார்கள் தங்கள் நிலத்தைத் தாங்களே பயிரிடுவார்கள். தங்கள் நிலம் தனிச் சொத்தாகச் சேர்க்கப்பட்டு வரி விலக்குப் பெற்றுவிட்டதால் முன்பு தாங்கள் அரசாங்கத்திற்குச் செலுத்தி வந்த வரியின் ஒரு பகுதியை ஒப்படைப்பேற்றுக் கொண்ட நிலக்கிழார்களுக்குச் செலுத்துவர். இம் முறையால் நிலக்கிழாருக்கு மேன்மேலும் செல்வம் குவியலாயிற்று. இவ்வாறு தான்பெற்ற பெருநிலப்பரப்பை நிலக்கிழார் தனக்குக் கீழ் உள்ளவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பார். அவர்கள் ஒரு சில உரிமைகளோடு பயிரிடுவார்கள்.

### இம் முறையால் விளைந்த நன்மைகள்

இத்தகைய நிலமானிய முறையால் ஜப்பான் நாட்டில் அதிகப் பரப்பளவு நிலங்கள் வேளாண்மைக்குக் கொண்டு வரப்பட்டன. தொலைவெல்லை நாடுகளும், காடு கரம்புகளும், மேய்ச்சல் நிலங்களும் பண்படுத்தப்பட்டுப் பயிர் விளையும் நிலங்களாயின.

இதனால் அதிவிரைவாக வளர்ந்துவரும் ஜப்பானின் மக்கள் தொகைக்கு உணவுப் பஞ்சம் ஏற்படாமல் இம்முறை காப்பாற்றியது. ஒக்கைதோவிலும், எல்லைப்புறப் பகுதிகளிலும் அடிக்கடி ஊடுருவல் செய்து நாசம் விளைவித்த காட்டு விலங்காண்டிகளையும், ஐநூக்களையும் அடக்குவதில் நிலக்கிழார்களின் படைகள் அரசனுக்குப் பெரிதும் பயன்பட்டன. ஒன்சுவின் கீழ்ப் பகுதியிலிருந்த எமிசி (Yemishi) இனத்தவரும், ஜப்பானிய வளைகுடாவை ஒட்டியிருந்த காசுசா (Kazusa) முரட்டு இனத்தவரும் பாசகியூசு (Basaques) என்னும் மற்றொரு முரட்டு இனத்தவரும் ஆங்காங்கே கலகம் செய்யும் போதெல்லாம் நிலக்கிழார்களின் படைகளால் ஒடுக்கப்பட்டனர். அண்மையிலுள்ள கொரியர்களும் அடிக்கடி ஜப்பானியர்களுக்குத் துன்பம் விளைவித்தார்கள். இவர்களை அடக்குவதற்குப் பெருநிலக் கிழார்கள் பேருதவி புரிந்தார்கள்.

### தீமைகள்

கிழார்களின் படைகளே நாட்டின் நெருக்கடிக் காலங்களில் நாட்டைக் காப்பாற்றி வந்ததால் மக்களுக்கு அரசரின் மீதும், அரசரின் படைகளின் மீதும் நம்பிக்கை குறைந்து விட்டது. இதனால் அரசரது மதிப்பும் மங்கத் தொடங்கியது. வளர்ந்து விட்ட கிழார்களின் அதிகாரங்களை மன்னரால் குறைக்க முடியவில்லை. அவர்களை அழிக்கவும், ஒழிக்கவும் அரசருக்கு வலிமையில்லாமற் போய்விட்டது.

நாடு முழுவதும் புகுந்து கலகம் விளைவித்த ஐநூக்களைத் தோற்கடித்து வட பகுதிக்கப்பாலும் துரத்திச் சென்ற கிழார்களின் படைகளோடு சேர்ந்து போரிட்ட அரசரது படையில் ஊழல்கள் அதிகரித்தன. அரசாங்கப் படையைத் திருத்தியமைத்து வலுப்படுத்தவும் அரசியலமைப்பை வலுப்படுத்தவும் அரசர் பல புதிய வரிகளை விதித்தார். அவ் வரிச் சுமைகளைத் தாங்க மாட்டாத மக்கள் அரசாங்கத்தின் மீது வெறுப்புக் கொண்டார்கள். இத்தகைய சூழ்நிலைகளைத் தங்களுக்குச் சார்பாக்கிக் கொண்டு ஃபூசிவாராக்களும், தைராக்களும், மினமொத்தோக்களும் அரசியலதிகாரத்தைக் கைப்பற்ற முற்பட்டார்கள்.

## இடைக்கால அரசியல் நிலை-II

### முன்னுரை

ஜப்பானின் இடைக்கால வரலாற்றில் பேரரசர் அதிவல்லமை படைத்தவராக விளங்கினார். நாட்டின் எல்லா அதிகாரமும் அவர்

கையிலிருந்தது. ஆனால், அரசுரிமைக்கு வேண்டிய அடிப்படைச் சட்டங்கள் திட்டவட்டமாக உறுதிப்படுத்தப் படவில்லை. எனவே பிறங்கடையுரிமைச் (வாரிசு) சட்டத்தின் நிகராளி (பிரதிநிதி) களாக அரசவையினரே விளங்கினார்கள். அரசர் தன் விருப்பப் படி தன் பிள்ளைகளில் ஒருவரைத் தனக்குப்பின் பிறங்கடையாக அமர்த்தம் செய்வார். இவ் வமர்த்தத்தை அமைச்சர்களும், அரசவை உறுப்பினர்களும், மற்றும் உயரதிகாரிகளும் ஒரு மன மாக ஏற்றுக்கொண்ட பின்னரே நடைமுறைக்கு வரும். இவ்வாறு அமர்த்துமுன் அரசர் திடீரென இறந்துவிட்டால் அரசப் பிறங் கடையுரிமைக் குழப்பங்களும் ஏற்படுவதுண்டு. பிறங்கடை யுரிமைச் சச்சரவில் அரண்மனைக்குள் கட்சிப் பிளவுகளும் தோன்று வதுண்டு. இக் குழப்பமான நிலை ஒரு சில சமயம் இருண்ட கால மாகவும் மாறும். ஆனால், ஜப்பானின் வரலாற்றில் முதற் பேரர சரான சிம்மு தென்னோவிலிருந்து இன்றுவரை நோக்கும்போது இத்தகைய துன்பநிலை எதுவுமின்றி வரலாறு செவ்வனே தொடர்ந் திருக்கிறது. பேரரசருக்குப் பிள்ளைகள் இல்லையென்றால் அரச குடும்பத்திலுள்ள ஒருவரைத் தானே தனதாக்கிக்கொண்டு அரச ராக அமர்த்துவார். அல்லது அரசவையினர் அரசனுக்குப் பதிலாக அவ்வாறு பிறிதொருவரைத் தேர்ந்தெடுப்பதும் உண்டு. இவ்வாறு குறிப்பிட்ட எத்தகைய பிறங்கடையுரிமைச் சட்டமும் இல்லாமல் மரபு வழிப்படி ஜப்பானிய அரசர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இத்தகைய பிறங்கடை முறைத் தேர்தலைக் கிழார்கள், படைக்குலத்தினர், செல்வர்கள் ஆகியோரும் தத்தம் குடும்பங் களில் பின்பற்றினர்.

### பதவித் துறப்பும் ஃபூசிவாராக்களும்

ஜப்பானின் இடைக்கால வரலாற்றில் தோன்றிய பலதரப் பட்ட மாறுதல்களில் அரசர்களின் பதவித் துறப்பு (Abdication) முறையும் ஒன்றாகும். இப் பழக்கம் சீனாவிலிருந்து ஜப்பானிய அரியணைக்கு வந்தது. இடைக்காலத்தில் சீனா எல்லாவகையிலும் ஜப்பானுக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருந்ததால் இவ் வழக்கத்தைப் பின்பற்றுவது தங்களின் அரசியல் நாகரிக மாகுமென ஜப்பானிய அரசர்கள் கருதினார்கள். மேலும் புத்த மதம் அதி தீவிரமாக ஜப்பானில் பரவிவிட்டதால் புத்தரின் பதவித் துறப்பை ஜப்பானியர் தலைமேல் கொண்டு போற்றித் தாங்களும் அரச பதவியைத் துறந்து, மடங்களுக்குச் செல்ல லாயினர். இவ்வாறு அரசர்கள் பலர் ஒருவர் பின் ஒருவராகத் தம் இளம் புதல்வர்களுக்குப் பட்டம் சூட்டி விட்டுத் துறவு பூண்டதால், அரசியல் பொறுப்பை ஏற்று நடத்திய ஃபூசிவாரா

என்னும் ஒரு வகை மரபினர் அதிகாரங்கள் அனைத்தையும் கைப்பற்றி முடிசூடா மன்னர்களாய் விளங்கினர்.

38ஆம் மிகாடோவான தெஞ்சி (கி.பி. 668-671) என்பவர் தனக்குத் தனியாக தனியமைச்சர் (Nai-Daijin) ஒருவரை அமர்த்திக் கொண்டார். இப் பதவிக்கு நகதொமி-னோ-காமதாரி (Nakatomi-No-Kamatari) என்பவனை அமர்த்தினர். இவனே ஃபூசிவாரா மரபை ஏற்படுத்தியவன். இவனுக்குப்பின் இப் பதவி இவனுடைய மரபுரிமைச் சொத்தாகி விட்டது. இவனுடைய முன்னோனான நகதொமி-னோ-முராசி என்பவன் குயூசுச் சமவெளியிலிருந்து நாராவில் குடியேறியவனாவான். ஃபூசிவாராக்கள் சிந்தோ மதத்தைப் பின்பற்றினர்கள். இக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஜப்பானிய அரசு சீன மாதிரியில் அமைந்திருந்ததாலும், சீனவின் பழம்பெரும் மதமான சிந்தோ மதத்தை இவர்கள் கடைப்பிடித்ததாலும், மிகாடோவின் தனியமைச்சர் பதவியைத் தொடர்ந்து, கொடிவழியாகப் பெற்று வந்ததாலும், இம் மரபினருக்கு ஜப்பானில் செல்வாக்கும் மதிப்பும் உயர்ந்தன

புத்தமதம் ஜப்பானில் நுழைந்த பிறகு அம் மதத்தை நாடு முழுவதும் பரப்ப அரும்பாடுபட்ட ஜப்பானியத் தலைமையமைச்சர் உமாகோ (Umako) கி.பி. 626-ல் இறந்து விட்டதை அறிவோம். அவர் இறந்த பிறகு அவர் தாங்கி வந்த தலைமையமைச்சர் (Daijin) பதவியை அவருடைய மகனான எமிசி (Yemishi) என்பவன் பெறலானன். இவன் தனக்கும் தன் உடன் பிறந்தோர்களுக்கும் தனித்தனிக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு, தனிக் காவற் படைகளை அமர்த்திக் கொண்டு அரசரைப் போலவே வாழலானன். தலைமையமைச்சர் பேரதிகாரத்தோடும், பேராற்றலோடும் கோட்டைக் கொத்தளங்களோடும் வாழ்வதை ஜப்பானியர் வெறுத்தனர். தங்கள் தெய்விக அரசருக்கு இணையாகத் தலைமையமைச்சர் வாழ்வதை விரும்பாத ஜப்பானியர், அப் பதவிக்கு இருக்கும் அதிகாரங்களையும் செல்வாக்கையும் குறைக்கும்படி அரசரை வேண்டினர். அரசரால் தலைமையமைச்சரை அடக்க முடியவில்லை. எமிசிக்குப் பிறகு இப் பதவிக்கு வந்த அவன் மகனான இருகா (Iruka) என்பவன் மக்களையும் மன்னனையும் மதிக்காமல் அட்டகாசங்கள் பல புரிந்தான். எனவே இவனை கி.பி. 645-ல் மக்களே கொன்று விட்டனர். இக் கொலைக்குத் தலையாய காரணமாயமைந்தவன் ஃபூசிவாராக்களின் முன்னோனான நகதொமி-னோ-காமதாரி யாவான். இவன் 36ஆம் மிகாடோவான கோதோகு (கி.பி. 645-654) என்பவருடைய மகனான இளவரசர் தெஞ்சிக்கு (கி.பி. 668-671) அரிய

நண்பஞவான். எனவேதான் தெஞ்சி கொடிவழியாகத் தலைமை யமைச்சர் பதவியைப் பெற்று வந்த சோகன் (Sagan) கால்வழியில் வந்த இருகாவின் கொலைக்குப்பின் தனியமைச்சர் பதவியை ஏற்படுத்தி நகதொமி-னோ-காமதாரிக்குக் கொடுத்தார். சோகன் குடும்பத்தார் புத்த மதத்தைப் பின்பற்றுபவர்களென்பது குறிப்பிடத் தக்கது. இவ்வாறு ஃபூசிவாராக்கள் ஒரே சமையத்தில் தங்களின் அரசியல் எதிரியையும் மத எதிரியையும் வீழ்த்திவிட்டு ஜப்பான் அரசியலில் செல்வாக்குப் பெற்றனர்.

இவ்வாறு செல்வாக்குப் பெற்றுவிட்ட ஃபூசிவாராக்களுக்கு ஜப்பானிய அரசர்களின் பதவித் துறப்பு முறையில் பெரும்பயன் விளைந்தது. இதற்காக இவர்கள் கையாண்ட முறை மிகவும் வியக்கத் தக்கதாகும். தங்களின் பெண்களை ஜப்பானிய அரசர்கள் மணக்கும்படிச் செய்வர்; அவ்வாறு மணந்த அரசருக்கு ஒரு மகன் அல்லது மகள் பிறந்தவுடன் அரசரின் நெஞ்சில் வாழ்வின் நிலையாமையென்னும் விதையைத் தூவித் துறவு மேற்கொள்ளும் படித் தூண்டுவர். அரசர், பதவி துறந்ததும் குழந்தைக்குப் பட்டம் சூட்டித் தாங்களே தனியமைச்சராகவும், மற்றும் உயரதிகாரிகளாகவுமிருந்து நாட்டை ஆளுவர். இவ்வாறு ஃபூசிவாராக்கள் தங்கள் பெண்களையே அரசர்கள் தொடர்ந்து மணக்கும்படிச் செய்ததால் ஃபூசிவாராக்களும், அரசர்களும், குருதிக் கலப்புடைய உறவினர்களாகி விட்டார்கள். தலைமை யமைச்சர் பதவியைப் பெற்று அரசருக்கு அடுத்தபடியாகப் பெருமையோடு விளங்கிய சோகன்கள் இருக்குமிடம் தெரியாமல் மறையலாயினர்.

ஜப்பானிய அரசர்களில் இவ்வாறு இளமையிலேயே பதவியைத் துறந்த அரசர்கள் சிலரின் பட்டியலை நோக்கினுல் ஃபூசிவாராக்கள் பல நூற்றுண்டுகள் ஜப்பானின் அரியணையை ஆட்டிப் படைத்தது விளங்கும்.

### ஃபூசிவாராக்களின் அதிகார வளர்ச்சி

ஃபூசிவாராக்கள் கி. பி. 645ஆம் ஆண்டிலிருந்து கி. பி. 1050 வரையில் ஜப்பானின் அதிகாரத்தைக் கைப்பற்றி ஏறத்தாழ 400 ஆண்டுகள் ஆண்டு வந்தார்கள். இந்த நானூறு ஆண்டு களில் இவர்கள் படிப்படியாகத் தங்களுடைய அதிகாரத்தை வளர்த்துக்கொள்வதற்குப் பல சார்பான சூழ்நிலைகள் இருந்தன. அரசப் பதவியேற்கும் 'குழந்தையரசர்களுக்கு' ஆட்சி முறையில் நல்ல பயிற்சி கொடாமல் அவர்களை இன்பத்தில் மூழ்க வைத்துப் பொறுப்பற்றவர்களாக்கிவிட்டுப் பின் துறவை மேற்கொள்ளச்

| மிகாடோ வரிசை | மிகாடோவின் பெயர் | பட்டமேற்ற ஆண்டும், அகவையும் | | பதவித்துறப்பும் ஆண்ட காலமும் | | இறப்பும் அகவையும் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பட்டமேற்ற ஆண்டு | அகவை | துறப்பு | ஆண்டது | இறந்த ஆண்டு | அகவை |
| 56 | செய்வா | கி. பி. 859 — | 9 | கி. பி. 877 — | 18 ஆண்டுகள் | கி. பி. 880 — | 31 |
| 61 | ஷுஜாகு | ,, 931 — | 8 | ,, 947 — | 16 ,, | ,, 952 — | 30 |
| 63 | ரேஷெய் | ,, 968 — | 18 | ,, 970 — | 2 ,, | ,, 1011 — | 62 |
| 64 | என்யூ | ,, 970 — | 11 | ,, 985 — | 15 ,, | ,, 991 — | 33 |
| 65 | க்வாஸன் | ,, 985 — | 17 | ,, 987 — | 2 ,, | ,, 1011 — | 32 |
| 74 | தோபா | ,, 1108 — | 5 | ,, 1124 — | 16 ,, | ,, 1156 — | 54 |
| 79 | ரொகுஜோ | ,, 1166 — | 2 | ,, 1169 — | 3 ,, | ,, 1176 — | 12 |
| 80 | தக கூரா | ,, 1169 — | 8 | ,, 1181 — | 12 ,, | ,, 1181 — | 21 |
| 94 | கோ—நிஜியோ | ,, 1301 — | 17 | ,, 1308 — | 7 ,, | ,, 1308 — | 24 |

செய்தனர். அத்தகைய மன்னர்களுக்குத் 'துறவு மாமன்னர்கள்' என்னும் பெயருண்டாயிற்று. பதவியேற்ற மன்னர்கள் தங்கள் வலுவின்மையை நன்கு உணர்ந்து ஃபூசிவாராக்களின் கட்டளைகளை ஏற்று நடத்தினர். இவ்வாறு ஃபூசிவாராக்களின் கைப்பொம்மைகளாகிவிட்ட மன்னர்கள் ஒரு புறமும், அதிகார வகுப்பைக் கொண்டு மக்களை ஆட்டிப் படைக்கும் ஃபூசிவாராக்கள் மற்றொரு புறமும், தன்னலமும் பேராசையும் கொண்ட நிலக்கிழார்களின் வெறியாட்டம் வேறொரு புறமும் இருக்கும்போது, அடிக்கடி அயலார் படையெடுப்பும், உள்நாட்டுக் குழப்பங்களும் ஏற்படுவது ஜப்பானின் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. இவற்றை மனதில் கொண்டும், அரசர்கள் தாங்களே ஃபூசிவாராக்களின் தூண்டுதலின்றியே துறவை மேற்கொண்டார்கள். போர்களும், கலகங்களும் ஏற்படும்போதெல்லாம் தெற்கிலுள்ள குயூசுத்தீவுப் பகுதிகளுக்கும், வடபுலத்திற்கும், மற்றும் தொலைவெல்லைகளுக்கும் படைகளை அனுப்பும்போது அரசர்கள் உடன் செல்லாமல் தளபதிகளை மட்டும் அனுப்பிவிட்டுத் தாங்கள் அரண்மனையிலேயே தங்கிவிடுவர். இதனால் வெற்றி கண்ட தளபதிகளும், மீண்டும் தலைநகருக்குத் திரும்பாமல் ஆங்காங்கே தங்கி அரசருக்கு உட்படாமல் தங்கள் அதிகாரத்தை வளர்த்துக் கொண்டார்கள். அரசவையில் தன்னை நேரடியாக எதிர்க்கும் அரச குடும்பத்து உறுப்பினர்களின் மாநிலங்களின் பெரும்பதவிகளைக் கொடுத்து அவர்களைத் தொலை மாநிலங்களுக்கு அரசர் அனுப்பி விடுவார். இத்தகைய செய்கைகள் அரசரது கையாலாகாத தன்மையைக் காட்டுகின்றன அல்லவா?

இடையிடையே நாட்டில் புகுந்த கொள்ளைக் கூட்டத்தாரையும் படையெடுப்பாளரையும் தடுப்பதில் அரசர் அதிகார வகுப்பாரையே (ஃபூசிவாராக்களை) நம்பி வாழ வேண்டியதாயிற்று. சான்றாக ஒன்சுத்தீவின் வட பகுதியில் வாழ்ந்த எமிசி இனத்தவர் கட்டுக் கடங்காமல் அடிக்கடி உள் நாட்டில் புகுந்து கலகம் விளைவித்தார்கள். இவர்களையடக்குவதற்கு, 45ஆம் மிகாடோவான சோமு (கி. பி. 724-756) நோவுமாகி (No Umaki) என்னும் ஃபூசிவாராவின் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பி எமிசிகளை அடக்கினார். அவர்களை நிலையாகத் தடுத்து நிறுத்துவதற்கு ஒன்சுத்தீவில் தகா (Taga) எனப்படும் ஒரு கோட்டையைக் கட்டினார். இக் கோட்டை கி.பி. 724-ல் கட்டப்பட்டதென்றும், இதனை எசோ (Yezo) எனப்படும் முரட்டு இனத்தவர் கவர்ந்து கொண்டார்களென்றும், பின்னர் கி.பி. 762-ல் சூனின் பேரரசர் காலத்தில் இது மீட்கப்பட்டதென்றும், இன்றும் அங்குள்ள கல்வெட்டு ஒன்று சான்று பகர்கின்றது. இவ்

விளக்கத்தை நமக்குத் தருபவர் ஆங்கில ஆராய்ச்சியாளர் திரு. அஃஸ்டன் (Mr. Aston) என்பவராவார். இத்தகைய படையெடுப்புகளிலும், நில மீட்புகளிலும் பெரும் பங்கேற்ற ஃபூசிவாராக்களை அரசரின் ஏவலாளர்கள் எனக் கூறிவிட முடியாதென்றும், ஆனால், அவர்கள் அரசின் பங்காளர்களாகவே விளங்கினார்கள் என்றும் திரு. விசுகவுண்டு மோரி (Mr. Viscount Mori) அவர்கள் கூறுவது சாலவும் பொருந்தும். ஏனெனில் கி. பி. 645ஆம் ஆண்டில் தொடங்கிய ஃபூசிவாராக்களின் அதிகாரம் ஒரு நூற்றாண்டுக்குள் ஆட்சியிலுள்ள அத்தனைப் பதவிகளையும் கைக்கொண்டு விட்டது. தங்களைக் காத்துக் கொள்வதற்காகவே இவர்கள் இத்தகைய படையெடுப்புகளையும் கலகங்களையும் அடக்கினார்களேயொழிய அரசரது கட்டளைக்கு அஞ்சியோ, அரசரையும், அரசியலையும் காக்க வேண்டும் என்ற கடமையுணர்வினாலோ இவர்கள் இவற்றில் ஈடுபடவில்லை. சான்றாக ஜப்பானின் பழங்குடி மக்களான ஐநூக்கள் நாடு முழுவதும் ஊடுருவிக் கலகங்கள் விளைவித்தபோது உமாகாய் (Umakai) என்ற ஃபூசிவாரா படைகளைத் திரட்டிக் கொண்டு தாமே புறப்பட்டார்.

இவ்வாறு வளர்ந்து அதிகாரத்தின் உச்ச நிலைக்குச் சென்று விட்ட ஃபூசிவாராக்களை அடக்குவதற்கு கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் ஆண்ட ஜப்பானிய மன்னர்கள் முயன்றார்கள். ஆனால், அவர்களின் முயற்சி வெற்றி பெறவில்லை. இவர்களின் அதிகார வளர்ச்சியின் புகழ் பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் உச்சக்கட்டத்தில் ஓங்கி நின்றது. இவ்வாறு ஓங்கிநிற்கும் ஃபூசிவாராக்களின் அதிகாரத்தாலும், நிலக்கிழார்களின் தன்னலத்தாலும் மைய ஆட்சி வலுவிழந்து நின்றதேயொழிய அழிந்து விட்டதெனக் கூற முடியாது. மன்னருக்குப் பழைய மதிப்பும், அவர்மீது கொண்ட பற்றும் மக்களிடையே சிறிதும் குறையாமல் நின்றன. இக் காலத்தில்தான் ஜப்பானிய ஆட்சிப் பரப்பும், மையத் தீவின் கிழக்கிலும் மேற்கிலும் அகன்று நின்றது. மக்கள் தொகையும் அதிகமாகப் பெருகி வந்தது. நிலக்கிழார்களின் வளர்ச்சியால் பயிரிடும் நிலங்கள் பெருகிப் பொருளியல் வளர்ச்சியும், மக்கள்நலமும் வளர்ந்தன. இதுவரை அதிகாரம் முழுவதும் மைய ஆட்சியில் இருந்த நிலை மறைந்து நிலக்கிழார்களிடம் நடைமுறையில் வளர்ந்து வந்ததால் அதிகாரம் பன்முகப் படுத்தப்பட்டதென்று அரசியலறிஞர்கள் கூறுவர்.

அதிகாரத்தின் உச்சக் கட்டத்திலிருந்த ஃபூசிவாராக்களுக்கு நாட்டில் பல எதிர்ப்புகள் தோன்றலாயின. ஃபூசிவாராக்கள்

சிந்தோ மதத்தையும், சீன அரசியல் முறையையும் பின்பற்றுபவர்கள். ஆனால், ஜப்பானிய தேசிய அரசியல் முறையைப் பின் பற்ற விரும்பிய புத்த மதத்தினரான சோகா (Soga) என்னும் குடும்பத்தார் இவர்களைப் பல வகையிலும் அயலார்களாகவும், ஜப்பான் தேசியத்தின் குருதியை உறிஞ்சும் அட்டைகளாகவும் கருதினர்கள். எனவே ஃபூசிவாராக்களுக்கும், சோகாக்களுக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. இதிலும் ஃபூசிவாராக்களே வெற்றி பெற்றார்கள். சோகாக்களை ஒடுக்கியபின் தங்களுக்கு எதிராக வ்ளர்ந்துவரும் குடும்பங்களை ஒடுக்குவதில் ஃபூசிவாராக்கள் ஈடுபட்டார்கள். எனவே ஜப்பானிலுள்ள ஒவ்வொரு தனிக் குடும்பமும் பாதுகாப்புத் தேடிக் கொள்ள முற்பட்டது. இத்தகைய குடும்பங்களில் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் பெருந் வலிவுடன் விளங்கிய தாகிஃபானு (Tahhi Bana) என்பதும் ஒன்றாகும். இக் குடும்பம் பண்டைய யமாத்தோ அரச மரபில் தோன்றியது. இக் குடும்பத்தில் தோன்றிய மரோயி (Maroye) என்ற பேரறிஞர் சோமு பேரரசர் காலத்தில் ஜப்பானிய நாட்டுப் பண்டைய பாக்களைத் தொகுத்தளித்தார். இக் குடும்பம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதோடு, ஃபூசிவாராக்களின் அதிகாரத்தையும் ஒடுக்க விரும்பியது; ஆனால், முடியவில்லை.

இதைப் போலவே எழுந்த மற்றொரு குடும்பம் சுகவாரா (Sugawara) என்பதாகும். இக் குடும்பம் கவாச்சி (Kawachs) மாநிலத்தில் வாழ்ந்த பழம்பெருங்குடும்பமாகும். இக்குடும்பத்தில் பெயர் பெற்று விளங்கியவர் சுகவாரா மிச்சி சானி (Sugawara michi zane) என்ற மாமேதையாவார். இவர் ஒரு சிறந்த சீன மொழியியல் பேரறிஞராவார். அக் காலத்தில் தொலைக்கிழக்கு நாடுகளில் சிறந்து விளங்கியதும், ஜப்பானின் ஆட்சி மொழியாக இருந்ததும் சீன மொழி என்பது குறிப்பிடத் தக்கது. 59ஆம் மிகாடோவான உதா (Uda-888-898 A.D.) என்பவர் இளவரசராயிருக்கும்போது இவருக்கு மிச்சி சானி ஆசிரியராக இருந்தார். பொதுவாக சுகவாராக் குடும்பத்தினரும், ஓயி (Oye) என்னும் மற்றொரு குடும்பத்தினரும் கல்வி கற்றலையும், கற்பித்தலையுமே தங்கள் குலத் தொழிலாகக் கொண்டு விளங்கியவர்கள். இக் குடும்பங்களின் இளைஞர்களுக்குத் தேசியப் பல்கலைக்கழகங்களில் படிப்பதற்கான ஏந்துகளையும் (வசதிகளையும்), உதவிகளையும் அரசே செய்து வந்தது.

சுகவாரா மிச்சி சானி எப்படியும் ஃபூசிவாராக்களை வீழ்த்தி அவர்கள் கொடி வழியாகத் துய்த்து வரும் தனியமைச்சர் பதவி போன்றவற்றைப் பிடித்து விடவேண்டுமென எண்ணினர். அவர்

எண்ணத்திற்கேதுவாக உதா பேரரசர் பத்தாண்டுகள் ஆண்டு கி. பி. 898ஆம் ஆண்டில் துறவு பூண்டார். அவருக்குப்பின் அவருடைய பதினான்கு அகவை நிரம்பிய மகனான தைகோ (Daigo = 898—930 A. D.) 60ஆம் மிகாடோவாகப் பதவி யேற்றார். தன் திறமையைப் பயன்படுத்தி மிச்சி சானி அரசவை யின் உறுப்பினராகி தனியமைச்சரின் (Nai-daijin) புகழை மங்கச் செய்தார். இதனால் அப் பதவியைக் கொடி வழியாகப் பெற்று வந்த ஃபூசிவாராக்களுக்கு அவர்மீது வெறுப்பும் அச்சமும் ஏற்பட்டது. அப்பொழுது தனியமைச்சராக இருந்தவர் தொகிஹிரா (TokiHira) என்னும் ஃபூசிவாரா ஆவார். இவர் மிச்சி சானியை ஒழிக்கத் திட்டமிட்டு அவருக்கு அரசப்படிநிகராளி (ராஜப் பிரதிநிதி) பதவியைக் கொடுத்து குயூசுத்தீவின் ஒரு பகுதிக்கு அனுப்பினார். அங்கு சென்றபின் மிச்சி சானி மீண்டும் கோ நகருக்குத் திரும்பாமல் கி. பி. 903ஆம் ஆண்டில் அங்கேயே மாண்டார். அவருடைய விரகாண்மையையறிந்த ஜப்பானியர்கள் அவரைக் 'கல்வித் தேவன்' (Tenjin) 'எழுத்து முனிவன்' என்றெல்லாம் போற்றி வழிபடலானார்கள். ஜப்பானியப் பள்ளிக் கூடங்களில் ஒவ்வொரு மாதத்தின் இருபத்தைந்தாம் நாளும் அவரது நினைவாக விடுமுறை விடப்பட்டது. சூன் 25ஆம் நாளிலிருந்து தொடங்கும் பள்ளி விடுமுறை நாள்களை மிச்சி சானி விடுமுறை என்று அழைத்தனர். பள்ளிதோறும் அவருடைய உருவப் படம் வைக்கப்பட்டது.

இவ்வாறு தங்களை எதிர்த்து எழுந்து, தங்கள் செல்வாக்கைக் கைப்பற்ற முனைந்த ஒவ்வொரு குடும்பத்தையும் ஃபூசிவாராக்கள் அடக்கி வெற்றி கண்டார்கள். வல்லவனுக்கு வல்லவன் வைய கத்தில் உண்டல்லவா? அவர்களையும் அடக்குவதற்கு வல்லவர் சிலர் மறக்குடிகளில் தோன்றினார்கள். அத்தகையோர் தோன்றிய படைக் குடும்பங்களைப் பற்றி இனிக் காண்போம்.

### மறவூழி

பெருநிலக் கிழார்கள் தங்கள் சொத்துக்களைக் கொள்ளைக் கூட்டத்தினரிடமிருந்து பாதுகாக்கவும், எல்லை மீறுவோரைத் தடுத்து நிறுத்தவும், தங்களுக்கெனச் சொந்தமாகப் படையை அமைத்துக் கொண்டார்கள் என்பதைப் பார்த்தோம். சீன முறையில் அமைக்கப்பட்ட ஜப்பானிய ஆட்சியில் ஃபூசிவாராக் கள் பொதுத் துறைகளில் சிறந்து விளங்கினார்களேயொழிய, படைத்துறையில் அவர்கள் பெரிதும் பங்கேற்கவில்லை. குயூசுத் தீவிலும், வடபுலத்திலும், கொரியாவிலும் கலகங்கள் ஏற்படும் போதெல்லாம் அவர்கள் படைத்தொழிலையே குலத்தொழிலாகக்

கொண்ட சில குடும்பத்தாரின் உதவிகளை நாடி, அக் குடும்பங்களி லிருந்து தளபதிகளைத் தேர்ந்தெடுத்துத் தங்கள் சார்பில் சென்று கலகங்களை அடக்கச் செய்தார்கள். பெருநிலக்கிழார்கள் தங்க ளுக்குள்ளேயே போரிட்டுக் கொள்ளும் போதெல்லாம் இத்தகைய படைக்குலத்தவர்களை நாடிப் பெரும் பொருள் கொடுத்து அவர் களின் உதவியைப் பெற்றார்கள். எனவே இக் காலத்தில் இத்த கைய படைக்குலத்தவர்களுக்கு ஜப்பானில் தனிப்பட்ட பெருமை ஏற்பட்டது. இவர்களுடைய உதவிக்காக மைய ஆட்சியினரும், மாநில ஆட்சியினரும் நிலக்கிழார்களும் காத்துக் கிடந்தார்கள். இச் சூழ்நிலையில்தான் ஜப்பான் நாட்டில் பல வகையான படைக் குடும்பங்கள் தோன்றின. இக் குடும்பங்கள் பொதுவாக தைமியோ (Daimyo) அல்லது 'புகழ்வாய்ந்தவர்கள்' என்று அழைக்கப் பட்டன. இக் குடும்பங்கள் நாளடைவில் தங்களுக்குள்ளேயே பல குலங்களாகப் பிரிந்து விட்டன. இவர்களை இந்திய வரலாற்றில் வரும் இராசபுத்திர வீரர்களுக்கு ஓரளவு ஒப்பிடலாம். ஆனால், அவர்களைப் போல் இவர்கள் தங்களுக்குள் போரிட்டுக் கொள் ளாமல் நாளடைவில் ஒன்று சேர்ந்து சாமுராய் (Samurai) அல்லது 'வீரப்படையாளர்கள்' என்ற ஒரே படைக்குலமாக ஒருங்கிணைந் தார்கள். இந்த மறக்குடியினர் தங்கள் தலைவனுக்குத் தங்களைக் காணிக்கையாக்கிக் கொண்டார்கள். உடைவாள் இவர்களின் இலச்சினையாகியது. இக் காலத்து ஜப்பானிய உடைவாள்கள் அவற்றின் உறுதிக்கும், வேலைப்பாட்டிற்கும் உலகிலேயே புகழ் பெற்றவைகளாய் விளங்கின. இவ்வாறு எழுந்த இம் மறக் குடியின் வரலாற்றை ஒரு 'மறவூழி' என்றே அழைக்கலாம்.

## தைராக்களும் மினமொத்தோக்களும்
## (Taira and Minamoto)

மேலே கூறப்பட்ட மறக்குடியில் தோன்றிய பெயர் பெற்ற வலிமை படைத்த குடும்பங்கள் இரண்டு. அவை தைராக் குடும்பம், மற்றொன்று மினமொத்தோக் குடும்பம். பொதுவாக நோக்கும் போது இவ் வீரக்குடும்பங்கள் யாவும் அரசக் குடும்பத்தோடு குருதித் தொடர்புடையவையாகும். தங்களுக்குச் செல்வமும் படைவலிமையும் சேர்ந்தபின் ஜப்பானில் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையில் இம் மரபினர் அதிகாரம் பெற நினைத்தது இயற்கையே. இவர்கள் அரசியலதிகாரத்தைக் கைப்பற்ற முனையும் போதெல்லாம் அவ்வதிகாரத்தை முன்னரே கைப்பற்றி யுள்ள ஃபூசிவாராக்கள் தங்களுடைய சூழ்ச்சிகளால் இவர்களுக் குள்ளேயே பிளவுகளை உண்டாக்கி ஒருவர்க்கொருவர் வேற்றுமையும், வெறுப்புணர்ச்சியும் பெறச் செய்தார்கள்,

இதனுல் நாளடைவில் இம் மறக்குடியில் பல பிரிவுகளும், தங்களுக்குள்ளேயே பல போராட்டங்களும் ஏற்படலாயின. தங்கள் எதிரிகளின் தாக்குதல்களைத் திசைமாற்றி விட்ட ஃபூசிவாராக்களும் அரசவைப் பிரபுக்களும் (Kuje) தங்கள் அதிகாரங்களையும் அரசியலின்பங்களையும் கேடின்றித் தொடர்ந்து துய்த்து வந்தார்கள். இதனை ஈண்டு விளக்கமாகக் காண்போம்.

### தைராக்கள்

கி. பி. 794ஆம் ஆண்டில் எய்யன் கோநகராட்சிக் காலம் தொடங்குவதை அறிவோம். கியோத்தோ அல்லது எய்யன் கோநகரம் கமோகா என்னும் ஆற்றங்கரையின்மேல் சிறப்பாக அமைக்கப் பட்டது என்பதையும் அறிவோம். முதன் முதலாக இப் புதிய நகரைக் கோநகராகக் கொண்டு ஆண்ட மன்னர் 50ஆம் மிகாடோவான கிவாம் (கி. பி. 782—806) என்பவராவார். இவரின் காமக்கிழத்தி ஒருத்திக்குப் பிறந்தவனின் வழித் தோன்றல்களே தைராக்களாவர். கிவாமின் பெயரான தகமோச்சி (Takamochi) என்பவன் அத்தகைய காமக் கிழத்தியின் மகனுக்கு மகனுவான். தகமோச்சி கிவாம்முவிடம் இசைவு பெற்றுத் தன் பெயரைத் தைரா (Taira) என்று மாற்றிக் கொண்டான். இத் தைராதான் தைராக்கள் எனப்படும் மறக்குடியை ஏற்படுத்தியவன். இவனுக்குப் பின் இவனுடைய குடும்பத்தார் படைத் தொழிலையே தங்கள் குலத்தொழிலாகக் கொண்டனர். இவர்கள் வழிவழியாக அரசருக்கு உதவும் படைக் குலத்தவராகி விட்டனர்.

### மினுமொத்தோக்கள்

56ஆம் மிகாடோவான செய்வா (Seiwa=859—880 A.D.) என்பவரின் மகனுன ததாசுமி (Tada zumi) என்பவர் போர் அமைச்சராஞர். அவருக்குப் பின் அவருடைய இரு புதல்வர்களும் தந்தையைப் போலவே போர்த்திறமையில் சிறந்து விளங்கினுர்கள். இவ்விரு புதல்வர்களுக்கும் மினுமொத்தோக்கள் என்ற பட்டப் பெயர் வழங்கலாயிற்று. இவர்களில் ஒருவனுன திசுனே மொத்தோ (Tsune Moto) படைக் குடும்பத் தலைவனுனன். இவ்வாறு செய்வாப் பேரரசரின் குருதி வழித் தோன்றியதே மினுமொத்தோக்களின் படைக் குடும்பமாகும்.

## தைரா—மினுமொத்தோ போராட்டங்கள்

இக் குடும்பங்கள் படை வலுவால் சிறந்து விளங்கும்போது நாட்டிலேற்பட்ட கலகங்களுக்கும், குழப்பங்களுக்கும், படையெடுப்புகளுக்கும், அரசர் இவர்களுடைய உதவியை நாட

வேண்டியதாயிற்று. எனவே இவர்கள் குமுகாயத்தில் ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்று விட்டார்கள். வழிவழியாக இக் குலத்தவர் அனைவரும் படைத்தொழில் ஒன்றையே மேற்கொண்டு விட்டதால் இவர்களின் குடும்பங்கள் நிரந்தரப்படைகளின் நிலைக்களன்களாகி விட்டன. அதற்கேற்ற முறையில் இவர்களும் அத் துறையில் சிறந்த அறிவையும், பயிற்சியையும் பெற்று விட்டார்கள். இவ்வாறு நாட்டின் முதுகெலும்பாகி விட்ட இக் குலங்களின் தளபதிகளுக்கு 'நாம் ஏன் நாட்டைக் கைப்பற்றி ஆளக்கூடாது' என்ற ஆசை தோன்றுவது இயற்கைதானே? அவர்கள் ஆசைக் கேற்ப அரசியல் சூழ்நிலையும் சிறிது சிறிதாக நெகிழ்ந்து கொடுத்தது. தங்கள் ஆசைக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்ற அரசியல் அதிகார வகுப்பினரான ஃபூசிவாராக்களுக்கு இவ் வீரக் குடும்பங்களுக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. இம் மோதல்கள் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலம் வரையில் நீடித்ததெனலாம்.

கி. பி. 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி. பி. 12ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஃபூசிவாராக்களே தனியமைச்சர் பதவி போன்றவற்றைப் பெறுவதில் தங்களுக்குள் பூசலிட்டுக் கொண்டார்கள். இச் சமையத்தில்தான் நாம் முன்பு கூறிய புத்தத் துறவிகளும், சிந்தோ மதக் குருமார்களும் கூடக் கருவி யேந்தி எய்யன் தெருக்களிலெல்லாம் போரிட்டார்கள். இத்தகைய கலகங்களை :அடக்குவதற்கு மினமொத்தோக்களின் படைகள் அழைக்கப்பட வேண்டியதாயிற்று. இக் கலகங்களில் மிகா டோக்களும், பதவி துறந்த மிகாடோக்களும், சமயத்துறவிகளும், கூடப் பங்கேற்றனர்கள். மினமொத்தோக்களும், தைராக்களும் தங்களுக்குள்ளும் போரிட்டுக் கொண்டார்கள். ஃபூசிவாராக்கள் இவ்விரு குடும்பங்களையும் எதிர்த்துப் போரிட்டார்கள். இச் சமையத்தில் ஆண்ட ஜப்பானியப் பேரரசர் ஃபூசிவாராக் குடும்பத்துப் பெண்ணுக்கு பிறவாதவராவார். எனவே இவரும் ஃபூசிவாராக்களை ஒடுக்க முற்பட்டார். இவ்வாறு தனக்குள்ளேயே போட்டியிட்டுக்கொண்டும், தைராக்களோடும், மினமொத்தோக் களோடும் போரிட்டுக் கொண்டும் அதிகாரத்தைத் தொடர்ந்து துய்க்கவிரும்பும் ஃபூசிவாராக் கழுகுகளுக்கும், தங்களுக்குள்ளேயே பிரிந்து வாள் முனையில் பணயம் வைத்து ஃபூசிவாராக்களிட மிருந்து அதிகாரத்தைப் பறிக்க நினைக்கும் மினமொத்தோ தைராக் கழுகுகளுக்கும், பொத்தலிட்டுக் குருதியைச் சுவைத்து நிற்கும் கடமையுணர்ச்சியற்ற அரசவைக் கிழார்களுக்கும், விடு பட்டுச் சென்று தன்னிச்சைபோல் வளரும் பெருநிலக்கிழார் களுக்குமிடையில் ஜப்பானிய நாட்டு அழகெனும் அரச நங்கை

அலங்கோலமாக அல்லல் பட்டு நின்முள். இதனை ஈண்டுச் சற்று விரித்துக் காண்போம்.

73ஆம் மிகாடோவான ஓரிகவா (Horikawa = 1087-1107 A.D.) என்பவர் ஃபூசிவாராக் குடும்பத்துப் பெண்ணுக்குப் பிறவாத பேரரசராவார். இவர்தான் ஃபூசிவாராக்களை அடக்குவதில் அதி தீவிரப் பங்கேற்றவர். ஆனால், அதில் தோற்று, மன முடைந்து, துறவு பூண்டு மடம் புகுந்தார். துறவு பூண்டு மடம் புகுமுன் தைராப் படைக்குடும்பத்திலிருந்த தகமோச்சியின் வழி வந்த ததாமோரி (Tadamori) என்ற வீரனை அழைத்துத் தன் உவளகப் பெண்களைச் சொந்தமாகத் துய்த்துக் கொள்ள இசை வளித்தார். இந்தத் ததாமோரிக்கும் உவளகப் பெண்ணொருத் திக்கும் பிறந்தவன் தைராநோகியோமோரி (Taira-No-Kiyomori) என்பவனாவான். இவன்தான் தைரா மரபினரில் தலை சிறந்த வன். இவன் காலத்தில் கொரிய நாட்டுக் கடற்கொள்ளைக்காரர் கள் ஜப்பான் நாட்டின் கீழைக்கரையோரங்களில் கப்பல்களைக் கொள்ளையிட்டனர். அவர்களை அடக்குவதற்கு 74ஆம் மிகாடோ வான தோபா (Toba = 1108-1156 A. D.) என்பவர் தைராநோ கியோ மோரியை அனுப்பினார். இதில் கியோமோரி பெருவெற்றி கண்டான். தனது ஆறுவது அகவையில் பட்டமேற்ற தோபா தனது 26ஆம் அகவையில், அஃதாவது கி. பி. 1123ஆம் ஆண்டில் பதவி துறந்தார். அவர் பதவி துறந்து மடம் புகும்போது அவர் தந்தையான ஓரிகவாவும், அவர் பாட்டனாரான சிராகவாவும் மடத்தில் உயிரோடிருந்தனரென்பது குறிப்பிடத் தக்கது. இவருக்குப் பின் 75ஆம் மிகாடோவான இவருடைய மகன் சூதொகு (கி. பி. 1124-1164 A. D.) தனது ஆறுவது அகவையில் பட்டமேற்றுப் பதினேழாவது அகவையில் பட்டத்தைத் துறந்தார். இவருக்குப் பின் இவருடைய தம்பியான கொனோயி (Konoye = 1142-1155 A. D.) என்பவர் ஜப்பானின் 76ஆம் மிகா டோவானார். இவர் பட்டமேற்கும் போது இவருடைய அகவை நான்காகும். இவர் பதின்மூன்று ஆண்டுகள் ஆண்டு தனது பதினேழாவது அகவையில் மாண்டார். இவருக்குப்பின் இவரு டைய தம்பியான கோசிராகவா (Go-Shirakawa = 1156-1192 A.D.) என்பவர் பட்டமேற்றார். இவர் பட்டமேற்கும்போது பிறங்கடை (வாரிசு) யுரிமைப்போர் ஒன்று தோன்றியது. அஃதாவது 75ஆம் மிகாடோவான சூதொகு கி. பி. 1142ஆம் ஆண்டில் தனது 23ஆம் அகவையில் பதவி துறக்கும்போது, தனது மகனை கைக் குழந்தையைத் தனக்குப்பின் பேரரசராக அமர்த்தாமல் தன் தம்பி யாகிய கொனோயியைப் பேரரசராக அமர்த்தி, கி. பி. 1142ஆம் ஆண்டில் பட்டம் சூட்டினார். இந் நிகழ்ச்சிக்குப் பின் பிறங்கடை

யுரிமை தந்தைக்குப் பின் மகன் என்ற முறை மாறி, தமைய னுக்குப்பின் தம்பி என்ற முறையில் செல்லத் தொடங்கியது. ஆகவே சூதொகுவின் மைந்தன் பேரரசராக வேண்டுமென்று ஒரு சிலரும் கோசிராகவாதான் பேரரசராக இருக்கவேண்டுமென்று ஒரு சிலரும் வாதிட்டார்கள். இதனுல் அரண்மனையில் இரண்டு கட்சிகள் தோன்றின. மினுமொத்தோக்கள் முன்னதைத் தாங்கி யும் தைராஞேகியோமோரி பின்னதைத் தாங்கியும் வரிந்து கட்டி ஞர்கள். இதனைத் தீர்க்க இவ்விரு கட்சிகளும் படையேந்திப் போர்க்களம் புகுந்தன. கி. பி. 1156ஆம் ஆண்டில் கியோமோரி யின் கட்சி வெற்றி பெற்றது. இவ் வெற்றிக்குப்பின் கியோமோரி யின் புகழும், வலிமையும் அதிகரித்துக் கொண்டே சென்றன. முன்னுள் பேரரசர் சூதொகுவும், கொஞேயியும் கியோமோரியால் நாடு கடத்தப்பட்டனர். அவ்வாறு நாடு கடத்தப்பட்டதில் சானுகி என்னும் மாநிலத்தில் சூதொகு பட்டினியால் மாண்டார். மினுமொத்தோக்கள் பலரும் நாடு கடத்தப்பட்டனர். அவர்களைச் சேர்ந்த தாமிதொமோ (Tametomo) என்பவர் ரையுகியூ (Ryukyu) தீவுக் கூட்டத்திற்குத் தப்பியோடி, ஆங்கோர் ஆட்சியை நிறுவி அத் தீவுக் கூட்டங்களின் அரசராஞர்.

தப்பியோடிய தாமிதொமோவின் தம்பியான யொசிதொமோ (Yoshitomo) மினுமொத்தோக்களின் தலைவனுஞன். இவன் மேற் படி பிறங்கடையுரிமைப் போரில் தைராக்களின் தலைவனை கியோ மோரியை ஆதரித்தான். ஆனுல், கியோமோரி வெற்றி கண்டதும், தன் குடும்பத்து மினுமொத்தோக்களை ஈவிரக்க மின்றிக் கொல்லுவதையும், நாடு கடத்துவதையும் பொறுது கியோமோரியைத் தன் சூழ்ச்சியால் கொல்ல நினைத்தான். இதனை யறிந்த கியோமோரி யொசிதொமோவையும் அவருடைய குடும்பத்தையும் அடியோடழிக்க ஆணையிட்டான். கி.பி. 1159ஆம் ஆண்டில் யொசிதொமோ தன் உயிருக்காக எவ்வளவோ மன்ருடியும் அவனை விடாமல் கொலை செய்தான். இதற்குப்பின் தன்னையெதிர்த்த எல்லாரையும் வேறுபாடின்றி அடக்கியொடுக்கி ஒழித்தான். இவ்வாறு மினுமொத்தோக்களை ஒடுக்கி வெற்றி கண்டபின் கியோமோரி எய்யன் கோநகருக்குச் சென்று ஃபூசிவாராக்களை அகற்றி அதிகாரத்தைக் கைப்பற்றினுன்.

## தைராக்களின் ஆளுமை

**(கி. பி. 1159—1185)**

அரசியலதிகாரத்தைக் கைப்பற்றிய கியோமோரி தனது தைராக்களை எய்யன் கோநகரில் குடியேறச் செய்தான்.

அவர்கள் அனைவருக்கும் அழகான மாளிகைகளைக் கட்டி அரச வின்பத்தில் மிதக்கச் செய்தான். இதுவரை ஃபூசிவாராக்களின் பெண்களை மணந்து வந்த ஜப்பானிய இளவரசர்களைத் தன் குடும்பத்துப் பெண்களை மணக்கும்படிச் செய்தான். தன்னுடைய மகளை 77ஆம் மிகாடோவான கோசிராகவா என்பவருக்கு மணம் செய்வித்துத் தானே மிகாடோவின் தலைமையமைச்சனானான். ஃபூஜிவாராக்கள் பெற்று வந்த எல்லாப் பதவிகளையும், பட்டங்களையும் இனித் தைராக்கள் துய்க்கலானார்கள். இவர்களின் செல்வாக்கும், அதிகார வளர்ச்சியும் ஏறத்தாழ 26 ஆண்டுகள் சிறப்புற்று விளங்கின. இதற்கும் ஒரு முடிவுக் காலம் நெருங்கிக் கொண்டு வந்தது.

## மினமோத்தோக்கள் எழுச்சி

மினமொத்தோக்களின் தலைவனான யொசிதொமோவைக் கியோமோரி கொலை செய்து விட்டான் என்பதைப் பார்த்தோம். அக் கொலைக்குப்பின் அவனுடைய இளைய மனைவி தொகிவா (Tokiwa) என்ற பேரழகியும், அவளுக்குப் பிறந்த மூன்று பிள்ளைகளும் தப்பி யோடிவிட்டார்கள். தொகிவாவின் தாயாரும், யொசிதொமோவின் முதல் மனைவியின் மகனை பதின்மூன்ற கவை நிரம்பிய யொரித்தொமோவும் (Yoritomo)கியோமோரியிடம் கைதியானார்கள். தன் தாயை இழந்து வாடிய தொகிவா அவளை எப்படியும் கியோமோரியிடமிருந்து மீட்க வேண்டுமென உறுதி பூண்டாள். தன் மூன்று பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு எய்யன் கோநகருக்குச் சென்று கியோமோரியிடம் தன் தாயை விடுதலை செய்யுமாறு மன்றாடினாள். அப்பொழுது அவளது மூன்றாவது பிள்ளையான யொசித்சுனே (Yoshitsune) கைக்குழந்தையாக இருந்தான். கைக்குழந்தையோடு வந்து தன் தாய்க்காக மன்றாடிய தொகிவாவின் பேரழகில் மயங்கி விட்ட கியோமோரி, அவளைத் தன் காதல் கிழத்தியாக்கிக் கொண்டான். இதற்குப்பின் அவளது மூன்று பிள்ளைகளையும், மூத்தாளின் பிள்ளையாகிய யொரித்தொமோவையும் தனித்தனி மடங்களில் சேர்த்துப் பாதுகாப்போடு வளர்க்கச் செய்தான். தனது பதினாறாவது அகவையில் அங்கிருந்து தப்பியோடி முட்சு என்னும் மாநிலத்தை அடைந்தான் யொசித்சுனே.

அம் மாநிலம் முழுவதும் காட்டு விலங்காண்டிகள் அதிகம் வாழ்ந்தனர். இவன் இவர்களிடம் சிறந்த போர்ப் பயிற்சியைப் பெற்றான்; பின்னர் அம் மாநிலப் போர்ப் படையில் சேர்ந்து மிகக் குறுகிய காலத்தில் ஒரு சிறந்த தேசியப் போர் வீரனானான்.

யொசித்தொமோவின் மூத்த மகனுன யொரித்தொமோவை, கியோமோரி தனது நெருங்கிய நண்பனும் தளபதியுமான ஓசோ தொகிமசா (Hojotokimasa) என்பவனுடைய பாதுகாப்பில் விட்டிருந்தான். யொரித்தொமோவின் பேரழகையும், தோள் வலிமையையும் அறிவுக் கூர்மையையும் கண்ட தொகிமசா, தன் மகளான மசாகோவை அவனுக்கு மண முடித்து வைத்தான். யொரித்தொமோ தன் தந்தையைக் கொன்று, தன் குலத்தை வேரறுத்த கியோமோரியைப் பழிக்குப்பழி வாங்கத் திட்டமிட்டான். இதற்காகக் கமுக்கமாக (இரகசியமாக) சிதறிக் கிடந்த தன் இனத்தை ஒன்று சேர்த்தான். ஏறத்தாழ முந்நூறுபேர்கள் இவன் தலைமையில் திரண்டு நின்றார்கள். இதனையறிந்த கியோமோரி யொரித்தொமோவைக் கொல்லும்படிக் கட்டளையிட்டான். யொரித்தொமோவும், அவனுடைய ஆள்களும் உயிர் தப்பி ஆவாத் தீவுக்கு ஓட்டம் பிடித்தனர்.

அங்குச் சிறிது காலத்திற்குள் யொரித்தொமோவின் படையாள்களின் எண்ணிக்கை பெருகியது. இச் சமையத்தில் யொசித்சுனே தனது வலிமைமிக்கப் பெரும்படையைத் திரட்டிக் கொண்டு தன் அண்ணனைச் சந்திக்க வடக்கிலிருந்து புறப்பட்டு வந்தான். அண்ணனும் தம்பியும் தங்களுடைய படைகளுடன் காமகுரா (Kamakura) என்னுமிடத்தில் கி. பி. 1180ஆம் ஆண்டில் ஒன்று சேர்ந்தனர். இவ்வாண்டிலிருந்து இவ்விடம் தொடர்ந்து மினமொத்தோக்களின் படைத்தளமாகவும், அலுவலகமாகவும் திகழ்ந்தது. இவ்விடம் எய்யன் கோநகருக்கு அப்பால் வெகு தொலைவில் சின்னஞ் சிறு மலைத் தொடர்களைத் தாண்டி, காடுமலைகளுக்கிடையில் இருந்ததால் கியோமோரிக்குத் தன்னையழிக்க உருவாகி வரும் மினமொத்தோக்களின் நடவடிக்கைகளைப் பற்றிய செய்தி எட்டவில்லை. பின்னர் கியோமோரி இதனையறிந்தும், இத்தகைய கடினமான மலைத்தொடர்களைத் தாண்டியும், அகோனி என்னும் பெருங் கணவாயைத் தாண்டியும் வரமுடியவில்லை. ஆயினும் தன் எதிரிகளை எப்படியும் மாய்த்தே தீர வேண்டும் என்று முடிவு கட்டிய கியோமோரி அதற்கான ஏற்பாடுகளைத் தீவிரமாகச் செய்து கொண்டிருக்கும் பொழுது திடீரெனத் தனது 64ஆம் அகவையில் கி. பி. 1181ஆம் ஆண்டில் காலமானன்.

மினமொத்தோ மேகங்கள், அன்று தோன்றிய 'தைரா' கதிரவனைக் கவ்விக் கொண்டு வருவதை நன்குணர்ந்த கியோமோரி வெகு விரைவிலேயே தைராக்களின் ஒளி மங்கி மறைவது உறுதி எனக் கண்டான். ஆயினும் தன் சாவுப் படுக்கையில் "நான் இறக்கிறேனே என்பதற்காக வருந்தவில்லை; ஆனல், நான்

இறப்பதற்கு முன் அந்த யொரித்தொமோவின் தலையைத் துண்டிக்கவில்லையே என்பதற்காக வருந்துகிறேன். (நான் இறந்துவிட்ட பிறகு புத்தருக்குப் பூசையிட்டுப் புனித நூல்களை வாசித்து எனக்காக வேண்டிக் கொள்ளாதீர்கள். அதற்குப் பதிலாக யொரித்தொமோவின் தலையை வெட்டி என் கல்லறைக்கு மேலே தொங்க விடுங்கள்' என்று தன் மக்களை வேண்டிக் கொண்டு இறந்தான்.)

(கியோமோரியின் இறப்புச் செய்தியைக் கேட்ட மாவீரன் யொரித்தொமோ பூரிப்படைந்து போனான்.) வெகு விரைவில் தன் படையெடுப்பைத் தொடங்கித் தைராக்களின் குருதியைத் தரையில் ஓடச்செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தான். கியோமோரிக்குப் பின் அவன் மைந்தன் முனிமோரி (Munemori) தைராக்களின் தலைவனானான். தன் தந்தையின் மரண விருப்பத்தையும் வேண்டுகோளையும் நிறைவேற்றுவதில் அவன் முனைந்தான். தன் படைகளை ஒன்று திரட்டி மினமொத்தோக்களின் படைத்தளமாகிய காமகுராவுக்கு அனுப்பினான். இதற்குள் மினமொத்தோக்களின் படைகள் முந்திக் கொண்டு யொரித்தொமோவின் மற்றொரு தம்பியான யொசிநகாவின் (Yoshinaka) தலைமையில் கோநகராகிய கியோத்தோவைத் தாக்க முற்பட்டது. எதிர்த்து நின்ற தைராப் படைகளை யொசிநகா தோற்கடித்துக் கோநகருக்குள் புகுந்தான். தலைநகர் பறிபோவதை அறிந்த தலைமையமைச்சன் முனிமோரி தனது பேரரசரான அந்தொகுவையும், (கி. பி. 1181-85) மற்றும் அரண்மனை ஆள்களையும் அழைத்துக்கொண்டு சிக்கொக்குத் தீவின் வடமாநிலமான சானுகியை அடைந்தான். வெற்றிநடை போட்டு வரும் மினமொத்தோ வீரனான யொசிநகாவைத் துறவு மாமன்னர்களான கோசிராகவாவும், தககுராவும் 'வருக வருக'வென்று வரவேற்றார்கள். தலைநகரை விட்டோடிய 81ஆம் மிகாடோவான அந்தொகு அகவையில் மிகச்சிறியவர். ஆயினும் அரியணையை விட்டு அவர் ஓடிவிட்டதால் அவர் துறவு பூண்டதாகக் கொண்டு, ஏழாண்டே நிரம்பிய அவருடைய தம்பியான கோதோபாவை (Gotoba = 1186-1239 A.D.) 82ஆம் மிகாடோவாக்கினர்.

தலைநகரை வெற்றிகண்ட யொசிநகா தன் வெற்றிப் பெருமிதத்தால் அண்ணன் யொரித்தொமோவை மறந்தான்; ஜப்பானிய அரசின் படைப் பட்டமாகிய சேயி-ஐ-சோகன் (Sei-I-Shogun) என்னும் பட்டத்தை அவரின் இசைவின்றியே தான் வைத்துக் கொண்டான்; வெளிப்படையாகவே தான் ஆட்சியின் தலைவனென்று கூறிக்கொண்டான். இதனையறிந்த யொரித்

தொமோ திடுக்குற்று, 'அந்த இரண்டகியைச் சாய்த்து வாருங்கள்' எனக்கூறிப் படையொன்றை அனுப்பினுன். அப்படை பிவா (Biwa) என்னும் ஏரிக்கருகில் யொசிநகாவை முறியடித்தது. இத் தோல்விக்குப்பின் யொசிநகா தன் உறவினர்கள் முகத்தில் விழிக்க விரும்பாமல் தற்கொலை செய்துகொண்டான். இப் படையெடுப்பில் யொரித்தொமோவின் படைக்குத் தலைமை தாங்கிச் சென்றவன் அவனுடைய கடைசித் தம்பியான யொசித்சுனே ஆவான். இவன் யொசிநகாவின் தற்கொலைக்குப்பின் ஆங்காங்கே எழுந்த சில புரட்சிகளை அடக்கித் தலைநகரைத் தன் வயப்படுத்திக் கொண்டான்.

தந்நோவுரா கடற்போர் *(கி.பி. 1185)*

யொசிநகாவை ஒழித்துக் கோநகராகிய கியோத்தோவில் அமைதியை நிலைநாட்டியபின் யொசித்சுனே தப்பியோடிய தைராக்களை ஒழிக்கப் புறப்பட்டான். வழியில் யோகோ என்னுமிடத்திலிருந்த அவர்களின் காவற்கோட்டையை அழித்துவிட்டுத் தைராக்கள் தங்கள் அரசரோடு அடைக்கலம் புகுந்துள்ள சானுகி என்னும் இடத்தை நோக்கிப் புறப்பட்டான். யொசித்சுனேயின் படைகள் தங்களை நோக்கி வருவதையறிந்த முனிமோரியின் படைகளும், பேரரசரும் அரசக் குடும்பத்தினரும் கப்பல்களிலேறிக் குயூசுத் தீவிற்குத் தப்ப முயன்றனர். ஆனுல், அவர்களைப் பின் தொடர்ந்த மினுமொத்தோ படைகள் சிமொனுே சக்கி என்னும் ஊருக்கருகில் மடக்கின. சிமொனுே சக்கி என்பது ஒன்சுத் தீவின் கடையில் மேற்குப் பகுதியிலுள்ளதாகும். சிமொனுே சக்கிக்கு அருகிலுள்ள உட்கடற்பகுதியில் தந்நோவுரா (Dan-no-uro) என்னுமிடத்தில் தைராக்களுக்கும் மினுமொத்தோக்களுக்கும் கி.பி. 1185ஆம் ஆண்டில் ஒரு கடிய கடற்போர் நடந்தது. இந் நாவாய்ப் போரைப் பற்றி நிஃகோன் குவாய்ஃசி (Nihon-Gwaishi) என்னும் நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. தைராக்களிடமும், மினுமொத்தோக்களிடமும் முறையே ஐநூறு, எழுநூறு சீனப் போர்க் கப்பல்கள் இருந்தனவென்றும், தைராக்களின் கப்பல்களில் எண்ணிறந்த பெண்களும், குழந்தைகளும் இருந்ததால் வெற்றி வாய்ப்பை இழந்து தோற்ருர்களென்றும் இந் நூல் கூறுகின்றது. இக் கடற் போரில் வில், அம்பு, வாள், ஈட்டி முதலிய படைகளே பயன்படுத்தப்பட்டன. பெரும்பாலான நிகழ்ச்சிகளில் படையின்றியே வீரர்கள் மோதிக் கொண்டனர். தைராக்கள் பலரும் கொல்லப்பட்டனர். சிலர் தப்பித்து ஓடிக் குயூசுவில் மறைந்து வாழலாயினர். இவர்களின் வழிவந்தவர் இன்றும் குயூசுத்தீவில் இருக்கின்றனர். முனிமோரி கைது செய்யப்பட்டுப் பின் கொல்லப்பட்டான். அவனுடைய மனைவியும், மிகாடோ அந்தொகுவும்,

அவருடைய தாயும், பாட்டியும் கடலில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டனர். தைராக் குடும்பத்தின் ஆண்களும், பெண் களும், குழந்தைகளும் கண்ட கண்ட இடத்தில் கண்ட துண்ட மாக்கப்பட்டனர்.

தந்நோவுரா நாவாய்ப் போர் ஜப்பானிய வரலாற்றில் ஒரு சிறப்பு மிக்கப் போராகும். கி. பி. 1588ஆம் ஆண்டில் ஐரோப் பாவில் சுபானிசுகாரர்களுக்கும், பிரிட்டானியருக்குமிடையே நடந்த நாவாய்ப் போரைவிட (Spanish Armada) இது நடந்த காலத்தையும் இடத்தையும் நோக்கின் வரலாற்றுச் சிறப்பு மிக்க தாகும். இப் போரினுல் நெடுநாளாகத் தைராக்களுக்கும், மினு மொத்தோக்களுக்குமிடையிலிருந்த பகை முடிவுற்றது. தைராக் கள் ஒடுக்கப்பட்டனர். தைராக்களின் தலைவனுன கியோமோரி எவ்வாறு மினுமொத்தோக்களைப் படுகொலை புரிந்தும், நாடு கடத்தியும் ஒடுக்கினுனே அதைப் போலவே அவனுடைய இனத் தாரும் மினுமொத்தோக்களினுல் ஒடுக்கப்பட்டனர்.

## யொசித்சுனேயின் முடிவு

இரண்டகி யொசி நகாவைக் கொன்று புகழ் பெற்ற தந்நோவுரா கடற்போரில் வெற்றி வாகை சூடி, எதிரிகளை இருக்குமிடம் தெரியாமல் மாய்த்து, வெற்றிப் பெட்டகத்தைத் தன் அண்ணன் யொரித்தோமோவின் காலடியில் வைத்து வணங்கிய யொசித்சுனே, இரங்கத் தக்க முடிவுக்கு ஆளானுன். யொசிநகாவின் இரண்டகச் செயலை (துரோக) நினைவு கூர்ந்த யொரித்தொமோ தன் கடைத் தம்பியான யொசித்சுனேயும் அவ்வாறு இரண்டகியாகி விடுவானே என்ற ஐயப் பேயால் அலைக் கழிக்கப்பட்டு அவனைத் தன் புதிய தலைநகராகிய காமகுராவுக்குள் நுழையக் கூடாதெனக் கட்டளையிட்டான். அவனை ஒரு இரண்டகி யென்றும் அவன் தன்னலத்திற்காகவே எதிரிகளை மாய்த்தா னென்றும், தன்னையும் மாய்க்கும் கரவோடு காமகுரா நோக்கி வருகிறுனென்றும் யொரித்தொமோ அவன்மீது சாட்டிய குற்றங்கள் இன்றும் மம்புகுசி என்னும் மடத்தில் எழுதப் பட்டுள்ளன. மனமுடைந்த யொசித்சுனே தன் பழைய ஆண்டையான முட்சு மாநில ஆளுநரிடம் அடைக்கலம் புகுந்தான். ஆளுநரின் மகன் யொரித்தொமோவுக்கு அஞ்சி அடைக்கல மடைந்தவனைக் கி. பி. 1189ஆம் ஆண்டில் கொன்று விட்டான். அப்பொழுது யொசித்சுனேயின் அகவை முப்பதேயாகும். இன்றும் ஜப்பானியர் தன் அண்ணனுக்கு என்புமுடைத்தாக்கிய இவ் வீர மறவனை உடன்பிறப்புப் பாசத்திற்கு எடுத்துக் காட்டாய்க் கொள்ளுகின்றனர்.

# 4. சோகன்களின் ஆட்சி
## (Shogunate)

### காமகுராக் காலம் (கி. பி. 1192-1333)

### மினமொத்தோக்களின் ஆளுமை (கி.பி. 1192-1198)

### யொரித்தொமோவின் ஆட்சி (கி.பி. 1192-1198)

இரட்டையாட்சி (Dual Government)

தைராக்களின் வீழ்ச்சிக்குப் பிறகு மினமொத்தோக்கள் மீண்டும் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். யொரித்தொமோ அவ்வாறு தான் கைப்பற்றிய ஆட்சியை மாற்றி யமைத்தான். புதிதாக ஆட்சிப் பீடமேறிய மினமொத்தோக் களுக்குத் தொடக்கத்தில் பலவகை எதிர்ப்புகள் இருந்தன. அவற்றையெல்லாம் யொரித்தொமோ மிக எளிதாகச் சமாளித்து விட்டான். 82ஆம் மிகாடோவான கோதோபாவைப் (Go-Toba= 1186-1239 A.D.) பெருமைப் படுத்தி, துறவு மா மன்னர் கோசிரா கவாவின் அறிவுரைகளை ஏற்றுத் தனது ஆட்சியைத் தொடங் கினன். இப் புதிய ஆட்சியைச் செவ்வனே அமைத்துச் செயல் படுவதில் இவனுக்குப் பெரிதும் உறுதுணையாயிருந்தவன் இவனுடைய மாமனுரான ஒசோ தொகிமசா (Hojo Tokimasa) என்பவனுவன். இவனுடைய புது முறை ஆட்சிக்கு இடையூருக நிற்பவர்கள் இன்றும் அரசவையிலும் வெளியிலும் தங்கள் செல் வாக்கை நிலை நாட்டிக் கொண்டிருக்கும் ஃபூசிவாராக்கள் என்பதை நன்குணர்ந்த யொரித்தொமோ அவர்களைப் பதவியி லிருந்தும், நிலக் கிழமை முறையிலிருந்தும் நீக்கவில்லை. அதற்கான ஆற்றல் தொடக்கத்தில் தனக்கில்லை யென்பதை உணர்ந்திருந் தான். அடுத்த படியாகக் குமுகாயத்தில் பெருஞ் செல்வாக்குடன் வாழும் புத்தத் துறவிகளையும், அவர் தம் மடச் சொத்துக்களையும், படையேந்தி அரசியலில் ஈடுபடும் அவர்களது செய்கைகளையும் கண்டிக்காமல் விட்டு விட்டான். இவ்வாறு ஜப்பானியர் தங்கள் பேரரசரைத் தெய்வ மகன் எனக் கருதிப் போற்றும் புனிதத் தன்மைக்குப் புனுகிட்டுக் காத்து அவர்களின் மனத்திலே இடம்

பெற்றும், தைராக்களைக் கொன்ற தன் இரத்தக் கறை படிந்த கைகளால் ஆட்சியை நடாத்தும் முறையைக் கண்டிக்கத் தகுதி வாய்ந்த புத்தத் துறவிகளின் நல்வாழ்த்தைப் பெற்றும், பெருநிலப் பரப்பையும் பெரும் பதவிகளையும் பிடித்துக் கொண்டுள்ள, கிழார் களின் ஆதரவைப் பெற்றும், யொரித்தொமோ தன் ஆட்சியைத் தொடங்கினன். கி.பி. 1190ஆம் ஆண்டிலும், 1195ஆம் ஆண்டிலும் தலைநகராகிய கியோத்தோவுக்குச் சென்று மாமன்னரைப் பணிந்தும், துறவு மா மன்னரின் வாழ்த்துப் பெற்றும் தன் இருப்பிடம் சேர்ந்த இவனைக் கொடியவர்களும், கொடுமைப் படுத்தப்பட்டவர்களுங்கூடப் போற்றினர்கள். மினமொத்தோக்கள் ஆட்சியேற்றதை ஒரு பெரும் விழாவாக ஒரு மாத காலம் கொண்டாடிக் கோநகரத்து மக்களை மகிழ்வடையச் செய்தான். மிகாடோவும், மக்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ் கினர். யொரித்தொமோவைப் பலவாறு புகழ்ந்து விருது பலவும் கொடுத்த மிகாடோ அவனைக் கி.பி. 1192ஆம் ஆண்டில் மீண்டும் பெருமைப் படுத்த எண்ணினர். அவ் வாண்டில் யொரித்தொ மோவுக்கு செய்-ஐ-சோகன் (Sei-i-Shogun) என்ற பட்டத்தை அளித்தார். இதற்குக் காட்டு விலங்காண்டிகளை அடக்கும் தளபதி என்று பொருள். இதையே சுருக்கமாக சோகன் (Shogun) என்கி ரேம். இதனடியாகப் பிறந்ததுதான் படையாட்சி அல்லது இராணுவ ஆட்சி (Shogunate) ஆகும். இவ்வாறு சோகன் என்ற பட்டத்தை அளிக்கும் முறை ஜப்பானில் பண்டைக்கால முதலே இருந்திருக் கிறது. சூசன் மிகாடோவாக இருந்தபோது தனது நாட்டை நான்கு பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிற்கும் சோகன் எனப்படும் படைத் தளபதிகளை யமர்த்தி ஆண்டாரென அறி கிரேம். யொரித்தொமோவின் தம்பியான யொசிநகா, யொசித் சுனேவை வென்று கோநகரைக் கைப்பற்றிய பின் தனக்குத் தானே சோகன் பட்டத்தை வைத்துக் கொண்டான் என்பதையும் அறிந்தோம்.

சோகன் பட்டத்தைப் பெற்ற யொரித்தொமோ தன் இருப் பிடமாகிய காமகுரா சென்று தன் ஆட்சியைத் தொடங்கினன். இவ்வாறு அவனுடைய படையாட்சியின் தலைமைச் செயலகமாக காமகுரா அமைந்ததால் அதனைப் படைகளின் பாசறை (Bakufu) என்கிரேம். யொரித்தொமோ தன் ஆட்சியில் படைத்துறை, ஆட்சித்துறை, முறை வழங்கும் துறை ஆகிய மூன்று துறைகளை ஏற்படுத்தினன். ஒவ்வொரு மாநிலத்திலும் ஆளுநர்களை அமர்த்தி அவர்களைத் தன்னுடைய மேற்பார்வையின் கீழ் வைத்துக் கொண் டான். அவ்வாளுநர்களுக்குத் தேவையான படைகள் அனுப்ப பட்டன. நிருவாகத்தை இம் மாநில ஆளுநர்கள் இப் படைகளின்

உதவியைக்கொண்டே கவனித்து வந்தனர். இத்தகைய ஆளுநர்களுக்குப் 'பாதுகாவலர்' (Shugo) என்று பெயர். அவர்களுடைய படைகளின் தேவைக்கேற்றவாறு விளைநிலங்களின் மீது வரி விதிக்கப்பட்டு, தண்டப்பட்டது. அவ்வாறு வரித் தண்டல் செய்யத் தனியதிகாரிகள் அமர்த்தப்பட்டனர். அவர்களுக்கு 'மேற்பார்வையாளர்கள்' (Jito) என்று பெயர். இவ்வாறு அமர்த்தப்படும் மேற்பார்வையாளர்களில் சிலர் அரசு பணியாளர்களாகவும், தனியாள்களாகவுமிருப்பர். இவர்கள் வரிப் பணம் தண்டச் செல்லுமிடங்களுக்கெல்லாம் படையேந்திய போர் வீரர்கள் உடன் செல்வர். இம் முறையால் வரி ஏய்த்து வந்தவர்களும், வரி விலக்குப் பெற்றவர்களும் கட்டாயப்படுத்தப் பட்டு வரி செலுத்தினர். இதனால் பல எதிர்ப்புகளும், கிளர்ச்சிகளும் ஆங்காங்கே எழுந்தபோதிலும் கருவியேந்திய படைகள் முன் அவை பொய்த்துப்போய் விட்டன. மாநிலப் பாதுகாவலர்களும், மேற்பார்வையாளர்களும் தங்கள் கடமையினின்று பிறழாதவாறு அவர்களை, யொரித்தொமோ தானே தன்னுடைய நேரடிப் பார்வையின் கீழ் வைத்துக் கொண்டான். அவர்களைக் கண்காணிக்கும் தலைமைப் பாதுகாவற்படைத்தலைவர், தலைமை மேற்பார்வையாளர் ஆகிய பதவிகளைத் தானே தாங்கி வந்தான்.

வரி விதிக்கும் அதிகாரத்தையும், தண்டும் அதிகாரத்தையும் யொரித்தொமோ மிகாடோவிடமிருந்து பெற்றான். அவ்வாறு தண்டப்படும் வரிகளை மிகாடோவின் கருவூலத்திற்கு மொத்தமாக அனுப்பாமல், தன் படையினருக்கும், நயன்மை மன்றங்களுக்கும் தானே செலவிட்டான். படை, நயன்மை, வருமானம் ஆகியவை தன் கீழ் வந்தபின் மடங்களின் உரிமைகளிலும் தலையிட்டு, மடத் தலைவர்கள் படையேந்துவதையும் அரசியலில் நுழைவதையும் தடுத்தான். எதற்கும் மிகாடோவிடமிருந்து முன்னிசைவு பெற்றுவிடுவது இவன் வழக்கம். எனவே பூசல்கள் அதிகமாக எழவில்லை. இத்தகைய இரட்டையாட்சி முறை தொகுகவா சோகன்கள் அரசியலைத் துறந்து, மீண்டும் மன்னராட்சி மறுவாழ்வு பெற்ற கி.பி. 1868 வரை நீடித்திருந்தது.

படையாட்சியின் தந்தையாக விளங்கிய யொரித்தொமோ கி.பி. 1198ஆம் ஆண்டு சகாமி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஒரு புதிய பாலத்தைப் பார்வையிட்டுத் திரும்பும்போது தன் குதிரையின் மீதிருந்து விழுந்து படுகாயமுற்றான். அடுத்த ஆண்டு தனது 53ஆம் அகவையில் மாண்டான். தன்னலமும், சுரண்டலும், கொள்ளையும், கொடுஞ் செயலும், அரண்மனை யின்பமும், அன்றாடம் கஞ்சிக்கழும் மக்களும், பெருநிலக் கிழார்களும்

ஒதுங்க இடமற்ற ஏழைகளும் பின்னிக் கிடந்த ஜப்பானில் தன் படையாட்சியால் நயன்மை, நேர்மை, ஒழுக்கம், அமைதி ஆகியவற்றை நிலைநாட்டிய யொரித்தொமோவின் இறப்புக்குப் பின் சீர்கேடுகள் மீண்டும் துளிர் விட்டன. இவன் இன்னும் இருபது ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் ஜப்பான் நாட்டின் வரலாறே வேறு வகையாக மாற்றப்பட்டிருக்கும்.

இத்தகைய படையாட்சி முறையில் யொரித்தொமோவுக்கு முன்னரே நல்ல பயிற்சி இருந்தது. கி.பி. 1184ஆம் ஆண்டிலேயே அவன் ஒரு படையாட்சி மன்றத்தை ஏற்படுத்திக் காமகுராவைச் சுற்றியுள்ள மாவட்டங்களை ஆளுவதற்கான ஆட்சி முறைகளைப் பற்றி அவ் வவையில் விவாதிக்கச் செய்தான். அவ் வவையின் தலைவனாகவும், அவனது வலக் கையாகவும் திகழ்ந்தவன் ஒயி-ஞோ-ஃ கிரோமொதோ (Oye-no-Hiromoto) என்பவனாவான். ஓர் உயரற மன்றத்தையும் அமைத்துச் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்டவும், அமைதிக்குக் கேடு விளைவிக்கும் கொள்ளைக் கூட்டத்தை அடக்கவும் ஏற்பாடு செய்தான்.

கி.பி. 1192ஆம் ஆண்டில் தான் சோகன் பட்டம் பெற்றதும் யொரித்தொமோ, ஐந்து மாநிலங்களுக்கு ஆளுநர்களை அமர்த்தும் அதிகாரத்தை மிகாடோவிடமிருந்து பெற்றான். தம் குடும்பத்தி லிருந்தே அவ் வைந்து ஆளுநர்களையும் அமர்த்தி, இவர்களைத் தன் நேரடிப் பார்வையின் கீழ் வைத்துக் கொண்டான். இவர் களுக்கு, மாநில ஆட்சிக்கு உறுதுணையாகத் தனிப்படைகளையும், தளபதிகளையும் தானே தேர்ந்தெடுத்து அனுப்பினான். இவ்வாறு அனுப்பப்பட்டப் படையதிகாரிகள் பிற்காலத்தில் கொஞ்சங் கொஞ்சமாக ஆளுநரின் அதிகாரங்களைக் கைப்பற்றித் தாங்களே மாநிலத் தலைவர்களாகி விட்டார்கள். மாநில ஆளுநர்களும், துணை ஆளுநர்களும் அரச குடும்பத்திலிருந்தே அமர்த்தப்படுவது வழக்கம். ஆனால், அத்தகைய மரபு முறையை மாற்றி யொரித் தொமோ அப் பதவிகளைத் தன் குடும்பச் சொத்துக்களாக்கிக் கொண்டானென்பதும் குறிப்பிடத் தக்கதாம்.

புதிதாக எழுந்த பாதுகாவலர் பதவியும், மேற்பார்வையாளர் பதவியும் நாளடைவில் தந்தைக்குப்பின் மகன் என்னும் கொடி வழிப் பதவிகளாயின. இப் பதவியாளர்களே நாளடைவில் நிலமானிய, படைமானிய வழியினராக மாறிவிட்டனர். இப் படையாட்சியின் கீழ்ப் பொதுத் துறை (Civil) கொண்டு வரப்படவில்லை. அத் துறையின் கீழுள்ள ஆளுநர்களும், பெரிய அதிகாரிகளும் சீன முறையில் ஏற்படுத்தப்பட்ட பொதுத்துறை அதிகாரத்தை நிருவகித்து வந்தார்கள். அதுவும் அக்

காலத்தில் சரியாக இயங்கவில்லை. இப் பொதுத்துறை அதிகாரிகளின் பதவிகளும் பேரரசரின் அவையிலிருந்த பிரபுக் களின் (Kuges) பதவிகளும், அரச குடும்பத்தாரின் மதிப்புப் பதவிகளும், கொடிவழிப் பதவிகளாக இருந்தன. இவர்கள் யாவரும் தங்கள் மரபு வழிப்படிக் கோநகரில் உயர்வாக வாழ்ந்து வந்தார்கள். யொரித்தொமோ முறை வழங்குந் துறையைப் படையாட்சியின் கீழ்க்கொண்டு வந்தானென்பதைக் கண்டோம். ஆனுல், அஃது காமகுராவைச் சுற்றிலுமுள்ள மாவட்டங்களில் மட்டுமே செயல்பட்டது. மேற்கு மாநிலங்கள் யாவற்றிலும் கியோத்தோவைத் தலைமை அற மன்றமாகக் கொண்டு, பொதுத் துறையினரால் நயன்மைத்துறை கண் காணிக்கப் பட்டது. சமயத்துறையில் யொரித்தொமோ கை வைக்க முடியவில்லை. எனவே நயன்மைத் துறையும், சமயத் துறையும், பொதுத்துறையும் யொரித்தொமோவின் படை யாட்சியின் கீழ்க்கொண்டு வரப்படவில்லை. இவ்வாறு கியோத் தோவில் இம் மூன்று துறைகளும் அரசவையினரால் ஆளப்படவும், பிற துறைகளைத் தம் படையினர் மூலம் யொரித்தொமோ காமகுராவிலிருந்து ஆளவும் வாய்த்த ஜப்பானிய ஆட்சிமுறையை இரட்டையாட்சி (Dual Government) என்கிறோம்.

யொரித்தொமோ அதிவல்லமை படைத்த, போருக்கஞ்சாத ஈவிரக்கமில்லாத, ஆனுல், யாரையும் மதிக்கும் தன்மையுள்ள, சுறுசுறுப்பான, வீரமே தன் நெஞ்சின் விளை களமாகக் கொண்ட, ஒரு நொடியில் எண்ணுயிரம் படைகளையும் தன் அசைவிற்குக் கீழ்ப்படியும்படிச் செய்கின்ற ஒழுங்கற்றுக் கிடந்த ஜப்பானை நேர் மாருக மாற்றி நயன்மையை நிலைநாட்டி அமைதி காத்த மாவீர னுவான். ஜப்பானிய வரலாற்றிலும், நாட்டுப்புறக் கதைகளிலும், இன்றும் இம் மாவீரனைப் பற்றி வீரபாண்டியக் கட்டபொம்மனைப் போல்பல வீரக் கதைகள் கூறப்படுகின்றன. இவன் தன் நன்றி யுள்ள தம்பி யொசித்சுனேயை மறுத்து விரட்டியமையும், யசுகிரா என்னும் மற்ருெரு தம்பியைக் கொன்றமையும் அரசியல் சூழ்நிலையைக் கருதியே ஒழியக் கொடுஞ்செயல்களல்ல என்கின்றனர் வரலாற்றறிஞர்கள்.

## ஓசோக்களின் ஆளுமை
## (Hojo Supremacy—1199 - 1333 A. D.)

### யொரித்தொமோவுக்குப்பின் சோகன் ஆட்சி

யொரித்தொமோ கி. பி. 1199ஆம் ஆண்டில் இறந்தான். அவனுக்குப்பின் அவனுடைய மகன் யொரீயே (Yoriiye) சோகன்

பதவிக்கு வந்தான். பதினெட்டே அகவை நிரம்பிய யொரீயே தன் தந்தையைப்போல் கடமை வீரனாக இல்லாமல் பொறுப்பற்ற இளைஞனாக, எப்பொழுதும் கேளிக்கைகளிலும், சிற்றின்பத்திலும் புரண்டுகொண்டிருந்தான். இவன் தாயாகிய மசாகோவும் (Masago) அவளுடைய தந்தையும், ஆட்சிப் பொறுப்பைக் கவனித்து வருபவனுமான ஓசோ தொகிமசாவும் இவ்விளைஞனைச் சீர்திருத்த வல்லவனாக்கவில்லை. மாறாகத் தாய்ப்பாட்டனான ஓசோ தொகிமசா இவனை இன்ப வெறியனாக்கித் தானே படைச் செயற்குழுத் தலைவனாகி, யொரீயேயின் பாதுகாப்பாளனெனக் கூறிக் கொண்டு சோகன் பதவியின் எல்லாப் பொறுப்புகளையும் ஏற்று நடத்தலானான். யொரீயேவுக்குப் பேரரசர் சோகன் பட்டத்தையும், மற்றும் மாநில அதிகாரிகளை அமர்த்தும் அதிகாரத்தையும் கொடுத்தும், ஓசோ தொகி மசாவே இவற்றைத் துய்க்கலானான்.

கி. பி. 1203ஆம் ஆண்டில் அதாவது தான் சோகன் பதவியேற்ற நான்காம் ஆண்டில் யொரீயே உடல் நலமற்றுப் படுக்கையில் கிடந்தான். அச் சமையத்தில் அவனுடைய தாயும் பாதுகாப்பாளரான ஓசோ தொகிமசாவும் அவனைக் கட்டாயப் படுத்தித் துறவு கொள்ளும்படிச் செய்து, பதினோரகவையே நிரம்பிய தம்பியான சனிதொமோ என்பவனை சோகன் பதவி யேற்கச் செய்தனர். பதவி துறந்த யொரீயே படைதிரட்டித் தன் உரிமையைப் பெறுவானென அஞ்சி தொகிமசா அவனைக் கொல்லச் செய்தான். இதற்குப்பின் மசாகோவைத் (Masago) துறவு மேற்கொள்ளும்படிப் பணித்தாள். தொகிமசா 1205ஆம் ஆண்டில் துறவு மேற்கொண்டு புத்த மடத்தில் சேர்ந்தான். அங்கு 1216ஆம் ஆண்டில் தனது 68ஆம் அகவையில் மாண்டான். கொல்லப்பட்ட யொரீயேயின் மகன் தன் தந்தையைக் கொன்று சோகன் பதவியை ஏற்ற தன் சிற்றப்பாவான சனிதொமோவை 1216ஆம் ஆண்டில் கொன்றான். அக் குற்றத்திற்காக அவனும் கொல்லப்பட்டான். மாவீரன் யொரித்தொமோவின் மரபு இவனுக்குப்பின் வேரற்றுப் போயிற்று.

கைம்பெண்ணான மசாகோ புத்த மடம் சேர்ந்தாள். ஆயினும் மடத்திலிருந்து கொண்டே காமகுரா ஆட்சியை ஆட்டிப் படைத்தாள். கியோத்தோவிலுள்ள மிகாடோவுடன் தொடர்பு கொண்டு சோகன் பதவிக்கு ஃபூசிவாராக் குடும்பத்தில் தோன்றிய இரண்டே அகவை நிரம்பிய யொரித்சுனே (Yoritsune) என்னும் குழந்தையை சோகன் ஆக்கினாள். அவ்வாறு சோகன் பதவியேற்ற அக் குழந்தைக்கும் ஓசோக்களே பாதுகாப்பாளர்களாக இருந்தனர். இச்சமையத்தில் ஜப்பானிய அரசியலில் ஒரு தீவிர மாறுபாடு

ஏற்பட்டது. 82ஆம் மிகாடோவான கோதோபா (Go-Toba=1186—1239 A.D.) 83ஆம் மிகாடோவான திசுச்சி மிகாடோவும் (Tsuchi-Mikoda=1199-1231 A.D.) துறவு மா மன்னர்களாக மடத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் தாங்கள் ஆண்ட ஜப்பானிய நாடு, இவ்வாறு படைக்குடும்பத்தாரிடம் சிக்கி அவல நிலையில் இருப்பதைக் கண்டு மனம் வருந்தினர்கள். அன்று ஜப்பானை ஆண்ட 84ஆம் மிகாடோவான சுந்தொகு (Juntuku 1211-1242 A.D.) என்பவரைத் தூண்டிப் படைக்குலத்தினரை ஒடுக்க வேண்டுமென்றனர். மிகாடோவுக்குத் துணையாக மடத்திலுள்ள புத்தத் துறவிகளைப் படையேந்தும்படிச் செய்தும், படைக் குலத்தினருக்குப் பகைவர்களாயிருப்பவர்களை ஒன்று திரட்டியும், ஒரு பெரும்படையைப் படைக்குலத்திற்கு எதிராக இம் மாமன்னர்கள் திரட்டினர்கள். இப் படையில் அரச ஆதரவாளர்களும் சேர்ந்து கொண்டார்கள். சோகன் பதவியிலிருந்த யொரித்சுனேயின் பாதுகாப்பாளனை யொசிதோகு (Yoshitoku) பேரரசர் படைகளை முறியடிக்கத் தன் படைக் கூட்டங்களை ஒன்று திரட்டிக் கொண்டு கியாத்தோ மீது படையெடுத்தான். கியாத்தோ அடிபணிந்தது. துறவு மா மன்னர் கோதோபா ஒக்கைதோத்தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். மற்றொரு துறவு மா மன்னரான சுச்சி மிகாடோ சிக்கொக்குத்தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். ஜப்பானை ஆண்ட சுந்தொகு துறவு மேற்கொண்டார். ஆனல், அவரையும் யொசிதொகு சாதோ என்னுமிடத்திற்கு நாடு கடத்தினன். இதற்குப் பின் 80ஆம் மிகாடோவான தககூராவின் பெயரரான சூகியோ (Chukyo=1222-1234 A.D) என்பவரை 85ஆம் மிகாடோவாகப் பதவியேற்கச் செய்து யொசிதோகு தானே கியாத்தோவுக்கும், காமகுராவுக்கும் பகராட்சியாளனுக (Rigent) இருந்து ஆளத் தொடங்கினன்.

இவ்வாறு ஓசோக்கள் கியோத்தோ அரசவையையும், காமகுரா சோகன் பதவியையும் தங்கள் கைப்பொம்மைகளாக மாற்றிப் பகராட்சியாளராக மாறினர்கள். ஆயினும் சோகன் பதவியை இவர்கள் ஒழிக்கவில்லை. இவர்கள் காலத்தில் சோகன் பதவி மேலும் சிறப்போடு விளங்கியது. அப் பதவியின் பகராட்சியாளராக இருந்து ஆண்ட ஓசோக்கள் அப் பதவியின் பெயரால் கட்டுக்கடங்காமல், எல்லா அதிகாரங்களையும் தாங்களே கைப்பற்றி ஆண்டார்கள். யொரித்தொமோவினல் தொடங்கப்பட்ட படையாட்சி முறை ஓசோக்களின் காலத்தில் உச்ச நிலையை அடைந்தது.

யொசிதோகு தனக்கு முன்னிருந்த ஃபூசிவாராக்களைப் போலவும், மினமொத்தோக்களைப் போலவும், தன் ஓசோ

குடும்பத்திற்குப் பெயரும், பொருளும், புகழும் தேட முனைந்தான். மாநிலப் பதவிகளையும் தன் குடும்பத்தாருக்கே அளித்தான். இதிலிருந்து ஷோகன் பதவிக்குகியோத்தோவிலுள்ள அரசகுடும்பத்துப் பிள்ளைகள் அமர்த்தப்பட்டனர். ஆயினும் அவர்களின் பகராட்சியாளராக ஓசோக்களே விளங்கினார்கள். இதனால் ஷோகன்களையும், நாட்டையும் ஆளும் ஆற்றலாக ஓசோக் குடும்பம் விளங்கியது. ஷோகன்களாக வரும் அரச குடும்பத்து இளைஞர்கள் திறமையற்றிருந்தாலோ அல்லது தங்களை மீறி நடந்தாலோ அவர்களை நீக்கி வேறு ஒருவரை மிகாடோ மூலம் அமர்த்திக்கொள்வர். யொசிதோகு பெரு நிலங்களைப் பெற்றிருந்த பிரபுக்களிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய்து அவற்றைத் தன் குடும்பத்தாருக்குக் கொடுத்தான்.

இவ்வாறு 1199ஆம் ஆண்டிலிருந்து ஆதிக்கம் பெற்று வளர்ந்த ஓசோக்கள் 1333 வரை 134 ஆண்டுகள் ஜப்பானிய வரலாற்றில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றனர். பகராட்சியாளராக வந்த ஓசோக்கள் தங்களின் முயற்சியால் சிறந்த ஆட்சி முறையை ஏற்படுத்தினர். மினமொத்தோக்களால் ஏற்படுத்தப்பட்ட அற மன்றங்களின் சட்டங்களை நாடு முழுவதும் பொது, படை, ஆட்சித்துறைகளுக்குப் பொதுவானதாகக் கையாண்டனர். இவர்கள் காலத்தில் பிரபலமடைந்து விட்ட நிலமானியப் பிரபுக்களையும் இச் சட்டங்கள் ஆட்கொண்டன. சீனச் சட்டங்களை நீக்கி, ஜப்பானிய நடைமுறைப்படிச் சட்டங்களை இயற்றினர். இதனால் பொதுத்துறையும், சமயத் துறையும் இச் சட்டங்களுக்குட்பட்டன.

அதிகாரிகள் தன்னாதிக்கம் பெற்று விடாமல் கண்காணிக்கப் பல ஆய்வாளர்கள் அமர்த்தப்பட்டனர். குறிப்பாக பாதுகாவலர் படையினரையும் (Shugos) வரி தண்டும் (வசூலிக்கும்) மேற்பார்வையாளர்களையும் (Jitos) கண்காணிக்க ஆய்வாளர்கள் அமர்த்தப்பட்டு, வரிகள் ஒழுங்காகத் தண்டப்பட்டன. ஆட்சியை நடத்தும் அவைக்கு ஓசோ பகராட்சியாளரே தலைமை தாங்கினர். அவ் வகையில் விவாதிக்கப்படும் அரசியல் செய்திகள் கமுக்கமாய் (இரகசியமாய்) வைக்கப்பட்டதோடு ஒருமனதாக முடிவுகள் எடுக்கப்பட்டுச் செயல் படுத்தப்பட்டன. படையாட்சியிலிருந்த உறுப்பினர்கள் எளிமையான—ஆனால், வீர வாழ்வை மேற்கொண்டனர். கியோத்தோவிலிருந்த அரசவை ஆடம்பர வாழ்வை இவர்கள் மேற்கொள்ளாமல் வெறுத்தனர். இதனால் ஓசோக்கள் உண்மையான நாட்டுப்பற்றுள்ள வீரர்களாயினர். நாடும் பல வகைகளிலும் முன்னேறியது.

## காமகுரா நாகரிகம்
(கி. பி. 1192-1333)

தைராக்களை வீழ்த்திய யொரித்தொமோ தன் மினமொத்தோ இனத்திற்கு ஆதிக்கம்தேடி, காமகுராவை மையமாகக் கொண்டு சோகன் பதவியிலிருந்து ஆளத்தலைப்பட்ட 1192ஆம் ஆண்டை சோகன் 'ஆட்சியின் தொடக்கக் காலம்' என்கிறோம். மினமொத் தோக்களுக்குப்பின் யொரித்தொமோவின் மாமனரான ஓசோ தொகிமசாவின் ஓசோக் குடும்பத்தார் சோகன் ஆட்சியை கி.பி. 1199ஆம் ஆண்டிலிருந்து 1333 வரை காமகுராவில் நடத்தினர். அவர்கள் ஒருபடி மேலாக பகராட்சியாளராகவும் மாறினர். இவ்விரு குடும்பத்தாருக்குப்பின் காமகுரா அழிக்கப்பட்டு விட்டது. ஆயினும் இவர்களின் காமகுரா நாகரிகம் அக்கால மிகாடோவின் இருப்பிடமான கியோத்தோ நாகரிகத்தினின்று வேறுபட்டுக் காணப்படுவதால் அதைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. இக் காலத்தில் ஜப்பானில் பெரிதும் வளர்ச்சி யடைந்தது புத்த மதத்தின் புதிய கோட்பாடுகளாகும். முழுக்க முழுக்கப் புத்த மதம் ஜப்பான் நாட்டுக்கே உரித்தான பண்பாட் டோடு கடைப்பிடிக்கப்பட்டது. பொதுமக்களும் படைக்குலத் தினரும் இம் மதத்தைப் பின்பற்றினர். இதற்கு முன் இம் மதம் கியோத்தோவிலுள்ள அரசவையினரிடமும், அரச குடும்பத்தின ரிடமும், கிழார்களிடமும் மட்டும்தான் பரவியிருந்தது. ஆனல், இன்று நாடு முழுவதும் பரப்பப்பட்டு எளிய மக்களிடமும் பரவியது. அஃதாவது கி.பி. 14ஆம் நூற்றுண்டில் புத்த மதம் ஜப்பானிய நாட்டிலுள்ள எல்லா மக்களாலும் பின்பற்றப்பட்டது எனலாம்.

## சமயப் பண்பாடு

**ஓனன் சோனின் (Honen Shonin—கி.பி. 1133-1212)**

நம்பிக்கையின் அடிப்படையில் 'ஆன்ம' வலிமையைப் பெறும் 'அமித வழிபாட்டு முறை' முன்னரே எய்யன் ஆட்சிக் காலத்தில் பரவியதைக் கண்டோம். இதனை உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றித் தீவிரமாக எல்லாரிடமும் பரப்பியவர் ஓனன் சோனின் என்பவராவார். இவருக்குப் பலவகை எதிர்ப்பு களிலிருந்தும் அமித புத்த வழிபாடு தீவிரமாகப் பரவி காமகுரா காலத்தில் புகழுடன் விளங்கியது. தன் இறப்புக்குப்பின் மாந்தன் தூய நிலம் (Pure Land) என்பதனை அடைகிறனென்றும், அப் புவி யைப் பற்றிய வண்ணனைகளையும், வழிபாட்டு முறையில் பல சடங்கு முறைகளையும் இவர் புகட்டினர். இவ் வழிபாட்டு முறை சோதோ (Jodo) வழிபாட்டு முறையை விரிவுபடுத்திக் கொண்டதெனலாம்.

சின்ரான் (Shinran—கி.பி. 1173-1262)

சோதோ வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு எழுந்த மற்றொரு வழிபாட்டு முறை சோதோ சின்சு அல்லது சோதோவின் உண்மை வழிபாடு (Jodo Shinshu) என்பதாகும். இதனைப் புகட்டியவர் சின்ரான் என்பவராவார். இவரும் சோனின் என்பவரும் இவ் வழிபாட்டு முறையைப் பரப்பினர். இருவருமே படித்த மெய்யறிவராவர். எளிய மக்களின் உள்ளங்களில் பதியும் வண்ணம் அவர்களின் மொழிகளிலேயே சரளமாய்ப் பேசி அவர்களைக் கவர்ந்தனர். 'ஒருவன் உள்ளபடியே அமித வழிபாட்டில் நம்பிக்கை வைத்து, தூய மனத்துடன் நடப்பானுனல் அவனுக்கு மெய்யுலகு கிட்டுவது உறுதியாகும் என்றும், வீணை சடங்குகளைப் பின்பற்றுவதாலோ, சமயக் கொள்கைகளை அறிந்து கொள்வதாலோ மட்டும் இவ்வுலகு கிட்டி விடாது', என்றும் சின்ரான் புகட்டினுர். 'அவ்வாறு மெய்யுலகை யடைவோர் மனத் தூய்மையுடன் அன்ருட உலக வாழ்விலீடுபட்டிருப்பினும் துறவு மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை. அஃதாவது அவர்கள் ஓட்டில் ஒட்டாத புளியம்பழம்போல் வாழ்ந்து குமுகத்தின் அறிவாசிரியர்களாக இருக்கலாம்,' என்றும் அவர் புகட்டினுர். இதனுல் பல துறவிகளும் மணம் செய்துகொண்டு வாழ்ந்து, தூய்மையான வாழ்வு நடத்தினர்.

நிகிரென் (Nichiren—1222-1282)

இவரும் மேற்சொன்ன சமய நெறியாளர்களைப்போல் சிறந்த மெய்யறிவராகவும், ஆண், பெண், உயர்ந்தோர், தாழ்ந்தோர் ஆகிய எல்லாராலும் போற்றக்கூடியவராகவும் விளங்கினுர்; இவரும் எளிய, இனிய தூய வாழ்க்கை முறையைப் புகட்டினுர். பலவகையான சடங்குகளையும், கடுமையான நோன்புகளையும், உயர்வு தாழ்வுகளையும் எதிர்த்தார். ஜப்பான் ஒரே நாடு; அதில் ஒரே மதமும், உயர்வு தாழ்வற்ற ஒரே வகையான மக்களும் இருக்கவேண்டுமென்ருர். இதனுல் இவரை நாட்டுத் 'துரோகி' யெனக் கூறித் தண்டிக்க முயன்றனர். இவர் போதனைகளடங்கிய நூல் 'தாமரைத்திரு நூற்றொகுப்பு' (Lotus Scriptures) எனப்பட்டது.

சென் புத்தம் (Zen Buddhism)

இச் சமய வழிபாடு பண்டைக் காலந்தொட்டே ஜப்பானில் இருந்து வந்தது. 'மெய்யறிவு ('மெய்ஞ்ஞானம்') என்பது ஒருவனது உள்ளொளியாகும். இஃது அவனுடைய தீவிரத் தன்னடக்கம் துறவு மனம் முதலியவற்ருல் உண்டாகிறது' என்று

இவ் வழிபாடு புகட்டுகிறது. இத்தகைய தீவிரக் கட்டுப்பாடான வாழ்க்கை முறையைச் சமய வழிபாடாகக் கருதும் 'சாமுராய்கள்' தங்கள் குலத் தொழிலாகிய படைத் தொழிலுக்கு இதனைச் சிறந்த முறையாகக் கொண்டனர்.

## கலை வளர்ச்சி

காமகுரா காலத்தில் பல புதிய கோயில்கள் கட்டப்பட்டன; பல புதுப்பிக்கப்பட்டன. இக் கால வாழ்க்கை முறைகளைச் சித்தரிக்கும் பல வண்ண ஓவியங்களும், சிற்பங்களும் எழுந்தன. இவற்றுள் சிறப்பானவை வீரர்களின் வாள் பயிற்சியும், படைக் களங்களின் பட்டியலும் பற்றிய ஓவியங்களாகும். சுருங்கக் கூறின் படைக்குலத்தினரின் அன்றாட வாழ்க்கை முறையையும், அவர்கள் குழுகத்தில் பெற்றிருந்த மேம்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டே இக் காலக் கலைகள் திகழ்ந்தன. இக் காலத்தில் இலக்கியங்கள் அதிகம் எழவில்லை. சட்ட நூல்கள் காக்கப்பட்டன. படைக்கள ஆட்சி முறையைப் பற்றிய அரசியல் நூல்களும், மேற் கூறிய புத்த சமய வழிபாட்டு நூல்களும் அதிகமிருந்தன. சென் புத்தம் மறக்குடியினரால் போற்றப்பட்டதால் இவ் வீரர்கள் மத வழிபாட்டில் யாவரும் கூடிப் பெரும் விழா நடத்தித் 'தேநீர்' அருந்தும் முறையைப் பின்பற்றினர். இஃது சீக்கியருக்குள்ளும் முகமதியருக்குள்ளும், கிறித்தவர்களுக்குள்ளும் கொண்டாடப் படும் சமய விருந்தைப் போலிருந்தது. கியோத்தோ மன்னர்களின் ஆட்சி அழியக் காரணமாயிருந்த போலிக் கலைகளை விடுத்து, நாட்டைக் காக்கும் போர்க் கலையை இம் மறக்குடியினர் காமகுராவில் வளர்த்தனர். இதனால் குழுகாயத்தில் சிறந்த கட்டுப்பாடு வளர்ந்தது. இத்தகைய பண்பாட்டை காமகுராப் பண்பாடு அல்லது சாமுராய்களின் வீரப்பண்பாடு அல்லது புசிதோப் பண்பாடு என்கிறோம்.

## காமகுராவின் வீழ்ச்சியும் அழிவும்

அதிகாரத்தின் உச்சிக்குச் சென்றுவிட்ட ஓசோக்களுக்குச் சரிவு ஏற்படத் தொடங்கியது. சோகன்களாக வருபவர்களுக்குப் பகராட்சியாளராக வரும் ஓசோக்கள் திறமையற்றவர்களாய் வாய்த்தனர். அவர்களும் வழக்கப்படி பதவித் துறப்பை மேற் கொண்டு புத்தமடம் செல்லலாயினர். சான்றாகக் கி. பி. 1256ஆம் ஆண்டில் தோகியோரி (Tokiyori) என்ற ஓசோ முப்பதாவது அகவையில் தன் பகராட்சியாளர் பதவியைத் துறந்து புத்தமடம் போந்தார். அவருக்குப்பதில் அவருடைய ஆறுட்டைப் பருவமுள்ள மகன் தோகிமுனி (Tokimune) என்பவன் பகராட்சியாளனானான்.

தோகிமுனிக்கு நாகதோகி (Nagatoki) என்பவன் பயிற்ருசிரியனுக அமர்ந்தான். இவனும் ஓசோ குடும்பத்தைச் சேர்ந்தவனே. இவன் பகராட்சியாளனுன தோகிமுனியை அடக்கித் தானே பகராட்சியாளனுகத் திகழ்ந்தான். இவ்வாறு பேரரசருக்குப் பகராளனுக சோகன் அமர்த்தப்பட, அவனுக்குப் பகராளனுக ஓசோதோகிமுனி அமர்த்தப்பட, அவனை ஆட்டிப் படைத்துப் பகராளனுக ஆசிரியன் நாகிதொகி ஆள, நாட்டின் ஆட்சிமுறை அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. இவ்வழிவுப் பாதையிலிருந்து நாட்டைக் காக்க ஒன்றுபட்ட தேசிய உணர்ச்சி தேவைப்பட்டது.

## மங்கோலியப் படையெடுப்பு
(கி. பி. 1281)

இச்சமையத்தில் சற்றும் எதிர்பாராத வகையாக மங்கோலியப் படையெடுப்பு நிகழ்ந்தது. மங்கோலிய மாவீரன் குபாலிகான் சீனுவின்மீது படையெடுத்துச் சீனுவை ஆண்ட சங் மரபை (Sung Dynasty = *960—1279* A. D.) வீழ்த்திச் சீனுவைக் கைப்பற்றினுன். பின்னர் அங்கிருந்து ஜப்பான் மீது படையெடுக்கத் திட்டம் தீட்டினுன். இதற்கு முன்பே கி.பி. *1274*-ல் இவன் ஜப்பான் மீது படையெடுக்க முயன்று கை விட்டுவிட்டான். கொரியாவிற்கும், ஜப்பானுக்குமிடையிலுள்ள ஜப்பானுக்குச் சொந்தமான திசுஷிமா (Tsushma) என்னும் தீவின் வழியாகச் சீனப் போர்க் கப்பல்களையும் கொரியக் கப்பல்களையும் பெருமளவில் ஜப்பானைத் தாக்கும்படி அனுப்பினுன். இதனையறிந்த காமகுரா மறக்குடியினர் ஒன்று திரண்டனர். ஆயிரக்கணக்கான வீரர்களையும் முந்நூறுக்கு மேற்பட்ட போர்க் கப்பல்களையும் குயூசுத் தீவுக்கு நடத்திச் சென்ற தோகிமுனி கி.பி. *1281*ஆம் ஆண்டில் மங்கோலியக் கலங்களை உடைத்து திசுஷிமாத் தீவைவிட்டு ஓடச் செய்தான். குயூசுத்தீவின் அமைப்பு முறையும் திசுஷிமாத் தீவுக்கிடையிலுள்ள நீரிணைப்பும் மங்கோலியர் கடற்போரில் திறமையற்றிருந்தமையும், ஜப்பானியரின் கடல் வல்லமையும், சாமுராய்களின் வீர மரபுத் தன்மையும், தேசிய உணர்ச்சியும் சீனுவையே வென்ற மாவீரன் குபாலிகானைப் புறமுதுகிடச் செய்தன. வரலாற்று முகாமை வாய்ந்த இப் போரைப் பற்றிச் சீனரவையில் தான் கேள்விப்பட்ட செய்திகளை மார்க்கோபோலோ தனது பயணநூலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் காமகுராவில் இப் போரை வண்ணிக்கும் ஈரோவியங்களும் உள்ளன.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க மங்கோலியப் படையெடுப்பை முறியடித்து நாட்டைக் காத்த காமகுரா மறக்குடி

அழிவதற்குக் கரணியமென்ன? மங்கோலியப் படையெடுப்பினுல் ஜப்பானின் பொருளியல் சீர்குலைந்தது. வரிச் சுமையால் மக்கள் துன்பமுற்றனர். இந் நிலையில் மங்கோலியரை விரட்ட உதவிய வீரர்கள் தங்களுக்குப் பெரிய பரிசுகளையும், நிலமானியங்களையும் கேட்டனர். அவ்வாறு வழங்கப்பட்ட பரிசுகளின் தரங்களுக்காகப் பரிசு வாங்கியோரும், பரிசு கிடைக்கப் பெருதவர்களும் ஆட்சிக்கு எதிராகக் கலகங்கள் செய்தனர். 'ஆடம்பர' வாழ்க்கை காமகுராவின் வீரவுணர்வை யழித்து, சோம்பல் வாழ்வைத் தந்தது.

இச் சமையத்தில் கோநகரான கியோத்தோவிலும் ஒரு பெருங் குழப்பம் ஏற்பட்டது. ஜப்பானியப் பேரரசரே தன் மக்களுள் ஒருவரைத் தனக்குப் பின் மிகாடோவாக அமர்த்துவது வழக்கம். 95ஆம் மிகாடோவான ஆனசோனேவுக்குப் (Hanazono = 1308—1348 A. D.) பின் இருவர் பட்டத்திற்குப் போட்டியிட்டனர். இதனுல் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தில் ஓசோக்கள் பங்கேற்றனர். ஆனுல், அவர்கள் எதிர்பாராத கோதைகோ (Go—Daigo = 1318—1339 A. D.) என்பவர் 96ஆம் மிகாடோவானுர். முப்பது அகவை நிரம்பிய இவர் பிறரைப் போலன்றி நல்ல திறமையும், அரசியலறிவும் படைத்தவர். இவர் கட்சி அரியணையேறியதும், ஜப்பானை ஆட்டிப் படைக்கும் படைக் குலத்தினரை ஒழிக்கத் திட்டமிட்டார். இவர் காலத்தில் ஜப்பானில் ஒரு கடும் பஞ்சம் ஏற்பட்டது. கோதைகோ அல்லும் பகலும் அயராதுழைத்துப் பஞ்சத்திலிருந்து மக்களைக் காப்பாற்றினுர். இத்தகைய செயல் வீரரான மிகாடோவை மக்கள் பெரிதும் போற்றினர். இவ்வாறு மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்ற மிகாடோ புத்த மடங்களின் ஆதரவையும் திரட்டினுர். யாமாத்தோவிலுள்ள கசகி கோட்டையை வலுப் படுத்தினுர். இதனையறிந்த ஓசோ தகதோகி (Takatoki) அக் கோட்டையை அழித்துப் பேரரசரைத் தோற்கடித்து ஒக்கை தோத் தீவுக்கு நாடு கடத்தினுன். அவருக்குப் பதில் கோகோசின் என்பவரை மிகாடோவாக்கினுன். நாடு கடத்தப்பட்ட கோதைகோ அத் தீவிலிருந்து தப்பித்துத் தனக்குச் சார்பாகப் படைகளைத் திரட்டிக் கொண்டு கியோத்தோவின் மீது படையெடுத்தார். அவருக்கு ஆதரவு அளித்துப் படையுதவி செய்தவர்களில் அஃசிககா தகாவுசி (Ashikaga Takauji) என்பவன் முகாமையானவன். இவன் மினுமொத்தோக் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆனுல், ஓசோக் குடும்பத்தோடு மணவுறவு கொண்டவன். ஓசோ படையின் தளபதிகளைத் தவிர, ஓசோக்களுக்குக் கீழ்ப்பட்டவர்களும், அவர்களை வெறுத்தவர்களும். மீண்டும் கோதைகோவையே

மிகாடோவாக ஏற்க விழைந்தவர்களும் கோதைகோவுக்கு உதவினர். இத்தகைய பேராதரவுடன் கோதைகோ காமகுராவை நோக்கித் தன் படைகளைச் செலுத்தினார். கி. பி. 1333ஆம் ஆண்டில் காமகுரா தீக்கிரையாக்கப்பட்டது. 1199-லிருந்து 1333வரை கொடுமைக்குப் பெயர் பெற்று நின்ற ஓசோக்கள் அழிக்கப்பட்டனர். தங்கள் பேரரசரையே எதிர்த்த அரசவிரண்டகத்திற்கு அவர்கள் மக்களாலேயே கொல்லப் பட்டனர். மீண்டும் கோதைகோ மிகாடோவானார்.

## முரோமாச்சிக் காலம்
## (Muromachi Period—1333–1573 A.D.)

### அஃசிககாக்களின் அதிகாரம் (The Ashikaga)

ஓசோக்களின் அழிவுக்குப்பின் மீண்டும் மிகாடோவான கோதைகோ படைக் குலத்தினரின் கைப்பொம்மைகளாகி விட்ட தன் முன்னோர்களைப் போலல்லாமல் நாட்டின் எல்லா அதிகாரங் களுக்கும் தானே இருப்பிடமாய்விளங்க வேண்டுமென விரும்பினார். தான் பட்டத்திற்கு வருவதற்கு எதிராகப் போட்டியிட்டவரைச் சார்ந்த அஃசிககா தகாவுசியையும், மற்றும் பல படைக் குடும்பங்களையும் ஒழிக்கத் திட்டமிட்டார். ஆனால், அவர் எதிர் பார்த்தபடி அவருக்கு ஆதரவு கிடைக்கவில்லை. அரசரின் நம்பிக்கைக்குப் பொறுப்பாயிருந்த அரசவைக் கிழார்களும் (Kuges) அரசருக்கு இரண்டகம் விளைவிக்க முற்பட்டனர். மீண்டும் தாங்களே கியோத்தோவின் அதிகாரங்களைக் கைப்பற்றி ஆள நினைத்தனர். ஆனால், இவர்களிடம் படைக்குலத்தினரிடமிருப்பது போன்ற படை வலிமையோ, பண வலிமையோ இல்லை. தன்னையழிக்கத் திட்டமிட்டுள்ள மிகாடோவையும், தன்னுடைய செல்வாக்கைக் கவரத் திட்டமிட்டுள்ள அரசவைக் கிழார்களையும் விழிப்போடு கண்காணிக்க அஃசிககா தகாவுசி தன் குடும்பத்தை வலுப்படுத்தினான். வேறு வழியின்றி மிகாடோவும் அவனுக்கு 1338ஆம் ஆண்டில் சோகன் பட்டத்தை வழங்கினார்.

### அரச குடும்பப் பிளவு (கி. பி. 1336-1392)

அரியணை ஏறுவதற்கு அரச குடும்பத்தில் போட்டி ஏற் பட்டது. இதனால் கியோத்தோ கட்சி அல்லது வடக்குக் கட்சி, காமகுரா கட்சி அல்லது தெற்குக் கட்சியென இரு கட்சிகள் தோன்றின. வடக்குக் கட்சிக்கு தகாவுசி தலைமை தாங்கினான். தெற்குக் கட்சிக்கு நித்தா (Nitta) என்பவன் தலைமை தாங்கினான். பெருநிலக் கிழார்களும், பண்ணையாள்களும் தெற்குக் கட்சியைச்

சார்ந்தனர். சில குடும்பங்கள் பயன் கருதி அடிக்கடி கட்சி மாறின. இதனால் மைய ஆட்சியும் மாநில ஆட்சியும், படையாட்சியும் கூட வலிமை குன்றிக் காணப்பட்டன. அரச குடும்பத்திற்கும், அரியணைக்கும் மக்களிடமிருந்த மதிப்புக் குன்றியது. பெருநிலக்கிழார்களும், படைத் தலைவர்களும் தங்கள் ஆளுமைக் குட்பட்ட பகுதிகளுக்குத் தாங்களே முடிசூடா மன்னர்களாய் விளங்கினார்கள். மைய ஆட்சியில் ஒற்றுமையும், வலிமையும் ஏற்பட்டாலொழிய நாட்டில் அமைதியும் ஒழுங்கும் ஏற்படா தென்பதை மக்கள் உணர்ந்தனர்.

தகாவுசியின் வடக்குக் கட்சியினரை மிகாடோ வெறுத்தார். இதனைப் பயன் படுத்திக் கொண்டு அஃசிகாக்களின் பெரும்பகைவர்களாகிய தென் கட்சியினர் நித்தாவின் தலைமையில் ஒன்று திரண்டனர். மிகாடோவின் இசைவுடன், அஃசிககாக்களை அழிக்கப் படையெடுத்தனர். கி. பி. 1336ஆம் ஆண்டில் தோதொமி (Totomi) மாநிலத்தில் வடக்கும், தெற்கும் மோதிக் கொண்டன. இதில் அஃசிககாக்கள் வெற்றி பெற்றனர். மிகாடோவும், அரசவையினரும் கியோத்தோவிலிருந்து விரட்டியடிக்கப் பட்டனர். கியோத்தோவிலிருந்து ஓடிய மிகாடோவும், அரச குடும்பமும், அரசவையினரும் வழக்கமாக அவர்களின் முன்னோர் அடிபணியும் கியோத்தோவுக்குத் தெற்கிலுள்ள மலையடர்ந்த யொசினோ புத்த மடத்தில் புகுந்தனர். இந் நிகழ்ச்சிக்குப்பின் கி. பி. 1336ஆம் ஆண்டிலிருந்து 1392 வரை அஃசிககாக்கள் கியோத்தோவின் 'ஆடம்பர' வாழ்விலும், கலைப் பண்பிலும் புரண்டு அரசவின்பத்தை அனுபவிக்கலாயினர். மிகாடோ யொசினோ புத்த மடத்திலேயே மறைந்து வாழ்ந்தார். ஆயினும் மக்களின் அன்பும் பாசமும், மதிப்பும் அவரிடமே நின்றன. கி. பி. 1336ஆம் ஆண்டில் பாசறை (Bakufu) அல்லது படையாட்சியின் தலைமைச் செயலகம் காமகுராவிலிருந்து அஃசிககாக்களால் கியோத்தோவுக்கு அண்மையிலுள்ள முரோமாச்சிக்கு மாற்றப்பட்டது. அரியணையையும், அரசவையையும் மிகவும் திறமையாக இந்தப் படையாட்சியினர் ஆட்டிப் படைத்தனர்.

அஃசிககா குடும்பத்தை ஏற்படுத்திய தகாவுசி கி. பி. 1334ஆம் ஆண்டிலிருந்து 1358 வரை அக் குலத்தின் தலைவனாக விளங்கி 1358ஆம் ஆண்டில் தனது 53ஆம் அகவையில் மாண்டான். அவனுக்குப் பின் அவனுடைய மகனான யொசினோரி (Yoshinori) கி. பி. 1359ஆம் ஆண்டிலிருந்து 1367 வரை சோகனாக இருந்தான். இவனுக்குப் பின் இவனது பெயரன் யொசிமித்சு (Yoshimitsu) சோகனானான். இவனுக்குப்பின் இவனுடைய மைந்தன்

அஃசிககா யொசிமித்சு கி.பி. 1368ஆம் ஆண்டிலிருந்து 1393 வரை சோகன் பதவியைத் தாங்கினன். இவன் தன் மகன் யொசிமித்சுவுக்கு சோகன் பதவியைக் கொடுத்து விட்டுத் துறவியானன். துறவியாக இருந்துகொண்டே 1409ஆம் ஆண்டில் தான் இறக்கும் வரை ஜப்பான் நாட்டின் கட்டடக் கலைக்கும் சென் புத்த சமயத்திற்கும் அரிய பணிகள் பலவற்றைச் செய்தான். 1394ஆம் ஆண்டில் கியோத்தோவில் கின்காகுசி (Kinkakuji) அல்லது 'பொன் கூடாரம்' எனப்படும் தலைசிறந்த புத்தாலயத்தைக் கட்டினன். இன்றும் கியோத்தோவில் பல ஆயிரக்கணக்கான பயணிகளையும், பக்தர்களையும் கவருமிடமாக இப் பொற்கோயில் விளங்குகிறது.

யொசிமித்சு சீன அரசுக்கு ஓராயிரம் வீசங்கல்லெடை (1000 Ounces) பொன் கொடுத்துத் தன்னை ஜப்பானிய அரசனென அறிவிப்புச் செய்யும்படி கேட்டுக்கொண்டான். ஆனல், அவன் விருப்பம் ஈடேறவில்லை. அஃசிககா சோகன்களில் பெயர் பெற்றவர்களில் ஒருவனை யோசிமசா (Yoshimasa) கி. பி. 1443 ஆம் ஆண்டிலிருந்து 1473 வரை சோகனக இருந்தான். கி.பி. 1473ஆம் ஆண்டில் துறவு பூண்டு 1490ஆம் ஆண்டில் தான் இறக்கும்வரை இவனும் ஜப்பானின் கலை வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டான். 'வெள்ளிக் கூடாரம்' (Gin–Kaku) என்னும் ஓர் அழகிய மாளிகையைக் கட்டி, அதில் ஜப்பானின் பண்டைய கலை நிகழ்ச்சிகளை நடத்தினன். இறுதியில் இக் கூடாரம் புத்தத் துறவிகளின் மடமாக மாற்றப்பட்டது.

வட, தென் கட்சிகளாகப் பிரிந்து முறையே வடக்கையும் தெற்கையும் தனித்தனியாக ஆண்ட ஜப்பானிய அரச குடும்பம் கடைசியாக 1392ஆம் ஆண்டில் ஒன்றிணைக்கப்பட்டது. தெற்கில் ஆண்டு கொண்டிருந்த கோகமேயமா (Go-Kameyama), வடக்கை ஆண்டு கொண்டிருந்த 99ஆம் மிகாடோவான கோகோமாத்சுவிடம் (Go-Komatsu=1382-1433 A. D.) சென்று தனது விருதுகளை அவர் காலடியில் வைத்து விட்டுப் பதவி துறந்தார். இவ்வாறு பிரிந்து நின்ற வடக்கும் தெற்கும் இணைந்ததற்குப் பிறகு மீண்டும் ஜப்பான் அரசரின் தெய்விகத் தன்மை மக்களின் மனத்தில் ஒளிவிடத் தொடங்கியது. இதற்குப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டவன் யொசிமித்சு சோகனுவான். இவன்தான் ஜப்பானின் அரசனுவதற்குச் சீனவின் உதவியை நாடி ஏமாந்தவன். இந் நிலைக்குப் பிறகு ஜப்பானில் சிறிது காலம் அமைதி நிலவியது. ஆனல், நிலமானியக் கிழார்களுக்கிடையில் வளர்ந்த பொருமையுணர்ச்சியால் இவ் வமைதிநிலை கெட்டது.

இச் சமையத்தில் ஜப்பானியக் கடற்கரைகளுக்கு வரும் கப்பல்களும் கடற் கொள்ளைக்காரர்களால் சூறையாடப்பட்டன. போர்த்துக்கீசியக் கடற்பயணியான பிண்டோ (Pinto) 'சீனக் கடற்கரையிலும், ஜப்பானைச் சுற்றிலும் போர்த்துக்கீசியரும், சுபானிசுகாரர்களும், தச்சுக்காரர்களும் தங்களுடைய கலங்களில் ஆசிய, ஐரோப்பியப் பண்டங்களை ஏற்றிக் கொண்டு சென்ற வண்ணமிருந்தனர். சூழ்நிலைக்கேற்றவாறு அவர்கள் வணிகர்களாகவும் கடற்கொள்ளைக்காரர்களாகவும் மாறினர்' என்று கூறுவதிலிருந்து இக் காலத்தில் ஜப்பானில் அமைதி நிலவவில்லை என அறியலாம். நிலக் கிழார்கள் ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டதில் இடையிலகப்பட்ட குடியானவர்கள் அமைதியற்ற வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டனர். இவர்கள் நிலக் கிழார்களின் கட்சிகளில் சிக்கித் தவித்தனர். இதனால் உள்நாட்டிலிருந்தோர் கொள்ளைக்காரர்களாகவும், மேற்குக் கடற்கரையிலிருந்தோர் கடற்கொள்ளைக்காரர்களாகவும் மாறினார்கள்.

உள்நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதற்காக ஊர்த் தலைவர்கள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆயினும் நாடெங்கிலும் பெருகிவந்த வழிப்பறிக்கொள்ளை, கொலை முதலியவற்றை அவர்களால் அடக்க முடியவில்லை. இதனால் நாட்டில் செவ்வனே நடைபெற்றுவந்த வேளாண்மையும் மற்ற தொழில்களும் தடைப்பட்டன. எங்கு நோக்கிலும் பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடின. 102ஆம் மிகாடோவான கோதிசுசி-மிகாடோ (Go-Tsuchi-Mikado=1465-1500 A.D.) இறந்து நாற்பது நாள் வரையில் முறையான சடங்குகளைச் செய்து பிணத்தை எடுக்கப் பணமில்லாமல் தவித்தனரென்று திரு. வான் பிராண்டு (Mr. M. Von Brandt) என்பார் கூறுகிறார். இவ்வாறு அஃசிககாக்களின் காலத்தில் ஜப்பான் ஒரு பெருஞ் சோதனைக் குள்ளாக்கப்பட்டபோதுதான் கி.பி. 1542ஆம் ஆண்டில் முதன் முதலாகப் போர்த்துக்கீசியர் ஜப்பானுக்குள் நுழைந்தனர். இவர்கள் தெற்கேயுள்ள குயூசுத்தீவின் தென்கோடி முனை வழியாக ஜப்பானுக்குள் புகுந்தனர்.

இவர்கள் பேரச்சம் தரத்தக்க இரண்டை ஜப்பானுக்குள் இறக்குமதி செய்தனர். ஒன்று கிறித்தவம்; மற்றொன்று வேட்டெஃகமாம் (துப்பாக்கி). இவர்களிடமிருந்து ஏராளமான வேட்டெஃகங்களையும், வெடிகுண்டுகளையும் விலைக்கு வாங்கிய நிலக் கிழார்கள் மைய ஆட்சியையே எதிர்க்கத் தொடங்கினர். இதன் பயனாகப் படைத்தலைவர்கள், நிலக் கிழார்கள், அரசவைக் கிழார்கள், அரச குடும்பத்தினர் ஆகியோர் தாங்கள் வாழ்ந்து

வந்த இடங்களைக் கருங்கற் கோட்டைகளாக மாற்றிச் சுற்றிலும் பேரகழிகளை அரண்களாக அமைத்தனர். இக் காலத்திலெழுந்த இத்தகைய கோட்டைகள் இன்றும் எழிலாக நின்று நம்மைக் கவர்கின்றன. வலுவான அரண்களையும், பெரிய வெடிகுண்டு களையும் பெற்ற தளபதிகளும், புத்த மட வீரர்களும் தங்களுக்குள் பல பிரிவுகளாகப் பிரிந்து, போரிட்டுத் தங்கள் தங்கள் அதிகா ரத்தை நிலைநாட்ட விழைந்தனர். இச் சமையத்தில் மைய ஆட் சியும் வலுவிழந்து நின்றதால் தலைநகரில் சட்டமும், நயன்மையும் கெட்டுப் பெருங் கலகங்களும், கொள்ளைகளும் நிகழ்ந்தன. இவை நாடு முழுதும் பரவின. போர்த்துக்கீசியரால் இறக்குமதி செய்யப்பட்ட மற்றொரு 'பயங்கர ஆயுதமான' கிறித்தவ சமயத்தால், இதுகாறும் புத்தமதம் ஒன்றையே தழுவி அம் மதத்தில் பிணைந்து ஒற்றுமையோடு வாழ்ந்த ஜப்பானிய மக்கள், மதம் மாறிய கிறித்தவர் புத்த சமயத்தவர் ஆகிய இரு கூறுகளாகப் பிரிந்து வேறுபட்டு நின்றனர். சுருங்கக் கூறின் இக் காலத்தில் படைவலிமையைக் கொண்டு ஆளுமைபெற நினைத்த கிழார்களும், மடத் துறவிகளும் ஒரு புறமும், மதத்தால் வேறுபட்ட மக்கள் ஒரு புறமும் பிரிந்து நின்றதால் சட்டமும் ஒழுங்கும் கெட்டன. இவர்களை அடக்கியாளும் பெரும் வலிமையை அக் கால ஜப்பானிய மைய ஆட்சி இழந்து நின்றது. எனவே இக் கால வரலாற்றை 'ஓர் அரசியற் குழப்ப காலம்' (A Period of Anarchy), அல்லது 'இருண்ட காலம்' (Dark Age) எனலாம்.

ஆயினும் இதனை முழுக்க முழுக்க ஓர் இருண்ட காலமாகக் கொள்ள முடியாது. ஏனெனில் ஒற்றுமையின்மையும், உள்நாட்டுப் போர்களும், கொள்ளைகளும், அரசியல் குழப்பங்களும் நாடு முழு வதிலும் நிறைந்திருந்த போதிலும், இக் காலத்திலும் ஜப்பானிய நாகரிகம் தொடர்ந்து நின்றது. இக் காலத்தில் வளர்ந்த நாக ரிகத்தை ஊன்றி நோக்கினால் இது புலனாகும். ஒரு நாட்டின் பண் பாடு அறுபட்டு, நாகரிகம் மங்கி அல்லது மறைந்து நிற்கும்போது தான் அந் நாட்டின் வரலாற்றுத் தொடர் சங்கிலியும் அறுபடும். அவ்வாறு அறுபட்டு நின்ற காலத்திற்கும் மீண்டும் தொடர்ந்து துளிர் விட்டு வளர்ந்து, தொடரும் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தையே அந்நாட்டின் 'இருண்ட காலம்' என்கிறோம். இவ்வாறு நோக்கின் ஜப்பானிய வரலாற்றில் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியரின் நுழைவால் இருண்ட காலம் ஏற்படவில்லை யெனலாம். அரசவைக் கிழார்களைப் போலவே படைத்தலைவர் களும் 'ஆடம்பர' வாழ்க்கையை மேற்கொண்டனர். இவ்விரு சாரார்க்கும் 'ஆடம்பர' வாழ்க்கை முறையிலேற்பட்ட போட்டி யால் அரசவைக் கிழார்கள் தங்கள் சொத்துக்களை இழந்தனர்.

இவர்களுடைய பண்ணைகள் படைத்தலைவர்களின் கைக்குச் சென்றன. எனவே இவர்கள் தங்களுடைய உயர்மட்ட நிலையிலிருந்து இழிந்து நின்றனர். அரச குடும்பத்தினரும், அரசரும்கூட ஆடம்பர வாழ்க்கையை அளவுக்கு மிஞ்சி மேற்கொண்டதால் பொருளற்றுத் தவித்தனர். ஆனால், அதே சமையத்தில் இவர்களிருந்த உயர்நிலைக்குப் படைத் தலைவர்களும், படைக்குடும்பத்தினரும், இவர்களைச் சார்ந்து நின்ற புது வகையான கிழார்களும் உயர்ந்து நின்றனர். இவ்வாறு கியோத்தோவில் மட்டும் காணப்பட்ட கலைகளும், கலைப்பண்பாடுகளும் உயர்ந்த நாகரிக வாழ்க்கை முறையும், படைத்தலைவர்களிடமும், படைக்குடும்பத்தினரிடமும் மற்றும் பொதுமக்களிடமும் பரவலாகப் பரவியதால் ஜப்பானியப் பண்பாடு அல்லது நாகரிகம் விரிந்து நின்றதேயொழிய மறைந்து விடவில்லை. புதிதாக எழுந்த இவ் வளர்ச்சியின் கரணியமாகப் பல உள்நாட்டுத் தலைவர்களும், பல புதிய நகரத்தினரும் தன்னுரிமையோடு மைய ஆட்சியை மதியாமல் வாழ முற்பட்டனர். இத்தகைய புதிய ஆற்றலுக்கும் பழைய ஆற்றலின் கருத்தாக்களான அரசவைக் கிழார்கள், மடத்தலைவர்கள் முதலியோருக்கும் போட்டியும் பொறாமையும் ஏற்பட்டதன் கரணியமாய் உள்நாட்டுப் போர்களும், கலகங்களும் ஏற்பட்டன. இதனால் பழைய கோட்டை கொத்தளங்கள் அழிக்கப்பட்டு, புதியனவாக முளைத்த படை சார்ந்தோரின் வலிமையும் நாகரிகமும் வளர்ந்தோங்கின. கியோத்தோ அரசவை நாகரிகத்தின் தொட்டிலென்பதற்குப் பதில் முரோமாச்சி சோகன்களின் நாகரிகத் தொட்டிலாக மாறியது.

## முரோமாச்சி நாகரிகம்

### சென் புத்தம் (Zen Buddhism)

இக் காலத்தில் சென் புத்த சமயப் பிரிவு சிறந்து வளரத் தொடங்கியது. இது தொடக்கத்திலிருந்தே படைக்குடும்பத்தினரால் பின்பற்றப்பட்ட ச ம ய ம ா கு ம். இச் சமயத்தைச் சார்ந்த துறவிகள் சமயப் பரப்பூழியர்களாக மட்டுமல்லாமல் சோகன்களுக்கு அறிவுரை கூறுபவர்களாகவுமிருந்தனர். அவர்களால் கட்டப்பட்ட மடங்கள் சீன மொழியின் வளர்ச்சிக்கும் வாழ்க்கைப்பட்டாங்குப் பயிற்சிக்கும் இடங்களாயின. இவர்கள் பல கல்விக் கூடங்களை நடத்தி, பொது மக்களின் கல்வியறிவை குறிப்பாகப் படைக் குடும்பத்தினரின் கல்வியறிவை வளர்த்தனர், இக் கல்வி நிலையங்களுக்குச் சோகன்கள் தாராளமாகப் பணவுதவி செய்தனர். சென் புத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகக் கூடித் தேநீர் அருந்தும் சடங்கு நாளடைவில் சிறப்படையலாயிற்று.

சென் புத்தம் சிறப்படைந்திருந்த காலத்திலும் ஜப்பானில் சிந்தோ மதம் சிறப்புற்று விளங்கியது. பகலவனை வணங்கும் பண்டைய பண்பாடுமிருந்தது. நாடகக் கலை வளர்ந்தது. பலர் கூடி நடனமாடும் நோ (No) நாட்டியம் சிறப்புடன் பரவியது. இந் நாட்டியத்தில் இசைக் கருவிகளும் பல்லியக் கருவிகளும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. மலர்ச் சோடனைக் கலையும், பூங்காக்களை வளர்த்துக் கண்கவர் கலைக்கூடங்களாய் ஆக்கும் கலையும், மலைச் சரிவுகளையும், மேடுகளையும் படிப்படியாய் வெட்டித் தொங்கும் மலர்த் தோட்டங்களை வளர்க்கும் கலையும், இயற்கையின் அழகை நிலைநிறுத்திக் காட்டும் வண்ண ஓவியக் கலையும், படிமக் கலையும் இக்காலத்தில் சிறந்துகாணப்பட்டன. இவற்றை வளர்க்கப் பள்ளிகள் பல ஏற்படுத்தப்பட்டன. சீன மொழியின் செய்யுட்களும், இலக்கியங்களும் சீன மெய்யறிவர் சுஃசி (Chu Hsi)யின் கன்ஃபூசிய மதத்தின் மெய்ப்பொருள் விளக்கங்களும், வரலாற்றியலும் (Historiography) ஜப்பானில் வளர்ச்சியுற்றன. மற்போர் செய்தல், கலையழகோடு கூடிய தரமான வாள்களைச் செய்தல் முதலியனவும் வளர்ந்தன. இரும்பைக் காய்ச்சிச் சூடேற்றும் தரத்தைக் கொண்டு பலதரப்பட்ட வாள்களைச் செய்யும் கமுக்கம் (இரகசியம்) தந்தைக்குப்பின் மைந்தனுக்கே சொல்லிக் கொடுக்கப்பட்டது. இக் கால வாள்கள் இன்றும் பொலிவுடன் காட்சியளிக்கின்றன.

இக் காலத்துச் சோகன்கள் சீனவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். எனவேதான் ஜப்பானின் பண்பாட்டில் சீனவை யாண்ட சங் (Sung), யங் (Yung) மரபினரின் சாயல் படிந்திருக்கிறது. அஃசிககா சோகன்கள் தங்கள் தூதுவர்களை சீன அரசவைக்கு அனுப்பினர்கள். இவ் வகை அயல் நாட்டுத் தொடர்பால் ஜப்பான் நாட்டு வாணிகம் செழித்தது. இதனல் பல புதிய வணிக நகரங்கள் தோன்றின. வணிகர்களின் கழகங்களும், வட்டிக் கடைக்காரர்களும் ஜப்பானின் புதிய நகரங்களில் வளர்ந்தனர். நகர வாழ்க்கை முறையும் நகர மக்களும் வளர்ந்தனர். கொபே (Kobe), ஒசாகா (Osaka), கியோத்தோ ஆகிய நகரங்களைப் போன்று பல புதிய நகரங்கள் தோன்றின. மாநிலத் தலைநகர்களிலும், புதிதாகத் தோன்றிய வணிக நகரங்களிலுமிருந்த முதலாளிகள் கடல் வணிகத்தை மேற்கொண்டு சீனவோடும் கொரியாவோடும், தென்கிழக்காசிய நாடுகளோடும் வாணிகம் செய்தனர். இவ் வணிகர்களுக்கும், ஜப்பானிய அரசுக்கும் சீன, செம்பு நாணயங்களை அச்சிட்டு வழங்கியது. இவ்வாறு வளர்ந்த செல்வமும், செல்வாக்கும் அஃசிககாக்களின் புகழை வளர்த்து அரசரின் புகழை மங்க வைத்தது.

இவ்வாறு புதுமெருகுடன் வளர்ச்சி பெற்ற ஜப்பானிய நாகரிகத்தால் சமூகத்திலும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. புதிதாக எழுந்த குடும்பங்கள் பழையஅரசவைக் குடும்பங்களையும் பழைய கிழார்களையும் எதிர்த்து நின்றன. எய்யன், காமகுராக் காலங்களில் பெண்களுக்குக் குமுகத்திலிருந்த உயர்வு இக் காலத்தில் மங்கி விட்டது. முரோமாச்சிக் காலத்தில் பெண்கள் ஆண்களுக்கு எல்லா வகையிலும் அடங்கியிருந்தனர். தாய்க்குத் தலைமகனைத்தான் பிறங்கடையாகத் தேர்ந்தெடுக்கும் முறையும் மாற்றம் பெற்றது. தகுதியுடையோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குமுகம் நாகரிகத்தின் உச்சிக்குச் சென்று விட்டாலும் ஏழை ஏழையாகவே இருந்தான். வரிச் சுமையாலும், வேலைச் சுமையாலும் வாடிய ஏழை இத்தகைய இன்ப வாழ்க்கைகளுக்குப் புறத்தே ஒதுக்கப்பட்டான். இவனைப் பஞ்சமும் பட்டினியும் ஆட்கொண்டன. இதனால் வன்செயலிலும், வழிப்பறியிலும், கடற் கொள்ளையிலும் பலர் ஈடுபட்டனர். வீரர்களின் உயர் வாழ்வும், அவர்களின் வீர இலக்கணமும் வளர்ந்து நின்றன; ஏழையின் வாழ்வு இழிந்தே நின்றது.

அஃசிககாக்களின் அதிகாரம் தொடர்ந்து நிலைத்திருக்க முடியவில்லை. முரோமாச்சியில்தான் அவர்களுடைய வலிமையும், பெயரும், புகழும் விளங்கியதேயொழிய மாவட்டங்களிலும், ஊர்ப்புறங்களிலும் இவர்களை மதித்து நடப்பவர்கள் இல்லை. எனவே நாளடைவில் சோகன் ஓர் எளிய கிழானைப் போலவே மதிக்கப்பட்டார். அதிகாரங்கள் யாவும் பாசறையின் படை வீரர்களின் கையிலேயிருந்தன. சோகன் அவர்களின் கைப்பொம்மையாகவே விளங்கினார். பேரதிகாரத்தின் சின்னங் களாய் விளங்கிய படையினர் தங்களுக்கென ஒரு தனித்தன்மையை (Bushido = The way of warrior) ஏற்படுத்திக் கொண்டு வீரத் தத்துவத்தை உண்டாக்கினர். இவ்வாறு முரோமாச்சிக் காலத் தினிறுதியில் ஜப்பான் பலதரப்பட்ட ஆற்றல்களால் சிதைந்து காணப்பட்டதால் நாட்டை ஒற்றுமைப்படுத்தும் வீரர்கள் பெரிதும் தேவைப்பட்டனர்.

### முப்பெரும் அமைதி வீரர்கள்

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் படைத்தலைவர்களின் பிடியிலிருந்தும், மற்ற உள்நாட்டுத் தலைவர்கள், பெருநிலக் கிழார்கள் போன்ற தன்னலக்காரர்களின் பிடியிலிருந்தும் மீட்டு ஜப்பானை ஒன்றிணைத்த பெருமை கீழ்க்காணும் முப்பெரும் வீரர்களைச் சாரும். கி. பி. 16ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் இவ் வீரர்கள் தோன்றவில்லையானால் இன்றைய ஒன்றுபட்ட புதிய

ஜப்பானை நாம் காணமுடியாது; ஆங்காங்கே தோன்றிய மூன்றுந் தரமான படைக்குலத்தினரும் தங்கள் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட முற்பட்டனர். அத்தகைய மூன்றுந்தரப் படைக் குலத்திலிருந்து தோன்றிய மூன்று வீரர்கள் தான் நொபுநகா (Nobunaga), இஃதேயொசி (Hideyoshi), இயேயாசு (Iyeyasu) என்போ ராவர். இவர்களில் கடைசியிருவரால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் முறைதான் 19ஆம் நூற்றுண்டின் மைய காலம்வரை ஜப்பானில் சிறந்து காணப்பட்டது.

நொபுநகா (Nobunaga = 1534—1582 A. D )

இவருடைய முழுப்பெயர் ஒதோநொபுநகா (Odo-Nobunaga) என்பதாகும். இவர் தைராக்களில் புகழ் வாய்ந்த ஒதோசிக்கஃசானி (Oda Chikaxani) என்பவரின் கொள்ளுப்பெயரராவர். தைராக்களுக்கும், மினமொத் தோக்களுக்குமிடையே நடந்த போரில் ஒதாசிக்கஃசானி இறந்து விட்டார். கைம்பெண்ணான அவர் மனைவியும் அவருடைய மகனும் ஓர் ஊர்த்தலைவன் வீட்டில் அடைக்கலம் புகுந்தனர். ஊர்த்தலைவன் அக் கைம்பெண்ணை மணந்து கொண்டான். அவர் மகனே சிந்தோ சமயக் குருவாக மாறினான். அவர் மகன் வழியில் தோன்றிய அனைவரும் சிந்தோ சமயக் குருமார்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த ஊராகிய ஒதோ (Oda) என்பதின் காரணியமாக அக் குடும்பத்தில் தோன்றிய ஒவ்வொருவர் பெயருக்கு முன்பும் ஒதோ என்ற சொல் அடைமொழியாக நின்றது. அவர்களில் ஒருவர் ஒதாநொபு இதே (Odanobu Hide) என்பவராவார். இவர் தன் முன்னோர்களைப் போலவே தம் குடும்பத்தினரைப் படை வீரர்களாக மாற்ற விரும்பித் தன் குருப் பட்டத்தைத் துறந்தார். தன் முயற்சியால் தன் குடும்பத்தை ஒரு சிறந்த படைக்குலமாக மாற்றி ஓரளவு செல்வாக்கைத் தேடித் தன் மகனாகிய ஒதோநொபுநகாவுக்கு விட்டுச் சென்றார். நொபுநகா தன் குடும்பத்தினர் எவருக்குமில்லாத பெருவலிமையையும், வீர வுணர்ச்சியையும் பெற்றிருந்தார். இடைவிடாத் தன் முயற்சியால் சிறந்த ஒரு பெரும்படைக்குத் தலைவரானார். தன் நாடெங்கிலும் காணப்பட்ட குழப்பங்களையடக்கிச் சிதறிக் கிடந்த ஜப்பானைத் தன் தோள் வலிமையால் ஒன்றிணைக்க விரும்பினார். இவருடைய நிலமானியம் ஒன்சுத்தீவின் மையத்தில் அமைந்திருந்ததால் அத் தீவின் நாற்புறத்திற்கும் நடுநாயகமாக இது விளங்கியது. மேலும் பேரரசர் வாழும் கியோத்தோவுக்கு மிக அண்மையில் இஃதிருந்ததால் இவருடைய பெயரும் புகழும் அன்றைய ஜப்பானை ஆண்ட 104ஆம் மிகாடோவான கோநாரா வுக்கு (Go-nara = 1536—1557 A. D.) எட்டியது. ஆனால்,

அப்பேரரசர் இவ் வீரனின் புகழை உணர்ந்து இவரைத் துணைக்கு அழைக்குமுன்பே 1557ஆம் ஆண்டில் இறந்து விட்டார். அவருக்குப்பின் 105ஆம் மிகாடோவான ஓகிமாச்சியின் (Ogimachi) காலத்தில் அஷிககா யொஷிஃபுசா (Ashikaga Yoshifusa) என்பவர் சோகனாக இருந்தார். இவரும் மிகாடோவும் திறமை யற்றவர்களாகக் காணப்பட்டனர். எனவே மாநில ஆளுநர் களாக இருந்த இளவரசர்கள் மைய ஆட்சிக்குக் கட்டுப்படாமல் தனித்தியங்கினர். இவர்கள் மிகாடோ அல்லது சோகன் ஆகி யோரின் இசைவில்லாமலே ஒருவருக்கொருவர் போரிட்டுத் தங்கள் நிலப்பரப்பை விரிவு படுத்திக் கொண்டனர். இத்தகைய இளவரசர்களில் கீழ்க் கண்டவர்களை முதன்மையானவர்களாகக் கொள்ளலாம்.

இமாகவா யொசிமொதோ, ஓசோ புசியாசு, தகேதா சிங்கன், உசுகி கென்சின், மோரிமொதோனாரி முதலியோராவர். இவர்களில் மிகவும் திறமை படைத்தவன் மோரி மொதோனாரி யாவான். இவன் மேற்கண்ட இளவரசர்கள் ஆண்ட பதினாறு மாநிலங்களை வென்று ஒன்றிணைத்துத் தானொரு பேரரசனைப் போல் விளங்கினான். அம் மாநிலங்கள் யாவும் கிட்டத்தட்ட குயூசுத்தீவு வரையில் பரவி யிருந்தன. எனவே இக் காலத்தில் இத்தீவு முழுவதும் உள் நாட்டுப் போர்கள் நடப்பது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. இதைப் போலவே மொதோசிகா என்பவன் சிக்கொக்குத் தீவிலுள்ள இளவரசர் பலரை வென்று அத் தீவை தன் வயப் படுத்திக்கொண்டு ஒரு பேரரசரைப்போல் ஆண்டான். இவர்களைத் தவிர, பெரிதும் சிறிதுமான சிற்றரசர்கள் பலரும், படைவீரர் களும் குறுநில மன்னர்களைப் போல் தங்கள் ஆளுகைக்குட்பட்ட நிலங்களைத் தன்னிச்சையாக ஆண்டு வந்தனர். இவர்கள் தங்களைப் பாதுகாப்போருக்கல்லாது எத்தகைய திறையை (கப்பத்தை)யும் பேரரசருக்குக் கட்டுவதில்லை. அரசவையிலிருந்த நிலமானியக் கிழார்கள் சிலர் தங்களைப் பெருநிலக் கிழார்கள் (Dimyo) என்று அழைத்துக் கொண்டு தாங்களும் அரசரது பிடியிலிருந்து விலகித் தன்னிச்சையாக வாழ முற்பட்டனர்.

இத்தகைய குழப்பமான நிலை ஜப்பான் முழுவதும் நிலவி யிருந்த காலத்தில்தான் நொபுநகாவும் தன் படைவலிமையையும், செல்வாக்கையும் எதேச்சையாக வளர்த்துக் கொண்டார். ஓவாரி மாநிலத்திலிருந்த தனது சிறிய நிலப்பரப்பைப் பத்தாண்டுக் காலத்திற்குள் பெரிதாக வளர்த்துக் கொண்டு கியோசோ என்னு மிடத்தில் ஒரு வலுவான கோட்டையைக்கட்டி ஒரு சிறந்த படை யாட்சியை ஏற்படுத்தினார். அவர் படையில் பல சிறந்த

தளபதிகள் தோன்றினர். அவர்களில் முதன்மையானவர்கள் சிபாதா (Shipata), சென்ரோகு (Genroku), சகுமா யெமோன் (Shakuma yemon), இதே யொசி (Hide yoshi) ஆகியோராவர். இவர்களில் இதே யொசி போர்த் திறமையிலும், நுண்ணறிவிலும் நொபு நகாவைக் காட்டிலும் சிறந்து காணப்பட்டான். சிறிது காலத்திற்குள் தன்னுடைய படை வலிமையால் நொபுநகா ஓவாரி மாநிலம் முழுவதையும் வென்று, அதன் அண்மையிலுள்ள மினோ (Mino), ஓமி (Omi), இசி (Ise) ஆகிய மாநிலங்களையும் வென்முன். இவ்வாறு நான்கு மாநிலங்களுக்கும் தலைவனானபின் ஜப்பான் நாடு முழுவதையும் தன் ஆட்சிக்குட்படுத்த வேண்டும் என நொபுநகா விழைந்தான். கி.பி. 1567ஆம் ஆண்டில் ஜப்பானில் ஏற்பட்ட பெருங்கலகத்தில் சோகன் பதவியேற்ற யொசித்தேரு (Yoshiteru) என்பவன் கொல்லப்பட்டான். அக் கலகத்தையடக்கி கியோத்தோவில் அமைதியை நிலைநாட்டுவதற்காக நொபுநகா மிகாடோவால் கியோத்தோவுக்கு அழைக்கப்பட்டான். நொபுநகா கி.பி. 1568ஆம் ஆண்டில் தனது முப்பதாயிரம் படை வீரர்களுடன் கியோத்தோவுக்குச் சென்று கலகத்தையடக்கி அமைதியை நிலைநாட்டினன். (கொல்லப்பட்ட) சோகனுடைய தம்பியாகிய யொசியாகி (Yoshiaki) என்பவரோடு ஓர் உடன் படிக்கை செய்து கொண்டு நொபுநகா அவரை 1568ஆம் ஆண்டில் சோகன் பதவியிலமர்த்தினர்.

### அசிககாக்களின் முடிவு (கி.பி. 1573)

கி.பி. 1568ஆம் ஆண்டில் நொபுநகாவால் சோகனுக்கப்பட்ட யொசியாகி கி.பி. 1573 வரை சோகனுக இருந்தான். அவ்வாண்டி னிறுதியில் நொபுநகா அவனைச் சோகன் பதவியிலிருந்து விலக்கி விட்டான். இவ்வாண்டுடன் அசிககாக்களின் ஆளுமை ஜப்பானில் முடிவுற்றது. பதவியிலிருந்து நீக்கப்பட்ட யொசியாகி 1582ஆம் ஆண்டில் தற்கொலை செய்துகொண்டான். ஜப்பானின் ஆட்சி யதிகாரத்தைக் கைப்பற்றிய நொபுநகா தன்னுடைய தளபதி களான இதேயொசி, இயேயாசு ஆகியோரின் துணைகொண்டு உள்நாட்டுக் குழப்பங்களை அடக்க முற்பட்டான்.

நொபுநகா தனது தளபதியாகிய இதேயொசியைப் படைத் தளபதியாக்கினன். இத் தளபதி தன் திறமையால் கியோத் தோவில் படையேந்திக் கலகம் விளைவித்த புத்தத் துறவிகளை யடக்கியொடுக்கினன். அவர்கள் அதிகமாக வாழ்ந்து வந்த ஒன்சுத்தீவின் கீழ்ப்பகுதியிலும், கிழார்கள் அதிகமாக வாழ்ந்து வந்த மையப் பகுதிகளிலும் தளபதி இயேயாசுவை அனுப்பி அமைதியை நிலைநாட்டினன். நாடெங்கிலும் படைப்

பாசறைகளையும், காவற்கோட்டைகளையும் அமைத்தான். மடங்களையே தங்கள் போர்ப் பாசறைகளாகப் புத்தத் துறவிகள் கொண்டிருந்ததால் அத்தகைய மடங்களனைத்தையும் நொபுநகா கைப்பற்றிக் கொண்டான். அவற்றுள் சிறப்பு வாய்ந்தது ஓசாகோவிலிருந்த மடமாகும். இவ்வாறு கலகத்திலீடுபட்ட, படையேந்திய புத்தத் துறவிகளையும், அவர்களது மடங்களையும் அழித்த நொபுநகாவை சேசுட்டு (Jesuits)ப் பாதிரிகள் போற்றிப் புகழ்ந்தனர். நொபுநகா புதிதாக நுழைந்த கிறித்தவச் சமயத்தையும் அச் சமயத்தைப் பரப்பும் ஊழியர்களையும் புரந்ததால் அமைதியை நிலைநாட்ட நினைக்கும் தன் கொள்கைக்கு அவர்கள் ஊன்றுகோலாக விருப்பார்களென நம்பினான். ஆனால், இக் கிறித்தவப் பாதிரிமார்கள் ஐயப்படும் வகையில் நடக்கத் தொடங்கியதால் கி.பி. 1579ஆம் ஆண்டில் கியோத்தோவில் அவர்களைச் சிறை செய்து, கலகக்காரர்களைத் தன் பக்கம் கொண்டு வராவிடில் நாடு கடத்துவதாக அச்சுறுத்தி விடுவித்தான். இதற்குப்பின், தான் இறக்கும்வரை கிறித்தவப் பாதிரிமார்களின் நண்பராகவே இருந்தான். கியோத்தோவிலும் அசூசியிலும் (Azuchi) மாதாக் கோயில்களைக் கட்டுவதற்கு இசைவளித்துப் பணவுதவியும் செய்தான். இதனால் கிறித்தவச் சமயப் பரப்பூழியர்கள் தங்கள் சமயத்தை ஐப்பானில் மிக விரைவாக வளர்த்துக் கொண்டார்கள். கி. பி. 1582ஆம் ஆண்டில் ஐப்பானில் கிறித்தவச் சமயத்திற்கு மதம் மாறிய மூன்று இளவரசர்களின் தலைமையில் ஒரு குழு போப்பாண்டவரைக் காண அனுப்பப்பட்டது. இக்குழுவினர் போர்த்துக்கல், சுபெயின் ஆகிய நாடுகளை ஆண்ட இரண்டாம் பிலிப்பால் (Phillip II) வரவேற்கப் பட்டனர். இவர்கள் உரோமாபுரியை அடைந்ததும் போப்பாண்டவரின் மெய்க்காப்பாளர்களும், உரோம் நாட்டுக் கிழார்களும் மாபெரும் வரவேற்பளித்தனர். அப்போது போப்பாக இருந்த பதிமூன்றும் கிரிகோரி (Pope Gregori XIII) இவர்களுக்கு விலையுயர்ந்த ஆடைகளை வழங்கி வாடிகன் மாளிகையில் வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் சென்றார்.

இவ்வாறு நொபுநகா ஜப்பானின் ஒரு தலைசிறந்த வீரனாக விளங்கித் தானே நேரடியாகப் பல போர்களை நடத்தி, அவற்றில் வெற்றியும் கண்டு புகழோடு வாழந்தபோதிலும் தன்னை அரசனென்றோ, சோகனென்றோ அழைத்துக் கொள்ளவில்லை. ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும், போர்களையும், அமைதியையும் மிகாடோவின் பெயராலேயே செய்தான். தான் தைராக்குலத்தில் தோன்றியவனாயினும் மினமொத்தோக்களிடம் நட்புறவோடிருந்தான். அன்றைய சூழ்நிலையில் ஜப்பானை ஒன்றிணைக்கும்

ஒரே நோக்கத்துடன்தான் கலகம் விளைவித்த புத்தத்துறவிகளையும், மாநில ஆளுநர்களையும், இளவரசர்களையும் அடக்கி யொடுக்கி னானேயொழியத் தானொரு அரசனாகவோ அல்லது சோகனாகவோ வரவேண்டும் என்னும் நோக்கத்திற்காக அன்று. எனவே இவனுடைய சேவையைப் பெரிதும் போற்றி மிகாடோ இவனுக்கு தனியமைச்சர் (Nai-Daijin) பதவியை அளித்தார். அக் காலத்தில் இப் பதவிக்கு எத்தகைய அதிகாரமும் இல்லை. இது ஒரு மதிப்பியலான (Honorary) பதவியாகவே கருதப்பட்டது.

## நொபுநகாவின் முடிவு

நொபுநகா இளவரசர் பலரை அடக்கி யொடுக்கிய போதிலும் சோசு (Shosu) மாநிலத்தின் இளவரசர் மட்டும் அவனுக்கு அடங் காமல் இருந்தார். அவரை யடக்குவதற்காக இதேயொசியின் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பினான். இப் படை கி.பி. 1578ஆம் ஆண்டில் கியோத்தோவுக்கு மேற்கே யுள்ள சோசு மாநிலத்தை நோக்கிச் சென்றது. ஆயினும் ஏறத்தாழ ஐந்தாண்டுகள் வரை அவ் விளவரசரை நொபுநகாவால் அடக்க முடியவில்லை. ஏனெனில் அவ் விளவரசரின் கோட்டை விரைவாக ஓடும் கொபே (Kobe) ஆற்றாலும், மற்றும் ஆழமான இரண்டு ஏரி களாலும் சூழப்பட்டிருந்தது. கடைசியாக நொபுநகா தானே போர்க்களத்திற்குச் சென்று ஆற்றின் குறுக்கே அணைகட்டி ஆற்று நீரைக் கோட்டையினுள் புக வைத்துக் கோட்டையை நீரினுள் மூழ்க வைத்து எதிரியைப் பணிய வைக்கத் திட்டமிட்டான். தன் தளபதிகளை வேறு வேறு பாதைகளின் வழியாக வந்து தன்னைச் சந்திக்கும்படிக் கூறிவிட்டு நொபுநகா தான் முன்னே சென்று அன்னோசோ (Honnojo) என்னுமிடத்தில் ஒரு கோயிலில் கமுக்கமாகத் தங்கித் தன் தளபதிகளை எதிர்பார்த்துக் கொண்டி ருந்தான். அத் தளபதிகளில் ஒருவனான அகேச்சி (Akechi) என்பவன் திடீரென அவனுக்குப் பகைவனாக மாறி அவன் தங்கியிருந்த கோயிலைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டான். அவ் விரண்டகச் செயலால் அவ் வெரித்தீயின் நடுவில் விழுந்து நொபுநகா கி. பி. 1582ஆம் ஆண்டில் தற்கொலை செய்து கொண்டு மாண்டான். சிதறிக் கிடந்த ஐப்பானிய நாட்டைத் தன் தோள் வலிமையால் ஒன்று சேர்த்து சமைதியை நிலவச் செய்து, வேளாண்மை, கலைகள், இலக்கியம் ஆகியவற்றை வளர்த்த மாவீரன் நொபுநகாவின் இறப்புக்குப்பின் ஐப்பானின் வரலாற்றில் மீண்டும் ஒரு மாற்றம் ஏற்பட்டது.

தொயோதொமி இதேயொசி
(Toyotomi-Hideyoshi—கி. பி. 1536—1598)

நொபுநகாவின் இறப்புக்குப் பின் அவனுடைய பணிகளைத் தொடர்ந்து, ஜப்பானை ஒருமுகப்படுத்தச் செயலாற்றியவர்கள் அவனுடைய தானைத் தலைவர்களாகிய இதேயொசியும், இயேயாசுவும் ஆவர். இதேயொசி வீர மரபிலோ, செல்வக் குடியிலோ தோன்றியவனல்லன். மிக எளிய ஏழைக் குடும்பத்தில் பிறந்த இவன் தன் திறமையால் உயர்ந்து, நொபுநகாவின் நம்பிக்கைக்கு உரியவனாகி, அவன் வலக் கையாகத் திகழ்ந்தான். எனவேதான் இவனை வரலாற்றாசிரியர்கள் மாவீரன் நெப்போலியனுக்கு ஒப்பாகக் கூறுகின்றனர். தனது ஆறும் அகவையில் தந்தையை இழந்த இவன் வறுமையின் பிடியிலே சிக்கித் தனது பதினாறும் அகவை வரையில் பசியாலும், பட்டினியாலும் வாடி வளர்ந்தான். இதற்குப்பின் நொபுநகாவின் படையில் சேர்ந்து தன் திறமையாலும், நுண்ணறிவாலும் தளபதியாகத் திகழ்ந்தான். நொபுநகாவின் எதிரியான தேருமொதோவிடம் (Terumoto) சமைதி செய்துகொண்டு நொபுநகாவின் திடீர் இறப்பால் தலைநகரில் ஏற்பட்ட கொந்தளிப்பை அடக்க முற்பட்ட இவனைக் கொல்லுவதற்குப் பலர் முயன்று தோற்றனர். தன் தலைவனின் கொலைக்குக் கரணியமாயிருந்த அகேச்சியைத் தோற்கடித்து உடந்தையாயிருந்த பலரையும் வென்றான்.

இவ்வாறு தலைநகரில் அமைதியை ஏற்படுத்தியபின், இதேயொசி தன் தலைவனாகிய நொபுநகாவின் திட்டங்களை நிறைவேற்ற முற்பட்டான். நொபுநகா சீனா, கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளை ஒரு பாய்போல் சுருட்டித் தன் அக்குளில் வைத்துக் கொள்ளப் போவதாக அடிக்கடிக் கூறுவான். இதனைச் செயல்படுத்தி, சீனாவையும் கொரியாவையும் வென்று ஜப்பானோடு சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இதேயொசி இந்நாடுகளின் மீது படையெடுக்கத் திட்டமிட்டான். இச் சமையத்தில் இறந்துபட்ட நொபுநகாவின் புதல்வர்கள் இதேயொசிக்கு எதிராகக் கலகம் விளைவிக்கத் தொடங்கினர். ஆனால், மற்றொரு தளபதியான தொகுகவா இயேயாசுவின் நன் முயற்சியால் 11—12—1584-ல் நொபுநகாவின் மகனான நொபுகத்சுக்கும் (Nobukatsu) இதேயொசிக்கும் சமைதி உடன்படிக்கை ஏற்பட்டது. இதற்குப்பின் தொகுகவா இயேயாசுவும், நொபுநகாவும் ஒன்றிணைந்தனர். கி. பி. 1585ஆம் ஆண்டில் படையேந்திக் கலகம் விளைவித்த புத்தத் துறவிகளை அடக்கியொடுக்கினர். 1586ஆம் ஆண்டில் குயூசுத் தீவின் மீது படையெடுக்க அணியமாயினர். இத் தீவு அக் காலத்தில் உரோமன்

கத்தோலிக்கர்களின் தலைமை யிருப்பிடமாகத் திகழ்ந்தது. 1587ஆம் ஆண்டில் ஓரிலக்கத்து முப்பதாயிரம் படைவீரர்களுடன் சிம்மனோ சிக்கியின் மீது படையெடுத்து அங்கிருந்த நிலமானியக் கிழார்களை வென்று ஒடுக்கினான். அதே ஆண்டில் பங்கோ, சத்சுமா ஆகிய இடங்களிலிருந்த சிற்றரசர்களையும் வென்றான். இவ்வாறு குயூசுத் தீவின் முகாமையான இடங்களை வென்ற பின் ஓசாகாவுக்குத் திரும்பினான். ஓசாகாவில் பெயர் பெற்ற ஒரு மூன்றடுக்குக் கோட்டையைக் கட்டி அதன் நாற்புறமும் இருபதடி ஆழமுள்ள அகழியொன்றை வெட்டினான். ஐரோப்பிய முறையில் தங்க, வெள்ளி நாணயங்களை வெளியிட்டான். கிறித்தவ சமயம் தன் நாட்டில் பரவுவதால் சுபானியர் அல்லது போர்த்துகீசியர் தன் நாட்டின் மீது படையெடுத்து இதனைக் கவர்ந்து கொள்வார்களோ என்ற அச்சம் அவனுக்கிருந்தபோதிலும் தன் நாடு பொருளியல் துறையில் முன்னேற வேண்டுமென்னும் நோக்கத்திற்காக ஐரோப்பியரோடு உறவு கொண்டு அயல் நாட்டு வாணிகத்தை வளர்த்தான். இதனால் ஜப்பானியரின் கடல் வணிகம் மொகாகோ, பிலிப்பைன் தீவுகள், கம்போடியா, அன்னம் முதலிய நாடுகளிலெல்லாம் பரவியது. உள்நாட்டுப் பகைவர்களை அடக்கி யொடுக்கிய இதேயொசி தன் உள்ளத்திலே இருக்கும் ‘பரந்த ஜப்பானை’ அவனால் மறக்க முடியவில்லை. அண்மையிலுள்ள கொரியாவை எப்படியும் வென்று, அதனைத் தனது நுழை வாயிலாகப் பயன்படுத்திச் சீனவை வெல்ல வேண்டுமென்பது அவனுடைய திட்டமாகும். இச் சமையத்தில் கவாந்தோ என்னுமிடத்திலிருந்த பழைய ஓசோக் குடும்பத்தினர் இவருக்கு எதிராக பெருங் கலகம் விளைவித்தனர். இவர்களை அடக்குவதற்கு 1590 மார்ச்சுத் திங்களில் தொகுகவா இயேயாசு தலைமையில் ஈரிலக்கம் படை வீரர்களை அனுப்பினான். நான்கு திங்கள் முற்று கைக்குப் பின் ஓசோக் குடும்பத்தின் தலைவனான ஓதாவாரா (Odawara) இயேயாசுவிடம் அடிபணிந்தான். இச் சமையத்தில் தான் இதேயொசி கவாந்தோவைச் சுற்றிலு முள்ள எட்டு மாநிலங்களைத் தளபதி இயேயாசுவுக்குக் கொடுத்து அவற்றின் தலைநகராக எதோ (Yedo) என்னுமிடத்தை ஏற்படுத்தினா னென்பது மரபு வழிச் செய்தியாகும். இந்த எதோதான் இன்றைய ஜப்பானின் தலைநகரான தோக்கியோ வாகும். ஓசோக் களுக்குக் கடைசிச் சாவுமணி யடித்துத் திரும்பிய இயேயாசுவை இதேயொசி பெரிதும் போற்றினான். இவ்வாறு ஜப்பான் தீவுகள் முழுவதையும் ஒன்றன் பின் ஒன்றாக வென்று, ஒருங்கிணைத்த போதிலும், நொபுநகாவும் இதேயொசியும், இயேயாசுவும் ஆலிவர் கிராம்வெல் போல அரசரை ஒழித்து, ஜப்பானின் அரச

பதவியை இவர்கள் ஏற்காமலும் அவருக்கிருந்த தெய்விக மதிப்பிற்குச் சிறிதேனும் குந்தகம் ஏற்படுத்தாமலும் வலிமை பொருந்திய, ஒன்றுபட்ட ஜப்பானை ஏற்படுத்திச் சென்றார்க ளென்று தளபதி பிரிங்க்லி (Captain Brinkly) என்பவர் பாராட்டு கிறார். இவர் இம் மூவரையும் ஃபார்ஃபாக்ஸ் (Fairfax), கிராம்வெல் (Cromwell), மாங்கு (Monk) ஆகிய தோள் வலிமை மிக்க வீரர்களுக்கு முறையே ஒப்பிடுகிறார்.

## கொரிய, சீனப் படையெடுப்பு (கி.பி. 1592)

இத்தகைய பெரு வெற்றிக்குப் பின்னும் கொரியாவையும், சீனாவையும் வெல்ல வேண்டுமென்ற எண்ணம் அவன் நெஞ்சிலோர் ஆலயமாய் நின்றது. சீனாவின் மீது படையெடுப்பதற்கு முன் கொரியாவின் பேரரசருக்கு ஒரு கடிதமெழுதி, தான் சீனாவின்மீது படையெடுத்துச் செல்லத் தன் படைகளுக்கு அவர் நாட்டின் மூலமாக வழிவிட வேண்டுமென்றும், படையுதவி வேண்டு மென்றும் கோரினான். அச் சமையத்தில் சீனாவை ஆண்டுகொண் டிருந்த மிங் மரபின் பெரு வலிமையை நன்கறிந்த கொரிய அரசர் இதேயொசியின் படையெடுப்பை இழித்துக் கூறி இசைவு தர மறுத்தார். இதேயொசி கடலோரமுள்ள மானியதாரர்களுக்கு ஆணை யனுப்பி, கப்பல்களைக் கட்டி உதவுமாறு கூறினான். கடலோரங்களிலுள்ள மீனவர் குடும்ப இளைஞர்களை ஒன்று திரட்டினான். தனது பெயர் பெற்ற 9200 வேட்டைஃக வீரர்களைக் கப்பல்களில் ஏற்றினார். மூன்றிலக்கம் வீரர்களைக் குயூசுத் தீவின் வட மேற்குப் பகுதியை நோக்கி அனுப்பினான். இவனுக்குக் கிடைத்த கப்பல்கள் ஆழிப் பேரலைக்கும், புயலுக்கும் தாங்க முடியாதவை; அவை படகுகளைப் போன்றவையே. எனவே போர்த்துக்கீசியரிடமிருந்து பெரிய நாவாய்களைப் பெற முயற்சி செய்தான். தான் திரட்டிய படைகளை மூன்று பிரிவாகப் பிரித்து ஒன்றைக் கொரியாவின் தலைநகரான செவுலை (Seoul) நோக்கிச் செல்லும்படி அனுப்பினான். மற்றொரு பிரிவு யாலு ஆற்றோரமாக மஞ்சூரியாவின் எல்லையை நோக்கிச் சென்றது. மூன்றாவது பிரிவு ஃபூசானில் (Fusan) நிறுத்தி வைக்கப்பட்டது. முதற்பிரிவு செவுலைக் கவர்ந்தவுடன், இரண்டாவது பிரிவு யாலு ஆற்றைக் கடந்து மஞ்சூரியாவைக் கைப்பற்ற வேண்டும். மூன்றாவது பிரிவு தைதாய் ஆற்றுமுக வழியைக் கடந்து பிங்கியாங்கில் மூலத் தளப் படையாக நிற்க வேண்டுமென்பது இதேயொசியின் திட்டமாகும். இத்தகைய மாபெரும் அயலகக் கப்பற்படையெடுப்பை இவனுக்குப் பின் நெப்போலியனும், மார்சல் ஒயா மாவுந்தான் மேற்கொண்டனரென்று வரலாற்றாசிரியர்கள் புகழ்கின்றனர்.

இதே மாதிரியான திட்டத்தைத்தான் கி.பி. 1895ஆம் ஆண்டில் நடந்த சீன ஜப்பானியப் போரில் ஜப்பானியர் மேற்கொண்டனர்.

போரின் நிகழ்ச்சி

24—5—1592-ல் இதேயொசியின் முதற் பிரிவிலிருந்த 18,700 படை வீரர்கள் கொரியாவில் நுழைந்தனர். மறுநாள் ஃபூசான் கோட்டை தவிடு பொடியாகியது. சில நாட்களுக்குப் பின் மற்றொரு பிரிவிலிருந்து 20,800 வீரர்கள் ஃபூசானில் வந்து இறங்கிக் கொரியாவின் கிழைக் கடற்கரையோரமாகவே வடக்கு நோக்கிச் சென்றனர். 12—6—1592-ல் தலைநகரான செவுல் ஜப்பானியரின் வசமாயிற்று. தலைநகரைப் பறிகொடுத்த கொரியர் யாலு ஆற்றைக் கடந்தோடி, சீனுவுக்குச் செய்தியனுப்பி உதவி கோரி நின்றனர். தனது திட்டத்தின் முதல் கட்டம் வெற்றி பெற்றதைக் கண்ட இதேயொசி கி. பி. 1594ஆம் ஆண்டில் ஜப்பானியப் பேரரசர் சீனத் தலைநகரான பீகிங்கின் அரியணையிலமர்ந்து சீனுவைத் தனது கிழார்களுக்கு மானியங்களாகப் பகிர்ந்தளிப்பாரென எழுதினுன். ஆனுல், போரின் போக்கில் திடீர் மாற்றம் ஏற்பட்டது. கொரியரிடம் குறைந்த எண்ணிக்கையில் போர்க் கப்பல்களிருந்த போதிலும் அவை உருவிலும், வலுவிலும் ஜப்பானியரின் கப்பல்களைவிட மிகவும் பெரியவையாம். எனவே ஜப்பானியர் செவுலை வென்று முன்னேறிச் சென்றபின் கடலில் மறைந்திருந்த கொரியப் போர்க் கப்பலிலிருந்த எண்பது கொரியர்கள் திடீரென ஃபூசானை முற்றுகையிட்டனர். அங்கிருந்த இருபத்தாறு ஜப்பானியக் கப்பல்களைத் தீக்கிரையாக்கி எஞ்சிய ஜப்பானியர்களைக் கொன்றனர். திடீரென ஏற்பட்ட இந் நிகழ்ச்சியால் திட்டமிட்டபடி முன்னேற முடியாத ஜப்பானியப் படைகளை இங்குமங்குமாகக் கொரியர்கள் தாக்கினர். பிங்கியாங் நோக்கிச் சென்ற மூன்றும் பிரிவைத் தாக்கி எழுபது கப்பல்களை மூழ்கடித்தனர். கொரில்லாப் போர் முறையைக் கையாண்டு பல திசையிலும் பிரிந்து முன்னேறிக் கொண்டிருந்த ஜப்பானியப் படைகளை ஆங்காங்கே தாக்கிய கொரியர்கள் அப் படைகளுக்கிடையிலிருந்த செய்தித் தொடர்புகளையும் துண்டித்தனர். எனவே ஜப்பானியப் படைகள் மேற்கொண்டு செய்வதறியாது திக்குமுக்காடி நின்றன.

இதற்குள் கொரியர்களின் வேண்டுதலையேற்றுச் சீன அரசர் ஐயாயிரம் படை வீரர்களை அனுப்பினுர். சீனப் படைகளும், கொரியப் படைகளும் பிங்கியாங்கில் தங்கியிருந்த ஜப்பானியர் படைகளைத் தாக்கிச் சின்னுபின்னமாக்கின. பிங்கியாங்கிலிருந்து பின்வாங்கிய ஜப்பானியப் படைகள் செவுலுக்கு ஓடி முற்றுகை

யிட்டன. பட்டினியும், கொள்ளை நோயும் வாட்டியதால் ஜப்பானியர் 1593 மேத் திங்கள் முற்றுகையைக் கைவிட்டுக் கொரியாவை விட்டு வெளியேறினர். இந் நிலையிலும் மனமுடையாத இதேயொசி வழியிலுள்ள பல கோட்டைகளை வென்று தன் படையில் ஒரு பிரிவைக் கொரியாவின் தென்கடற்கரையிலுள்ள பன்னிரண்டு கோட்டைகளில் நிறுத்திவிட்டு வந்தான். இதற்குப் பின் மூன்றாண்டுகள் வரை நடந்த சமைதிப் பேச்சுக்களினால் பயனில்லாமற் போகவே கி. பி. 1597ஆம் ஆண்டில் இவன் மீண்டும் தனது அதிக வலிமை படைத்த படைகளைத் திரட்டிக் கொண்டு சீனாவின் மீது படையெடுத்தான். ஆனால், படையெடுப்பு முடிவு காண முடியாமலே முடிந்தது! இம் மாவீரன் கி. பி. 1598ஆம் ஆண்டில் இறந்து விட்டதே இதற்குக் கரணியமாகும். இவ்வாறு கி.பி. 16ஆம் நூற்றாண்டிலேயே ஒரு பெரும் கண்டத்தை வென்று ஆள வேண்டுமென நினைத்த மாவீரன் இதேயொசியின் திட்டம் 19ஆம் நூற்றாண்டில் நெப்போலியனுக்கு ஒரு முற்காணியமாக அமைந்ததெனலாம்.

## எதோகாலம் (Yedo period)

### தொகுகவா சோகன்கள் (Togugava Shogunate—1603-1867)

இதேயொசியின் இறப்புக்குப் பின் அவனுடைய மகனான இதே யொரி (Hide-Yori) என்பவனே சோகன் பதவிக்கு வர வேண்டும். அம்மகன் ஐயாட்டையே நிரம்பிய சிறுவனாயிருந்ததால் அவனைச் சோகனாக அமர்த்தி ஆள்வினைப் பொறுப்புகளைக் கவனிக்க கி. பி. 1585ஆம் ஆண்டில் ஒரு குழுவை ஏற்படுத்தியிருந்தான். அக் குழுவில் தொகுகவா இயேயாசுமிருந்தான். இயேயாசு தானே சோகனாக விரும்பினான். இதனால் ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் இவனே வெற்றி பெற்று 1603ஆம் ஆண்டில் சோகன் ஆனான். இவனுக்குப் பின் சோகன் பதவியில் இவன் குடும்பத்தினரே தொடர்ந்து 1867 வரை இருந்து வந்தனர். இவர்களையே 'தொகுகவா சோகன்கள்' என்கிறோம். இவர்களுடைய படையாட்சி எதோ (Yedo) என்னுமிடத்தைத் தலைமையிடமாகக் கொண்டு கி.பி. 1603ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பழைய எதோ நகரமே இன்றைய தோக்கியோவாகும். இவர்கள் ஏறத்தாழ 265 ஆண்டுகள் இந் நகரிலிருந்து ஆண்டனர். இயேயாசு இதேயொசி—தொயதோமியாவின் பணிகளைத் தொடர்ந்து நாட்டை ஒற்றுமைப்படுத்தி, தோக்கியோவைத் தலைநகராக்கிப் பல புதிய மாற்றங்களுடன் படையாட்சியை அமைத்து, ஜப்பானிய வரலாற்றையே மாற்றியமைத்தான். இவனுக்குப் பின் சோகன் பதவி யேற்ற இவனுடைய தொகுகவா குடும்பத்தினரால்

ஜப்பானில் குமுக, பொருளியல், அரசியலமைப்புகள் புதிய முறையில் மாற்றியமைக்கப்பட்டன. எனவே இத் தொகுகவா சோகன்களின் வரலாற்றைச் செவ்வனே அறிதல் சிறப்புடையதாகும்.

தொகுகவா இயேயாசு *(1542-1616)*,
சோகன் பதவியில் *(1603-1605)*

தொகுகவா சோகன் குடும்பத்தை ஏற்படுத்தியவன் இயேயாசு என்பவனாவான். இவன் கி. பி. 1542ஆம் ஆண்டில் மிகாவா எனும் மாநிலத்தில் ஒரு சிற்றூரில் பிறந்தான். இவனுடைய முன்னோர் மினமொத்தோக்களின் மரபு வழியில் வந்தவர்கள். அவர்கள் தொகுகவா எனும் ஊரில் வாழ்ந்தவர்களாதலால் தங்கள் பெயர்களுக்கு முன் ‘தொகுகவா’ எனும் அடைமொழியைச் சேர்த்துக் கொள்வது வழக்கமாயிற்று. இதனால் இயேயாசும் தன்னைத் தொகுகவா இயேயாசு என்றே அழைத்துக்கொண்டான். இவன் இதேயொசி இறந்த பின் கி.பி. 1603ஆம் ஆண்டில் தனது 61ஆம் அகவையில் சோகன் ஆனான். இவனைத் தொடர்ந்து சோகனான இவனுடைய குடும்பத்தார் தங்களைத் ‘தொகுகவா சோகன்கள்’ என்றழைத்துக் கொண்டனர். இவன் நொபுநகா, இதேயொசி ஆகியோரின் பணிகளில் சிறந்த போர் வீரனாகவும், ஆட்சியாளனாகவும் விளங்கினான். இதேயொசி இறக்குமுன் இவனிடம் நாட்டின் பொறுப்புகளை ஒப்படைத்து எவ்வகையிலேனும் கிழார்களை ஒடுக்கி ஜப்பானில் ஒரு கட்டுப்பாடான ஆட்சியை ஏற்படுத்தும்படிக் கூறிச் சென்றான். இயேயாசு அவன் இறந்தபின் அவனுடைய திட்டங்களை நிறைவேற்ற முற்பட்டான். இதேயொசியால் 1585ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆட்சிக் குழுவைத் தொடர்ந்து பணியாற்றச் செய்தான். அவ் வுறுப்பினர்களுக்கு ஆளுநர்கள் (Bugyo) என்று பெயர்.

இவர்கள் இயேயாசுவின் மீது பொறாமை கொண்டு அவரை ஒழிக்கத் திட்டமிட்டதோடு தங்களுக்குள் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டனர். அவர்களில் ஒருவனான மித்சு நாரி (Mitsu Nari) என்பவன் இறந்துவிட்ட இதேயொசியின் குடும்பத்துடன் கமுக்க உறவு பூண்டு இவனுக்கெதிராகப் பல சூழ்ச்சிகளில் ஈடுபட்டான். பலரும் அவனுடன் கலந்து கொண்டு கலகங்களில் ஈடுபட்டனர். இதேயொசியின் உறுதி மொழிகளை நிறைவேற்றாமலும், அவனுடைய மகனுக்கு சோகன் பதவியை வழங்காமலும் இவன் நம்பிக்கைத் ‘துரோகியாக’ மாறிவிட்டானென்பது அவர்களின் கலகங்களுக்குக் கூறப்பட்ட காரணியமாகும். நாளடைவில்

இக் கலகக்காரர்கள் இரண்டாகப் பிரிந்து பழையபடியே வடக்கு, தெற்குக் கட்சிகளாகித் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டனர். தெற்குக் கட்சிக்கு மித்சுநாரி தலைவனுனன். இவனுடன் சோசு இளவரசர், சத்சுமா இளவரசர் மற்றும் தெற்கிலுள்ள யாவரும் சேர்ந்து கொண்டனர். இவர்களைப் போர்த்துக்கீசியப் பாதிரிகளும் ஆதரித்தனர். இறந்தவருக்குக் கொடுத்த உறுதி மொழியைக் காப்பாற்றாத இயேயாசுவை ஆதரிக்கத் தங்கள் மனச் சான்றும், சமயமும் இடந்தரவில்லை என்று கூறி, தங்கள் சமயத்திற்கு மதம் மாறிய மித்சுநாரியை ஆதரிப்பது தங்களின் கடமை யென்றனர். சிறிது நாள்களுக்குள் வலிமை படைத்த பல சிற்றரசர்கள் தெற்குக் கட்சியில் சேர்ந்து கொண்டனர். இயேயாசு, இவர்களை அடக்கப் போர் ஒன்றே சிறந்த வழி யென்பதை யுணர்ந்தான். தனது இருக்கையை எதோவுக்கு மாற்றிக் கொண்டு அதனருகிலுள்ள கோட்டைகளைப் புதுப்பித்தார்.

இதற்குள் மித்சுநாரி நாட்டிலுள்ள அத்தனை இளவரசர் களுக்கும் 'உறுதிமொழியை மறந்தவனைக் கொன்றெழிக்க ஒன்று சேருங்கள்' என்று அறைகூவல் விடுத்தான். இவன் வேண்டு கோளை ஏற்றுப் பல சிற்றரசர்களும், மாநிலத் தலைவர்களும் தங்கள் படைகளுடன் ஓசாகாவில் ஒன்று கூடினர்; இறந்த மாவீரன் இதேயொசி சாகும்போது விடுத்த வேண்டுகோளுக்குத் தான் கொடுத்த உறுதி மொழியை மறந்து, அவன் மகனைச் சோகனுக்காமல் தன்னலத்தால் தானே சோகனாக விரும்பும் இயேயாசுவை அழிப்போம் என்று வஞ்சினம் கூறித் தங்கள் நடுவிரலைக் கிழித்துக் குருதியால் பெருவிரல் கைவரியைப் பதித்தனர். இவ்வாறு மித்சு நாரியால் இயேயாசுக்கு எதிராக அமைக்கப்பட்ட கூட்டணியில் 1,28,000 படைவீரர்களிருந்தனர். இப் படை இயேயாசு ஆட்சியின் மையமாக விளங்கிய ஃபுசிமி (Fushimi) கோட்டையைத் தாக்கிச் சாம்பலாக்கியது. இதனையறிந்த இயேயாசு தன் சவையைக் கூட்டிக் கூட்டணியுடன் போரிட முடிவு செய்தான்.

### உள்நாட்டுப் போர் (கி. பி. 1600)

இயேயாசு எதோவைத் தனது மூத்தமகன் இதெயாசுவின் பொறுப்பில் விட்டு விட்டுப் படையை இரண்டாகப் பிரித்துக் குவாண்டோ நகரை வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் தாக்க ஒரு பிரிவை அனுப்பி விட்டு மற்றொரு பிரிவிற்குத் தானே தலைமை தாங்கிக் கியோத்தோ, ஓசாகா ஆகியவற்றைத் தாக்க முற் பட்டான். இப் படை கூட்டணியைவிடச் சிறியது. ஏறத்தாழ

7500 வீரர்களே இருந்தனர். இரு தரப்புப் படைகளும் 21—10—1600-ல் செகி ககாரா (Sekigahara) எனுமிடத்தில் மோதிக் கொண்டன. போர் ஒரு நாள் முழுவதும் நடைபெற்றது. வில், அம்பு, வாள், ஈட்டி, கோடரி முதலிய பண்டைய போர்க் கருவிகளும், வெடிகுண்டு, வேட்டெஃகம் போன்ற புதிய கருவிகளும் பயன்படுத்தப்பட்டன. கூட்டணியில் ஒற்றுமையும், தலைவனுக்குக் கீழ்ப்படியும் குணமுமில்லாததால் அது ஒரு மக்கள் திரளாகக் காணப்பட்டதேயொழிய, பயிற்சி பெற்ற, கட்டுப் பாடான படையாகக் காணப்படவில்லை. எனவே பாதியளவே படையைக் கொண்ட இயேயாசுவால் அவர்கள் தோற்கடிக்கப் பட்டனர். இத் தோல்விக்குப் பின் கூட்டணியிலிருந்த பலரும் இயேயாசுவிடம் பணிந்து அவனுடைய ஆளுமையை ஏற்றுக் கொண்டனர். அவர்களின் மானியங்களைப் பறித்துத் தன்னுடன் போரிட்டவர்களுக்கும் தன் சார்யாளர்களுக்கும் இயேயாசு பகிர்ந்தளித்துத் தன் கட்சியை வலுப்படுத்திக் கொண்டான்.

இந்த உள்நாட்டுப் போர் ஒருநாள் போராயினும் ஒரு வரலாற்று முகாமை வாய்ந்த போராகும். தைராக்களுக்கும், மினுமொத்தோக்களுக்கும் கி. பி. 1185ஆம் ஆண்டில் நடை பெற்ற தந்நோவுரா போருக்குப்பின் மினுமொத்தோக்கள் பெற்ற வெற்றியால் அரச மரபின் ஆட்சி வலுவிழந்து சோகன்களின் ஆட்சி பல நூற்றாண்டுகளுக்கு மேல் தொடர்ந்ததைப் போலவே, இப் போரும் இருநூற்றாண்டுக்கு மேல் தொகுகவா சோகன்களின் ஆட்சியை நிலைநாட்டி, உள்நாட்டில் அமைதியை ஏற்படுத்தியது. தோற்ற பல கூட்டணித் தலைவர்கள் வழக்கம்போல் தற்கொலை செய்து கொண்டனர். மித்சுநாரி போன்ற கிறித்தவர்கள் தங்கள் சமயக் கோட்பாட்டின்படித் தற்கொலை செய்து கொள்ள விரும்பாமல் இயேயாசுவிடம் அடிபணிந்தனர். அவர்கள் கியோத்தோவுக்குக் கொண்டு வரப்பட்டுக் கொல்லப்பட்டனர். வெற்றி பெற்ற மாவீரன் இயேயாசுவை மிகாடோ வரவேற்று கி. பி. 1603ஆம் ஆண்டில் சோகனுக்கிப் போற்றினர்.

தொடக்கத்தில் கத்தோலிக்கப் பாதிரிகளை வரவேற்ற இயேயாசு அவர்களுக்குத் தன் நாட்டில் எல்லா வகையான சலுகைகளையும் அளித்திருந்தான். எதோவில் ஒரு மாதா கோயிலைக் கட்டவும், கவாண்டோ துறைமுகத்தில் கப்பல்களை நிறுத்தவும் இசைவளித்தான். வெள்ளிச் சுரங்கங்களைக் கண்டு பிடிக்கவும், கப்பல்களைக் கட்டவும் சுபானிசுகாரர்களை அனுமதித்தான். தன்னுட்டுத் தூதுவர்களை பிலிப்பைன்தீவுகளுக்கு அனுப்பினுன். கிறித்தவச் சமயத்தின் சீரிய கொள்கைகளையும், கிறித்தவர்களின் பண்புகளையும் மனதார நம்பிப் போற்றினுன்.

ஆனால், கி. பி. 1568ஆம் ஆண்டுக்குப் பின் கிறித்தவர்களாகிய தச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும், சுபானிசுகாரர்களும் தங்களுக்குள்ளிருக்கும் வணிகப் போட்டியின் கரணியமாகவும், ஐரோப்பாவில் இந் நாடுகளுக்கிடையே நிலவிய அரசியல் பகையின் கரணியமாகவும் குடியேறிய ஜப்பானிலும் போட்டியும் பொறாமையும் கொண்டு, இழிந்த தன்மைகளுடன் நடக்கத் தொடங்கினர். தங்கள் சமயப் பண்புகளுக்கு மாறாக, உடன்பிறப்புக் கிறித்தவர்களுக்குள்ளேயே சண்டையிட்டுக்கொள்ளும் இவர்களைக் கண்ட இயேயாசு, அவ் வயலாரையும், அவர்கள் மதத்தையும் வெறுத்து, அவர்களைத் தன்னாட்டை விட்டு வெளியேற்ற எண்ணினான். இவர்களின் உண்மையான பண்பாட்டை அறிந்துவரத் தன்னாட்டு ஒற்றன் ஒருவனைக் கிறித்தவனாக்கி ஐரோப்பாவிற்கு அனுப்பி வைத்தான். இதற்கிடையில் கி. பி. 1600ஆம் ஆண்டில் ஒரு நச்சுக் கப்பல் ஜப்பானுக்கு வந்தது. அதிலிருந்த வில் ஆடம்சு (Will Adams) என்ற இங்கிலாந்து நாட்டுக்காரர் இயேயாசுவின் நண்பரானார். ஏறத்தாழ 25 ஆண்டுகள் ஜப்பானில் தங்கியிருந்து இவர் அங்கேயே மாண்டார். இவருடைய முயற்சியால் இயேயாசு ஜப்பானில் கப்பல் கட்டும் தொழிலை நன்கு வளர்த்தான். இவர் விட்டுச் சென்ற பல அரிய குறிப்புகள் ஜப்பான் வரலாற்றின் புறச் சான்றுகளாய் விளங்குகின்றன. இயேயாசுவால் அனுப்பப்பட்ட ஒற்றன் ஐரோப்பாவைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஜப்பான் திரும்பினான். கிறித்தவர்கள் ஜப்பான் நாட்டிற்குப் பேரேதத்தை விளைவிக்கும் கொடியவர்கள் என்று கூறித் தான் நேரில் கண்ட அவர்களின் போர்ச் செயல்களை விளக்கினான். அரசியல் நோக்கம் ஒன்றையே கொண்டுள்ள இவர்களை இயேயாசு 1612 ஆம் ஆண்டில் ஓர் உத்தரவைப் பிறப்பித்து எதோவிலிருந்த எல்லாக் கத்தோலிக்கரையும் வெளியேற்றினான். உத்தரவுக்குக் கீழ்ப்படியாதவர்களைக் கொன்றான்; சிலர் கொடிய தண்டனைக்குள்ளாயினர். சுபானிசு கத்தோலிக்கர்களையே இயேயாசு வெறுத்து வெளியேற்றினான். ஆனால், ஆங்கிலேயர்களை வரவேற்றான். அதற்குக் காரணம் தன்னிடமுள்ள வில் ஆடம்சு மறுப்பாளர் (பிராட்டஸ்டண்டு) களான ஆங்கிலேயர்களைப் பற்றிக் கூறிய நல்ல கருத்தேயாகும். இதற்கு கரணியமாகும் 11—6—1613ல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கும்பனத்தைச் சேர்ந்த கிலோவ் (Clove) என்ற கப்பல் எதோ துறைமுகத்தையடைந்தது. அக் கப்பல் ஜப்பானின் எல்லாத் துறைமுகங்களுக்கும் சென்று வணிகம் நடத்தலாமென இயேயாசு கட்டளை பிறப்பித்தான். இவர்கள் சிறிது சிறிதாகக் குயூசுத்தீவின் கடலோரங்களில் நிலைத்து, இயேயாசுவின் பகைவர்களுடன் நட்புறவு கொண்டு தங்கள் ஆளுமையை வளர்த்துக் கொண்டனர்.

இயேயாசு தனக்குப் பகைவர்களாக நாட்டில் உலவும் பல கிழார்களைக் கவனமாய்க் கண்காணித்தான். இவர்களின் தூண்டுதலால், இறந்துவிட்ட இதேயொசியின் மகனான முப்பது அகவை நிரம்பிய இதேயொரி (Hideyori) தன்னை எப்படியும் வீழ்த்தி விடுவானென்பதை யுணர்ந்தான். எனவே ஒசாகாக் கோட்டையில் தங்கியிருந்த இதேயொரியின் குடும்பத்தை 3—5—1615ல் தாக்கி அழித்தான். இதேயொரி மரபுப்படி தற்கொலை செய்து கொண்டு இறந்தான். அதே ஆண்டில் செப்டம்பர்த் திங்களில் 'படைக் குடும்பத்தாரின் சட்டங்கள்' (Laws of Military houses), 'அரசவை, அரசவைக் கிழார்களுக்கான சட்டங்கள்' (Rules of the imperial court and the court nobles) ஆகிய சட்டங்களைக் கொண்டு வந்தான். படைக் குடும்பத்தாரின் சட்டப்படி சீன மொழியைக் கற்றல், போர்க் கலைகளில் பயிற்சி பெறல் முதலியவற்றை இது வரை கிழார்களே தனியுரிமையாகக் கொண்டிருந்ததை மாற்றி, இவற்றைத் தன் படைக்குடும்பத்தினரைத் தவிர மற்றவர்கள் தன் இசைவின்றிக் கற்கக் கூடாது என்றுக்கினுன்; பெரிய அல்லது சிறிய நிலமானியக் கிழார்கள் தன்னுடைய இசைவின்றி சாமுராய்களைத் தங்களுடைய படைகளில் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்றும், எதோவிலுள்ள தொகுகவா அரண்மனையின் உத்தரவின்றி எவரும் தங்கள் கோட்டைகளைப் புதுப்பிக்கவோ, புதிதாகக் கட்டவோ கூடாதென்றும் இச் சட்டத்தில் கூறப்பட்டது. மேலும் கிழார்கள் எதோ அரண்மனையின் உத்தரவின்றிக் கலப்புத் திருமணங்கள் செய்து கொள்ளவோ, வீண் செலவுகள் செய்யவோ, குதிரைச் சவாரி செய்தல், படையேந்திச் செல்லல், பல்லக்கில் ஊர்தல் முதலியவற்றை மேற்கொள்ளுதலோ கூடா தென்றும் இச் சட்டம் கூறியது. மருத்துவர்கள், நிமித்திகர்கள் அறுபது அகவையைக் கடந்த முதியவர்கள், துறவிகள், சமயத் தலைவர்கள் முதலியோர் பல்லக்கில் செல்ல இசைவு பெறத் தேவையில்லை யெனவும் இச் சட்டம் கூறியது.

இத்தகைய கடுமையான சட்டங்களை அலாவுதீன் கில்சியும் பதினன்காம் லூயியும், துருக்கியப் பேரரசர்களும் கூட விதிக்கவில்லை. எனவேதான் நீண்டகால உள்நாட்டுக் கலகங்களை யடக்கி அமைதியை ஏற்படுத்த இயேயாசுவால் முடிந்தது. இயேயாசு தனது எதோ அரண்மனையிலிருந்து கொண்டு தொடர்ந்து பல உத்தரவுகளைப் பிறப்பித்த வண்ணமிருந்தான். மாநில அமைச்சர்களைத் தானே அமர்த்தினுன். இளவரசர்கள் பேரதிகாரிகளாவதையும், மக்கள் தாங்களே நேரடியாக மிகாடோவைப் பேட்டி காண்பதையும் தடுத்தான். ஆனல்,

மிகாடோ நாரா காலத்துச் சிறப்பையும் உயர்வையும் அடையும் வண்ணம் அவரை உயர்த்தினன்.

தான் சோகனுகுமுன் எதிரிகளுடன் சேர்ந்தும் பின் இதேயொசிக்குச் சார்பாகக் கலகம் விளைவித்த கிறித்தவப் பாதிரிமார்களை ஒடுக்குவதில் இயேயாசு முனைந்தான். முன்னரே கி. பி. 1612, 1613 ஆகிய ஆண்டுகளில் உரோமன் கத்தோலிக்கர்களை எச்சரித்தும், ஜப்பானியருக்கு அவர்களால் வரும் ஏதத்தை விளக்கியும் அறிக்கைகளை விட்டிருந்தான். 27—1—1614-ல் ஒரு கட்டளையைப் பிறப்பித்தான். அதன்படி நாகசாகியில் அயலகக் கிறித்தவர்களைக் கொண்டுவரச் செய்து அவர்களை எச்சரித்து நாடு கடத்தினன். மாதாகோயில்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. மதம் மாறிய ஜப்பானியர் மீண்டும் தங்கள் மதத்திற்குத் திரும்பும்படிக் கட்டாயப் படுத்தப்பட்டனர்.

## இதேததா (Hidetada-1579-1632 A. D.), (சோகன் பதவி 1605—1632)

கி. பி. 1605ஆம் ஆண்டில் இயேயாசு தனது மூன்றுவது மகனை இதேததாவைச் சோகனுக்கிவிட்டுப் பதவி துறந்தான். ஆனல், தான் தொடர்ந்து அதிகாரங்களை யேற்று நடத்திக் கி. பி. 1616ஆம் ஆண்டில் மாண்டான். இதேததா ஒரு சிறந்த அறிவாளி. சிறந்த வாழ்க்கை நடத்தும் ஆர்வம் கொண்டவர். இவர் இதேயொசி ஒசாகாவில் கட்டிய கோட்டையைப் போலவே எதோவில் மாபெரும் கோட்டையொன்றைக் கட்டினர். இஃது எகிப்து நாட்டுப் பிரமிடுகளைப் போல் சிறப்பு வாய்ந்தது. இதனைக் கட்ட ஆயிரக்கணக்கான கற்களுக்கப்பாலுள்ள கடல்களின் நடுவிலிருந்து பாறைகள் கொண்டு வரப்பட்டன. இதனைச் சுற்றிலும் ஒன்றன்பின்னென்ருக மூன்று பெரிய அகழிகள் வெட்டப்பட்டன. அவற்றின் சுற்றளவு முறையே $9\frac{1}{2}$, $7\frac{1}{2}$, $1\frac{1}{2}$ கற்களாம். கி. பி. 1620ஆம் ஆண்டில் தனது மகள் கசுகோ (Kazuko) என்பவளை 108ஆம் மிகாடோவுக்கு மணம் செய்து வைத்தான். இவ் வம்மையாருக்குப் புதல்வர்கள் இருவரும் புதல்விகள் ஐவரும் பிறந்தனர். கி. பி. 1629ஆம் ஆண்டில் மிகாடோ பதவி துறந்தபின் மூத்த இளவரசி பட்டமேற்ருள். ஜப்பானிய வரலாற்றில் எண்ணூருண்டுகளுக்குப்பின் மிகாடோவான பெண்மணி இவரேயாவாள். இவளுக்குப் பின் இவளுடைய தம்பியான கோகோமையோ (Go-Komyo=1643-1654 A. D.) மிகாடோவானர். கி.பி. 1632ஆம் ஆண்டில் இதேததா காலமானன். அவனுக்குப் பின் அவன் மகன் இயேமித்சு (Iye-mitsu) சோகனுனன்.

இயேமித்சு (Iye-Mitsu = *1603-1651* A.D.),
(சோகன் பதவி *1632-1651*)

இவன் தன் பாட்டனும் தகப்பனும் வட்ட அரசியல் பணிகளைத் தொட்டுத் துவங்க வைத்தான். இவன் தனது தொகுகவா குடும்பத்தினரும், மற்றும் பேரதிகாரிகளும் அரசியல் பணிகளுக்காக மாநிலங்களுக்குச் சென்று விட்டாலும் அவர்களின் குடும்பங்களை எதோவிலேயே விட்டுச் செல்ல வேண்டுமென 1626ஆம் ஆண்டில் சட்டமியற்றினன். இதனல் எதோவில் மக்கள் தொகை மிகுந்து காணப்பட்டதோடு, இது கியோத் தோவைப் போன்று உயர்தர வாழ்வினை மேற்கொண்டவர்களின் இருக்கையாயிற்று.

இயேமித்சு கிறித்தவச் சமயத்தை வெறுத்தான். அதனை ஜப்பானிலிருந்து அடியோடு ஒழிப்பதற்காக மறைமுகமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தான். இதன்படி அரசவைக்கிழார் களும், மற்றும் பெரு நிலக்கிழார்களும் ஏதாவதொரு குறிப்பிட்ட புத்த சமயப் பிரிவைத்தான் பின்பற்றவேண்டுமென்றான். ஒவ்வொரு புத்தக் கோயிலிலும், சிந்தோ கோயிலிலும் எத்தனை பேர் அம் மதங்களைப் பின்பற்றிக் கோயிலுக்கு வருகிறார்க ளென்பதை யறிய நாள்தோறும் வருகைப் பதிவேடுகள் வைக்கப் பட்டன. ஜப்பானியர் கிறித்தவர்களாகித் தங்கள் தேசிய உணர்வை மறந்து ஐரோப்பாவைத் தங்கள் தாயகமாகக் கருது வதையும், தங்கள் பேரரசரைத் தெய்விகப் பேரரசராக வணங்காமல் போப்பையும் ஏசுவின் சீடர்களையும் வணங்கு வதையும், புத்தரை ஒரு சமயத் தலைவராகக் கொள்ளாமல் இழித்துரைத்தலையும், தங்களின் நாட்டு வழக்கப்படி இயற்கை தேவதைகளைத் தொழுவதைப் பிசாசுகளைத் தொழுவதாக இழித்துரைத்தலையும், மரபுப்படி தற்கொலை மேற்கொள்ளுதலை பாவச் செயல் என்றதனையும், மற்றும் பல சமயச் சடங்குகளையும், பழக்க வழக்கங்களையும் வெறுத்தொதுக்குதலையும் உணர்ந்த இயேமித்சு, இத்தகைய கிறித்தவ சமயத்தால் ஜப்பானிய நாடே அழிந்துவிடும் என்று முடிவு செய்தான். எனவேதான் மேற்கண்ட முறையைக் கையாண்டு கிறித்தவம் பரவாமல் தடுத்தான்.

இத்தகைய முயற்சிகளை இவனுடைய பாட்டனான இயே யாசும், இவனுடைய தந்தையும் மேற்கொண்டனரென்பது குறிப் பிடத் தக்கதாம். இயேயாசுக்குத் துணையாகக் கலகக்காரர்களை அடக்க தேட் (Date) போன்ற சுபானிசுகாரர் இருந்ததால் முதலில் அவர்களைச் சார்ந்தான். அவர்களின் ஏதந்தரும் உருவம் வெளிப் பட்டவுடன் அவர்களைத் தடை செய்தான். இவனுடைய

இறப்பிற்குப்பின் புது சுபானிசிலிருந்து (மெக்சிகோ) சுபானிசு காரர்கள் குயூசுத் தீவுக்குள் குடியேறினர். இதேததா கிறித்தவப் பாதிரிமார்களையும், அவர்களுக்கு உடந்தையாயிருப்பவர்களையும் நாடு கடத்தும் சட்டமொன்றை ஆக்கினான். இச் சட்டத்தை எதிர்த்து 'பரவுலக அரசனுக்கே பணிவேன்; ஜப்பானிய அரசனுக்குப் பணியேன்' என்று கூறிய தொமினிகன் மேற்றிராணியார் நவரத்தே (Navarette) தூக்கிலிடப்பட்டார். கி. பி. 1616ஆம் ஆண்டிலிருந்து கிறித்தவச் சமயத்தைத் தடுக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காகவே ஐரோப்பியர் ஜப்பானுக்குள் நுழையக் கூடாதென்று தடை விதிக்கப் பட்டது. சுபெயின் நாட்டு அரசர் கிறித்தவராக மதம்மாறிய ஜப்பானியரைத் தங்கள் தெய்விக மிகாடோவை எதிர்த்துக் கலகம் செய்யும்படித் தூண்டினார். படையுதவியும் அனுப்பினார். இவர்களுடைய இத்தகைய நோக்கம் கி. பி. 1615ஆம் ஆண்டில் சுபெயினுக்குச் சென்று 1622ஆம் ஆண்டில் ஜப்பானுக்குத் திரும்பிய ஜப்பானிய ஒற்றனால் மெய்ப்பிக்கப்பட்டது. கி. பி. 1618முதல் 1648வரை ஐரோப்பாவில் நடந்த முப்பதாண்டுப் போர் ஒரு சமயப் போர் என்பதனை இந்த ஒற்றன் சுட்டிக்காட்டிக் கிறித்தவ நாடுகளுக்குள்ளேயே இத்தகைய போர் நடக்கும்போது தம் நாட்டில் ஏன் நடக்காதென்பதனையும் எடுத்துரைத்தான். ஆகவேதான் சமயப் போர்வையில் ஜப்பானுக்குள் இறங்கிய ஐரோப்பியரையும், கிறித்தவச் சமயத்தையும் சோகன்கள் தடை செய்தனர். 1624ஆம் ஆண்டில் இதேததா பிலிப்பைன் தீவிலிருந்த சுபானிசுகாரர்களுக்கு அறிக்கை விடுத்து ஜப்பானிலுள்ள சுபானிசுகாரர்களை வெளியேற்றுவதாக எச்சரித்து வெளியேற்றினான். ஜப்பானியக் கிறித்தவர்களும் பிலிப்பைன் தீவுக்குள் நுழையக்கூடாது என்பதற்காகவே 'ஜப்பானியர் கடல் கடக்கக் கூடாது' என்று சட்டம் செய்தான். இச் சமையத்தில் பிலிப்பைன் தீவுகள் சுபானிசுகாரர்களின் கோட்டையாக இருந்தனவென்பது குறிப்பிடத்தக்கது!

இவ்வாறு சுபானிசுகாரர்கள், போர்த்துக்கீசியர் ஆகியோரின் மீது ஏற்பட்ட வெறுப்புணர்ச்சியால் ஜப்பானியர் பொதுவாக ஐரோப்பியர்கள் அனைவரையுமே வெறுத்தொதுக்கத் தொடங்கினர். இச் சமையத்தில் தச்சுக்காரர்கள் சீனாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கு மிடையிலுள்ள இடங்களிலெல்லாம் தங்கள் குடியேற்றங்களை அமைத்தனர். ஆங்கிலேயர்களும் இவ் விடங்களில் போட்டிக் குடியேற்றங்களை அமைத்தனர். அதே சமையத்தில் வட அமெரிக்காவிலும் இவர்களின் குடியேற்றங்கள் தொடங்கின. தங்கள் நாட்டையும் ஐரோப்பியர் தங்கள் குடியேற்றமாகக் கொண்டு விடுவாரோ என்ற அச்சத்தால் ஜப்பானியர் உந்தப்

பட்டனர். எனவே அவர்கள் அதிகமாகக் குடியேறியிருந்த இராதோ (Hirado)த் தீவிலிருந்தும் குயூசுத் தீவிலுள்ள நாகசாகியிலிருந்தும் அவர்களை வெளியேற்ற வேண்டுமென்றனர். 1623ஆம் ஆண்டில் அம்பாயனுவில் நடந்த படுகொலை ஜப்பானியரின் ஐயத்தையும், அச்சத்தையும் அதிகப்படுத்தியது. தச்சு வணிகக் குழுவின் ஆளுநர் வான் சுபெல்டு (Van Speult) என்பவர் ஆங்கிலேயர் பதின்மரையும், ஆங்கில முகவர் டவர்சன் என்பவரையும், ஜப்பானியர் ஒன்பதின்மரையும், 'தச்சுக் கோட்டையைக் கவரத் திட்டமிட்டனர்' என்று வீண்பழி சுமத்தி அம்பாயனுவில் படுகொலை செய்துவிட்டார். கி. பி. 1625ஆம் ஆண்டில் பட்டமேற்ற முதலாம் சார்லசு மன்னன் *(1625-1649)* தனது நாடாளும் மன்றத்தோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தான். அதே சமையத்தில் ஆங்கில வணிகர்கள் சாவாத் தீவிலுள்ள படேயாவிலிருந்துகொண்டு சீனுவோடும், ஜப்பானோடும் தங்களின் வணிக ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்று கொண்டிருந்தனர். ஆனால், சார்லசு மன்னனுக்கும் நாடாளும் மன்றத்திற்கும் ஏற்பட்ட சச்சரவுகளும், உள்நாட்டுப் போரும் ஆங்கில வணிகத்தின் முற்போக்கிற்குத் தடையாய் நின்றன. அச் சமையத்தில் உள்நாட்டுக் குழப்பமில்லையேல் ஜப்பானுடன் நடந்து கொண்டிருந்த ஆங்கில வணிகம் தடைப்பட்டிருக்காது. மைய, தொலை கிழக்கு நாடுகளின் வரலாற்றையும் நாம் வேறு வகையாய்ப் படிக்க வேண்டியிருக்கும். போர்த்துக்கீசியரின் வணிகமும் தச்சுக்காரரின் வணிகமும் ஜப்பானில் தடை செய்யப்பட்டதோடு ஆங்கிலேயரின் கை மேலோங்கியது. சீனர்களின் பட்டுத் துணிகளையே வாங்கி வந்த ஜப்பானியரை ஆங்கிலேயர் தங்களின் துணிகளையே வாங்கும்படிக் கவர்ந்து விட்டனர். ஆனால், இத்தகைய வளர்ச்சி திடீரெனத் தடைப்பட்டது. அதற்குக் கரணியம் ஐரோப்பியர்களான தச்சுக்காரர்களையும், போர்த்துக்கீசியர்களையும் தடைசெய்த ஜப்பானியர் ஆங்கிலேயர்களையும் சேர்த்து 'அயலார் ஜப்பானுக்குள் நுழையக் கூடாது' என்று தடைவிதித்ததுதான். இங்கிலாந்து மன்னன் இரண்டாம் சார்லசு *(1685-1688)* போர்த்துக்கல் நாட்டு இளவரசி காதரின் என்பவளை மணந்த பின் தனது மாமனர் நாட்டை தடை செய்த ஜப்பானுக்குள் தன் நாட்டு வணிகரும் நுழையக் கூடாதென்று தடை செய்தார். இதனால் ஆங்கிலேயர்கள் ஜப்பானுக்குள் நுழையாமல் தாமே நின்றுவிட்டனர்.

ஐரோப்பியருடன் தொடர்புகொண்டு, அவர்களைத் தங்கள் நாட்டில் தங்கவிடுவதால் வரும் விளைப்பயனையறிந்த சோகன் இயேமித்சு அவர்களுக்குத் தடைவிதித்ததோடு, எந்த ஜப்பானியனும் ஜப்பானை விட்டு வெளியேறவோ, வெளியேற முயலவோ

கூடாதென்றும் தடை விதித்தான். தடைகளை எதிர்த்து குயூசுத் தீவிலிருந்த போர்த்துக்கீசியரும், சுபானிசுகாரர்களும் கி. பி. 1637ஆம் ஆண்டில் கலகம் விளைவித்தனர். இக் கலகம் நாகசாகிக் கண்மையிலுள்ள அமகுசாத் தீவிலும் பரவியது. சிம்பாராவி லிருந்த ஆரா என்னும் கோட்டையைக் கலகக்காரர்கள் கைப் பற்றி 1638ஆம் ஆண்டில் அதைத் தரைமட்டமாக்கினர். இவர்களை அடக்க ஜப்பானியப் படையால் முடியவில்லை. தச்சுக் காரரின் உதவியுடன் 12—4—1638-ல் கலகக்காரர்கள் கொல்லப் பட்டனர். ஆரா கோட்டையும் மீட்கப்பட்டது. இனி எந்த ஒரு போர்த்துக்கீசியக் கப்பலும் ஜப்பான் கரைக்கு வந்தால் சுட் டெரிக்கப்பட வேண்டுமென இயேமித்சு உத்தரவு பிறபித்தான். இச் சட்டத்தை எதிர்த்து ஜப்பானுக்கு வந்து நாகசாகியில் 1640-ல் இறங்கிய போர்த்துக்கீசியக் கப்பல் எரிக்கப்பட்டது. மீண்டும் 1647-ல் போர்த்துக்கீசியர் கலகமும் தோல்வியுற்றது. 1640-ல் போத்துக்கல் சுபெயினிலிருந்து பிரிந்து விடுதலைபெற்று வாழ்ந்த பின்னும் ஜப்பானியர் தங்கள் தடையைத்தளர்த்தவில்லை. 1640-ல் தச்சுக்காரர்களையும் நாட்டைவிட்டு வெளியேற ஜப்பான் பணித்தது. ஜப்பானை விட்டு வெளியேறினும் 600 அடி நீளமும் 240 அடி அகலமுமுள்ள தெசிமா (Deshima) என்னும் சிறு தீவில் (நாகசாகியில்) தங்க இசைவு பெற்றனர். அத் தீவில் தங்குவதற்காக ஜப்பானுக்கு தச்சுக்காரர்கள் ஆண் டொன்றுக்கு 495 பவுண்டு எடையுள்ள வெள்ளியை வாடகை யாகக் கொடுத்தனர். தச்சுக்காரர்கள் இச்சிறு தீவிலிருந்தாலும் ஜப்பானிலிருந்து ஏராளமான பட்டையும், 350 கல்லெடையுள்ள செம்பையும் ஆண்டுதோறும் மெக்சிகோ (அல்) புதிய சுபெயி னுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தனர். ஜப்பானியர் இத் தீவுக்குச் சென்றுதான் அவர்களோடு வணிகத் தொடர்பு கொள்ள வேண்டும். ஆனல் தச்சுக்காரர்கள் ஜப்பானுக்குள் வரக்கூடாது. இத் தீவைச் சுற்றிலும் தச்சுக் காரரைக் கண்காணிக்க ஜப்பானிய அதிகாரிகளும், உளவாளிகளும் அமர்த்தப்பட்டனர். இங்கிருந்து அவர்கள் சீனுவோடு வாணிகம் செய்யவும் இசைவளிக்கப்பட்டனர். இவ் விசைவு பல கடினமான கட்டுப்பாடுகளுக்கிணங்கி நடந்தது. சீனுவிலிருந்தும் சீன மொழியில் கிறித்தவ சமயக் கருத்துகள் பரவாமல் கவனிக்கப் பட்டது. கிறித்தவ சமயத்திற்கு எதிராகச் செயல்படும் அதிகாரிகள் நாடு முழுவதும் திரிந்தவாறிந்தனர். ஒவ்வொரு ஜப்பானியனும் ஏதாவதொரு புத்த சமயப் பிரிவில் சேரவேண்டு மென்றும், அவ்வாறு சேர்ந்துள்ளான் என்பதற்கான பதிவு ஏதாவதொரு புத்தக் கோயிலில் இருக்க வேண்டுமென்றும்,

ஒருவனை ஆய்ந்து அவனுடைய பெயர் எந்தக்கோயில் பதிவேட்டிலு மில்லையென்றால் அவனை நாடு கடத்த வேண்டுமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இத்தகைய கடின நடவடிக்கைகளுக்கிடையிலும் மேற்கத்திய தோட்டாக்களுடனும், கற்கோட்டைகளைக் கட்டி அகழிகளை வெட்டிப் பாதுகாப்புடனும் வாழும் கிழார்கள் வாழ்க்கை முறையும் ஜப்பானில் நிலவியிருந்தது. போர்த்துகீசிய மொழியி லுள்ள பலசொற்கள் ஜப்பானிய மொழியிலும், தச்சுக்காரரின் மருத்துவ முறையும், அவர்களின் உதவியால் அகரமுதலி உருவாக்கும் முறையும், இயந்திரங்களைப் பயன்படுத்தும் முறையும் ஐரோப்பிய அரசியல் முறைகளும் கற்பிக்கப்பட்டன. மொத்தத்தில் ஜப்பான், தொலைகிழக்கு நாடுகள் யாவும் மேற் கத்திய நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்த காலத்தில் திடீரெனத் தொடர்பை அறுத்துக் கொண்டு கி. பி. 19ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை அயல் நாடுகளுக்குச் செல்லும் அல்லது அயல் நாட்டார் வரும் கதவுகளை மூடிக்கொண்டு குளத்துத் தவளையாயிற்று!

## தொகுகவா கால நிலக்கிழமை

ஜப்பானில் தோன்றிய நிலக்கிழமை முறை அல்லது நில மானிய முறையைப் பற்றி முன்னரே நாம் விரிவாகக் கண்டோம். இப் படலத்தில் தொகுகவாக்களின் காலத்தில் நிலக்கிழமை உச்சநிலை யடைந்ததையும், அதனால் நேர்ந்த விளைவுகளைப் பற்றியும், கடைசியில் இஃது எவ்வாறு முத்சு இதோவால் 1871-ல் ஒழிக்கப்பட்ட தென்பது பற்றியும் ஆராய்வோம். இயேயாசு சோகனுைதும் மிகச் சிறந்த கட்டடங்களைக் கட்டினான். படைவீட்டுத் தலைநகரான எதோவில் பல அறிஞர்களை வர வழைத்து, பல பள்ளிகளை அமைத்துச் சீன இலக்கியங்களையும் மற்றும் பல கலைகளையும் பயிற்றுவிக்கச் செய்தான். அச்சுப் பொறி அமைத்துப் பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டான். கன்ஃபூசிய சமய நூல்களின் பெரும் பகுதி இவனால் அச்சிடப்பட்டவையே. இத்தகைய பள்ளிகளிலும் கியோத்தோவில் அமைக்கப்பட்ட கல்லூரியிலும் பெருநிலக்கிழார்களின் பிள்ளைகளே அதிகம் படித் தனர். பெருநிலக்கிழார்களைப் பள்ளிகளமைக்குமாறு தூண்டினார். அவற்றில் கிழார்களின் பணியாளர்களின் மக்களும் படிக்க ஏற்பாடு செய்தான். சீன மொழியைக் கற்பதும், அச்சிடுவதும் மிகக் கடினம். இதில் ஏறத்தாழ நாராவின் காலத்திலிருந்து ஐயாயிரம் வரி வடிவங்களிருந்தன. ஜப்பானில் அச்சிடும்போது இதற்கான

தனிக் குறியீடுகள் வேறு இடவேண்டும். இதனை மிகவும் சுருக்கி 47 சொற்களாக்கி ஜப்பானிய மொழிக்கு இயேயாசு வளம் தேடித் தந்தான். இவ்வாறு நிலக்கிழார்களின் பிள்ளைகள் கல்வி, படைப் பயிற்சி, கலைப் பயிற்சி ஆகியவற்றில் அக்கறை கொண்டு உழைத்த இயேயாசு நிலக்கிழமை முறையும், நிலக்கிழார்களும் செவ்வனே சீர்பட்டு நாட்டிற்குப் பயன்பட வேண்டுமென விரும்பினான்.

இத்தகைய நிலக்கிழமை பண்டைய காலந்தொட்டே நிலவியிருப்பதால் இதனைத் திடீரென ஒழிக்க முடியாதென்பதை இயேயாசு நன்கறிந்திருந்தான். ஆயினும் அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து கலகம் விளைவித்ததால்தான் இவர்களை எதிர்த்து செகிகஹாராப் போரைத் தொடங்கினான். அப் போரின் முடிவிலும் அவர்களை ஒழிக்காமல் அவரவர்களின் நிலங்களை அவரவர்களுக்கே தந்தான். ஆயினும் இதற்குப்பின் தனது புதிய சீர்திருத்தங்களால் இவர்களைத் தனக்கும் தனக்குப் பின்னால் வருபவர்களுக்கும் அடங்கி நன்றியுடையவர்களாக இருக்கும்படி செய்ய விரும்பினான். காலியாய்க் கிடந்த நிலங்களையும், சிதறிக் கிடந்த நிலங்களையும் பண்ணைகளாக்கித் தன் குடும்பத்தார்க்கும் உறவினர்க்கும், அண்டியிருப்போர்க்கும் பகிர்ந்தளித்தான். இவனுக்குப் புதல்வர்கள் ஒன்பதின்மரும் புதல்விகள் மூவருமிருந்தனர். இந்த மூன்று பெண்களையும் மூன்று பெருநிலக் கிழார்களுக்கு மணம் செய்து வைத்தான். முதல் மகன் இறந்து விட்டான். இரண்டாவது மகனை இதேயாசுவை தைகோசாமா எனும் பெருநிலக்கிழார் மகன்மை எடுத்துக் கொண்டான். மற்ற பிள்ளைகளுக்கும் பெருநிலக்கிழார்களின் பெண்களையே மணம் செய்வித்துப் பண்ணை நிலங்களையும் கொடுத்தான். இவனுடைய கடைசி மூன்று பிள்ளைகளுக்கும் ஓவாரி (Owari), கீ (Kii), மிதோ (Mito) ஆகிய மாநிலங்களைக் கொடுத்தான். இம் மூன்று குடும்பங்களும் பிற்காலத்தில் 'மூன்று மாண்புறு குடும்பங்க'ளாய்த் (Go-San Ke) திகழ்ந்தன.

இவ்வாறு இயேயாசு முன்னரே ஜப்பானில் வேரூன்றிவிட்ட நிலக்கிழமை முறையில் தன் குடும்பத்தாரையும் சேர்த்துவிட்டான். சுருங்கக் கூறின் பகைவர்களாயிருந்து வந்த நிலக்கிழார்களைத் தன் சம்பந்திகளாக்கிக் கொண்டு, தன் பிள்ளைகள் அனைவரையும் புதிய நிலக் கிழார்களாக்கினான். தொகுகவாக்களின் காலத்திலிருந்த நிலக்கிழார்கள் பலதரப்பட்டவர்களாயிருந்தனர். இவர்களின் வரலாற்றை யொரித்தொமோவின் காலத்திலிருந்து ஆராய வேண்டியிருக்கிறது. யொரித்தொமோ மிகாடோவின்

இசைவு பெற்று ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு படையதிகாரியை (Shingo) அமர்த்தி, அவர் மாநில ஆளுநருக்குப் (Kokushu) பாது காவலராகவுமிருக்க வேண்டுமெனப் பணித்தான். இப் பாது காவலதிகாரி படைதாங்கி ஆளுநரைக் காத்தாலும் இவர் பொது மக்களுள் ஒருவரே ஆவார்! இவருக்கு வரி தண்டும் பணியையும் கொடுத்தான். இவ் வதிகாரி நாளடைவில் எல்லா அதிகாரங் களையும் கைப்பற்றிக் கொண்டு மிகாடோவால் அமர்த்தப்பட்ட ஆளுநரை எத்தகைய அதிகாரமுமில்லாதவராகச் செய்து விட்டார். யொரித்தொமோ குடும்பத்தினர் வீழ்ச்சி யடைந்த வுடன் இந்த சியூகோக்கள் மாநில ஆளுநர்களாகவே மாறி விட்டனர். மைய ஆட்சியின் வலிமை குன்றி மாநில அரசுகள் தன்னுரிமையோடு வாழ முற்பட்டபோது இவர்கள் மாநிலத்தின் பெருநிலப் பகுதிகளைத் தாங்களே கைப்பற்றிக் கொண்டனர். இவர்களின் பிள்ளைகளே பிற்காலத்தில் பெருநிலக் கிழார்களாக மாறிவிட்டனர். இவர்கள் உள்துறைச் சட்ட திட்டங்களையும், நயன்மை மன்றங்களையும், படைகளையும் கட்டுப்படுத்தி அரசர் களைப் போல் அனைத்து உரிமைகளுடனும் வாழ்ந்தனர். இவ்வாறு ஒவ்வொரு மாநிலமும் தனி அரசாகவும், மாநிலத்தின் நிலக் கிழார்கள் தனி அரசர்களைப் போலவும் மாறினர்.

இயேயாசு காலத்தில் மாநிலக் கிழார்கள் (Kokushu) என்றும், மாவட்டக் கிழார்கள் (Ryoshu) என்றும், கோட்டைக் கிழார்கள் (Joshu) என்றும் மூன்று பிரிவினரிருந்தனர். இவர்களின் எண்ணிக்கை முறையே 18,32,212 ஆக இருந்தது. ஆக இவர் காலத்திலிருந்த மொத்த நிலக்கிழார்களின் எண்ணிக்கை 262 ஆகும். இதில் முதலிரு பிரிவினரும் தரத்தில் உயர்ந்தவர்கள். இயேயாசு தன் தொகுகவா குடும்பத்தினரின் கீழ் உள்ளவர்களை ஃபூதாய் (Fudai) என்றும், அவர்களோடு ஒத்துள்ள ஆனால், தன் குடும்பத்தாரின் கீழ் அல்லாதவர்களை தொசாமா (Tozama) என்றும் இரண்டு தரத் தினராய்ப் பிரித்தான். முதல் தரத்தில் 177 பேரும், இரண்டாவது தரத்தில் 86 பேருமிருந்தனர். ஃபூதாய்க் கிழார்களில் 21 பேர் இயேயாசுவின் உறவினராவர். அதில் மூவர் அவருடைய புதல்வர்கள். அவர்கள்தான் 'மாண்புமிகு மூக்குடும்பங்கள்' (Honourable Three Families) என்று அழைத்துக்கொண்டவராவர். மற்ற 18 பேரும் மத்சுதைரா (Matsudaira) என்னும் பெயருடன் விளங்கினர். மத்சுதைரா என்பது மிகாவா என்னும் மாநிலத் திலுள்ள ஒரு சிற்றூரின் பெயர். இயேயாசு இவ் வூரில்தான் பிறந் தான். எனவே மத்சுதைராக் கிழார்களுக்குத் தனிச் சிறப்பும் பெருமையும் ஏற்பட்டது.

திரு. அப்பர்ட்டு (Mr. M. Appert) என்பார் கீழ்க்கண்டபடி நிலக்கிழார்களை வகைப்படுத்தியுள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| 1. | கோ-சான்-கி (Go-San-Ke) (மாண்புமிகு முக்குடும்பத்தினர்) | — | 3 |
| 2. | தொகுகவா குடும்பத்தினர் (Fudai Daimyos) | — | 137 |
| 3. | தொகுகவா குடும்பத்தை ஒத்தவர்கள் (Tozama Daimyos) | — | 99 |
| 4. | தொகுகவா குடும்பக் கிளைஞர்கள் (Kamon) | — | 18 |
| 5. | மற்றவர்கள் | — | 6 |
| | மொத்தம் | — | 263 |

(கி.பி. 1850ஆம் ஆண்டுக் கணக்குப்படி)

மூன்றாவது பிரிவினரில்தான் கதா, செந்தாய், ஐசு, சத்சுமா போன்ற பெயர் பெற்ற கிழார்களும் மற்றும் புரட்சி வீரர்களு மிருந்தனர். இவர்கள் சோகனுடைய தலைநகருக்குச் சென்றால் அரச மதிப்புகளுடன் வரவேற்கப்படுவர்.

இத்தகைய நிலக்கிழார்களைத் தவிரத் தரத்தில் குறைந்தவர் களைக் கொடிக்கீழ் உள்ளோர் (Hatamoto) என்று இயேயாசு பிரித்தான். இவர்களுக்கு மிகக் குறைந்த அளவே பண்ணை நிலமிருக்கும். இவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 2,000 இருக்குமென திரு. குப்பன்சு (Mr. Gubbuns) கூறுகிறார். இவர் களில் பெரும்பாலோர் படைக்குடும்பத்தினருக்கும், அரச குடும் பத்திற்கும் உறவினர்களாக இருந்தனரென்றும், அரசப்பணி யிலிருந்தனரென்றும் திரு. குப்பன்சு கூறுகிறார். இவர்களுக்கும் கீழாகக் குறைந்த வருவாயுடைய கொகினின் (Gokenin) என்னும் பிரிவினரிருந்தனர். இவர்கள் அரசின் துணைப் பணிகளிலிருந்த னர். இவர்களைத் தவிர கிழார்களின் சார்பாகவும், அரசின் சார் பாகவும் போர்ப் பணிகளுக்குப் பயன்படும் போர்வீரர்களிருந் தனர். இவர்கள் கிழார்களுக்கு ஏவலாள்களைப் போல் பயன் பட்டனர். இவர்களுக்கு சாமுராய் (Samurai) என்று பெயர். இவர்கள் யொரித்தொமோ காலத்தில் மாநிலத் தலைநகரில்

ஆளுநருக்குத் துணையாகப் பாதுகாவலுக்கு அமர்த்தப்பட்ட சியுகோ (Shiugo) என்னும் மாநிலப்படையதிகாரியின் மரபில் வந்தவர்களாவர். இவர்கள் இயேயாசு காலத்தில் மாநிலத்தையே கட்டுப்படுத்துமளவுக்குச் சிறந்த வீரர்களாக மாறிவிட்டனர். மேற்கண்ட பிரிவுகளில் கடைசித் தரத்திலிருந்த இவர்கள் பிற் காலத்தில் உயர்ந்த தரத்தினராகிவிட்டனர். இவ்வாறு உயர் நிலை யடைந்தவுடன் இவர்களிடமும் பிரிவினைகள் ஏற்பட்டன. சாமுராய்களில் வேளாளர்கள் (Farmers) கைவினைஞர்கள் (Artisans), வணிகர்கள் (Merchants) என்ற பிரிவுகள் தொழிலுக் கேற்ப உருவாயின. ஆயினும் படைத் தொழிலில் வீடுபட்டோர் தங்களைச் சாமுராய் (Samurai) என்றே அழைத்துக் கொண்டனர்.

சாமுராய்களின் வீரப் பண்புகளை ஆய்ந்து நோக்கும் போது இவர்கள் இந்திய நாட்டு இராசபுத்திரர்களை ஒத்திருப்பதைக் காண்கிறோம். இவர்கள் மானத்தையே பெரிதாகக் கருதினர். தங்களைப் பேச்சால், மூச்சால், சாடையால், செயலால் இகழ் பவரைத் துண்டு துண்டுகளாக வெட்டுவர்; பளபளக்கும் வாள் சாமுராய்களின் துடிதுடிக்கும் நெஞ்சமாகும்; 'மானம் வரின் வாழாக் கவரிமா னன்னார்' நாளடைவில் சாமுராய் மரபினர் என்ற சிறப்புடைய வீரத்திற்கும் பெயர் பெற்றவர்களாய் விளங்கினர். மேலும் அவர்கள் வீரத்தில் மட்டுமின்றி அறிவிலும் பெயர் பெற்றவர்களாய் விளங்கினர். ஜப்பானிலேற்பட்ட தீவிரச் சீர்திருத்தங்களும், ஐரோப்பியரை விட்டு மேலை நாகரிகத்தைப் பரப்புவதற்கும், மேலை நாடுகட்குச் சென்று அறிவியலைக் கற்று வருவதற்கும் மைய ஆட்சியை வலுப்படுத்துவதற்கும், நிகராளிய ஆட்சியை ஏற்படுத்துவதற்கும், விடுதலை, சால்புடைமை, பொறை யுடைமை முதலிய அரசியல் பண்புகளை ஆக்குவதற்கும் இவ்வீர மரபினரே மூல காரணியமாய் அமைந்தனர். தாளிகைகள், வெளியீடுகள், வரலாற்றியல், அரசியல், அறிவியல், சட்டவியல், வணிகவியல் முதலியவற்றில் புதுமைகளும் புதிய கல்வி முறை களும் சாமுராய்களால்தான் ஜப்பானில் மலர்ந்தன. இவை யாவும் அவர்களின் வீரப் பண்பிற்கொப்ப அமைந்திருத்தலைக் காண்கிறோம்.

ஒவ்வொரு சாமுராயும் இரண்டு உடைவாள்களை வைத்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றிருந்தான். ஒன்று பெரியது; மற் றொன்று சிறியது. பெரிய வாள் நான்கடி நீளமிருக்கும். இதனை இடுப்பிலுள்ள கச்சையில் மாட்டியிருப்பான். சிறிய வாள் ஒன்ப தரை விரல நீளமிருக்கும். இதை மரத்தால் செய்த உறையுள் போட்டுக் கையில் வைத்துக் கொள்வான். இவ்வாளின் பிடியில்

இதனைச் செய்த கொல்லனுடைய பெயரைக் கொண்டுதான் வாளுக்கு மதிப்பு ஏற்படும். இக் காலத்து வாள்களே ஜப்பான் நாட்டுப் புகழின் சின்னங்களாயிருந்தன. ஒவ்வோர் இளம் சாமு ராயும் போர்க் கலைகள் அனைத்திலுமே தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்; குதிரையேற்றம், வில், வேல், வாள் முதலியவற்றைப் பயன் படுத்தும் பயிற்சி முறைகள், மானம் வரின் தற்கொலை (Hara - Kiri) செய்து கொண்டு இறத்தல் ஆகியவற்றில் கடுமை பயிற்சி பெறுவர்.

ஜப்பானிய நிலக்கிழமை முறை அக் கால மக்களுக்கு ஒரு பெரிய தொல்லையாகவோ, பளுவாகவோ அல்லது ஏற்றத் தாழ்வு களைக் கொண்டதாகவோ தென்படவில்லை. அக் காலக் குடும்ப அமைப்பு அவ்வாறிருந்ததே காரணியமாகும். மனைவி கணவ னுக்கும், மகன் தந்தைக்கும், வேலைக்காரன் முதலாளிக்கும் உள்ளத்தாலும், உடலாலும் அடிமைகள் போல் அடங்கி வாழ்ந்தனர். எனவேதான் இயேயாசு குமுகாயத்தை மேற்கண்ட கூறுபாடுகளாகப் பிரித்து, படிக்கட்டுக் குமுகாயமாக்கினான். இதையே இவனுக்குப் பின் வந்தோரும் பின் பற்றினர்.

இயேயாசு காலத்தில் புத்த மதம் பெரும்பாலான மக்களால் பின்பற்றப்பட்டது. இதைத் தவிர மற்ற சமயங்களும் ஜப்பானில் இருந்தன. ஆனால், இயேயாசு, கிறித்தவம் தவிர மற்ற சமயங் களுக்குப் பாதுகாப்பு அளித்து சமயப் பொறையைக் கையாண் டான். அரசுக்கு இடையூறில்லாமல் எந்தச் சமயத்தையும் பின் பற்றலாம். இடையூறு உண்டாக்குவது எச் சமயமாயினும் அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத போது கிறித்தவம் எப்படியும் இந் நாட்டிலிருக்கக் கூடாதென இயேயாசு அறிக்கை விடுத்தான். தான் மட்டும் சோதோ (Jodo) பிரிவைப் பின்பற்றினான். தோக்கியோவுக்கண்மையிலுள்ள சிபாவிலுள்ள சோசோசி (Zojoji) கோயிற் பொறுப்பேற்றுத் தன் செலவிலே காத்தான். இவனுக்குப் பின் சோதோ பிரிவு சோகன் அவையின் சமயமாயிற்று.

இயேயாசு கி.பி. 1605ஆம் ஆண்டில் பதவி துறந்து சிசுவோகா விலிருந்து (Shizuoka) கொண்டு கலை, கல்விப் பணிகளையாற்றினான். நூல்கள் திரட்டல், கையேடுகளை அச்சிடல், கற்றோரைப் போற்றல் முதலிய பணிகளைச் செய்தான். இவற்றையே பெருநிலக் கிழார்களும் கையாண்டனர். இவனுக்குப்பின் சோகன் பதவி யேற்ற இவனுடைய மூன்றாவது மகன் இதேததா (Hidetada) இப் பணிகளைத் தொடர்ந்தான்.

நிலக்கிழமை முறை சிறந்து நின்ற இக் காலத்தில் ஜப்பானிய வரலாற்றில் சிறப்பு மிக்க பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அவை ஜப்பானிய நாட்டிற்குப் பல மாற்றங்களைக் கொண்டு வந்தன. இதுவரை அட்லாண்டிக் மாகடலில் அதிகாரப் போட்டியிட்டு வந்த ஐரோப்பியர்கள் இனி பசிபிக் மாகடலிலும் போட்டியிடத் தொடங்கினர். அட்லாண்டிக் மாகடலில் சுபானிசுகாரர்கள் ஒருபுறமும், தச்சுக்காரரும், ஆங்கிலேயரும் மற்றொரு புறமும் முன்பு போட்டியிட்டு வந்தனர். பசிபிக் மாகடலில் போர்த்துகீசியரும், சுபானிசுகாரரும் நெடுநாள்களாய் அதிகாரம் செலுத்தி வந்தனர். ஆனால், இக் காலத்தில் தச்சுக்காரரும், ஆங்கிலேயரும் பசிபிக் கடலிலும் அதிகாரம் செலுத்தத் தொடங்கினர். இதற்குச் சற்றுமுன்னர் வில் ஆடம்சு (Will Adams) என்ற ஆங்கிலேயர் ஜப்பானுக்கு வந்தார். இவருடன் வந்த பலரும் முட்டிக்கால் நோயால் இறந்துவிட, இவரும் மற்றும் மூன்று தச்சுக்காரர் மட்டும் ஏப்பிரல் 1600-ல் குயூசுத் தீவிலுள்ள பங்கோ (Bungo) மாநிலத்தில் இறங்கினார்கள். போர்த்துக்கீசியரின் சூழ்ச்சியால் மிகாடோவால் சிறையிலடைக்கப்பட்டு மீண்டும் விடுதலை பெற்றபின் மற்றவர் தாய்நாடு திரும்ப ஆடம்சு மட்டும் சோகனுடைய சவையிலேயே இருக்க இசைவு பெற்றார். இவருடைய உதவியால் சோகன் பதினெட்டுக் கல்லெடையுள்ள ஒரு கப்பலைக் கட்டினார். 1609-ல் 120 கல்லெடையுள்ள மற்றொரு கப்பலும் கட்டப்பட்டது. இச் சமையத்தில் மணிலாத் தீவிலிருந்து தாய்நாடு சென்று கொண்டிருந்த சுபானிசு ஆளுநரின் கப்பல் உடைந்து விட்டது. அவரும் அவருடைய ஆள்களும் ஜப்பானிலுள்ள சிமோசாத் துறை முகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு இயேயாசுவால் காப்பாற்றப் பட்டனர். ஊர் திரும்பும்போது அவர்களைத் தான் இரண்டா வதாகக் கட்டிய கப்பலில் இயேயாசு ஏற்றி அனுப்பினான். அந் நன்றிக்காக அவர்கள் ஆயிரம் கல்லெடையுள்ள கப்பலொன்றை இயேயாசுக்குப் பரிசாக வழங்கினர். இவ்வாறு ஆடம்சு இயேயாசுக்குப் பல கப்பல்களைக் கட்டிக் கொடுத்ததோடு ஐரோப்பியரைப் பற்றிய உண்மையான பல சேதிகளை இயேயாசுக்கு அளித்தார். இவரின் மனைவி இறந்தபின் ஜப்பானிய மாதொருத்தியை மணமுடித்து, இவரையும் ஒரு நிலக்கிழானாகவே இயேயாசு மாற்றினான். ஜப்பானியராகவே வாழ்ந்த ஆடம்சு 6-5-1620-ல் ஓகோகமா என்னும் ஊரிலேயே மறைந்தார். இவரை இன்னும் நினைவுகூரும் வகையில் தோக்கியோவில் 'கப்பலோட்டித் தெரு' என்று ஒன்றுள்ளது. இவரை ஜப்பானியர் 'கப்பலோட்டி' என்றே அழைத்தனர்.

ஆடம்சு வருகைக்குப்பின் 1609, 1611-ல் தச்சுக்காரர் ஜப்பானுக்கு வந்தனர். 1611ஆம் ஆண்டில் தான் இவர்களுக்கு ஜப்பானுடன் வாணிகம் செய்யும் உரிமை வழங்கப்பட்டது. இவர்களுக்கும் சோகனுக்குமிடையில் ஆடம்சு சிறந்த மொழி பெயர்ப்பாளராக உதவினார். தச்சுக்காரருக்குப்பின் ஆங்கிலேயரும், ஜப்பானுடன் வாணிகத் தொடர்பு கொள்ள முற்பட்டனர். இங்கிலாந்தை ஆண்ட முதலாம் சேம்சு மன்னரிடமிருந்து மடலொன்றைப் பெற்றுக் கொண்டு தளபதி சான் சாரிசு (John Saris) என்பார் ஜனவரி 1611-ல் ஜப்பானுக்குப் புறப்பட்டு பல நாடுகளில் தங்கி, சூன் 1613-ல் தச்சுக்காரர்கள் ஜப்பானுக்கு வந்தனர். 1611ஆம் ஆண்டில் இதோ என்னுமிடத்திலிறங்கி ஜப்பானுக்குள் நுழைந்தார். ஆதாமின் உதவியால் சோகனின் இசைவு பெற்று ஜப்பானிலுள்ள எத்துறைமுகத்திலும் வாணிகத் தளத்தை ஏற்படுத்த அனுமதி பெற்றார். இதோவில் முதல் ஆங்கில வணிகத்தளம் அமைக்கப் பட்டது. இவ்விடத்தில் தச்சு வணிகத் தளமுமிருந்தது. இதற்குப்பின் ஆங்கில வணிகத்திற்கும், பண்டக சாலைக்கும் தளபதி காக்சு (Cocks) என்பவரைத் தலைவராக அமர்த்தி விட்டு சான் சாரிசு இலண்டன் திரும்பினார்.

சான் சாரிசு இலண்டன் சென்றபின் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவுக்கும் தச்சு வாணிகக் குழுவுக்குமிடையே கீழ்த் திசை நாடுகளில் மோதல்கள் ஏற்பட்டன. இதற்கு இவ்விரு நாடுகளுக்குமிடையே ஐரோப்பாவிலேற்பட்ட பகையும் போருமே காரணியமாகும்; அத்தோடு வணிகத்திலேற்பட்ட போட்டியும் பொறாமையுமாகும். இதன் விளைவுதான் 1623-ல் அம்பாய்வினாலேற்பட்ட படுகொலை நிகழ்ச்சியுமாகும். இதற்குப் பின் ஆங்கிலேயர்கள் ஜப்பானையும், கீழ்த்திசை நாடுகளையும் விட்டுவெளியேறி இந்தியாவுடன் வணிகம் செய்வதில் முழுக் கவனத்தையும் செலுத்தினர். இவ்வாறு தச்சுக்காரர்கள் ஜப்பானில் அயலார் போட்டியில்லாமல் வணிகத்தில் செழித்தனர்.

நிலக்கிழமைக் காலத்தில் ஜப்பானில் புதிய இலக்கியங்களும், பழைய இலக்கியத் திரட்டலும், வரலாற்றியலும் வளர்ந்ததாகக் கூறினோம். இவற்றிற்குப் பேருக்கம் அளித்தவன் இயேயாசு என்று கூறினோம். இவனே ஓர் இலக்கிய மேதையாக விளங்கினான். 1605-ல் பதவி துறந்து 1616-ல் இறக்கும்வரை இவன் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன. சும்பு (Sumbu) என்னும் இடத்தைத் தன் ஓய்வுக்கால இருப்பிடமாகக் கொண்டு இயேயாசு அங்கொரு புதிய அச்சுக் கூடத்தை ஏற்படுத்தினான். நகரும் புதிய அச்சுப் பொறி யொன்றைக் கொரியாவிலிருந்து

வரவழைத்து பல நூல்களை அச்சிட்டான். அவற்றுள் மிகப் பெரியது ஒருசிறந்த நூலாகும். அச்சுப் பொறி முதன் முதலில் கொரியாவில் கி. பி. 1317-ல் புழகத்திற்கு வந்தது. இதற்குப் பின்னரே கி. பி. 1433ஆம் ஆண்டில் முதன் முதல் ஐரோப்பாவில் அச்சுப் பொறி பயன்படுத்தப்பட்டது. இயேயாசு இறந்தபின் விட்டுச் சென்ற 'ஆவணத் தொகுப்பு' (Legacy of Iyeyasu) ஜப்பானின் மிகச் சிறந்த வரலாற்று மூலமாகக் கொள்ளப்பட்டது. இதில் 100 படலங்கள் இருக்கின்றன. இவை பொருள்வாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் பதினாறு படலங்கள் அறத்தையும், அறத்தின் பயனையும் வற்புறுத்துகின்றன. அடுத்த 55 படலங்கள் அரசியல் ஆட்சிமுறைகளைப் பற்றி விவரிக்கின்றன. இருபத்திரண்டு படலங்கள் நயன்மை முறைகளைப் பற்றியும் கடைசி ஏழு படலங்கள் இயேயாசுவின் வாழ்க்கையோடு தொடர்புள்ள நிகழ்ச்சிகளையும் விவரிக்கின்றன. சீன மெய்யறிவர்களான கன்ஃபூசியசு, மென்சியசு ஆகியோரின் போதனைகள் அறன் வலியுறுத்தும் படலங்களிலும், மற்றும் படைக்குலத்தார் நலம் பேணல், தொகுசுவாக்களின் வளர்ச்சி, குமுக அமைப்பு, திருமணம், தலைவன் அல்லது ஆண்டையுடன் உயிர் துறத்தல் முதலிய பொருள்களைப்பற்றி இறுதிப்படலங்களிலும் இயேயாசு விவரித்துள்ளான். எனவே இஃது நமக்கோர் இன்றியமையாத நூலாகிறது.

இவனுக்குப் பின் மிகத் திறமையோடும், புகழோடும் ஆண்ட இவரின் பெயரன் இயேமித்சு (Iye Mitsu) இது போன்ற இலக்கியப் பணிகளைத் தொடர்ந்தான். இவன் மாநிலப் பணிகளிலுள்ள பெரு நிலக்கிழார்களின் குடும்பங்களுடன் படையாட்சியின் தலைநகரான எதோவில் நிலையாக வாழ்ந்து வந்தான். இதனால் நிலக்கிழார்களும் படைக்குடும்பத்தினரும் தங்களின் மரபுப் பண்புகளிலிருந்து மருவி, உயர்தர வாழ்க்கையில் மூழ்கினர். இவர்களின் இத்தகைய வாழ்க்கை முறை குமுகாயம், அரசியல் ஆகியவற்றிலிருந்து இவர்களை வேறுபடுத்தி இவர்களின் அழிவுக்கு வழி கோலியது. நிலக்கிழார்களின் பிரிவினைச் சத்திகளால் ஜப்பான் சீர்கேடுற்றது. சோகன்களின் ஆட்சியும், மிகாடோவின் மாண்பும் இவர்களால் அழிந்தன. இயேயாசுவின் காலத்தில் 263 பிரிவினராயிருந்த இவர்கள் கடைசிச் சோகன் காலத்தில் தலைகீழ் மாற்றம் பெற்று, மேலும் பெருகி நாட்டையழிக்கும் சத்திகளாய் மாறியதால் 'முன்னிலை மீட்சி'யைக் கொண்டு வரவேண்டியதாயிற்று.

கடைசியாக மேசி முன்னிலை மீட்சிக்குப் பின் கி. பி. 1871-ல் வெளியிடப்பட்ட அரசியல் சட்டத்தால் நிலக்கிழமை முறை

ஜப்பானில் ஒழிக்கப்பட்டது. பல நூறு ஆண்டுகளாய்க் குமுகாயத்தின் குருதியைக் குடித்து வந்த அட்டைகளைத் தோளுக்கும் ஊனமின்றி, வாளுக்கும் வேலையின்றிச் சட்டத்தால் சாய்த்த பெருமை மாண்புமிகு மேசி முட்சு இதோ (1868—1912) அவர்களையே சாரும். நிலக்கிழார்களும், சாமுராய்களும் தங்களின் பண்ணைகளைத் தாங்களே முன்வந்து கொடுத்து விட்டு அரசின் உதவித் தொகை பெற்று அமைதியோடு வாழ்ந்தனர். நிலக்கிழார்களின் படைமானிய முறைக்குப் பதில் 'தேசியப் படையமைப்புமுறை' ஏற்பட்டது. சாமுராய்கள் மட்டுமே படையினராயிருந்த நிலைமாறிப் பலரும் படையில் சேர்ந்தனர். ஜப்பானின் தேசியப்படை செருமன் நாட்டுப் படைமாதிரியில் அமைக்கப்பட்டது. நிலக்கிழார்களின் சட்டதிட்டங்களுக்குப் பதில் தேசியச் சட்டங்கள் தோன்றின. உள்துறை ஆட்சிமுறைகளை அரசுப் பணியாளர்களே நடத்தினர். குமுகாயத்திலிருந்த உயர்வு, தாழ்வுப் பிரிவினைகள் அகற்றப்பட்டன. நிலமானிய முறையின் மறைவுக்குப்பின் ஜப்பானில் எல்லாருக்கும் அரசியலில், படையில், கல்வியில் மற்ற அடிப்படை உரிமைகளில் சமபங்கு கிடைத்தது.

## எதோ அல்லது தொகுகவா நாகரிகம்

ஜப்பானியப் பேரரசரைப் பொம்மையாக்கி, எழுநூறு ஆண்டுகளாய் ஆட்சியைக் கைப்பற்றி, இரட்டையாட்சி நடத்திவரும் சோகன்களின் கடைசி மரபாகிய தொகுகவா சோகன்களின் இருநூற்றைம்பது ஆண்டுக் காலத்தில் அவர்களின் இருப்பிடமா யமைந்த எதோ நாகரிகத்தை நாம் இப்பொழுது அறிந்துகொள்ளவேண்டிய தேவை ஏற்படுகிறது. தொகுகவா காலத்தின் முகாமைக் கூறுபாடுகள் நகரங்களின் தோற்றமும், நகர வாழ்க்கை முறையின் வளர்ச்சியுமாகும். குறிப்பாக இன்றைய தலைநகரான தோக்கியோ, அவர்களின் பாசறையாக எதோ என்ற பெயரில் எழுந்தது. அரசவைக் கிழார்களும், அரசுப் பெரும் பணியாளர்களும், நாட்டுப் பணிகளி லீடுபட்டுப் பல பகுதிகளில் செயலாற்றினாலும் அவர்களின் குடும்பங்கள் எதோவிலேயே தங்கியிருந்ததால் அந் நகரின் மக்கள் தொகையும், நாகரிகமும் உலகப் பெரு நகரங்களில் ஒன்றாக வளர்ந்தது. முன்பு அரசவைக் கிழார்களாயிருந்து தலைநகர வாழ்வின் உச்சியிலிருந்த வர்களைப் போலவே தொகுகவா சோகன்களின் காலத்தில் சாமுராய் (Samurai) எனப்படும் படைக்குலக் கிழார்கள் எதோ பாசறையில் சொகுசான நாகரிக வாழ்வின் உச்சியில் திகழ்ந்தனர். இவர்கள் அரசவைக் கிழார்களாகவும், அமைச்சர்களாகவுமிருந்து ஆட்சியின் முதுகெலும்பாய்த் திகழ்ந்தனர். இவர்களின் நல

வாழ்விற்கு அடிப்படையாக அமைந்த வணிகர்கள், கைவினைஞர்கள், ஏவலாளிகள், மற்றும் பலரும் இவர்களை அண்டி வாழ்ந்ததால் நகர மக்களின்தொகை பெருகியதோடு இவர்களும் நாட்டுப்புற மக்களை விட மேலானவர்களாகக் கிழார்களோடு ஒத்த வாழ்க்கையை நடத்தினர். எதோவைப் போலவே ஆறு மாநிலத் தலைநகர்கள் பெரிய நகரங்களாய் வளர்ந்தன.

வணிகர்களும், அவர்களின் செல்வமும் நகரங்களில் வளர்ந்தவுடன் அவர்கள் தங்கள் செல்வச் செருக்கால் மற்றவர்களைத் தாழ்வாகக் கருதித் தங்கள் பண்டைய ஃபூசிவாரா, மினமொதோக்கள் முதலான பெருங்குடிகளில் பிறந்தவர்களென்று கூறித் தங்களைக் குமுகாயத்தின் உச்சாணி என்று தருக்கிக் கொண்டனர். அக் குடும்பங்கள்தான் தொகுகவா சோகன் பதவி துறந்தவுடன் ஜப்பானைக் கட்டுப்படுத்தின. அக் குடும்பங்களில் முகாமையானவை சத்சுமா, சோசு, மித்சு முதலியவையாகும். இக் குடும்பங்கள் கி.பி. 19ஆம் நூற்றாண்டில் ஜப்பானிலேயே பெருஞ் செல்வம் படைத்த குடும்பங்களாயிருந்தன. எனவே தொகுகவா காலத்தில் படைக்குலத்தினர் தங்கள் குடும்பத்தின் உயர்வாலும் அதிகார ஆணவத்தாலும் ஒருபுறம் செருக்கி நின்றபோது, வாணிகத்தால் பெரும் பொருளீட்டிச் செல்வச் செருக்கின் உச்சியிலே வணிக குலத்தார் நின்றனர். நெல்லையே செல்வத்தின் முதலீடாகக் கொண்டிருந்த ஜப்பானில் இத்தகைய வணிக குலத்தவரால் பணம் முதலீட்டில் முன்னணியில் நின்றது. எனவே நிலத்தையும், அதில் விளையும் நெல்லையும் முதலீடாகக் கொண்டு வாழ்ந்த படைக் குடும்பங்களை மிக எளிதாக எதிர்க்க இத்தகைய பணத்தை முதலீடாகக் கொண்ட வணிகர்களுக்கு ஏதுவாயிற்று.

ஜப்பானுக்கும் வெளியுலகுக்குமிடையே இருந்த தொடர்பு அறுபட்டபின் உள்நாட்டில் மக்கள் தொகை வளரவில்லை. 18ஆம் நூற்றாண்டிலும், 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஜப்பானிலேற்பட்ட பஞ்சமும், பட்டினியும், கருச்சிதைக்கும் வழக்கமும், குழந்தைக் கொலையுமே இதற்குக் காரணியமாகும். ஏழை வேளாளர் பஞ்சத்தாலும் படைமானியக்காரர்களின் வரிகளாலும் கெடுபிடிகளாலும் எலும்பும் தோலுமாயினர். புத்த சமயமும், கன்ஃபூசியமுந் தவிர இக் காலத்தில் எத்தகைய சமயமும் நாட்டிலில்லை. கிறித்தவம் தடை செய்யப்பட்டது தெரிந்ததே! சீனவிலும், கொரியாவிலுங் கூட புத்த மதம் சீர்குலைந்து காணப்பட்டது. ஆனல், நொபுநகா, இதேயொசி, இயேயாசு முதலானவர்களால் இம் மதம் சீருடன் வளர்ந்தது; இதனுடைய வளர்ச்சிக்கு வணிகக் குலத்தினர் மேலும் செல்

வாக்கைத் தேடித் தந்தனர். பல விலையுயர்ந்த சிலைகளும், கோயில் களும் இவர்களால் உருவாக்கப்பட்டன. கன்ஃபூசிய மதம் தொகு கவா குலத்தவரால் பின்பற்றப்பட்டதால் அரசாங்க புரப்புடன் இதுவும் சிறப்பாக வளர்ந்தது. அக் காலத்தில் சீனாவை ஆண்ட மிங் குலப்பேரரசர் வாங்கியாங் மிங்கு (Wang Yang Ming) என்ப வரையும், கன்ஃபூசிய விரிவுரையாளர் சௌஃகிசி என்பாரையும் பின்பற்றி தொகுகவாக்கள் கன்ஃபூசிய சமயத்தைச் சிறப்பாக வளர்த்தனர்.

சாமுராய்கள் தங்களுடைய வீரப் பண்பைத் (Bushido) தங்க ளின் குலப் பண்பாக வளர்த்தனர். இஃது ஐரோப்பாவில் இடைக் காலத்தில் தோன்றிய வீரர்கள் (Knights) மேற் கொண்ட வீரப் பண்பை (Chivalry) ஒக்கும். இக் காலத்தில் நுண்கலைகளும் வளர்ச்சி பெற்றன. சென் புத்த சமயப்பிரிவினர் கலைநுணுக்க முள்ள அணியழகு கொண்ட பல்கலைகளையும் தங்கள் கோயில்களில் வளர்த்தனர், தொகுகவாக்களும் கலையழகு விஞ்சும் பல கவின் மிகு அரண்மனைகளைக் கட்டினர். வண்ணக் குழம்புகளைக் கொண்டு ஓவியங்களைத் தீட்டுதலும், அச்சடித்தலும் இக் காலத்தில் புதிய மெருகுடன் வளர்ந்த கலைகளாம். பலர் கூடி பலவகை இன்னியங் களுடன் நடத்தும் நோ (No) எனப்படும் நாடகக் கலையும் இக் காலத்தில் வளர்ந்தது. பலர் ஒரே குடும்பத்தினரைப்போல் ஒன்று கூடி தேநீர் அருந்தும் வழக்கமும் இக் கால நாகரிகத்தின் சிறந்த சின்னமாய்த் திகழ்ந்தது. நாடகக் கலையால் நாடெங்கிலும் சிறிய, பெரிய நாடக அரங்கங்கள் ஏற்பட்டன. நாடகக் கலைஞர் களுக்கும் இக் காலத்தில் குமுகாயத்தில் மதிப்பு உயர்ந்தது. யோசிவாரா மாவட்டத்திலிருந்த நாடக அரங்கில் எதோ நகரின் சாயலே எதிரொளித்தது. ஆயினும் இத்தகைய கலைகள் யாவும் உயர் குடிமக்களுக்கே சொந்தமா யிருந்தன; எளிய மாந்தன் இப் போலி உலகிற்கும் அப்பால் பரிதவித்துக் கொண்டுதான் அன்றுமிருந்தான்!

'வரலாறு பொய்க்காது; சகடக்கால் போற் சுழன்று வரும்' என்பர். அதுபோலவே தொகுவாக்கள் இத்தகைய இன்பங்களில் மூழ்கித் தங்களுடைய குலத் தொழிலாகிய போர்க் கலையில் பின் தங்கிவிட்டனர். மேலும் இவர்களுக்கு எதிரிகள் ஏராளமாயிருந்த போதிலும் முன்பு போல் இவர்களுக்கு விழிப்புணர்ச்சியும், ஒற்று மையுமில்லை. தீட்டிய வாள்கள் ஒளியுடன் பாசறையிலிருந்தனவே யொழிய அவற்றின் கூர் மங்கவில்லை. புதிதாய் எழுந்த பணக்கார வணிகர்களிடம், ஆர்க்காட்டு நவாப்புகள் ஆங்கில வணிகர்களிடம் கடன்பட்டு நாட்டை யிழந்ததுபோல இவர்களும் கடன்பட்டுத்

தங்களின் நிலங்களை யிழந்தனர். உயர்தர வாழ்க்கை அந்த அளவுக்கு இவர்களை இழுத்துச் சென்றுவிட்டது; என் செய்வது!

இச்சமையத்தில் மக்களும் சிந்தனையாளர்களாயினர். கன்ஃபூசிய சமயத்தின் கருப் பொருள் தலைவனுக்குத் தங்களைப் படைத்தலென்பதை நன்கு சிந்தித்தனர். இன்றைய தலைவன் சோகனு அல்லது அவன் சார்ந்துள்ள பாசறையா அல்லது புனிதப்பேரரசரா (மிகாடோ) என்பதைச் சிந்தித்தனர். இன்பபுரியில் இறுமாந்து புரண்டு கிடக்கும் சோகன் அல்லன்; புனிதப் பேரரசரே தங்கள் தலைவன் என்ற முடிவுக்கு மக்கள் வந்தனர். சோகனும், அவனைச் சார்ந்துள்ள கிழார்களும் எதோ நகரின் நாகரிகத்திலே மூழ்கிக் கிடப்பவர்கள். தங்கள் நல்வாழ்வுக்குத் தங்களுக்குள்ளேயே, அரிமாக்கள் எலும்புத் துண்டுகளுக்காக உறுமுவதைப்போல் போட்டியும் பொருமையும் கொண்டு வாழ்பவர்கள். நாமோ இந்த இன்பபுரிக்கப்பால் என்றென்றும் ஏழைகளாய் வாழ்பவர்கள்; எனவே இவர்களை ஒழித்து இறையன்ன பேரரசனையே ஒரே தலைவனுகக் கொள்ள வேண்டுமென்று மக்கள் முடிவு செய்தனர். சீனுவில் மஞ்சுக்களின் ஆட்சியில் அந் நாட்டின் வரலாற்றை எவ்வாறு கன்ஃபூசியக் கொள்கை மாற்றி யமைத்து நிலமானியக் கிழார்களை ஒழித்ததோ அதைப்போலவே ஜப்பானிலும் நடந்தது. இவற்றிற்கேற்ருற்போல் ஐரோப்பியரின் நுழைவும், புதிய வளர்ச்சியும் ஜப்பானில் ஏற்பட்டதால் வேறு வழியின்றிக் குமுகாய, அரசியல், பொருளியல் மாற்றங்களுக்கு இடம் கொடுத்து சோகன் பதவியினின்று விலகினுன். தெரிந்தோ தெரியாமலோ ஐரோப்பியரை நுழையவிட்டதால் ஜப்பான் ஒரு புதிய நாடாயிற்று. அதே சமையத்தில் புதிய காலத்தின் சின்னமான குடியாட்சியாக அமையாமல் அரசரைத் 'தெய்வீகப் பேரரச'ராக ஏற்றுக் குமுகாய நலமும் ஒற்றுமையும் பேணி இன்றைய உலகில் உச்சநிலையில் நிற்கும் நாடுகளில் ஒன்ருக ஜப்பான் திகழ்கின்றது. தொகுகவா நாகரிகத்தின் பிற்கால விளைவே இதற்குக் கரணியமாகும். கேடும் நன்மைக்கே என்பதை தொகுகவாக்களின் பண்பியல் கேட்டால் அறிகிருேம்.

## கி.பி. 16, 17ஆம் நூற்ருண்டுகளில் ஜப்பானில் கிறித்துவம்

கி.பி. 1642-ல் முதன் முதலாகப் போர்த்துக்கீசியர் ஜப்பானில் இறங்கினர். போர்த்துக்கீசியரின் ஆளுநராக மொலுக்கசு தீவிலிருந்து கல்வனோ (Galvano) என்பவர் எவ்வாறு புயலால் உந்தப்பட்டு போர்த்துக்கீசியர் தென் ஜப்பானில் இறங்கினுர்கள் என்பது பற்றி விளக்கியுள்ளார். இவ் வாண்டுக்குப் பிறகு தான் கிறித்தவ சமயம் ஜப்பானில் எவ்வாறு பரவிய தென்பதை சான்றுடன்

நாம் அறிகிறோம். இவ்வாறு தென் ஜப்பானில் அதாவது குயூசுத் தீவிலிறங்கிய போர்த்துக்கீசியரை சத்சுமா என்னும் ஜப்பானிய இளவரசர் தனிகசிமா என்னுமிடத்தில் வரவேற்றார். முதன் முதலாக ஜப்பானிலிறங்கிய போர்த்துக்கீசியர் பிண்டோ (Pinto) என்பவராவார். இவர், இளவரசர் சத்சுமாவுக்கிருந்த நோயைக் குணப்படுத்தியதாலும், வெடி மருந்தின் பயனை இளவரசருக்கும். மக்களுக்கும் கற்றுக் கொடுத்ததாலும் இவருடன் கொண்டு வந்திருந்த வேட்டெஃகத்தைப் பயன் படுத்தும் முறையினைக் கற்றுக் கொடுத்ததாலும் இவருக்கு ஜப்பானில் பெருஞ்சிறப்பு ஏற்பட்டதோடு பல சலுகைகளும் கிடைத்தன. இதற்குபின் 1547-ல் பிண்டோ ஜப்யானுக்கு மீண்டும் வருகை தந்தார். இம் முறை இவர் திரும்பிப் போகும் பொழுது அஞ்கிரோ (Angiro) என்னும் ஜப்பானியரையும், அவருடைய நண்பரொருவரையும் தன்னுடைய கப்பலில் மலாக்காவுக்கு அழைத்துச் சென்றார். இச் சமையத்தில் தொலை கிழக்கு நாடுகளுக்குக் கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற்காகத் தன்னுடைய சமயப் பூழியர்களுடன் வந்திருந்த புனித சவேரியார் (Father France Xavier) என்பவரிடம் பிண்டோ இவ் விரு ஜப்பானியரையும் அறிமுகப்படுத்தினார். சவேரியார் இவர்களை கோவாவுக்கு அழைத்துச் சென்று அறிவு முழுக்கு ('ஞானஸ்நானம்') அளித்து கிறித்தவர்களாக மாற்றினார். கிறித்தவ சமயத்திற்கு மாறிய அஞ்கிரோவுக்குப் பால் (Paul) என்றும், அவருடைய நண்பருக்கு சான் (John) என்றும் பெயரிட்டார். இவர்கள் சவேரியாரின் தீவிர முயற்சியால் கிறித்தவ சமயத்தின் கோட்பாடுகளையும், போர்த்துக்கீசிய மொழியையும் கற்றனர்.

இரண்டாண்டுகளுக்கும் பிறகு சவேரியாரும், சமய மாறிய பால், சான் ஆகியோரும், மற்றும் பல சமயப் பரப்பூழியர்களும் ஜப்பானிலுள்ள சத்சுமா இளவரசரின் தலைநகரான ககோசிமாவில் 15-8-1549-ல் வந்திறங்கினார்கள். இவர்களை சத்சுமா இளவரசர் அன்போடு வரவேற்று இருக்கையளித்துக் கிறித்தவ சமயத்தைப் பரப்ப இசைவையும் அளித்தார். பாலினுடைய (அஞ்சிரோ) பெற்றோரும் உறவினரும் ககோசிமாவில் வாழ்ந்து வந்தனர். இவர்களனைவரும் கிறித்தவ சமயத்திற்கு மாறினர். சத்சுமாவின் மனைவி, ஏசுநாதர் மாட்டுத் தொழுவத்தில் பிறக்கும் காட்சியும், மெய்யறிவு பெறும் காட்சியும் ஆகிய படங்களைக் கண்டதும் மனத்தைப் பறி கொடுத்தாள். பின்னர் கிறித்தவ சமயத்தின் கோட்பாடுகளை ஜப்பானிய மொழியில் எழுதித் தருமாறு பணித்தாள். பால் அவ்வாறே அவற்றை எழுதித் தந்தார். இதனால் கிறித்தவ சமயத்தின் கோட்பாடுகளை ஜப்பானிய மொழியிலேயே பலரும் படித்து அறிந்தனர்.

இதற்குப் பிறகு சவேரியார் கிறித்தவ சமயத்தைப் பற்றிப் பல கூட்டங்களில் பேசினார். பல புத்தத் துறவிகளோடும், சமய அறிஞர்களோடும் இவர் சமயக் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டார். இவர் ஜப்பானில் தங்கியிருந்தபோது தெய்விக அருளால் ஜப்பானியரிடம் தூய ஜப்பானிய மொழியிலேயே பேசினாரென்றும் ஆதனின் அழிவின்மை, வான்கோள்களின் பெயர்ச்சி, திங்கள், சூரிய கிரணங்கள், வான வில்லின் வண்ணங்கள், பாவ புண்ணியங்கள், வீடுபேறு, நரகம் ஆகிய வற்றைப் பற்றிய ஜப்பானியர் வினவிய வினாக்களுக்கு ஜப்பானிய மொழியிலேயே அழகாகவும், ஆழமாகவும், தெளிவாகவும் விடை யிறுத்தாரென்றும், இறந்துவிட்ட ஜப்பானியப் பெண் ணொருத்தியை உயிர்பெறச் செய்தாரென்றும் இவரைப் பற்றிப் பல கதைகள் ஜப்பானில் வழங்குகின்றன.

சிறிது காலத்திற்குள் மனமாற்றமடைந்து சத்சுமா இளவரசர் போர்த்துக்கீசியரையும், சமயப் பரப்பூழியர்களையும் ககோசிமா விலிருந்து வெளியேறும்படி உத்தரவிட்டார். இதனால் சவேரி யாரும், அவரது தோழர்களும் ககோசிமாவை விட்டு வெளியேறி சிராதோ, அகேதா, சனியோதா, நகாதோ முதலிய ஜப்பானிய ஊர்களைச் சுற்றிக்கொண்டு மிகாடோ வாழ்கின்ற கியோத்தோவைக் கி. பி. 1550-ல் வந்தடைந்தனர். இச் சமை யத்தில் மிகாடோவுக்கும் சோகனுக்குமிடையே யிருந்த மன வேறு பாட்டாலும் நாட்டில் நிலவிய அரசியல் கொந்தளிப்பாலும், கியோத்தோவில் சவேரியாரால் நெடுநாள் தங்க முடியவில்லை; எனவே 20-11-1551-ல் ஜப்பானை விட்டு வெளியேறிச் சீனாவுக்குப் புறப்பட்டார். அவர் ஓயாத பயணத்தாலும் பல தரப்பட்ட தட்பவெப்பச் சூழ்நிலையாலும், பூசைப் பொருள்கள், சமய நூல்கள் மற்றும் தனக்குப் பயன்படும் பொருள்கள் அனைத்தையும் தானே முதுகில் சுமந்து சென்றதாலும் இப் புனித அறிவாளர் சீனா செல் லும் வழியில் சான்சியன் (Sanclan) என்னும் தீவில் 2-12-1552-ல் தமது 46ஆம் அகவையில் அகால மரணமடைந்தார். அவருடைய பூதவுடலைப் போர்த்துகீசியரின் சமயத் தலைநகரான கோவாவுக்குக் கொண்டு வந்து வழிபாடுகளுக்குப் பின் புதைத் தனர். சவேரியாரின் வெளியேற்றத்துக்குப்பின் கிறித்தவ சமயம் ஜப்பானில் அழிந்து விடவில்லை. ஓமுரா போன்ற இளவரசர்களும் கிறித்தவ சமயத்தில் சேர்ந்தனர். ஜப்பானில் நிலவிய அரசியற் குழப்பங்களால் புத்தமதத்துறவிகள் மடங்களும் அடக்குமுறைக்கு உள்ளாயினர். சோகன்களின் அடக்கு முறைகளுக்குள்ளாயினர். இச் சூழ்நிலையில் கிறித்தவ சமயம் கியோத்தோவிலும், ஓசாகா விலும் மற்றும் முகாமை நகரங்களிலும் ஆங்காங்கே துளிர் விட்டுக்

கொண்டிருந்தது. கி. பி. 1573-ல் நாகசாகியிலிருந்த போர்த்துக்கீசிய வணிகர்கள் அதனையாண்ட ஓமுரா (Omura) இளவரசரிடம் இசைவு பெற்று அங்கேயே நிலையாகத் தங்கள் வாணிகக் களங்களை யமைத்துக் கொண்டனர். இதற்குப் பிறகு நாகசாகியில் கிறித்தவரின் குடியேற்றங்களும் மாதா கோயில்களும் போர்த்துகல் நாட்டிலிருப்பது போல் அமைக்கப்பட்டன. ஏதிலி (அனாதை) விடுதிகள், மருத்துவ மனைகள், பள்ளிகள் முதலியன நாகசாகி முழுவதும் அமைக்கப் பட்டன. இதைப்போலவே நாளடைவில் கியோத்தோ, யமாகுச்சி ஒசாகா, சாகை முதலியவிடங்களில் கிறித்தவர்களின் தேவாலயங்களும் மடாலயங்களும் பள்ளிகளும் அமைக்கப்பட்டன.

இவ்வாறு வளர்ந்து வந்த கிறித்தவ சமயம், சில அரசியல் கரணியங்களையொட்டி தைகோசாமா (Taikosama) என்பவரால் கி. பி. 1587-ல் வெளியிடப்பட்ட உத்தரவால் திடீரெனத் தடை செய்யப்பட்டது. இத்தடையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த அயல் நாட்டுக் கிறித்தவர்கள் யாவரும் வெளியேற்றப்பட்டனர்; ஒன்பது பேர் உயிரோடு நாகசாகியில் எரிக்கப்பட்டனர். ஆயினும் இத்தகைய கடினத் தடைகளுக்குப் பின்னும் கிறித்தவசமயம் ஜப்பானில் வளர்ந்து கொண்டே வந்தது. உகோண்டோனோ (Ucondono) கோனிசியுகிநகா (Konishi Yukinoka), ஓமுரா (Omura), அரிமா (Arima) முதலான இளவரசர்கள் தாங்கள் கிறித்தவர்களாக மாறியதோடு தங்கள் குடிகளையும் அம் மதத்தில் சேரும்படி கட்டாயப்படுத்தினர். இச் சமையத்தில் சுபெயின் நாட்டு அரசர் இரண்டாம் பிலிப் போர்த்துக்கல்லை சுபெயினுடன் இணைத்துக் கொண்டார். இதனை யறிந்த ஜப்பானியர் தங்கள் நாட்டையும் இணைத்துக் கொள்ளவே கிறித்தவ ஊழியர்களும், பாதிரிமார்களும் ஜப்பானுக்கு வந்திருப்பதாக ஐயுற்றனர். ஆயினும் தங்களின் திறமையால் இவ் வயலார் ஜப்பானில் எப்படியோ செல்வாக்கைத் தேடிக் கொண்டார்கள். இயேயாசு சோகனாக இருக்கும் பொழுது தனக்கும் தன் குடும்பத்தார்க்கும் அழகிய அரண்மனைகளையும், பாதுகாப்புக் கோட்டைகளையும் கட்டினானென்று அறிகிறோம். இக் கோட்டைகளைக் கட்ட இவர்கள் உதவி புரிந்தனர். கி. பி. 1606ஆம் ஆண்டிலும், 1607ஆம் ஆண்டிலும் கிறித்தவப்பாதிரிமார்களைப் போற்றிப்பல சலுகைகளை அளித்தான். ஆனால், அவர்களின் நடத்தையிலும், தொடர்புகளிலும் இவனுக்கு ஐயமேற்பட்டதால் கி. பி. 1587-ல் தைகோசாமா வெளியிட்ட அதே தடையுத்தரவை இவன் மீண்டும் புதுப்பித்தான். தனது அதிகாரிகளையும், படை வீரக் குடும்பங்களையும், மற்றவர்களையும் கிறித்தவ சமயத்தில்

சேரக் கூடாதென்றும், அவ்வாறு சேர்ந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் உத்தரவிட்டான். இத்தகைய உத்தரவுகளுக் கிடையிலும், நாகசாகியிலிருந்த கிறித்தவர்கள் ஏசுசவை (Society of Jesus) அமைத்த இக்னேசியசு இலயோலா (Ignatius Loyola) வுக்குப் பெருஞ் செலவில் ஆரவாரத் திருவிழா நடத்தினர். இதனை யொட்டி அரிமா மாநிலத்திலும் மற்றொரு விழா நடந்தது. தன் உத்தரவுக்கு மாறாக நடத்தப்படும் இவ் விழாக்களினால் இயேயாசு பெருஞ் சினங் கொண்டு மத மாறியவர்களைப் பெருந் தண்டனைக் குள்ளாக்கினான்.

கி. பி. 1614-ல் இயேயாசு ஒரு கடும் உத்தரவைப் பிறப்பித் தான். அதன்படி கிறித்தவச் சமயத்தைப் பின்பற்றிய ஐரோப்பியரும், ஜப்பானியரும் அம் மதத்தை எக் காரணத்தைக் கொண்டும் ஜப்பானிய மண்ணில் பரப்பவோ பின்பற்றவோ கூடாதென்றும், மதமாறிய ஜப்பானியர் மீண்டும் தங்கள் மதத் திற்குத் திரும்ப வேண்டுமென்றும், ஐரோப்பியக் கிறித்தவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்றும் கட்டளையிட்டான். இதனால் பலர் நாகசாகியிலும், ஜப்பானின் வட கோடியிலுள்ள சுகாரியிலும் சென்று குடியேறினர். தனது பத்தாயிரம் படை வீரர்களை அனுப்பிக் குயூசுத் தீவிலுள்ள அயலவரை வெளியேற்றி மத மாறிய கிறித்தவர்களைத் தம் மதத்திற்குத் திரும்பும்படி கட்டளையிட்டான். இதனால் 25–10–1514-ல் ஏசு சவைப் பாதிரி மார்களும், சமயப் பரப்பூழியர்களும் ஏறத்தாழ முந்நூறு பேர்கள் ஜப்பானை விட்டு வெளியேறினர். இதற்குப் பிறகு ஏறத்தாழப் பதினெட்டுப் பாதிரிமார்களும், ஒன்பது இளம் துறவிகள் மட்டும் ஜப்பானில் மறைந்து வாழ்ந்தனர். மத மாறிய கிறித்தவர்கள் மீண்டும் தங்கள் மதத்திற்குத் திரும்ப வேண்டு மென்பதற்காக ஒரு தனி உசாவல் மன்றத்தையும் தனிப் படையையும் அமைத்து உசாவல் நடத்தி இயேயாசு அவர்களைக் கடும் தண்டனைக்குள் ளாக்கினான். மறைமுகமாகக் கிறித்தவ மதத்தைப் பின் பற்று வோரைப் பற்றிச் சேதி கொடுப்பவர்களுக்குப் பரிசுகளும் பதவிகளும் வழங்கப்பட்டன. இத்தகைய பரிசு வழங்கும் முறை கி. பி. 1655, 1711, 1768 ஆகிய ஆண்டுகளில் இவனுக்குப் பின் வந்தவர்களால் பின்பற்றப்பட்டன. கி. பி. 1614-ல் இயேயாசு தான் இறப்பதற்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள்பற்றிப் பாதிரிமார்கள் கூறும் சான்றுகளை நோக்கினால் மாந்தத் தன்மைக்கே ஒவ்வாத அத்தகைய கொடிய செய்கைகளை அவன் கையாண்டிருப்பானோவென ஐயுறுகிறோம்.

கி. பி. 1622-ல் நாகசாகியில் 130 சுபானிசுகாரர்களையும் இத்தாலியரையும் ஜப்பானில் படுகொலை புரிந்தனர். இதில்

பெண்களும் குழந்தைகளும்கூட இருந்தனர். இதற்கு அடுத்த ஆண்டில், இதைப் போலவே நூறு கிறித்தவர்கள் கொல்லப் பட்டனர். இவர்களைத் தங்களின் சமய வீகிகளாகக் கொண்டு எஞ்சி நின்ற கிறித்தவர்களும் வெளிப்படையாக இம் மதத்தைப் பின்பற்றிச் சாகத் துணிந்தனர். இக் கொடுமைகளை மேற்கொண்ட நாகசாகியின் ஆளுநரான கன்வேய்த் சுதோ (Kanway Tsdo) என்பவர் நீக்கப்பட்டு 1626-ல் புதிய ஆளுநர் அமர்த்தப்பட்டார். ஆனால், புதிய ஆளுநரும் தொடர்ந்து பல கிறித்தவப் பாதிரி மார்களையும், சமயப் பரப்பூழியர்களையும் உயிரோடு எரித்து வந்தார். இச் சமயத்தைத் துறப்பவர்கள் ஐரோப்பியராயினும் அவர்களைத் தண்டிப்பதில்லையெனக் கட்டளையிட்டார். பிப்பிரவரி 1627-ல் நாகசாகிக் கடற்கரையில் மறைந்திருந்த 12 கிறித்தவர்கள் சிறை செய்யப்பட்டு அவர்களுடைய நெற்றி, கன்னம் ஆகிய இடங்களில் பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் சூடு போடப்பட்டுப் பின் நாகசாகித் தெருக்களில் உயிரோடு கொளுத்தப்பட்டார்கள். சிலர் வெந்நீரூற்றுக் கிணறுகளில் தூக்கியெறியப்பட்டனர். சிலர் பனிப் பாறைகளில் புதைக்கப் பட்டனர். சிலர் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். கி. பி. 1629-ல் நாகசாகியில் புதிய ஆளுநராகப் பதவியேற்றவர் இவற்றிற்கும் மேலான கடின முறைகளைக் கையாண்டு கிறித்தவச் சமயத்தை அழிக்க முற்பட்டார். ஐந்து வீடு மேனிக்கு ஒரு பாதுகாவலர் படையை நிறுத்தித் தெருக் கோடிகளில் ஆய்வுச் சாவடிகளை அமைத்துக் கிறித்தவ சமயத்தைப் பின்பற்றுவதைத் தடை செய்தார். தானே ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் புகுந்து ஆய்வு நடத்தினார். தடை யுத்தரவை மீறி இச் சமயத்தைப் பின்பற்றியோரைக் கொதிக்கும் நீரிலும், வெந்நீரூற்றுகளிலும் தூக்கியெறிய உத்தரவிட்டார். பெண்களை அம்மணத்தோடு விலங்குகளைப் போல் தெருக்களில் இரு கால்களை மடித்துக் கைகளை ஊன்றி நடந்து போகச் செய்தார். எனவே கி. பி. 1626-ல் ஏறத்தாழ 40,000 கிறித்தவர்களைக் கொண்டிருந்த நாகசாகியில் 1629-ல் ஒருவரைக் கூடக் காணமுடியவில்லை. தன் சாவுப் படுக்கையில் ஏசுவைத் தொழுததற்காக இவரைச் சித்திரவதை செய்து கொன்றனர். இதைப்போல எண்ணிறந்த நிகழ்ச்சிகள் கிறித்தவர் பட்ட துன்பங்களை விளக்குகின்றன.

நாகசாகியில் கிறித்தவர்களைத் தண்டிக்க இன்னொரு புதிய முறை பின்பற்றப்பட்டது. அதற்குக் 'குறுக்கை யுதைப்பு' (E-fumt) என்று பெயர். ஒரு மாழைத் தகட்டில் ஏசுநாதர் குறுக்கை (சிலுவை) யிலறைந்திருப்பது போல் வரையப்பட் டிருக்கும். அதை ஒவ்வொரு வீடாக எடுத்துச் செல்லுவார்.

ஆளுநரின் அலுவலர்களும் படையினரும் உடன் செல்வர். வீட்டிலுள்ள ஒவ்வொருவரும், குழந்தைகளும், நடக்க முடியாத முதியோருங்கூட அத் தகட்டின்மீது தங்கள் கால்களை வைத்து ஊன்றிப் பின் உதைக்க வேண்டும். பின்னர் அவ்வாறு உதைத்ததாகக் கையெழுத்திட வேண்டும்; உதைக்கக் கூசினால் அல்லது மறுத்தால் அவர்கள் கொடிய சித்திரவதைக் குள்ளாவார்கள். இதுபோன்ற முறை அரிமாவிலும் மற்றும் பலவிடங்களிலும் நடந்தன.

### சிமாபாராக் கலகம் (Shimabara Rebellion-1637–38 A. D.)

கி. பி. 17ஆம் நூற்றாண்டில் நாகசாகியில் மட்டும்தான் குடும் பங்களாகக் கிறித்தவர்களைக் காணமுடியும். மற்ற இடங்களில் அவர்கள் இங்குமங்குமாய்ச் சிதறிக் கிடந்தனர். அரிமா என்னும் மாநிலத்தின் ஆளுநராக ஒரு பெரும் நிலக்கிழாரை சோகன் அமர்த்தியிருந்தான். இவன் கொடுஞ் செயலைக் கண்டு இவனைப் பதவி நீக்கம் செய்தார். இவருக்குப்பின் ஆளுநராக வந்த இவருடைய மகனும் அதே வகையில் கொடுஞ் செயல்களில் ஈடு பட்டார். கொடிவழியாக இருக்கும் குடியானவர்களை நீக்கிவிட்டுத் தனது ஆள்களுக்கு அவர்களின் நிலங்களைக் கொடுத்தார். இவ்வாறு நீக்கப்பட்டவர்களில் சாமுராய் படைக் குலத்தைச் சேர்ந்தவர்களுமிருந்தனர். வரிகளை உயர்த்தி, வரித் தண்டல் முறையைக் கொடியதாக்கினர். தவணைப்படி வரி கொடாத வர்களை வைக்கோலால் பின்னப்பட்ட குப்பாயங்களை (கோட்டு) அணியச் செய்து கைகளைப் பின்புறம் கட்டிவிட்டுத் தீயிட்டுக் குப்பாயங்களைக் கொளுத்துவார். இதுபோன்ற எண்ணிலாக் கொடுமைகளுக்குள்ளான அரிமா மக்கள் கொதித்தெழுந்தனர். இவர்களுடன் அண்மையிலிருந்த அமாகுசா (Amakusa) மாநில மக்களும் சேர்ந்து கொண்டனர். அக்டோபர் 1637-ல் கலகம் தொடங்கியது. இவர்களுக்குத் தலைவராக ஆரா என்னும் சிற்றூ ரதிகாரியின் மகன் சிரோ தொகிசதா (Shiro Tokisada) என்பவரைத் தேர்ந்தெடுத்தனர். கலகக்காரர்கள் இமாபாரா என்னுமிடத்தி லிருந்த தொமியோகா என்னும் கோட்டையைக் கைப்பற்றி, அங்கிருந்த போர்க் கருவிகளையும், வெடி மருந்துகளையும், கவசங் களையும் கொள்ளையிட்டனர். இதற்குப்பின் கலகக்காரர்களின் தொகை ஐம்பதாயிரமாகப் பெருகிவிட்டது. உள்நாட்டு அதிகாரி களால் இக் கலகத்தை அடக்க முடியவில்லை. எனவே, எதோவுக்குச் சேதி அனுப்பினர். அச் சமையத்தில் சோகனாக இருந்தவன் பெயர்பெற்ற இயேயாசுவின் பெயரனான இயேமித்சு ஆவன். இவன் தனது தளபதியின் கீழ் ஒரு பெரும்படையை அனுப்பினான். கலகக்காரர்களில் பெரும் பகுதி படைக்குலத்தினர்களான

சாமுராய்களாக இருந்ததால் எளிதில் கோட்டையை மீட்க முடிய வில்லே. கலகக்காரர்களுக்கு உதவியாக வெடிமருந்து, வேட்டெ ஃகங்கள் முதலியவற்றைத் தச்சுக்காரர்களும், போர்த்துக்கீசியர் களும் தங்கள் கலங்களில் அனுப்பினுர்கள். இறுதி நேரத்தில் கலகக் காரர்கள் தங்களிடமிருந்த 426 குண்டுகளேயும் வெடித்தனர். ஆயினும், வெற்றி சோகன் படைக்கே கிட்டியது. கலகக்காரர்கள் வெட்டி வீழ்த்தப்பட்டனர். கலகத் தலேவர் சிரோவின் தலே கொய்யப்பட்டுக் கோட்டையின் மீது தொங்கவிடப்பட்டது. அவருடைய தந்தை குறுக்கையில் அறையப்பட்டார். அரிமா மாநில ஆளுநர் தற்கொலே (Hara-Kiri) செய்து கொண்டார்.

இக் கலகத்தைத் தூண்டிவிட்டதாகவும் உதவி செய்ததாகவும் தச்சு, போர்த்துக்கீசியரின் மீது குற்றம் சாட்டப்பட்டு மாந்தத் தன்மைக்கு அப்பாற்பட்ட கொடுந் தண்டனேகளேக் கொடுக்கும்படி உத்தரவிடப்பட்டது. இதற்குப்பின் மாநில ஆளுநர்களான பெருநிலக் கிழார்களோ, பாதிரிகளோ வெளிப்படையாக எதிர்க்க வில்லே. எனவே, இக் கலகத்திற்குப்பின் கிறித்தவ சமயத்தின் வரலாறு பல காலம் வரை ஜப்பானில் மங்கியே காணப்பட்டது. இங்குமங்குமாக இச் சமயத்தவர் மறைந்து வாழ்ந்தனர். எதோவில் ஒரு 'தண்டனே மன்றம்' நிலேயாக ஏற்படுத்தப்பட்டது. இது ஜப்பானுக்குள் திரியும் பாதிரிகளேயும், சமயப் பரப்பூழியர் களேயும் சிறையிலிட்டுக் கொன்றுவந்தது. அமெரிக்கத் தளபதி பெரி 1852-ல் ஜப்பானில் காலடி எடுத்து வைக்கும்வரை நாகசாகி யிலுள்ள ஒரு சிறு தீவைத் தவிர ஜப்பானில் கிறித்தவமோ வெளியுலக அறிவோ எங்கும் காணப்படவில்லே.

# 5. ஐரோப்பியரின் வருகை

## ஜப்பான் மேலையருக்குத் திறந்துவிடப்படுதல்

கி.பி. 1641ஆம் ஆண்டிலிருந்து 1853வரை ஜப்பான், அயல் நாட்டுத் தொடர்பற்றுக் கிணற்றுத் தவளையாகக் கிடந்தது என்பதை அறிவோம். இந்த இருநூறு ஆண்டுகளுக்குட்பட்ட காலத்தில் இங்கிலாந்தும், சுகாட்லாந்தும், அயர்லாந்தும் ஒன்றி ணைந்து ஒன்றிய அரசாகிப் (United Kingdom) பாராளுமன்றத்தின் வளர்ச்சியைப் பெற்று அரசனைக் கொண்ட குடியரசு நிலைக்கு உயர்ந்த ஆங்கிலேயர்கள், தச்சுக்காரர்கள், ஃபிரெஞ்சுக்காரர்கள் முதலானோர் அமெரிக்காவில் தங்களின் குடியேற்றங்களை யமைத் தனர்; அமெரிக்க ஒன்றிய நாடுகள் (U. S. A.) தோன்றியது; சுபெயின் நாட்டரசும் துருக்கியப் பேரரசும் தளர்ச்சியுற்று நின்றன; மெக்காகோர் குடாவிலும் மைய ஆட்சி அமைக்கப்பட்டது; பதினான் காம் லூயினுடைய வீழ்ச்சிக்குப்பின் மாபெரும் ஃபிரஞ்சுப் புரட்சி ஏற்பட்டு மாவீரன் நெப்போலியனுடைய சகாப்தத்தில் ஐரோப்பா முழுவதும் ஒரு கலக்குக் கலக்கப்பட்டது; போலந்து அழிந்தது; உருசியாவும் பிரசுயாவும் புத்துணர்ச்சி பெற்று ஐரோப்பிய மயமாக்கப்பட்டன. இந்தியா, மொகலாயப் பேரரசின் அழிவுக் காலம் அவுரங்கசீப்பின் மறைவோடு (1707) தொடங்கி, மராத் தியரின் எழுச்சியையும் சீக்கியரின் கால்சா படையமைப்பையும், ஐதரலி, திப்பு சுல்தான் ஆகியோரின் எழுச்சிகளையும், கருநாடகப் போர்களையும், ஃபிரெஞ்சுக்காரரின் வீழ்ச்சியையும், ஆங்கிலே யரின் எழுச்சியையும் கண்டு பெயர் பெற்ற முதல் உரிமைப் போருக்குத் தன்னை (1857) அணியமாக்கிக் கொண்டிருப்பது இத் தனையும் உலக வரலாற்றில் நடந்து மறைந்தன. இவற்றை ஒரு சிறிதும் ஜப்பான் அறியவில்லை! நாமும் இவ் விடைக் காலத்தில் ஜப்பானில் நடந்தவற்றை அறியோம்! அண்மையிலுள்ள கொரிய, பார்மோசா, பிலிப்பைன்ஸ் தீவுகள் ஏன் மாபெரும் நாடான சீனு முதலியவற்றைப் பற்றியும் ஜப்பான் அறியவில்லை. தொசிமாவிலே ஒடுங்கிக் கிடந்த தச்சுக்காரர்களில்லையென்றால் அவ்விருநூறு ஆண்டு களும் இருண்ட காலமாகவே வரலாற்றில் மாறியிருக்கும். அவர் களால்தான் ஓரளவு உலகத்திற்கு ஜப்பான் வாழ்கிறது; மாந்தர் களு மிருக்கின்றனரென்பன தெரிய வந்தன. அவர்களால்தான்

ஜப்பானியரால் கலிலியோ, தார்வின் ஆகியோரின் அறிவியல் கண்டு பிடிப்புகளை அறிய முடிந்தது. ஆயினும், அமைதியோடு வாழ்ந்த ஜப்பானியரின் இக்கால வரலாற்றை அறியப் பல சான்றுகளிருக் கின்றன. 1709ஆம் ஆண்டிலிருந்து 1712வரை சோகனுக இருந்த இயேநொபு (Iyenobu) காலத்தில் வாழ்ந்த அகுசெகி (Hakuseki) என்பார் சைரான் இகென் (Sairan Iegn) என்னும் நூலை எழுதி முதன்முறையாக ஜப்பானிய மொழியில் வெளியிட்டான். இந்நூல் இக் கால ஜப்பானிய மக்களின் சமய, குமுக, அரசியல், பொரு ளியல் நிலைகளைப் பற்றி அறிய நமக்குப் பெரிதும் உதவுகின்றது. பரந்த நோக்கம் கொண்ட, படித்த அறிவாளியான யொசி முனே (Yoshimune= 1716—1745 A. D.) என்னும் சோகன் ஜப்பானை ஆண்ட காலத்தில் கிறித்தவச் சமய நூல்களைத் தவிர மற்ற நூல்களை வெளியிட இசைவளித்ததால் பல அரிய நூல்கள் எழுந்தன. இவன் நியூடனின் தொலை நோக்கிக் கண்ணுடியைக் கண்டா என்னுமி டத்தில் அமைத்து வான் கோள்களின் பெயர்ச்சிகளை அன்றுடம் அறிந்து வந்தான். தச்சு மொழியை ஜப்பானியர் கற்பதும், 'தச்சு ஜப்பானிய' அகர முதலியைத் தொகுப்பதும் இவனுல் ஊக்குவிக் கப்பட்டன. இதனுல் தச்சு-ஜப்பான் அகரமுதலியும், அகரமுத லியைப் பயன்படுத்தும் வழக்கமும் ஜப்பானிலேற்பட்டது. புவியி யலும், உருசிய நிலநூலும் ஜப்பானிய மொழியில் வெளியிடப் பட்டன. எனவே, இவ்விருநூறு ஆண்டுகளில் (1641-1853) ஜப்பா னியர் அமைதியோடும் மகிழ்ச்சியோடும்தான் வாழ்ந்தனர். உரோமப் பேரரசர் அந்தோனினெசு (Antonines) என்பவரின் குடிகளைவிட ஜப்பானியர் நாகரிகத்தோடும், பண்போடும், மகிழ் வோடும் வாழ்ந்தார்கள். எனவே, வெளியுலகத் தொடர்பற்ற தால் நாகரிகமற்றுக் கிடந்தனரெனக் கூறமுடியாதென்று இராபர்ட் பார்ட்டர் என்பார் கூறுகிருர். தச்சுக்காரரிடம் நாகசாகியில் மருத்து வராயிருந்த கேம்ஃபர் (Kaemfer) என்ற ஜெர்மானியர் கி. பி. 1691–92-ல் ஜப்பானைச் சுற்றிப் பார்த்தார். துன்பர்க் (Thunberk) என்ற சுவீடன் நாட்டவரும் கி.பி. 1775–76-ல் ஜப்பானிலிருந்தார். இவர்கள் தாங்கள் ஜப்பானில் நேரில் கண்டவற்றை ஒளிவுமறை வின்றி எழுதியுள்ளனர். இவர்கள் கூற்றினைக் கி. பி. 1641ஆம் ஆண்டுக்குப் பின்னும் கி.பி. 1853ஆம் ஆண்டுக்கு முன்னுமுள்ள ஜப்பானிய வரலாற்ருேடு ஒப்பிட்டு நோக்கும்போது ஒற்றுமை யுடையதாயிருக்கிறது. எனவே, இவர்களின் கூற்றுகளை ஏற்று ஜப்பான் அறிவோடும், பொலிவோடும்தானிருந்தது என்று கொள்ள வேண்டுமென மேற்படி ஆசிரியர் இராபர்ட் பார்ட்டர் கூறுகிருர். இச் சான்றுகளின்படி நோக்கினுல் இவ் விடைக் காலத்தில் ஆண்ட தொகுகவா சோகன்களின் ஆட்சியில் மக்கள் ஒன்றுபட்டு, அமைதியோடு வாழ்ந்தன ரென்றும்

கடவுளுக்குப் பயந்து, நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அடங்கி, பெரியோரைப் பணிந்து, மாற்றுரை நேசித்து வாழ்ந்தார்களென்றும் அறிகிறோம். ஆயினும் அவர்களிடம் அறிவுக் கூர்மையும், சுறுசுறுப்பும், வீரமும், பண்பும் வேண்டிய அளவு இருந்தன. அரசியல் துறையில் இன்றைக்கு நாம் காணும் குமுகப் பொதுவுடைமைக் கொள்கை அன்றைய தொகுகவாக்களாட்சியில் காணப்பட்டது.

என்றாலும் இத்தகைய குமுகத்தின் மற்றொரு புறத்தில் ஒளி வரலாறுமிருந்தது. பெண்கள் கேவலமாக நடத்தப்பட்டனர். எளியாரின் உரிமைகள் பாதிக்கப்பட்டன. ஆயினும் ஜப்பானியக் குமுகம் ஒருங்கிணைந்து விளங்கியது. இயேயாசுவின் பெயரனை மித்சுகானி (Mitsukani-1621—1700 A. D.) சோகனாக இருக்கும் போது அவனே பல அறிஞர்களின் துணைகொண்டு ஜப்பானிய வரலாறு (Dai-Nibon-Sbi—History of Great Japan) ஒன்றைச் சீன மொழியில் எழுதி 240 மடலங்களாக (Volumes) வெளியிட்டான். இவ் வரலாற்று நூல் பழம் ஜப்பானியரின் வரலாற்றையும், குறிப்பாக மிகாடோவின் அதிகாரம் எவ்வாறு யொரித்தொமோவின் காலத்திலிருந்து தொகுகவா இயேயாசுவின் காலம் வரை படிப்படியாகக் குறைந்து வந்ததென்பதையும் தெளிவாகக் காட்டுகிறது. இந்த வரலாற்று நூலே ஜப்பானில் மீண்டும் மிகாடோவின் தனியாட்சி ஏற்படத் தூண்டியதெனலாம். இந் நூல் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் கன்ஃபூசியம் ஜப்பானில் நுழைந்ததையும், கி. பி. 6ஆம் நூற்றாண்டில் புத்தசமயம் பரவியதையும், தொகுகவாக்களின் ஆட்சியில் சிந்தோ மதம் வளர்வதையும் விரித்துக் கூறுகிறது. இதனைப் படித்த ஜப்பானியர் கன்ஃபூசியத்தையும் புத்த சமயத்தையும் வெறுத்து, தூய சிந்தோக் கொள்கையை மேற்கொண்டு, மிகாடோவைத் தொழும் நிலைக்குத் தூண்டப்பட்டனர். எனவே ஜப்பானியர், பண்டைய புனித காலத்திற்குத் திரும்ப இவ் வரலாற்று நூல் உதவியதெனலாம். இதனை மேலும் தூண்டுவதாக கதா அசுமாரோ (Kada Azumamaro=1668—1736 A. D.) என்பார் எழுதிய பாத் தொகுப்புகள் அமைந்தன. இவரது காலத்திலிருந்த கமோ மாபூசி (Kamo Mabuchi=1679—1769 A. D.) என்பார் எழுதிய வாழ்க்கைக் கோட்பாடுகள் நடைமுறைக்கேற்றவைகளாயிருந்தன. சீனக் கோட்பாடுகளும் அரசியலும் ஜப்பானில் நுழைந்ததால் தெய்வமாகப் போற்றப்பட வேண்டிய மிகாடோ எங்கோ ஒரு மூலையில் தள்ளப்பட்டார். நம்முடைய பண்டைய தெய்விகக் கொள்கை படு குழியில் தள்ளப்பட்டது, சீனர்களைப்போல் அழுக்கடைந்த உள்ளமில்லாத ஜப்பானியர் நேர் பாதையில்

செல்ல வேண்டும்; போதிக்காமல் சாதிக்க வேண்டுமென்று இந் நூல் கூறுகிறது. மாபூச்சியின் 'தத்துவ போதனைகள்' மொதூரி நொரி நகா (Motoori Nori Naga = 1730—1801 A. D.) என்பவரால் மேலும் வளர்க்கப்பட்டன. 'ஜப்பான் கதிரவ தேவதையைப் பெற்ற நாடு; அக் கதிரவனின் பெயரனே முதல் மிகாடோ சிம்மு தென்னோ ஆவார். அவருடைய வழி வந்தவர்களாகிய நாம் அவரைத் தெய்வமாக வணங்கக் கற்பிக்கும் சிந்தோ மதத்தைப் பின்பற்றுமல் சீன சமயத்தை ஏற்றுத் தெய்விகப் பேரரசரை ஒதுக்கிவிட்டோம்' என மொதூரி நொரிநகா ஜப்பானியருக்கு சோகுன்களை வீழ்த்தி மிகாடோவின் ஆட்சியை ஏற்படுத்தும் உணர்ச்சியை வளர்த்தார். நொரி நகாவைப் பின்தொடர்ந்து சிரதா அச்சுதனெ (1776—1843) என்ற மெய்யறிவாளர் 'ஜப்பானியரின் ஆழம் காண முடியாத அறிவும், வலிமையும், மற்ற நாடுகளைவிட அவர்கள் உயர்ந்து காணும் தன்மையும் தெய்விக மிகாடோவின் மூலமே தொன்மையி லேற்பட்டது' என்றுர். வானம், கோள்கள் ஆகியவற்றின் பெயர்ச்சிகளைத் துல்லியமாகக் கணித்துக் கூறிச் சீனர்கள் உலகம் தட்டை யென்றும், திங்களும் கதிரவனும் நேர் நேராக எழுந்து அமைகின்றனவென்றும் கூறியதைப் பொய்ப்பித்து இவை போன்றவைதான் அவர்களுடைய கன்ஃபூசியக் கோட்பாடும் என்றுர்.

இத்தகைய மெய்யறிவாளர்களேயன்றி இக் காலத்தில் சிறந்த பொறியாளர்களுமிருந்தனர். எதோ நகர அமைப்பும் அந் நகருக்கு 30 கல் தொலைவிலிருந்து குடிநீர் கொண்டுவரப்பெற்ற முறையும் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன. திசுனயொசி (Tsunayoshi = 1680—1709) சோகுனக இருக்கும்போது 1683-ல் காலக் குறிப் பேடு கொண்டு வரப்பட்டது. இவர் காலத்தில் ஒசாகாவில் வாழ்ந்த சிக்கமத்சு மொன்சயெமொன் (Chikamatsu Monzayemon) என்பவரின் நாடகங்கள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. இவரை ஜப்பானிய சேக்சுபியர் எனலாம். இவருக்குமுன் வாழ்ந்த சைகாகு (1642–93)வின் புதினங்களும் (Novels) ஜப்பானியரைக் கவர்ந்தன. கி. பி. 1644–94-ல் வாழ்ந்த பசோ என்பவரால் எழுதப்பட்ட 'ஐகு' எனும் புதியவகைப் பாக்கள் பின்னுல் எழுந்த பாக்களுக்கு வழிகாட்டி நின்றன. திசுனயொசி காலத்தில் இறைச்சி சாப்பிடு வதும் விலங்குகளை வதைப்பதும் தடைசெய்யப்பட்டன. எதோவில் 138 ஏக்கர் நிலப்பரப்பில் நாய்களின் பாதுகாப்பு இல்லம் ஒன்று அமைக்கப்பட்டது. பல்லக்கில் போக இயேயாசு விதித்த கட்டளைகள் இவரால் தளர்த்தப்பட்டு, நுண்கலைகளும் போற்றப் பட்டன. திசுனயொசியின் இத்தகைய சீர்திருத்தங்களால்

ஜப்பானில் வளர்ந்த சீரிய பண்புகளையும், ஒசாகா நகரின் உன்னதத்தையும் மேற்படி கேம்ஃபா சிறப்பித்துக் கூறுகிறார். தொகுகவா குலத்தில் எட்டாவது சோகனாகப் பதவியேற்ற யொசிமுனே (Yoshimune=1716—1747 A.D.) ஜப்பானில் பல சிறப்புக் குரிய சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். குதிரை யேற்றம், நீச்சல் போட்டிகள் சிறப்படைந்தன. இவர் காலத்தில் நொரி முரா (Nori Mura) என்ற சட்ட மேதையால் ஜப்பானிய நாட்டுச் சட்டங்கள் தொகுக்கப்பட்டன. ஊகா ததாசுகே (Ookatadasuke) என்பவர் முதல் உயர் நடுவரானார். கிரேக்கக் குறிப்பேட்டு முறையும், வான நூலும் ஊன்றிக் கற்கப்பட்டன. இவர் செரி, பிளம் முதலிய மரங்களை வளர்க்கும் வழக்கத்தையும் மூலிகைச் செடிகளைப் பாதுகாக்கும் முறைகளையும் ஏற்படுத்தினார். இவர் காலத்தில் கரும்பு, அவுரி, ஆரஞ்சு, புகையிலை, உருளைக்கிழங்கு முதலியன அதிகமாகப் பயிரிடப்பட்டன. நீர்ப்பாசன ஏந்துகளும் கழுநீர்ப் போக்குகளும் ஏராளமாய் ஏற்படுத்தப்பட்டன.

யொசிமுனேவுக்குப்பின் சோகன்களாய் வந்தவர்கள் அவரைப்போல நுண்ணறிவாளர்களாகவும், பண்பாளர்களாகவுமில்லை. சோகன்களைப் போலவே உயர்குடி மக்களின் ஒழுக்கமும், பண்பாடும் கெட்டன. 'ஆபாசக்' கலைகளும், புதினங்களும் எழுந்தன. பகின் (Bakin) என்பாரும் இக்கு (Ikku) என்பாரும் எழுதிய புதினங்களிலிருந்து இக் கால மக்களின் 'ஆடம்பர' வாழ்க்கை முறையை அறியலாம். தச்சுக்காரரின் ஓவிய முறையைப் பின்பற்றி ஒகையோ (Okyo) என்பார் தீட்டிய ஓவியங்கள் இயற்கைக் காட்சிகளைச் சுவைக்கும்படி தூண்டின. கி.பி. 1760ஆம் ஆண்டிலிருந்து 1810 வரையிலான இடைக்காலத்தில் எண்ணிறந்த உருவப் படங்களும், ஓவியங்களும் பல ஓவியக் கலைஞர்களால் படைக்கப்பட்டன. இவர்களில் சிறப்பு வாய்ந்தவர் ஒகுசாய் என்பவராவார். ஒரு குமுகாயத்தில் கலை நுகர்ச்சி அதிகம் வளரும் போது வீரப் பண்பு குறைவது இயற்கை நெறி. இதற்கு ஜப்பான் மட்டும் விதி விலக்கன்று. சாமுராய்கள் நாடெங்கிலும் நாடக அரங்குகளைக் கட்டினர். நாட்டியப் பெண்களுக்கு குமுகத்தில் மதிப்பு உயர்ந்தது. இதனைக் கண்டு பொறுது பொருமிய பண்பாளர் சதாநொபு (Sadanobu) என்பவர் இக்கலைகளை இழித்துக் கூறி, சிந்தோ கோட்பாட்டையும் மிகாடோ பத்தியையும் வலியுறுத்தி 'நாட்டை அயலார் கவருமுன் காக்க எழுங்கள்' என்றார். ஒகுசாயின் ஓவியங்கள் சிறப்புற்று ஜப்பானில் பரவும் பொழுதே ஜப்பானை வெளியுலகுடன் தொடர்பு கொள்ளும் கட்டாயத்திற்குப் பல சூழ்நிலைகள் இழுத்துச் சென்றன. 18ஆம் நூற்றாண்டினிறுதியில் உருசியர்கள் காம்சட்கா, குர்லித் தீவுகளைக்

கைப்பற்றினர். பிறகு சகாலின், எதோ ஆகிய இடங்களிலும் குடியேறினர். எவ்வளவுதான் மனவலிமையும், உடல்வலிமையும், ஒற்றுமையும் பெற்றிருந்தாலும் இவர்களின் பொறிகளுக்கும், நீராவிக் கலங்களுக்கும், குண்டுகளுக்கு முன்னும் தங்களால் வெற்றி பெற முடியாதென்பதை ஜப்பானியர் உணர்ந்தனர். சீனர் தங்கள் கடற்கரைக்கு 1793-ல் வந்த எர்ல் மெகார்த்தனே யையும், 1861-ல் வந்த கிழான் ஆமொசுட்டையும் இழிவாக நடத்தினர். ஆனால், 1839–42-ல் நடந்த முதல் அபினிப் போருக்குப் பின் ஏற்பட்ட நான்கிங் உடன்படிக்கையின்படி பிரிட்டானியருக்குக் காண்டன், அடுமாய், ஃபூச்சோவ், நிங்பூ, சங்ககாலி ஆகிய ஐந்து துறைமுகங்களைச் சீனு திறந்துவிட்டது. அது மட்டுமல்லாமல் ஆங்காங் துறைமுகத்தைப் பிரிட்டனுக்குக் கொடுத்தது. பிரிட்டானிய வணிகர்கள் சீனுவில் அனைத்து உரிமைகளோடும் வாழ்ந்தனர். ஐரோப்பியரை வெறுத்திருந்த மாபெரும் சீனுவே இவ்வாறு அவர்களுக்கு அடிபணிந்ததைக் கண்ட ஜப்பான் அச்ச முற்றதில் வியப்பில்லை. சீனக் கடலில் ஐரோப்பியரின் அதிகாரம் வளர்ந்துகொண்டே வந்தது. கி.பி. 1848-ல் ஃபிரெஞ்சு நாட்டுக் கிறித்தவர்கள் ஜப்பானுக்கும் பார்மோசாத் தீவுக்குமிடையி லுள்ள ரையூகியூத் (Ryukyu) தீவில் குடியேறித் தங்கள் சமயத்தைப் பரப்ப முயன்றனர். இத் தீவு ஜப்பானியக் கிழான் சத்சுமாவுக்கு உட்பட்டிருந்தது. 1851-ல் சீன மத வெறியன் தியன்தி (Tien-Teh) என்பவன் தைபிங் கலகத்தை (Taipines' Rebellion) ஏற்படுத் தினுன். 'தைபிங்ஸ்' என்ருல் அமைதி இளவரசர்கள் (Princes of Peace) என்று பொருள். இவன் தன்னை ஏசுவின் தம்பியென்றும் கடவுளின் மகனென்றும் கூறிக் கொண்டான். 1853–54-ல் பெரி ஜப்பானில் இருந்தபோது இம்மத வெறியர்கள் சீனுவின் பண்டைய தலைநகரான நாங்கிங்கைக் கைப்பற்றியிருந்தார்கள். தன்னைவிடப் பத்து மடங்கு மக்கள் தொகையைக் கொண்ட சீனுவிலேயே இவ்வாறு வலுக் கட்டாயமாகக் கிறித்தவம் புகுத்தப்படுவதையும் சமயவெறி தலைவிரித்தாடுவதையும் கண்ட ஜப்பான், தன்னிலை என்ன ஆகுமோவென அஞ்சி நடுங்கியது.

கி. பி. 18ஆம் நூற்றுண்டின் இறுதியில் தச்சுக்காரருடன் தொடர்புகொண்ட நாகசாகியிலிருந்த கயாசி என்பவர் 'ஜப்பானைக் காக்க வேண்டுமானுல் பலமான கப்பற் படையை அமைத்தே ஆக வேண்டும்' எனக் கூறி அதற்கான கரணியங்களை விளக்கி, பெரிய நூலொன்றை வெளியிட்டார். இவரைச் சிறையிலிட்டனர்; இவரது நூலையும் ஜப்பான் அரசு தடை செய்தது. 1825-ல் சோகன் வெளியிட்ட சட்டப்படி அயலாரின் கப்பல்கள் ஜப்பான் கரையைத் தொட்டதால் சுட்டெரிக்கப்பட்டன. இதனுல்

பல அயலாரின் கப்பல்கள் அழிந்தன. ஆனால், 1842-ல் இச் சட்டம் தளர்த்தப்பட்டது. இதன்படி புயலால் உந்தப்பட்டு அல்லது உடைந்து ஜப்பான் கரையை அடையும் கப்பலுக்குப் பாதுகாப்பும், மக்களுக்கு உணவும், நீரும் மற்ற பொருள்களையும் கொடுத்தனர். 1825ஆம் ஆண்டுச் சட்டப்படி 1827-ல் அமெரிக்கரின் மொர்ரிசன் (Morrison) என்ற கப்பலும், 1845-ல் தளபதி கூப்பரின் கப்பலும், 1848-ல் தளபதி சிசில்லியின் கப்பலும், 1849-ல் தளபதி மத்தீசன் கப்பலும் ஜப்பானியரால் சிறைப் பிடிக்கப்பட்டன.

முதலாம் அபினிப் போருக்குப் பின் சீனாவின் நிலைமையை யுணர்ந்த ஜப்பான் தனது படை வலிமையைப் பெருக்கிக் கொள்ளும் தேவையை உணர்ந்து ஆலந்து நாட்டிலிருந்து புதிய வேட்டெஃகங்களையும், வெடிகுண்டுகளையும் வரவழைத்து ஐரோப்பிய முறையில் படைக்குப் பயிற்சியளித்தது. வெடி மருந்தைத் தானே உற்பத்தி செய்தது; பெல்ஜியத்திலிருந்து ஆற்றல் வாய்ந்த வெடிகுண்டுகளை வரவழைத்தது. இவ்வாறு ஜப்பான் ஐரோப்பியரால் தனக்கு ஆபத்து வரும் பொழுது அதனுடைய கதவுகளைத் திறந்தே ஆகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. தொசிமாவிலுள்ள தச்சுக்காரர்களும் அடிக்கடி ஜப்பானை எச்சரித்து, பிரிட்டனோ அல்லது அமெரிக்காவோ ஜப்பானைக் கைப்பற்றுமென்றனர். 1847-ல் ஆலந்து அரசர் எதோவுக்குப் பல நூல்களையும், உலக வரைப்படத்தையும் அனுப்பினர். 1849-ல் அமெரிக்கர்கள் இன்னும் ஓராண்டில் ஜப்பானுக்குள் வலுக் கட்டாயமாக வருவர்; அவர்களுக்குத் தங்கள் கதவுகளை ஜப்பானியர் திறந்துவிட மறுத்தால் அமெரிக்க—ஜப்பானியப் போர் ஏற்படுவது உறுதி என்றும் அவர் எச்சரித்தார். 1846-ல் வாணிக உறவு கொள்ள ஜப்பானுக்குச் சென்ற தளபதி கம்ம தொரி பிட்டில் (Commo Dore Biddle) என்பவரை ஜப்பான் மதியாது, மறுத் துரைத்தது. எனவே ஜப்பானுக்குள் வலுக் கட்டாயமாக நுழைந்தேயாக வேண்டும், இதற்கு ஐரோப்பிய நாடுகளின் அனுமதி வேண்டுமென அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளைக் கேட்டுக் கொண்டது. இதனை யொட்டித்தான் மேற்படி ஆலந்து அரசர் அமெரிக்காவுக்குத் தன் அனுமதியை வழங்கி விட்டு ஜப்பானுக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார். இத்தகைய சூழ்நிலைகள் ஜப்பானுக்கு வெளியில் வளர்ந்து கொண்டிருக்கும் போது தொகுகவா சோகன்களின் வலிமையும் குறைந்து கொண்டே போயிற்று. சோகன் இயேயாசு முதல் இயேயொசி (1603—1853) வரை நோக்கும் போது தொகுகவாக்களின் ஆட்சியில் பொருளாதாரப் பற்றாக் குறையும், கடன் பளுவுமே

அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறது. இதனைச் சீர்திருத்த நாகசாகியின் புதிய வாணிகச் சட்டங்கள் என்பதை ஏற்படுத்தி 1711-ல் வெளியிட்டனர். இது ஏறத்தாழ இருநூறு கூறுகளைக் கொண்ட சட்டத் தொகுப்பாகும். இதன்படி நாகசாகியிலுள்ள தச்சு வணிகர்கள் ஜப்பான் நாட்டுப் பொன்னையும், பொருளையும் அளவுக்கு மீறிச் சுரண்டுவதைக் கண்டு கள்ளக் கடத்தலைத் தடுக்க ஆண்டொன்றுக்குப் பதின்மூன்று சீனக் கப்பல் (Junks), இரண்டு தச்சுக் கப்பல்களுக்கு மேல் ஜப்பானிலிருந்து ஏற்றுமதி செய்யக் கூடாதென்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதுபோன்ற மற்ற வாணிகத் தடைகளையும், பொருளாதாரக் கூறுபாடுகளையும் கொண்ட இச் சட்டங்களை ஆடம்சுமித்தும் தனது நூலில் (Wealth-of Nations) பலப்படப் பாராட்டியுள்ளார். ஆயினும் ஜப்பானின் பொருளாதாரம் குறைந்து கொண்டே போயிற்று. ஜப்பானியக் கிழார்கள் கி.பி. 1661ஆம் ஆண்டிலேயே காகிதப் பணத்தை (Paper Money) அச்சிட்டனர். 1710-ல் இத்தகைய காகிதப் பணத்தை வெளியிடக் கூடாதெனத் தடை விதிக்கப்பட்டதால் மாழை (உலோக) நாணயங்கள் புழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டன. தீ யூழின் விளைவாகச் சகோவிலுள்ள தங்க வயலிலும், இகுனோ விலுள்ள வெள்ளி வயலிலும் முறையே தங்கமும், வெள்ளியும் இதேயொசி காலத்தில் தட்டுப்பட்டன. இயே மித்சு காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களாலும், மற்ற விழாக்களாலும் மிகுதியான பொருள்கள் வீணுகிவிட்டன, அவருக்குப் பின் வந்தோர் காலங்களில் நிலநடுக்கங்கள், தீ விபத்துக்கள், பஞ்சங்கள் முதலிய வற்றால் கருவூலம் வற்றியது. இதனால் ஜப்பானின் நாணய மதிப்பு வீழ்ச்சியடைந்தது. நாட்டின் அவசர காலத்திற்கு மட்டும் தங்க நாணயங்கள் அச்சிடப்பட்டன. மற்ற சமையங்களில் செம்பு போன்ற மட்டமான மாழைகளால் நாணயங்கள் அச்சிடப் பட்டன. 1736–40-ல் நாணயங்களின் எடையும், தூய்மையும் குறைக்கப்பட்டன. இவ்வாறு ஜப்பானில் நாணய வீழ்ச்சி ஏற்பட்டு சோகன் பொருளற்று வாடியதால் அவர்களை மதிப்பாரும் குறைந் தனர். அடுத்து, பண்டங்களின் விலைகளும் ஏறிக்கொண்டே போயின. 1836ஆம் ஆண்டிற்குப் பின் ஜப்பானில் நல்ல அறுவடை யில்லை. இதனால் நாடெங்கிலும் பஞ்சமும் பட்டினியும் தாண்டவ மாடின. ஒசாகா போன்ற நகரங்களில் மக்கள் தலைவிரி கோலமாய்க் கலகம் செய்தனர்.

1786ஆம் ஆண்டிலிருந்து 1837-வரை சோகனாக இருந்த இயேநாரி (Iyenari) தனது பதவியைத் துறந்தார். 'என்னுடைய அதிகாரிகளின் ஊழல்களைப் பொறுத இயற்கை அன்னையே இத்தகைய கேடுகளைக் கொண்டு வந்தாள்' என்று அவர்

கூறினர். அவருக்குப் பின் பதவியேற்ற அவர் மகன் இயேயொசி யின் முதலமைச்சர் முசீனே பண்டைக்காலப் பண்பாடுகளைக் காக்கப் பலசீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார் இதற்கு தெம்போ சீர்திருத்தம் (Tempo Reformation) என்று பெயர். பஞ்சத்தில் பண்பாட்டுச் சீர்த்திருத்தங்கள் செல்லுமா? இச் சீர்த்திருத்தங்கள் அழிந்தன. இச் சமயத்தில் மிகாடோவும் அதிகாரம் முழுவதை யும் தானே பெறவேண்டுமென நினைத்தார். கற்றறிந்த இளைஞர்கள் இவருக்குப் பக்க பலமாய் நின்றனர். மிகாடோ சிங்கோ (Jinko = 1817—1846 A.D.) காலத்தில் கியோத்தோ அரசவைக் கிழார்களின் பிள்ளைகளுக்கென ஒரு கல்லூரி அமைக்கப்பட்டது. அக் கல்லூரிக்கு சோகன்கள் தொடர்ந்து பொருளுதவி செய்து வந்தனர். அக் கல்லூரியில் பயின்ற மாணவர்கள் சோகன்களின் போக்கால் நாட்டில் நேர்ந்த பொருளாதாரச் சீர்கேடுகளையும், ஒற்றுமை சீர் குலைதலையும் காணப்பொறுது மிகாடோ ஆட்சியால்தான் ஜப்பான் சீர்படும் என்னும் தங்களின் கருத்தை நாடெங்கிலும் தீவிரமாய்ப் பரப்பினர். 1847-ல் மிகாடோவான கொமாய் (Komei = 1847—1867 A.D.) காலத்தில்தான் ஃபிரெஞ்சுக்காரர்கள் லூச்சூத் தீவுகளில் குடியேறினர். இதனைக் கண்டு அதிர்ச்சியுற்ற மிகாடோ வெள்ளை ஆபத்து (White-peril) ஜப்பானைச் சூழ்ந்து விட்ட தென்றார். 'இனி எத்தகைய உத்தரவும் கியோத்தோவிலிருந்து தான் விதிக்கப்பட வேண்டுமே யொழிய எதோவிலிருந்து விதிக்கக் கூடாது' என்றார். அதாவது பேரரசரின் அவையிலிருந்தே உத்தரவுகள் விதிக்கப்பட வேண்டும், சோகனுடைய உத்தரவு செல்லாதென்றும் கூறினர். குறிப்பாக, அயலாரைப் பற்றிய உத் தரவுகளும் உறவு முறைகளும் மிகாடோவால்தான் ஏற்படுத்தப் பட வேண்டுமென்றார். ஏற்கனவே மிகாடோவின் ஆட்சி ஏற்பட வேண்டுமென்றும், அவருடைய தெய்விகம் மதிக்கப்பட வேண்டு மென்றும் பல தத்துவ மேதைகளால் பரப்பப்பட்ட கருத்துகளால் மக்கள் மிகாடோவின் மீது பத்தி கொண்டிருந்தனர். கியோத்தோ கல்லூரி மாணவர்களால் இப் பத்தி இயக்கம் தீவிர மடைந்தது. இயற்கையின் கேடுகளும், பஞ்சமும், பட்டினியும் மிகாடோவை மதியாமல் சோகன்களைப் போற்றியதால்தான் வந்தனவென்று மக்களும் நம்பினர். இச் சமையத்தில்தான் அமெரிக்கரும், ஆங்கி லேயரும் போரிட்டாகிலும் ஜப்பானில் நுழைந்தாக வேண்டு மென்னும் நிலைக்கு வந்தனர். கி.பி. 1848-ல் கலிபோர்னியாவில் தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனால் கலிபோர்னியா தூரக் கிழக்கு நாடுகளின் வாணிக மையமாகத் திகழ்ந்தது. சான்ஃபிரான்சிசு கோவையும், ஆங்காங்கையும் நேரடிக் கடற் பாதையால் இணைக்க ஆங்கிலேயர்கள் திட்டமிட்டனர். இவற்றிற் கிடையேயுள்ள தொலைவு 6,149 கடற் கற்களாகும். இத்

திட்டம் நிறைவேறினுல் பல ஆயிரக்கணக்கான டன் எடையுள்ள நிலக்கரியை எளிதாகச் சுமந்து சென்று பாதி உலகக் கடற் பயணத்தை நேரடியாகக் கடக்கலாமென இவர்கள் கருதினர். இத் திட்டத்திற்கு இடையூருக ஜப்பான் நாடு நடுவில் முட்டுக் கட்டைபோட்டு நிற்பதையும் ஆங்கிலேயர்கள் அறிந்தனர். எனவே, ஜப்பானுக்குள் நுழைய எத்தகைய செயலுக்கும் இவர்கள் அணியமாயினர். அமெரிக்காவின் நன்செய்நிலமாகத் திகழ்ந்து, பண விளைச்சலைத் தருவது பசிஃபிக் மா கடலாகும். இம் மா கடலில் மிகுதியாய் உற்பத்தியாகும் வேல் (Whale) எனப்படும் மீன் வகை அமெரிக்கரின் அயலகச் செலவாணியின் கருவூலமாகும். எனவே, அமெரிக்கர் இம் மா கடலைத் தங்கள் விளை நிலமாகக் கொண்டு, அசைக்க முடியாதவாறு தங்கள் செல்வாக்கை இதில் ஏற்படுத்திக் கொண்டனர். இவர்களின் நடமாட்டம் ஜப்பான் கடல் வரை நீண்டது. தங்களின் மீன் வேட்டைக்கும், அயலக வாணிக வளர்ச்சிக்குமிடையே ஜப்பான் தீவுகள் தடையாயிருப் பதை அமெரிக்கர் உணர்ந்தனர். இவர்களின் தேவைகளைப் பெறுவதற்கும், கப்பல்களைச் செப்பணிடுவதற்கும் ஜப்பான் தீவில் ஒரு சில தங்கு தளங்கள் தேவைப்பட்டன. எனவேதான் அமெரிக்கர் பலரை ஒருவர்பின் ஒருவராகப் பன்முறை ஜப்பானுக்கு அனுப்பினர். ஆனுல், இவர்களின் கெஞ்சல்களுக்கும் மிரட்டல் களுக்கும் ஜப்பானியர் கி. பி. 1853-வரை பணியவில்லை. கி. பி. 1849-ல் அமெரிக்கரின் அறிக்கையை ஏற்று ஆலந்து மன்னர் ஜப்பானியருக்கு எச்சரிக்கை விடுத்ததையும் அறிவோம். ஆயினும் அவர்கள் அசைந்து கொடுக்கவில்லை. எறும்பூரக் கல்லும் தேயு மல்லவா? பன்னுட்டாரும் பாடித் திறக்காத ஜப்பானியக் கதவு பெரிக்கு 1854-ல் திறந்தது. இதனை விரிவாகக் காண்போம்.

## ஜப்பான் நாட்டுக் கதவைத் திறந்த முதல் அமெரிக்கர்

1852 ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் நாள் கம்மதொரி மேத்யூ-சி-பெரி (Commodore Mathew-C-Perry) என்னும் பெயர் பெற்ற கப்பல் தளபதியின் தலைமையின் கீழ் நார்ஃபோக் துறைமுகத்தி லிருந்து அமெரிக்கக் கப்பலொன்று புறப்பட்டது. இதில் டா S. வேல்சு வில்லியம் (Dr. S. Whales William) என்ற மொழி பெயர்ப் பாளரும் உடன் சென்றுர். இக் கப்பல் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டு சீனக் கடலையடைந்து, சீனத் துறைமுகங்களைக் கடந்து போனின் தீவுகள், ரையூகியூத் தீவுகள் முதலியவற்றைக் கடந்து, எதோ வளைகுடாவுக்குள் நுழைந்து, ஜப்பானியக் கரையை 7—7—1853-ல் தொட்டது. கரையோரத்தில் படை யேந்தி நிற்கும் ஜப்பானியரையும், வெண்பாகையைத் தலையி

லணிந்தன்ன கண்ணுக்கினிய காட்சியாக நிற்கும் ஃபூஜியாமா எரிமலையையும் அமெரிக்கர் கண்டு வியந்தனர். இருநூறு ஆண்டுகளாய் உறக்கத்திலாழ்ந்திருந்த ஜப்பானியக் கடலலைகளைக் கிழித்த வண்ணம் வந்த அமெரிக்கக் கப்பலின் தீரத்தை வியந்து நின்றனர் ஜப்பானியர். இக் கப்பல் உராகா (Uraga) என்னும் சிற்றூருக் கருகில் நங்கூரம் பாய்ச்சி நின்றது. இருபுறமும் நின்ற அமெரிக்க-ஜப்பானிய வீரர்கள் போர்க்களத்தில் அணிவகுத்து நின்றாற்போல் காட்சியளித்தனர். பெரி அமெரிக்க ஒன்றிய நாடுகளின் குடியரசுத் தலைவர் ஃபில்மோர் (Fillmore) கொடுத்தனுப்பிய மடலை ஜப்பானியரிடம் கொடுத்தார். அம் மடலில் கப்பலுடைந்து அல்லது புயலால் உந்தப்பட்டு ஜப்பானியக் கரையைச் சேரும் அமெரிக்கரைக் காப்பாற்ற வேண்டுமென்றும், இனி அமெரிக்கா ஜப்பானுடன் வாணிக உறவு கொள்ளும் அவசியத்திலிருப்பதால் அதன் ஒரு சில துறைமுகங்களை அமெரிக்காவுக்காகத் திறந்து விடவேண்டுமென்றும், அவ்வாறு ஜப்பான் திறந்துவிட மறுத்தால் அமெரிக்கா போரிட்டாவது பெறத் தயாராக இருப்பதாகவும், ஆனாலும் அமெரிக்கா ஜப்பானுடன் நட்புறவாகவே இருக்க விரும்புவதாகவும் கூறப்பட்டிருந்தன. இக் கடிதம் சோகனுக்குக் கொடுக்கப்பட்டது. அக் கடிதத்தின் படியொன்று மிகாடோவின் அவைக்கும் அனுப்பப்பட்டது. சோகன் கவுன்சிலின் தலைமை அறிவுரையாளரான மிதோ (Mito) என்பார் அயலாரைத் தன் புனித பூமியில் அனுமதிக்கவே கூடாதென்றார். இதற்குப் பத்துக் கரணியங்களையும் கூறினார். ஆனால், ஓர் உறுப்பினர் மட்டும் மிதோவின் கருத்தை மறுத்து, ஜப்பான் நாட்டின் பொருளாதாரத்தையும் படை வலிமையும் சுட்டிக்காட்டி, அமெரிக்கரை மறுப்பதால் வரும் அபாயத்தையும் விளக்கினார். மிகாடோவும், அவருடைய அவையினரும் கூட அமெரிக்கரின் நுழைவை வெறுத்தனர். எனவே, ஜப்பானை முதலில் வலிவுள்ள நாடாக மாற்றியாக வேண்டுமென்றும் அதற்கு தச்சுக்காரரின் உதவியை நாடியாக வேண்டுமென்றும் தீர்மானித்தனர். தச்சுக்காரர்களும் தங்கள் நாட்டிலிருந்து அறிவியல் நூல்களை இறக்குமதி செய்தும், ஆற்றல் வாய்ந்த வெடிமருந்துகளை உற்பத்தி செய்யும் முறைகளையும், நவீன போர் முறைகளையும் ஜப்பானியருக்குக் கற்றுக் கொடுத்தும் உதவினர். எதோவின் நுழைவாயிலிலுள்ள சின்காவாவில் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டது. கரையோரங்களிலுள்ள புறக்காவல் நிலையங்களில் பாதுகாப்புப் படைகள் அதிகரிக்கப்பட்டன. இதனால் முசாசி, சகாமி, அவா, கசுசா ஆகிய கரையோரப் பகுதிகளில் படை முகாம்கள் இரட்டிக்கப்பட்டன. இத்தகைய சோதனைக் காலத்தில் தொகுகவா படைக்குலத்தின் பன்னிரண்

டாவது சோகனை இயேயொசி 25—8—1853-ல் திடீரெனக் காலமானார். இவருடைய திடீர் இறப்பினால் இக்கட்டான கட்டத்தில் எதிர்பாராத மாறுதல் ஏதும் ஜப்பானிலேற்படவில்லை. ஏனெனில், ஏற்கனவே சோகன் பதவியின் மாண்பும் ஆற்றலும் குறைந்து அழிவு நிலையை நோக்கிச் சென்று கொண்டிருந்ததை நாம் அறிவோம். இவரும் மிகாடோவைப்போல் பெயருக்குத்தான் சோகனாக இருந்தார். இவருடைய அதிகாரங்கள் யாவும் புதிய அதிகார வருக்கங்களால் கவரப்பட்டு விட்டன. எனவே, இந் நிகழ்ச்சி ஒரு மாபெரும் நிகழ்ச்சியாக அல்லது திருப்புமுனையாக அமையவில்லை. மேலும் மிகாடோவைப் போற்றும் மனப்பக்குவம் மீண்டும் நாட்டில் தழைத்திருந்தது. இவருடைய இறப்பிற்குப்பின் இவருடைய மகனான சியே சதா (Jye sada) சோகன் பதவி ஏற்றார். தான் கொடுத்த மடலுக்குப் பதிலை எதிர்பார்த்துக் கொண்டே நின்றார் பெரி. ஏழு மாதங்கள் வரை பதிலே இல்லை. இதற்கிடையில் சீனத் துறைமுகங்களுக்குச் சென்று வந்தார். அங்கு நடக்கும் டைபிங் கலகத்தைக் கண்டார். அங்கு இவரைக் கண்ட அமெரிக்க வணிகர்கள் துள்ளியெழுந்தனர். மீண்டும் எதோ வளை குடாவையடைந்து ஜப்பானியரின் பதிலை எதிர்நோக்கி நின்றார் பெரி. வாதப் பிரதிவாதங்களுக்குப் பின் ஜப்பான் அமெரிக்காவோடு வாணிக உறவு கொள்வதை ஏற்றது. இன்றைய பெயர் பெற்ற யோகா காமா நகர் எழுந்துள்ள இடத்தில் இருதரப்பினரும் விருந்துண்டு, கை கோர்த்து, ஆரவாரித்து, அன்பளிப்புகளைப் பரிமாறிக் கொண்டு உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர். இவ்வாறு ஃபிரெஞ்சு வல்லாட்சித் திலகம் பதினான்காம் லூயியாலும், இங்கிலாந்து நாட்டு மன்னர் இரண்டாம் சார்லசாலும், உருசியர்களாலும் முயன்று தோற்ற முயற்சியில் அமெரிக்க ஒன்றிய நாடு கி.பி. 1854-ல் வெற்றி பெற்றது. இந்த அமெரிக்க ஜப்பானிய வாணிக உடன்படிக்கை ஜப்பானிய வரலாற்றை ஏன் உலக வரலாற்றையே மாற்றி அமைக்கும் திறவுகோலாய் அமைந்ததெனலாம். இந்த உடன்படிக்கையின் பன்னிரு சட்ட வாசகங்களைக் காண்போம்.

**வணிக உடன்படிக்கை**

1. ஜப்பானும், அமெரிக்காவும் சமைதியான நட்புறவோடு வாழ வேண்டும்.

2. சிமோதாத் துறைமுகம் உடனடியாக அமெரிக்கருக்குத் திறந்துவிடப்படவேண்டும். அடுத்த ஆண்டிற்குள் ஹகோதேத் துறைமுகம் திறந்து விடப்படவேண்டும். இத் துறைமுகங்களில்

அமெரிக்கக் கப்பல்களுக்குத் தேவைப்படும் வசதிகளும், பொருள்களும் தருதல் வேண்டும்.

3. கப்பலுடைந்து தவிக்கும் மக்கள் ஜப்பானியராயினும் அல்லது அமெரிக்கராயினும் உடனடியாகக் காப்பாற்றப்படல் வேண்டும். அவர்களுக்காகும் செலவைச் சம்பந்தப்பட்ட நாடு பிறகு கொடுக்க வேண்டும்.

4. அத்தகைய ஆபத்தில் சிக்கிக் கரையேறுபவர்களை ஊடுருவல்காரர்களென்று கருதிச் சிறைசெய்யாமல் நேர்மையோடு நடத்த வேண்டும்.

5. சிமோதா, ககோதே ஆகிய ஜப்பானியத் துறைமுகங்களில் அமெரிக்கர் தங்கி யிருக்கும்போது குறிப்பிட்ட எல்லைகளுக்குள் திரிய அவர்களுக்கு உரிமை யுண்டு. துறைமுகங்களுக்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டுமென அவர்களைக் கட்டுப்படுத்தக் கூடாது.

6. வாணிகம் மற்றும் பல தொடர்புகளை இரு சாராரும் பேசித் தங்களுக்குள்ளேயே சுமுகமாக முடிவெடுத்துக் கொள்ள வேண்டும்.

7. ஜப்பானிய அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கடங்கியே துறைமுகங்களில் வாணிகம் நடத்த வேண்டும்.

8. அமெரிக்கக் கப்பல்களுக்கு வேண்டிய நிலக்கரி, நீர், மரம் மற்றும் எந்தப் பொருள்களையும் ஜப்பானிய அரசுப் பணியிலுள்ள அதிகாரிகள் மூலமே பெற வேண்டும்.

9. இச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளை விட வேறு சில உரிமைகளை அயல்நாடுகளுக்கு ஜப்பான் வழங்குமானால் அந்த உரிமைகளும் அமெரிக்காவுக்கு உண்டு.

10. அமெரிக்க ஒன்றிய நாடுகளின் (U. S. A.) கப்பல்கள் அனுமதிக்கப்பட்ட சிமோதா, ககோதே ஆகிய துறைமுகங்களைத் தவிர வேறு ஜப்பானியத் துறைமுகங்களுக்குச் செல்லக் கூடாது. கடும்பனி, புயல் இவற்றில் சிக்கித் தவிக்கும்போது இவ் விதி தளர்த்தப்படும்.

11. அமெரிக்க ஒன்றிய நாடுகளின் முகவர்கள், ஆட்சிப் பேராள்கள் ஆகியோர் சிமோதாவில்தான் தங்க வேண்டும்.

12. இவ் வுடன்படிக்கையில் ஏதாவது குறைபாடுகள் காணப்பட்டால் அவற்றை 18 மாதங்களுக்குள் மாற்றி யமைக்கலாம்.

அமெரிக்கர்கள் ஜப்பானுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையை அறிந்த பிரிட்டன், உருசியா ஆலந்து போன்ற நாடுகளும் அதே போன்ற உடன்படிக்கைகளை ஜப்பானுடன் செய்து கொண்டன. ஆயினும் இந் நாடுகள் யாவும் கி. பி. 1858க்குப்பின்னரே ஜப்பானுடன் நடைமுறையில் உறவு கொண்டன. இத்தகைய உடன்படிக்கைகள் யாவும் மிகாடோவின் அனுமதியின்றியே சோகனுடன் செய்து கொள்ளப்பட்டவையாம். எனவே சோகன்கள் அயலக அபாயத்தை உடன்படிக்கைகளால் தடுத்தாலும் மிகாடோ பத்தி இயக்கத்தால் வரப்போகும் மேசிப் புரட்சியை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. 1858-ல் டௌன் செண்ட் ஆரிசு என்ற அமெரிக்க ஆட்சிப் பேராள் சிமோதாவுக்குச் சென்ருர். இதற்கிடையில் சீனுவுக்கும், பிரிட்டனுக்குமிடையே 'இரண்டாம் அபினிப் போர்' (Second Opium War—1856—'60) ஏற்பட்டது. அப் போரில் ஃபிரான்சும் கலந்து கொண்டது. சீனக் கப்பல்களும், கான்டன் துறைமுகமும் பிரிட்டன் ஃபிரெஞ்சுப் படைகளால் தாக்கப்பட்டுக் குண்டுக்கிரையாயின. முடிவில் 1861-ல் 'தியென்ட்சின் உடன்படிக்கை' (Treaty of Tientsin) ஏற்பட்டது. இதன்படி பிரிட்டன் கௌலூன் (Kowloon) என்னுமிடத்தைப் பெற்றது; சீனத் துறைமுகங்களை மேல் நாட்டவர்கள் பயன்படுத்தி வாணிகம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்; அயல் நாட்டுத் தூதுவர்கள் பீகிங்கில் வசிக்க அனுமதிக்கப்பட்டார்கள்; சமயப் பரப்பூழியர்களுக்குப் பாதுகாப்பளிக்க சீன அரசு ஒப்புதல் அளித்தது. சீனுவில் வாழும் ஐரோப்பியர்களை அவர்களுடைய நாட்டின் சட்டங்களைக் கொண்டே விசாரித்து, அவற்றின் படி தண்டனை விதிக்க சீனு ஒப்புக் கொண்டது. அபினியைச் சீனுவுக்குள் இறக்குமதி செய்ய சீனு ஒப்புக் கொண்டது. மாபெரும் பேரரசான சீனுவின் இத்தகைய கதியை யறிந்த ஜப்பான் இனி உடன்படிக்கைகளை எக் காரணியத்தைக் கொண்டும் நிராகரிக்கக் கூடாதென உணர்ந்து அயலாரை அன்போடு வரவேற்றது. தியென்ட்சின் உடன்படிக்கைக்குப்பின் அநேக அயல் நாடுகள் சீனுவுடன் தொடர்பு கொண்டதுபோலவே அமெரிக்காவுடன் கொண்ட உடன்படிக்கைக்குப் பின் பல நாடுகளும் ஜப்பானுடன் உறவு கொண்டன. இவ் வுறவுகளால் ஜப்பானின் வரலாற்றிலேயே ஒரு மாற்றம் ஏற்பட்டது. அம் மாற்றம் கி. பி. 1868-ல் ஏற்பட்டது. அதனை மேசிப் புரட்சி என்கிருேம். ஆகவே 1858-ல் எல்சின் கிழார் எதோவுக்கு வந்ததிலிருந்து 1858 வரையிலான பத்தாண்டுக் காலத்தில் ஜப்பான் எவ்வாறு ஒரு மாபெரும் மேசிப் புரட்சிக்குத் அணியமாக்கிக் கொண்டதென்பதைக் காண்போம்.

சோகன் பதவி யொழிப்பு

கி. பி. 1858-க்கும் 1868-க்குமிடைப்பட்ட பத்தாண்டுக் காலத்தில் ஜப்பானில் எண்ணிறந்த மாற்றங்கள் தோன்றின. காலங் காலமாய்க் கட்டாந் தரையாகக் கிடந்த நிலத்தைப் பண்படுத்தி விதை போட்டால் வீரியத்தோடு வரும் பயிர் போல இருநூறு ஆண்டுகளுக்குப் பின் அயலவரின் தொடர்பால் ஜப்பானில் மேற்கத்திய நாகரிகமும், பண்பாடும் விரைவாகப் பரவின. இவ்வாறு புகுத்தப்பட்ட மேற்கத்திய நாகரிகம் வலுக் கட்டாயமாக ஜப்பானில் புகுத்தப்பட்டது எனலாம். 1853-ல் பெரி வேட்டெஃகத்தின் முனையில் ஜப்பானிடம் உறவு கேட்டான். அன்றிருந்த சோகன் அத்தகைய வலிமை படைத்த அமெரிக்காவை எதிர்க்குமளவுக்கு ஆற்றலற்றவர். தன்னிடம் வாணிக உறவு கொண்ட ஆலந்தைத் தவிர மற்ற எந்த அயல் நாட்டிடமிருந்தும் சோகனுல் படை யுதவி பெற முடியாது. ஆலந்தும் படை யுதவி செய்யு மளவுக்கு வலிமை பொருந்திய நாடாகவு மில்லை. மேலும் இருநூறு ஆண்டுகளாய் ஜப்பான் நாட்டில் வாழ்ந்த துறவியார் போலத் தனித்தே இருந்த தால் நட்புறவு கொண்ட நாடுகளையும் பெற்றிருக்க வில்லை. எனவே தான் வேட்டெஃகத்தின் முனையிலே நட்புறவு பெற்று, வலுக் கட்டாயமாக நுழைந்தது மேற்கத்திய நாகரிக மென்கிறோம். இவ்வாறு ஒரு நாட்டின் மீது மற்றொரு நாட்டின் பழக்க வழக்கங்கள், கலைகள், சட்ட திட்டங்கள், அறிவியல்கள், சமயப் பண்புகள் முதலியன வலுக் கட்டாயமாகத் திணிக்கப்பட்ட பின்னும் அல்லது அந்த நாடே விரும்பி ஏற்றுக் கொண்டபின்னும் பண்பியலில் ஒரு மாற்றம் அல்லது மறு மலர்ச்சி ஏற்படுகிறது. அத்தகைய மாற்றத்தால் அந் நாட்டின் எல்லாத் துறைகளிலும் அவ் வயலகப் பண்பின் கலப்பா லேற்படும் பயன்களைத் தெற்றென விளக்குகின்றன. அவற்றின் மொத்த முடிவு உறுதியாக அந் நாட்டின் வரலாற்றில் ஒரு 'திருப்புமுனை' ஏற்படுவதுதான். இவ் விலக்கணத்திற்கு ஜப்பான் மட்டுமல்ல இதற்கு முன்னும் பல நாடுகள் இலக்கியங்களாய்த் திகழ்ந் திருக்கின்றன வென்பது உலக வரலாற்றை நோக்கின் நன்கு விளங்கும். உரோமர்கள் தான்யூப் புக்கும் ரைன் ஆற்றுக்குத் தெற்கிலுமுள்ள மக்கள் மீது தங்களின் கலப்பின் நாகரிகத்தைச் சுமத்தினர். இதுவே கி. பி. முதலாம் நூற்றுண்டில் பிரிட்டானியத் தீவுகளில் வீரியச் செடிகளாய் வளர்ந்து வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்தியது. கி. பி. 16ஆம் நூற்றுண்டில் எலிசபெத்து இராணியாரின் காலத்தில், இங்கிலாந்தும், ஃபிரான்சும் உலக முழுவதும் தங்களின் நாகரிகத்தைப் புகுத்தின. இவ் விரு எடுத்துக்காட்டுகளிலும்

கட்டாயமாக நாகரிகம் திணிக்கப்படுவதைக் காண்கிறோம். கி. பி. 17ஆம் நூற்றாண்டி னிறுதியில் மாவீரன் பீட்டர் மேற்கத்தை விரும்பியேற்றுத் தன்நாடாகிய உருசியாவில் பரப்புகிறான். எனவே 1853-ல் ஜப்பானில் புகுந்த மேற்கத்திய நாகரிகம் எவ் வகையதாயினும் அதன் பயனாக ஜப்பானிய வரலாற்றில் ஒரு திருப்பு முனை ஏற்பட்டது என்பதுதான் முகாமை. ஜப்பான் ஆலந்திலிருந்து படைப்பயிற்சியாளர்களை வரவழைத்தது எதோவில் ஒரு நாவாய்க் கல்லூரி (Naval College) அமைக்கப் பட்டது. 1854-ல் கங்கோமாரு (Kangomaru) எனும் தனது நீராவிக் கப்பலை ஆலந்து ஜப்பானுக்குக் கொடுத்தது. சிறு நாவாய்களைப் புதிய முறையில் ஜப்பானியர் கட்டினர். அயல் நாட்டு நாகரிகம் நாட்டில் வெகுவாய்ப் பரவ வேண்டுமென சோகனும், அவருடைய அவையினரும் விரும்பினர். ஆனால், மிகாடோ இதை எதிர்த்தவண்ண மிருந்தார். அமெரிக்க ஆட்சிப் பேராளனான டௌன்செண்ட் ஆரிஸ் சிமோதாவிலிருந்து கொண்டு ஒன்றன் பின் ஒன்றாகப் பல சலுகைகளை ஜப்பானிட மிருந்து பெற்றுக் கொண்டிருந்தார். பெரி உடன்படிக்கையில் சிமோதா மட்டும் தான் அவருடைய இருப்பிடமாய்க் குறிக்கப் பட்டது. ஆனால், இவர் ககோதேத் துறைமுகப்பட்டினத்தையும் இருப்பிடமாய்க் கொள்ள அனுமதி பெற்றார். அத்தோடு நாகசாகியிலிருந்து வேண்டிய பொருள்களைப் பெறவும், குற்ற வழக்குகளில் அமெரிக்கர் அகப்படாதிருக்கும் பேரெல்லையையும் பெற்றார். எதோவுக்குச் சென்று சோகன் அவையினரால் வரவேற்கப்பட்ட ஆரிசு மிகாடோ ஐரோப்பியரை எதிர்ப்பதைத் தவிர்க்க முயன்றார். 1858-ல் எதோ அவையினரிடம் அமெரிக்காவுக்கு மேலும் சில வாணிக உரிமைகளைப் பெற்றார். தலைநகரில் அமெரிக்கத் தூதுவர் தங்கவும், துறைமுகங்களில் பேராளர்கள் தங்கவும், மேலும் பல துறைமுகங்களை அமெரிக்கருக்குத் திறந்து விடவும், வாணிக வரிகளைக் குறைக்கவும், அபினி இறக்குமதியைத் தடுக்கவும், தங்களின் மதத்தைப் பின் பற்றவும் கோரினார். இத்தகைய கோரிக்கைகளை சோகனும் மிகாடோவும் ஏற்க மறுத்தனர். சீனா தியென்ட்சின் உடன் படிக்கைக்குப் பின் ஐரோப்பியருக்குப் பணிந்ததைக் கண்ட ஜப்பான் ஒன்றன்பின் ஒன்றாக இவ் வுரிமைகளை வழங்கியது. ஆரிசின் இத்தகைய வெற்றியைக் கண்ட ஆலந்து, பிரிட்டன், உருசியா, ஃபிரான்சு போன்ற நாடுகளும் ஜப்பானுடன் வாணிக உடன்படிக்கைகளைச் செய்து கொண்டன. ஆயினும் சீனாவில் அயலாருக்கு வழங்கப்பட்ட உரிமைகளனைத்தும் ஜப்பானில் வழங்கப்படவில்லை. குறிப்பிட்ட இடங்களைத்தவிர ஜப்பானுக்குள் அயலார் எவரும் உலவக் கூடாது; கிறித்தவ சமயத்தைப்

பின்பற்றவோ அல்லது பரப்பவோ கூடாது; இவை போன்ற கட்டுப்பாடுகளை ஜப்பான் கடுமையாகக் கடைப் பிடித்தது. 1866-ல் பிரிட்டன், ஃபிரான்சு, ஆலந்து, அமெரிக்க ஒன்றிய நாடுகள் ஆகியவற்றின் வாணிகப் பொருள்களுக்கு ஐந்து விழுக் காடாகச் சுங்கம் குறைக்கப்பட்டது. இவ்வாறு ஜப்பான் 1867-க்குள் பதினைந்து நாடுகளுடன் ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொண்டது.

கி. பி. 1858-க்கும் 1868-க்கு மிடைப்பட்ட காலத்தில் ஜப்பானில் பல அரசியல், குமுக, பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டன. 1806-ல் சோகனுடைய முதலமைச்சரான கமோன் நொகாமி (Kamon no kami) என்பவரைச் சில புரட்சிக்காரர்கள் கொன்றுவிட்டனர். 1681-ல் உருசியா த்சுசிமாத் தீவைக் கைப்பற்றிக் கொண்டது. ஜப்பான் பிரிட்டனின் உதவி கொண்டு உருசியாவை அத் தீவிலிருந்து வெளியேற்றியது. ஜப்பானில் அயலாரை வெறுக்கும் கட்சியினர் உருசியாவின் செயலைக் கண்டு பொங்கி யெழுந்தனர். இதனால் இவர்களுக்குத் தலைவராகக் குயூசுத் தீவிலிருந்த சத்சுமா (Satsuma) கிழார் அயலாருக்குப் பகைவரானார். 1862-ல் ரிச்சர்டுசன் ஆங்கிலேயரும் பிரிட்டானியர் இருவரும், ஒரு பெண்ணும் அனுமதியின்றிக் குயூசுத் தீவைக் கடந்தனர். இவர்களைச் சாமுராய் வீரர்கள் தாக்கியதில் ரிச்சர்டுசன் மாண்டார்; மற்றவர் காயமுற்றனர். குற்றவாளியைத் தங்களிடம் ஒப்புவிக்கும்படி பிரிட்டிசு அரசு கேட்டது. இதனை சத்சுமா கிழார் சட்டை செய்யவில்லை. எனவே பிரிட்டன் 1863-ல் சத்சுமாவின் தலைநகரான கோசிமாவைக் குண்டு வீசித் தாக்கியது. இதனையொட்டி மிகாடோ ஜப்பானுக்கு அபாயம் தரும் அயலவர் களெல்லாம் வெளியேற வேண்டுமெனப் பிரகடனம் செய்தார். இப் பிரகடனத்தை சோகன் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவந்து அயலாரை வெளியேற்ற அஞ்சினார். ஆனால், தன் எல்லையைக் கடந்து சென்ற அயலாரை ஒன்சுத் தீவிலிருந்த சோசு (Choshu) கிழார் அமெரிக்க, ஃபிரெஞ்சு, தச்சு வணிகர்களைச் சுட்டுத் தள்ளினார். இதற்குத் தக்க சமைதியைக் கேட்ட அயலாருக்குப் பதிலில்லை. எனவே பிரிட்டன், ஃபிரெஞ்சு, தச்சு, அமெரிக்கர் கூட்டாகச்: சேர்ந்து சோசுவின் கோட்டைகளை யழித் தனர். மேற்படி சத்சுமாவும், சோசுவும், மிகாடோ கொமாய் என்பவரை ஆதரிப்பவர்களென்பது குறிப்பிடத் தக்கது. ஆயினும் சோகன் அயலாருக்குத் தானே இழப்பீடு அளித்தார். 1865-ல் தொகுகவா குலத்தின் கடைசி சோகனாகவும் சோகன் பதவியை யேற்கும் கடைசி சோகனாகவும் யொசினொபு (Yoseinobu) என்பவர் பதவி யேற்றார். இவரைக் கெய்கி (Keiki) என்றும் அழைப்பர்.

ஜப்பானை புதிய நாடாக்குவதில் இவர் பெரிதும் ஆர்வம் கொண்டவர். இவர் ஃபிரெஞ்சுக்காரரைக் கொண்டு தன் படைகளைத் திருத்தி யமைத்தார். ஜப்பானிய நாவாய்ப் படையைப் பிரிட்டானியரின் கீழ்ப் பயிற்சி பெறச் செய்தார்.

இச் சமையத்தில் 13—2—1867-ல் மிகாடோ கொமாய் கண்ணுடி, வாள், மணிக்கல் ஆகியவை பதினைந்தே அகவை நிரம்பிய முட்சுயிட்டோவின் (Mutsuhito—1867—1912) கைக்குச் சென்றன. அதாவது இவர் மிகாடோவானார். இவர் 'அரியணையிலிருக்கும் தத்துவஞானி' (Philosopher on the Throne) எனப் புகழ் பெற்றார். இவரை 'மேசிப் பேரரசர்' (Meji Emperor) என்றும் அழைப்பர். இவர் ஆண்ட 1867 முதல் 1912 வரையிலான காலத்தை 'மேசி ஆண்டுமானம்' என்று கூறுவர். இவருடைய காலத்தில் மேல்நாட்டு முறைகளைப் பின்பற்றி ஜப்பானில் பல புரட்சிகரமான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. மேல் நாட்டவர்கள் ஜப்பானில் எல்லா உரிமைகளையும் துய்க்க லாயினர். ஜப்பானிய ஆட்சியின் கட்டுப்பாடுகளிலிருந்து விலக்குகள் பெற்றனர். ஐரோப்பிய அரசுகள் தங்கள் மக்களின் நலத்தைப் பாதுகாக்க ஜப்பானில் பலவகையிலும் ஆயத்தம் தேடிக் கொண்டன. அவர்களின் அரசியல் தூதுவர்கள் ஜப்பானில் நிலையாகத் தங்கினர். ஜப்பானியத் துறைமுகங்களில் ஐரோப்பியரின் கலங்கள் கட்டணமின்றி நுழையும் உரிமையைப் பெற்றன. கிறித்தவச் சமயத்தைப் பின்பற்றவும், பரப்பவும் முழு உரிமை வழங்கப்பட்டது. ஜப்பான்நாடு முழுவதும் ஐரோப்பியர்கள் செல்லவும், சமயப் பரப்பூழியர்கள் பிரச்சாரம் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டது. இத்தகைய சலுகைகளை மேல் நாட்டார் அனுபவிப்பதைக் கண்ட நாட்டுப் பற்றுள்ள ஜப்பானியர் அரசவைக் கிழார்கள், நிலமானியக் கிழார்கள், சோகன் குடும்பத்திலேயே ஒருசிலர் முதலானோர் அயலாரை வெறுத்து, அவர்களை வெளியேற்றத் துடித்தனர். அயலார் தங்கள் நாகரிகத்தையும், சமயத்தையும் பரப்பியபின் நாட்டையே அடிமையி லாழ்த்திவிடுவ ரென்றும், பொருளாதாரத்தைக் குலைத்துவிடுவ ரென்றும் அஞ்சினர். இவர்களுக்கு ஆதரவு கொடுத்த சோகனை வெறுத்தனர். இச் சூழலில் மிகாடோ பத்தி இயக்கமும் வலுப் பெற்றது.

1867ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தொகுகவாவை எதிர்த்துப் புரட்சி செய்தனர். 'பேரரசரைப் பெருமைப் படுத்து, கொள்ளைக் கூட்டத்தை வெளியேற்று' (Son-O-Jo-I= Revere the Emperor and expel the Barbarioms) முதலான முழக்கங்கள் விண்ணை முட்டின. அக்டோபர் திங்கள் 1867-ல் தோசா எனும் மானியத்தின் கிழாரான யோதோ (Yodo) என்பவர் சோகனிடம்

ஒரு நீண்ட விண்ணப்பத்தைக் கொடுத்தார். அதில் ஜப்பானை சோகன், மிகாடோ ஆகிய இருவர் அதன் கண்ணுகவும் காதாகவு மிருந்து ஆளுகின்றனர்; ஆனல், அக் கண்ணும் காதும் எதிரெதிர்த் திசைகளை நோக்கிச் செயல் படுவதால் உடலாகிய ஜப்பான் பல இன்னலுக் குள்ளாகின்றது. எனவே சோகன் தன் பதவியை மிகாடோவிடம் ஒப்படைத்து விலகினல் ஒரே அரசால் ஆளப் படும் ஜப்பான் மற்ற நாடுகளுக் கிணையாக வாழும் என்ருர். இதற்கு முன் மிகாடோ அயலாரை வெளியேற்ற மக்கள் குரலை மதிக்கும்படி சோகனுக்கு உத்தரவிட்டார். சோகன் மக்களின் கிளர்ச்சிக்கும், அயலாரின் அரசுப் போர்க் கருவிகளுக்கு மிடையில் சிக்கி, வேறு வழியின்றி யோதோ கிழாரின் விண்ணப்பத்தை ஏற்று 14-10-1867-ல் தன்பதவியைத் துறந்தார். இவ்வாறு ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளாக இருந்த சோகன் பதவியும், இரட்டையாட்சியும் ஜப்பானில் மறைந்தன. இனி அதிகாரங்கள் அனைத்தையும் பேரரசரே மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. சோகன் பதவி நீங்கியும், பேரரசர் பேரதி கார முடையவராய் ஆட்சி செலுத்த முடியவில்லை. இன்னமும் சோகன்களைப் போலவே மைய ஆட்சிக்குக் கீழ்ப்படியாது வாழ்ந்த பல நிலக்கிழார்கள் ஜப்பானிலிருக்கத்தான் செய்தனர். சோகன் மரபினர் அதிகார வருக்கத்தினரா யிருந்தனர்.

# 6. மிகாடோவின் பண்டுரிமை மீட்சி
## (Mikado's Restoration)
### மேசி ஆண்டுமானம்—1868

இங்கிலாந்தில் தோன்றிய உள் நாட்டுப் போரின் (1642-'49) முடிவில் முதலாம் சார்லசு மன்னர் (1625-'49) கொல்லப்பட்டார். இதற்குப் பின் இங்கிலாந்தில் பொது நல அரசும், (1649—1653) பின்னர் காப்பாளர் ஆட்சியும் (1653-1660) ஏற்பட்டன. அதாவது பரம்பரையாக மன்னரால் ஆளப்பட்ட இங்கிலாந்தை முதலாம் சார்லசு மன்னரின் கொலேக்குப் பின் கி. பி. 1649ஆம் ஆண்டிலிருந்து 1660வரை ஏறத்தாழப் பதினேராண்டுகள் குடியாட்சியென்ற பெயரால் எஞ்சிய நாடாளும் மன்றத்தினரும் படைத் தலைவர் ஆலிவர் கிராம் வெல்லும் ஆண்டனர். இப் பதினேராண்டுக் காலத்தில் மன்னரே இங்கிலாந்தின் அரியணையில் இல்லை. கி. பி. 1660-ல் தான் இரண்டாம் சார்லசு மன்னரை நாடாளும் மன்றம் அரியணையிலேற்றியதால் மீண்டும் மன்னராட்சி இங்கிலாந்தி லேற்பட்டது. இவ்வாறு முன்பு மன்னரால் ஆளப் பட்ட நிலையை மீண்டும் இங்கிலாந்து மீட்டதையே 'பண்டுரிமை மீட்சி' அல்லது 'முன்னிலை மீட்சி' என்கிறேம். ஆனல், ஜப்பானின் நிலை வேறு. ஜப்பானின் தெய்விகப் பேரரசர்கள் கியோத்தோவில் வாழ்ந்தும், அவர்களுடைய ஆட்சி யதிகாரங்களை சோகன்கள் கைப்பற்றி ஆண்டதால் மாமன்னர்கள் இருந்தும் இல்லாதவர் களாகவே காணப்பட்டனர். சோகன் பதவி ஒழிந்து மீண்டும் மிகாடோ பண்டைய முழு அதிகாரத்தோடும் கட்டுப்பாடின்றியும் பகிர்ந்தாளுதல் இன்றியும், எதேச்சையாக கி.பி. 1868ஆம் ஆண்டு சனவரி 3ஆம் நாளிலிருந்து ஆளத் தொடங்கினர். அதாவது கி. பி. 1192-லிருந்து 1867 வரையிலுள்ள 675 ஆண்டுக் காலங்களில் (82ஆம் மிகாடோவான கோ-தோபாவின் காலத் திலிருந்து 120ஆம் மிகாடோவான கொமாய் என்பவரின் காலம் வரை) ஏறத்தாழ 40 பேரரசர்கள் ஜப்பானைப் பெயருக்குத்தான் ஆண்டார்கள். ஆனல், இவர்களுடைய காலத்தில் மினு மொத் தோக்கள் (1192-1219) ஃபூசிவாராக்கள் (1220-1333) அசிககாக்கள் (1333-1573), முப்பெரும் வீரர்கள் (1573-1603) தொகுகவாக்கள் (1603-1867) ஆகிய படைவீரக் குடும்பங்கள்

ஆட்சி யதிகாரத்தைக் கைப்பற்றி ஆண்டன. இக் குடும்பங்கள் மாமன்னர் வசித்த கோநகருக்கப்பாலிருந்த படைவீட்டுத் தலைமை யலுவலகங்களான காமகுரா, முராமாச்சி, எதோ ஆகிய நகரங்களைத் தலைநகரங்களாகக் கொண்டு ஆண்டன. மாமன்னர்கள் தங்களுக்கென ஓர் அவையை நிலையாக வைத்துக் கொண்டு அதிலிருந்து தங்கள் உத்தரவுகளைப் பிறப்பித்தார்கள். ஆனால், மேற்படி படைவீரக் குடும்பங்களிலிருந்து சோகன் பதவியைப் பரம்பரையாகப் பெற்று ஆண்டவர்கள், தங்களின் தலைநகர்களிலிருந்து உத்தரவுகளைப் பிறப்பித்து ஜப்பானை ஆண்டார்கள். இவ்வாறு மிகாடோ ஒருபுறமும், சோகன்கள் மற்றொரு புறமும், 676 ஆண்டுகள் ஜப்பானை ஆண்டனர். இதையே நாம் 'இரட்டையாட்சி' என்கிறோம். இத்தகைய இரட்டையாட்சி முறை கி. பி. 1867-ல் சோகன் பதவியிலிருந்து விலகியவுடன் ஒழிந்தது. அவ்வாண்டிலிருந்து மிகாடோ தன் பழைய தெய்விகப் பண்போடு மக்களால் வணங்கப் பெற்றுத் தன்னாட்சியைத் தொடங்கினார். இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னும் கி. பி. 1192ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலையை மீண்டும் பெற்று ஆளத் தொடங்கினார்.

அவ்வாறு ஆளத் தொடங்கிய ஜப்பானிய மாமன்னர் மேசி என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் முட்சுயிதோ (Mutsu Hito) ஆவார். இவர் கி.பி. 1868ஆம் ஆண்டிலிருந்து 1912 வரை ஜப்பானை ஆண்ட காலத்தில் அரிய பல சீர்த்திருத்தங்களைச் செய்து ஜப்பானை ஐரோப்பிய மயமாக்கி, உலகில் சிறந்து நின்று புதிய முறையில் மேம்பட்டு வல்லாட்சிகளாகத் திகழும் நாடுகளில் ஒன்றாக ஜப்பானை உருவாக்கினார். இவ்வாறு இவருடைய காலத்தில் ஜப்பானில் ஏற்பட்ட புதிய மாற்றத்தையே 'மேசி ஆண்டு மானம்' என்கிறோம். 'மேசி' என்ற சொல்லுக்கு ஒளி பொருந்தியது என்றும், தெய்விகத் தன்மை வாய்ந்தது என்றும் பொருளாம். இவருடைய ஆட்சி மக்கள் நலம் நாடும் நல்லாட்சியாக அமைந்ததால் இவரை மக்கள் 'ஒளிபொருந்திய மாமன்னர்', 'தெய்விகப் பேரரசர்' என்றெல்லாம் போற்றினர். இத்தகைய ஒளியும், தெய்விகத் தன்மையும், ஓரே ஆட்சியும் மீண்டும் மலரவேண்டும் என்பதற்காகப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தத்துவ மேதைகளும், மறையியலாரும் மாணவர்களும், மக்களும் அரசியல் சிந்தனையாளர்களும் வலியுறுத்தி வந்தார்கள் என்பதை நாம் நன்கறிவோம்.

இம் முன்னிலை மீட்சி ஜப்பானில் ஏற்படுவதற்கான காரணியங்களை நாம் முன்னரே கண்டோம். முகாமையாக சோகன்கள், பெருநிலக்கிழார்கள், அரசவைக் கிழார்கள் முதலியவர்களால் தொடர்ந்து உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்ட வண்ணமிருந்தன.

இக் குழப்பங்களை ஒழித்து அமைதியை ஏற்படுத்த வேண்டு மானால் ஆட்சி முறை பேரரசர் கையில் மட்டும்தான் இருக்க வேண்டுமெனப் பலரும் விரும்பினர். இச் சமையத்தில் சோகன் களும் தங்கள் வீரப் பண்பிலிருந்தும் நெகிழ்ந்து காணப்பட்டனர். அவர்களுக்கு எதிராக மேற்கு ஜப்பானில் சாமுராய் எனப்படும் சத்சுமா, சோசு, தொசா, இசேன், ஆகிய குடும்பங்கள் புதிய வலி வோடும், பொலிவோடும் கிளர்ந் தெழுந்தன. கி.பி. 1853ஆம் ஆண்டுக்குள் மேலும் பல புதிய எதிர்ப்புச் சத்திகள் சோகன்களுக் கெதிராக நாடெங்கிலும் முளைத்தன. அச் சத்திகள் யாவும், சோகனைப் பதவியிலிருந்து நீக்கி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென முனைந்தனவே யொழிய, சோகனை நீக்கிப் பேரரசரை மட்டும் ஆளச் செய்யவேண்டு மென்ற பொது நோக்கோ அல்லது பெருநோக்கோ இவற்றிற்கு இல்லை. இரண்டா வதாக ஜப்பானி லேற்பட்ட கல்வி யறிவும், பண்பாட்டு வளர்ச்சி யும், சிண்தோ சமயப் பற்றும் முன்னிலை மீட்சிக்கு வழிகோலின. வரலாற்றியலை ஊன்றிப் படித்த மாணவர்கள் கி. பி. 1192 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட மாமன்னர்களின் தனியாட்சி முறைகளையும், மக்களுக்கும் மாமன்னருக்குமிடையேயிருந்த தெய்விகப்பற்றையும் கண்டு வியந்தனர். இவ் வாண்டுக்குப் பின் எழுந்த சோகான்களின் ஆட்சியால் மக்களைச் சுரண்டி வாழும் தன்னலமிகளே நாட்டில் வேரூன்றி விட்டனர் என்பதை மாணவர்கள் நன்கு உணர்ந்தனர். அவர்களின் உணர்ச்சிக்கு எரியூட்டுவதாக எண்ணிலா உள் நாட்டுக் கிளர்ச்சிகளும், போர்களும் ஏற்பட்டன. இவற்றின் கதைநாயகர்களாக நின்ற சோகன்கள், பெருநிலக்கிழார்கள், அரசவைக் கிழார்கள், மாநிலத் தலைவர்கள், உள்நாட்டுத் தலைவர்கள் ஆகியோரின் பொறுமையும் தன்னலமும் நாடெங்கிலும் தலைவிரித்தாடியதை மாணவர்களும், அரசியலறி ஞர்களும், மக்களும் கண்கூடாகக் கண்டு, இவற்றிற்கொரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமானால் மக்கள் நலம் நாடும் நல் லாட்சியை ஏற்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்னும் முடிவுக்கு வந்தனர். அத்தகைய முடிவுக்குச் சார்பாகவும், அடிப்படையாகவும் நின்றது ஜப்பானியரின் பண்டைய சமய மாகிய சிண்தோ சமயத்தின் மறுமலர்ச்சியாகும். இச் சமயத்தின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டவர்களை நாம் முன்னரே கண்டோம். சிண்தோ மதம் இயற்கை வழிபாட்டையும் தெய்விகத் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டது. அத்தகைய தெய்விகத் தன்மைக்குக் கண்கூடான எடுத்துக்காட்டாகத் திகழ் பவர் பேரரசர் என்பதை இம் மதம் வலியுறுத்துகிறது. இறந்த வரையும், இறந்த நற்பண்பையும் போற்றவேண்டுமென்பது இம் மதத்தின் போதனையாகும். சூரியனின் நேரடி வாரிசாகத்

தோன்றிய, ஜப்பானியப் பேரரசர்களைச் சத்தியற்ற சாயல்களாக் கிவிட்டு உருவங்களாக உலாவித் திரிகின்ற உலுத்தர்களான தன்னல வாதிகளை ஒழித்தே ஆகவேண்டும் என்னும் ஒருமித்த உணர்ச்சி நாடெங்கிலும் அதிவேகமாகப் பரவ இந்த சின்தோ சமயத்தின் மறுமலர்ச்சி உதவியது. ஜப்பானி லேற்பட்ட பஞ்சங் களும், பட்டினிகளும், கொள்ளை நோய்களும், கொடிய துன்பங் களும், ஐரோப்பியரின் நுழைவும், அவர்களின் கிறித்தவ சமயமும் புனிதப் பேரரசரை மறந்து புல்லியாரகிய சோகன்களைப் போற்றி யதால்தான் எனப் படித்தோரும் எளியோரும் நம்பினர்.

அத்தகைய மன்னராட்சிக்குத் தடையாயிருக்கும் எத்தகைய சத்திகளையும் ஒழித்தே ஆகவேண்டுமென மக்கள் முடிவு செய்தனர். இத்தருவாயில் நிலக்கிழமை முறையும் கொஞ்சம் கொஞ்சமாக நெக்குண்டு நலிந்து நின்றது. ஐரோப்பியர்கள் நேரடியாக சோகனிடமே ஒப்பந்தங்கள் செய்துகொள்வதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். தனக்கு எதிராகக் கிளம்பும் சத்திகளைச் சமாளிப் பதற்கு சோகன் ஐரோப்பியரின் துணையை நாடுகிறு ரென்றும், அவர்களின் துணைகொண்டு எதிர்ப்புச் சத்திகளை ஒடுக்கி விடுவா ரென்றும் கருதினர். சிலர், சோகன் ஐரோப்பியருக்கு நாட்டைக் காட்டிக் கொடுத்து விடுவாரோ எனவும் அஞ்சினர்.

இத்தகைய நிலைமைகள் ஜப்பானில் உருவாகிக் கொண்டிருந்த பொழுது 120ஆம் மிகாடோவான கொமாய் (Komei—1847—1867) 3-2-1867-ல் திடீரெனக் காலமானுர். அவருக்குப் பின் பதவி யேற்ற அவர் மகன் 'மேசி மாமன்னர்' தம் தந்தையைப் போலல்லாமல் ஐரோப்பியர்களை வரவேற்கத் தொடங்கினுர். கி. பி. 1858ஆம் ஆண்டிலிருந்து 1866-வரை சோகனுயிருந்த இயேமொச்சி (Iyemochi) 19-9-1866-ல் காலமானுர். அவருடைய மைந்தனை யொசிஇசா (Yoshihisa) சோகனுனர். இவரும் தன் தந்தையின் கொள்கையிலிருந்து மாறுபட்டுக் காணப்பட்டார். நாட்டின் நடப்பு முறைகளையும், மக்களின் நெஞ்சங்களையும் தொட்டுணர்ந்த இவர் தானே முன்வந்து தன்னுடைய சோகன் பதவியை 19-11-1867-ல் துறந்தார். இதற்குப்பின் மிகாடோ தனித்தாளத் தொடங்கினுர்.

சோகன் பதவி விலகிய பின்பும் மேசி மன்னர் தன்னிச்சை போல் முழு அதிகாரத்துடன் தனித்தாள முடியவில்லை. அதற்கு இரு காரணியங்களைக் கூறலாம். ஒன்று, அவர் பதினைந்தே அகவை நிரம்பிய இளைஞுக இருந்ததால் இதுவரையில் பல நூற்றுண்டு களாக ஆட்சி யதிகாரங்களை ஆண்டனுபவித்து வந்த படைக் குடும்பத்தினரின் ஆலோசனைகளும், பேருதவிகளும் அவருக்கும்

தேவைப்பட்டன. இன்னமும் பல பெரிய அதிகாரிகளாகவும் ஆட்சி பீடத்தின் தூண்களாகவும் விளங்கி நின்ற படைக்குடும்பத்தினர் தங்கள் சுகபோகங்களை விட்டுத் திடீரென விலகிக்கொள்ளவுமில்லை. இரண்டாவதாக, தொகுகவாக்களை அடியோடு ஒழித்துவிட்டு அவர்கள் ஆண்டனுபவிக்கும் பதவிகளையும், செல்வாக்கையும் பெறவேண்டுமென்று கிளர்ந்தெழுந்த மேலே கூறிய மேற்கு ஜப்பான் குடும்பங்களின் எதிர்ப்பும், கலகங்களும் மேசியின் ஆட்சிக்கு இடையூறுகளாய் விளங்கின. இச் சச்சரவுகளின் முடிவில் தங்கள் விரும்பியவாறே மேற்கு ஜப்பானியக் குடும்பங்களான சத்சுமா, சோசு, தொசா, இசேன் ஆகியவை அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். எனவே தொகுகவாக்களின் இடத்தை இப் புதிய குடும்பத்தினர் கைப்பற்றிக் கொண்டதால் இன்னமும் மிகாடோவின் பண்டுரிமைகள் மீட்கப்படவில்லையெனக் கொள்ளலாம். இத்தகைய ஆட்சியில் முன்னிலை மீட்சியுமில்லை; புதுமையு மில்லையெனச் சில வரலாற்றாசிரியர்கள் இடித்துரைக்கின்றனர். மேலும் உள்நாட்டு அமைப்பில் குழுகத்தையே மேடு பள்ளமாக மாற்றியமைத்த நிலக்கிழமை முறை இன்னமும் வேரோடு சாயவில்லை என்பதனையும் இவ் வாசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஐரோப்பியர்கள் ஜப்பானுக்குள் நுழைந்து அனைத்து உரிமைகளோடும் வாழ்ந்ததை முன்னிலை மீட்சி எனலாமா? என இவ் வாசிரியர்கள் கடாவுகின்றனர். சோகன் ஒழிந்தும் இன்னமும் இரட்டையாட்சி முறைதானே என்பது இவர்களின் வினவாகும். மிகாடோ இளைஞராக இருந்ததாலும், பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு மிகாடோவின் தனியாட்சி ஏற்பட்டதாலும், இதுவரை ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களின் ஆலோசனைகளும், உதவியும் அவருக்கு அப்போது மிகவும் இன்றியமையாதனவாக இருந்தன. ஆனால், தீயூழின் பயனாக மேற்கு ஜப்பானியக் குடும்பங்கள் அவருக்கு ஆதரவும், ஆலோசனையும் தர ஆட்சியதிகாரங்களில் அமர்ந்து விட்டன. சோகன்கள் காலத்தில் இருந்தது போலில்லாமல் இப்பொழுது மிகாடோவின் ஆட்சி முற்றிலும் வேறுபட்டிருப்பதைக் காணலாம். சோகன்கள் தனிப்பட்ட முறையில் பாரம்பரியமாகத் தங்களுடைய தலைநகரிலிருந்து கொண்டு ஆட்சி புரிந்த நிலைமாறி, அரசர் அப்படியொரு இரட்டையாட்சி இல்லாமலும் ஜப்பானுக்கு இரண்டு தலைநகரங்கள் இல்லாமலும், ஒரே கோநகரிலிருந்துகொண்டு எல்லா உத்தரவுகளையும் தானே அனுப்பினர். சான்றாக, சோகன்கள் ஐரோப்பியர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் முந்தைய மிகாடோவின் அனுமதி யில்லாமல் தாங்களே செய்து கொண்டவையாகும். ஆனால், இன்றைய மேசி அத்தகைய சோகனோ அல்லது அது போன்ற சத்தியோ குறுக்கிடாமல் எல்லா

உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் தானே நேரடியாக ஐரோப்பியருடன் செய்து கொள்கிறார். தானே நாட்டின் ஒரே தலைவரென்றும், இறைமாட்சியின் இருக்கையென்றும் ஜப்பான் முழுவதும் அறிவித்ததோடு ஐரோப்பிய நாடுகளுக்கும் உலக நாடுகளுக்கும் அறிவித்தார். இதனை ஒரு பேரறிக்கையின் மூலம் 3—2—1868-ல் வெளியிட்டார். எனவே இனி ஐரோப்பிய நாடுகளும், உலக நாடுகளும் எத்தகைய உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் நேரடியாக மிகாடோவுடன்தான் செய்து கொள்ள வேண்டுமென்பதைத் திட்டவட்டமாக அறிந்து கொண்டன. மேலும் புதிதாக அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொண்ட மேற்படி குடும்பங்கள் மன்னரின் மாட்சிமையைக் குறைக்கின்ற சோகன் பதவியில் அமரவில்லை. ஏனென்றால், சோகன் பதவி முன்னரே ஒழிக்கப்பட்டுவிட்டது. இவர்கள் வகித்து வந்த சில பதவிகளும், அரசியல் பணிகளும் சோகன் பதவி போன்று பாரம்பரியச் சொத்தாகவுமில்லை என்பது குறிப்பிடத் தக்கதாம். இத்தகைய கரணியங்களால் மேற்படி வரலாற்றாசிரியர்களின் கருத்தை மறுத்துரைத்து கி. பி. 1868-ல் மேசி மன்னர் கைப்பற்றி ஆண்ட அரசுரிமை உண்மையான 'முன்னிலை மீட்சி' தான் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை என்கிறோம்.

23—3—1868-ல் முதன் முறையாகத் தன் அரியணையிலமர்ந்து அரசோச்ச முற்பட்ட முட்சுஇதோ தன் குடிமக்களின் குறைகளை நேரடியாகக் கேட்டறிந்தார். இவ்வாறு மாமன்னர் தங்களுக்குக் காட்சி தந்து தங்களின் குறைகளை நேரடியாகக் கேட்டதைக் கண்ட ஜப்பானிய மக்கள் சூரிய பகவானையே நேரடியாகச் சந்தித்துப் பேசியதாக உணர்ந்தனர். அயல் நாட்டுத் தூதுவர்களையும், வணிக முகவர்களையும் தன் அவையில் வரவேற்று அவர்களுடன் தானே ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும் செய்து கொண்டார். 26—11—1869-ல் மிகாடோ தனது கோநகரை கியோத்தோவிலிருந்து எதோவுக்கு மாற்றிக் கொண்டார். அன்றையிலிருந்து எதோ தோக்கியோ (Tokyo) எனப்பட்டது. தோக்கியோ என்ற சொல்லுக்குக் 'கிழக்குக் கோநகரம்' என்று பொருள். பல நூற்றாண்டுகளாய்க் கோநகராய்த் திகழ்ந்த கியோத்தோவிலுள்ள மக்கள் ஏமாற்றமடையாமலிருக்க அந் நகருக்கு சைகோ (Saiko) என்னும் மறு பெயரிட்டார். 'சைகோ' என்னும் சொல்லுக்கு 'மேற்கு கோநகரம்' என்று பொருள். அந் நகருக்குச் சென்று தன் தந்தையின் நினைவுநாளைக் கொண்டாடினார். தன்னுடைய திருமண விழாவையும் அந் நகரிலேயே நடத்தினார். இத்தகைய பல செயல்களை நேரடியாகத் தாமே தங்கள் மேசி மாமன்னர் செய்வதை யறிந்த மக்கள் அவரைத் தங்களின் ஒரே தலைவனாக ஏற்றுப் போற்றினார்கள்.

மக்களின் மனதை நன்குணர்ந்த மேசி கிறித்தவர்களின் செய்திகளில் விழிப்பாக இருக்கத் தொடங்கினூர். இவர் பதவி யேற்ற காலத்தில் நாகசாகிக் கண்மையி லுள்ள உரகாமி என்னும் ஊரில் மட்டும் ஏறத்தாழ 4000 கிறித்தவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் ஒரே யிடத்தில் வசித்து வந்தால் பண்டையக் காலத்தில் எழுந்த கலகங்களைப் போல் மீண்டும் ஏதாவது கலகங்க ளேற்பட்டால் அதற்குக் கரணியமாகவோ, அல்லது தூண்டுகோலாகவோ இக் கிறித்தவர்கள் இருக்கக்கூடும் என மேசி நம்பினூர். இதனுல் இவர்களை அவ் வூரிலிருந்து குடிப் பெயரச் செய்து 4000 குடும்பங்களையும் நாடு முழுவதும் சென்று குடியேறச் செய்தார். அவ்வாறு குடியமர்த்தப்பட்ட கிறித்தவக் குடிகளை ஆங்காங்கே உள்ள கிழார்கள் கண்காணித்து வர வேண்டுமென உத்தரவிட்டார். கிறித்தவச் சமயம் ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளாகத் தடை செய்யப்பட்டிருந்தும், மாதா கோயிலோ, மதப்போதகரோ விவிலிய நூலோ இல்லாமல் செவி மரபுச் செய்திபோல் இம் மதம் வாழையடி வாழையாக வாழ்ந் திருந்ததைக் கண்டு வியக்கிறேம். ஆனுல், மேசி தனது முன்னேர் களைப்போல் அம்மதத்தை அடியோடு ஒழிக்கவோ, தண்டிக்கவோ, விரும்ப வில்லை. கி. பி. 1872-ல் கிறித்தவர்களுக்குத் தடையாக இருந்து வந்த எல்லாச் சட்டங்களையும் இவர் நீக்கி விட்டார். கிறித்தவர்களும் மற்ற எல்லாச் சமயத்தவர்களும் அவரவர் மதத்தை தங்கு தடையின்றிப் பின்பற்றலாமென அனுமதி அளித்தார். அவர்களின் உரிமைகளும் உடைமைகளும் அரசால் காக்கப்படுமென உறுதியளித்தார்.

### மேசியின் ஆட்சி முறை

1868 சனவரித் திங்கள் 3ஆம் நாள் தனது அரசவையில் மேசி, பல புதிய ஆலோசகர்களை அமர்த்தினூர். ஆட்சித் துறையின் தலைவராக ஓர் இளவரசர் அமர்த்தப் பட்டார். அவருக்குத் துணையாக இரண்டு அரசவைக் கிழார்களும் அமர்த்தப்பட்டனர். முதுநிலைப் பதவிகள், இளநிலைப் பதவிகள் போன்றவற்றை ஏற்படுத்தினூர். மூன்று கிழார்களுக்கு முதுநிலை உறுப்பினர் பதவி களும், (Gijo) இரண்டு இளவரசர்களுக்கும், ஐந்து நிலக்கிழார் களுக்கும் இளநிலை உறுப்பினர் பதவிகளும் (Sanyo) கொடுத்தார். தொகுகவாக்களை எதிர்த்துப் போராடி ஒழித்த கிழார்கள் பலரை யும் பலதரப்பட்ட பதவிகளில் அமர்த்தினூர். பிப்பிரவரித் திங்கள் 1868-ல் பலதரப்பட்ட பணிகளையும் தனித்தனியே செய்வதற்குத் தனித்தனித் துறைகளை (Departments) ஏற்படுத்தினூர். அவற்றுள் 1. உயராட்சித்துறை, 2. சிண்தோ சமயத்துறை, 3. உள்நாட்டுத்துறை, 4. அயலகத்துறை, 5. போர்த்துறை,

6. பொக்கசத்துறை, 7. நயன்மைத்துறை 8. சட்டமன்றத்துறை முதலியன முகாமையானவையாகும். இத் துறைகளைக் கண் காணிக்க மேற்படி முதுநிலை உறுப்பினர் குழுவும், அவர்களுக்குத் துணையாய் நிற்க இளநிலை உறுப்பினர் குழுக்களும் பணிக்கப்பட் டன. ஒவ்வொரு துறையையும் தனித்தனியே நடத்திச் செல்லும் அதிகாரமும், அரசனுக்குப் பொறுப்பாளியாக இருக்க வேண்டிய கடமையும் முதுநிலை உறுப்பினர்களுக்கே கொடுக்கப்பட்டது. இத்தகைய அரசியல் மாற்றத்திற்கு ஈர்க்கப்பட்ட பல நிலக்கிழார் களும், இளவரசர்களும் தாங்களே முன்வந்து தங்களை இளநிலை உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டனர்.

### ஐந்துரிமைக் காப்புறுதிப் பத்திரம்

பேரரசர் இரண்டு பேரறிக்கைகளை வெளியிட்டு நாடு முழுவதிலுமிருந்து படிநிகராளிகளை யழைத்து, மக்களின் உரிமைகளைத் தாம் காப்பதாகக் கூறிக் காப்புறுதிப் பத்திரம் ஒன்றையும் வழங்கினர். மார்ச்சுத் திங்கள் 1868ஆம் ஆண்டில் அவர் வெளியிட்ட முதற் பேரறிக்கையில் நாடு முழுவதிலுமுள்ள ஒவ்வோர் ஆட்சிப் பிரிவிலிருந்தும் (Dominian) ஒவ்வொரு பேராளை (Delegate) அழைத்தார். அவ்வாறு அழைக்கப்பட்ட கூட்டத்தில் ஜப்பானில் புதிதாக அமைக்கப்பட்ட ஆட்சி முறையில் அவர்களுக்குள்ள கடமைகளையும், உரிமைகளையும் விளக்கிக் கூறினர். இத்தகைய நேரடிச் சந்திப்பால் கலகம் விளைவித்த பெரு நிலக்கிழார்களும், உயர்குடியினரும் மனம் நெகிழ்ந்து, அரசர்பால் அன்பு கொண்டு, தாங்களே விட்டுக் கொடுக்குமளவுக்கு மனமாற்றமடைந்தனர். பேரரசர் இரண்டாவ தாக வெளியிட்ட பேரறிக்கையில் தனது காப்புறுதிகளை மக்கள் முன் வைத்தார். அதற்கு 'ஐந்து உரிமைக் காப்புறுதிப் பத்திரம்' (The Five Article Charter Oath) என்று பெயர். இஃது 1868 ஏப்பிரல் திங்கள் ஆறும் நாளில் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இதன்படி :

1. நாடு முழுமைக்கும் பொதுவான சட்ட மன்றங்களை அமைத்து அவற்றை மக்களின் பேராள்களைக் கொண்டு நடத்தி அவர்கள் கூறும் ஆணைகளின்படி இனி நாடு நடத்திச் செல்லப் படும்.

2. அவ்வாறு நாட்டை நடத்திச் செல்ல உறுதுணையாக நிற்கும் பொது மக்களின் ஒற்றுமையும் ஒன்றிணைப்பும் ஒருங்கே ஏற்படுவதற்கான வழி வகைகள் இனி வகுக்கப்படும்.

3. தனி மனிதன் ஒவ்வொருவனும் தனக்கேற்ற முறையில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள அவனுக்கு எல்லா உரிமைகளும் வழங்கப்படும். இதனால் எவருக்கும் ஏற்றத்தாழ்வால் மன உளைச்சல் ஏற்படாது.

4. பழைய காலத்திலிருந்த கொடிய வழக்கங்களும், பழக்கங்களும், செயல்களும் இனி அறவே நீக்கப்பட்டுவிடும். நயன்மை, மனச்சாட்சியின்படியே இயற்கை விதிகளை யொட்டி எல்லாருக்கும் சமமாக வழங்கப்படும்.

5. நம் பேரரசு உயர்வு பெற உதவும் அறிவியலும், செயலியலும் உலகின் எல்லா மூலைகளிலிருந்தும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலே கூறப்பட்ட ஐந்து உறுதி மொழிகளின் விளக்கம் வருமாறு:

'ஜப்பானில், முன்பிருந்த பாசறை அலுவலகம், அரசவை அலுவலகம், போன்ற பழைய இருமுனையாட்சி முறையோ, குமுகாயத்தை மேடு பள்ளமாக்கிவிட்ட நிலக்கிழமை முறையோ இனி இருக்காது; ஒரே அரசரால் ஒரே கோநகரத்திலிருந்து ஒரே வகையான சட்ட திட்டங்களால் நாடு முழுவதும் இனி ஆளப்படும்; அரசவைக் கிழார்களும் படைக் குலத்தவர்களும் ஆண்ட பண்டைய நிலை மறைந்து, இனி பொதுமக்களனைவரும் ஆட்சியில் பங்கு பெறும் வண்ணம், அவர்களின் நிகராள்கள் நிரம்பிய சட்டமன்றங்களின் மூலமாகவே இனி ஜப்பானியர் ஆளப் படுவர்; ஜப்பானிய குமுகாயம் சாமுராய்கள், வேளாளர்கள், கைவினைஞர்கள், வணிகர்கள் ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டு வேறுபட்டு நின்ற நிலைமாறி, இனி எல்லாரும் வேற்றுமையற்ற ஒரே குமுகாய மக்களாய்க் கருதப்படுவர்; அரசவை மன்றம், பாசறை மன்றம், உள்நாட்டுத் தலைவர்கள் மன்றம் முதலிய பல நயன்மை மன்றங்கள் நாட்டில் அமைந்து இனப் பிரிவுக்கும், இடத்திற்கும், தரத்திற்கும் ஏற்றவாறு நயன்மை வழங்கியமுறை மாறி 'நயன்மையின் முன் எல்லாரும் சமம்' எனும் சித்தாந்தம் ஜப்பானில் இனி நிலவி நிற்கும்; புதிதாக எழுந்த சாமுராய்க் குலத்தவரான சத்சுமா, சோசு, தொசா, இசேன் ஆகியோரின் தனியாட்சியோ அல்லது தனி அலுவலகமோ இனி ஏற்படாது; அவர்களுக்குக் குமுகாயத்தில் தனிச்சிறப்பும், தனியுரிமையும் வழங்கப்பட மாட்டா. அதே சமையத்தில் பதவி நீங்கிய தொகுகவா குடும்பத்தினரை ஒதுக்கவோ, ஒடுக்கவோ, தண்டிக்கவோ கூடாது; திறமையுள்ள எவரும் தங்கள் திறமைக் கேற்ப எத் தகைய பணியிலும் அமரலாம்; அவர்களுக்கு வாழ்வுரிமையும்

தொழிலுரிமையும், மற்ற எல்லாவகை உரிமைகளும் அரசால் அளிக்கப்பட்டு அவற்றைக் காக்கும் பொறுப்பையும் அரசு ஏற்றுக் கொள்கிறது; அயல் நாட்டவரையும் அவர்களுடைய நாகரிகத்தையும் பண்பாட்டையும் வெறுத்து, இதுவரை தனித்திருந்ததால் ஜப்பான் நாட்டிற்கு இழப்பே ஏற்பட்டது; இனி ஜப்பானின் அரசியல், சமய, குமுகாய, பொருளியல், அறிவியல் வளர்ச்சிகளுக்குத் தேவைப்படும் அறிவும் ஆக்கமும் எந் நாட்டவருடையதாயினும் அவற்றை யேற்க ஜப்பான் ஆவலோடு காத்திருக்கிறது; இத்தகைய அறிவையும் ஆக்கத்தையும் பன்னாடுகளிலிருந்தும் தேடித்தர ஜப்பான் தன்னாட்டு இளைஞர்களைப் பன்னாடுகளுக்கும் அனுப்ப அணியமாக இருக்கின்றது. எனவே 'எந்த ஜப்பானியனும் அயல் நாட்டுக்குச் செல்லக் கூடாது' என்றிருந்த விதி இன்றுடன் தகர்த்தெறியப்படுகிறது; இத்தகைய புதியதோர் ஆட்சியை, புதிய குமுகாயத்தைப் புதிய ஜப்பானைப் படைப்பதற்கு ஒவ்வொரு ஜப்பானியனும் தனது முந்தைய உயர்வு தாழ்வுகளை மறந்து பிறப்பால், இனத்தால், மொழியால், சமயத்தால், நாட்டால் நாமெல்லாம் ஒருதாய் மக்கள் என்றுணர்ந்து என்னுடைய இப் பேராணையை அன்பாணையாக ஏற்று என்னுடன் ஒத்துழைக்க வேண்டுகிறேன்'.—மேசி

மிகாடோவின் இத்தகைய முயற்சிகளுக்கும், மாற்றங்களுக்கும் பின்னும் ஜப்பானில் அவர் எதிர்பார்த்தது போன்ற முழு அமைதியும், மக்களின் ஒத்துழைப்பும் ஏற்பட வில்லை. சாமுராய்க் குலத்தினர் தங்களின் அதிகார வேட்கையால் அடிக்கடி கலகம் செய்தனர். ஆயினும் மிகாடோ தனது காப்புறுதி ஆவணப்படி அரசியலை மாற்றி யமைத்தார். அதில் சாமுராய்கள் அதிக இடங்களைக் கைப்பற்றினர். முன்பு அரசவைக் கிழார்களும், நிலக் கிழார்களும், உயர்குடி மக்களும் பெற்றிருந்த இடங்கள் குறைக்கப் பட்டுவிட்டன. இளநிலை உறுப்பினர்களும், துணை யமைச்சர்களும் பதவி மாற்றம் பெற்றனர். மாநிலங்களில் பதவி யேற்றவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் நடுத்தர வகுப்பார் ஆவர். செயல் துறை மன்றம் (Dajokan) அரசின் அதிவல்லமை பொருந்திய துறையாயிற்று. இதில் மன்ற உறுப்பினர்களே யன்றிப் பல தருவுரையாளர்களு மிருந்தனர். இஃது பொதுத் துறை (Civil) பொக்கசம், நயன்மை, போர், அரண்மனைச் செய்திகள், அயல் நாட்டுச் செய்திகள் ஆகிய ஆறு துறைகளைக் கண்காணித்தது. இவற்றில் அரண்மனைச் செய்திகளைக் கவனிக்கும் துறையைத் தவிர மற்ற ஐந்து துறைகளின் அமைச்சர்களும் உதவியாளராகச் சாமுராய்கள் பதவி யேற்றனர். கி. பி. 1871-க்குள் செயல்துறை மன்றத்தின் எல்லாத் துறைகளிலும் பதவி யேற்ற சாமுராய்கள்

பொக்கசம், அயலகச் செய்தித்துறை ஆகியவற்றில் முழுமையாகத் தாங்களே எல்லாப் பதவிகளையும் கைப்பற்றிக் கொண்டனர். காப்புறுதி ஆவணப்படி அமைக்கப்பட்டு நாடாளும் மன்றத்திற்கு (Kogisho) ஆட்சிப் பகுதிகளின் பகராளர் வந்தனர். இம் மன்றம் மிக அமைதியாகச் சிக்கல்களை ஆராய்ந்து மிகாடோவிற்கு அறிவுரை கூறியது. ஆயினும் இம் மன்றத்தில் பழைமை விரும்பிகளே அதிக மிருந்தனர். இதில் மொத்தம் 213 உறுப் பினர்கள் முதலில் இடம் பெற்றனர். இவர்கள் யாவரும் பழைமை விரும்பிகள்; எனவே ஜப்பானில் பன்னெடுங் காலமாக வழக்கத்தி லிருந்துவரும் தற்கொலை செய்து கொள்ளும் உரிமையைத் (Hara-Kiri) தடுக்கச் சட்டம் செய்ய ஒரு வரைவு கொண்டு வந்தபோது பலரும் மறுத்துவிட்டனர். இதைப் போலவே வாளேந்திச் செல்லுவதைத் தடுக்கும் வரைவையும் மறுத்து விட்டனர். இந்திய வரலாற்றில் இராசபுத்திரர் வீரப் பண்புடன் திகழ்ந்தனரென்றும், போரில் தோற்றால் அல்லது மானம் பறிபோனால் தீக்குளித்து அல்லது வாளால் சிதைத்துக் கொண்டு இறப்பரென்றும் நாம் அறிவோம். இவ்வாறு தற்கொலை செய்து கொள்ளும் 'சோஃகர்' வழக்கத்தைப் போன்றதே ஜப்பானியரின் 'அஃகரகிரி' வழக்கம். மாதிரிக்காக அமைக்கப்பட்ட இந் நாடாளும் மன்றம் கூடிய ஆண்டிலேயே கலைக்கப்பட்டுவிட்டது. இம் மன்றம் மைய ஆட்சியை வலியுள்ளதாக்க முடியாமல் தோற்றது.

## நிலக்கிழமைச் சாவம்—1871

முத்சுஃகிதோ ஜப்பானின் தனிப்பெரும் மாமன்னரான போதிலும் நாட்டின் சத்திகள் யாவும் அவரை மையமாகக் கொண்டு இயங்க வில்லை. வலுவான மைய ஆட்சி இல்லாத எந்த நாடும் ஒருங்கிணைந்து நிற்கா தென்பது வரலாறு கண்ட உண்மை யாகும். நாடு முழுவது முள்ள நிலங்களைத் தங்கள் கொடிவழிச் சொத்துக்களாக்கி, ஆயிரமாண்டுகளாய் ஆண்டு துய்த்து வரும் பெருநிலக் கிழார்களிடமிருந்து திடீரென நிலங்களைப் பிடுங்குவது அவ்வளவு எளிய செயலன்று. அவ்வாறு செய்தால் உறுதியாக ஒரு பெரும் புரட்சி ஏற்படும். அதனைச் சமாளிக்கும் நிலையில் புதிய மிகாடோவின் வலுவும் ஆட்சியு மில்லை. பெருநிலக் கிழார்களே தாங்களாக முன்வந்து மேசியின் காப்புறுதி ஆவணத் தையும், மாறிவரும் மக்களாட்சிப் பண்பையும் மனத்திற்கொண்டு தங்கள் நிலங்களை அரசுடைமை யாக்கிப் பெருமை பெறலாம். இன்பம் கண்ட எவரும் அதனை விட்டுக் கொடுத்துவிட்டு துன்பத்தைப் பகிர்ந்து கொள்ள முன்வரமாட்டார். இது மாந்த இயல்பு! ஆயினும் புதியதோர் குமுகாயத்தைப் படைத்தேயாக வேண்டியிருப்பதால் நிலக்கிழமை முறை அழிந்தேயாகல்

வேண்டும். இன்று இல்லையேல் நாளை அல்லது பல நாள்களுக்குப் பின்னர் சமநிலைக் குமுகாயம் அமைந்தே தீரும். இத்தகைய உண்மையை நிலக்கிழார்களும் உணராமலில்லை. சூழ்நிலையும் மாறி வந்தது.

கி. பி. 19ஆம் நூற்றாண்டில் ஜப்பானிய நிலக்கிழார்களில் பெரும்பாலோர் சாமுராய் குலத்தினராகவே இருந்தனர். ஒருசில இளவரசர்களும், அரசவையில் உறுப்பாண்மை பெற்றோரும் நிலக் கிழார் பலரும் தங்களின் நண்பர்களாகவும், தங்களுக்கு அடங்கு வோராகவும் கொண்டிருந்தனர். பொதுவாகச் சாமுராய்களும், பெருநிலக்கிழார்களும் தங்கள் நிலங்களைத் தாங்களே முன்வந்து அரசுக்குக் கொடுத்து விட்டால் மேலும் பல நல்ல பதவிகளில் அமரலாமெனக் கருதினர். எடுத்துக்காட்டாகச் சாமுராய்கள் மைய ஆட்சியில் பெற்றுள்ள பதவிகளும், செல்வாக்கும் எல்லா ரையும் ஈர்த்தன. நிலக்கிழார்களாய் இருந்துகொண்டு உள்ளூரில் பெருமை அடைவதைவிட நிலத்தை அரசுக்குக் கொடுத்துவிட்டு மைய ஆட்சியில் பெரும் பதவி பெற்று நாடு முழுவதும் அறியும் வண்ணம் பெருமை அடையலாமென இவர்கள் விரும்பினர். அவ்வாறு செய்வதைத் தங்களின் தேசிய ஈகமென்றும் நாட்டுப் பற்றென்றும் கொண்டனர். கொடிவழி வீரர்களாகவும் நிலமானியக் கிழார்களாகவும், மைய ஆட்சியை எதிர்த்தும், தொகுகவாக்களை ஒழித்தும் சிறந்து நின்ற சாமுராய்களே மைய ஆட்சியில் பல பதவிகளில் அமர்ந்து இத்தகைய நிலக்கிழமை உரிமையை ஒழிக்கத் தங்களின் செல்வாக்கைப் பயன் படுத்திய தால் நிலக்கிழமை முறை குருதி சிந்தப் பெருமல் ஒழிக்கப்பட்டு விட்டது.

இச் சமையத்தில் வரலாற்று முகாமை வாய்ந்த ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. மன மாற்றம் பெற்ற வலுமை பொருந்திய கொடிவழி நிலக்கிழார்கள் பலர் கிதோ தகா யொசி (Kido Taka Yoshi) என் பவரின் தலைமையில் ஒரு நீண்ட வேட்பத்தை மேசி முன் படைத் தனர். அதில் சோஷு (Choshu), சத்சுமா (Satsuma), தொசா (Tosa), இஷென் (Hizen), ககா (Kaga) மற்றும் பலரும் கையொப்ப மிட்டனர்.

> 'நாங்கள் வதியும் இம் மண் பேரரசருக்குச் சொந்த மானது. நாங்கள் உண்ணும் உணவு பேரரசரின் குடி களால் பயிரிடப்பட்டது. எனவே, இவற்றை நாங்கள் எவ்வாறு எங்களுடைய தாக்கிக் கொள்ள முடியும்? எனவே, எங்களுடைய நிலங்களையும், ஆள்களையும், உடை மைகளையும் பத்தியோடு பேரரசருக்குப் படைக்கிறோம்.

அவர் இவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறோம். ஏற்றபின், பரிசுக்குரியோருக்குப் பரிசுகளும், தண்டனைக்குரியோருக்குத் தண்டனைகளும் அவரால் வழங்கப்படுவதையும் நாங்கள் மனமுவந்து ஏற்க அணியமாக இருக்கிறோம். பேரரசரின் சட்டங்களால் இத்தகைய நிலக்கிழமை முறையை ஒழிப்பதோ அல்லது மாற்றியமைப்பதோ நிகழ்த்தப் பெறலாம். இப்பணி பேரரசரின் தலையாய பணியாம். இதனை அவர் மிகவும் விரைவாகச் செய்து முடித்தல் வேண்டும். இஃது அவருடைய பணியாளருக்கும், மக்களுக்கும் செய்யப்படும் கடமையாகும்.'

மேற்கண்டபடி அந் நீண்ட வேட்பத்தில் படைக்கப்பட்டிருந்தது. இதனைக் கண்ணுற்ற பேரரசர் அளப்பறியாப் பெருமிதமும், பெருமகிழ்ச்சியும் கொண்டு இதனை அப்படியே அரசுத்தாளில் 5-3-1869-ல் வெளியிட்டார். இதனைப் படித்த பல நிலக்கிழார்கள் மாபெரும் நிலக்கிழார்களே இவ்வாறு மாமன்னருக்குத் தங்கள் உடைமைகளைத் தந்து பெருமை தேடிக் கொண்டதை யறிந்து தாங்களும் அதைப் போலவே தங்களின் நிலங்களைப் படைக்க முன் வந்தனர். மொத்தம் 241 நிலக்கிழார்கள் கூட்டாக வேட்பமொன்றை உருவாக்கி, அதில் தங்களின் சொத்துக்களின் விவரங்களையும் குறிப்பிட்டு மாமன்னரை ஏற்கும்படி வேண்டினர். இவர்களுக்குப் பின் வெகு சிலரே தங்களின் சொத்துக்களை இன்னும் மன்னரிடம் ஒப்படைக்காம லிருந்தனரெனலாம். அசுகி (Azuki) எனும் இளவரசர் தனது வேட்பத்தில் மூன்று வகைக் கொடிவழி உரிமைகளைத் துறப்பதாகவும், அவற்றை மன்னர் ஏற்று மற்றவரிடத்தும் செயல் படுத்த வேண்டு மென்றும் வேண்டினர்.

(1) நிலக்கிழார்கள் வைத்துள்ள நிலங்கள் யாவும் அரசரிடமிருந்தே பெற்றவை யாகும். அவற்றை இன்று ஒன்றுபட்ட அரசியல் சட்டத்தால் மக்களைக் கொண்டு இயக்கப்படும் நாட்டின் நன்மைக்காக அவர்கள் அரசரிடமே திருப்பித் தரல்வேண்டும்.

(2) அவர்கள் இவ்வாறு சொத்துக்களைத் துறப்பதோடு 'பட்டங்களை'யும் துறக்க வேண்டும். எல்லாருக்கும் பொதுவாக 'மதிப்புக்குரிய' என்ற அடைமொழி கொடுத்தால் போதும்.

(3) அரச பதவியிலுள்ள படைக் குடும்பத்தினரும், மற்றும் பல குலத்தினரும் தங்களின் குலத்தைக் குறிக்கும் 'பட்டங்களை'யும் துறந்தாக வேண்டும். இனிமேல் அவர்கள் 'பேரரசரின்

அலுவலர்கள்' என்றே அழைக்கப்பட வேண்டும். இனித் தாங்க வீட்டும் சொத்துக்களைத் தவிர மற்ற கொடிவழிச் சொத்துக்களை அவர்கள் வைத்துக்கொள்ளக் கூடாது.

இத்தகைய வேட்பங்களை ஏற்றுக் கொண்டு, மாமன்னர் 7—8—1869-ல் பல அறிக்கைகளை வெளியிட்டார். அவற்றிற் கிணங்க பல நிலங்கள் அரசுடைமையாயின. அரசின் கருவூலம் நிரம்பியது; பட்டங்கள் ஒழிக்கப்பட்டன. பழைய அரசவைக் கிழார்களுக் கிருந்த குலப் பட்டங்களும், மற்றவையும் மறைந்தன; அவர்கள் யாவரும் 'மதிப்புக் குரிய' என்னும் உரிச்சொல்லுடன் அழைக்கப்பட்டனர். இவ்வாறு யாதொரு இன்னலு மின்றி யொரித்தொமொவின் காலத்தில் ஓகோ வென்று உச்சநிலை அடைந்த நிலக்கிழமை முறை 1871-ல் பேரரசரின் தூவல் முனையால் வேரோடு வெட்டிச் சாய்க்கப்பட்டது. பெருநிலக் கிழார்கள் மாநில ஆளுநர்களாக அமர்த்தப்பட்டனர். இள வரசர்களும் மாநில ஆளுநர்களானார்கள். பலர் அரசிடமிருந்து இழப்பீடும் ஓய்வு ஊதியமும் பெற்றனர். நாளடைவில் ஆளுநர்களாக அமர்த்தப்பட்டவர்கள் திறமையற்றுக் காணப் பட்டதால் அவர்களுக்கும் ஓய்வுக்கால ஊதியம் வழங்கப்பட்டு அவர்களின் இடங்கள் திறமை வாய்ந்தவர்களுக்கு வழங்கப் பட்டன. இனி, ஜப்பான் நாட்டின் எத்தகைய பதவியும், பணியும் தகுதி யுடையோருக் கன்றி குலத்தை அடிப்படையாக வைத்து கொடுக்கும் வழக்கம் நிறுத்தப்பட்டது.

நிலக்கிழார்கள் தங்கள் நிலங்களைப் பேரரசரிடம் படைத்து விட்ட பின்பு, அவற்றிற் கேற்றாற் போலத் தங்களுக்கு உதவித் தொகையையோ, பதவிகளையோ எதிர்பார்த்தார்கள். ஒவ்வொரு நிலக்கிழாருக்கும் அவ்வாறே பதவி அல்லது உதவித் தொகை வழங்கப்பட்டது. இம் முறை ஒழிந்ததற்குப் பிறகு பேரரசர் படை மானிய முறையை ஒழித்து நிலையான தேசியப் படையை ஏற்படுத்தினார். இதில் பெரும்பாலான பதவிகளை சாமுராய்கள் பெற்றார்கள். இவ்வாறு உதவித் தொகைகள் வழங்குவதற்கும், படைகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும், புதிய முறையில் பணி யாற்றும் அலுவலர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும், மற்றும் பல செலவுகளுக்குமாக அரசின் செலவு உயர்ந்துகொண்டே சென்றது. இதனால் அரசுக்கு 16½ கோடி 'டாலர்' கடன், ஏற்பட்டது. நிலக்கிழார்களுக்கு உடனடியாக இழப்பீடுகளையும் உதவித் தொகைகளையும் ஒரே முறையில் கொடுக்க முடியாததால் அரசு அவர்களுக்கு ஐந்து முதல் பதினான்கு ஆண்டு வரைக்குள்ளான உறுதிமொழி ஆவணங்களை வழங்கித் தவணை முறையில் தொகைகளைப் பெற்றுக் கொள்ளும்படி செய்தது.

1873ஆம் ஆண்டும் 1875ஆம் ஆண்டும் வெளியிடப்பட்ட இரு சட்டங்கள் கடைசியாக நிலக்கிழமையை அழித்தன. இழப்பீட்டுத் தொகைகளேயும் உதவித் தொகைகளேயும் மொத்தமாகப் பெற்றுக் கொண்ட பல சாமுராய்க் குடும்பத்தினர் அவற்றைத் தங்கள் போலி வாழ்க்கையில் கணக்கில்லாமல் செலவிட்டு விட்டு இல்லாமையிலும் ஏழ்மையிலும் மூழ்க லாயினர். இவர்களுக்கும் முன்னரே குமுகாயத்தின் அடித்தளத்திலுள்ள பலருக்கும் நன்மை பயக்கும் வகையில் பல குமுக நலச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. சாமுராய்களும், நிலக்கிழார்களும் நாட்டுப் பற்ருல் தங்களின் நிலங்களே அரசனிடம் கொடுத்து விட்டார்களென்று கூற முடியாது. அவர்கள் உழைக்காமலே ஊதியம் பெற்று வாழ நினேத்து அரசனிடத்தில் தங்கள் நிலங்களேக் கொடுத்து விட்டு அவற்றிற் கீடாகப் பெருந் தொகைகளேயும் பெரும் பதவிகளேயும் பெற நினேத்தார்கள். அவ்வாறு பெற்ற தொகையைத் தங்களின் உயர்வான வாழ்க்கையில் வரம்பின்றிச் செலவிட்டுப் பஞ்சையாகி விட்டனர். எனவே இவர்கள் நாட்டுப்பற்ருல் நிலங்களேத் துறந்து எல்லாரையும் போலத் தங்களே எளிய வாழ்க்கைக்கு அணியமாக்கிக் கொண்டன ரென்று கூறுதல் பொருந்தாது. பொதுவாக ஜப்பானில் நிலக்கிழமை ஒழிந்ததால் ஆங்காங்கே தனித்தனியாக வைத்திருந்த நிலமானியக்கிழார்களின் படைக்குப் பதில் தேசியப் படையொன்று செருமானிய முறையில் அமைக்கப் பட்டு நாட்டின் பொதுப்படையாகவும், நிலேயான படையாகவும் செயல்பட்டது. நிலக்கிழார்களின் பலதரப்பட்ட சட்டதிட்டங்கள் ஒழிக்கப்பட்டு நாடுமுழுவதற்கும் பொதுவான தேசியங் சட்டங்கள் இயற்றப்பட்டன. நிலக்கிழார்கள் தங்கள் தங்கள் எல்லேக்குட்பட்ட மக்கள் மீது தங்கள் ஆட்சியதிகாரங்களேச் செலுத்திய முறை மறைந்து பேரரசரால் அமர்த்தப்பட்ட அலுவலர்கள் நாடு முழுவதற்கும் பொதுவான ஒரே ஆட்சி யதிகாரங்களேச் செலுத்திஞர்கள். கிழார்களுக்கும் படைகளுக்குமிடையேயிருந்த பட்டங்கள் காற்றில் பறந்தன. தகுதியுடையோர்க்குத் தகுந்தபடி பதவிகள் வழங்கப்பட்டதால் கொடிவழிப் பதவி யுரிமைகள் மறைந்தன.

நிலக்கிழமை முறையால் எவ்வாறு ஜப்பானில் முன்னிலே மீட்சிக்குப் பின் ஏற்படுத்தப்பட்ட மைய ஆட்சி உருப்படியான— நிலேயான சீர்த்திருத்தங்களேச் செய்ய முடியாமல் வலுவற்றுக் காணப்பட்ட தென்பதைக் கண்டோம். அத்தகைய நிலக்கிழமை நல்வினேப் பயஞய் 1871-ல் தானே ஒழிந்து விட்டதால் இனி ஜப்பானிய வரலாற்றில் எத்தகைய புதிய சீர்த்திருத்தத்தையும், அரசியல், குமுக, பொருளியல் மாற்றத்தையும் எளிதில் ஏற்படுத்தக்

கூடிய சூழ்நிலையைக் காண்கிறோம். கி. பி. 1872-ல் முதன் முறையாக யோகோகாமாவுக்கும், தோக்கியோவுக்குமிடையில் இருப்புப் பாதை போடப்பட்டது. ஐரோப்பியரின் காலக் குறிப்பேட்டு முறை கி. பி. 1873ஆம் ஆண்டிலிருந்து ஜப்பானில் கையாளப்பட்டது. இதைத் தவிர ஜப்பானிய முதல் தெய்விகப் பேரரசர் சிம்மு தென்னே (கி. மு. 660—585) அரசரான கி. மு. 660லிருந்து கி. பி. 1873 வரையிலுள்ள 2533 ஆண்டுகளைக் கொண்டும் தேசிய முறையில் காலக்குறிப்பு கணக்கிடப்பட்டது. இவற்றைத் தவிர நாட்டில் ஒரு புதிய ஆண்டுமானத்தைத் தொடங்கிய முத்சுஹிதோ அரசேற்ற கி. பி. 1860ஆம் ஆண்டை மேசி ஆண்டுமானத்தின் தொடக்கக் காலமென்று குறிப்பிட்டு மேசி ஆண்டுமான ஆண்டுகளாகவும் புதுமையர் கணக்கிட்டனர்.

### 1889ஆம் ஆண்டு அரசியல் சட்டம்

கவுண்டு இதோஹிரோ புமி (Count ito hiro Bumi) 1881-ல் ஐரோப்பாவுக்குச் சென்று, அக் கண்டத்திலுள்ள பன்னாட்டு அரசியல் சட்டங்களைப் பயின்றார். இரண்டாண்டுகளுக்குப் பிறகு ஜப்பானுக்குத் திரும்பிய இவர் செருமானிய அரசியல் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஜப்பானுக்கு ஓர் அரசியல் சட்டத்தை வகுக்கத் திட்டமிட்டார். ஜப்பானில் கி. பி. 1884-ல் ஐந்து தரமான கிழார்களைக் கொண்ட ஒரு மேலவை அமைக்கப்பட்டது. 1885-ல் பத்து அமைச்சர்களைக் கொண்ட ஓர் அரசியலமைப்பவை அமைக்கப்பட்டது. இவ் வமைச்சரவையில் கவுண்டு இதோஹிரோ புமிதான் முதலமைச்ச ராஞர். இவரே அரசியல் சட்டப்படி அமைந்த ஜப்பானிய அமைச்ச ரவையில் முதன் முதலமைச்சர் பதவி ஏற்றவராவார். இந்த அமைச்சரவை நேரடியாகப் பேரரசருக்குத் தான் பொறுப்பாளி யானதே யொழிய பொது மக்களுக்கோ நாடாளும் மன்றத்திற்கோ பொறுப்பாளி அன்று. 1884-ல் ஏற்பட்ட கலகங்களின் விளைவாக அரசியலமைப்பையும் அதிகாரத் துறைகளையும் வலுப்படுத்த வேண்டிய அவசியம் அரசியலுக்கு ஏற்பட்டது. இதனுல் மேற்கு ஜப்பானில் அதிகாரத் துறைகளைக் கைப்பற்றி ஆளுமை செலுத்தி வந்த நான்கு சாமுராய்க் குலத்தவர்களைக் காட்டிலும் அதிவல்லமை படைத்த பொதுப்பணித்துறையொன்றை அமைக்க வேண்டிய தாயிற்று. 1887-ல் பேரரசருக்குப் படைத் துறையில் அறிவுரை கூறுவதற்காக உயர்தரப் போரவை (Supreme War Council) ஏற்படுத்தப்பட்டது. 1888-ல் அரச பேரவை (Privy Council) ஒன்றும் ஏற்படுத்தப் பட்டது. இப் பேரவைக்கு கவுண்டு இதோஹிரோ புமி தலைவ ராஞர். இப் பேரவை ஜப்பானுக்கு ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டது. இதற்கு எதிராக

நாட்டில் குழப்பங்கள் ஏற்படா வண்ணம் சக்தி வாய்ந்த பாது காவற் படையொன்றும் ஏற்படுத்தப் பட்டது. இதன் அமைப்பைப் பேரரசர் தனது பேராணையின் மூலம் உடனடியாக ஏற்படுத்தினர். புதிய அரசியல் சட்டம் உருவாவதை எதிர்த்தும், அல்லது வேறு காரணியத்திற்காகவும் எவர் கலகம் செய்தாலும், அல்லது கலகத்திற்கு உடந்தையாக இருந்தாலும் அவர்களைத் தலைநகருக்கு ஏழரைக்கல் தொலைவிற்கப்பால் கடத்தி விடும் அதிகாரத்தை இப் பாதுகாவற் படை பெற்றது. ஓராண்டுக்குப் பிறகு கவுண்டு இதோஷிரோபுமி அவர்களால் ஜப்பானிய அரசிய லமைப்புச் சட்டம் எழுதி முடிக்கப்பட்டு மன்னர் முன் வைக்கப்பட்டது.

1889ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 11ஆம் நாள் மாமன்னர் சில முகாமை அதிகாரிகளுக்கு மட்டும் இப் புதிய அரசியல் சட்டத்தைப் படித்துக் காட்டினர். இதனைத் தாளிகை யாளருக்கும், பொது மக்களுக்கும் வெளியிட வில்லை. ஏனெனில் இச் சட்டத் தொகுப்பு மக்களால் மக்களுக்காகச் செய்யப்பட்ட தன்று. இது பேரரசர் தம் அருளால் மக்களுக்கு வழங்கும் வரமாகு மென்றும் ஜப்பானியப் பேரரசு 2549 ஆண்டுகளாகத் தொடர்ந்து தெய்விகப் பேரரசர்களால் ஆளப்பட்டு வருவதால், அத் தெய்வி கத் தன்மையைத் தானும் நிலைபெறச் செய்து அதன் தூய்மை கெடாது அதனை இனி வரும் தெய்விகப் பேரரசர்களுக்கு விட்டுச் செல்வதே தனது கடமையாகுமென மேசி மன்னர் கூறினர். தானோ, தனக்குப் பின்வரும் பேரரசர்களோ இவ் வரசியல் சட்டத்தினின்று வழுவாமல் அதன்படியே ஆட்சி நடத்துவோம் என்றார். இவ் வரசியலமைப்புச் சட்டத்தில் எல்லா அதிகாரங்களும் மன்னரிடமிருந்தே பிறக்கின்றன வென்று கூறப்பட்டபோதிலும் இதனை யடிப்படையாகக் கொண்டு, சில குறிப்பிட்ட ஆள்களைக் கொண்ட குழு ஆட்சியே (Oligarchy) நடந்த தெனலாம்.

### அரசியல் சட்டத்தின் கூறுபாடுகள்

இவ் வரசியல் சட்டத்தில் மொத்தம் 111 கூறுபாடுகள் (Articles) இருந்தன. அக் கூறுபாடுகளைப் பொருளை யொட்டி ஏழு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. பேரரசரைப் பற்றியவை. 2. குடி மக்களின் கடமைகளையும், உரிமைகளையும் பற்றியவை. 3. நாடாளும் மன்றங்களையும், பேரரசர் அவையையும் பற்றியவை. 4. அமைச்சரவையைப் பற்றியவை. 5. அறங்கூறவையங்களைப் பற்றியவை. 6. பொக்கசம் பற்றியவை. 7. துணைவிதிகளைப் பற்றியவை. இவ் வரசியலமைப்புச் சட்டம் மேசி ஆண்டு மானத்தின் 23ஆம் ஆண்டிலிருந்து (1890) நடைமுறைக்கு வந்தது.

1. பேரரசர்

ஜப்பான் நாடு முழுவதும் வாழையடி வாழையாக நெறிமுறை தவருது வரும் புனிதப் பேரரசரே (Mikado) ஒரே தலைவராவார். நாட்டின் எல்லா அதிகாரங்களும் அவரிடமே இருக்கின்றன. நாட்டிலுள்ள தரைப் படைகளுக்கும், நாவாய்ப் படைகளுக்கும் அவரே தலைவராவார். அவருடைய ஆணையின் பேரில்தான் சண்டையோ, அமைதியோ, உடன்படிக்கைகளோ செய்தல் வேண்டும். எல்லா அதிகாரிகளையும் நாடாளும் மன்றத்தைக் கலந்து அவரே அமர்த்துவார். சட்டங்களை ஆக்கவோ நீக்கவோ அவருக்கு உரிமையுண்டு. அவருடைய இசைவின்றி எத்தகைய வரைவும் சட்டமாக வரமுடியாது. அவருக்குச் சட்டங்களைத் தள்ளும் உரிமையும், நிறுத்தும் உரிமையும் பேராணைகளையிடும் உரிமையும் உண்டு. அரசியல் சட்டத்தின் எப் பகுதியையும் திருத்தவோ, ஒதுக்கவோ, நிறுத்தவோ அவருக்கு அதிகாரமுண்டு. இச் சமையங்களில் தனது பேரவையையும் பாராளுமன்றத்தையும் விரும்பினால் கலந்து பேசலாம். இதனால் பேரரசர் கட்டுக்கடங்காத ஒரு வல்லதிகாரியாகவோ, கொடுங்கோலராகவோ மாறிவிடுவாரென்று கொள்ளுதல் கூடாது. ஏனென்றால் அவர் கதிரவனின் வழி வந்த புனிதப் பேரரசராவார். அவரின் அருளுள்ளமும் மக்களின் அன்புள்ளமும் ஒன்றிணைந்து நிற்பதால் அப்புனிதத் தன்மை அறுபடாது நிலைத்து என்றும் மக்களுக்கு இன்பத்தையே பயக்கும்.

இங்கிலாந்து நாட்டு மன்னர் எல்லா அதிகாரங்களையும் தன்னகத்தே பெற்றிருந்தாலும் அவற்றைச் செயல்படுத்தும் உரிமை நேரடியாக அவர் கையிலில்லை; அஃது நாடாளும் மன்றத்திடமிருக்கிறது. ஆனால், ஜப்பானியப் பேரரசருக்கு எல்லா அதிகாரங்களையும் தானே நேரடியாகச் செயல்படுத்தும் உரிமையும் செயல்படுத்தாது விடும் உரிமையும், அல்லது மாருகச் செயல்படும் உரிமையும், தாழ்த்திச் செயல்படும் உரிமையும் உண்டு. இங்கிலாந்து நாட்டு மன்னர் 'ஆண்டவனருளால்' நாட்டை ஆள்கிறார். ஆனால், ஜப்பானியப் பேரரசர், 'ஆண்டவன் திருவுருவாய்' நாட்டை ஆள்கிறார். இவ்வாறு 1889-ல் வகுக்கப்பட்ட ஜப்பானிய அரசியலமைப்புச் சட்டம் ஜப்பானியப் பேரரசருக்குத் 'தன்னேரில்லா இறை மாட்சி' (Supreme Sovereign Power) அளித்தது. ஆயினும் காலப் போக்கில் அவர் 'முதியோர் குழு' (Genro) என்னும் ஒரு புதிய குழு ஆட்சியின் சத்திக்கு நெகிழ்ந்து கொடுத்ததால் இவ் வரசியலமைப்புச் சட்டம் அக் குழுவின் ஆட்சிக்கு இரையாகி விட்டது. அத்தோடு, வாய்ப்பு வசத்தால் நாட்டில் முகாமை பெற்றுவிட்ட படைத்தலைவர்களின்

பேரதிகாரமும், அரசப் பேரவையில் நுழைந்த சிலரின் பேராசையும், மாமன்னரின் மாட்சிமையையும், அரசியல் சட்டத்தின் அணியையும் அலங்கோலப்படுத்திவிட்டன.

### 2. குடிமக்களின் கடமைகளும், உரிமைகளும்

ஒவ்வொரு ஜப்பானியனும் தன் தகுதிக் கேற்ப எத்தகைய அரசுப் பணியிலும் அமரலாம். ஒவ்வொரு குடிமகனுக்கும் பேச்சுரிமை, ஒப்போலை (Vote) யுரிமை, எழுத்துரிமை, கூடிப்பேசும் உரிமை, சமய வுரிமை, நாட்டின் எப் பகுதியிலும் வாழும் உரிமை முதலிய அடிப்படை உரிமைகள் உண்டு. எவருடைய வீட்டையும் சட்டத்திற்குப் புறம்பாகச் சோதனையிடுவதில்லை; எவரையும் சிறைப் பிடித்தலோ, தண்டித்தலோ இல்லை. அவ்வாறு செய்யும் முன் சட்டப்படி உசாவல் நடத்தல் வேண்டும். அவ் வுசாவல் நாட்டின் நயன்மை மன்றங்களில் சட்டப்படி அமர்த்தப்பட்ட நடுவர்களால் நடத்தப்பட வேண்டும். அவர்களின் சொத்தைப் பறிக்கவோ, அழிக்கவோ, எல்லை மீறி நடக்கவோ எவருக்கும் உரிமை யில்லை. அவ்வாறு செய்வோரை எதிர்த்து நயன்மை மன்றத்தில் வேட்புச் செய்து கொள்ளும் உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு. இத்தகைய குடிமக்களின் உரிமைகளைக் கூர்ந்து நோக்கும் போது இங்கிலாந்தில் ஏற்பட்ட மாபெரும் புரட்சிக்குப் பின் கி. பி. 1689-ல் நாடாளும் மன்றம் நிறைவேற்றிய 'உரிமைகள் வரைவை' (Bill of rights)ப் போன்று இருக்கிறது. ஆயினும் இவ் வுரிமைகள் யாவும் நாட்டின் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டவையாகுமென இவ் வரசியல் சட்டம் கூறுகிறது. குடிமக்களின் உரிமைகளைக் கண்ட நாம் அவர்களின் கடமைகளைப் பற்றி இச் சட்டம் என்ன கூறுகிறது என்பதை அறிய வேண்டாமா? ஒவ்வொரு குடிமகனும் நாட்டுக்கு வரி செலுத்தும் கடமையையும் படைத்தொண்டு செய்யும் கடமையையும் உடையவனாக இருக்கிறான். இவ் விரு கடமைகளையும் அவனிடமிருந்து பெறச் சட்டம் கூறும் வழிகளையே பின்பற்ற வேண்டுமேயொழிய எந்த அரசியல் அலுவலரும் தம் இச்சைபோல் அவனைக் கட்டாயப்படுத்தக் கூடாது.

### 3. நாடாளும் மன்றம் (Diet)

இஃது கிழான் அவை (House of Peers), நிகராளரவை (House of Representatives) என ஈரவைகளைக் கொண்டதாகும். கிழான் அவையிலுள்ள உறுப்பினர்களில் பெரும்பாலார் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே இருப்பவர்கள். இரண்டு உயர்தரக் கிழார்களும், மூன்று கீழ்நிலைக் கிழார்களின் நிகராளிகளும், அதிகவரி செலுத்துவோரின் நிகராளிகளும் பேரரசர் பணியிலிருப்

போரின் நிகராளிகளும் இதிலிடம் பெற்றனர். இவர்களின் உயர் நிலக்கிழார்களும், கீழ்நிலைக் கிழார்களின் நிகராளிகளும் பேரரசர் பணியிலிருப்போரின் நிகராளிகளும் வாணுள் உறுப்பினராயினர். மற்ற இரு பிரிவினர் ஏழு ஆண்டுகள் மேலவையில் உறுப்பினராக இருப்பர். இரண்டாவது அவையிலுள்ள அனைவரும் தேர்ந்தெடுக் கப்பட்டவர்களாவர். அவர்களை தேர்ந்தெடுக்கும் உரிமை சொத்துடையார்க்கே இருந்தது. நாடாளும் மன்றத்தை ஆண்டு தோறும் அரசர் கூட்ட வேண்டும். அவ்வாறு கூடுகின்ற நாடாளும் மன்றம் குறைந்தது மூன்று மாதக் காலம் நடத்தல் வேண்டும். நெருக்கடிக் காலங்களில் இம் மன்றங்கள் திடீரெனக் கூட்டப் படவும் கலைக்கவும் படலாம். நாடாளும் மன்றத்தின் இசைவின்றி எத்தகைய சட்டத்தையும் ஆக்க முடியாது. எத்தகைய புதிய வரியையும் நாடாளும் மன்றத்தின் இசைவின்றி விதிக்கக் கூடாது. ஆண்டின் நடைமுறைக் கணக்குகளையும் வரவு செலவுத் திட்டத்தையும் நாடாளும் மன்றத்தின் முன் வைத்து, கலந்து, அதன் இசைவுபெற்ற பின்பே அவற்றை நடை முறைக்குக் கொண்டு வரவேண்டும். நாடாளும் மன்றத்தின் நடை முறைச் செலவுகள், பேரரசரின் அரண்மனைச் செலவுகளைவிடக் குறைந்தே இருக்க வேண்டும். புதிய ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை நாடாளும் மன்றம் அனுமதிக்க மறுத்தால் நடைமுறை ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தையே வருகிற ஆண்டிலும் பின்பற்றலாம். நாடாளும் மன்றம் அமைச்சர்கள் மீது குற்றம்சாட்ட வேண்டு மாணுல் பேரரசரின் இசைவுபெற்றே செய்ய வேண்டும். பேரரசருக்கு நாடாளும் மன்றத்தின் எத்தகைய வரைவையும் மறுக்கும் தள்ளுரிமையுண்டு (Veto). இங்கு ஜப்பானிய நாடாளும் மன்றத்தின் அதிகாரங்களையும் பிரிட்டானிய நாடாளும் மன்றத்தின் அதிகாரங்களையும் ஒப்பிட்டு நோக்கிஞல் பிரிட்டானிய நாடாளும் மன்றத்திற்கு பொக்கச வகையில் முழு அதிகார மிருப்பதைக் காணலாம். பிரிட்டானிய அமைச்சரவை நாடாளும் மன்றத்திற்குக் கட்டுப்பட்டது. ஆனுல், ஜப்பானிய நாடாளும் மன்றம் அதன் அமைச்சரவையைக் கட்டுப்படுத்த முடியாது. ஆயினும் அமைச்சரவை முழுமையாக நாடாளும் மன்றத்தைத் தள்ளிவிட்டு எதையும் செய்ய முடியாது. பேரரசர் தனக்கு அறிவுரை கூறும் பொருட்டு அரசப் பேரவை யொன்றையும் பெற்றிருந்தார்.

### 4. அமைச்சரவையும், அரசப்பேரவையும் (Cabinet and Privy Council)

அரசியலமைப்புச் சட்டப்படி அமைச்சரவையும் (Cabinet) அரசப் பேரவையும் (Privy Council) அமைக்கப்பட்டன. அமைச்சரவையை நடத்திச் செல்லத் தலைமையமைச்சர் ஒருவர்

இருப்பார். இவ்வமைச்சரவை அரசியல் வினைகளை நடத்திச் செல்லும். அமைச்சர்களைப் பேரரசரே அமர்த்துவதால் அவர்கள் நாடாளும் மன்றத்திற்குக் கட்டுப்பட்டவரல்லர். அரசப் பேரவை என்பது அரசின் கொள்கைகளை வகுத்தளிக்கவும், ஆய்வு செய்யவும், தக்க சமையங்களில் அறிவுரை கூறவும், அரசருக்காக அரசரால் அமர்த்தப்படும் ஓர் அவையாகும். இந்த அவை அரசருக்கு அறிவுரை கூறலாமேயொழிய, அரசரைக் கட்டுப்படுத்த இதற்கு உரிமையில்லை. பொதுவாக மக்களாட்சி மலரும் நாடுகளில் அமைச்சரவையின் கொள்கைகளையும், நாட்டை நடத்திச் செல்லும் கோட்பாடுகளையும் வகுத்தளிப்பது நாடாளும் மன்றமாகும். அந்த நாடாளும் மன்றம் பொதுமக்களின் குரலை எதிரொலிக்கும் உறுப்பாகும். ஆனால், அவ் வரசியல் சட்டப்படி அரசப் பேரவையும் அமைச்சரவையுமே கோட்பாட்டை உறுதியாக்கும் உறுப்புக்களாக அமைந்திருக்கின்றன.

## மூத்தோரவை (Genro)

ஜப்பானியக் குமுகாய அடிப்படையில் மூத்தோர்களைக் கலந்து எவ் வினைப்பாட்டையும் செய்யும் மரபுமுறை அரசியலில் புகுந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டு, அரசியல் சட்டத்தில் தீட்டப் படாத, ஒரு தனியார் குழு வாட்சியும் ஏற்பட்டது. அதற்கு மூத்த அரசியலறிஞர்களின் அவை' (Genro) என்று பெயர். இதில் பங்கேற்றவர்கள் யாவரும் முன்னிலை மீட்சிப் போராட்டத்தில் அரசியலில் தீவிரமாக ஈடுபட்ட சாமுராய்க் குலத்தவர்களும், மற்றும் செல்வாக்குள்ள குடும்பத்தாருமாவர். சாமுராய்க் குலங் களில் மிகச் சிறந்ததெனக் கருதப்பட்ட சத்சுமா சோசு ஆகிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் ஆவர். ஏறத்தாழ முப்பதாண்டுக் காலம் ஜப்பானிய அரசியலை ஆட்டிப் படைத்தனர். இவ் வவை அமைச்சர்களையும் அரசப் பேரவை உறுப்பினர்களையும் நடத்திச் சென்றது. படைவீரர்களான எமகதா (Yamagata) ஓயாமா (Oyama) சையோனிசி முதலியோர் இவ் வவையின் மிகச் சிறந்த தலைவர்கள் எனலாம். 1930-ல் சையோனிசி இறந்த பிறகு இம் மூத்தோரவை மறைந்த தெனலாம்.

ஒவ்வோர் அமைச்சரும் தனக்கு ஒதுக்கப்பட்ட துறையைக் கண்காணிக்க வேண்டும். அமைச்சர்களுக்குள் எத்தகைய உயர்வு தாழ்வும் கிடையாதென்பது அரசியல் சட்டத்தின் கருத்தாயினும் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலைகளும், சீனப் போரும் தரைப்படை, நாவாய்ப்படை ஆகியவற்றின் செல்வாக்கை உயர்த்தி விட்டன. போரமைச்சரும், நாவாய் அமைச்சரும் மற்ற அமைச்சர்களைவிடப் பேரதிகாரங்களைப் பெற்றுவிட்டார்கள். இவ் வீரமைச்சர்களும்,

தலைமையமைச்சரை மறுத்துவிட்டுப் பேரரசரிடமே அறிவுரை கேட்கலாயினர். நாளடைவில் படைத்துறை நாடாளும் மன்றத்திற்கும், அமைச்சரவைக்கும், பொது அதிகாரங்களுக்கும் கட்டுப்படாமல் தனித்தியங்கத் தொடங்கியது. இதனால் பண்டைய பாசறை ஆட்சியைப் போல் மீண்டுமோர் இரட்டையாட்சி ஏற்படுமோவெனச் சிலர் அஞ்சினர். இவையனைத்திற்கும் மேலாக மூத்தோரவை இப்படைத் துறையைக் கூட ஆட்டிப் படைத்ததென்றால், அஃது அக்காலத்தில் பெற்றிருந்த செல்வாக்கை ஊகித்தறியலாம்.

5. அறங்கூறவையங்கள்

இச் சட்டப்படி அமைந்த அறங்கூறவையங்கள் இன்று நாம் காணும் பேரதிகாரம் படைத்துத் தனித்தியங்கும் இறை மாட்சியுடைய நயன்மை மன்றங்களைப் போல் இல்லை. ஆனால், அவையாவும் ஆள்வினைத் துறையின் ஒரு கிளையாகவே செயல்பட்டன. நடுவர்களுக்கு நயன்மையைத் தங்கள் விருப்பப்படி வெளியிடும் உரிமை வழங்கப்படவில்லை. தீர்ப்புகளின் மேல், மேல் முறையிட்டு வழக்குகளைத் தொடரவும் தீர்ப்புகளை ஆய்ந்து வெளியிடவும் வழிகள் இல்லை. மேலும் நயன்மை மன்றங்கள் அரசியல் சட்டத்தின் புனிதத் தன்மை கெடாமல் பாதுகாக்கும் காப்பாளர் பொறுப்பிலும் இல்லை. அரசியலதிகாரிகளை உசாவதுவதற்காக ஆள்வினை நயன்மை மன்றங்கள் தனியே அமைக்கப்பட்டு ஆள்வினைத் துறையின் ஒரு கிளையாகச் செயல்பட்டது. மேலை நாடுகளைப் பின்பற்றி நாடுமுழுவதும் ஒரே மாதிரியான சட்டங்கள் நடைமுறைக்கு வர பொதுச் (Civil) சட்டங்கள் தொகுக்கப்பட்டன. செருமனியிலிருப்பது போன்ற வணிகவியல் சட்டங்களும், ஃபிரான்சில் இருப்பது போன்ற குற்றவியல் சட்டங்களும் தொகுக்கப்பட்டன. இச் சட்டத் தொகுப்புகள் யாவும் 1790ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருவதற்குப் பேரரசர் இசைவளித்தார். ஆயினும் பொதுச் சட்டங்கள் 1892ஆம் ஆண்டுக்குப்பின்னும், வணிகவியல் சட்டங்கள் 1899ஆம் ஆண்டுக்குப் பின்னும் நடைமுறைக்கு வந்தன.

பொக்கசம் (நிதி)

பொக்கச முறையை ஒழுங்கு படுத்தி வகை செய்வதற்கான பல விதி முறைகள் இவ்வரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றின்படி நாணய முறை முழுதுமாக மாற்றப்பட்டது. நிலக்கிழார்களாயிருந்தவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நாணயங்களை வெளியிட்டு வந்ததால் நாட்டில் பலவகை நாணய

முறைகள் புழக்கத்திலிருந்தன. ஆனால் மேசி ஆண்டுமானத்தில் நாணயங்கள் தாள் பணங்கள் யாவும் தேசிய மயமாக்கப்பட்டு மன்னரின் தங்கச்சாலையில் அச்சிடப்பட்டன. வெள்ளி தங்க நாணயங்களும் அச்சிடப்பட்டன. பொக்கச நிலைமையைக் கட்டுப்படுத்தவும், வரவு-செலவுத் திட்டத்தை ஆராயவும், தேசியப் பொதுக் கடனைத் தீர்க்கவும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவும் பொக்கச வமைச்சருக்கு உரிமையுண்டு. முன்னரே நாம் குறிப்பிட்டுள்ளது போல அடுத்த ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தின் மீது ஆய்ந்து இதற்கு இசைவளிக்க நாடாளும் மன்றம் மறுத்து விட்டால் நடைமுறையிலுள்ள வரவு செலவு திட்டத்தையே அடுத்த ஆண்டிலும் பின்பற்றலாமென இவ் வரசியல் சட்டம் குறிப்பிடுகிறது.

மேலவையில் மொத்த உறுப்பினர்கள் 120 பேராவர்; கீழவையில் 363 பேர்கள். ஆண்டொன்றுக்கு ஒரு 'ஸ்டெர்லிங்' பவுன் வரி செலுத்துவோரும் 25 அகவைக்கு மேற்பட்டோரும் ஒப்போலையாளர்கள். 1890-ல் ஜப்பானின் மக்கள் தொகை 4½ கோடியாகும். இதில் ஒப்போலையரின் தொகை எட்டிலக்கமாகும்.

கி. பி. 1889-ல் ஏற்பட்ட இவ்வரசியல் சட்டம் 58 ஆண்டுகள் நடைமுறையிலிருந்தது. கி. பி. 1947-ல் மீண்டும் புதிய அரசியல் சட்டம் ஏற்படுத்தப்படும் வரையில் இச் சட்டத்தில் எவ்வகைத் திருத்தமும் ஏற்படவில்லை. இவ்வாறு ஜப்பான் ஓர் அரசியல் சட்டத்தை வகுத்து, அதன்படி நாட்டை நடத்த முற்பட்டதால் அது புதிய நாடுகளில் ஒன்றாகக் கருதப்படும் நிலைக்கு உயர்த்தப் பட்டது. இச்சட்டத்தைக் கூர்ந்து நோக்கும்போது மன்னருக்குத் தடையில்லாப் பேரதிகாரத்தைக் கொடுப்பதாகவோ மக்களின் குரலை எதிரொலிப்பதாகவோ காணப்படவில்லை. கிழார்களும் அமைச்சர்களும், மூத்தோரவையினர் ஆகியோரும் நாட்டை நடத்திச் சென்றனர். ஆகவே இச் சட்டம் மக்களாட்சியையோ அல்லது மன்னராட்சியையோ ஏற்படுத்தாமல் ஒரு குறிப்பிட்ட குழுவாட்சியையே ஏற்படுத்தியது. மன்னருக்குக் கோன்மையை யும் தடையில்லா அதிகாரங்களையும் இச் சட்டம் வழங்கிய போதிலும் அதிகாரத் துறையைக் கைப்பற்றி நாட்டை ஆட்டிப் படைத்தவர்கள் அவரது பணித்துறை ஆட்சியாளர்களே ஆவர். இதனால் இவ்வாட்சி தனிச் செல்வாக்குடையாருக்கே பயனளித்தது. பெயரளவுக்கு மக்களாட்சியின் தன்மைகளான அடிப்படை யுரிமைகள், ஒப்போலையுரிமை, தற்காப்புரிமை முதலியன இச் சட்டத்தால் வழங்கப்பட்டபோதிலும் கிழார்கள் அவையும், அரசப் பேரவையும் அவ்வுரிமைகளைச் செல்லுபடி

யாகாமல் தங்களின் அதிகாரத்துக்குள் கரையும்படி செய்து விட்டன. அதிகாரப் பிரிவினைக் கொள்கை பெயரளவுக்கு இருந்ததேயொழிய சட்டங்களை ஆக்குபவர்களை பணியாளர்கள் பணியவைத்து ஆட்சி நடத்தினர்கள். நாடாளும் மன்றத்திலுள்ள கிழார்கள் அவையும், நிகராளர்களவையுமாகிய இரண்டிற்கும் சமமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டதால் அவையிரண்டும் ஒன்றையொன்று மிஞ்சுவதற்காக எப்போதும் போரிட்டுக் கொண்டிருந்தன.

நாட்டின் வரவு செலவுத்திட்டங்களை ஆக்கித்தரும் பொறுப்பு நாடாளும் மன்றத்திடம் இருந்தது. அதனைச் செயல்படுத்தும் பொறுப்பு அமைச்சரவைக்கு இருந்தது. ஆனல், அமைச்சரவை பேரரசருக்குப் பொறுப்பாளியே தவிர, நாடாளும் மன்றத்திற்குப் பொறுப்பாளியன்று. எனவே நிகராளர்களவைக்கும், அமைச்சரவைக்கும் எப்போதும் போராட்டம் ஏற்பட்டது. பொதுவாக இவ்வரசியல் சட்டம் முழுமையாகவும் குடியாட்சியின் தன்மையற்றும், கிழார்களின் ஆட்சித் தன்மையற்றும் காணப்பட்ட போதும் 'நாடாளும் மன்ற ஆட்சி' (Parliamentary Government) முறையில் அமைந்திருக்கிறது. எனவே கி. பி. 19ஆம் நூற்றுண்டின் கடைசிப் பகுதிக்குள் இத்தகைய ஆட்சி முறையால் ஜப்பானில் குமுக, பொருளியல், அரசியல், சமய மாற்றங்கள் பெரிதும் ஏற்பட்டன. இதனையே நாம் 'ஒளிபொருந்திய ஆட்சி' அல்லது 'மேசி ஆண்டுமானம்' என்கிறோம்.

# 7. மேசிப் புரட்சி

## (புதுமை நாட்டமைப்பு)

ஜப்பான் தனது முன்னிலை மீட்சிக்குப் பிறகு 1912ஆம் ஆண்டு வரை மேசி மாமன்னரால் முழு அதிகாரத்தோடு ஆளப் பட்டது. இவர் காலத்தில் ஜப்பானி லேற்பட்ட எண்ணிறந்த மாற்றங்களையே மேசிப் புரட்சி என்கிறோம். இம் மாமன்னர் 1871-ல் நிலக்கிழமையை ஒழித்து நாட்டில் வகுப்பு வாதத்தைத் தடுத்தா ரென்பதையும், படைத்துறையைக் கொடிவழியாகக் கைப்பற்றி வந்த சாமுராய்க் குலத்தவர்களேயன்றி, மற்ற எல்லாரும் படையில் சேர்ந்து பயிற்சி பெறுவதையும், நிலமானியப் படையை ஒழித்துத் தேசியப் படையை ஏற்படுத்துவதையும், நிலக்கிழார்கள், உள்நாட்டுத் தலைவர்களின் தனி நயன்மை மன்றங்களை ஒழித்து மேற்கத்திய முறையில் சட்டங்களைத் தொகுத்துச் சட்டம் பயின்றோரை நடுவர்களாக அமைத்து முறை வழங்குவதையும், கல்வி, தொழில்நுட்பம், இயந்திர வளர்ச்சி அறிவியல் வளர்ச்சி முதலியவற்றில் அயல்நாட்டு அறிவு கொண்டு வியக்கத்தக்க முன்னேற்றத்தை அடைவதையும், பிறவி மீகாமன்களான மேற்கத்தியரையும் விஞ்சும் வகையில் நாவாய்ப் படையை அமைத்தும், பெருகிவரும் தன் மக்கள் தொகைக்குத் தீர்வுகாண உள் நாட்டில் தொழிற் புரட்சி, வேளாண்மைப் புரட்சி, வணிக வளர்ச்சி முதலியவற்றைத் தோற்றுவித்தலும், அயல் நாடுகளில் குடியேற்றங்களை அமைத்தும், புதிய இடங்களை வென்றும், பெருகிவரும் மக்களை அங்கெல்லாம் குடியமர்த்தலையும் பிரிட்டன் போன்ற நாடுகளால் ஜப்பான் ஒரு புதிய, வலுவான நாடாக மதிக்கப்படுதலையும், ஐரோப்பாவிலும், உலக அரங்கிலும் ஜப்பானுக்கு ஒரு தனிச்சிறப்பிடம் ஏற்படுவதையும், இந்த மேசிப் புரட்சி குறிப்பிடும்.

### கல்விச் சீர்திருத்தங்கள்

1873 சனவரி முதல் நாளிலிருந்து ஜப்பானில் ஐரோப்பிய முறைக் காலக் குறிப்பேடு (Gregorian Calendar) நடைமுறைக்கு வந்ததை அறிவோம். இதற்கு முன் நிலாக்கோள் பெயர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு காலத்தைக்

கணக்கிடும் சீன முறைதான் ஜப்பானி லிருந்தது. பருவ காலங்களைக் கணக்கிடும் முறையும், விழாக்கள் கொண்டாடும் முறையும், விடு முறைகள் விடும் முறையும் கூட புதிய நாள் குறிப்பைக் கொண்டே கணக்கிடப் பட்டன. அஃதாவது ஒரு நாட்டின் வரலாற்றில் ஒரு புதிய ஆண்டுமானம் ஏற்படுகிறதெனில் காலக் குறிப்பேடு மாற்றமே அதன் அடிப்படை அறிகுறியாகும். இதுவரை சீனவைப் பின்பற்றி பண்டைக்காலக் குறிப்பேட்டைக் கையாண்ட ஜப்பான் மேற்கத்திய முறை காலக் குறிப்பேட்டைப் பின்பற்றத் தொடங்கியது. அது புதுமைக் காலத்தில் அடியெடுத்து வைத்த தென்பதைக் குறிப்பிடுகிறது. ஜப்பானி லேற்பட்ட புதிய கல்வி வளர்ச்சி முறைதான் உள்நாட்டுச் சீர்திருத்தங்களுக்கும், அயல் நாட்டில் அதன் செல்வாக்கிற்கும் வழிகோலியது. மேசி முன்னிலை மீட்சிக்கு முன்பாகவே ஜப்பானில் மேற்கத்தியக் கல்வி முறையில் ஆர்வம் ஏற்பட்டிருந்த தென்பதை அறிகிறோம். 1855-ல் தொகுகவாக்கள் மொழிபெயர்ப்புக் கழகம் ஒன்றை ஏற்படுத்தி அதில் அயல் நாட்டு நூல்களையெல்லாம் ஜப்பானிய மொழியில் பெயர்த்தனர். 1860-ல் முதன் முதலாக இக் கழகம் ஜப்பானிய மாணவர்களை அயல் நாடுகளுக்கு அனுப்பி மேற்கத்திய கல்வி முறையில் பயிற்சி பெறச் செய்தது. இம் மாணவர்கள் அயல் நாட்டு அரசியல் தந்திரங்களையும், அரசியல் முறைகளையும், பொருளியல் கோட்பாடுகளையும் நிலநூலறிவையும் நன்கு கற்றுத் தேறி ஜப்பானுக்குத் திரும்பினர். 1868-ல் ஏற்பட்ட முன்னிலை மீட்சியில் இத்தகைய மாணவர்கள்தாம் மக்களை விழிப்படையச் செய்தன ரென்பதை அறிவோம். உள்நாட்டிலேயே தோட்டப் பயிர்கள், தவசங்கள் முதலியவற்றைப் பயிரிடுவதிலும், நூற்பு இயந்திரங்களைப் பயன்படுத்துவதிலும், நெசவாலைகளை அமைப்பதிலும், இயந்திரப் படகைப் பயன்படுத்தி மீன் பிடித்தலிலும் வாணிகம் செய்வதிலும் இளைஞர்கள் பலர் மேலை நாடுகளைப்போல் சிறந்த முன்னேற்ற மடைந்திருந்தார்கள்.

இவ்வாறு முன்னரே ஒரு புதிய காலத்திற்குத் தன்னை அணியப் படுத்திக் கொண்டிருந்த ஜப்பான் நாட்டில் 1868-ல் அமைக்கப் பட்ட மேசியின் ஆட்சியால் அது முழுதுமாக புதிய நாடாக்கப் பட்டது. 1869-ல் மேசி மாமன்னர் 'இன்றிலிருந்து ஜப்பான் முழுவதுமுள்ள மக்களுக்குக் கல்வி கற்பிப்பது கட்டாயமாகிறது; இதற்குப் பின் ஜப்பான் ஊர்களில் படிக்காத ஒரு குடும்பமோ, அல்லது ஒரு குடும்பத்தில் படிக்காத ஒரு மாந்தனோ இருப்பதை நான் காணக் கூடாது' என்றார். இதனால் நாடு முழுவதும் பள்ளிகள் நிறுவப்பட்டன. 1872-ல் கட்டாயக் கல்வி முறை கொண்டு வரப்பட்டது; 1871-ல் இவகுரா, ஓகுபோ, கிதோ, இதோ,

யமாகுச்சி ஆகிய ஆண்களும், மற்றும் ஐந்து பெண்களும் அயல் நாடுகளிலிருந்து பட்டம் பெற்றுத் திரும்பினார்கள். 1880-ல் கிறித்தவ மறையின் புதிய ஏற்பாடு ஜப்பானில் வெளியிடப் பட்டது. பட்டதாரியான இதோ அமெரிக்காவிலுள்ள வைப்பக முறைகளை ஜப்பானில் ஏற்படுத்தினார். அவர் முயற்சியால் 1882-ல் முதன் முதலாக வைப்பகம் (Bank) ஒன்று நிறுவப்பட்டது. தாள் பணங்களை வெளியிடவும், நாணயங்களை அச்சிடவும், இவ் வைப் பகம் இசைவு பெற்றது. 1872-ல் முதன் முதலாகக் கொண்டு வரப்பட்ட கட்டாயக் கல்விச் சட்டம் 1873ஆம் ஆண்டிலும் 1879ஆம் ஆண்டிலும் விரிவு படுத்தப் பட்டது. 1886ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட கல்விச் சீர்திருத்தத்தால் அடிப் படைக் கல்வி முறையும், உயர்தரப் பல்கலைக்கழகக் கல்வி முறைகளும் மாற்றியமைக்கப்பட்டன. ஆவ்சிக்நெச்டு (Havsknecht) என்ற கல்வி வல்லுநர் உயர்தரப் பள்ளியாசிரியர்களைப் பயிற்று விக்கும் பணியில் அமர்த்தப்பட்டார். இவர் ஒரு சிறந்த செருமானிய மொழி வல்லுநரும் ஆவார். இதற்குமுன் ஜப்பானில் ஃபிரெஞ்சு மொழி பெற்றிருந்த இடத்தை செருமானிய மொழி பெறலாயிற்று. சிறப்பாக மருத்துவ, பொறியியல் மாணவர்கள் செருமானிய மொழியில் கல்வி பயின்றனர். ஆங்கிலமும் ஒரு கட்டாயப் பாடமாக மாணவர்களுக்கு வைக்கப்பட்டது. 1885-லிருந்து 1889 வரையில் ஜப்பானில் கல்வியமைச்சராயிருந்த விசுகவுண்டு மோரி ஜப்பான் நாட்டுக் கல்வி முறை யாவும் ஆங்கில மொழியிலேயே பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்றார். 'நம்முடைய நுண்ணறிவும் ஆற்றலும் திறமாக வெளிப்பட வேண்டுமானால் அறிவியலின் கருவூலமாகவும், பண்பியலின் பெட்டகமாகவும், கலையின் இருப்பிடமாகவும், சமயத்தின் உயிரோட்டமாகவும், சட்ட திட்டங்களின் காப்பிடமாகவும், புதுமை நடம்புரியும் மொழியாகவுமுள்ள, கற்பதற்கெளிய, ஆனால் ஆழமும் அகலமுமுள்ள ஆங்கில மொழியில்தான் நாம் கற்க வேண்டும். நம் நாட்டுச் சட்ட திட்டங்களையும், அறிவையும், ஆக்கத்தையும்கூட ஆங்கிலத்தில் வெளியிட்டால்தான் அயலார் அறிய முடியும். இத்தகைய திறன்கள் யாவும் ஜப்பான் மொழிக்கு இன்றில்லை. நாளை அவை பெருகினாலும் உலகம் முழுவதும் நம் மொழியை வைத்து நம்மை அவர்கள் அறியவோ, அவர்களை நாம் அறிந்து கொள்ளவோ முடியாது' என்று கூறி விசுகவுண்டுமோரி, ஆங்கில மொழியின் மூலம் கற்பதை வற்புறுத்தினார். ஜப்பானிய மொழி சீன மொழியின் கலப்பால் கற்பதற்கும், எழுத்து வடிவில் கருத்தை வெளியிடுவதற்கும் கடினமானதோடு, அதனைக் கற்றுத் தேறுகின்ற மாணவர்களில் நூற்றுக்கு இருவர் அல்லது மூவரே அதன் வழி எல்லா அறிவையும்

கற்கும் திறமை பெறுகிறுர்கள். அறிஞர்கள் சிலர் உரோமன்—ஜப்பானிய மொழி முறையில் கல்வி கற்கலாமெனக் கூறினர். ஜப்பானிய எழுத்துகள் யாவும் சீன மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டவை. எனவே அதன் உயிரெழுத்துகளுக்கு கனு (Kana) என்று பெயர். 'கனு' என்ருல் கடன் வாங்கப்பட்டது என்று பொருள். அதன் துணையெழுத்துகளுக்கு 'இரகனு' என்றும் 'கதகனு' என்றும் பெயர். எனவேதான் எழுத்து வடிவில் ஓவியங்களை ஒத்துக் கற்பதற்குக் கடினமான ஜப்பானிய மொழியில் புதிய கல்வி கற்க முடியாதெனக் கருதி மேற்படி கல்வி யமைச்சர் விசுக வுண்டு மோரி ஆங்கிலக் கல்வியை வலியுறுத்திஞர். 1884ஆம் ஆண்டிலும் 1900 ஆண்டிலும் கல்வித் துறையினரால் வெளியிடப் பட்ட கல்விச் சட்டங்கள், மாணவர்களின் உடல் நலமே கல்வியில் முன்னேற உதவுகிறது என்பதை வலியுறுத்துகின்றன. பால், பச்சைக் காய் கறிகள், பழங்கள், மீன் வகைகள் முதலிய சத்துண வுகளை மாணவர்களுக்கு வழங்கும் திட்டமும் துப்புரவாகப் பள்ளிகளை வைத்துக்கொள்ளும் திட்டமும் 1900-லிருந்து செவ்வை யாகக் கையாளப்பட்டன. இதனுல் 1900-க்குப் பின் பள்ளிச் சிறுவர்களின் உயரம் இரண்டு விரலம் (அங்குலம்) அதிகமாயிற் றென்றும் அவர்களின் உடலெடை கூடிய தென்றும் கணக்கிடப் பட்டுள்ளது. சத்துணவுத் திட்டம் நகரப்பள்ளிகளில் பெருவா ரியாகக் கையாளப்பட்டதால், ஊர்ப்புறத்துச் சிறுவர்களைவிட, நகர்ப்புறத்துப் பள்ளிச் சிறுவர்கள் உயரமாகவும், பருமனுகவும் ஆனுர்களென்றும், அதிலும் பெண்கள் முதலிடம் பெற்ருர்க ளென்றும் புள்ளி விளக்கங்கள் தெரிவிக்கின்றன.

பள்ளியில் பின்பற்றப்பட்ட சீருடை முறைகளாலும், குறுகிய ஆடைகளை அணியும் மேனுட்டு முறைகளாலும், உடற்பயிற்சிக் கல்வி முறையாலும், கால்களைப் பின்புறம் மடக்கிக் குதி கால் களின்மேல் உட்காரும் முறைகளைத் தவிர்த்து, புதிய முறையில் நாற்காலியி லமர்ந்து கற்றல் ஆகிய முறைகளாலும் பள்ளிச்சிறுவர் களுக்குள் மன வேற்றுமைகள் மறைந்து நடையால், உடையால், படிப்பால் எல்லாரும் ஒரு தாய் மக்களாய் ஒரு புதிய உலகில் வாழ லாயினர். உயர்நிலைப் படிப்பு ஏந்து பெண்களுக்கு அளிப்பதை ஜப்பானியர் பலர் எதிர்த்தனர். ஆனுல், 19ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் ஒவ்வோர் ஆட்சிப் பிரிவிலும் குறைந்தது ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியாவது அமைக்க வேண்டுமென்று சட்டம் கொண்டு வரப்பட்டது. பெண்கள் கல்விக்கென உதவித் தொகையும், மானியத் தொகையும் கொடுக்கப்பட்டன. ஆயினும் 20-ஆம் நூற்ருண்டுத் தொடக்ககாலம் வரையில் பெண் கல்வி பின் தங்கியே காணப்பட்டது. 1901-ல் தான் முதன் முதலாக

பெண்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் சின்சோ நாருசே (Jin Jo Naruse) என்பவரால் அமைக்கப்பட்டது.

செப்டெம்பர், 1872-ல் ஜப்பான் கல்வி முறைகளைச் சீர்திருத்தி நாடெங்கிலும் பள்ளிகளை ஏற்படுத்திப் பரப்புவதற்கான திட்டமொன்று உருவாக்கப்பட்டது. அத் திட்டப்படி கல்வித் துறையில் எட்டு பெரும் கல்விக் கோட்டங்கள் இருக்க வேண்டு மென்றும், ஒவ்வொரு கோட்டத்தின் கீழும் ஒரு பல்கலைக்கழகமும், அப் பல்கலைக்கழகத்தின் கீழ் 32 உயர்நிலைப்பள்ளிகளும் 210 தொடக்கப் பள்ளிகளும் இருக்க வேண்டுமென்றும் திட்டமிடப்பட்டது. அஃதாவது அறுநூறுபேருக்கு ஒரு தொடக்கப்பள்ளி ஏற்படுத்தவும், ஒவ்வொரு குழந்தையும் ஆறகவை நிரம்பியதும் பள்ளியில் கட்டாயமாகச் சேர்க்கப்படவேண்டுமென்றும் இத் திட்டம் வலியுறுத்தியது. ஓராண்டுக்கு முன்புதான் நிலமானிய முறையை ஒழித்து ஒரு சமநிலைக் குமுகாயத்தை ஏற்படுத்திய ஜப்பான் திடீரென இம் மாபெரும் கல்வித் திட்டத்தை நினைத்தது கல்வியில் அது கொண்டிருந்த பேரவாவையே காட்டுகின்றது. 1880-க்குள் 28,000 தொடக்கப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. பள்ளியகவையுடைய சிறுவர்களில் 40% பேர் இவ்வாண்டுகளில் கல்வி பெற்றனர். இஃது 1882-ல் 46% ஆகவும், 1895-ல் 60% ஆகவும், 1900-ல் 90% ஆகவும் 1906-ல் 95% ஆகவும் வளர்ந்தது. இவ்வாறு தொடக்கக் கல்வி வளர வளர நடுத்தரப்பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும், பல்கலைக்கழகங்களும் அதற்கேற்றாற்போல் வளர்ந்து கொண்டே சென்றன. 1886-ல் ஏற்படுத்தப்பட்ட தோக்கியோ பேரரசுப் பல்கலைக்கழகம் (Tokyo Imperial University) வளர்ந்து வரும் கல்விக் கூடங்களில் தாயகமாகத் திகழ்ந்தது.

1885-லிருந்து 1889ஆம் ஆண்டு வரையில் கல்வி யமைச்சராயிருந்த மோரி அரிநோரி (Mori Arinori) 1896-ல் கொண்டு வந்த கல்விச் சீர்திருத்தங்களால் ஜப்பானியக் கல்வி முறை மேலும் சிறப்புற்றது. இவர் திட்டப்படி ஆறகவையிலிருந்து பதினான்கு அகவை வரையில் கட்டாயத் தொடக்கக் கல்வியும், பதினான்கிலிருந்து பதினெட்டு அகவை வரையில் நடுத்தரக் கல்வியும், பின் இருபத்திரண்டு அகவை வரையில் உயர்தரக் கல்வியும் கற்க வேண்டும் என்ற முறை புகுத்தப்பட்டது. பாட நூல்களும், பாட முறைகளும் அரசால் அமைக்கப்பட்டன. பள்ளிகளும், கல்லூரிகளும் அரசுக் கல்வியதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டன. தனியார் கல்வி நிறுவனங்கள் அரசின் இசைவு பெற்றே நடத்தப் படவேண்டும் என்றாயிற்று. இவ்வாறு கல்வி முறை முழுவதும் அரசால் மாற்றி யமைக்கப்பட்டுக் கண்காணிக்கப்பட்டதால்

மேற்கத்தியக் கல்வியறிவு மிக எளிதாக ஜப்பானில் பரப்பப் பட்டு, சிறந்த புதிய கல்வி முறை ஏற்பட்டது. மேற்கத்தியக் கல்வி முறை புகுத்தப்பட்டாலும் கன்ஃபூசிய சமயத்தின் சாரத்தைக் கொண்டே மாணவர்களுக்கு நயன்மையும் ஒழுக்கமும் புகட்டப் பட்டன. இதனுல் கல்வியில் ஒழுக்கமும், திறமையும், நுண்ணறிவும் ஏற்பட்டதோடு நாட்டுப் பற்றும் பேரரசர் பற்றும் இளங் குமுகாயத்திற்கு ஏற்பட்டது.

இத்தகைய கல்வி முறையால் ஜப்பானியக் குமுகாயத்தையும் அரசியலையும் ஒன்றிணைக்க முடிந்தது. இக் கல்வி முறை புதுமைகளைக் கண்டுபிடிக்கவும், புதிய தொழிற் புரட்சியை ஏற் படுத்தவும், இதன் வழி ஜப்பானைப் பொருள் வளர்ச்சியில் தலை சிறந்த நாடாக மாற்றவும் முடிந்தது. இக் கல்வி முறையே ஜப்பானை ஒரு செல்வ நாடாகவும், வலுவான படையுடைய தாகவும் (Fukoku Kyobei) மாற வாய்ப்பளித்தது.

தொடக்கப் பள்ளிகளும், நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளும் பல்கலைக்கழகங்களும் நேரடியாகக் கல்வித் துறையின் கண்காணிப்பில் கொண்டு வரப்பட்டன. பேரரசரும், பல்கலைக் கழகக் கல்வி, தொழில் நுட்பக்கல்வி, ஆய்வுக் கூடங்கள் முதலிய வற்றில் தனி அக்கறை செலுத்தினுர். பேரரசுப் பல்கலைக்கழகங் களுக்குத் தானே நேரடியாக அடிக்கடி சென்று மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் கல்வியில் ஊக்கமளிப்பார். இத்தகைய பல்கலைக்கழகங்களே பல நோபல் பரிசு பெற்ற அறிவியலாளர்களை உண்டாக்கின. 1911-ல் செந்தாய் என்னுமிடத்தில் ஏற்படுத்தப் பட்ட பல்கலைக்கழகமும், குயூசுவில் ஏற்பட்ட பல்கலைக்கழகமும் இவற்றிற்கு முன்பாகவே கியோத்தோவிலும், தோக்கியாவிலும் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்களும் பேரரசுப் பல்கலைக் கழகங்கள் (Imperial Universities) என வாயின. 1918-ல் பேரரசுப் பல்கலைக்கழகங்களும் தனியார் பல்கலைக்கழகங்களும் ஒன்றிணைக்கப்பட்டு, தேசியப் பல்கலைக்கழகங்கள் ஆயின.

ஜப்பானியக் கல்விமுறை புதிய முறைக்கு மாற்றப்பட்ட போதிலும் அதில் பல கடினமான இடர்பாடுகள் இருந்து கொண்டேயிருந்தன. தொடக்கக் கல்வி, நடுத்தரக் கல்வி, உயர் நிலைக் கல்வி ஆகியவற்றிற்குக் குறிப்பிடப்பட்டிருந்த காலவரைய றைகளும், அகவை வரம்புகளும் நெப்போலியன் கல்வி முறையை ஒத்திருந்த போதிலும் புதிய கல்வி முறைக்கு ஒத்துவராதனவா யிருந்தன. பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பொறுப்பு அமெரிக்கர் போன்ற அயலாரிடம் விடப்பட்டிருந்தது. ஆசிரியர் களுக்குப் போதிய ஊதியம் கொடுக்கப்படவில்லை. ஆனுல்,

தொழிற் கல்விக் கூடங்களும், வணிகக் கல்விக் கூடங்களும் அதிகரிக்க அதிகரிக்க இத் துறையில் பயிற்சி பெற ஆசிரியர்கள் அயல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள். இதனை யடுத்து அறிவியல் இலக்கியம் முதலிய துறைகளிலும் அயல்நாடுகளுக்குச் சென்று பயிற்சிபெற ஆசிரியர்கள் அனுப்பப்பட்டார்கள். இதனால் இலக்கியத் திறனாய்வு முறையும், வரலாற்றாராய்ச்சியும், மேலை நாட்டு விளையாட்டு முறையும் ஜப்பானியப் பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் புழக்கத்தில் வந்தன. தொடக்கத்தில் மருத்துவத்தைக் கற்பிக்கும் ஆறு தனிப் பள்ளிகளும் இரண்டு வேளாண்மை, காட்டு வளர்ப்புப் பள்ளிகளும், ஒரு கட்டடக் கல்விப் பள்ளியும், ஒரு சுரங்கப் பள்ளியும், ஐந்து வணிகப் பள்ளி களும், ஏழு உயர் தொழில் நுட்பப் பள்ளிகளும், நான்கு உயர் நிலைப் பள்ளிகளும், ஐம்பத்தைந்து ஊமையர், செவிடர் பள்ளி களும் ஏற்படுத்தப்பட்டன. இப் பள்ளிகளில் எந்த குறிப்பிட்ட மதத்தைப் பற்றியும் கட்டாயமாகப் புகட்டுவ தில்லை. இயற்கை வழிபாட்டு முறையும், அந்த இயற்கையின் சின்னமாய் விளங்கும் ஜப்பானியப் பேரரசரை வழிபடும் முறையும் புகட்டப்பட்டன. ஒவ்வொரு பள்ளியிலும் பேரரசர் முத்சு இதோவின் படம் மாட்டப் பட்டது. ஒவ்வொரு மாணவனும் தெய்விகப் பேரரச ருக்கும் தெய்விக நாட்டிற்கும் எத்தகைய ஈகமும் செய்ய அணியப் படுத்தப்பட்டான்.

பேரரசால் நடத்தப்படும் கல்விக் கூடங்களைத் தவிர பல தனியார் பள்ளிகளும், பல்கலைக்கழகங்களும் இருந்தன. அவற்றுள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை, ஃபுகுசாவா யுகிச்சி (Fukuzawa-Yukichi) என்பவரால் மிதா (Mita) என்னுமிடத்தில் நிறுவப்பட்ட கேயோசிசுகு (Keiogijuku) பல்கலைக்கழகமும், மார்கியூச ஒகுமா (Marquis Okuma) என்பவரால் நிறுவப்பட்ட வசேதாப் பல்கலைக் கழகமும் (Waseda University) ஆகும். கேயோசிசுகு பல்கலைக் கழகத்தில் 1890ஆம் ஆண்டு பொருளியல், சட்டவியல், இலக்கியம், அரசியல் போன்ற தனித்தனித் துறைகள் அமைக்கப் பட்டு இத் துறைகளில் ஆராய்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன. இப் பல்கலைக்கழகத்தில் பயின்ற மாணவர்கள் ஜப்பானை ஒரு புதிய நாடாக்குவதில் பெரும் பங்கு ஏற்றனர். ஆறகவையில் இப் பல்கலைக் கழகத்தில் சேருகின்ற மாணவர் ஐந்து ஆண்டுகளில் நடுநிலை வகுப்பை முடித்துக் கொண்டு பின் உயர்நிலைப் பள்ளிக்கு வந்து மீண்டும் ஐந்து ஆண்டுகள் பல்கலைக்கழகத்தில் பயின்று 22 அல்லது 23ஆம் அகவையில் பட்டதாரியாக வெளியேறுவர். ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கும் பட்டதாரி மாணவர்கள் அயல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அத் துறையில் சிறந்த பயிற்சி

பெற்றுத் திரும்பினார்கள். 1909ஆம் ஆண்டுக் கணக்குப்படி இப் பல்கலைக்கழகத்தில் பட்ட வகுப்புகளில் 2293 மாணவர்களும், இடைநிலைப் பள்ளிகளில் 803 பேரும், தொடக்கப் பள்ளிகளில் 384 பேரும், வணிக, தொழில் நுட்பப்பள்ளிகளில் 449 பேரும் மாலை நேரப் பள்ளியில் 581 பேர்களுமாக 4510 மாணவர்கள் பயின்றார்கள். இப் பல்கலைக்கழகத்தை நடத்திச் செல்ல முப்பது உறுப்பினர்களடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது. இக் குழுவி லிருந்து ஐந்து இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப் பெறுவர். இவர்கள் யாவரும் நான்காண்டுகள் பதவியிலிருப்பர்.

1918-ல் கொண்டு வரப்பட்ட அரசுச் சட்டத்தால் இப் பல்கலைக்கழகமும் தேசியப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. மேசிப் புரட்சியாலேற்பட்ட கல்வி வளர்ச்சியை நாம் இதுவரை மேலெழுந்த வாரியாகப் பார்த்தோம். முழுக்க முழுக்க ஐரோப்பா வையும், ஐரோப்பியரையும் பின்பற்றியே இவர்களின் கல்வி முறை அமைக்கப் பட்டதையும், அவ்விரு கண்டங்களின் கல்வியறிவே ஜப்பானில் பரவியதையும் பார்த்தோம். ஆனால், ஜப்பானியர்கள் சில துறைகளில் கண்மூடித்தனமாக மேலைநாட்டுக் கல்வி முறை யைப் பின்பற்றவில்லை. அவர்களும் சில புதினங்களைக் கண்டு பிடித்தார்கள். கல்வியகவை வரம்பு, மதப்பயிற்சி, பண்பாட்டுக் கல்வி முதலியவற்றைத் தங்கள் நாட்டுக்கேற்றாற்போல் அமைத்துக் கொண்டனர்.

### செய்தித் தாள்கள்

ஐரோப்பிய மொழிகளிலுள்ள பலவாயிரக்கணக்கான நூல் கள் ஜப்பானில் மொழி பெயர்க்கப்பட்டன. ஐரோப்பிய மொழி களின் மூலச் சொற்களை அப்படியே ஜப்பானிய மொழியில் எழுதிப் படித்ததால், அறிவியல் துறையில் ஜப்பான் தங்கு தடையின்றி முன்னேறியது. ஐரோப்பிய மொழிகளில் நேரடியாக இவர் களுக்குப் பயிற்சியும், திறமையும் இல்லாததால் பல பன்னாட்டு அறிவியல் மாநாடுகளில் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள முடியவில்லை. ஜப்பானி லேற்பட்ட இக் கல்வி மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. அந்நாட்டில் தோன்றிய எண்ணிறந்த தாளிகைகளாகும். நாளேடுகள், கிழமை யிதழ்கள், திங்கள் வெளியீடுகள் முதலியனவும் அறிவியல், வர லாற்றியல், அரசியல், கலை, இலக்கியப் பண்பாட்டியல்கள் முதலி யவற்றைப் பற்றிய சிறப்பேடுகளும், சிறப்பு மலர்களும் கணக் கின்றித் தோன்றி ஜப்பானியரின் கல்வியறிவை வளர்த்தன. இவைகளில் பெரும்பாலானவை தாய்மொழியிலேயே எழுதி வெளியிடப்பட்டதால் பொதுமக்களின் கல்வியறிவு வளர்ந்து

தெருவெல்லாம் புதுமைக் கண்டுபிடிப்புகளைப் பற்றியே பேச்சுகள் நடைபெற்றன. இவ்வாறு தடையின்றி வளர்ந்து விட்ட ஜப்பானியத் தாளிகைகள் தரங்கெட்டும், வரம்பு மீறியும் சில சமையங்களில் போவதுமுண்டு. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக 1875-ல் ஓர் அச்சகச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் கீழ்த் தாளிகையாசிரியர்கள் பலர் தண்டிக்கப்பட்டனர். பல தாளிகைகள் பறிமுதல் செய்யப்பட்டன. இக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய சில எழுத்தாளர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஃபுகுசாவா யுகிச்சி (1835-1901) எழுத்தாளர்கள்

தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவியவர்களின் வரிசையில் முன்னரே இவரைக் குறிப்பிட்டுள்ளோம். குயூசுத் தீவில் ஓர் எளிய சாமுராய்க் குடும்பத்தில் தோன்றிய இவர், நாகசாகியிலுள்ள தச்சுக்காரர் பள்ளியில் படித்துத் தேறினர். மருத்துவத்தையும், ஆங்கிலமொழியையும் தனது சிறப்புப் பாடமாகப் படித்தார். 1862-ல் அயல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டார். அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளிலிருந்த ஜப்பானியத் தூதர்களுக்கு மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினர். இதில் நன்கு பயிற்சி பெற்ற இவர் அரசுப் பணியிலிருந்து நீங்கி, நூலாசிரியராக மாறினர். அவர் எழுதிய நூல்களில் 'மேனாட்டு நிலைகள்' (Seiyo Jijo) என்னும் நூல் ஜப்பானியரைப் பெரிதும் கவர்ந்தது. இந் நூலில் ஐரோப்பிய நாடுகளின் அரசியல் பொருளியற் பெயர்கள் அறிவியல் வளர்ச்சி, பாராளுமன்ற முறைகள் முதலியவை விவரிக்கப்பட்டுள்ளன. இந்நூல் முழுக்க முழுக்க மேற்கத்திய நாகரிகத்தையே பெரிதுபடுத்திப் பேசுகிறது. ஒவ்வொரு துறையிலும் மேற்கத்திய முறையைத்தான் கடைப்பிடிக்க வேண்டுமென இந் நூலாசிரியர் வலியுறுத்துகின்றார். 1863-ல் தான் அமைத்த ஒரு பள்ளியை மேற்கத்திய நாகரிகத்தின் பயிற்சிக் கூடமாக மாற்றினர். இப் பள்ளியில் மேற்கத்திய முறையில், மேற்கத்தியக் கல்வி புகட்டப்பட்டது. இவரால் தொடங்கப்பட்ட கேயோசிசுகு பல்கலைக்கழகத்தைப் பற்றி நாம் மேலே குறிப்பிட்டிருக்கிறோம். இவ்வாறு இவ்வாசிரியர் மேற்கத்தியப் பண்பாட்டில் ஊறித் திளைத்தாலும் இவருடைய உள்ளம் ஜப்பானிய உள்ளமாகும். 'நான் இவ்வாறு இளைஞர்களையெல்லாம் ஒன்று சேர்த்து மேற்கத்தியக் கல்வி முறையில் கற்கப் பயிற்சியளிப்பது, அந் நாடுகளில் மலிந்து காணப்படுகின்ற புத்தகங்களின் துணையால் நம்நாட்டுக் கல்வியறிவு பெருகும் என்னும் ஒரே நோக்கத்திற்காகத் தான், இதன் வழி குளத்துத் தவளையாகக் கிடக்கின்ற

ஜப்பான் உலக அரங்கில் போர்க்களத்திலும், சமைதிப் பாதையிலும் சிறந்து விளங்கும் என்பதே என் முற்காணிய (தீர்க்க தரிசன) மாகும்' என்று ஃபுகுசாவாயுகிச்சி கூறுகிறார்.

இவரால் ஜப்பானிய மொழியில் பெயர்க்கப்பட்ட மேற்கத்திய நூல்கள் பலவும் ஜப்பானிய அறிவு வளர்ச்சிக்கு ஏணிகளாய் நின்றன. இவரைப் பின்பற்றி ஆசிரியர்கள் பலர் ஜப்பானில் தோன்றினர். சாமுவேல் சிமைல்சு என்பவரால் 1871-ல் வெளியிடப்பட்ட 'தன் கையே தனக்குதவி' என்ற நூலும் இலிட்டன் (Lytton) என்பவரால் எழுதப்பட்ட நூல்களும் ஜப்பானிய மொழியில் பெயர்க்கப்பட்டன. இந் நூல்கள் ஐரோப்பியரின் அன்றாடப் பழக்க வழக்கங்களை விவரிக்கின்றன. சூல்சு வெர்னி (Jules Verne) என்பவரால் எழுதப்பட்ட 'உலகைச் சுற்றிய எண்பது நாள்கள்' (Round The World In Eighty Days) என்ற நூல் ஜப்பானிய மொழியில் பெயர்க்கப்பட்ட பின் அவர்களின் உலகப் பயணத்திற்கு, அஃதொரு கையேடாயிற்று. இராபின்சன் குருசே எழுதிய தீரச் செயல்கள் நூல்களும், ஈசாபு (Aesop) எழுதிய கட்டுக் கதைகளும், 'ஆயிரத்தோர் இரவுகள்' என்ற அரபிய நாட்டுக் கதைகளும் சான் புன்னியன் எழுதிய 'புனித யாத்திரை' என்ற நூலும், தாமசு மூர் எழுதிய 'உதோப்பியா' என்ற நூலும், 'சிந்தனைச் சிற்பி' உரூசோ எழுதிய 'குமுகாய ஒப்பந்தம்' என்ற நூலும் இது போன்ற அந்நியநாட்டுப் பண்டைய இலக்கியங்களும், 1880ஆம் ஆண்டுக்குள் ஜப்பானிய மொழியில் பெயர்க்கப்பட்டுப் படித்த யாவராலும் அறியப்பட்டுவிட்டன. பத்தாண்டுகளுக்குப் பிறகு அஃதாவது 1890-க்குப் பின் பொதுவுடைமைச் சிந்தனையாளர்களின் நூல்கள் ஜப்பானில் பரவின. விக்டர் இஃகிகோ, தால்சுதாய், இப்சன், தோசுதோயிவ்சுகி (Dostoievsky), தூர்கனேவ் போன்றவர்களின் நூல்களை ஜப்பானிய இளைஞர்கள் புரட்சிப் பொருள்களாகவும், புதினங்க்ளாகவும் போற்றினர்.

இக் காலத்தில் தோன்றிய புதினங்கள் (Novels) யாவும் புதிய வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவனவாயிருந்தன. இப் புதினங்களில் வரும் கதைகளும், நிகழ்ச்சிகளும் புதிய உலகில் நடமாடும் அன்றாட அரசியல், பொருளியல் குமுக வாழ்வைப் படம் பிடித்துக் காட்டின. சீன நடையழகில் கருத்தாழம் நிறைந்த 'காதல் விளையாட்டுகள்' என்னும் நூல் இப் புதினங்களில் மிகச் சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. இந் நூலில் ஓர் இளைஞனை இரண்டு அழகிய நங்கைகள் அழைத்துக்கொண்டு உலகம் முழுவதையும் சுற்றிக் காட்டுவதாக எழுதப்பட்டிருக்கிறது. அந்த நங்கைகளில் ஒருத்தி அயர்லாந்து நாட்டுக்காரியாகவும்

மற்றொருத்தி சுபெயின் நாட்டுக்காரியாகவும் இருக்கிறார்கள். அவ் விளைஞனை இருவரும் இருபுறம் கைகோர்த்து நடத்திச் சென்று உலகெங்கிலுமுள்ள புரட்சிகளையும், விடுதலைப் போராட்டங்களை யும் காணச் செய்து அவனை ஒரு தன்மானமுள்ள சிந்தனைச் சிற்பியாக்கினார்கள். இடையிடையே இவ் விளைஞனுக்கும், அவ் விரு இள நங்கைகளுக்குமிடையே ஏற்படும் காதல் விளையாட்டுகளும், அவர்கள் காட்டுகின்ற கருத்தைக் கவருகின்ற புரட்சிகளும் நம்மை உணர்ச்சிக்கும், கொள்கைக்குமிடையே தத்தளிக்கச் செய்கின்றன. இந் நூலைப் புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய 'சஞ்சீவிப் பருவதத்தின் சாரல்' என்னும் பாடலுக்கு ஒப்பிடலாம். இத்தகைய புதினங்கள் யாவும் மேசிப் புரட்சிக்கு மேலும் ஊக்கத்தை அளித்தன.

ஓவியம்

இக் காலத்தில் எழுந்த வண்ண ஓவியங்கள் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தன. 1876ஆம் ஆண்டு ஓவியக் கலையையும் வளர்ப்பதற்காக அரசால் ஒரு கலைப்பள்ளி நிறுவப் பட்டது. இஃது சிறிது காலத்தில் வளர்ச்சி பெற்றுப் பொறியியல் கல்லூரியின் ஒருறுப்பாகத் திகழ்ந்தது. ஜப்பானியர் வ்ண்ண ஓவியங்கள் தீட்டுதலையும், நுண்கலைகளில் ஈடுபடுவதையும் தங்கள் பொழுதுபோக்காகக் கொண்டனர். மேற்கத்திய ஓவிய முறையும் ஜப்பானிய மரபுவழி ஓவிய முறையும் கலந்து கலை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. இக் காலத்திற்குப்பின் ஒவ்வொரு நகரத்திலும் ஆண்டுதோறும் கலைக் கண்காட்சிகள் நடப்பதும், அக் கண்காட்சிகளில் சிறந்த கலைப் பொருள்களுக்குப் பரிசளிப்பதும் ஜப்பானியப் பண்பாட்டியலாக மாறிவிட்டது. தோக்கியோவில் இன்றும் புகழ் பெற்று விளங்கும் 'தோக்கியோ ஓவியக் கண்காட்சி' என்பது உலகத்தில் சிறந்து காணப்படும் நான்கு பெரிய ஓவியக் கண்காட்சிகளுள் ஒன்றாக விளங்குகிறது.

இசையும், நாடகமும்

இக் கால நாகரிகத்தின் சின்னமாக விளங்கும் மற்றொன்று இசைக்கலையாகும். மேனாட்டு இசைக் கருவிகளை ஜப்பானிய நாட்டு இசைக் கருவிகளுடன் சேர்த்து இசைக்கப்படும் புதிய முறை ஜப்பானில் கையாளப்பட்டது. 1870ஆம் ஆண்டில் இசை ஒவ் வொரு பள்ளியிலும் கட்டாயமாகப் புகட்டப்பட்டது. மேற்கத்திய இசைகளையொட்டி ஜப்பானிய மொழியில் பாட்டுகள் புனையப்பட்டுச் சுவைக்கப்பட்டன. தலைநகரான தோக்கியோ விலும், மற்ற நகர்களிலும் இசைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அபரா, பாலே, நோ முதலிய இசைநிகழ்ச்சிகளில் ஏராளமான இசைக்கலைஞர்கள் பங்கெடுத்துக் கொண்டு மக்களை

மகிழ்வித்தார்கள். இசையைப் போலவே இக் காலத்தில் நாடகக் கலையும் சிறப்புற்று விளங்கியது. ஆயினும் 16ஆம் நூற்றுண்டில் சிறப்புற்று விளங்கிய புன்ராகு (பொம்மலாட்டம்) என்னும் நாடகக்கலை இக் காலத்தில் ஒவ்வொரு நாடக அரங்கிலும் சிறப்புற்று விளங்குகிறது. 'புன்ராகு'வைப் போலவே கபுகி என்னும் நாடக அமைப்பும் சிறப்புற்று விளங்கியது. 19ஆம் நூற்றுண்டினிறுதியில் தோன்றிய சிம்பா என்னும் நாடக அமைப்பில் மேற்கத்திய முறைகளில் புதிய நாடகங்கள் நடத்தப் படுகின்றன: மேலே குறிப்பிட்ட 'கபுகி' இதே முறையில் புதிய நாடகங்களை நடத்தும் அமைப்பாகும். ஆனல், இதில் ஆண்கள் மட்டுமே நடிப்பார்கள். விளையாட்டும் மேற்படி கலைகளில் ஒன்ருகக் கருதப்பட்டு ஒவ்வொரு ஐப்பானியனுடைய இன்றி யமையாத வாழ்க்கைக் கலையாக இஃது அமைந்துவிட்டது. மேசிப் புரட்சிக் காலத்தில் பண்டைய காலத்திலிருந்த மற்போர், விற்போர், வாட்போர் போன்ற விளையாட்டுகளோடு, கைப் பந்தாட்டம், காற்பந்தாட்டம் முதலிய புதிய விளையாட்டுகளும் ஜப்பானில் சிறப்புற்று விளங்கின. இத்தகைய கலைகள் யாவும் ஜப்பானியப் பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பாடங்க ளாகப் புகுத்தப்பட்டன. இவற்றிற்கெல்லாம் மேலாக நின்ற உடற் பயிற்சிக் கல்வி ஊக்கத்தையும், ஒழுக்கத்தையும், உடல் வலிமையையும் ஜப்பானியச் சிறுவர்களுக்களித்தது.

### நயன்மை முறை மாற்றங்கள்

ஜப்பான் ஒரு புதிய நாடாவதற்கு மூலக் கரணியமாயமைந் தவை அதன் உள்நாட்டுச் சீர்திருத்தங்களும், அயலகக் கொள்கை களுமே ஆகும். உள்நாட்டுச் சீர்திருத்தங்களில் குமுகத்தைப் பல நாள்களாகப் பீடித்திருந்த குமுகாயப் பிரிவுகளான சாமுராய்கள் கைவினைஞர்கள், வணிகர்கள், வேளாளர்கள் ஆகிய நான்கு பிரிவுகள் அகற்றப்பட்டு ஜப்பானிய மக்கள் யாவருக்கும் ஒரே வகையான அடிப்படையுரிமைகளை வழங்கியதாகும். அவ்வடிப் படையுரிமைகள் செவ்வனே செயல்பட வேண்டுமெனில் வல்லாட்சி முறையும், வலுவான படை முறையும் மட்டும் போதாது. இவற்றிற் கெல்லாம் மேலாக விளங்கும் நயன்மையும், அந் நயன்மையை நிலைநாட்டும் நயன்மை மன்றங்களும் காழ்ப்புக்கும், உவப்புக்கும் அப்பாற்பட்ட நடுவர்களும் இருத்தல் வேண்டும். இதிலிருந்து ஜப்பானில் நயன்மை மன்றங்களே இருந்திருக்கவில்லை யென்று கொள்ளுதல் கூடாது. இடைக்காலத்தில் வலுப்பெற்றி ருந்த நிலமானியக் கிழார்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஆளுமைக்குட்பட்ட நிலத்திற்குத் தாங்களே நயன்மையராய் விளங்கினர்கள். உள்ளூர் நயன்மை மன்றங்களும் இருந்தன. இவைகளைத் தவிர படையாட்சி நயன்மை மன்றமும், மாமன்னரின்

நயன்மை மன்றமும் இருந்தன. இந் நயன்மை மன்றங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவகையாக வழக்குகள் உசாவப் பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டன. ஒரே குற்றத்திற்கு ஒவ்வொரு நயன்மை மன்றத்திலும் ஒவ்வொரு வகையாகத் தீர்ப்புக் கிடைக்கும். அத் தீர்ப்பும் இடத்திற்கும், தரத்திற்கும் ஆளுக்கும் தக்கவாறு தரப்படும்.

ஐப்பானியக் குற்றவியல் சட்டங்கள் மிகவும் கடினமானவை. சான்றுகளைக் கொண்டு உசாவாமல் சித்திரவதை செய்து உசாவினர். ஓர் எளிமையான குற்றத்திற்கும் மரண தண்டனை கொடுப்பது அக் காலத்தில் மரபாக இருந்து வந்தது. இத்தகைய முறைகளை மாற்றி, மேனுட்டு முறைகளைத் தழுவி நயன்மை மன்றங்களை அமைத்தவர் மேசி மன்னராவார். சட்டங்கள் யாவும் மேனுட்டு முறையில் தொகுக்கப்பட்டன. ஆனுல், அவை பண்டைய பழக்க வழக்கங்களுக்கேற்பத் திருத்தியமைக்கப் பட்டன. இதனுல் நாடு முழுவதும் ஒரே வகையான சட்டமும், நயன்மை மன்றங்களும் ஏற்படுத்தப்பட்டன. சட்டம் படித்துத் தேறி பட்டறிவு உள்ளவர்களே நடுவர்களாய் அமர்த்தப் பட்டார்கள். சித்திரவதை செய்து உசாவல் நடத்துவது தவிர்க்கப் பட்டது. சாட்சிகளைக் கொண்டு உசாவியும் சொல்லாட்டு நடத்தியும் நடுவரின் சிந்தனைக்குப் பின் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஐப்பானில் சிறைச்சாலைகள், ஐரோப்பாவில் இருண்ட காலத்தி லிருந்த சிறைச் சாலைகளைப்போல் சீரழிந்து காணப்பட்டன. குற்றவாளிகளும் மனநோயுற்றவர்களும் கொடுமைப் படுத்தப் பட்டனர். சிறைச்சாலைகள் பொதுநலக் கேடுகள் நிறைந்த இடங் களாகவும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உணவும், உடைகளும். நடத்தப்பட்ட முறைகளும், மாந்தத் தன்மைக்கு அப்பாற்பட்டும் காணப்பட்டதால், குற்றவாளிகள் மாந்தப் பிறவியிலிருந்தே வேறுபட்டவர்களாகக் காணப்பட்டார்கள். மேசி மாமன்னரால் இந் நிலைமைகள் யாவும் மாற்றப்பட்டுச் சிறைச்சாலைகள் யாவும் சீர்திருத்தப் பள்ளிகளாக அமைக்கப்பட்டன. 'நோய் போக்க மருந்தைத் தேடுவதைவிட, நோய் வருமுன் காப்பது' என்னும் பொன்மொழிக்கேற்பக் குற்றவாளிகள் இருக்கும் சிறைச் சாலைகளைச் சீர்திருத்துவதற்கு முன்பாகக் குற்றவாளிகளே நாட்டில் ஏற்படாமல் காக்க முனைந்தார். குமுகாயம் நல்ல கல்வி யையும் பொருளியல் வளர்ச்சியையும் பெற்று விடுமானுல், எளிய மாந்தன் எவனும் திருடமாட்டான்; ஆயினும் எத்தகைய நல்ல குமுகத்திலும் சட்டமும் ஒழுங்கும் நிலைக்க பாதுகாவல் படை ஒன்று இருந்தே ஆக வேண்டும். இதனை நன்குணர்ந்த மேசி மாமன்னர் சிறந்த ஊர்க்காவல் படைகளை ஏற்படுத்தினுர். பள்ளி

களிலும், பொது மன்றங்களிலும் குற்றவாளிகளாகாமல் குமுகத்தின் தொண்டர்களாய், சட்டத்தை மதிப்பவர்களாய் இருக்க வேண்டிய வழிமுறைகள் புகட்டப் பட்டன. ஜப்பானியப் பொதுச் (Civil) சட்டங்கள் மேற்கத்திய நாடுகளின் மாதிரியிலும், வாணிகச் சட்டங்கள் செருமானிய மாதிரியிலும், குற்றவியல் சட்டங்கள் ஃபிரெஞ்சு நாட்டு மாதிரியிலும் தொகுக்கப்பட்டன. இச் சட்டத் தொகுப்புகள் யாவும் கி. பி. 1890ஆம் ஆண்டில் தொகுத்து வகுத்து நடைமுறையில் கொண்டு வருவதற்கு அணிய மாயின. ஆனால், பொதுச் சட்டங்கள் யாவும் 1892ஆம் ஆண்டி லிருந்தும், வாணிகச் சட்டங்கள் யாவும் 1899-லிருந்தும் நடை முறைக்கு வந்தன.

1873-ல் ஃபிரெஞ்சு நாட்டுச் சட்ட வல்லுநர் கசுதாவா பைசனதே டிஃபோந்தராபி (Gustave Boissona De De Fontarabie) என்பவர் குற்றவியல் சட்டங்களை ஜப்பானிய நாட்டு நிலக் கிழார்களின் சட்டங்களைத் தழுவிச் சட்டத் தொகுப்பைத் தொகுக்கத் தொடங் கினார். இவர் ஜப்பானிய அமைச்சரவையில் அறங்கூறும் அமைச் சரகத்திற்கு அறிவுரையாளராக இருந்தவர். இவருடைய முயற்சி யால் 1810-க்குள் ஜப்பானியக் குற்றவியல் சட்டங்கள் ஓரளவு தொகுக்கப்பட்டு விட்டன. இச் சட்டத் தொகுப்பு நெப்போலியன் சட்டத் தொகுப்பைப்போல் இருந்தது. எனவே இவை மீண்டும் ஜப்பானிய நாட்டு நடைமுறைகளை யொட்டி திருத்தி யெழுதப் பட்டு 1877-ல் முழுதுமாக உருப்பெற்றன. இவற்றை 1882-லிருந்து ஜப்பானிய அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இவர் எழுதிய பொதுச் சட்டத் தொகுப்பு முழுவதும் ஜப்பானியரின் வாழ்க்கை முறைக்கு ஒத்து வரவில்லை. ஏனெனில் அவை முழுக்க முழுக்கப் ஃபிரெஞ்சு நாட்டின் பொதுச் சட்டங்களைப் போன்றே இருந்தன. எனவே 1878-ல் பொதுச் சட்டங்களைத் தொகுப்ப தற்காக அமைக்கப்பட்ட ஒரு வல்லுநர் குழுவின் ஆய்வுக்கு இச் சட்டத் தொகுப்பு அனுப்பப்பட்டது. இக் குழுவும் இதற்குப் பின்னெழுந்த பல குழுக்களும் பன்னீராண்டுகள் உழைத்து 1890-ல் பொதுச் சட்டத் தொகுப்பை வெளியிட்டன. இச் சட்டத் தொகுப்பும் முழுக்க முழுக்க ஜப்பானியரின் வகுப்பு வாரியான அடிப்படையிலமைந்து, ஆங்கிலச் சட்ட முறையிலிருந்து வேறுபட் டதால் நாடெங்கிலும் இதை எதிர்த்துப் பெரும் புரட்சி தோன்றியது. இதனால் ஜப்பானியப் பாராளுமன்றம் இச் சட் டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும் காலத்தைத் தள்ளி வைத்தது. பொதுச் சட்டத் தொகுப்பும் வணிகச் சட்டத் தொகுப்பும் மீண்டும் எர்மான் உரோசிலர் (Hermann Roessler) என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் ஆய்வுக்கு

அனுப்பப்பட்டது. இக் குழு இதனை ஆய்ந்து வெளியிட்ட திருத்தங்களோடு கூடிய சட்டங்களை உடனடியாக வெளியிட முடியவில்லை.

ஜப்பானியச் சட்டங்களில் சொத்துரிமைகளைப் பற்றியும், குமுகாய அமைப்பு முறைகளைப் பற்றியும் பலகாலம் இருந்து வரும் பழக்க வழக்கங்களுக்கு மாருகப் பல கூறுபாடுகள் காணப்பட்டதால் இவற்றை மக்கள் எதிர்த்தார்கள். தொகுக்கப்பட்ட சட்டங்களில் வகுப்புவாரி உயர்வு தாழ்வுகளோ இடத்திற்கேற்ற நயன்மை முறைகளோ இல்லாமல் சட்டம் பயின்று தேறி நயன்மை மன்றங்களில் பயிற்சி பெற்றவர்களே நடுவர்களாக இருக்க வேண்டுமென்றும், நிலக்கிழமை நயன்மை மன்றம் போன்றவற்றை அகற்றி, நாடு முழுவதற்கும் ஒரே வகையான நயன்மை மன்றங்களை ஏற்படுத்தி, ஏற்றத் தாழ்வின்றி எல்லாருக்கும் ஒரே வகையான நயன்மை முறைகள் வழங்க வேண்டுமென்றும், மேற்கத்திய முறையில் நயன்மை மன்றங்களை அமைத்து நயன்மை உசாவல்கள் செய்து முறை வழங்கவேண்டு மென்றும் இச் சட்டத் தொகுப்புகளினுல் செய்த சீர்திருத்தங்களை மக்கள் எதிர்த்தனர். ஆயினும் இவ் வெதிர்ப்புகளை யெல்லாம் பொருட்படுத்தாமல் ஜப்பானிய நயன்மை மன்றங்கள் ஐரோப்பிய முறையில் அமைக்கப்பட்டன. நடுவர்களும், வழக்குரைஞர்களும் ஐரோப்பிய நயன்மை மன்றங்களின் நடைமுறைப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி அதே முறையில் உடைகளை அணிந்தனர்.

இத்தகைய மேற்கத்திய முறை நயன்மை மன்றங்கள் ஜப்பானில் ஏற்பட்ட பின் குமுகாயத்திலும், அரசியலிலும் ஒழுக்கங்கள் ஏற்பட்டன. சான்ருக ஜப்பானில் பொது நீராடு மிடங்களில் ஆணும் பெண்ணுமாக எல்லாரும் சேர்ந்து நீராடும் வழக்கம், தடுக்கப்பட்டது. உணர்ச்சிகளைச் சுண்டியிழுக்கும் படங்களும் கலைப்பொருள்களும் தடை செய்யப்பட்டன. இத்தகைய சீர்திருத்தங்களை மேனுட்டு மேதைகளும் புகழ்ந்து போற்றினர். இவை யாவும் ஜப்பானில் செவ்வனே செயல் படுவதற்கு மேசி மன்னரும் மற்றும் கன்ஃபூசிய சமயத்தில் பயிற்சி பெற்றவர்களும், பெருநிலக்கிழார்களும் பெரிதும் ஒத்துழைப்பளித்தனர். எனவே ஜப்பானில் இக் காலத்தில் ஏற்பட்ட குமுகாய வளர்ச்சியை விக்டோரியா காலத்து இங்கிலாந்தோடு ஒப்பிட்டுப் பெருமையடையலாம்.

## பொருளியல் ஏற்றம்

### வேளாண்மை வளர்ச்சி


ஜப்பானில் பொருளியல் வளர்ச்சி ஏற்படுவதற்குத் தொழிற்சாலை முறை (Factory System) நடைமுறைக்கு வந்ததுதான் அடிப்

படைக் கரணிய மென்பர் சிலர். ஆனால், அதற்கு முன்பாகவே 1871-ல் பெருநிலக் கிழார்கள் தங்கள் உரிமைகளை விட்டுக்கொடுத்ததால்தான் ஜப்பானின் பொருளியல் வளர்ந்த தென்பதே உண்மையான கரணியமாகும். நிலக்கிழார்களே தங்கள் நிலங்களைப் பயிரிட்டு வந்த காலத்திலும் பண்ணை முறை இருந்தது. ஆயினும் இப் பண்ணை முறையில் புதிய கல்வியால் ஏற்பட்ட வேளாண்மைப் புரட்சியை எளிதில் புகுத்த முடியாது. ஏனெனில் இவை தனி நிலக்கிழார்களுக்குச் சொந்தமாயிருந்தன. நிலக்கிழமை முறை ஒழிக்கப்பட்ட பின் பண்ணை முறையில் வேளாண்மைப் புரட்சி தீவிர மடைந்தது. 1876-ல் ஒக்கைதோவிலும், 1877-ல் தோக்கியோவிலும் வேளாண்மைப் பல்கலைக்கழகங்களும், செயல் விளக்கத் திட்ட முறைகளும் அமைக்கப்பட்டன. இவற்றில் பயிற்சி பெற்றவர்கள் நாடு முழுவதற்கும் சென்று வேளாளர்களுக்குப் பயிரிடும் முறைகளைச் செய்முறைகளால் விளக்கினார்கள். அதிகப் பரப்பளவுள்ள பண்ணைகளில் எந்திரக் கலப்பைகளைக் கொண்டு பயிரிடும் முறைகளையும், ஓர் ஏக்கருக்குக் குறைந்தும் மலையுச்சிகளில் காணப்படும் சிறுசிறு நிலப் பரப்புகளில் குறைந்த அளவில் நிறைந்த பயன்பெறும் முறைகளையும் கற்பித்து வேளாண்மைப் புரட்சியை ஏற்படுத்தினர். இதனால் 1880-லிருந்து 1894-க்குள் ஜப்பானில் அரிசி விளைப்பு 30% ஆக உயர்ந்தது. ஒவ்வோர் ஏக்கருக்கும் 20% அதிக விளைச்சல் கிடைத்தது. கோதுமை, பார்லி முதலியவைகளின் விளைச்சலும் அதிகமானதால் அரிசி நுகர்வுக் கிருந்த தேவை (Demand) குறைந்துவிட்டது.

கடலோரமுள்ள ஊர்களிலெல்லாம் வேளாண்மைப் பண்ணை முறையோடு மீன் பண்ணை முறையும் உயர்வு பெற்றது. புதிய முறையில் படகுகளை அமைத்து மீன் பிடிக்கும் வழிகளைப்பெருக்கிக் கொண்டனர். துணைத்தொழிலாக இருந்த மீன் பிடிக்கும் தொழில் ஜப்பானின் முகாமைத் தொழில்களில் ஒன்றாக விளங்கியது. இதைப் போலவே நெசவுத் தொழிலும் மிக விரைவாக முன்னேறியது. 1888-க்குப் பிறகு ஜப்பானின் பஞ்சாலைகளின் வளர்ச்சி அதிகரித்தது. அதன் பெரும்பாலான மூலப் பொருள்களை அயல் நாடுகளிலிருந்து வரவழைத்துக் கொள்வது போலவே பஞ்சையும் இந்தியாவிலிருந்து தருவித்துச் சிறந்த ஆடைகளாய் நெய்து ஏற்றுமதி செய்தது. நெசவுத் தொழிலில் ஜப்பானை உலக நாடுகளின் சந்தையில் முதலிடம் பெற வைத்தது அதனுடைய பட்டாடையாகும். 1860-ல் முதன் முதலாக இதன் பட்டாடை விற்பனை ஐரோப்பாவில் தலைசிறந்து நின்றது. அதற்குக் கரணியம் அவ் வாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட ஒரு வகை நோயினால் பட்டுப்பூச்சிகள்யாவும் இறந்துவிட்டன.

ஐரோப்பியச் சந்தையை ஆளுமை செய்துகொண்ட ஜப்பான் பட்டு விளைப்புச் செய்வதில் முழு மூச்சுடன் இறங்கியதால் பலவாயிரக் கணக்கான ஜப்பானியக் குடும்பங்கள் மேன்மேலும் இத்தொழிலில் ஈடுபட்டன. 1883-ல் ஜப்பானின் பட்டு விளைப்பு 37,77,939 பவுண்டு எடையுள்ளதாக இருந்தது. இது மொத்தம் 270 இலக்கம் யென் (Yen) அயலகச் செலாவணியை ஜப்பானுக்குக் கொடுத்தது. நெல், கோதுமை, பார்லி, ஆகியவற்றின் மிகுதியான விளைவால் அரசுக்கும் அதிக வருவாய் கிடைத்தது. 1880-ல் ஜப்பானின் வருவாயில் 80% வேளாண்மையி லிருந்தே கிடைத்தது. இவ்வாறு ஏழ்மையில் உழன்று கொண்டிருந்த ஜப்பானியச் சிற்றூர்கள் வேளாண்மைப் புரட்சியால் பட்டுப்பூச்சிகளை வளர்த்து பணப்பயிரைத் தங்கள் நிலங்களில் அறுவடை செய்தனர். எனவேதான் நாடு முழுமைக்கும் நன்மை தந்த வேளாண்மைப் புரட்சியே ஜப்பானியப் பொருளியல் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் கரணிய மென்கிறோம். தொழிற் புரட்சியால் நகரங்கள் மட்டுமே சிறப்படைந்தன. மேலும் சிற்றூர்களிலிருந்து குறைந்த கூலிக்கு வேலை செய்யப் பலர் ஈர்க்கப்பட்டனர். வேளாண்மைப் புரட்சியால் உள்நாட்டுச் சந்தைகளில் உணவுத் தவசங்கள் (Food grains) மலிவாகக் கிடைத்தன. இதனால் நாட்டில் உணவு தன்னிறைவு பெற்றது. நிலக்கிழமை முறை ஒழிந்ததால் ஆயிரக் கணக்கான வேளாளர்கள் அவர்கள் பிடியிலிருந்து விடுதலை பெற்றார்கள். சிற்றூர்களிலிருந்த பிரிவு மனப்பான்மை ஒழிந்தது. தேசிய உணர்வும் தேசியச் சந்தைகளை அமைக்கும் ஆர்வமும் சிற்றூர் மக்களுக்கு ஏற்பட்டது. இவர்களின் பொருளியல் சமநிலையைக் காக்கவும் சொத்துரிமையைக் காக்கவும் மேலும் அவர்களின் பொருளியல் வளர்ச்சிக்கு வழி வகுக்கவும் அரசு பெரிதும் ஆர்வம் கொண்டது. அவர்களின் உருவாக்கப் பொருள்களை விற்பதற்கான சந்தைகளை அமைத்தும் போக்கு வரவு வழிகளைப் பெருக்கியும் வேளாண்மைக் கண்காட்சிகளையும், விழாக்களையும் ஏற்படுத்தியும் அரசு வேளாளர்களுக்குப் பணி புரிந்தது. வேளாண்மைத் துறையில் உயர்தரக் கல்வி பெற ஜப்பானிய மாணவர்கள் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு அனுப்பட்டார்கள். அயல் நாடுகளிலிருந்தும் வேளாண்மைத் துறையில் வல்லுநர்களும் பொறியிய லாளர்களும் தொழில் வல்லுநர்களும் ஜப்பானுக்கு வரவழைக்கப்பட்டனர். 1879ஆம் ஆண்டில் பொதுப்பணித்துறையில் மட்டும் 130 அயல் நாட்டு வல்லுநர்கள் ஜப்பானில் பணியாற்றினார்கள். 'இதுவரையில் ஆசிரியர்களை மட்டும் வரவழைத்துக் கொண்டிருந்த ஜப்பான் இப்போது தொழில் வல்லுநர்களையும் வரவழைக்கிறது' என்று ஒரு பிரிட்டானிய நிலையர் கூறினார்.

# ஜப்பானின் அதிகார வளர்ச்சி



இத்தகைய வேளாண்மைப் புரட்சிக்கு அரசு பொதுப் பணித் துறையின் மூலம் நீர்பாசன ஏந்துகளையும் நீர்வழிகளையும் நிலப் பாதைகளையும் ஏற்படுத்திக் கொடுத்ததோடு நிலவள வைப்பகங் களை ஏற்படுத்திக் கடன் கொடுக்கவும் வகை செய்தது. இம் முறையில் முன்னரே வட்டிக் கடைக்காரர்களாக நாடெங்கிலும் நிலைத்திருந்த தொகுகவா வணிகர்களை அடியோடு ஒழிக்காமல் முறையான வட்டிக்குக் கடன் கொடுக்கும்படி அரசு அவர்களைப் பணித்தது. தங்கள் நிலங்களை அரசிடம் கொடுத்து விட்டு இழப்பீடு பெற்ற நிலக்கிழார்கள் அரசு வைப்பகத்தில் தங்கள் பணத்தை முதலீடு செய்ததால் தொழில் வளர்ச்சிக்கும் வேளாண்மை வளர்ச்சிக்கும் இது பெரிதும் உதவியா யிருந்தது. சிலர் தாங்களே வட்டிக்குக் கடன் கொடுத்தும், தொழில்களைத் தொடங்கியும் பொருளியல் ஏற்றத்திற்கு உதவினர்.

இருபதாம் நூற்றுண்டில் வேளாண்மை வளர்ச்சியை விடத் தொழில் வளர்ச்சியே சிறப்புற்றுக் காணப்பட்டபோதிலும், 1920-ல் ஒரு கோடியே நாற்பதிலக்கம் மக்களுக்குமேல் வேளாண்மையி லீடுபட்டிருந்தனர். இதனுல் 1884-ல் மூன்று கோடி 'கோகு' (Kouk) நெல் விளைந்தது; 1894-ல் இது நான்கு கோடி 'கோகு' வாக உயர்ந்தது. அடுத்த பத்து ஆண்டுகளில் நான்கு கோடியே ஐம்பதிலக்கமாக உயர்ந்து, 1914-ல் ஐந்து கோடியே பத்திலக்கமாக மேலும் உயர்ந்தது. 'கோகு' என்பது ஜப்பானியக் கொள்ளளவை முறையாகும். [ஒரு கோகு என்பது ஏறத்தாழ ஐந்து மூட்டையாகும்-(4.96 Pushels) ] நெல் விளைப்பைப் போலவே பட்டு விளைப்பும் இக் காலத்தில் உயர்ந்து கொண்டே போனது. 1894-ல் ஒரு கோடியே பதினைந்து இலக்கம் பவுண்டு எடையளவு விளைந்த பட்டு 1904-ல் ஒரு கோடியே அறுபத்தைந்திலக்கம் பவுண்டாக உயர்ந்து, 1914-ல் மூன்றுகோடியே பத்திலக்கம் பவுண்டு எடையாக உயர்ந்தது. அவ் வாண்டின் மொத்தப் பட்டு ஏற்றுமதியின் மதிப்பு 14 கோடியே 40 இலக்கம் 'யென்' ஆகும். இவற்றைத் தவிர கோதுமை, பார்லி இவற்றின் விளைச்சலும் மிகுந்தே காணப்பட்டன.

இவ்வாறு விளைச்சல் அதிகமாக அதிகமாக வேளாளர்களும் தங்கள் செலவை அதிகரிக்க வேண்டியதாயிற்று. புதிய உழவுக் கருவிகள், இதளியவுரங்கள், ஒட்டு வீரிய விதைகள் வாங்குவதற்கும் நிலவரி செலுத்துவதற்கும் அதிகப் பணம் செலவாயிற்று. இதனுல் பல நிலக்கிழார்கள் இச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் நிலங்களைக் குத்தகைக்கு விட வேண்டிய

நாயிற்று. 1900-ல் ஐந்தில் இரண்டு பங்கு விளைநிலம் குத்தகைக்காரரிடமிருந்தது. பெரும்பாலார் நிலங்களை விற்று விட்டும் குத்தகைக்கு விட்டும் நகர்ப் புறங்களில் குடியேறி வணிகத்திலும் தொழிலகங்களிலும் முதலீடு செய்து நகர வாழ்க்கையை மேற்கொண்டுவிட்டனர். இதனால் இவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. கல்வியிலும், பொருளியலிலும், 'ஆடம்பரத்திலும்' உயர்ந்து நின்ற இவர்கள் அரசியலிலும் செல்வாக்குப் பெற்று நிலக்கிழார்களைப் போல் வாழ முற்பட்டனர்.

ஏழைகளுக்கு வேளாண்மையால் பெருநன்மை ஏற்படவில்லை. ஓரளவு பட்டு விளைப்பு இவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க உதவியது. பட்டு விளைப்பும், பட்டுநெசவும் சிற்றூர்களிலேயே ஒரு பகுதியாகக் கொள்ளப்பட்டது.

தொழில் வளர்ச்சி

வேளாண்மை வளர்ச்சியை யடுத்து ஜப்பானின் பொருளியல் ஏற்றத்திற்கு வாய்ப்பாக அமைந்தது மேசியின் காலத்தில் ஏற்பட்ட தொழிற்சாலைகளும், பலதரப்பட்ட கைத்தொழில் களும், அயல் நாட்டு வாணிக வளர்ச்சியுமாகும். இத்தகைய உருவாக்கத்தில் அரசு தலையிட முடிய வில்லை. இதனால்தான் இருப்புப் பாதைகள் போன்ற போக்குவரத்து அமைப்பதிலும், தொகுகவா குடும்பத்தினரையும், மற்றும் பணக்காரர்களையும் அரசு தலையிடச் செய்தது. மேசியின் காலத்தில் ஏற்பட்ட பொருளியல் புரட்சிக்கு அரசை விடத் தனியார் துறைகளின் முயற்சிகளே பெரிதும் உதவின. இதனால்தான் ஒரு சில குறிப்பிட்ட குடும்பங்கள் முதலாளியக் குடும்பங்களாயின. அத்தகைய குடும்பங்களில் மித்சு, பிசி ஆகிய குடும்பங்களும் சைபாத்சு எனப்படும் சுமிதொமோ, யசுதா ஆகிய குடும்பங்களும், நாட்டின் வாணிகத்தையும், போக்குவரத்தையும், வைப்பகங்களை யும் ஆளுமை செய்து கொண்டன. சைபாத்சு குடும்பங்கள் வணிகத்துறை முழுவதையும் கைப்பற்றிக் கொண்டதால் ஜப்பானிய நாடு தன்னிச்சையாகச் செயல் பட முடியவில்லை. முதலில் இது அரசுக்கு உதவியாக நாட்டின் முன்னேற்றப் பணிகளில் முதலீடு செய்யவில்லை. இதனால் அரசு அயல் நாடுகளிலிருந்து பெருங்கடன் வாங்க வேண்டியதாயிற்று.

இத்தகைய கடின முயற்சிகளுக்குப் பின் பலவகையான தொழிலகங்களும், கப்பல் கட்டும் தளங்களும், பட்டு விளைப்புச் சாலைகளும் பஞ்சாலைகளும் நாடெங்கிலும் நிறுவப்பட்டன.

1870-ல் தொமியோகா, மெய்பாசி ஆகிய இடங்களில் ஃபிரான்சு, இத்தாலிய முறையில் பட்டு விளைப்பு முறை தொடங்கப் பெற்றது. இதனால் பட்டின் நயமும், உறுதியும் பளபளப்பும் அதிகரித்தது. 1872-ல் பைஞ்சுதைத் தொழிற்சாலை ஒன்று தொடங்கப் பெற்ற தால் இறக்குமதிச் செலவில் பாதி குறைக்கப்பட்டது. கண்ணாடி செய்யவும், ஓடுகள் (Tiles) செய்யவும் பல தொழிற்சாலைகள் தொடங்கப் பெற்றன. வேதியல் பொருள்களை உற்பத்தி செய்ய வேதியல் (Chemicals) தொழிற்சாலைகளும் தொடங்கப் பெற்றன. 1878-ல் நகோயா என்னுமிடத்தில் பருத்தி நூற்பாலை ஒன்று தொடங்கப் பெற்றது. ஒக்கைதோவில் ஒரு சருக்கரைத் தொழிற் சாலை தொடங்க பெற்றது. இத்தகைய வளர்ச்சிகளுக்குப் பின்னும் கி. பி. 1880ஆம் ஆண்டுக் கணக்குப்படிப் பார்த்தால் மூன்று கப்பல் தளங்களும், பத்துச் சுரங்கங்களும், ஐந்து வெடிமருந்துச் சாலைகளும், 52 தொழிற்சாலைகளும்தான் அரசுக்குச் சொந்தமா யிருந்தன. தனியார் துறைகள் மற்ற எல்லா நிறுவனங்களையும் கைப்பற்றியிருந்தன. அரசின் மொத்த வருமானத்தில் 50% இத் தொழிலகங்களில் முதலீடு செய்யப்பட்டது. சாமுராய்களுக்கு ஓய்வுகால ஊதியம் கொடுப்பதிலும், சத்சுமா கலகத்தை அடக்கி யதிலும், அரசுக் கருவூலம் வற்றியது. விலைவாசிகள் ஏறின. அரசு நிலவரியைக் குறைத்தும், வேளாளர் அரிசி விலையை ஏற்றியே விற்றனர்.

இப் பொருளியல் நெருக்கடியைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் 1881-ல் மத்சுகதா மசா யொசி என்பவரை பொக்கச அமைச்சராக அமர்த்தியது. இவர் புகையிலை, சாராயம் முதலிய வற்றின் மீதிருந்த வரியை உயர்த்தினார். அரசு கொடுக்கும் மானியங்களையும் உதவித் தொகைகளையும் குறைத்தார். 1886-ல் அரசு வாங்கிய கடன்களுக்கு 10%-லிருந்து 5% வட்டி குறைக்கப் பட்டது. 1894-ல் 'யென்' தாள் பணத்திற்கும் வெள்ளிப் பணத் திற்கு மிடையேயிருந்த மதிப்பின் வேறுபாடு நீக்கப்பட்டது. 1880-ல் அரசு தனது தொழிற்சாலைகளையும், மற்ற நிறுவனங் களையும் தனியாருக்கு விற்க முற்பட்டது. மித்சுபிசி குடும்பத்தார் 1884-ல் நாகசாகிக் கப்பல் தளத்தையும், மித்சு குடும்பத்தார் தொமியோகா பட்டு ஆலையையும், ஃபுருகவா குடும்பத்தார் சுரங்கங்களையும் அரசிடமிருந்து வாங்கிக் கொண்டனர். இவ்வாறு அரசு நடத்தி வந்த நிறுவனங்களை விற்று விட்டதால் உதவித் தொகை, மானியம் முதலியன கொடுப்பது மிச்சமாயிற்று. இதற்குப் பின் அரசின் புதிய பொருளியற் கொள்கை வேறுவழியில் வளரத் தொடங்கியது. தனியார் பெரிய தொழிலகங்களை அமைத்து உருவாக்கத்தைப் பெருக்கலாயினர். 1881, 1883

ஆகிய ஆண்டுகளில் புதிய கப்பல் கட்டும் தளங்கள் அமைக்கப் பட்டன. சிபாவுரா (Shibaura) இயந்திரத் தொழிலகம் 1887-ல் நிறுவப்பட்டது. 1892-ல் இதுபோன்ற பல நிறுவனங்கள் நிறுவப் பட்டு மின்சாரக் கருவிகளும் மின்சார இயந்திரங்களும் பெரு மளவில் உருவாக்கம் செய்யப்பட்டன. 1892-ல் தான் முதன் முதலாக ஜப்பான் தானியங்கி (Locomotives) இயந்திரங்களை அமைத்தது. சுரங்கத் தொழிலும் புதிய இயந்திரங்களைப் பயன் படுத்திப் பேரளவான கனிகளை வெட்டி யெடுத்தது. சான்றாக 1895-ல் ஐம்பதிலக்கம் மெட்ரிக் கல்லெடையுள்ள நிலக்கரியை புதிய இயந்திரங்களைக் கொண்டு வெட்டி யெடுத்தது. இக் காலத்தில் தனக்கு வேண்டிய இரும்பையும், எஃகையும் அயல் நாடுகளிலிருந்தே பெற்றதால் நிலக்கரியின் பயன் இதற்குத் தேவைப்படவில்லை. எனவே செம்பையும், நிலக்கரியையும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது. இத்தகைய பெருவாரியான வளர்ச்சியால் ஜப்பானியப் பொருளியல் ஒரு புதிய திருப்பத்திற்கு வந்தது. இயந்திர உற்பத்தி கப்பல் கட்டுதல், இவற்றோடு தொடர்புள்ள வாணிகம் முதலியன குழந்தைப் பருவத்திலேயே இருந்தன. ஆனால், ஆள் வண்டி (Ricksha), மிதிவண்டி (Bicycle), நீர்கசியாப் பாய்கள், குழாய்கள் கழிவிடங்கள் முதலியவற்றிற்குப் பயன்படும் துப்புரவுக் கருவிகள், பொருக்கு விதைகள், இதளிய எருக்கள், மண்ணெண்ணெய், மின்விளக்குகள், இயந்திரக் கைத் தறிகள், மீன்பிடிக்கும் படகுகளில் பொருத்தப்படும் எரிவாயு இயந்திரங்கள், வணிகக் கணக்கியல் முதலியவற்றில் அதிகமாக முன்னேறி அவை தொடர்பான தொழிலகங்களை நாடெங்கிலும் நிறுவியதால் பொருளியல் பெருக்கம் ஏற்பட்டது. இதனால் தேசிய வருவாய் பன்மடங்கு அதிகரித்தது. எனவே வாங்கும் சத்தி அதிகமாகி ஜப்பான் பெரும் தொழிற்சாலைகளை அமைத்து பெரு வாரியான உருவாக்கப் பொருள்களை வெளியிட முற்பட்டது.

இவ்வாறு பெருவாரி உருவாக்கப் பொருள்களாக வளர்ந்த தொழில்களில் நெசவு முதலிடம் பெற்றது. நூல் நூற்றல், நெய்தல் ஆகியவற்றிற்குக் குறைந்த அளவில் செலவு செய்து, நெய்த ஆடைகளை நிறைந்த விலைக்கு விற்றுப் பெரும் ஊதிய மடைந்தது. பெருந் தொழிற்சாலைகளையமைந்த ஜப்பான், தொழிற்சாலைகளில் உருவாகும் பொருள்களின் பாகங்களைப் பகுதித் தொழில்களாகப் பிரித்துச் சிலவற்றைச் சிறு முதலீட்டைக் கொண்டு குடிசைத் தொழில்களைப்போல் செய்து இணைத்ததால் உருவாக்கச் செலவு குறைந்தது. இந்த முறையைக் கையாண்ட தால் நெசவுத் தொழிலை அதிக ஊதியமுடையதாய் மாற்றியது. பருத்தியாடை நெய்வதில் முதலிடம் பெற்ற ஜப்பான் பட்டாடை

உருவாக்கத்தைத் தான் மேற்கொள்ளாமலும், பட்டை நூலாக நூற்காமலும் செடியிலிருந்து எடுத்த பட்டுக் கூடுகளை அப்படியே வெளிநாடுகளுக்கு அனுப்பி உழைப்பின்றி அதிக ஊதியம் பெற்றது. பருத்தியாடை உருவாக்கத்தில் மட்டும் முழுக் கவனத்தைச் செலுத்திய ஜப்பான் 1893-ல் ஒரு கோடியே பத்திலக்கம் பவுண்டு எடையுள்ள பருத்தியாடையை உருவாக்கியது. 1887-ல் இதில் பாதியாக இதன் உருவாக்கம் இருந்தது. ஜப்பானுக்கு வேண்டிய பஞ்சு முழுவதும் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டது. இவற்றில் பெரும்பகுதி இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகும். சிற்றுடைகள் நெய்தல், உள்நாட்டு உருவாக்கத்திற்கான நூல்களை நூற்றல் முதலியவற்றை ஜப்பானின் குடிசைத் தொழிலாக ஒதுக்கியதால் பெருவாரியான ஜப்பானியர் கைத்தறியைக் கொண்டு பிழைக்கலாயினர். நயமான நூல்களை நூற்றுப் பெருவாரியான சிறந்த ஆடைகளை உருவாக்கம் செய்யும் திட்டங்கள் புதிய இயந்திர நெசவாலைகளில் மேற்கொள்ளப் பட்டன. ஆகவே 1895-ல் ஜப்பானிய ஆடைகள் உலகச் சந்தையில் முதவிடத்தைப் பெற்றன.

நெசவுக்கு அடுத்தபடியாக ஜப்பானில் பத்தாண்டுகளில் ஆறு பங்கு வளர்ச்சியடைந்த தொழிலகங்களைக் குறிப்பிடலாம். இக்காலத்தில் பத்திலக்கம் கல்லெடையுள்ள நிலக்கரி ஜப்பானியத் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்டது. 1897-ல் உருவாக்கம் செய்யப்பட்ட பொருள்களில் 48. 6% அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதில் 26. 2% நெய்யப்பட்ட ஆடைகளாகும்.

இத்தகைய தொழிற்புரட்சிக்குக் கரணியம் அரசே எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, திட்டங்களை வகுத்துக் கொடுத்து, திட்ட வல்லுநர்களையும், செயல் விளக்குநர்களையும், செயல் விளக்கக் கண்காட்சிகளையும் நாடுமுழுவதும் ஏற்படுத்தி அரசு மானியமும், பொருளுதவியும் கொடுத்ததால் ஏற்பட்டதென்று நினைக்க வேண்டாம்.

இத்தகைய பெரும் வளர்ச்சிக்குக் கரணியம் ஒவ்வொரு ஜப்பானியனும் உழைப்பையே முதலீடாகக் கொண்டு தாம் தாம் முன்னேற வேண்டுமென்று உழைத்த உழைப்பே மிகக் குறுகிய காலத்தில் உலகமே வியக்கும் வண்ணம், ஜப்பானை ஒரு தொழில் மயமான நாடாகமாற்றியது. குறிப்பாக எடுத்த எடுப்பிலேயே தலை சிறந்து நின்று உலகச் சந்தையைக் கவர்ந்த ஜப்பானிய ஆடையுருவாக்கத்தில் அதன் அரசு சிறு அக்கறையோ,கவனமோசெலுத்தவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு ஜப்பானியனும்

தொழிலைக்கற்று எப்போதும் உழைத்து, அத் தொழில றிவைப் பெருக்கித் தன்னுடைய குடும்பம் முழுவதையும், அதில் ஈடுபடச் செய்ததால்தான் ஒவ்வொரு தொழிலும் சீரிய முறையில் வளர்ந்து பல புதிய கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இத் தகைய குடும்பங்களில் சாமுராய்களின் குடும்பங்கள் முதலிடம் பெறுகின்றன. இவசாகி யதாரோ என்னும் சாமுராய் ஜப்பானியத் தொழிலகங்களை வளர்ப்பதில் பெரு முயற்சி எடுத்துக் கொண்ட வர்களில் ஒருவராவார். நாம் முன்னரே குறிப்பிட்டபடி மித்சு போன்ற வாணிகக் குடும்பதினர் இத்தகைய தொழில் வளர்ச் சிக்குப் பெரிதும் தங்கள் பணத்தை முதலீடு செய்து உருவாக்கப் பொருள்களை விற்பனை செய்து ஊக்கமளித்தார்கள். இதனால் சாமு ராய்கள் தொழில்வளத்தை மேம்படுத்துபவர்களாகவும், வாணி கத்தை வளர்ப்பவர்களாகவும், மேனாட்டு அறிவியலைக் கற்றுத் திரும்புபவர்களாகவும், சிறந்த படை வீரர்களாகவும், குடிமை அதிகாரிகளாகவும் மாறிச் குமுகாயத்தில் சமநிலை மக்களை ஏற்படுத் தினார்கள். இவர்களை முன்னோடிகளாக வைத்து ஜப்பானியக் குமுகாயம் தனக்குத்தானே முன்னேறியது. மிக வெளிய மாந்தனும் கூட இத்தகைய தொழில் துறைகளில் ஈடுபட்டு முன்னேறியதால் முன்னிலை மீட்சிக்கு முன்பிருந்த நிலை மாறிப் பொருளியயில் குமுகாயத்தில் பரவலாக வளர்ந்து ஒரு சமமான பொருளியல் குமுகாயத்தை ஏற்படுத்தியது. இதனால் குமுகா யத்தில் ஒட்டு மொத்தமான முன்னேற்றம் ஏற்பட்டு அதன் வழி ஜப்பானிய தேசியம் உலக நாடுகளின் நடுவில் சிறப்பாக மதிக்கப் பட்டது.

ஜப்பானின் தொழில் வளர்ச்சியில் இயந்திர தொழிற்சாலை களில்தான் அதிகமான முதலீடு செய்யப்பட்டது. 1893-ல் இருபத் தாறிலக்கம் 'யென்' முதலீடாக இருந்தது. 1903-ல் இது ஒரு கோடியே 46 இலக்கம் 'யென்' ஞக ஏறியது. இதற்குத் தகுந்தாற் போல் கப்பல் கட்டும் தொழிலும் விரிவடைந்தது. 1893-ல் பதினான்கு விழுக்காடாக (14%) இருந்த ஜப்பானியக் கப்பல் கட்டும் தொழில் 1903-ல் 35% ஆக உயர்ந்தது. இரும்பு எஃகு உருவாக்கமும் 1896-லிருந்து 1901-க்குள் பன்மடங்காக உயர்ந்தது. 1901-ல் ஈரிலக்கத்து நாற்பத்து மூவாயிரம் கல்லெடையாக இருந்த இரும்பு 1913-ல் 2,55,000 மெட்ரிக் கல்லெடையாக உயர்ந்தது. 1895-ல் ஐம்பதிலக்கம் கல்லெடையாக இருந்த நிலக்கரி உற்பத்தி 1905-ல் ஒரு கோடியே முப்பதிலக்கம் கல்லெடையாக உயர்ந்தது. இவ்வாறு இரும்பு, எஃகு, நிலக்கரி ஆகியவைகளின் உருவாக்கம் வளர்ச்சி அதிகமானதால் கப்பல் கட்டும் தொழிலும், இயந்திரத் தொழிற்சாலைகளும், போர்க்கருவிகளின் உருவாக்கமும்

அதிகரித்தன. இதனல் பத்தொன்பதாம் நூற்றுண்டினிறுதிக்குள் தன்னம்பிக்கையும் தன்னிறைவும் ஏற்பட்டன. ஆனல், அதே சமையத்தில் அயல் நாடுகளுக்கு ஜப்பானிய வளர்ச்சியால் அதிக அச்சம் ஏற்பட்டது. இதனல் தான் மிகத் தாழ்வாகக் கருதப்பட்ட ஜப்பானேடு இங்கிலாந்தும், அமெரிக்காவும், பிறநாடுகளும் நட்புறவு கொண்டன; சீனவையும், உருசியாவையும் ஜப்பானல் வெல்ல முடிந்தது.

ஜப்பானியத் தொழில் வளர்ச்சியில் முதலிடம் பெறும் நெசவுத் தொழில் இருபதாம் நூற்றுண்டில் மேலும் வளர லாயிற்று. 1893-ல் மூன்றிலக்கத்து எண்பத்தீராயிரம் இயந்திரத் தறிகளைப் பெற்றிருந்த ஜப்பானில், 1913-ல் இருபதிலக்கத்து நாற்பதிஞயிரம் இயந்திரத் தறிகளாயின. அவ்வாண்டின் மொத்த பஞ்சு விளைப்பு அறுபத்தைந்து கோடி பவுண்டு எடையாகும். இதில் முப்பதிலிருந்து நாற்பது விழுக்காடு வரை நூலாக அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1913-ல் ஏறத்தாழ 85ஆயிரம் பேர் நூற்பாலைகளில் பணியாற்றினர். அந்த ஆண்டின் நூல் ஏற்றுமதியால் ஜப்பானுக்கு மூன்றுகோடியே முப்பதிலக்கம் 'யென்' வருவாய் கிடைத்தது.

இத்தகைய தொழில் வளர்ச்சியால் ஜப்பானில் மக்கள் தொகையும் பெருகிக் கொண்டே போயிற்று. குறிப்பாக இவை 19 மாநிலத் தலைநகரங்களிலும், கியோத்தோ, யோகாமா, நகோயா, கொபே, ஓசாகா ஆகிய நகரங்களிலும், ஜப்பான் நாட்டுத் தலைநகரான தோக்கியோவிலும் மிக அதிகமாகக் காணப் பட்டது. இவர்களுக்கான இயற்கையேந்துகள் நகரங்களில் சரிவரக் கிடைப்பதும் கடினமாயின. நகரங்களின் மக்கள் தொகை வளர்ச்சியை மேலெழுந்த வாரியாக நோக்கினல் பிற்கால நகர வாழ்க்கை முறையில் எழுந்த பலதரப்பட்ட சிக்கல்களை நாம் ஒருவாறு ஊகிக்கலாம். 1893-ல் மொத்த மக்கள் தொகையில் 16% நகரங்களில் வாழ்ந்தார்கள். 1913-ல் இது 28% ஆகவுயர்ந்தது. இதற்குக் கரணியம் நகரங்களில் ஏற்பட்ட தொழிற்சாலைகள்தாம். 1900-ல் தொழிற் சாலைகளில் 4,20,000 பேர் பணியாற்றினர். 1913-ல் இவர்கள் தொகை இரண்டு மடங்காயிற்று. இதற்குத் தகுந்தாற்போல் அவர்களுடைய கூலியும் உயர்ந்து கொண்டே போயிற்று. இதனல் ஒவ்வொரு ஜப்பானியனின் தலை வருமானம் ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே போயிற்று. மொத்தத்தில் நாட்டின் மக்கள் தொகை 1873-ல் மூன்று கோடியே ஐம்பதிலக்கமாக இருந்தது. 1903-ல் நான்கு கோடியே அறுபதிலக்கமாகப் பெருகியது. இதனல் உணவுப் பற்றுக்குறை அதிகரித்தது. அதனைப் போக்குவதற்கு

1904-ல் முப்பதிலக்கம் 'கோகு' தவசம் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. நகரங்களில் மக்கள் தொகை அதிகரிக்க அதிகரிக்க, தொழிலாளர் தகராறுகளும் மிகுதியாயின. இவற்றைத் தடுக்க அரசு கையாண்ட முறைகளும், அவற்றை எதிர்த்து எழுந்த கிளர்ச்சிகளும், தொழிற் சங்கங்களின் வளர்ச்சிக்கும், தொழிற் கட்சிகளின் அமைப்பிற்கும் வழி வகுத்தன. தொழிலகச் சட்டங்களால் பெண்கள், குழந்தைகளின் வேலை நேரம் குறைக்கப்பட்டது. ஓய்வு கால ஊதியம், இழப்பீடு போன்ற ஏந்துகளுக்கும், தொழிலகச் சட்டங்கள் வழி வகுத்தன.

இவ்வாறு வளர்ந்த தொழில் வளத்தால் ஜப்பானின் பொருளியலில் மட்டுமின்றி, கல்வி, நயன்மை, குமுகம், அரசியல் முதலிய எல்லாவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டதோடு அதன் அயலகக் கொள்கையிலும், அதிகாரக் கொள்கையிலும் புதிய திருப்பங்கள் ஏற்பட்டன. மக்களின் உணவு, உடை முதலியவை ஐரோப்பிய முறையில் மாறின. அவர்களுடைய பொழுது போக்குக் கலைகளும் மேற்கத்திய முறைகளையே தழுவி நின்றன. மேற்கத்திய இசையும், மேற்கத்திய நடனங்களும் நகர மக்களால் பெரிதும் விரும்பப் பட்டன.

### அயல்நாட்டு வணிக ஒப்பந்தங்கள்

1858-ல் தளபதி பெரியுடன் செய்து கொண்ட வணிக ஒப்பந்தத்தை மாற்றியமைப்பதற்காக ஜப்பான் இவாகுரா என்பவரின் தலைமையில் 1872-ல் அமெரிக்க ஒன்றிய நாடுகளுக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பியது. அமெரிக்கா, ஜப்பான் விரும்பிய வாறே வணிக ஒப்பந்தங்களைத் திருத்தியமைத்துக் கொடுத்தது. ஆனால், அமெரிக்காவும் மற்ற ஐரோப்பிய நாடுகளும் ஐரோப்பாவில் மாநாடொன்றைக் கூட்டி ஜப்பானுடன் செய்து கொண்ட ஒப்பந்த உடன்படிக்கைகளை ஒரே சீராக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற ஜப்பானின் வேண்டுகோளை அமெரிக்கா ஏற்றுக்கொள்ள வில்லை. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளைப் போலல்லாமல் தான் மட்டும் சிறப்பான சலுகைகளுடன் கூடிய ஒப்பந்தங்களை ஜப்பானுடன் வைத்துக் கொள்ள விரும்பியது. 1878-ல் ஜப்பான் வகுத்தளித்த வணிகத் தடைகளையும் கப்பல் வணிக முறைகளையும் அப்படியே அமெரிக்கா எற்றுக் கொண்டது. ஆனால், இவற்றை ஐரோப்பிய நாடுகள் பின்பற்றத் தாழ்த்தினால் ஒழுங்கு முறைகளில் ஜப்பானை அயல்நாட்டு வணிகத்தில் அமெரிக் காவால் கடைப்பிடிக்க முடியவில்லை. 1880-க்குப் பின் ஜப்பானில் புதிதாகத் தொகுக்கப்பட்ட குற்றவியல் சட்டங்கள் யாவும் ஜப்பா னோடு தொடர்பு கொண்டு ஜப்பானில் வாழும் மற்ற நாட்டு

மக்களின் மீதும் செலுத்தப்படும் என்று ஜப்பான் அறிவித்தது. ஆனால், அயல் நாடுகள் ஜப்பானிலுள்ள தங்கள் நாட்டுக் குடிமக்களை உசாவுவதற்கு தங்கள் நாட்டு நடுவர்களே தகுதியுடையவர்களென்றும் அவர்களை ஜப்பானிய நயன்மை மன்றங்களில் அமர்த்திக்கொள்ள வேண்டுமென்றும் விரும்பியது.

இதற்குப் பின் ஜப்பான் ஐரோப்பிய நாடுகள் அனைத்தையும் கூட்டித் தன் நாட்டுச்சட்ட திட்டங்களையும், வணிக மரபு ஒப்பந்தங்களையும் ஒரு மனதாய் ஏற்றுக் கொள்ள வலியுறுத்துவதைவிட ஒவ்வொரு நாட்டுடனும் தனித்தனியாக ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள விரும்பியது. இதன்படி 1889-ல் மெக்சிகோவோடு வணிக ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. மெக்சிகோ ஜப்பான் நாட்டு வணிகத்தடைகளை மீறக்கூடாதென்றும், உள்நாட்டுச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே நடக்க வேண்டுமென்றும், ஜப்பானிய வணிகர்கள் மெக்சிகோவுக்குத் தடையின்றிச் செல்லவும், அங்கு வாணிகம் செய்யவும், வதியவும் உரிமை பெறுவது போலவே, மெக்சிகோ வணிகரும் அத்தகைய உரிமைகளோடு ஜப்பானில் வதியலாமென இவ்வொப்பந்தத்தில் கூறப்பட்டது. 1889-ல் ஜப்பானிய புதிய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தபின் அயல் நாடுகள் பலவும், மெக்சிகோ ஜப்பானுடன் செய்து கொண்டதைப்போல் தனித்தனியே ஜப்பானுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டன. 16-7-1894-ல் பிரிட்டன் நாவாய் வணிக ஒப்பந்தம் ஜப்பானுடன் செய்து கொண்டது. இதையடுத்து அமெரிக்க ஒன்றிய நாடுகளும் மற்ற ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானுடன் வணிக ஒப்பந்தங்கள் செய்து கொண்டன. இத்தகைய வணிக ஒப்பந்தங்களால் ஜப்பானில் ஏற்பட்ட வணிகப் புரட்சியாலும், தொழிற் புரட்சியாலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் அயல் நாடுகளின் சந்தைகளுக்கு விரைந்து அனுப்பப்பட்டன. அதைப் போலவே அந்நாடுகளிலிருந்தும் ஜப்பானின் தொழில் வளத்திற்குச் சார்பான பொருள்கள் தருவிக்கப்பட்டன.

மேசிப் புரட்சிக் காலத்திலேற்பட்ட பொருளியல் ஏற்றத்திற்குச் சார்பாக 1882-ல் ஜப்பான் வைப்பகம் (Japan Bank) என்னும் ஒரு பெரும் வைப்பகம் தொடங்கப்பட்டது. இதனையடுத்து அயல் நாட்டு நாணய மாற்றத்திற்குச் சார்பாக வைப்பக முறைகளும், மதிப்பீடுகளும் ஏற்படுத்தப்பட்டன. இதற்கு அடிப்படையாகத் தங்கத்தின் தரம் குறிக்கப்பட்டது. பொக்கச அமைச்சரகமும், அயல் நாட்டமைச்சரகமும், மேசிப் புரட்சிக் காலத்தில் மிகச் சிறப்புவாய்ந்த உறுப்புகளாகக் கருதப்பட்டன. ஜப்பான் முதலில் தனக்கேற்பட்ட செலவுகளைச்

சமாளிப்பதற்காக 1870-ல் பத்திலக்கம் பொற்காசுகளையும் 1873-ல் 24 இலக்கம் பொற்காசுகளையும் இங்கிலாந்திடமிருந்து கடன் வாங்கியது. இத்தகைய அயல்நாட்டுக் கடன் ஒப்பந்தங்களை நடைமுறைப் படுத்துவதற்காக 1871-ல் தன் நாட்டில் தங்கத்தை மட்டும் வணிகத்தரமாகக் கொண்டிருந்தது. 1878-ல் வெள்ளியும், தங்கத்தரத்தோடு சேர்த்துக் கொள்ளப் பட்டது. 1879-ல் தாள் பணத்தை வெளியிட்டது. இது அயல் நாட்டுச் செலாவணியில் நேரடியாக மாற்ற முடியாத ஒன்றாகும்.

போக்குவரவு வளர்ச்சி

தொகுகவா காலத்தில் இருந்த போக்குவரத்துக்களில் மிகவும் சிறப்புற்று விளங்கியது கடல்வழிப் பாதையாகும். இத்தகைய கடல்வழிச் சாதனங்கள் ஜப்பானில் பண்டைய காலந்தொட்டே வளர்ச்சியடைந்து நின்றன. முன்னிலை மீட்சிக்கு முன்பே உரகா, நாகசாகி ஆகிய துறைமுகங்களில் மேல் நாட்டு முறையில் கப்பல் தளங்கள் அமைக்கப்பட்டன. ஜப்பானிய அரசு இதற்குமுன் தங்களுக்கு வேண்டிய கப்பல்களை அயல் நாடுகளிலிருந்தும் நிலமானியக் கிழார்களிடமிருந்தும் பெற்றது. 1873-ல் ஜப்பானுக்கும் ஒசாகாவுக்குமிடையேயிருந்த கப்பல் போக்குவரத்துச் சாதனத்தை ஜப்பானிய அரசாங்கம் படைப் பாதையாக்கிக்கொண்டது. 1879-ல் ஆங்காங்குக்கும், 1881-ல் விளாடிவாசுதாக்குக்கும் நேரடி கப்பல் வழிகள் ஏற்படுத்தப் பட்டன. 1885-ல் 65 கப்பல்களைக் கொண்ட ஒரு கழகம் அமைக்கப்பட்டது. இக் கப்பல்களுக்கு 8% பங்குத்தொகை 15 ஆண்டுகளுக்குக் கொடுப்பதாக அரசு ஒப்புக்கொண்டது. மேலும் இந்தக் கப்பல் கழகத்திற்குப் பல பணவுதவிகளும் அரசால் வழங்கப்பட்டன. இக் கழகம் அயல் நாடுகளுடன் வாணிகம் செய்யும்போது நெடுங்கடற்பாதைகளில் பாதுகாப் பளிக்கும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. இக் கப்பல் கழகத்தை அமைத்தவர் மித்சுபுசி ஆவார்.

உள் நாட்டுப் போக்கு வரத்துக்குப் பெரிதும் உதவியாய் நிற்கின்ற இருப்புப் பாதைகள் மேசியின் காலத்தில் அமைக்கப் பட்டன. 1872-ல் தோக்கியோவிலிருந்து யோகாமாவுக்கும், 1874-ல் கொபேயிலிருந்து ஒசாகாவுக்கும், 1877-ல் ஒசாகாவி லிருந்து கியோத்தோவுக்கும் இருப்புப்பாதைகள் போடப் பட்டன. தொடக்கத்தில் இருப்புப்பாதைகளின் வளர்ச்சி மிக விரைவாக முன்னேற முடியவில்லை. அதற்குக் கரணியம் இத் துறையில் ஜப்பானுக்கு பட்டறிவின்மையும், அக்காலத்தில் ஏற்பட்ட அரசியல் கலகங்களுமாகும். இதற்குப் பின் அரசு

இருப்புப் பாதைகளை அமைக்கும் பணியைத் தனியார் குழுக்களுக்கும் ஒதுக்கியதால் இதன் வளர்ச்சி விரைவு படுத்தப்பட்டது. தனியார் துறைகளின் முயற்சியால் 1895-ஆம் ஆண்டுக்குள் 1500 கல் நீளத்திற்கு இருப்புப் பாதைகள் போடப்பட்டன. ஆனால், அரசால் அவ்வாண்டுக்குள் 580 கற்கள் வரைதான் இருப்புப் பாதை அமைக்கப்பட்டது. 1885-க்குள் பசிபிக் கடற்கரை முழுவதும் இருப்புப் பாதை அமைக்கவேண்டு மென்ற திட்டத்தில் ஜப்பான் ஓரளவு வெற்றி பெற்றது. வடக்கேயுள்ள ஆமோரியிலிருந்து உள்நாட்டுக் கடலோரமுள்ள கொபே வரையில் இதன் இருப்புப் பாதை நீட்டப்பட்டது. அங்கிருந்து நாகசாகி சென்று இப்பாதை முடிந்தபின் ஜப்பானின் மேலைக் கடலோரம் முழுவதும் இருப்புப் பாதை முடிவுபெற்ற தெனலாம். தோக்கியோவுக்கும் நௌயெத்சு (Naoetsu) வுக்கு மிடையிலுள்ள மலைத் தொடருக்கும் இருப்புப் பாதை அமைக்கத் திட்டம் தொடங்கப்பட்டது. இருப்புப் பாதைகளை அமைப்பதால் பெரும் ஊதியம் கிடைப்பதை அறிந்த சாமுராய்களும், பெரு நிலக் கிழார்களும் இதில் மேலும் மேலும் முதலீடு செய்ய முன் வந்தார்கள். இதனால் இருப்புப் பாதைகளும், மற்ற போக்கு வரத்துகளும், தனியார் துறைகளாலும் அரசாலும், ஒரே காலத்தில் மேற் கொண்டு செய்யப்பட்டதால் குறுகிய காலத்திலேயே பெரும் வளர்ச்சியடைந்தன.

தொலைவரி முறை ஏற்படுத்தப்பட்டது. 1886-ல் தொலைவரித் துறையையும் அஞ்சல் துறையையும் அரசு ஒன்றாக இணைத்து ஒரு தனிக்கழகமாக்கியது. 1877-ல் அமைக்கப்பட்ட தொலைபேசி நிறுவனம், அஞ்சல், தொலைவரி நிறுவனத்தைப் போலவே செய்தித் தொடர்புக்குப் பெரிதும் உதவியது. இவைகளால் வணிகமும் வளர்ந்தது.

சூன், 1906-ல் தென் மஞ்சூரியத் தொடர்வழிக் கழகத்தின் (Railway) பாதிப் பங்கை ஜப்பான் பெற்றது. அதனைக்கண் காணிக்க இரண்டு ஜப்பானிய உயர் அதிகாரிகள் அமர்த்தப் பட்டனர். இந்தத் தொடர் வழி செல்லுமிடங்களிலுள்ள சுரங்கங்கள், மற்றும் பல பொருள்களின் மீது உரிமைகளும், வரித் தண்டல் ஆகிய உரிமைகள் இந்தத் தொடர்வழிக் கழகத்திற்கு வழங்கப்பட்டதால் ஜப்பானுக்கு அதன் வருவாயில் பாதி கிடைத்தது. இதே ஆண்டில் ஜப்பான் நாட்டிலுள்ள மூன்றில் இரண்டு பாகத் தொடர் வழியை அரசு நாட்டுடைமை யாக்கியது. இதனால் 1907-க்குள் ஜப்பானியத் தொடர் வழிகளின் தரமும், தொலைவும் அதிகரித்தன. அவ்வாண்டில் 14 கோடிப் பயணிகளும், இரண்டு கோடியே நாற்பதிலக்கம் கல்லெடையுள்ள சரக்குகளும் தொடர் வண்டிகளில் சென்றதாக அறிகிறோம். தொடர்

வழியைப் போலவே, உள்நாட்டுத் தரைப் போக்கு வரத்துகளும் அதிகரித்தன. இவைகள் உள்நாட்டுப் பட்டணங்களையும் தொடர் வண்டி நிலையங்களையும், துறைமுகப் பட்டினங்களையும் இணைத்தன. பேருந்து வண்டிகளும், மற்ற வண்டிகளும் எண்ணிக்கையில் அதிகரித்தன. தொடர் வழிகளிலும், உள் நாட்டுத் தரை வழி களிலும் ஓய்வு ஒழிவின்றி மக்களின் போக்குவரத்தும், சரக்கு களின் போக்கு வரத்தும் அதிகரித்தது போன்றே நீர் வழிகளும் பெருமிதமாகப் பெருகின. நீராவிப் படகுகள் மக்களை ஏற்றிச் செல்வதுடன் சரக்குகளையும் சுமந்து சென்றதால் வாணிகப் பொருள்களின் போக்குவரத்துச் செலவுகள் குறைந்தன. யோகா மாவுக்கும், கொபேயுக்கும், நாகசாகிக்கும், அகோதா தேவுக்கும் நேரடி நீர்வழிகள் ஏற்பட்டதால் நாள்தோறும் கப்பல் போக்கு வரத்து இவைகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய கப்பல் போக்குவரத்து, கொரியா, சீனு, பிலிப்பைன் தீவுகள், ஆசுத்திரேலியா, இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கிடையேயும் விரிவுபடுத்தப்பட்டது. ஜப்பானி லிருந்து சான்பிரான்சிசுகோவுக்குச் செல்லும் ஒரு ஜப்பானியச் சரக்குக் கப்பல் பதினறு நாள்களுக்குள் செல்ல முடிந்தது. ஜப்பா னிலிருந்து விளாடிவாசுதாக்கிற்குக் கிழமை தோறும் பயணிகள் கப்பல் சென்றதால் அங்கிருந்து திரான்சைபீரியன் தொடர்வழி மூலம் ஐரோப்பாவுக்குள் நேரடியாகப் பயணம் செய்ய முடிந்தது. ஐரோப்பாவிலிருந்து புறப்படும் ஒரு கப்பல் பயணி ஜப்பானை அடைவதற்கு, சூயசுக் கால்வாய் வழியாகவும், பசிபிக் மாகடல் வழியாகவும் வர ஏந்துகள் ஏற்பட்டன.

இவ்வாறு மேசிப் புரட்சியினிறுதிக்குள் ஜப்பானின் இருப்புப் பாதைகளும், சாலைகளும், நீர் வழிகளும் பெருமளவில் பெருகிய தால் எந்த மூலையிலிருந்து எங்கும் செல்லவும், அயல் நாடுகளோடு வணிகத் தொடர்பு கொள்ளவும் ஏந்துகள் மிகுதியாயின.

## சமய, பண்பாட்டியல் மாற்றங்கள்

ஒரு நாட்டின் அரசியல், பொருளியல் மாற்றங்களுக்கு அடிப் படையாக அமைவது அந் நாட்டின் குமுகாயப்புரட்சிகளேயாகும். அக்குமுகாயப் புரட்சிக்கு அடி கோலுவது சமயப் பண்பாட்டியல் மாற்றங்களாம். இம் முறையில் ஜப்பானில் மீண்டும் புத்துயிர் பெற்ற சிந்தோ சமய மறுமலர்ச்சி ஜப்பானிய மக்களை அரச பத்தி கொள்ளச் செய்தது. சிந்தோ சமயம் ஜப்பானின் இயற்கை வழிபாட்டுச் சமயமென்றும் அதில் சீனப்பண்பியல் கலந்திருக்க வில்லையென்றும் ஜப்பானிய மக்கள் மீண்டும் தங்களுடைய பண்டைய பண்பாட்டிற்குத் திரும்புவதற்கு இதுவே சிறந்த வழி

யென்றும் கருதினார்கள். ஜப்பானில் பரவிய புத்தமதம் சீனாவி லிருந்து கொரியா வழியாக வந்ததென்பதை யறிவோம். கன்ஃபூசிய சமயமும் தாயிய சமயமும் சீனாவிலிருந்து வந்தவை யாகும். கன்ஃபூசிய சமயம் சீன மண்ணில் ஆழமாக வேரூன்றியது போல் ஜப்பானில் வேரூன்றவில்லை. ஆயினும் இம்மத நூல்களை ஜப்பானில் படித்த இளைஞர்கள் யாவரும் அறிவர். எனவே கன்ஃபூசிய சமயத்தின் கோட்பாட்டை யறியாத ஜப்பானியர் இருக்க முடியாது. இதைப் போலவே புத்த மதமும் ஜப்பானில் வெகுவாகப் பரவி வேரூன்றி விட்டது. 1871-ல் வெளியிடப்பட்ட அரசாணை ஒன்றால் புத்த சமயம் பரவுவது ஜப்பானில் தடை செய்யப்பட்டது. 1867-லிருந்து 1872-க்குள் உள்ள கால வரை யறையில் புத்த மதத்தினர் பலர் தண்டிக்கப்பட்டுள்ளனர். பல புத்தக் கோயில்கள் அழிக்கப்பட்டுள்ளன. அரண்மனையிலும், அரச குடும்பங்களிலும் புத்த சமயத்தின் சடங்குகள் பின்பற்றப் படுவது தடை செய்யப்பட்டது. சிந்தோ சமயக் கொள்கைகளும், வழிபாட்டு முறைகளும் ஜப்பானில் தடை செய்யப்பட்டன. இத்தகைய கடினத் தடைகளுக்குமிடையில் புத்த மடங்களின் சிறப்பும் செல்வாக்கும் குறைவு படவில்லை. மேசிப் புரட்சிக் காலத்தில் ஜப்பானிலிருந்து புத்தமதச் சிறப்பைச் சீன, கொரிய நாட்டோடு ஒப்பிட்டு நோக்கினால் ஜப்பானில்தான் அது தலைசிறந்து நின்றதென்பதை அறிகிறோம். ஆயினும் அரசால் சிந்தோ சமயம்தான் வலியுறுத்தப்பட்டது.

சிந்தோ சமயம் இரண்டு பிரிவுகளாய்ப் பிரிந்தது. அரசால் புரக்கப்பெற்று அதற்கென ஒரு தனி அமைச்சரை அமர்த்திக் காக்கப்பட்ட சிந்தோ சமயம் ஒரு பிரிவாகவும், மக்களால் பின் பற்றப்பெற்ற சிந்தோ சமயம் ஒரு பிரிவாகவும் பிரிந்தன. அரசால் புரக்கப்பெற்ற சிந்தோ சமயம் நாட்டுப் பற்றையும், அரசப் பற்றையும், அரச பத்தியையும் வலியுறுத்தியது. எனவே இது ஒருவகை கட்சியே ஒழிய மதமாகாதென நினைத்த மக்கள், புத்த மதத்தின் அடிப்படைக் கொள்கைகளை கொண்ட சிந்தோ சமயத்தைப் பின்பற்றினர். அரசால் புரக்கப்படும் சிந்தோ சமயத்தில் தேசிய வீரர்களும், மூதாதையரும், இறந்த பேரரசர் களும் வழிபடப்பட்டனர். அரசரும், அரச குடும்பத்தாரும் தெய்வத் தன்மையுடையவர்களாகக் கருதப்பட்டு வழிபடப் பட்டனர். நாளடைவில் இத்தகைய வழிபாடு உருவங்கள் கணக்கிலடங்காது வளர்ந்தன. ஒவ்வொரு பள்ளியிலும் முத்சு இதோவின் உருவப்படம் வைக்கப்பட்டது. பள்ளி தொடங்கு முன் இப்படத்திற்கு முன் நின்று மாணவர்களும், ஆசிரியர்களும் வழி பாடு செய்வர். 1869ஆம் ஆண்டு தோக்கியோவில் போரில்

இறந்த வீரர்களுக்கென ஒரு நினைவு மண்டபம் எழுப்பப்பட்டது. இதற்குத் 'தேசியத்தைக் காப்பாற்றும் தெய்வங்கள்' என்று பெயரிடப்பட்டது. இதில் படை வீரர்களுக்கும், அரச குடும்பத்தினருக்கும், சிறந்த அரச பற்றுளர்களுக்கும் இடமளிக்கப்பட்டது.

இவ்வாறு அரசு மதமான சிந்தோ மதப்பிரிவை ஒரு மதமெனக் கூறலாமா? அல்லது அரசு வழிபாட்டுக்கழகம் எனலாமா? என்ற ஐயத்தில் அறிஞர்கள் பலர் மூழ்கலாயினர். அவர்களின் முடிவு எதுவாயினும் 1930, 1940ஆம் ஆண்டுகளில் ஜப்பானை ஆட்டிப் படைத்த அயலக அச்சத்தினின்றும் அதனைக் கட்டிக்காத்தது இம் மதமேயாகும். இம் மதம் ஒவ்வொரு ஜப்பானியனையும் தன் நாட்டைப்பற்றியும், நாட்டைத் தொடர்ந்து ஆளுகின்ற அரச குடும்பத்தின் புனிதத் தன்மை பற்றியும், அறுபடாத பண்பு பற்றியும் சிந்திக்க வைத்து, தன் பேரரசருக்கும், பெருமை பொருந்திய நாட்டிற்கும், தம் உயிர், உடல், பொருள் யாவற்றையும் ஈகம் செய்ய அணியமாக்கியது. இத்தகைய ஈகத்தைக் கிழக்காசியா முழுவதும் கண்டு வியந்தது. சிந்தோ சமயத்தின் மறுமலர்ச்சியென்பதை அரசியல் கண்ணோட்டத்தோடு பார்த்தால் அது பேரரசரை மையமாகக் கொண்டு தேசியப் பற்றை மக்களிடையே பரப்பிய பண்பாட்டியல் எனலாம். இத்தகைய பண்பாட்டியல் தொகுகவாக்களின் காலத்திலிருந்தே நாட்டில் தோன்றி இரட்டையாட்சி முறையை ஒழித்து மன்னரின் பேராட்சியை எற்படுத்த வேண்டுமென்னும் நோக்கத்துடன் வளர்ந்ததென்பதைப் பார்த்தோம். இந்தக் கொள்கையின் அடிப் படையில்தான் மேசி முன்னிலை மீட்சி ஏற்பட்டது. இம் முன்னிலை மீட்சிக்குப்பின் ஜப்பானியப் பண்பாடும் ஜப்பானிய மயமாக வேண்டுமென்ற கோட்பாட்டின் கீழ் இம் மதம் மேசிப் புரட்சிக் காலத்தில் மக்களின் மனத்திலிடம் பெற்றது. பண்டைய மாமன்னர்களையும், மாமன்னரவைகளையும், ஆட்சி முறைகளையும், உயர்த்திச் சீர்திருத்துவதற்காக எவ்வாறு பழங்காலத்தில் சீனப் பண்பாடும், சீன சமயமும், சீன அரசியல் முறையும் ஜப்பானில் புகுந்ததோ அதைப் போலவே, முன்னிலை மீட்சிக்குப்பின் ஏற்பட்ட புதிய மாறுதல்களால் மீண்டும் ஜப்பான் ஐரோப்பிய நாடுகளின் பண்பாட்டையும், சமயத்தையும், அரசியல் முறையையும் ஏற்றுக் கொண்டு, தன் நாட்டுச்சமயம், பண்பாடு, அரசப்பற்று, நாட்டுப் பற்று முதலியவற்றை மறந்து அயல் நாட்டுப் பண்பிற்கு அடிமை யாவதைத் தடுக்கவே இந்த சிந்தோ சமயம் தேசிய சமயமாக வலியுறுத்தப்பட்டது. எனவே இதனை புதிய ஜப்பானை ஒன்றிணைக்கும் ஒரு கருவியாகக் கொள்ளலாம்.

இவ்வாறு சிந்தோ சமயம் அரசு புரப்பாண்மை பெற்ற ஓர் அரச சமயமாக வளர்ச்சியடைந்த போதிலும், ஏனைய சமயங்களை ஒடுக்கும் உத்தரவுகளோ, அழிக்கும் நிகழ்வுகளோ அதிகமாக இல்லை. அதற்குக் கரணியம் மேசி ஆண்டுமானம் ஐரோப்பியரின் துணை கொண்டு அறிவியலறிவால் ஜப்பானை புதிய நாடாக ஆக்கிய காலமாகும். 1870-ல் கிறித்தவச் சமயத்திற்கு எதிராக வெளியிடப்பட்டிருந்த இதனால்தான் ஐரோப்பிய நாடுகளோடும், அமெரிக்காவோடும் ஜப்பான் நட்புறவோடு நடக்கவும், வணிக ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவும் முடிந்தது. இத்தடையுத்தரவுகள் நீக்கப்பட்டபின் பத்தாண்டுகளுக்குள் கிறித்தவச் சமயத்தைப் பின்பற்றுவோரின் தொகையும், அதன் கொள்கையைப் பின்பற்றுவோர் தொகையும் ஜப்பானில் பன் மடங்காகப் பெருகியது. ஜப்பான் ஒரு புதிய நாடாக ஆக வேண்டுமானால் கிறித்தவ சமயம் அரசு சமயமாக வேண்டுமெனவும் பலர் கூறினர். 1890ஆம் ஆண்டிற்குப்பின் ஜப்பானில் தோன்றிய அயலவரை வெறுக்கும் உணர்ச்சியால் கிறித்தவச் சமயத்தின் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது. 1894-ல் ஜப்பானில் மக்கள் தொகையில் இருநூறு பேருக்கு ஒருவரே கிறித்தவராக இருந்தார். ஆயினும் நாடு முழுவதும் கிறித்தவப் பாதிரிமார்களால் நிறுவப்பட்ட குமுக நல நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், அறச்சாலைகள் முதலியன சிறப்பாகச் செயல்பட்டு வந்தன. கிறித்தவச் சமயம் ஜப்பானில் பரவியதால் அதன் பரந்த நோக்கமும், சீரிய ஒழுக்கமும், செம்மையான பணிகளும், உலக உடன்பிறப்பாண்மையும் ஜப்பானிய அறிஞர்களைக் கவர்ந்தன. தன் அரசர், தன் நாடு, தன் மொழி எனும் குறுகிய மனப்பான்மையைக் கொண்ட சிந்தோ சமயத்தை இவ்வறிஞர்கள் வெறுக்கலானார்கள். கிறித்தவக் கோயில்களின் மாதிரிகளைப் பின்பற்றி ஜப்பானில் புத்தக் கோயில்கள் அமைக்கப் பட்டன. ஆயினும், 1894-க்குப் பின் ஏற்பட்ட சூழ்நிலைகளில் இக் கிறித்தவச் சமயம் ஜப்பானில் செழித்துக் காணப்படவில்லை.

### படை வளர்ச்சி

சீன-ஜப்பானியப் போருக்குப்பின் ஜப்பான் தன் வெற்றியைக் கண்டு இறுமாந்து தேங்கி விடவில்லை. 1896-ல் நிலையான படையுடன் ஆறு புதிய பிரிவுகள் (Divisions) சேர்க்கப்பட்டன. இதனால் ஜப்பானில் 1896-ல் மொத்தம் பதின்மூன்று பிரிவுகளாகப் படையின் தொகை உயர்ந்தது. 1898-ல் குதிரைப்படையும், தகரிப்படையும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. போர்க் கருவிகளின் எண்ணிக்கை அதிகமானதோடு புது முறை வேட்டெஃகங்களும்குண்டுகளும் அதிகரிக்கப்பட்டன. 1904-க்குள் தரைப்

படை, தகரிப்படை ஆகியவற்றில் அன்றைய புதிய வெடி மருந்துக் கருவிகள் தேவையான அளவுக்கு உற்பத்தி செய்யப்பட்டன. இதைப் போலவே நாவாய்ப்படையிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. 1896-97ஆம் ஆண்டு அரசு வரவு செலவுத் திட்டத்தில் நாவாய்ப் படையைப் பெருக்குவதற்கென பெருந் தொகை ஒதுக்கப்பட்டது. இதனால் நான்கு பெரிய போர்க் கப்பல்களும், பதினாறு சிறிய போர்க் கப்பல்களும் 23 அழிப்பான் களும், அறுநூற்றுக்கும் மேற்பட்ட நாவாய்ப் படைக் கருவிகளும் கட்டி முடிக்கப்பட்டன. மொத்தத்தில் 1903-க்குள் ஈரிலக்கத் தைம்பத்தெட்டாயிரம் கல்லெடையுள்ள நாவாய்ப்படைக் கருவிகள் பெருக்கப்பட்டன. இதனால் 1893-ல் 150 இலக்கம் 'யென்' ஆகவிருந்த படைச்செலவு மூன்றாண்டுகளுக்குள் ஐந்து கோடியே முப்பதிலக்கம் யென்னாக உயர்ந்தது. இதனாலே 1904-ல் ஏற்பட்ட உருசிய - ஜப்பானியப்போரில் ஜப்பான் பெரும் வெற்றி பெற்றது. இக் கணக்கு தரைப் படையை மட்டும் குறிப்பதாகும். 1895-ல் நாவாய்ப் படைக்குச் செலவு நூற்றுமுப்பதிலக்கம் 'யென்'னாகும். 1898-ல் இஃது ஐந்து கோடியாக உயர்ந்தது. ஆனால், 1903-ல் இரண்டு கோடியே எண்பதிலக்கமாகக் குறைந்தது. இவ்வாறு படைச் செலவு உயர்ந்து கொண்டே சென்றதால் ஜப்பான் புதிய வரிகளை விதிக்க வேண்டியதாயிற்று. வணிகம், வருமானம், சாராயம், புகையிலை முதலியவற்றின்மீது அதிக வரிகள் விதிக்கப்பட்டன. இது மட்டுமின்றி உள் நாட்டிலும், வெளி நாடுகளிலிருந்தும் பெருந்தொகை கடனாக வாங்கப் பட்டது. இதனால் பத்தாண்டுகளுக்குள் தேசியக் கடன் இரு மடங்காக உயர்ந்தது. 1903-ல் ஜப்பானின் தேசியக் கடன் ஐம்பது கோடி 'யென்'னாக உயர்ந்த போதிலும், அந்நாட்டில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி மிகவும் போற்றக் கூடியதாக இருந்தது.

**விளைவுகள்**

முன்னிலை மீட்சிக்குப்பின் ஏற்பட்ட பொருளியல் வளர்ச்சிக்குச் சார்பாக அமைந்தது 1889ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் மட்டுமன்று. நாட்டின் பொருளியல் வளர்ச்சிக்குத் தடையா யிருந்த நிலக்கிழமையை ஒழித்ததும், தனியார் சொத்துரிமையை அனுமதித்ததும், ஐரோப்பிய நாடுகளில் இருப்பது போன்ற சட்ட முறைகளைப் பின்பற்றியதும், கட்டாயக் கல்வி முறையைப் புகுத் தியதும், மைய, மாநில ஆட்சிகளில் பல்வேறு துறைகளை அமைத்து ஆட்சி புரிந்ததும், குமுகத்திலிருந்த வகுப்புப் பிரிவையகற்றிச் சமமான நயன்மை வழங்கியதுமாகும். அது மட்டுமல்லாமல் புதிய நீண்ட பாதைகளை அமைத்ததும், செய்தித் தொடர்புகளைப் பெருக்கியதும், வைப்பகங்கள் (Banks), நாணயங்கள், தாள்

யணங்கள், காசோலே முறைகள் முதலியவற்றைக் கொணர்ந்து வணிகத்துறையை வளர்த்ததும், அயல் நாடுகளுக்குச் செல்வதை ஊக்குவித்ததும், அயல் நாட்டு வாணிகத்தைப் பெருக்கியதும் ஆகும். மக்களின் பழக்கவழக்கங்கள் முழுதும் மாறிவிட்டன. குடுமி வைத்துக் கொண்டு தங்கள் மரபு வீரப் பண்பைக் காத்து வந்த சாமுராய்கள் மேல்நாட்டு முறையில் 'முடி' வெட்டிக் கொண்டு தொப்பியணியத் தொடங்கினர். அவர்களே அதிகாரம் செலுத்தி வந்த படைத்துறை தேசிய மயமாக்கப்பட்டது. இதனுல் எல்லா இனத்தவர்களுக்கும் படையில் சேரும் உரிமை வழங்கப் பட்டது. 1873ஆம் ஆண்டு சனவரி முதல் நாளிலிருந்து பின் பற்றப்பட்ட கிறித்தவ ஆண்டுமானக் காலக் குறிப்பேட்டில் காணப்படும் மேலே நாட்டு விடுமுறைகளும், விழாக்களும் கொண் டாடப்பட்டன. தொழிலக முதலாளிகளும், பெரு வணிகர்களும் நிலக்கிழார்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் குமுகாயத்தின் உயர் மட்டத்தைப் பிடித்துக்கொண்டனர். எங்கு நோக்கினும் ஐரோப்பியரைப் போன்ற நடையுடைத் தோற்றங்களில் திரியும் ஜப்பானியரையே காண முடிந்தது. தங்கள் நாட்டுப் மரபுப் பழக்க வழக்கங்களை மறந்து விட்டு, அயல் நாட்டு நாகரிகங்களில் மூழ்கித்திரிபவர்களை எதிர்த்துச் சில புரட்சிகளும் ஏற்பட்டன. ஆனுல், அவற்றுல் பலனேதும் ஏற்படவில்லே.

இச் சமையத்தில் ஜப்பானிய அரசியலுக்கு நேரடி வருவாயில் வேளாண்மை வரியே அதிகமாக இருந்தது. புதிய முறைகளில் மக்களுக்குப் பயிற்சியளிக்க அமைக்கப்பட்ட அரசு தொழிலகங் களும், மற்றும் அரசுக்குச் சொந்தமான பல இடங்களும் அரசின் வருவாய்க்கு இடையூருகவிருந்தன. இதனுல் இவைகளே அரசு குறைந்த விலேக்குத் தனியாருக்கு விற்று விட்டது. 1889-ல் கூடிய முதல் நாடாளு மன்றக் கூட்டத்தொடரில் நிலவரி உயர்த்தப்பட வேண்டுமென்னும் தீர்மானம் கீழவையில் கொண்டு வரப்பட்ட போது அதற்கு வலுத்த எதிர்ப்பு ஏற்பட்டது. கீழவையிலிருந்த முன்னூறு உறுப்பினர்களில் 283 பேர் நிலக்கிழார்களாகவும், 17 பேர் நகரத்தார்களாகவும் இருந்ததே அதற்குக் கரணியமாகும். மேலவையிலிருந்தவர்கள் யாவரும் கிழார்களாகவேயிருந்தனர். இதிலிருந்து மேலவையிலும், கீழவையிலும் ஒருவகை முதலாளி யினமே இடம் பெற்றுவிட்டதை உணரலாம். ஆயினும் நாடு முழுதுமுள்ள வேளாளர்களேயும், தொழிலாளர்களேயும் கணக் கெடுத்தால் இவர்களைவிடப் பலவாயிரம் மடங்கு அதிகமாயிருப் பார்கள். நிலமில்லாத ஒரு குத்தகைக்காரர், தான் எவ்வளவுதான் வருமானத்தை அடைந்த போதிலும் அவருக்கு ஒப்போலே யுரிமை யில்லே. ஆனுல், நிலமுள்ளவர் அரசுக்கு வரி செலுத்துவதால்

அவருக்கு ஒப்போலையுரிமை இருந்தது. புதிய வேளாண்மை முறைகளைப் பின்பற்றியதால் விளைச்சல் அதிகமானதேயொழியப் பயிரிடும் வேளாளரின் குறைகள் தீர்க்கப்படவில்லை. பொருக்கு விதைகள், புதிய கருவிகள், இதளியவுரங்கள், நிலவள வைப் பகங்கள், வேளாண்மைப் பள்ளிகள், செயல் விளக்கத் திட்டங்கள், ஏற்றுமதி, இறக்குமதி ஏந்துகள் முதலியவை பெருகிய காலத்தும், வேளாண்மைத் தொழிலாளர்கள் அவற்றின் முழுப்பயனை அடைய வில்லை. தேயிலை பயிரிடுதல், பட்டுப்பூச்சி வளர்த்தல் முதலிய தொழில்களில் ஜப்பான் உலகச்சந்தையில் முதலிடத்தைப் பெற்றது. பருத்தி பயிரிடுதலில் ஜப்பான் இந்தியாவோடு போட்டியிட முடியாததால் முதலில் பருத்தியை இறக்குமதி செய்து நூல்நூற்கும் ஆலைகளை அதிகமாக ஏற்படுத்தியது. ஜப் பானியத் தொழிற்சாலைகளுக்குக் குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்ய ஊர்ப்புறத்து மக்கள் ஈர்க்கப் பட்டனர். இவ்வாறு 1895-க் குள் ஜப்பான் ஒரு தொழிற்புரட்சி நாடாயிற்று. இதற்குப் பெரிதும் உதவியது சீனப் போரில் ஜப்பான் கண்ட வெற்றி யாகும். 1895-க்கு முன் ஜப்பானின் ஏற்றுமதி வேளாண்மைப் பொருள்களாகவே இருந்தன. ஆனால், 1895-க்குப்பின் அயல் நாடுகளிலிருந்து மூலப் பொருள்களை வரவழைத்து அவற்றைத் தன் நாட்டிலுள்ள பஞ்சாலைகளிலும், தொழிற் சாலைகளிலும் நெய்த துணிகளாகவும், செய்த இயந்திரங்களாகவும் வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்தது. தொழிற்சாலைகளுக்குத் தேவைப் படும் மூல இயந்திரங்களை முதல் உலகப் போருக்குப்பின்தான் அடைய முடிந்தது. 1894-ல் சீனவுடன் ஏற்பட்ட போரினாலும், அதற்குப்பின் ஏற்பட்ட உருசியப் போரினாலும் நாட்டில் இயந்திர வளர்ச்சி மேலும் பெருகியது.

இத்தகைய பொருளியல் வளர்ச்சியால் ஜப்பானில் தூய முதலாளியமோ அல்லது தூய தனித் தொழிலாளியமோ ஏற்படவில்லை. இவையிரண்டும் கலந்த முதலாளிக் குடும்பங்கள் நாட்டில் தோன்றின. இத்தகைய முதலாளியக் குடும்பங்கள் தனித் தொழில்களைத் தொடங்கி ஏற்றுமதி, இறக்குமதித் துறை களில் பேராளுமை பெற்றன. இத்தகைய குறிப்பிட்ட குடும்பங்களையடக்கித் தொழில் வளத்தைப் பன்முகப்படுத்திப் பொருளியலைச் சமநிலைப்படுத்த அரசால் முடியவில்லை. அரசிலும் இத்தகையதொரு குழுவாட்சி ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணியமாகும். இதனால்தான் நெடுங்காலம்வரை வேளாண்மைச் சட்டங்களும், தொழிற்கழகச் சட்டங்களை, தொழிலாளர் சங்கங்களை ஏற்கும் சட்டங்களும் வேளாளர், தொழிலாளர் நலம்பேணும் சட்டங்களும் அரசால்

ஆக்கப்படவில்லை. இவ்வாறு முதலாளி வகுப்புகளாகத் தோன்றிய குடும்பங்களில் முகாமையானவை மித்சுபிசி, சுமிதொமோ, யசுதா முதலியவையாகும். இக்குடும்பங்கள் வணிகத் துறையிலும், வைப்பகங்களிலும் (Banks) பேராளுமை செலுத்தின. சிறிய, பெரிய தொழிற்சாலைகளில் பெரும்பகுதி இக் குடும்பங்களின் கையிலிருந்தன. யசுதா, கவாசகி, சிபுசாவா ஆகிய குடும்பங்கள் பெரிய வைப்பகங்களை வைத்துக்கொண்டு நாடு முழுவதிலுமுள்ள தொழிலகங்களுக்கு வட்டிக்குக் கடன் கொடுத்து, அவைகளின் மீது ஆளுமை செலுத்தின. அசனோ, ஒகுரா ஆகிய குடும்பங்கள் தொழிலகங்களில் பேராளுமை செலுத்தின.

இவ்வாறு மேசிப் புரட்சியால் ஏற்பட்ட பொருளியல் வளர்ச்சியைக் குறிப்பிட்ட சில குடும்பங்களே கைப்பற்றிக் கொண்டு அவை நாட்டின் பொருளியலின் முதுகெலும்பாயின. இத்தகைய குடும்பங்களுக்கு சைபாத்சு (Zaibatsu) என்று பெயர். இவர்கள் யாவரும் வணிகர்கள் எனலாம்.

நிலக்கிழார்கள் யாவரும் நாடாளு மன்றத்தின் கீழவையில் இடம்பெற்று வேளாண்மைத்துறையில் பேராளுமைப் பெற்றதைப் போலவே தொழிற் புரட்சியின் வளர்ச்சியால் இப்புதிய வணிக குடும்பத்தினர் ஆளுமை பெற்றனர். ஆனால், இத்தகைய வணிகக் குடும்பத்தினர் அரசியலில் நேரடியாக ஈடுபடவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது. எத்தகைய அரசும் பெரு வணிகரின் உதவியில்லாமல் நடவாதென்பதும், எத்தகைய வணிகரும் அரசியல்காரர்களின் புரப்பில்லாமல் வளர முடியாதென்பதும் உண்மை. எனவே நாளடைவில் இத்தகைய முதலாளிகளைக் கட்டுப்படுத்தி நாட்டில் சீரான பொருளியல் நிலையை ஏற்படுத்த அரசால் முடியவில்லை. 1901-லிருந்து 1914-க்குள் நாடாளும் மன்றத்தின் கீழவையில் நாட்டுப்புற நிலக்கிழார்களை விட நகர்ப்புற முதலாளிகள் அதிக இடம் பெற்று விட்டனர். இம் முதலாளிகளின் கட்சிக்கு மேற்படி வணிகக் குடும்பத்தினர் முதுகெலும்பாய் நின்றனர். இதன்வழி நாட்டில் அரசியல் கட்சி முறையும் வளரத் தொடங்கியது. அரசியல் கட்சிகளின் வளர்ச்சியாலும் பணக்காரர்களின் முதலாளியப் பண்பாலும் பல அரசியல் ஊழல்களும், குமுகாய ஏற்றத்தாழ்வுகளும் வளரத் தொடங்கின. இவையாவும் முதல் உலகப் போருக்குப் பின்னரே சீர்படுத்தப்பட்டன.

1905ஆம் ஆண்டில் ஏறத்தாழ ஈராயிரத்தைந்நூறு தொழிற் கழகங்கள் ஜப்பானிலிருந்தனவென்றும், அவற்றின் முதலீடு ஏறத்தாழப் பத்தொன்பது கோடி உருபாய்களாகுமென்றும்

கணக்கிடப்பட்டிருக்கிறது. பதினைந்து ஆண்டுகளுக்குள் ஏறத்தாழ 12,000 தொழிற் கழகங்கள் வளர்ந்தனவென்றும், ஆகவே 1920-ல் முப்பது கோடி உருபாய்க்கும் மேற்பட்ட முதலீட்டைப் பெற்றிருந்தனவென்றும் கூறப்படுகிறது. இதே காலத்தில் ஏறத்தாழ 46,000 தொழிற்சாலைகளும், அவற்றில் ஐந்திலக்கம் தொழிலாளர்களும் இருந்தனரென்றும் கூறப்படுகிறது. முதல் உலகப் போர் தொடங்கிய காலத்தில் ஆடை உருவாக்கத்தில் ஜப்பான் உலகிலேயே முதலிடம் பெற்றது. எனவே ஜப்பானின் உருவாக்கப் பொருள்கள் யாவும் அயல்நாட்டுச் செலாவணியை அதிகமாக ஈட்டின. நாட்டின் வருமானத்தில் முதல் உலகப் போரின் காலத்தில் 49% படைக்குச் செலவிடப்பட்டது. அதற்கடுத்தாற்போல் போக்கு வரவு ஏந்துக்காகச் செலவிடப் பட்டது. இவ்வாறு பொருளியல் குறுகிய காலத்தில் விரைவாக வளர்ந்த ஜப்பானில் மக்கள் தொகை பெருகுவதும் இயற்கை யோடியைந்த விதியாகி விட்டது. 1870-ல் இதன் மக்கள் தொகை மூன்றரைக் கோடியாக இருந்தது. ஐம்பதாண்டுகளுக்குள்— 1920-ல் ஐந்தரைக் கோடிக்கும் அதிகமாகப் பெருகி விட்டது. 1920-க்கும் 1940-க்குமிடைப்பட்ட காலத்தில் ஆண்டுதோறும் எட்டிலக்கம் மக்கள் மேனி ஜப்பானிய மக்கள் தொகை கூடிக் கொண்டே வந்தது. இவ்வாறு பெருகி வரும் மக்கள் தொகைக் கேற்றவாறு உணவு, உறையுள், உடை ஆகியவற்றை அளிப்பதற் காக மேசி ஆண்டுமானத்தில் பலவகையான வழி முறைகள் கையாளப்பட்டன. ஒக்கைதோத் தீவை அகலப்படுத்தியும், அதிலுள்ள காடு கரம்புகளை விளைநிலமாக்கியும் மக்களுக்குப் பயன்படுமாறு செய்ய அமெரிக்க வல்லுநர்கள் வரவழைக்கப் பட்டனர். அவர்களின் உதவியால் அத்தீவு முழுவதும் இருப்புப் பாதைகளால் இணைக்கப் பட்டது. நிலக்கரிச் சுரங்கங்கள் அமைக்கப் பட்டன. அமெரிக்க மாதிரியில் சப்போரோ என்னு மிடத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்தப் பட்டது. இதற்குப்பின் ஜப்பானில் பிற பகுதியிலுள்ளவர்கள் ஒக்கைதோத் தீவில் குடியமர்த்தப் பெற்றனர். 1925ஆம் ஆண்டு இத்தீவு 25 இலக்கம் மக்கள் தொகையைக் கொண்டதாகப் பெருகியது. கரஃபுதோ, தென்சக்காலின் ஆகியவிடங்களிலும் ஜப்பானிய மக்கள் அதிகமாகக் குடியேறினர். கொரியாவை வென்று ஜப்பான் தன் நாட்டுடன் சேர்த்துக் கொண்ட பின் மக்கள் தொகைச் சிக்கல் மேலும் அதிகமாயிற்று. இதனால் ஜப்பானிய வேளாளருக்கோ, தொழிலாளருக்கோ போதிய ஏந்துகளைச் செய்ய முடியவில்லை. கொரியாவை இணைத்தபின் ஜப்பானிய அதிகாரிகளும், வணிகர்களும், வைப்பகத்தாரும் அங்குச் சென்று குடியேறினர். பார்மோசாவில் 1920-ல் நாற்பதிலக்கம் மக்களே

இருந்தனர். ஆயினும் கொரியாவில் அதன் பரப்பளவை நோக்க அதைவிடப் பன்மடங்கு மக்கள் இருந்தனர். ஒக்கைதோத் தீவுக்கு நேர்மாறாகப் பார்மோசாத் தீவின் வெப்பநிலை அதிகமாக இருந்ததே இதற்குக் கரணியமாகும்.

மஞ்சூரியா ஜப்பானோடு இணைக்கப்பட்ட பின்னும் அதில் எழுபதினாயிரம் ஜப்பானியரே குடியேறினர். ஆனால், அதே சமையத்தில் அதில் மூன்று கோடிச் சீனர்கள் இருந்தனர். மஞ்சூரியாவில் சென்று குடியேறியவர்களில் ஜப்பானியரை விடக் கொரியர்களே அதிகமாக இருந்தார்கள். இவ்வாறு ஜப்பான் தன் சொந்தக் குடியேற்றங்களில் தன் நாட்டவரைக் குடியேற்றிய பின்னும் தன்னுடைய பெருகி வரும் மக்கள் தொகையைச் சமாளிக்க முடியவில்லை. ஜப்பான் ஏறத்தாழத் தன்னுடைய ஐந்திலக்கம் மக்களை அயல் நாடுகளில் குடியேற்ற வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டது. ஆனால், அயல் நாடுகள் யாவும் முதல் உலகப் போரின் தொடக்கக் காலத்திற்கு முன்பே அயலாருக்குத் தங்கள் கதவுகளை மூடிக் கொண்டு விட்டன.

எப்படியும் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு தன் பொருளியல் நிலையைச் சரி செய்ய விரும்பிய அரசு மீண்டும் உள்நாட்டு முதலீடுகளில் கருத்தைச் செலுத்தியது. உள்நாட்டுத் தொழிற்சாலைகளிலும், வணிகக் குழுக்களிலும் பெருவாரியான முதலீட்டையிட்டு அவற்றைத் தங்களின் பேரதிகாரமாகப் பெற்றிருந்த பெருங்குடும்பங்கள் ஜப்பானியப் பொருளியலை மேலும் நெகிழ்ச்சியடையச் செய்தன. சுமிதொமோ, யசுதா ஆகிய குடும்பங்களும், மித்சுபிசி, மித்சுயி ஆகிய குடும்பங்களும் வணிகத் துறைகளையும் வைப்பகங்களையும் தங்கள் ஆளுமையாகக் கொண்டு விட்டன. இதனால் தேசியத்தின் பெரும் பயனை இக் குடும்பங்கள் அனுபவிக்கலாயின. தன்னாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு ஜப்பான் அயல் நாடுகளிலிருந்து கடன் வாங்கும் முறையை வெறுத்துத் தேசியத்தின் தன்மானத்தையும், தனியுரிமையையும் காக்க விரும்பியது. ஆனால், அதன் தேசியக் கொள்கையும், பொதுப் பொருளாதார வளர்ச்சியும், பொது நோக்கங்களும் இத்தகைய தனியார் குடும்பங்களின் வளர்ச்சியால் தடைபட்டன. இத்தகைய இடர்ப்பாடுகளைப் போக்குவதற்கு ஜப்பான் மேலும் மேலும் முயன்று தன்னுடைய பொருளாதாரத்தைச் சீர் செய்து கொள்ள வழி தேடியது. இயற்கைச் செல்வத்தை முழுதுமாகப் பயன்படுத்துவது தொழில் நுட்பத்தை வளர்ப்பது ஆகிய இரு முறைகளைத் துருவி ஆய்ந்து ஜப்பானை வளப்படுத்த முயன்றது. வெளி நாடுகளுக்குச் சென்று பயிற்சி பெற்றுத் திரும்பிய ஆயிரக்கணக்கான ஜப்பானிய இளைஞர்கள்

நாட்டின் எல்லாத் துறைகளிலும் தாங்கள் கற்றுத் தேறிய புதிய அறிவைப் பயன்படுத்த முற்பட்டனர். இதனால் ஜப்பானியக் கல்வி முறையும், வணிக முறையும், வைப்பக முறையும் (Bank) மிகச் சிறப்பாக வளர்ச்சி பெற்றன. ஜப்பானிய குமுகாயத்தில் தொழில், வணிக வளத்தால் வளர்ந்த புதிய செல்வந்தர்கள் குமுகத்தில் உயர்ந்து நிற்பதையும், அரசியல் பதவிகளைக் கைப் பற்றியோர் அவர்களைவிட மேம்பட்டு நிற்பதையும் இக்கால ஜப்பானிய வரலாறு வெளிப்படையாக எடுத்துக் காட்டியது! நிலங்களில் தங்களின் உழைப்பை முதலீடாக வைத்து உழைக்கும் கோடிக் கணக்கான ஜப்பானியர்களுக்கும், தொழிலகங்களில் தங்கள் பணத்தை முதலீடாக வைத்துப் பொருளீட்டும் ஆயிரக் கணக்கான ஜப்பானியர்களுக்குமிடையே வாழ்க்கை முறையிலும், பொருளாதார வசதிகளிலும் உயர்வு தாழ்வுகள் அதிகம் ஏற்பட்டன. நகரங்களிலுள்ள பஞ்சாலைகளில் உழைக்கும் குழந்தைகளும், பெண்களும் தங்களின் நீண்ட நேர வேலைக்குப் பின் குறைந்த ஊதியங்களையே பெற்றார்கள். இதே நிலையே மற்ற தொழிற்சாலைகளிலும் ஏற்பட்டது. இதனை எதிர்த்துத் தங்களுக்கு அதிகக் கூலி வேண்டுமெனப் போராட்டம் நடத்தி வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் இக் கால ஜப்பானியத் தொழிலாளர்களுக்கு ஏற்படவில்லை. அதற்குக் கரணியம் இக்காலத்தில் வலிவான தொழிற்சங்கங்கள் அமைக்கப்படாததே யாகும். ஆயினும் தொடர்ந்து தொழிலாளரின் குரல் கேட்டுக் கொண்டேயிருந்தது. இத்தகைய தொழிலாளர் புரட்சிகளில் 1916ஆம் ஆண்டு நெல் அறுவடையில் கலந்து கொண்ட மக்கள் புரட்சியைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இதற்குப் பின் அரசாங்கம் அரிசி விலையைக்கட்டுப்படுத்தி நிருணயித்தது.

தொழிலாளர் ஒன்றுபட்டுத் தொழிற் சங்கங்கள் ஏற்படுத்தாத வாறு அரசு எவ்வளவோ கண்காணித்த போதும், அவர்களின் ஒருமித்த குரல் அரசைப் பணிய வைத்தது. இதனால் 1916-லிருந்து தொடர்ந்து பல தொழிற் சங்கச் சட்டங்கள் ஏற்படுத்தப் பட்டன. இச் சட்டங்களால் பன்னிரண்டு அகவைக்குட்பட்ட சிறுவர்கள், பதினைந்து பேருக்கு மேல் வேலை செய்யும் தொழிற் சாலைகளிலும் அபாயகரமான தொழிற்சாலைகளிலும் வேலை செய்வது தடுக்கப்பட்டது. பதினைந்து அகவைக்குட்பட்ட சிறுவர் களுக்கும், பெண்களுக்கும் பன்னிரண்டு மணி நேரம் வேலை நேர மாக்கப்பட்டது. ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு நாள்கள் ஓய்வு நாள்களாக விடப்பட்டன. இத்தகைய சட்டங்களாலும் வேலை முறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டும், கூலிகள் ஒழுங்காகக் கொடுக் கப்பட்டும், மக்கள் குறைகள் தீர்க்கப்படவில்லை. இதற்குக்

கரணியம் ஒவ்வொரு ஊரிலும் மக்களிடையே ஏற்பட்ட பிளவுகளும், மக்கள் குறைகளை எடுத்துக்கூறப் போதிய செய்தித்தாள்கள் இல்லாமையும், தொழிற் சங்கத் தலைவரில்லாமையுமே ஆகும். மேலும் 1920ஆம் ஆண்டுக் கணக்குப்படி நோக்கும்போது ஏறத்தாழ 68% குடும்பங்கள் குத்தகைக்குப் பயிரிடுவோர்களாகவே இருந்தார்கள். இதனால் ஊர்ப்புறத்திற்கும், நகர்ப்புறத்திற்கும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டன. புதிய முறை வேளாண்மையால் குறைந்த நிலத்தில் அதிக விளைச்சலை அடைய முடிந்தது. ஆனால், பெரிய தொழிற்சாலைகள் வளர்ச்சியடைந்தது போல வேளாண்மை பெரும் வளர்ச்சியடைய முடியவில்லை. அதற்குக் கரணியம் வேளாண்மை காடு மேடுகளில் துண்டு துண்டாகக் காணப்படுவதேயாகும். எனவே தொழில் வளர்ச்சியில்தான் அதிக மூலதனமிட வேண்டியதாயிற்று.

தொழிற்சாலைகளில் பணப்பயிரை அறுவடை செய்யும் முதாலாளிகளைக் கண்ட நிலக்கிழார்கள் தாங்களும், தங்கள் வயல்களில் பணப்பயிரை அறுவடை செய்ய விரும்பினார்கள். இதனால் பட்டுப்பூச்சி வளர்த்தல் போன்ற தொழில்களைத் தொடங்கினார்கள். இத்தகைய பட்டு வளர்ச்சி உலகச்சந்தையில் பெரிய இடத்தைப் பெற்றது. நிலமுடையோரும், வரி செலுத்துவோரும் புதிய அரசியல் சட்டப்படி ஒப்போலையுரிமை பெற்றவர்களாகி அரசியலில் செல்வாக்கையும் பெற்றார்கள். ஆனால், நிலமில்லாத குத்தகைக்காரர்கள் தங்கள் உழைப்பில் பாதியை நிலக்கிழார்களுக்குக் கொடுத்துவிட்டு வருவாயும் குறைந்து, அரசியலில் செல்வாக்குப்பெறும் வாய்ப்புமற்று நின்றார்கள். குமுகாயத்தில் அனுபவிக்க வேண்டிய பல ஏந்துகளும் அவர்களுக்கு மரபுப்படி இன்னும் மறுக்கப்பட்டே வந்தன. எனவே இன்னமும் நிலக்கிழார்கள் பல ஊர்களின் மீது ஆதிக்கம் செலுத்திய வண்ணமிருந்தனர். மேசிப் புரட்சியால் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியின் கரணியமாக மேலை நாடுகளில் இருப்பது போன்ற முதலாளி, தொழிலாளி வருக்கங்கள் நகர்களிலும், நாட்டுப் புறங்களிலும் வளர்ந்தன. ஆயினும் நாட்டுப்புறங்கள், நகர்ப்புறங்களை விட நாகரிகத்திலும், வலிமையிலும் சிறந்து காணப்பட்டன. ஓய்வு பெற்ற படைத்தலைவர்கள் நாட்டுப் புறங்களுக்குச் சென்று வாழும் போது நாட்டுப்புற மக்களுக்கு வீரப் பயிற்சியை அளித்தார்கள். இத்தகைய சூழ்நிலைகளால் முதல் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட நகர்ப்புறத் தொழிற்சங்கங்களை விட, நாட்டுப்புற வேளாளர் சங்கங்களே அதிகமாயிருந்தன.

இவ்வாறு முன்னிலை மீட்சிக்குப் பின் ஜப்பானிலேற்பட்ட பொருளாதார வளர்ச்சியின் கரணியமாக மேற்படி குமுக,

பொருளாதார மாறுபாடுகள் ஏற்பட்டன. ஆயினும் இவ்வாண்டுமானத்தில் கட்டப்பட்ட கப்பல்களும் பஞ்சாலைகளும், தாளை ஆலைகளும், வேதியல் ஆலைகளும், தொழிலாலைகளும், மருத்துவ மனைகளும், அறிவியற் கூடங்களும், இயற்கையறிவியல் கூடங்களும் நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்தின. முதன் முதலாக 1872-ல் தோக்கியோவுக்கும், யோகாமாவுக்குமிடையே அமைக்கப்பட்ட இருப்புப் பாதை நாடு முழுவதும் பரவிப் பின்னர் தேசியமயமாக்கப்பட்டது. 1886-ல் தொடங்கப் பெற்ற தந்தித்துறையும் 1877-ல் தொடங்கப் பெற்ற தொலைபேசித் துறையும் வெகு வேகமாய் விரிவடைந்து தேசியமயமாயின. 1872-ல் அயல் நாட்டு வணிக ஒப்பந்தங்கள் மீண்டும் பரிசீலிக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டன. இத்தகைய மாற்றங்களுக்குப் பின்னரே மேற்கண்ட மாறுதல்கள் ஜப்பானிய குமுகாயத்திலும், பொருளாதாரத்திலும் ஏற்பட்டன.

# 8. ஜப்பானின் சார்பு நாடுகள்

போர்ட்சுமவுத் உடன்படிக்கைக்குப் பின் ஜப்பான் தன் கீழுள்ள ஆட்சிப் பரப்பைச் சீர்த்திருத்தி ஆளத் தொடங்கியது. சீன-ஜப்பானியப் போருக்குப் பின் ஜப்பானுக்குப் பெரும் பொருள் போரிழப்பீடாகக் கிடைத்தது. ஆனால், போர்ட்சுமவுத் உடன் படிக்கையால் ஜப்பானுக்கு எத்தகைய இலாபமும் கிடைக்கவில்லை. இதனால் ஜப்பானில் எல்லாத் துறைகளிலும் வறட்சி ஏற்பட்டது. வாட்டர்லூச் சண்டையால் பிரிட்டனுக்கு எத்தகைய பொருள் இலாபமும் ஏற்படவில்லை. ஆனால், பிரிட்டனின் பெருமை இப் போரினால் உயர்ந்தது. பொருளாதார வறட்சியை இப்போர் ஏற் படுத்தியது. இதன் கரணியமாக இங்கிலாந்தில் 1815-லிருந்து 1832 வரை உள் நாட்டில் பலவகையான புரட்சிகளும் கலகங் களும் ஏற்பட்டன. இதைப் போலவே உருசிய ஜப்பானியப் போருக்குப் பின் வறட்சியடைந்த ஜப்பானியர்கள் உள் நாட்டில் பல புரட்சிகளையும், கலகங்களையும் செய்தார்கள். செப்டம்பர் 1905-ல் தலைநகரான தோக்கியோவில் ஊரடங்குச் சட்டம் பிறப் பிக்கப்பட்டுப் படை அமைதியை ஆயுதங்கொண்டு கண் காணிக்குமளவுக்கு மக்கள் கலவரம் செய்தார்கள். போரினால் ஏற்பட்ட வறட்சியை மேலும் இயற்கையின் சதிகள் நீடிக்கச் செய்தன. ஒன்சுத் தீவின் வடகிழக்குப் பகுதியில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. பருவம் பொய்த்ததால் விளைச்சலும் பொய்த் தது. இதனால் மக்களின் கொந்தளிப்பை எவ்வகையிலும் அடக்க முடியவில்லை. வேறு வழியின்றிக் கத்சுரா தனது அமைச்சரவையைக் கலைத்துப் பதவி துறந்தார்.

ஃபார்மோசா (தைவான்)

போர்ட்சுமவுத் உடன்படிக்கைக்குப் பின் உள் நாட்டில் ஏற் பட்ட கலகங்களை அடக்கிவிட்டுப் பேரரசர் தனக்குக் கிடைத்த புதிய நாடுகளையும், எல்லைகளையும் சீர்திருத்தி அமைத்து தோக் கியோ ஆட்சி முறையை அங்கெல்லாம் ஏற்படுத்த முற்பட்டார். சிமோனோசகி உடன்படிக்கைக்குப் பின் 1895-லிருந்து தன்னிட முள்ள ஃபார்மோசாத் தீவில் ஜப்பான் தனது நிலையான ஆட்சிச் சீர்திருத்தங்களை ஏற்படுத்த முற்பட்டது. ஃபார்மோசாவின் மேற்குக் கரையோரங்களில் உள்ள சீனர்களை வெளியேற்றவும்,

ஃபார்மோசாத் தீவை ஒரு பயனுள்ள குடியேற்ற நாடாக் கவும் 1905-ல் ஜப்பான் எடுத்துக் கொண்ட முதல் முயற்சியாகும். ஆனால், சீனர்களை வெளியேற்ற முயன்றபோதுதான் அது ஒரு மாபெரும் கடினமான முயற்சி என்பதை உணர்ந்தது. பெருகி வரும் தனது மக்கள் தொகைக்கு ஏற்ற குடியேற்றமாக மஞ்சூரி யாவை மாற்றவும், தொழிற்புரட்சியால் ஏற்பட்ட உற்பத்திப் பொருள்களுக்கு மஞ்சூரியா போன்ற நாடுகளைச் சந்தைகளாக மாற்றவும் வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்ட ஜப்பான் இவ்வாறு சிமோசேனுசகி உடன்படிக்கையால் தனக்குக் கிடைத்த ஃபார்மோசாத் தீவில் தனது ஆதிக்கத்தைப் பூரணமாகச் செலுத்த முடியவில்லையே என மனம் புழுங்கியது. ஃபார்மோசாவின் கிழக்குப் பகுதியில் பெயர் பெற்ற வேட்டைக்காரர்களும், காட்டு விலங்காண்டிகளும் வாழ்ந்து வந்தனர். இவர்களில் பலரை ஜப்பா னியர் வேளாளர்களாக மாற்றி அமைதியான நாகரிக வாழ்வில் ஈடுபடுத்தினார்கள். கட்டுக்கடங்காதவர்களைக் காவல் படைகளைக் கொண்டு கண்காணித்து அமைதியை ஏற்படுத்தினர். இதற்காக இவ்விடங்களில் புறக்காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. எடுத்த எடுப்பிலேயே ஜப்பான் இத்தகைய சீர்திருத்த முயற்சி களில் வெற்றி பெற முடியவில்லை. ஏனென்றால் இக் காட்டு விலங் காண்டிகள் யாவரும் சீன இனத்தைச் சேர்ந்த பழங்குடியின ராவர். மேலும் ஃபார்மோசாவிற்கு அதிகாரிகளாகச் சென்ற ஜப்பானியர் திறமையற்றவர்களாகவும், ஊழல் நிறைந்தவர்களா கவும் காணப்பட்டார்கள். எனவே திறமையான ஆட்சி முறையை ஃபார்மோசாவில் ஏற்படுத்துவதற்கு பல ஆண்டுகளா யின. இதனால் ஜப்பானியப் பேராட்சிக்கு ஃபார்மோசா செலவை மட்டும் தரும் நாடாக இருந்ததேயன்றி வருவாயைக் கொடுக்கும் நாடாக இல்லை. புதிய மருந்துகளின் கண்டு பிடிப்பாலும், மக்கள் நல்வாழ்வு முறையாலும் ஜப்பானின் இறப்பு விகிதம் குறைந்து பிறப்பு விகிதம் அதிகரித்துக் கொண்டே வந்தது. எனவே வறட்சியான பாலையையும் வளமுள்ள நாடாக்கி, வளர்ந்து வரும் மக்கள் தொகையைச் சமாளிக்கும் முயற்சியை ஜப்பான் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. உள்நாட்டில் செய்யப்படும் அபிவிருத்திகளைப் போலவே ஃபார்மோசாவிலும் முழு மூச்சுடன் செய்ய முற்பட்டது. போக்குவரத்தை விரைவு படுத்த எண்ணி ஃபார்மோசாவிலிருந்த பழைய இருப்புப் பாதை களைப் புதுப்பித்ததோடு புதிய இருப்புப் பாதைகளையும் ஜப்பான் அமைத்தது. இவ்வாறு பல ஆக்கப் பணிகளையும், உற்பத்தி நிலை யங்களையும் ஃபார்மோசாவில் ஏற்படுத்தியபின் சிறிது சிறிதாக ஆட்சித் திறமையும் சிறப்புறத் தொடங்கிது. வலுவான ஆட்சி முறை ஏற்பட்டபின் மஞ்சூரியாவின் வருவாயும் அதிகரித்தது.

இதனால் ஜப்பானுக்கு இதுவரை தண்டச் செலவாகக் காணப்பட்ட ஃபார்மோசா ஒரு வருவாய் ஊற்ருகக் காணப்பட்டது. ஃபார் மோசா வளமான காடுகளுக்குப் பெயர் பெற்றது என்பதை அறிவோம். அக் காடுகளை ஆக்கப்பணிகளுக்குப் பயன்படுத்தும் திட்டத்தை ஜப்பான் வகுத்தது. மலைகளில் உற்பத்தியாகிப் பயனின்றிக் கடலில் வீணுகிக் கொண்டிருந்த நீரை வேளாண் மைக்குப் பயன்படும் வண்ணம் பல நீர்பாசனக் கால்வாய்களை வெட்டி முப்போகச் சாகுபடியை ஏற்படுத்தியது. மரபு வழியாக ஃபார்மோசாவில் இருந்து வந்த வட பகுதியின் தேயிலை உற்பத்தியும், மையத்தின் நெல் உற்பத்தியும், தென்பகுதியின் கரும்பு உற்பத்தியும் பன்மடங்கு அதிகரித்தன. குறிப்பாக ஜப்பானின் ஏற்றுமதி வகையில் ஃபார்மோசாத் தீவின் சருக்கரை பெரும் பங்கு ஏற்றது. ஃபார்மோசாவில் அமர்த்தப்பட்ட ஜப்பானிய அதிகாரிகள் ஆங்கிலேயரின் குடியேற்ற ஆட்சி யமைப்பில் நன்கு பயிற்சி பெற்ருர்கள். எனவே ஐரோப்பியக் குடியேற்ற ஆட்சி முறைகளைப் பின்பற்றி ஃபார்மோசாத் தீவின் முன்னேற்றம் ஜப்பானிய நாகரிகத்தை பின்பற்றி அதி வேகமாக வளர்ந்தது.

இத்தகைய சீர்த்திருத்தங்களால் ஃபார்மோசாவின் மக்கள் தொகையும் பெருகிக் கொண்டே வந்தது. ஜப்பான் தன்னுடைய நேரடி ஆட்சியை ஏற்படுத்தியபின் அதன் மக்கள் தொகை இரண்டு மடங்காகப் பெருகியது. 1930-ல் அதன் மக்கள் தொகை 45 இலக்கமாகும். 1939-ல் ஏறத்தாழ 58 இலக்கமாக மக்கள் தொகை உயர்ந்தது. இதில் ஓரிலக்கம் மக்கள் ஃபார்மோசாவின் பழங்குடியினர்; மூன்றிலக்கம் பேர் ஜப்பானியர்; மீதியுள்ளவர்கள் சீனர்களாவர். இவர்களைத்தவிரக் கூலிகளாகவும், வணிகர் களாகவும், அவ்வப்போது சீனுவிலிருந்து பலர் வந்து சென்றனர். எனவே சராசரியாக இவர்கள் ஒரு சதுர மைலுக்கு ஜப்பானில் வாழும் மக்கள் தொகைக்கீடாக இருந்தனர். நெல் உற்பத்தி பன்மடங்கு அதிகமான கரணியத்தால் இம் மக்களுக்குப்போக எஞ்சிய பாதிப் பகுதியை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தார்கள். சருக்கரையும், அரிசியும் போதிய அளவு ஃபார்மோசாவிலிருந்து கிடைத்தவுடன் ஜப்பான் தன் உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற தெனலாம். ஜப்பான் தன் நாட்டில் தொழில் வளத்திற்கு முழு மூச்சுடன் பாடுபடும்போது ஃபார்மோசாவில் மட்டும் வேளாண் மையோடு தொடர்புடைய தொழில்களிலேயே ஈடுபட வைத்தது. இதனால் தன் உணவு நெருக்கடியைச் சமாளித்துக் கொண்டு அதனைத் தன் சந்தையாக மாற்றிக் கொண்டது. அபினி பயன் படுத்துவதைத் தன் நாட்டில் மட்டுமேயன்றி ஃபார்மோசாவிலும்

தடை செய்தது. ஜப்பானில் வளர்ந்து வந்த கல்வி வளர்ச்சியினளவு ஃபார்மோசாவிலும் வளர்ந்தது. மருத்துவ ஏந்து (வசதி)களும், உடல் நலம் பேணு நிலையங்களும் ஃபார்மோசாவில் அதிகரித்தன. ஆயினும் தொழிலாளர்களின் நலனும், கூலியும் ஜப்பானிலிருப்பதுபோல் ஃபார்மோசாவில் ஏற்படவில்லை. 1919-க்குப் பின் ஜப்பானின் ஒரு மாநிலமாகவே ஃபார்மோசா வளர்ச்சியடைந்தது. முதலில் ஜப்பானோடு இணைய மறுத்த ஃபார்மோசா மக்கள் பின்னர் தாங்களே ஜப்பானிய மொழியையும் நாகரிகத்தையும் விரும்பியேற்றுக்கொண்டார்கள். இவ்வாறு வளர்ச்சி பெற்ற ஃபார்மோசா பிற்காலத்தில் ஜப்பானின் தெற்கத்திய ஆதிக்க வளர்ச்சிக்கு முதற்படியாய் நின்றது.

## கொரியா

சீன—ஜப்பானியப் போரினிறுதியில் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் கொரியா சுதந்திர நாடாக அமைவதைச் சீனு ஒப்புக்கொண்டது. ஆனுல், பெயரளவில்தான் கொரியா ஒரு சுதந்தர நாடாக இருந்ததேயொழிய, அதனுடைய சுதந்தரத்தில் பல நாடுகள் தலையிட்டவண்ணமிருந்தன என்பதை அறிவோம். இதன் தலைநகரமான செவுலில் ஜப்பானியத் தூதரகமும், உருசியத் தூதரகமும் இருந்தனவென்றும், இவை அவர்களின் படைகளால் பாதுகாக்கப்பட்டன என்றும் பார்த்தோம். கொரியாவில் உருசியாவுக்கும், ஜப்பானுக்கும் ஏற்பட்ட ஆதிக்கப் போட்டியால்தான் இவ்விரு நாடுகளுக்கும் போர் ஏற்பட்டது என்பதையும் அறிவோம். கொரியாவைப் பிறநாடுகள் ஆக்கிரமித்துக் கொண்டால், தனக்கு விளையும் பேராபத்தையுணர்ந்த ஜப்பான் இதனை எப்படியும் தன் கீழ் வைத்திருக்கவேண்டும் என்று ஆதியிலிருந்தே பாடுபட்டதையும் நாம் அறிவோம். 1904-க்குப் பின் ஜப்பானியரின் கெடுபிடி கொரியாவில் அதிகரித்தது. ஜப்பானியப் படைகளும், வணிகர்களும், கூலியாள்களும், சாரைசாரையாகக் கொரியாவுக்குச் செல்லத்தொடங்கினர். இவர்களால் கொரிய மக்களின் (சுதந்தரங்கள்) உரிமைகள் பாதிக்கப்பட்டன. ஜப்பானியர் தங்கள் உடன்படிக்கைகளையும், வாக்குறுதிகளையும் மறந்துவிட்டு இத்தீவு முழுவதையும் தங்கள் ஆதிக்கத்திற்கு உட்படுத்தத் தொடங்கினர். ஜப்பானிலிருந்து கொரியாவிற்குப் பாதுகாப்புக்காகச் சென்ற படைகளும், ஆலோசகர்களாகச் சென்ற அதிகாரிகளும், அஞ்சல், தந்தி, தொலைபேசி ஆகிய செய்தித்துறையை முழுதுமாக எடுத்துக் கொண்டார்கள். கடலோரங்களில் மீன் பிடிக்கும் உரிமையை ஜப்பானியரே பெற்றுர்கள். இவ்வாறு வளர்ந்துவரும் ஜப்பானிய ஆதிக்கத்தைக் கொரியாவின் அரசராலும், மற்ற அதிகாரிகளாலும் கட்டுப்

படுத்த இயலவில்லை. அதற்குக் கரணியம் அவர்களிடமிருந்த வலுவின்மையும், ஊழல்களுமேயாகும். 1902ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் ஜப்பானுடன் செய்து கொண்ட உடன் படிக்கையை மீண்டும் 1905-ல் சில மாற்றங்களுடன் புதுப்பித்துக் கொண்டார்கள். அதன்படி பிரிட்டன் கொரியாவை ஜப்பானின் கண்காணிப்பில் வைப்பதையே வலியுறுத்தியது. வளர்ந்துவரும் ஜப்பானியரின் வலிமையைக்கண்டு அமெரிக்கா அச்சமடைந்தாலும் கொரியாவின் விடுதலையையும், ஆனால், அதே சமையத்தில் ஜப்பான் தவிர மற்ற நாடுகள் தலையிடாதிருப்பதையும் அது விரும்பியது. நவம்பர் 1905-ல் ஜப்பானிய அரசியலறிஞர் இத்தோ கொரியாவுக்கு அனுப்பப்பட்டார். கொரியாவின் வெளிநாட்டு உறவுகளைத் துண்டித்து அது ஜப்பானுடன் மட்டுமே உறவுகொள்ள வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். இதற்குப்பின் இவர் தலைமை நிலையராகக் (Resident General) கொரியாவில் அமர்த்தப்பட்டார். உள் நாட்டு ஆட்சி முறைகளைக் கொரியர்களே நடத்தவும், அவற்றை மேலிருந்து கண்காணிக்கவும், அயல்நாட்டு உறவுகளை அடியோடு கண்காணிக்கவுமான மேலாட்சி முறையை இத்தோ பின்பற்றினார். இத்தகைய கொள்கையை ஆங்கிலேயர்கள் இந்தியாவில் பின்பற்றினார்கள் என்பது நோக்கற்பாலதாம். வெல்லெசுலியின் துணைப்படை முறையோடு இத்தோவின் கொரிய ஆட்சிமுறையை ஓரளவு ஒப்பிடலாம். ஆனால், ஆங்கிலேயர்கள் இந்திய சுதேசி மன்னர்களுக்குக் கொடுத்திருந்த சுதந்தரத்தை இத்தோ கொரிய அரசருக்கும், ஆட்சியாளர்க்கும் கொடுக்கவில்லை. ஏறத்தாழக் கொரியாவை ஓர் அடிமை நாட்டைப் போலவே ஆண்டார். இத்தகைய ஜப்பானியரின் ஆட்சி முறையைப் பொருத கொரிய அரசர் 1905-ல் அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் உரூசுவெல்டுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துக் கொரியாவை ஜப்பானின் பிடியிலிருந்து காக்குமாறு வேண்டினார். ஆனால், அமெரிக்கா 1907-ல் ஏக் (The Hague) என்னுமிடத்தில் கூடிய பன்னாட்டவைகளின் மாநாட்டில்தான் கொரியப் பிரச்சனையைக் கிளப்பியது. இதற்கிடையில் இத்தோ கொரியாவின் பொருளாதாரம், காவல், சட்டம், கல்வி, பொக்கசம், நயன்மை பொது நலம், தொழில்வளம், வாணிகம் முதலிய எல்லாத் துறைகளிலும் நேரடியாக ஜப்பானியர் கண்காணிக்க வழி செய்தார். பெயரளவுக்குக் கொரிய அரசரும், கொரிய அதிகாரிகளும் இருந்தனர். இதனால் கொரியாவில் இத்தோ ஓர் இரட்டையாட்சி முறையை ஏற்படுத்தினர் எனலாம். கொரியாவின் வளர்ச்சி ஜப்பானின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் என்பதை இத்தோ நன்குணர்ந்திருந்த போதிலும், அது கடைசி வரையில்

ஜப்பானுடன் நேசத்துடனும், நன்றியோடும் இருக்குமா என ஐயுற்றூர். எனவேதான் இத்தகைய இரட்டையாட்சி முறையை ஏற்படுத்தி அதிகாரங்களைக் கைப்பற்றினூர். இஃது கொரியாவின் சுதந்தரத்தைக் காப்பதாக வாக்களித்த அரசியல் நாகரிகத்தை மீறியதாகும்.

ஜப்பானியர்களைக் கொரியர்கள் தங்கள் சுதந்தரத்தைப் பழிக்கும் பரம வைரிகளாகக் கருதினூர்கள். இதனால் கொரியர்களுக்கும், ஜப்பானியர்களுக்குமிடையே பகைமையும், வெறுப்புணர்ச்சியும் வளர்ந்து கொண்டே போயிற்று. இதே சமையத்தில் தோக்கியோவிலிருந்த பேரரசர்கட்சி கொரியாவை ஜப்பானுடன் சேர்த்துக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தியது. இத்தோ கொரியாவில் ஜப்பானிய ஆதிக்கத்தை முழுதுமாக ஏற்படுத்திய போது கொரியர்கள் கொதித்து எழுந்தனர். இதனால் கொரிய நாடெங்கிலும் ஜப்பானியரை எதிர்த்துக் கிளர்ச்சிகள் தோன்றின. பல ஜப்பானியரும், கொரியரும் இக் கிளர்ச்சியில் மடிந்தனர். தன்னுடைய ஆட்சி தோல்வியடைந்ததைக் கண்ட இத்தோ 1909-ல் பதவி துறந்து கொரியாவை விட்டுப் புறப்படலானூர். ஆனால், அவர் ஒரு கொரிய அரசியல் வெறியனால் படுகொலை செய்யப்பட்டார்.

இத்தோவின் கொலைக்குப் பின்னும் அவரால் அமைக்கப்பட்ட இரட்டையாட்சி முறை கொரியாவில் சில மாதங்கள் வரை பின் பற்றப்பட்டது. 1910ஆம் ஆண்டு ஆகச்ட்டுத் திங்களில் கொரியாவுக்கும் ஜப்பானுக்குமிடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி கொரிய அரசர் முடி துறந்தார். கொரியா பழைய சோசன் என்னும் பெயருடன் ஜப்பானின் ஒரு மாநிலமாக இணைக்கப்பட்டுவிட்டது. கொரியா ஜப்பானுடன் இணைக்கப் பட்டபின் ஜப்பான் தன் கவனம் முழுவதையும் கொரியாவின் மீது செலுத்தி அதை ஒரு சிறந்த மாநிலமாக ஆக்க முற்பட்டது. இது வரையில் சீனுவுக்கும், மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு மிடையே ஒரு கவர்ச்சிப் பொருளாக இருந்துவந்த கொரியா 1910-லிருந்து ஜப்பானின் ஓர் உறுப்பாகிவிட்டது. கொரியா தனித்து நின்றால் அதன் அமைதியையோ, சுதந்தரத்தையோ அதனால் காத்துக் கொள்ள முடியாது என்பதைக் கொரிய மக்களும் உணரத் தொடங்கியதால் இனி ஜப்பானை எதிர்த்துக் கலகம் செய்வதைவிட அதன் ஆட்சியை ஏற்று நன்மையடைவதே சிறந்த வழியெனக் கண்டார்கள். மற்ற உலக நாடுகளும் நில அமைப்பின்படியும் அறிவியலின்படியும் கொரியா ஜப்பானியரிடம் இருப்பதே சரியென்பதை ஒப்புக்கொண்டன. கொரியா தன் மாநிலமானபின் ஜப்பான் அந்நாட்டில் இருப்புப்பாதை, தரை

வழிகள், வேளாண்மை, தொழில் முதலிய எல்லாத் துறைகளிலும் அக்கறை செலுத்திப் பன்மடங்கு வளர்ச்சியை ஏற்படுத்தியது. பதவி துறந்த அரசரும், அரசக்குடும்பத்தினரும் ஊதியம் பெற்றுச் சிறப்புடனும், பாதுகாப்புடனும் வாழ்ந்தனர். கொரிய அதிகாரிகளும், வணிகர்களும், மற்றவர்களும் தங்களுடைய உரிமைகளுக்குக் குந்தகம் ஏற்படாதவாறு வாழ அனுமதிக்கப் பட்டதால் கொரியர்கள் ஜப்பான் பேரரசரின் நன்றியுள்ள குடிமக்களாக மாறினர்கள். முன்னரே ஜப்பான் நாட்டின் புதிய வளர்ச்சிகள் யாவும் கிறித்தவச் சபைப் பாதிரிமார்களாலும், இத்தோவாலும் நன்கு பரப்பப் பட்டு விட்டதால் கொரியர் ஜப்பானுடன் இணைந்த பின் ஜப்பானிய நாட்டின் நாகரிகத்தையும், சட்ட திட்டங்களையும் தங்களுக்கு ஒவ்வாத, முற்றிலும் வேருனவைகளாக அவர்கள் கருதவில்லை. கொரிய ஆட்சித் துறையிலும் ஜப்பானிய மொழியே பயன்படுத்தப் பட்டது. ஆனல், கல்வித் துறையை ஜப்பானிய அரசாங்கமே மேற்கொள்ள முற்பட்ட போது, முன்பே கொரியா முழுவதும் கல்விக் கூடங்களையமைத்து கல்வித்துறையை பேராதிக்கமாகப் பெற்றிருந்த கிறித்தவச் சமயப் பாதிரிமார்கள் இதனை விட்டுக்கொடுக்க மறுத்தனர். ஆனல், ஜப்பான் கல்வி வளர்ச்சியைத் தன் தேசியத் திட்டமாகக் கொண்டதால் கொரியாவின் கல்விக் கூடங்களையும் தேசியமயமாக்கியது. இத்தகைய பெருந்திட்டங்களைக் கொரியாவில் தொடங்கிச் செயல்படுத்த நேரிட்டதால் ஜப்பானிய அரசாங்கத்திற்குக் கொரியாவை இணைத்துக் கொண்டதால் தொடக்கத்தில் செலவினம் அதிகரித்து வரவு செலவுத் திட்டத்தைப் பாதித்தது. ஆனல், போகப்போகக் கொரியாவும், மஞ்சூரியாவைப் போலவே வருவாயுள்ள ஒரு ஜப்பானிய மாநிலமாக மாறியது. 1919-க்குப் பின் ஏற்பட்ட பன்னாட்டுக் கழகத்தை உருவாக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் ஒவ்வொரு நாடும் உருவத்தில் எவ்வளவு சிறியது அல்லது பெரியதாயினும் சுதந்தரமாக வாழ வேண்டும்; ஒரு நாடு மற்றொரு நாட்டை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது என்பனவற்றை வலியுறுத்தினர். இதனை அடிப்படையாகக் கொண்டு கொரியாவிலும் ஜப்பானை எதிர்த்து விடுதலைப் போராட்டங்கள் தொடங்கப்பட்டன. அவற்றில் கிறித்தவர்களும், மாணவர்களும் பெரும் பங்கேற்றனர். இத்தகைய போராட்டங்களும் ஜப்பானிய ஆட்சியால் மிக எளிதாக அடக்கப் பட்டு விட்டன. சீனவிலும் அமெரிக்காவிலுமிருந்த கொரிய மாணவர்களும் தங்களின் தேச விடுதலைக்காகப் போராடினர். அவர்களுடைய முயற்சிகளும் பயனற்றுப் போயின.

ஜப்பான் கொரியாவில் பெற்ற நன்மைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது அவை மிகவும் சிறப்புடையன என்று கூறிவிட

முடியாது. வலிமையற்ற சிறு நாடான கொரியாவும் அந்நாட்டு அப்பாவி மக்களும் ஜப்பானின் முரட்டுப் பிடிக்கு ஆளானுர்கள் என்று அரசியலறிஞர்கள் கருதுகிருர்கள். எளிய கொரிய நாட்டின் சுதந்தரம் வீணே வலிய நாடான ஜப்பாஞல் பறிக்கப் பட்டு விட்டது என்பது இவ்வறிஞர்களின் குற்றச் சாட்டாகும். கொரியாவைக் கவர்ந்து கொள்ள பல நாடுகள் போட்டியிட்டன. ஆஞல், ஜப்பான் மட்டும் இதில் வெற்றி பெற்றது. மற்ற நாடு களுடன் ஒப்பிட்டு நோக்கும்போது கொரியா ஜப்பானின் கைக்கு வந்ததே பல வகையிலும் பொருத்தமாக இருக்கிறது. ஜப்பா னுடன் இணைக்கப்பட்ட பின்னரே கொரியாவைப் பற்றியிருந்த ஆபத்து நீங்கியது. அது ஒரு பெரிய அரசின் (ஜப்பானின்) உறுப்பாகி விட்டதால் அதற்குப் பாதுகாப்பும் புகழும் ஏற்பட லாயிற்று. ஜப்பானின் செல்வ வளத்தால் கொரியாவில் எல்லா வளங்களும் ஏற்பட்டன. புதிய முறைகளைக் கையாண்டதால் வேளாண்மை உற்பத்தி இருமடங்காகப் பெருகியது. 1911—1931—இதற்கிடைப்பட்ட இருபதாண்டுக் காலத்தில் பள்ளி செல்வோரின் எண்ணிக்கை ஆறு மடங்காக அதிகரித்தது. அபினியும், அபினியின் சத்துமுள்ள போதைப் பொருள்கள் தடை செய்யப்பட்டுப் பொதுச் சுகாதாரம் போற்றப்பட்டது. கொரியாவில் உற்பத்தியான உயர்ந்த ரக அரிசி ஜப்பானுக்கு ஏற்றுமதியாயிற்று. ஆஞல், கொரியர்கள் மட்டரக அரிசியையும் பார்லி, கோதுமை போன்றவற்றையும் உண்டார்கள். ஃபார்மோசாவைப் போன்றே கொரியாவும் ஜப்பானின் உணவு நெருக்கடியைத் தீர்த்தது. கொரியாவின் காடுகளும், இயற்கை வளங்களும், அறிவியல் முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டன. வேளாண்மையில் பருத்திப் பயிர், கரும்புப்பயிர் முதலியவற்றில் கொரியா ஜப்பானைப் போல் வளர்ச்சியடையத் தொடங்கியது. அதனுடைய கல்வி வளர்ச்சியிலும் ஜப்பானைப்போல் முழு வெற்றி கண்டது. இவ்வாறு ஏற்பட்ட கொரியாவின் வளர்ச்சி ஜப்பானின் முன்னேற்றத்திற்கு மேலும் உதவியது. ஆஞல், ஜப்பானிலும், ஃபார்மோசாவிலும் ஏற்பட்ட மக்கள் தொகைச் சிக்கல் கொரி யாவிலும் தோன்றலாயிற்று. 1911-ல் இதன் மக்கள் தொகை ஒரு கோடியே முப்பதிலக்கத்திற்கும் அதிகமாயிருந்தது. கால் நூற்றுண்டுக்குள் 1935-ல் இதன் மக்கள் தொகை ஏறத்தாழ இரண்டு கோடியே முப்பதிலக்கமாகப் பெருகியது. வேளாண் மையைத் தவிர மற்றைய எத்தொழிலையும் பேராதாரமாகக் கொண்டிராத கொரியாவின் மக்கள் தொகைச் சிக்கல் ஜப்பானுக்குப் பிற்காலத்தில் ஏற்படலாயிற்று. இதஞல் அண்டை யிலுள்ள மஞ்சூரியாவுக்குள்ளும், ஜப்பானுக்குள்ளும் கொரிய மக்கள் குடியேறலாயினர்.

கவுண்டு இதோ ஃகிரோ புமி (Count ito Hirobumi—1841-1909)

இதோ 1841, செப்டம்பர் 2-ல் சோசூ சாமுராய் மரபில் பிறந்தார். பெயர் பெற்ற யொசிதா தொரா சிரோ என்னும் ஆசிரியரிடம் பயின்ற இவர் இளமையிலிருந்தே பழமையை எதிர்த்துப் புதுமைகளை வரவேற்றார். ஜப்பான் ஒரு புதிய நாடாகி ஜப்பானியர் தூய தேசிய உணர்ச்சியோடு விளங்க வேண்டு மென்பதில் தணியாத ஆர்வம் கொண்டவரானார். தனது பதினாறும் அகவையில் குருகராவிலிருந்த சோசூ குலக் கிழானுக்குச் சிறந்த தகுவுரையாளரானார். அச்சமையத்தில் நாகசாகியிலிருந்த தச்சுக்காரரிடம் கல்வி, அரசியல், கலையறிவு பெற்றார். தனது பதினெட்டாம் அகவையில் கோகின்கிதோ என்னும் மற்றொரு சோசூ குலத் தலைவரின் கீழ்ப் பணியிலமர்ந்தார். அத் தலைவர் இவ் விளைஞரின் அளவிட முடியாத ஆற்றலையும், அறிவுத் திறனை யும் கண்டு வியந்து அவரையும், மற்ற மூன்று இளைஞர்களையும் மேற்படிப்புக்காக ஐரோப்பாவுக்கனுப்பினார்.

1863-ல் யோகாமாவிலிருந்து இதோவும், மற்ற மூன்று இளைஞர்களும் மேற்படிப்பிற்காகப் பிரிட்டானியக் கப்பலொன்றில் புறப்பட்டு இலண்டன் போய்ச் சேர்ந்தனர். முற்றிலும் பழமையில் ஊறி, வெளியுலகை அறியாது கிடக்கும் ஜப்பானிய மண்ணிலே பிறந்த இதோ இலண்டனையடைந்தவுடன் அங்குள்ள மக்களின் நடையுடைத் தோற்றங்களையும், பழக்க வழக்கங்களையும் கண்டு, தான் ஒரு மாற்றுலகத்திற்கு வந்து விட்டதாக எண்ணி வியப்பால் வாயடைத்து நின்றார். அவற்றிற்கெல்லாம் மேலாக ஆங்கில மொழியும், ஆங்கில நூல்களும், ஆங்கில நாட்டுச் சட்டதிட்டங் களும், ஒழுக்க முறைகளும் அவரைப் பெரிதும் கவர்ந்து விட்டன. புதிய உருசியாவின் தந்தை மாவீரன் பீட்டர் தொழிலாளி உடையில் தச்சு நாவாய்த் தளங்களில் கப்பல் கட்டும் பணியில் தேற ஏழைத் தொழிலாளிபோல் உழைத்தது போலவே ஜப்பானையும் ஒரு புதிய நாடாக்க இதோவும் அல்லும், பகலும் ஓய்வின்றி ஐரோப்பியரின் அறிவியல்களையும், அரசியல் தந்திரங்களையும், சட்ட திட்டங் களையும் கற்றுத் தேர்ந்தார். ஆயினும் இவரைப் பெரிதும் கவர்ந்தது ஆங்கில மொழியும், புதுமையறிவியல்களுமே யாகும்.

இவ்வாறு தன் அறிவுப் பசிக்குப் பெருந்தீனி தேடிக்கொண் டிருந்த இதோ, திடீரெனத் தன் தாய் நாட்டிற்குத் திரும்ப வேண்டியதாயிற்று. மேசிப் புரட்சிக்கு முட்டுக் கட்டையாக நின்று உள்நாட்டுக் கலகங்களை விளைவித்த சோசூ கிழார்களைப் பற்றி இலண்டன் தாளிகையொன்றில் (The Times) வெளியான செய்தி யைக் கண்ணுற்ற இதோ, தன்னுடன் வந்த மற்ற மாணவர்களையும்

அழைத்துக் கொண்டு தாய்நாடு திரும்பினர். தன்னுடன் வயவர் உருதர்போர்டு என்னும் ஆங்கிலேயரையும் அழைத்துக் கொண்டு நேராக சிமோனேசகியை அடைந்தார். கடைசியில் தன் ஆண்டையைத் தன் வேண்டுகோளை ஏற்கச் செய்து சத்சுமாக் களுக்கும், சோசூக்களுக்குமிடையில் ஏற்பட்ட உள்நாட்டுச் சண்டையைத் தடுத்து நிறுத்தினர். இதனால் முன்னிலை மீட்சியின் சிறப்பும் மேசி மன்னரின் சீர்த்திருத்தங்களும் ஒளி பெற்றன. இத்தகைய மாவீரரை-தேசியவாதியை-நுண்ணறிவு படைத்த இளைஞரைக் கண்ட மேசி மன்னர் அவரைத் தன் அவையில் உறுப்பினராக்கிக் கொண்டார். முன்னிலை மீட்சிக்குப் பின் அயல் நாட்டுத் தூதுவர்களுக்கு முட்சுஇதோ முதன் முதலாகத் தன் அரியணையிலமர்ந்து பேட்டி கொடுக்கும்போது இதோ மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றி மாமன்னரின் அன்பைப் பெற்ருர்.

இதிலிருந்து தான் இறக்கும் வரையில் இதோவின் வாழ்வில் எண்ணிறந்த நிகழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. அவர் வாழ்வில் நிகழ்ந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஜப்பானிய வரலாற்றில் ஒவ்வொரு படியாகும். எனவே இதோவின் வாழ்வும், ஜப்பானின் வரலாறும் 1868-லிருந்து 1909 வரையில் ஒன்றுக்கொன்று பின்னிக்கிடந்தன. ஜப்பான் தன்னுடைய தேசியப் பெருமையி லிருந்து வீழாமல் அதன் மதிப்பையும், மானத்தையும் ஐரோப்பிய நாடுகளிடையே நிலை பெறச் செய்ய தியென்சின் உடன்படிக்கை யையும், சிமோனேசகி உடன்படிக்கையையும் வகுத்தளித்தவர் இதோ ஆவார். 1902-ல் ஏற்பட்ட ஆங்கில-ஜப்பானிய உடன் படிக்கையை முதலில் இவர் எதிர்த்தார். ஆனல், அவ்வுடன்-படிக்கை நிறைவேற்றப்பட்ட பின், தனது சொந்தக் கருத்தின் விருப்பு, வெறுப்புக்கு ஆளாகிக் கொள்ளாமல் தேசிய உணர்ச்சி யோடு அதனைப் போற்றிக் காத்தார். 1889-ல் உலகமே வியக்கும் வண்ணம் ஜப்பானிய நாட்டு அரசியல் சட்டத்தை வகுத்தளித்து, பேரறிஞர் பீ. ஆர். அம்பேத்கார் தன்னுரிமை பெற்ற இந்தியாவின் அரசியல் சட்டத்தின் தந்தையாகிப் பெற்ற மாபெரும் பெருமையினை, இதோ புதிய ஜப்பானிய நாட்டில் பெற்ருர். அவ்வரசியல் சட்டத் தொகுப்பு அவரின் நுண்ணறிவையும், பரந்த நோக்கத்தையும், புதுமையில் அவர் கொண்டுள்ள நாட்டத் தையும் காட்டுகிறது. இவ்வரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தபின் அவர் ஒரு அரசியல் கட்சியின் தலைவராகி, தேசிய உணர்ச்சியோடு பணியாற்றியிருக்கிருர்.

உருசிய-ஜப்பானியப் போருக்குப் பின் இதோ தலைமை நிலைய ராகக் கொரியாவில் அமர்த்தப்பட்டார். அவர் தலைமை நிலையராக இருந்து கொண்டு ஜப்பானிய நாட்டிற்கு ஆற்றிய

தொண்டினை அளவிட முடியாது. இங்கிலாந்தின் வரலாற்றில் குரோமரும் (Cromer), கிச்சினரும் (Kitchener) எகிப்தில் ஆற்றிய மாபெரும் தொண்டிற்கு இதனை ஒப்பிடலாம். இத்தகைய அரசியலறிஞனும், தேசியவாதியுமான இதோ கொரியாவில் ஒரு சிறந்த இரட்டையாட்சி முறையினை ஏற்படுத்தி, கொரியாவின் வளர்ச்சிக்கும் ஜப்பானின் வளர்ச்சிக்கும் அரும்பாடு பட்டார். இவ்வாட்சி, கொரியர்களின் எழுச்சியால் வீழ்ச்சியடைந்ததால் 1909-ல் தன் பதவியைத் துறந்து தாய் நாட்டுக்குப் புறப்படலானார். மஞ்சூரியாவில் அவர் உருசியாவின் பொக்கசவமைச்சருடன் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கையில் அவர் மீது ஆறு துமுக்கிக் குண்டுகள் ஒன்றன்பின்னொன்றாகப் பாய்ந்தன. இவ்வரசியல் மேதை செங்குருதி சிந்திச் சாய்ந்தார். முதல் மூன்று குண்டுகள் தன்மீது பாய்ந்தவுடன் 'நான் மூன்று குண்டுகள் என் உடலைத் துளைக்குமளவுக்கு என் நாட்டிற்குப் பணியாற்றியுள்ளேன். இதுவே என் பேரின்பம்' என்று கூறினார். இதற்குப் பின் மேலும் மூன்று குண்டுகள் அவர் உடலைத் துளைத்தன. அரைமணி நேரத்திற்குப் பின் அவர் உயிர் உடலை விட்டுப் பிரிந்தது. இவ்வாறு கொரிய விடுதலை வீரர்களின் அரசியல் சதிக்கு இதோ காவு கொடுக்கப்பட்டார்.

இதோ தன்னுடைய வாழ்நாளில் மூன்றே மூன்று கொள்கைகளைக் கடைப்பிடித்தார். ஒன்று, மாந்தன் தனக்குப்பின் ஒரு சிறந்த எச்சத்தை விட்டுச் செல்ல வேண்டும். அவ்வாறு விடாமல் இறப்பானேயானால் அவன் பிறந்தும் பிறவாதவனாகிறான். இரண்டு, தன் முன்னோர்களில் நற்செயல் புரிந்தோரைப் போல வாழ முற்பட வேண்டும். செயலற்று இறந்த முன்னோர்களை மனத்திலே கொள்ளக்கூடாது. மூன்றாவதாக 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனத் தன்னைப் படைத்துக் கொள்பவனே சிறந்தவனாவான். ஆனால், தனக்காக மற்றவரின் பணியை எதிர்நோக்குகிறவன் தன் பிறப்பின் பயனையும், தன் முன்னோரின் பிறப்பின் பயனையும், நாட்டின் பயனையும் அழிப்பவனாகிறான்.

### மஞ்சூரியா

உருசிய-ஜப்பானியப் போருக்குப்பின் 1905-ல் ஏற்பட்ட போர்ட்சு மவுத் உடன்படிக்கையின்படி மஞ்சூரியாவின் தென் பகுதி ஜப்பானுக்குக் கொடுக்கப்பட்டதென்பதை நாம் அறிவோம். இதனால் ஜப்பான் இப்பகுதியில் அவ்வாண்டிலிருந்து தன் அதிகாரத்தை முழுதுமாக ஏற்படுத்தி, உருசியாவின் எத்தகைய இடையீடுமின்றிப் பாதுகாத்தது. மஞ்சூரியாவின் தென்பகுதியிலுள்ள இருப்புப் பாதையும், சுரங்கங்களும்கூட இவ்வுடன்படிக்கையால்

ஜப்பானுக்குக் கிடைத்தன. சீனாவின் உரிமையைக் காப்பதும், அதனைக் கூறு படாமல் தடுப்பதும் இவ்வுடன்படிக்கையில் ஒரு முகாமை நோக்கமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதன் ஓர் உறுப்பாக விளங்கிய தென் மஞ்சூரியாவில் தன் பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கம் தேடும்போது மேற்படி நோக்கத்தை முழுவதும் மறந்துவிட்டது. இவ்வாறு தான் தென் மஞ்சூரி யாவில் பேராளுமை பெறுவதால் ஏற்படும் எதிர்பாரா ஏதங்களைத் தடுத்துக்கொள்வதற்காக ஜப்பான் உருசியாவோடு கமுக்கமாக 1907, 1910, 1917 ஆகிய ஆண்டுகளில் செய்துகொண்ட உடன் படிக்கைகளால் மஞ்சூரியா முழுவதும் சீன ஆளுமையே இல்லாமல் மறைந்து, உருசிய-ஜப்பானிய செல்வாக்கு மட்டு முள்ள நாடாக மாறியது. இவ்வாறு சீனப் பேரரசின் கீழிருந்த மஞ்சூரியா அப்பேரரசின் வலுவின்மையின் கரணியமாக ஜப்பானுக்கும் உருசியாவுக்குமுள்ள நாடாக மாறிவிட்டது.

மஞ்சூரியாவில் இயற்கை வளங்கள் நிறைந்திருந்தன. வள மிக்க காடுகளும், கனிப் பொருள்களும் இருந்தன. ஆசியாக் கண்டத்தில் எல்லையோர நாடாகக் கொரியா அமைந்திருக்கிறது. ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள்வரை இது சீனாவின் ஆளுமை யிலிருந்தது. 19ஆம் நூற்றாண்டில் இந்நாட்டில் குடியேறிய சீனர் தொகை அதிகமாயிற்று. இதனை 1905-க்குப்பின் தன் ஆளுமைக் குள் ஜப்பானும், உருசியாவும் கொண்டு வந்ததால் இவ்விரு நாடு களுக்கும் பலவகை நன்மைகள் ஏற்பட்டன. குறிப்பாக ஜப் பானின் மக்கள் தொகை பெருகிக் கொண்டே சென்றதால் ஃபார் மோசாவும், கொரியாவும் குடியேற்ற நாடுகளாகப் பயன்பட்ட பின்னும், வேறு சில குடியேற்றங்களும் ஜப்பானுக்குத் தேவைப் பட்டன. சான்றாக, ஜப்பானின் மக்கள் தொகை 1891-ல் 4,07,18,677, 1899-ல் 4,42,60,652, 1903-ல் 4,67,32,876, 1908-ல் 4,95,88,804. இதில் தலைநகரான தோக்கியோவில் மட்டும் 16,22,856 பேர் இருந்தார்கள். இதனால் இத் தலை நகரில் பல ஆயிரக்கணக்கானோர் நடைபாதை வாழ்நர்களாக இருந் தனர். இத்தகைய மக்கள் தொகைப் பெருக்கத்தைச் சமாளிப் பதற்குத் தான் தனக்குக் கிடைத்த தென் மஞ்சூரியாவில் பெரும் பாலான மக்களை ஜப்பான் குடியேற்றியது. மேலும் மற்ற குடியேற்ற நாடுகளைப் போலவே மஞ்சூரியாவும், ஜப்பானிய விளைபொருள்களுக்குச் சந்தையாகப் பயன்பட்டது. போர்ட்சு மவுத் உடன்படிக்கைக்குப் பின்னும் சீனப்பேரரசு ஜப்பானையும், உருசியாவையும் மஞ்சூரியாவை விட்டு வெளியேறும்படி கேட்டுக் கொண்டேயிருந்தது. ஆனால், ஜப்பானுக்கும் உருசியாவுக்கு மிடையே ஏற்பட்ட உடன்படிக்கைகள் 'காசில்லா நுழைவுச்

சலுகை'யை மேன் மேலும் வலியுறுத்திக் கொண்டிருந்தன. 1905-ல் ஜப்பான் சீனவுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. இதன்படி ஜப்பான் தென் மஞ்சூரியாவில் சில இருப்புப் பாதைகளை அமைத்துக்கொள்ள இசைவு வழங்கப் பட்டது. மேலும் இவ்விரு நாடுகளும் காசில்லா நுழைவுச் சலுகைக் கோட்பாட்டைத் தென் மஞ்சூரியாவில் ஏற்றுக் கொண்டன. சீனவின் தென் மஞ்சூரிய எல்லைகளை ஒப்புக் கொண்டு மதித்து நடப்பதாக ஜப்பான் உறுதியளித்தது. இதன் பிறகு சீனவின் ஒத்துழைப்புடன் பல இருப்புப் பாதைகள் தென் மஞ்சூரியாவில் அமைக்கப்பட்டன. இவை யாவும் தென் மஞ்சூரிய இருப்புப் பாதைகளுடன் இணைக்கப்பட்டன. இவ்விருப்புப்பாதைகள் செல்லும் இடங்களிலெல்லாம் உள்ள கனிகளும், மற்ற எல்லையோரங்களும் ஜப்பானுக்குச் சொந்த மாயின. இவ்விருப்புப் பாதைகளைப் பாதுகாப்பதற்காகத் தன்னுடைய பாதுகாப்புப் படையை ஜப்பான் வைத்துக் கொள்ள உரிமை பெற்றது. இப்பாதுகாப்புப் படை இருப்புப் பாதை செல்லும் இரு மருங்கிலுமுள்ள நிலப்பரப்பில் வாழும் மக்களின் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதாகவும் அமைந்தது. இவ்வாறு தென் மஞ்சூரிய இருப்புப் பாதை ஜப்பானின் பொருளியலை வலுப்படுத்தியதோடு தென் மஞ்சூரியாவில் ஆளுமை பெறவும், அதை மையமாகக் கொண்டு தன் ஆளுமையை மஞ்சூரியாவிலும், அண்டை நாடுகளிலும் பரப்பவும் வழி வகுத்தது.

ஜப்பானின் செல்வாக்கு தென் மஞ்சூரியாவில் மேன்மேலும் வளர்வதைக் கண்ட அமெரிக்க ஒன்றிய நாடு மனப் புழுக்கம் கொண்டது. காசில்லா நுழைவுச் சலுகைக் கொள்கையை உதட்டளவில் பேசிக் கொண்டு ஜப்பான் உண்மையிலேயே மஞ்சூரியாவைச் சிறிது சிறிதாக வற்பிடிப்புச் செய்து வருவதை அமெரிக்கா வெறுத்தது. அமெரிக்கா அட்லாண்டிக் மாகடலையும், பசிபிக் மாகடலையும் ஒன்றிணைக்கும் ஒரு திட்டத்தை வகுத்து அத் திட்டத்தை விரிவு படுத்த திரான்சைபீரியன் இருப்புப் பாதையைக் கடல் வழியோடு இணைக்க விரும்பியது. இத்தகைய திட்டத்திற்கு ஜப்பானின் மஞ்சூரிய ஆளுமை இடையூறுக இருப்பதை அமெரிக்கா உணர்ந்தது. அமெரிக்க முதலாளிகளும், அரசியல் வல்லுநர்களும் இது தொடர்பாகப் பல செயல்களை மஞ்சூரியாவில் மேற்கொள்ள முயன்றபோதெல்லாம் ஜப்பான் முட்டுக்கட்டையாக நின்றது. பிரிட்டனும், அமெரிக்காவும் சீனவிடம் ஜப்பானுக்கும், உருசியாவுக்கும் கொடுத்துள்ள இருப்புப் பாதைச் சலுகைகளைப்போல் தங்களுக்கும் கொடுக்க

வேண்டுமெனக் கேட்டன. அமெரிக்க நாட்டின் செயலாளர் நாக்சு (Knox) மஞ்சூரிய இருப்புப் பாதையை எல்லா நாட்டுக்கும் சமமாக்கும் ஒரு திட்டத்தை உருவாக்கினார். அதன்படி சீனாவுக்குப் பணம் கொடுத்து வட மஞ்சூரியாவிலுள்ள உருசியாவின் இருப்புப் பாதைகளையும், தென் மஞ்சூரியாவிலுள்ள ஜப்பானின் இருப்புப்பாதைகளையும் விலைக்கு வாங்கிப் பின்னர் மேற்படி கண்டங்களை இணைக்கும்படியாக அப்பாதைகளை நீட்ட வேண்டுமென விரும்பினார். அவ்வாறு நீட்டியபின் அவ்விருப்புப் பாதைகளைப் பன்னாட்டு ஆணைக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது அவர் திட்டத்தின் முடிவாகும். இவ்வாறு செய்வதால் சீனாவை ஜப்பானும், உருசியாவும் சிறிது சிறிதாக விழுங்குவதைத் தடுத்து, அதனுடைய உரிமையைக் காக்கும் பொறுப்பைப் பன்னாடுகளிடம் ஒப்படைக்கலாமென்பது அவர் திட்டத்தின் உட்கருத்தாகும். ஆனால், இது மேலும் பல நாடுகளுக்கிடையில் சீனாவில் சலுகைச் சண்டையை வலுப்படுத்துவதாகும். இத்திட்டம் நிறைவேறினால் சீனாவில் பல நாடுகளும் சேர்ந்து சூழ்ச்சி செய்வதையும், வேறு நாடுகள் அதைப் போர்க்களமாக்குவதையும் தடுக்கமுடியுமென நாக்சு கருதினார். அமெரிக்காவின் இத்தகைய திட்டத்திற்கு உருசியாவும், ஜப்பானும் உறுதியாக ஒப்புக்கொள்ள மாட்டா. அவ்வாறு ஒப்புக்கொள்வதாயின் அவை தங்களின் அதிகார மனப்பான்மையை அறவே ஒழிக்க வேண்டும். கடைசியாக 1908-ல் அமெரிக்காவும், ஜப்பானும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டன. அதன்படி இவ்விரு நாடுகளுக்குமிடையேயுள்ள உரிமைகளையும், சீனாவில் இவற்றிற்குள்ள சமநிலையையும், 'காசில்லா நுழைவுச் சலுகை'யையும் ஒப்புக் கொண்டு மதித்து நடக்க இசைந்தன. ஆனால், 'காசில்லா நுழைவுச் சலுகை'க் கோட்பாட்டை ஜப்பான் வலியுறுத்தும் போது அமெரிக்கச் செயலாளர் நாக்சு அது உருசியாவுக்கும், ஜப்பானுக்கும் மட்டும் தனிச் செல்வாக்குடன் மஞ்சூரியாவில் அனுமதித்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும், அது எல்லா நாடுகளுக்கும் பொதுவாக அமைய வேண்டுமென்றும் வலியுறுத்தினார். இதனால் இந்த உடன்படிக்கையும் அதன் நோக்கத்தில் வெற்றி பெற முடியாமல் தோற்றது. ஏனெனில் இவருடைய வலியுறுத்தலை உருசியாவும், ஜப்பானும் முழுக்க முழுக்க எதிர்த்தன. மேலும் ஜப்பான் உருசியாவோடு கமுக்கமாகச் செய்து கொண்ட உடன்படிக்கைகளும், பிரிட்டனுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளும் அதன் ஆளுமையை வலுவடையச் செய்தன.

# 9. அதிகார வளர்ச்சி

ஜப்பான் கி. பி. 1895-க்கு முன்பிருந்தே தன்னுடைய நிலப் பரப்பை விரிவு படுத்தப் பல அயல் நாடுகளைக் கவர எண்ணியது. 1894-லிருந்து இதனுடைய எண்ணம் ஒன்றன்பின்னென்றாக ஈடேறிக் கொண்டே வந்தது. கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டி னிறுதியில் ஜப்பான் தனக்கு வடக்கேயுள்ள காம்சட்கா (Kamchatka)த் தீவுகளையும், சக்காலின் தீவுகளையும் தன் நாட்டுடன் சேர்த்துக் கொள்ளத் திட்டமிட்டது. 1850-ல் யொசிதா சோயின் (Yoshida Shoin) தம் நாட்டவர்களை அயல் நாடுகளுக்கனுப்பி, நாடு கவரும் கலையைக் கற்று வரவேண்டுமென்றார். அப்பொழுது அவர் கூறியது ஜப்பானுக்கு வியப்பாக இருந்தது. ஆனால், மேசி முன்னிலை மீட்சிக்குப் பின் ஜப்பானிலேற்பட்ட புதிய மாறுதல் களால் வளர்ந்த செல்வமும், பெருகிய மக்கள் தொகையும் ஜப்பா னுக்குப் புதிய குடியேற்ற நாடுகள் தேவையென்பதைக் கண் கூடாகக் காட்டியது. இவர் ஜப்பானைச் சுற்றிலுமுள்ள கொரியா, மஞ்சூரியாவின் ஒரு பகுதி, பிலிப்பைன் தீவுகள், காம்சட்கா, சக்காலின் முதலிய நாடுகளை ஜப்பானியப் பேராட்சியுடன் இணைக்க விரும்பினார். இவருடைய இத்தகைய முற்காணியம் அக்கால ஜப்பானிய மக்களுக்கு ஒரு புதிராகத் தோன்றியது. இவருடைய கருத்தையே இவருக்குப் பின் வந்த மேசியின் காலத்து (1889) அரசியல் சட்டத்தை வடித்துதவிய சிற்பி கவுண்டு இதோ ஃகிரோ புமியும், ஜப்பானிய மேசி தேசியப்படையின் தந்தை யெமகதா (Yamagata)வும் இவருடைய கருத்தை வலி யுறுத்தி ஒரு பரந்த ஜப்பானைக் காண வேண்டுமென்றனர். இவருடைய கூற்று 1930, 1940ஆம் ஆண்டுகளில் ஜப்பானிய வரலாற்றில் உறுதியாயிற்று.

இவ்வாறு ஜப்பான் அதிகார மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு அயல் நாடுகளைக் கவரும் நோக்கத்தின் அடிப்படையில் தனது நாவாய்ப் படையையும், தரைப் படையையும் புதிய முறையில் வளர்க்கத் தொடங்கியது. சாமுராய்களின் மரபுச் சொத்தாக இருந்த படைத்துறை எல்லாருக்கும் சொந்தமாக்கப் பட்டது. எல்லா மக்களும் போர்ப் பயிற்சி பெறுமாறு கட்டாயப் படுத்தப்பட்டனர். ஜப்பானின் தேசியத் தரைப்படை

செருமானிய மாதிரியிலும், நாவாய்ப்படை பிரிட்டானிய மாதிரியிலும் அமைக்கப்பட்டன. அயல் நாடுகளைக் கவருவதற்கு மட்டுமே படை தேவையென்பதில்லை; வளர்ந்து வரும் ஜப்பானின் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளத் தற்காப்புக்காவது படை தேவை தானே. எனவே மேசிப் புரட்சிக்குப்பின் இத்தகையதோர் மாற்றம் ஏற்பட்டதில் வியப்பொன்றுமில்லை. இத்தகைய படையமைப்பை ஏற்படுத்திய யெமகதா பண்டைய சாமுராய்க் குலத்தின் சோசுப் பிரிவைச் சார்ந்தவர். இவரும் மற்றவர்களோடு 1870-ல் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டார். அந்நாடுகளில் படை முறைகளின் அமைப்பு, பயிற்சி, செயல் வகைகள் ஆகியவற்றை யெமகதா ஊன்றிக் கற்றுப் பயிற்சியும் பெற்று ஜப்பானுக்குத் திரும்பினர். தன் நாட்டிலும் ஐரோப்பிய முறையிலான படையை அமைத்து புதிய படைக் கருவிகளைப் பயன்படுத்திப் போரிடும் முறையைக் கற்பித்தார். இதற்குப் பயிற்சியளிக்க முதலில் ஃபிரான்சு நாட்டிலிருந்து படைப் பயிற்சியாளர்கள் வரவழைக்கப்பட்டனர். இதற்குப்பின் பிரசியா முதலிய நாடுகளிலிருந்தும் பயிற்சியாளர்கள் வரவழைக்கப்பட்டனர். இவ்வாறு புதிய போர்ப் படைகளை ஜப்பானிலமைத்த யெமகதா ஒரு பிறவிப் போர் வீரர். ஜப்பானை ஒரு மாபெரும் கண்டமாக்க வேண்டும் என்னுங் கொள்கையுடையவர். ஜப்பானிய தேசிய உணர்ச்சியில் திளைத்து நின்ற இவர் இளந் தலைமுறையினர் நெஞ்சிலே நீங்காத இடம் பெற்று விட்டார். மேசியின் காலத்தில் வளர்ந்த படை வலிமைக்கும், எழுந்த அதிகார வளர்ச்சிக்கும் யெமகதா வித்திட்டாரெனில் அது மிகையாகாது.

தரைப் படையைப் போலவே நாவாய்ப் படையும் உலகப் புகழ்பெற்ற பிரிட்டானிய நாவாய்ப் படைக்கு ஒப்பாக வளர்ந்தது. நாவாய்ப் படையின் அதிகாரிகள் யாவரும் பிரிட்டானியத் தளபதிகளால் பயிற்சியளிக்கப் பட்டவர்களாவர். பிரிட்டானியர்களும், அமெரிக்கர்களும், நாவாய்களையும், நாவாய்த் தளங்களையும் அமைப்பதில் ஜப்பானியர்க்குப் பேருதவியாய் நின்றுர்கள். இந் நாவாய்ப் படைகளில் பேரதிகாரிகளாகவும், பெரு வீரர்களாகவும் திகழ்ந்தவர்கள் பழைய சத்சுமா சாமுராய்களாவர்.

### சக்காலின் தீவுகள்

மேசிப் புரட்சிக்குப் பின்னரே ஜப்பானின் அதிகார வளர்ச்சி வளர்ந்ததென்றுலும், அதன் அதிகார மனப்பான்மை எப்போதோ வளர்ந்துவிட்டது. கி. பி. 20ஆம் நூற்றுண்டில்தான் ஜப்பான்

வெளிப்படையாக அயல் நாடுகளைக் கவர முற்பட்டது. எசோ (Yezo), ஜப்பானியத் தீவுக் கூட்டங்களில் மிக முகாமை யான நான்கு பெருந் தீவுகளில் வட பகுதியில் அமைந்துள்ளதை அறிவோம். இஃது பண்டைய காலந்தொட்டே ஜப்பானியப் பழங்குடிகளான 'ஐநோ'க்களின் இருப்பிடமாய்த் திகழ்ந்தது. தொகுகவாக்களின் காலத்தில் இஃது ஒரு பெருநிலக் கிழாரின் கீழ் வந்ததென்றும், அதன்பின் ஜப்பானியர் குடியேறினரென்றும் அதனால் அஃதொரு வளமுள்ள நாடாக ஆக்கப்பட்டதென்பதை யும் அறிவோம். பண்டைய ஜப்பானியப் பேரரசர்கள் ஜப்பானை ஆட்சி முறைப் பகுதிகளாகப் பிரித்தபோது எசோத் தீவை ஒக்கைதோ அல்லது வடகடல் வட்டம் என்று அழைத்தனர். இத் தீவில் மேசிப் புரட்சிக் காலத்தில் வலிமையான காவற் கோட்டை களையும், காவல் துறைமுகங்களையும் அமைத்தார்கள். இதற்கு அமெரிக்க வல்லுநர்கள் பெரிதும் உதவி செய்தனர். இவ்வாறு இத் தீவில் ஒரு வலுவுள்ள வாயிலாக மாற்றுவதற்கு ஜப்பானில் அயலக அச்சமும், அதன் வடக்கேயுள்ள சக்காலின் குர்லித் தீவுகள், காம்சட்காத் தீவுகள் முதலியவற்றைக் கவர வேண்டும் என்ற திட்டமாகும். இவற்றுள் சக்காலின் தீவு உருசியாவுக்கும் ஜப் பானுக்கும் பொதுவான தீவாக இருந்தது. ஜப்பான் இத்தீவைத் தனக்கும் உருசியாவுக்குமிடையே பகிர்ந்து கொண்டு, திட்டவட்ட மான எல்லைக்கோடுகளை உருவாக்க விரும்பியது. ஆனால், ஜப்பான் இத்தகைய உடன்படிக்கைக்கு ஏற்பாடு செய்தபோதெல்லாம் உருசியா நழுவிக்கொண்டே சென்றது. அதே சமையத்தில் கொஞ்சங்கொஞ்சமாகத் தனதாக்கிக்கொண்டு, தனக்குத்தான் அத்தீவு முழுவதும் உரிமையானதென்று அறிவித்தது. 1858-ல் ஜப்பான் தனது கப்பல் தளபதி போந்தியாதின் (Pontiatine) என் பவரை உருசியாவுக்கு அனுப்பி சிமோதா (Shimoda) என்னு மிடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டது. இந்த சிமோதா உடன்படிக்கையின்படி சக்காலின் ஜப்பான் உருசியா ஆகிய இரு நாடுகளுக்கும் சொந்தமானது என்று தீர்மானிக்கப் பட்டது. இவ்வுடன்படிக்கையிலும் எல்லைக்கோடுகள் உருவாக்கப் படவில்லை. இதனால் 1862-லும், 1867-லும் ஜப்பான் உருசியா வின் தலைநகரான பீட்டர் சுபர்க்குக்குத் தன் தூதுக் குழுவை அனுப்பிச் சக்காலின் எல்லைக்கோட்டை உருவாக்க விரும்பியது. ஆனால், 1875-ல்தான் இவ்விரு நாடுகளுக்குமிடையே ஒரு முடி வான ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி சக்காலின் தீவு முழு வதையும் உருசியா எடுத்துக்கொண்டு குர்லித் தீவுகளை ஜப்பான் பெற்றுக்கொண்டது. இதிலொரு முகாமை என்னவெனில் சக்காலின் தீவிலிருந்த தன்னுடைய சுரங்கங்கள், மீன் பிடிக்கும் துறைகள், காடுகள் ஆகியவற்றை ஜப்பான் உருசியாவின்

கட்டாயத்திற்கு அஞ்சிக் கொடுத்துவிட்டது. ஆனால், ஒன்றுக்கும் உதவாத குர்லித் தீவுகளைத் தான் பெற்றுக்கொண்ட போதிலும் அத் தீவுகளிலிருந்த உருசியாவின் சொத்துரிமைகளை உருசியா விற்கே விட்டுக்கொடுத்தது. ஜப்பானிடத்தில் அக்காலத்தில் உருசியாவைப்போல் சிறந்த படையும், நாவாய்ப் படையும் இல்லாததே இதற்குக் கரணியமாகும். இத்தகைய பண்டைய இழிநிலையை ஜப்பான் தன்னுடைய முன்னிலை மீட்சிக்குப் பின் சிந்தித்துச் சிறந்த படைகளை அமைக்கலாயிற்று.

## ரையூ கியூத் தீவுகள் (Ryukyu—1879)

தைவான் நாடு எனப்படும் பார்மோசாத் தீவு ஜப்பானுக்குத் தெற்கிலும், சீனாவுக்குத் தென்கிழக்கிலும் பசிபிக் மாகடலில் அமைந்துள்ள ஒரு தீவாகும். இதற்கு வடக்கிலும், ஜப்பானுக்குத் தெற்கிலும், ஒரு நீண்ட தொடர் சங்கிலிபோல் அமைந்துள்ள தீவுக் கூட்டங்களுக்கு ரையூகியூ (Ryukyu) என்று பெயர். இத் தீவுக் கூட்டங்களில் ஜப்பானிய மக்களுக்குக் குருதி வழியில் உற வினர்களான பலர் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் மொழி ஜப் பானிய மொழியாகும். ஜப்பானின் நிலமானியக் கிழார்களாயும் படைக் குலத்தவராயும் விளங்கிய சத்சுமா குலத்தவருக்கு ரையூகியூத் தீவிலுள்ள மக்கள் அடங்கியிருந்தனர். தோரா. 200 ஆண்டுகளுக்குமேல் இம்மக்கள் அக் குலத்தவரின் நேரடியாட்சி யிலிருந்து வந்தனர். ஆனால், அதே சமையத்தில் பண்டைய காலந்தொட்டே சீனாவுக்குத் திறை செலுத்தி வந்தனர். ரையூகியூத் தீவையாண்ட அரசர்கள் சீனாவுக்குத் திறை செலுத்தியும், சத்சுமா குலத்தவருக்கு உட்பட்டும் இருந்தபோதிலும் தனியரசர் களாகவே ஆண்டுவந்தனர். ஆனால், ரையூகியூத் தீவுகள் இனத் தாலும், மொழியாலும் தங்களுக்குச் சொந்தமென்று ஜப்பானும், திறை செலுத்தி வருவதால் தங்களுக்கு அடக்கமென்று சீனாவும் நினைத்துக்கொண்டிருந்தன. சத்சுமா இளவரசர் தன்னுரிமை பெற்ற அரசரைப்போல் தன் விருப்பம்போல் ஐரோப்பிய நாடு களுடன் ஒப்பந்த உடன்படிக்கைகளைச் செய்துகொண்டிருந்தார். 1870-ல் ஜப்பான் ரையூகியூத் தீவுகள் ஒரு புரியாப் புதிராக இருப்பதை உடைத்தெறிந்து, வெளிப்படையாக அவை யாருக்குச் சொந்தமென்பதை ஒரு நிகழ்ச்சியைக் கொண்டு தீர்மானிக்க முயன்றது. அவ்வாண்டில் ரையூகியூத் தீவைச் சேர்ந்த சிலர் தாங்கள் சென்ற கப்பல் தரை தட்டியதால் பார்மோசாத் தீவில் இறங்க வேண்டியதாயிற்று. அத் தீவிலிருந்த மக்கள் திடீரென அவர்கள் மீது பாய்ந்து அவர்களைக் கொன்றுவிட்டனர். பார்மோசத் தீவு அப்போது சீனாவுக்குச் சொந்தமாயிருந்தது. தங்களினத்தவரான ரையூகியூத் தீவு வாழ்நர்களைப் பார்மோசாவி

லுள்ளவர்கள் கொன்றதற்கு ஜப்பான் சீனுவிடம் விளக்கம் கேட்டு இழப்பீடு கோரியது. ஆனுல், சீன மன்னர் தனக்கும், பார்மோசா நிகழ்ச்சிக்கும் யாதொரு தொடர்புமில்லை; அங்கு நடந்த கொலைகளுக்குத் தாம் பொறுப்பாளியன்றென்றும் கூறிவிட்டார்.

இச்சமையத்தில் சாமுராய்கள் ஜப்பானின் தேசியப் படையின் வலுவைக் குறைத்து எடை போட்டு, ஜப்பானில் தங்களை விட்டால் வேறு வீரப்படை கிடைக்காரெனச் செருக்குற்று நின்றனர். ஏறத்தாழ நான்கு இலக்கம் சாமுராய்கள் ஜப்பான் தேசியப் படையில் சேர்ந்திருந்தும், தங்களைத் தனித்தன்மை பொருந்திய வீரர்களாகவே கருதிப் பொதுமக்களைக் கொண்ட தேசியப் படைப் பிரிவை இழிவாகப் பேசி அதன் வன்மையைக் குறைத்து எடைபோட்டனர். போரற்ற காலங்களில் உள்நாட்டுப் புரட்சிகளுக்கும், குழப்பங்களுக்கும் வழி தேடி நின்றனர். இவர்களின் செயலைத் திசை திருப்பவும், தினவெடுக்கும் தோள்களுக்கும், பளபளக்கும் வாள்களுக்கும் வேலை கொடுக்கவும், பார்மோசாப் படுகொலை நிகழ்ச்சி மிகாடோவுக்கு ஒரு சிறந்த வாய்ப்பை யளித்தது. 1874-ல் சத்சுமா சாமுராய்கள் பார்மோசாத் தீவுக்கு அனுப்பப்பட்டனர். அத்தீவின் பாதி நிலப்பரப்பைச் சாமுராய்கள் கைப்பற்றிக்கொண்டனர். அத்தோடு அத்தீவி லிருந்தவர்களின் உயிர்களையும், உடைமைகளையும் சூறை யாடினுர்கள். ரையூகியூத் தீவுகளின் அரசரோடு ஓர் உடன் படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அவர் தோக்கியோ ஆட்சியை ஏற்றுக் கொண்டார். இதனையறிந்த சீனு ஜப்பான் நாட்டின் மீது படையெடுக்கத் தன் படைகளைத் தயார் செய்தது. சீனுவுக்கும், ஜப்பானுக்கும் ஒரு கடும் போர் நிகழ்வது உறுதியாகி விட்டது. இச் சமையத்தில் பீகிங்கிலிருந்த பிரிட்டன் நாட்டுத் தூதுவர் இச் சேதியில் தலையிட்டு இவ்விரு நாடுகளுக்குமிடையே சமைதி செய்து வைத்தார். இச் சமைதிக்குப் பிறகு சீனு, ஜப்பானுக்குப் பார்மோசாவில் நேர்ந்த உயிரிழப்பிற்கும், படையெடுப்பிற்கும் பெரும்பொருளை இழப்பீடாக அளித்தது.

இவ்வாறு 1879-ல் ரையூகியூத் தீவுகள் ஜப்பான் வசமாயின. 1878-ல் தன் நாட்டிற்குக் கிழக்கே பசிபிக் மாகடலிலுள்ள போனின் (Bonin) தீவுகளையும் ஜப்பான் இணைத்துக்கொண்டது. இதைத் தவிர ஒனகடோ, கியூரீல் தீவுகள் முதலிய இடங்களின் மீது தனக்கிருந்த உரிமையை ஜப்பான் நிலைநாட்டிக் கொண்டது. 1872-ல் பெரு (Peru) நாட்டின் கப்பலைக் கைப்பற்றியது. அதிலிருந்த 200 கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ஒகாசசுவராத் தீவுக் கூட்டங்கள் (Ogasawara Archi-Pelago) என்பவை தென்

சீனவுக்கும் அமெரிக்காவுக்குமிடையிலுள்ள நேரடிக் கடற் பாதையில் அமைந்துள்ளவை. இத் தீவுகளில் ஜப்பானியர் 1592-ல் குடியேறினர். மேசிப் புரட்சிக் காலத்தில் 'ஜப்பானியர் குடியேறிய நாடுகளும் ஜப்பானியர் வாழுமிடங்களும் ஜப்பானி யருக்கே சொந்தம்' என்னும் தங்களின் ஆளுமைக் கொள்கையின் படி மேற்படி இடங்களைப் பெற்றதுபோலவே இத் தீவுக் கூட்டங் களின் மீதிருந்த தங்கள் உரிமையை நிலைநாட்டினர். இதனை 1875-ல் அமெரிக்க ஒன்றியமும் ஒப்புக்கொண்டது. மேற்கத்தியக் கருத்துகளின் மீது ஜப்பானியர் கொண்டிருந்த மோகம் தணிந்தது. 1880-க்குப் பின்னர் ஜப்பானில் தேசிய உணர்ச்சி தோன்றியதால் ஒரு சில துறைகளைத் தவிர பிற துறைகளில் தேசியக் கருத்துகளுக்கே முகாமையளித்தனர். தங்களின் அயலகக் கொள்கைகளையும் மாற்றி அமைத்தனர். தங்கள் நாட்டிற்கு வந்துள்ள ஐரோப்பியர் தங்கள் நாட்டின் சட்ட திட்டங்களுக் கடங்காமல் நடப்பதும், எல்லா வகையிலும் அவர்களுக்கே ஊதியந்தரத்தக்கதான வணிக ஒப்பந்தங்கள் அமைந்திருப் பதையும் பொறுத ஜப்பானியர் எல்லா ஒப்பந்தங்களையும் மாற்றி யமைத்தனர். கொள்கைகளை மாற்றிக்கொண்டால் போதாது; ஜப்பானைக் கட்டிக் காக்க வேண்டுமானால் அது மேல்நாடுகளைப் போல் ஒரு சிறந்த வல்லரசு நாடாக வேண்டுமென ஜப்பானியர் முனைந்தனர். அதன் விளைவாகத்தான் ஜப்பானின் படைவலிமை பெருக்கப்பட்டது. படைவலிமை பெருகியவுடன் அதனிடம் அதிகாரமனப்பான்மை வளர்ந்தது. அவ்வதிகார மனப்பான்மை யின் தொடக்கச் செயலாகத்தான் மேற்படி தனக்கு உரிமையான இடங்களின்மீது உரிமைகளை நிலைநாட்டி, எதிர்ப்பவர்கள் உண்டா வென்று முதலில் ஆய்ந்து பார்த்துக்கொண்டது. இச் செயல் பண்டைய இந்து மன்னர்கள் செய்யும் பரி வேள்வி போலவும், தமிழ்நாட்டு சல்லிக் கட்டுக் காளை விழா போலவுமிருக்கிற தல்லவா? முதலில் தானெடுத்த ஆய்வுகளில் வெற்றி கண்டதும் அண்மையிலுள்ள கொரியாவின்மீது ஆளுமை ஏற்படுத்த முயன்றது. ஜப்பான் பாதுகாப்புடன் வாழவேண்டுமானால் கொரியா சீனவின் இடையீடின்றி தன்னுரிமையோடு வாழ வேண்டும் என்ற அடிப்படையில்தான் ஜப்பான் கொரியச் செய்தியில் ஈடுபட்டது.

### கொரியத் தீவக்குறை

சோசன் (Chosen) அல்லது கொரியா எனப்படும் தீவக்குறை (தீபகற்பம்) ஜப்பானுக்கு மேற்கில் அமைந்துள்ளது. இதனைப் பண்டைக் காலத்தில் ஜப்பானியர் தங்கள் ஆட்சியின் ஒரு மாநிலமாகக் கொண்டிருந்தார்களென்றும், கொரியர்கள்

ஜப்பானில் பல பகுதிகளுக்கும் சென்று குடியேறினார்களென்றும், இஃது சீனாவையும், ஜப்பானையும் கவரும் ஒரு விலை மதிக்க முடியாத போட்டிப் பொருளாக இருந்து வந்ததென்பதையும் அறிவோம். கி. பி. 16ஆம் நூற்றாண்டில் ஜப்பானியர் இதன் மீது படையெடுத்து இதனைச் சிலகாலம் தங்கள் ஆட்சியுடன் இணைத்திருந்தார்களென்பதையும் அறிவோம். இதேயொசி இதன்மீது படையெடுத்து இதனை வென்றது இத் தீவக்குறையைத் தன் நாட்டுடன் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் ஒரே நோக்கிற்காகவன்று. சீனப் பேராட்சியை வெல்லுவதற்கு இதனை ஒரு பாலமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் அவருடைய நோக்கத்தையும் நாம் அறிவோம். ஆனால், அத் திட்டத்தை அந்தத் தொகுகவா வீரரால் நிறைவேற்ற முடியவில்லை. இதற்குப் பின் ஜப்பானும் அயல் நாடுகளுடன் தொடர்பு கொள்ளாமல் தன் கதவுகளை மூடிக்கொண்டு இருநூறு ஆண்டுகளுக்குமேல் துறவியாக வாழ்ந்தது. எனவே சீனா தன் அதிகாரத்தைத் தட்டிக்கேட்க ஆளில்லாமல் கொரியா முழுவதும் பரப்பியது. கொரியாவும் பீகிங் பேராட்சிக்குத் தொடர்ந்து திரை செலுத்தி வந்தது. அதைப்போலவே ஜப்பானுக்கும் திறை செலுத்தி வந்தது.

கொரியாவும் சீனா, ஜப்பான் முதலிய நாடுகளைப்போல் அயல் நாடுகளுடன் தொடர்பு கொள்ளாமல் தன் கதவுகளை மூடிக் கொண்டு கிணற்றுத் தவளையாகிவிட்டது. எனவே கீழ்த்திசை நாடுகளின் தலைசிறந்த 'துறவி நாடு' (Hermit Kingdom) என்று இது அழைக்கப்பட்டது. ஜப்பான், சீனா போன்ற நாடுகள் அயல் நாடுகளின் தொடர்பின்றித் தனித்து வாழ்ந்தபோது, அவைகளின் கதவுகளை வலியத் திறந்து தொடர்பு கொண்டவை ஐரோப்பிய நாடுகளாகும். ஆனால், கொரியாவின் கதவைத் திறந்து அதனைப் பிற நாடுகளோடு தொடர்பு கொள்ளச் செய்தது ஜப்பானாகும். ஜப்பான் பிற நாடுகளின்மீது ஆளுமை செலுத்த விரும்பினாலும் கொரியாவையே தன் ஆளுமையின் முதற் படியாகக் கொள்ள வேண்டியதாயிற்று. கொரியா நிலவியலடிப்படையில் ஜப்பானுக்கு வெகு அண்மையில் நெருங்கி இருந்ததே இதற்குக் காரணியமாகும். கொரியா, கிழக்காசியாவின் கடைசியில், மூன்று பக்கமும் நீரால் சூழப்பட்டு நின்ற ஒரு நிலப்பகுதியாகும். இதையும், ஜப்பானையும் பிரித்து நிற்பது கொரியன் நீரிணைப்பாகும். எனவே ஆசியாவிலுள்ள எத்தகைய வல்லரசும் மிக எளிதாக இதன் வழியாக அந் நீரிணைப்பைத்தாண்டி ஜப்பானைத் தாக்கலாம். இதனையடுத்துள்ள வடசீனா, மஞ்சூரியா, சைபீரியா போன்ற நாடுகள் ஜப்பானுக்கு

எப்பொழுதும் பகை நாடுகளாக இருந்தன. எனவே ஜப்பான் கொரியாவை 'தன் நெஞ்சாங்குலையைப் பிளக்க நீட்டி வைத்துள்ள கத்தி' என்று கருதியது. ஃபிரெஞ்சு நாட்டு உரோமன் கத்தோலிக்கப் பாதிரிகள் கொரியாவில் குடியேறித் தங்கள் சமயத்தைப் பரப்பலானுர்கள். ஜப்பானில் நேர்ந்தது போலவே கொரியா இப் பாதிரிமார்களைத் தண்டித்து வெளியேற்றிக் கிறித்தவ சமயத்தைத் தன் நாட்டில் தடை செய்தது. ஃபிரான்சும் அமெரிக்காவும் இந்நாட்டுடன் தொடர்பு கொள்ள முயன்று தோற்றன. உருசியாவும் சீன வழியாக இந்நாட்டுடன் தொடர்பு கொள்ள முயன்றது. 1858-லும், 1860-லும் உருசிய மன்னர் தன்னுடைய எல்லையைக் கொரியா வரையில் பரப்ப முயன்ருர். சீன, தனக்கு அண்மையிலுள்ளதும், தனக்குத் திறை செலுத்துவதுமான கொரியாவை அயலார் கவரா வண்ணம் காப்பதைத் தன் கடமையாகக் கொண்டதோடன்றி ஜப்பானைப்போல் கொரியா வழியாக அயலார் படையெடுப்பு தன் நாட்டுக்கு ஏற்படுமோவென அஞ்சியது. கொரியா மற்ற நாடுகள் எல்லாவற்றையும்விட, சீனவுக்குப் பெரிதும் கடமைப்பட்டதாகும். ஏனெனில், கொரியாவின் நாகரிகம், பண்பாடு யாவும் சீனவின் சொத்துக்களாகும். கி. பி. 19ஆம் நூற்றுண்டில் கொரியா சீனவின் அன்பையும், புரப்பையும் பெரிதாக விரும்பியதேயொழிய, ஜப்பானை அது விரும்பவில்லை. ஆயினும், ஜப்பான் தனது தற்காப்புக்காகவும், அதிகார வளர்ச்சிக்காகவும் கொரியாவில் தனக்கு எப்படியும் உறவோ, ஒப்பந்தமோ அல்லது சொந்தமோ இருந்தாக வேண்டுமென்பதை உணர்ந்தது.

இவ்வாறு கொரியா சீனவுக்கும் ஜப்பானுக்குமிடையே சிக்கிய இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவித்தது. கொரியாவில் பரவிய சீன சமயமான கன்ஃபூசியமும், அதன் கொள்கைகளும் அந் நாட்டு இளைஞர்களை உணர்வு பெறச் செய்து, தேசிய உணர்ச்சியையும் வளர்த்தன. இதனுல் கொரியர் எந்நாட்டுடனும் சேராமல் எவருடைய பசிக்கும் இரையாகாமல் தனித்துவாழ்தலே சிறந்ததெனக் கருதினுர்கள். இந்நிலையை வளர்த்துக்கொள்ள கி. பி. 19ஆம் நூற்றுண்டில் கொரியா மற்ற நாடுகளுடன் தொடர்பு கொள்ளுவதையும், தொடர்பு வைத்திருப்பதையும் துண்டித்துக்கொள்ள விரும்பியது. ஆனுல் ஜப்பானே தன்னுடைய மூச்சாகவுள்ள கொரியாவோடு எப்படியும் தொடர்புகொண்டு வாழவேண்டுமென விரும்பியது.

1868-ல் மேசி முன்னிலை மீட்சி நிகழ்ந்ததையும் சோகன் பதவி துறந்ததையும், தானே ஜப்பானின் எல்லா

அதிகாரங்களுக்கும் தலைவரானதையும், முட்சுஹிதோ உலக நாடுகளுக்கெல்லாம் அறிவித்தார். இனி எல்லா நாடுகளும் எத்தகைய செய்திக்கும் தன்னிடம்தான் நேரடியாகத் தொடர்பு கொள்ளவேண்டுமென்றும் அறிவித்தார். இதனை அண்மையிலுள்ள கொரியாவுக்கும் அனுப்பி வைத்தார். மேசிப் புரட்சியால் மேற்கத்திய நாகரிகம் வெகுவாக ஜப்பானில் பரவி வருவதைக் கண்ட கொரியா தனக்குள் அச்சமும் அருவருப்பும் கொண்டது. ஆனால், ஜப்பான் கொரியாவைத் தன்னுடன் நட்புறவு கொண்டு வாழவேண்டுமென்பதற்காகப் பல வகையான முயற்சிகளை எடுத்துக் கொண்டது. கொரியா ஒரு வல்லரசின் ஆளுகைக்குட்பட நேர்ந்தால் தன்னுடைய பாதுகாப்பிற்குக் கேடு நேருமென்று கருதியது. இதனால் அதனுடன் தொடர்பு கொள்ளத் தொடர்ந்து மூன்று தூதுக்குழுக்களை ஜப்பான் அனுப்பியது. கொரியா அத் தூதுக் குழுக்களிடம் தான் ஜப்பானிடம் எத்தகைய தொடர்பும் வைத்துக் கொள்வதில்லையென்று திட்டவட்டமாகக்கூறி அதன் நட்புறவை ஏற்க மறுத்து விட்டது. 19ஆம் நூற்றாண்டில் கொரியா சீனாவின் சார்பு நாடாக இருந்து வந்தது. அக்காலத்தில் சீனா வலிமையற்றுக் காணப்பட்டது. அந்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அண்மையிலுள்ள உருசியா, கொரியாவில் தன் அதிகாரத்தை நிலைநாட்டி விடுமோ என்ற அச்சத்தால், உந்தப்பட்டது. ஆகவே, கொரியா உருசியாவின் ஆளுகைக்குட் படுமுன்னர் தன்னுடைய ஆளுமையின் கீழ்க்கொண்டு வந்துவிட வேண்டுமென ஜப்பான் முனைந்தது. ஆனால், 1873-ல் கடைசியாகக் கொரியா நட்புறவை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது. இது பற்றிச் சீன அரசிடம் முறையிட்டுக் கொண்டது. சீனா, கொரியா தனக்குச் சார்பு நாடாக இருந்தாலும் அயல் நாட்டோடு உறவு செய்து கொள்வதோ அல்லது உறவைத் துண்டித்துக் கொள்வதோ, போரிட்டுக் கொள்வதோ சமைதி செய்து கொள்வதோ அதனுடைய விருப்பத்தைப் பொறுத்தது; இத்தகைய செய்திகளில் அதற்கு முழுயுரிமையுண்டு. தான் இதில் தலையிட முடியாதென்று சீனா கூறி விட்டது. இச் செய்தியறிந்த மேசிப் புரட்சித் தலைவர்களில் ஒருவரான சைகோதகமோரி (Saigo-Tagamori) கொரியாவின்மீது படையெடுக்க முட்சுஹிதோவைத் தூண்டினார். முன்னிலை மீட்சியடைந்து ஐந்தாண்டுகளே ஆகின்றன வென்றும், இவ்வைந்தாண்டுகளுக்குள் ஜப்பான் அயல்நாட்டோடு போர் தொடுக்கின்ற அளவுக்கு எத்தகைய வலிமையும் பெற்று விடவில்லையென்றும், எனவே போரைவிடச் சமைதியே சிறந்த தென்றுங் கூறி ஜப்பானிய அமைச்சரவை கொரியாமீது போர் தொடுக்கும் எண்ணத்தைத் தவிர்த்து விட்டது. வேலையற்றுக் கிடக்கும் தன் குலத்தவரான சாமுராய்களுக்குக் கொரியப்

போரை ஒரு வேலைவாய்ப்பாக அமைத்துக் கொடுக்க முடிய வில்லையேயென்றும், தான் கூறிய அறிவுரையை ஜப்பானிய அமைச்சரவை மறுத்து விட்டதேயென்றும், மனம் வருந்திய சைகோ தகமோரி ஜப்பானிய அரசியல் வாழ்வுக்கு முழுக்குப் போட்டு விட்டு சத்சுமாவுக்குச் சென்று விட்டார். அங்கு ஒரு படைப்பள்ளியை நிறுவிச் சாமுராய் இளைஞர்களுக்கு ஐரோப்பிய முறையில் போர்ப் பயிற்சி அளித்தார். புதிய போர்க்கள வேட்டெஃகங்களையும் வெடிகுண்டுகளையும் பயன்படுத்தும் முறைகளையும் பயிற்றுவித்தார். இது போன்ற படைப் பள்ளிகள் மேற்கத்திய மாநிலங்களில் அமைக்கப்பட்டுச் சாமுராய் வீரர்கள் தீவிரப் போர்ப் பயிற்சி பெற்றனர்.

1874-ல் ஜப்பானின் தூதரை ஏற்றுக் கொள்வதாகக் கொரியா அறிவித்தது. ஆனால், அவ்வாறு அனுப்பப் பட்ட தூதருக்குப் பேட்டியளிக்கவும் கொரிய அரசர் மறுத்து விட்டார். 1875-ல் கடலளவைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்த ஜப்பானியக் கப்பல் ஒன்று கொரியாவின் தலைநகரான செவுல் (Seoul) வழியே வரும் ஆற்று முகத்தை அளவெடுத்தது. அதனையறிந்த கொரியா அக் கப்பலின்மீது குண்டு வீசித் தாக்கியது. முட்சுஃகிதோ கொரியா மீது படையெடுக்கும்படி தன் படைகளுக்கு உத்தர விட்டார். கொரியா ஜப்பானுக்கு அடிபணிந்தது. 1876-ல் ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் ஓர் வணிக ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வகை ஒப்பேற்பு சீனவுக்குக் கொரியாவின்மீது எவ்வகை மேலாளுமையும் இல்லையென்பதை மறைமுகமாக வலியுறுத்தியது. ஜப்பானுக்குக் கொரியாவின் சில துறைமுகங்கள் திறந்து விடப் பட்டன. ஜப்பானின் வணிகர்களும், தூதுவர்களும், முகவர்களும் கொரியாவில் தங்கியிருக்கும் பொழுது அவர்களைக் கொரிய நாட்டின் சட்டதிட்டப்படி நடத்தாமல், தம் நாட்டின் சட்ட திட்டப்படியே நடத்த வேண்டுமென ஜப்பான் கொரியாவுக்குப் பணித்தது. அயல் நாடுகள் தன் நாட்டிலிருக்கும் பொழுது அவைகளுக்கு எத்தகைய தனிச் சலுகைகளும் கொடுக்க மறுத்த ஜப்பான், தனக்கு மட்டும் இத்தகைய தனிச் சலுகைகளை ஏற்படுத்திக் கொண்டது குறிப்பிடத் தக்கதாம்.

1882-ல் அமெரிக்க ஒன்றிய நாடுகளும், கொரியாவுடன் இத்தகைய வணிக ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது. அதே ஆண்டில் பிரிட்டனும், கொரியாவுடன் வணிகத் தொடர்பு கொண்டது. இவற்றைத் தொடர்ந்து செருமனி, இத்தாலி, ஃபிரான்சு ஆகிய நாடுகளும் கொரியாவுடன் வணிக ஒப்பந்தங்கள் செய்து கொண்டன. இவ்வாறு ஒன்றன்பின்னொன்றாகப் பல

ஐரோப்பிய நாடுகள் கொரியாவிற்குள் புகுந்து, தங்களின் வணிகச் செல்வாக்கை வளர்த்துக் கொண்டு, பலவகையான சலுகைகளை அங்கு துய்ப்பதைக் கொரிய மக்கள் வெறுக்கத் தொடங்கினர். இவ்வாறு வெறுத்தவர்களைப் பிற்போக்காளர்க ளெனலாம். இவர்கள் அயலாரைத் தங்கள் நாட்டிலிருந்து வெளியேற்றச் சீனுவின் உதவியை நாடினர். ஜப்பானை மாதிரி யாகக் கொண்டு மேற்கத்திய நாகரிகத்தைக் கொரியாவில் பரப்ப முயன்றவர்கள் முற்போக்காளர்களெனப்பட்டனர். இவர்களை ஜப்பான் வரவேற்றது. இவ்விரு கட்சிகளுக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்படத் தொடங்கின.

1880-ல் ஜப்பானின் தூதரகம் ஒன்று கொரியாவின் தலை நகரான செவுல் நகரில் ஏற்படுத்தப்பட்டது. 1882-ல் பிற்போக் காளர்களுக்கும், முற்போக்காளர்களுக்கும் ஏற்பட்ட மோதலின் போது பிற்போக்காளர்கள் செவுல் நகரிலிருந்த அரண்மனையையும், ஜப்பானியத் தூதரகத்தையும் தாக்கினுர்கள். பல ஜப்பானியத் தூதரக அதிகாரிகளும், மற்றும் பல ஜப்பானியர்களும் கொல்லப் பட்டார்கள். பிற்போக்காளர்கள் சீனுவின் துணையை நாடினுர் கள். முற்போக்காளர்கள் ஜப்பானின் துணையை நாடினுர்கள். ஆனுல், தன் சார்புநாட்டிலேற்பட்ட கிளர்ச்சியை அடக்கி அமைதி ஏற்படுத்துவதைத் தன் கடமையாகக் கொண்ட சீனு, தன் படைகளை உடனடியாக அனுப்பி அமைதியை ஏற்படுத்தியது. இதற்குப் பின் ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் சமைதியுடன் படிக்கை ஏற்பட்டது. கொரியா ஜப்பானுக்கு நேர்ந்த இழப்பு களுக்கு இழப்பீடு கொடுத்ததோடல்லாமல் ஒரு தூதுக் குழுவைத் தோக்கியோவுக்கனுப்பித் திடீரென ஏற்பட்ட கலக நிகழ்வுக்காக மன்னிப்புக் கோரியது. மேலும் பல உரிமைகளையும் ஜப்பா னுக்குக் கொரியா கொடுப்பதாக உறுதியளித்தது. அதன்படி ஜப்பான் தன் தூதரகத்தை மீண்டும் செவுல் நகரில் அமைத்துக் கொள்ளவும், அதனைச் சுற்றி ஒரு காவற்படையை வைத்துக் கொள்ளவும் இசைவளிக்கப்பட்டது. இதற்குப்பின் ஜப்பான் கொரியாவோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளலாமெனவும், சீனுவின் மூலம் தொடர்பு கொள்ளத் தேவையில்லையென்றும் ஏற்பாடாயிற்று. இதனையறிந்த சீனு ஜப்பானிய ஆளுமை தன் சார்புநாட்டில் தனக்கெதிராக அமைவதைத் தடுக்க விரும்பியது. எப்படியும் கொரியாவைத் தன்னுடைய நேர் பார்வையில் வைத்துக் கண்காணிக்க வேண்டுமெனச் சீனு முடிவு செய்தது. இச் சமையத்தில் சீனுவின் தலை சிறந்த அரசியலறிஞுக விளங்கிய இலீஃகாங் சாங்கு (Li-Hung-Chang) என்பவரைச் சீனு செவுல் நகருக்கு அனுப்பியது. அவர் கொரியாவின் துறைமுகங்கள்

அனைத்தையும் இணைத்து ஒரு கண்காணிப்புக் கழகத்தின் கீழ் வைக்க வேண்டுமென்றும், அக் கழகம் சீனத்துறைமுகத் துறையோடு தொடர்பு கொண்டு நடக்க வேண்டுமென்றும் கூறினர்.

இச் சமையத்தில் (1884-ல்) கொரியாவில் பிற்போக்காளருக்கும், முற்போக்காளருக்குமிடையே ஒரு பெரிய மோதல் ஏற்பட்டது. இதனையடக்க சீனு, ஜப்பான் ஆகிய இரு நாடுகளின் படைகளும் கொரியாவுக்குச் சென்றன. ஆனல், சீனு தீவிரமாகக் கொரியாவின் செய்தியில் ஈடுபட முடியவில்லை. இந்தோசீனுத் தகராறில் அது ஃபிரான்சுடன் மோதிக் கொண்டிருந்ததாகும். இச் சமையத்தில் கொரிய முற்போக்காளர்கள், சீனச் சார்பாளர்களிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்ற முற்பட்டனர். எனவே முற்போக்காளர்களின் செல்வாக்கே கொரியாவில் மேலோங்கலாயிற்று. கொரிய அரசரும் ஜப்பானின் துணையை நாடிநின்ருர். இக் கிளர்ச்சியை அடக்கச் சென்ற சீன, ஜப்பானியப் படைகள் தங்களுக்குள்ளும் மோதிக் கொண்டன. இம் மோதலில் ஜப்பானியர் பலர் கொல்லப்பட்டனர். இத்தகைய உயிரிழப்பீட்டிற்காகவும், போர்ச் செலவுக்காகவும், கொரிய அரசரிடம் ஜப்பான் இழப்பீடு கோரியதோடு சீனுவின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படியும், தன்னிடம் மன்னிப்புக் கேட்க ஒரு தூதுக்குழுவை அனுப்பும்படியும் கொரியாவைக் கேட்டது. அத்தோடு ஜப்பான் தன் நாட்டுத் தலைமையமைச்சர் இத்தோவைச் சீனுவுக்கு அனுப்பிக் கொரியாவில் இரு தரப்புப் படைகளுக்கும் நேர்ந்த மோதலைப்பற்றி உசாவல் நடத்தவும், இனி அத்தகைய மோதல்கள் ஏற்படாதவாறு தடுக்கவும் கோரியது. இத்தோ 1885-ல் சீன அமைச்சர் இலீஃகாங்சாங்கைச் சந்தித்து தியென்சின் என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். இதன்படி சீனுவும், ஜப்பானும் முன்னறிவிப்பின்றிப் படைகளைக் கொரியாவுக்கு அனுப்புவதில்லையென்றும், இருதரப்புப் படைகளும் கொரியாவிலிருந்து வெளியேறவேண்டுமென்றும் முடிவாயிற்று. இரு நாடுகளும் கொரியாவின் படைகளுக்குப் பயிற்சியளிக்க உதவியோ பயிற்சியாளர்களையோ அனுப்புவதில்லையென்றும் முடிவாயிற்று. ஜப்பானியரின் தூதரகத்தைத் தாக்கியழித்ததற்கும், ஜப்பானியரைக்கொன்றதற்கும் சீனு ஜப்பானிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டது.

தியென்சின் உடன்படிக்கை ஏற்பட்ட ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு கொரியாவில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. அயலாரை வெளியேற்றுவதே அக் கிளர்ச்சியாளர்களின் நோக்கமாகும். இக் கிளர்ச்சியாளர்களை யடக்க, கொரிய அரசு சீனுவின்

உதவியை நாடியது. சீனு ஒரு படையை அனுப்பி வைத்தது. ஜப்பானும் தன் முற்போக்குக் கட்சியாளரின் வேண்டுகோளின்படி ஒரு படையை அனுப்பி வைத்தது. இக் கலகம் அடக்கப்பட்டு விட்டது. கலகம் அடக்கப்பட்ட பின்னரும் ஜப்பானும், சீனுவும் தங்கள் நாட்டுப்படைகளைக் கொரியாவிலிருந்து திருப்பிப் பெற்றுக் கொள்ளவில்லை. சீனு கொரியாவின் செய்திகளில் தானும், ஜப்பானும் தலையிடக்கூடாதென வலியுறுத்தி, இரு நாட்டுப்படைகளும் கொரியாவை விட்டு வெளியேற வேண்டுமென்றும் கருத்துரை கூறியது. படைகளைக் கொரியாவில் நிறுத்தி வைத்துக்கொண்டு, சீனுவும் ஜப்பானும் கொரியாவில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று ஜப்பான் கூறியது. இதன் கரணியமாக ஜப்பானுக்கும், சீனுவுக்கும் தகராறு முற்றிச் சீன-ஜப்பானியப்போர் தொடங்கலாயிற்று.

சத்சுமா சாமுராய்களின் புரட்சி

1873-ல் கொரியா மீது படையெடுக்கும்படி மேசியை சைகோ தகமோரி தூண்டினுனென்றும் அவனுடைய தூண்டுதலை அமைச்சரவை ஏற்காமல் மறுத்ததென்றும் எனவே அவன் அரசியலைத் துறந்து சத்சுமாவுக்குச் சென்று, அங்கு ஒரு படைப்பள்ளியை அமைத்து இளஞ்சாமுராய்களுக்கு ஐரோப்பிய முறையில் படைப் பயிற்சியளித்தானென்றும் பார்த்தோம். சைகோ தகமோரி இது போன்ற படைப்பள்ளிகளைப் பல இடங்களில் ஏற்படுத்தி ஏறத்தாழ இருபதாயிரத்துக்கு மேற்பட்ட சாமுராய் வீரர்கள் படைப்பயிற்சி பெறும்படி செய்தான். இப் படைகள் யாவும் தேசியப்படையையும் புதிய ஆட்சி முறையையும் எதிர்த்துப் போரிட அணியமாயின. சைகோ தகமோரியின் தலைமையில் ஐரோப்பிய முறையில் பயிற்சி பெற்ற 40,000 சத்சுமா சாமுராய் வீரர்கள் மேலை நாட்டுப் புதுமுறை வேட்டெஃகங்களையும், குண்டுகளையும் ஏந்திக் கொண்டு 1877-ல் மிகாடோவின் தேசியப்படையை எதிர்க்கப் புறப்பட்டனர். அச் சமையத்தில் தேசியப்படையில் அறுபதாயிரம் வீரர்கள் இருந்தனர். இவர்கள் யாவரும் ஜப்பானிய நாட்டின் தேசியத்தைக் காக்கும் உணர்ச்சியோடு சத்சுமா சாமுராய்களை எதிர்க்க அணிவகுத்து நின்றனர். வஞ்சக அறிவும் குலச்செருக்குமுடைய சத்சுமா சாமுராய்களைப் பல போர்க்களங்களில் சந்தித்தார்கள். சைகோ தகமோரி, தகோசிமா என்னுமிடத்தில் அமைந்திருந்த படைப்பள்ளியில் பயிற்சிபெற்று, மேற்கத்தியக் குண்டுகளையேந்தி நின்ற அத்தனை இளைஞர்களும் தேசியப்படைக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின் வாங்கினர். கலகக்காரர் கைப்பற்றியிருந்த குமாமொதோ என்னும் காவற்

கோட்டையும் தேசியப் படையினரால் கைப்பற்றப்பட்டது. இதற்குப்பின் சத்சுமா சாமுராய்கள் பல இடங்களில் தோல்வி யுற்றனர். கடைசியாக இவர்களின் தலைவனான சைகோ தகமோரியின் தலை கொய்யப்பட்டது.

சத்சுமா சாமுராய்களின் தோல்விக்கு இரு வகைக் காரணியங்களைக் கூறலாம். ஒன்று, சத்சுமாக்கள் தங்களுக்குள்ளாகவே இரண்டாகப் பிளவுபட்டு நின்றார்கள். அதில் ஒரு பிரிவினர்க்குத் தலைவராக சைகோ தகமோரி நின்றான். அவன் பல மாநிலங்களில் சத்சுமாக்களுக்கு படைப் பள்ளிகளையமைத்து, ஏறத்தாழ 20,000-க்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு மேற்கத்திய முறையில் படைப்பயிற்சியளித்தான். இவர்கள் யாவர்க்கும் இனச் செருக்கும் தங்கள் தலைவனுக்கு மட்டும் பணியும் பண்பும் புகட்டப்பட்டன. இத்தகைய குறுகிய மனப்பான்மையுடைய கட்சியோ, இனமோ, படையோ எந்த நாட்டு வரலாற்றிலும் வெற்றிகண்டு வாழ்ந்ததை நாம் அறியோம்.

சத்சுமா சாமுராய்களின் மற்றொரு பிரிவுக்கு ஒகுபோ தொசிமிச்சி என்பவன் தலைவனாயிருந்தான். இவன் நாட்டின் பொது நோக்கை மனத்தில் கொண்டு புதிய நாடாக மாறிவரும் ஜப்பானின் வளர்ச்சிக்குத் தேசிய உணர்ச்சியோடு பாடுபட முன் வந்தான். இக் கலகம் ஏற்பட்டபோது அவனே ஜப்பான் அரசின் உள் நாட்டு அமைச்சராக விருந்தான். இக் கலகத்தை அடக்க முனைந்த தேசியப் படைக்குப் பெரிதும் உதவினான். இவ்வாறு தம் குலத்தவரை அழிக்கக் கோடாரிக்காம்பாகப் பயன்படும் இவனைச் சத்சுமா சாமுராய்களே கொலை செய்துவிட்டனர். அடுத்தபடியாக சத்சுமா சாமுராய்களின் கலகம் தோல்வியுறுவதற்கு மற்றொரு முகாமைக் காரணியம் 66,000 தேசியப்படைவீரர்களும் உள்ளுணர்ச்சியோடு ஒருமித்த தேசிய உணர்வால் உந்தப்பட்டுப் போரிட்டதாகும். இக் கலகத்தில் இரு தரப்பிலும் 33% படைவீரர்கள் உயிர் துறந்தனர். ஆக, இப்படைக் கலகம் ஜப்பானிய நாட்டு வரலாற்றில் ஒரு புதிய வுண்மையை வெளிப்படுத்தியது. அஃதாவது தேசிய உணர்ச்சிகொண்ட ஒன்றிணைந்த எத்தகைய உணர்ச்சியையும், குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள் எத்தகைய வலிமை படைத்திருந்தாலும் வெல்ல முடியாது. எனவே தான் மக்கள் படைமுன் மரபுப் படைவீரக் குடும்பங்கள் தோற்றோடின. இத்தகைய தேசியப் படையுணர்ச்சியை முதன் முதலில் தோற்றுவித்தவர் இதேயொசி என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

# முதல் சீன-ஜப்பானியப் போர் (1894—1895)

**காரணியங்கள்**

சீனாவுக்கும் ஜப்பானுக்குமிடையே ஏற்பட்ட இப் போர் திடீரென மூண்டதாகக் கூற முடியாது. கொரியாவில் சீனாவுக்கும் ஜப்பானுக்குமிடையே நிலவி வந்த அதிகாரப் போட்டியே இப் போரின் அடிப்படைக் காரணியமாகும். இப் போரைப்பற்றி நாம் அறிவதற்கு முன்பாக கி. பி. 19ம்ஆம் நூற்றாண்டினிறுதியில் சீனாவிலிருந்த நிலைமைகளை ஜப்பானிய நாட்டு மேசிப் புரட்சியின் வளர்ச்சியோடு ஒப்பிட்டு நோக்கினால் இப் போரின் முடிவை முன்கூட்டியே கூறிவிடலாம். சீனா, இக் காலத்தில் ஒரு பழைமைப் பற்றுடைய நாடாகவும், அதன் மக்கள் படைப் பயிற்சியின்றியும் காணப்பட்டனர். ஆனால், அதே சமையத்தில் ஜப்பான் நாட்டில் மேசிப் புரட்சியால் மேனாட்டு நாகரிகமும் புதுமைகளும் எல்லாத் துறைகளிலும் முன்னேறியிருந்தன. ஜப்பானிய மண் வீரத்தின் விளைநிலமாய்க் காணப்பட்டது. ஒவ்வொரு ஜப்பானியனும் சாமுராய்ப் படையிலோ தேசியப் படையிலோ பயிற்சி பெற்றவனாகக் காணப்பட்டான். எனவே ஐரோப்பியரும் அமெரிக்கரும்கூட ஜப்பானை மதித்து நடந்தனர். ஜப்பான் எல்லாத் துறைகளிலும் புதுமையை விரும்பியேற்று மாற்றமடையும் பொழுது சீனா அத்தகைய மாற்றத்தை விரும்பாமல் பழைமையில் மூழ்கிக் கிடக்க விரும்பியது. மஞ்சு குலப் பேரரசரால் பீகிங்கிலிருந்து ஆளப்பட்ட சீன மக்கள் இழிந்த வீரர்களாகக் காணப்பட்டனர். ஆனால், அதே சமையத்தில் மிகாடோவின் குடிகள் தங்கள் வீரக்குலப் பண்பாட்டைக் கூறி மார் தட்டி நின்றனர். சாமுராய்களைப் போன்ற ஒரு படைக்குல மரபும் சீனாவில் இருந்ததில்லை. ஜப்பானிய மக்கள் தங்களுடைய பேரரசரைத் தெய்வத்தின் வழித்தோன்றல் எனப் போற்றி அத் தெய்வச் சுடரால் பிணைக்கப்பட்டு நின்றனர். ஆனால், சீன மக்களோ தங்களின் அரசரை நாட்டின் தலைவராகவே கருதினார்கள். சீன வீரர்களும் படைத் தலைவர்களும் புதிய கருவிகளையேந்திப் போரிடும் முறையிலும், பாசறை அமைக்கும் முறையிலும் பயிற்சியில்லாதவர்கள். ஆனால், அதே சமையத்தில் சைகோ தகமோரி போன்ற சாமுராய்த் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் நாடெங்கிலும் படைப் பள்ளிகளையமைத்து மேற்கத்திய முறையில் புதிய குண்டுகளைப் பயன்படுத்திப் போரிடும் முறைகளைப் பயிற்சியளித்தார்கள். அதுமட்டுமல்லாமல் மிகாடோவின் தேசியப் படையும் இத்தகைய போர்ப் பயிற்சிகளைப் பெற்றிருந்தது. கோர்டன் போன்றவர் சீனர்களுக்கு ஐரோப்பிய, பிரிட்டானிய,

செருமானியப் போர் முறைகளில் பயிற்சி கொடுத்திருந்தாலும், சீனர்கள் 1882-க்கு முன்பு வேண்டுமானுல் ஜப்பானியரைத் தோற்கடித்திருக்கலாம். அதற்குப் பின் பத்தாண்டுக் காலத்திற்குள் தன்னை வல்லரசு நாடுகளில் ஒன்ருக ஜப்பான் மாற்றிக்கொண்டது.

மேலும் சீனு அபினிப் போர்கள், 'தைப்பிங்' கலகம், மங்கோலியப் படையெடுப்பு போன்றவற்றில் சிக்கித் தன்னுடைய வலிமையை இழந்து நின்றது. ஜப்பானில் 1879-ல் காகிதப்பணம் வெளியிடப்பட்டதை அறிவோம். அதனையடுத்து உள்நாட்டில் சத்சுமா, சோசு, ஆகிய சாமுராய்களின் கலகங்கள் ஏற்பட்டதையும் அறிவோம். இவ்விரு நிகழ்ச்சிகளையும் கூர்ந்து நோக்கிய ஜப்பானிய அறிஞர்கள் ஜப்பானில் பொருள் வளமும், படைவலியும் இல்லையென இடித்துரைத்தனர். எனவேதான் 1885-ல் கொரியச் செய்தியில் சீனுவுக்கு அஞ்சி ஜப்பான் தியென்சின் உடன்படிக்கை செய்து கொண்டதென்றும் அரசியற்காரர்கள் சிலர் குறை கூறினர். எனவே ஜப்பானிய அரசு தன் நாட்டுப் படைவலியைப் பெருக்குவதில் தீவிரக் கவனம் செலுத்தியது. சீனு தன்னைக் கொரியச் செய்தியில் 1885-ல் அவமானப் படுத்தியதை மறக்கவில்லை. இதனுல் தான் ஜப்பான் தனது அதிகார மனப்பான்மையால் உலூச்சூத் தீவுகளைக் கைப்பற்றிக் கொரியாவை அச்சுறுத்தி வந்தது. ஜப்பானின் அதிகார மனப்பான்மையைக் கண்ட சீனர் ஜப்பான் திடீரென ஒருநாள் தங்களைத் தாக்கியே தீருமென்பதை உணர்ந்தனர். 'ஜப்பானியப் போர் மேகப் படலங்கள் பெருகிக் கொண்டே வருகின்றன. சிறு குளிர் காற்று வீசினுலும் அது போர் மழையாகச் சீனுவில் பெய்யும்' எனச் சீனுவின் அரசியற்காரர்கள் தம் மக்களை எச்சரித்தார்கள். ஜப்பானைத் தோற்கடிக்க வேண்டுமானுல் சீனுவின் நாவாய்ப் படையை மாற்றியமைத்து அதனைத் தனியாகக் கண்காணிக்க வேண்டுமென்றனர். ஒவ்வொரு சீன மாநிலத்திலுமுள்ள அரசப்படி நிகராளிகளும், ஆளுநர்களும் தங்களுக்குக் கீழுள்ள தரைப்படை, நாவாய்ப் படைகளுக்குத் தீவிரப் பயிற்சியளிக்க உத்தரவிடப்பட்டனர். நாவாய்ப் படைக்கும், தரைப்படைக்கும் தனித்தனி யமைச்சர்கள் அமர்த்தப்பட்டனர். இலீஃகாங்சாங்கு (Li Hung-Chang) என்பவர் ஜப்பானிய வெளி விவகாரத்தை மட்டும் கவனிக்கும் தனியமைச்சராக அமர்த்தப்பட்டார். இவர்கள் யாவரும் ஐரோப்பிய நாடுகளுடன் நட்புறவோடு நடந்து கொள்ளும்படி ஆணையிடப்பட்டனர். இம் முறையில் ஜப்பான் சீனுவைப் போல் ஐரோப்பிய நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கவில்லை. ஆதலால் தான் தாக்கினுல் எந்த

ஐரோப்பிய நாடும் துணைக்கு வாராதெனச் சீன கருதியது. சீனப் பேரரசர் போர் தொடர்பான நடவடிக்கைகளைப் படைச் செய்திகளைக் கவனிக்கும் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அந்தக் குழுவும் இலீஃகாங்சாங்கையே ஜப்பான் மீது போர் தொடுக்கும் செய்திகளைக் கவனிக்கும் அமைச்சராயிருக்க இசைவளித்தது. இலீஃகாங்சாங்கு ஏற்கனவே நடந்த தைப்பிங் கலகத்தை அடக்குவதில் பெரும்பங்கேற்றுப் புகழ் பெற்றவர். சிஃலி (Chihli) என்னும் மாநிலத்தின் அரசப்படி நிகராளி யாயிருந்து திறம்பட ஆட்சி புரிந்தவர். இவர் போரமைச்ச ரானதும் ஜப்பானிய நாவாய்ப் படைகளுக்குப் புதுமுறைக் கருவிகளைத் தருவித்தளித்தார். ஜப்பானோடு போர் புரிவதற்கான எல்லா ஆயத்தங்களையும் செய்தபின் கொரியச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு, அதனோடு போரிடுவதைவிட, உலூச்சூத் தீவுகளின் சேதியைக் கரணியம் காட்டிப் போரிடலாம் என்று எண்ணினர். அத் தீவு தன்னாட்டுக்குத்தான் சொந்த மென்றும், இதை எல்லா நாடுகளும் ஒப்புக் கொள்ளுமென்றும் அவர் எண்ணினர். உலூச்சூத் தீவுகளின் மீதிருக்கும் உரிமையும், தன் நாட்டுக்கிருக்கும் படை வலிமையுமே ஜப்பானோடு போரிடு வதற்குத்தக்க கரணகங்களென்றும் எண்ணினர். இச் சமையத்தில் அரசியலறிஞர்கள் சிலர் ஜப்பானிய நாவாய்ப்படையை வெற்றி கொள்ளும் அளவுக்குச் சீன நாவாய்ப் படை இல்லையாதலால், இன்னும் சில ஆண்டுகளுக்குப்பின் இப் படை வலுவுள்ளதா யமைத்துப் பெருக்கப்பட்டபின் ஜப்பானோடு போரிடலா மென்றனர். இதனை இலீஃகாங்சாங்கு ஏற்றுக் கொண்டார். ஜப்பானிய நாவாய்ப் படையை வலுப்படுத்தும் வழி முறைகளை ஆய, 'நாவாய்ப்படைக்கழக' மொன்றும், 'நாவாய்ப்படைக் கல்லூரி' யொன்றும் அமைக்கப்பட்டன. இக் கழகத்திலும், கல்லூரியிலும் சேருவதற்குத் தேர்வுகளின் மூலம் இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதைத்தவிர ஐரோப்பிய நாடு களிலிருந்து சிறந்த நாவாய்ப்படைத் தளபதிகளை வரவழைத்துச் சீனர்களுக்குக் கடற்போர்ப் பயிற்சியளித்தும், புதிய நாவாய்ப் படைத் தளவாடங்களை வரவழைத்தும், சீன நாவாய்ப்படை சிறப்புற அமைக்கப்பட்டது.

இத்தகைய தீவிர முயற்சிகள் யாவும் சிறந்த பலனைத் தர முடியாமல் தேங்கி நின்றன. சீன அமைச்சர்களும், மாநில ஆளு நர்களும், நாட்டின் இயற்கைச் சத்திகளையும், மக்கள் சத்திகளையும் செவ்வனே பயன்படுத்தும் வழிவகைகளை அறியாதவர்களாயும், தன்னலம் மிகுந்து ஊழல் நிறைந்தவர்களாகவும் காணப்பட்டதே இதற்குக் கரணியங்களாகும். மேலும் மாநில ஆளுநர்கள் மைய

ஆட்சிக்குக் கட்டுப்பட்டு அதனோடு இணைந்து நிற்கவில்லை. அஃதாவது மைய ஆட்சியின் நேரடிப் பார்வையிலுள்ள தரைப் படை, நாவாய்ப் படைகளும் மாநில ஆளுநர்களிடமுள்ள தரைப் படை நாவாய்ப் படைகளும் ஒரே வகைப் பயிற்சியைப் பெற்று ஒற்றுமையோடு ஒன்றிணைந்து போரிடும் முறையில் பழக்கம் பெறவில்லை. ஆனால், ஜப்பானியக் கடற்படையில் இத்தகைய குறையெதுவும் காணப்படவில்லை. தன் படைகளைத் தன் நாட்டைச் சுற்றிலும் எப்பொழுதும் அணியமாக அது வைத்துக் கொண்டிருந்தது. இச் சமையத்தில் ஜப்பானிடம் ஒரு மூன்றுந்தரப் போர்க் கப்பலும், நான்கு முதல்தரமான கப்பல்களும், ஏழு பாதுகாப்புள்ள கப்பல்களும், ஒன்பது எளிய கப்பல்களும், எட்டு தகரிப் படகுகளும், மற்றும் சில சிறிய பெரிய படகுகளும்தாம் இருந்தன. ஆனால், இக் கப்பல்கள் யாவும் சீனப் பெருங்கப்பல் களைவிட விரைந்து செல்லக் கூடியவை. ஜப்பானியக் கப்பல் அதி காரிகளும், கப்பல் வீரர்களும், பிரிட்டானியரால் பயிற்றுவிக்கப் பட்டவர்களாகவும், அல்லது பிரிட்டானியரிடம் பயின்ற அதிகாரி களால் பயிற்றுவிக்கப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். எனவே இவர்களிடம் சிறந்த பயிற்சியும், சீரிய கட்டுக்கோப்பும் ஒருங்கே காணப்பட்டன. இக் காலத்திலிருந்த ஜப்பானியத் தரைப் படைகளும் சீனவை எதிர்த்துப் போரிடுமளவுக்குத் திறமை பெற்றிருந்தன. ஜப்பானுக்கு வருகை தந்த பிரிட்டானியப் படையதிகாரி தளபதி யெங் அசுபெண்டு(Captain Young Husband) என்பவர் ஜப்பானியப் படை முறையைக்கண்டு அஃது எல்லா வகைத்தரத்திலும் ஐரோப்பியப் படையை ஒத்திருக்கிறதென்று வியந்துள்ளார். ஒவ்வொரு பிரிவிலும் 17,000 வீரர்களைக் கொண்ட ஆறு பிரிவுகளும், 13,000 பேர்களைக் கொண்ட பேரரசர் படையும் ஆக 1,15,000 படை வீரர்கள் ஜப்பானி லிருந்தனர். இப் படைகள் கொரியாவையோ மஞ்சூரியாவையோ எதை வேண்டுமானாலும் தாக்க அணியமாயின.

சுருங்கக் கூறின் சீன-ஜப்பானியப் போருக்கான அடிப்படைக் கரணியம், கொரியத் தீவக்குறையில் சீனவும் ஜப்பானும் தங்களது அதிகாரத்தையும், ஆளுமையையும், செல்வாக்கையும் பெருக்கிக் கொள்ளத் தீர்மானித்ததேயாகும். மாறிவந்த சூழ்நிலைகளின் விளைவாக சீன, ஜப்பான் ஆகிய இரு நாடுகளின் ஆளுமைகள் தம் நாட்டில் நீடிப்பதைக் கொரியாவும் விரும்பவில்லை. இத்தகைய சிக்கலுக்கான தீர்வு போரைத்தவிர வேருகக் காணப்படவில்லை; எனவேதான் சீனவுக்கும் ஜப்பானுக்குமிடையே கொரியாவை மையமாகக் கொண்டு போர் மூண்டது.

போர்க் காலப் பொதுச் செய்திகள்

போர் தொடங்குவதற்கு முன்பாகச் சீனுவின் வட பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த நான்கு பிரிவுகளில் 520 கப்பற்படை வீரர்களிருந்தார்கள். இரண்டு இரண்டாந்தரப் போர்க் கப்பல்களும், மூன்று படையேந்திய போர்க் கப்பல்களும், மூன்று பாதுகாப்புள்ள போர்க் கப்பல்களும், இரண்டு எளிய கப்பல்களும், ஆறு தகரிப் படகுகளும், இரண்டு பயிற்சிக் கப்பல்களும், பதின்மூன்று தகரி ஏற்றிவரும் படகுகளுமிருந்தன. இவற்றிலிருந்த மூத்த அதிகாரிகள் திறமையற்றவர்களாகக் காணப்பட்டார்கள். இளைய அதிகாரிகள் கட்டுப்பாடுடையவர்களாகவும் திறமையுடையவர்களாகவும் காணப்பட்டார்கள். சீனத் தரைப் படைகள் ஜப்பானில் உள்ளது போல தேசியப்படையாக இல்லை. ஒவ்வொரு மாநிலத்திலும், மாநிலப்படைகள் அம் மாநிலத்தின் கொடிகளின் கீழிருந்தன. அவற்றின் தளபதிகளாக கொடியதிகாரிகள் (Banner - Men) எனப்படுவோர் இருந்தனர். இவர்கள் மஞ்சூ அரசர்களின் வழிவந்தவராவர். அவர்கள் தங்களை மிக உயர்ந்தவர்களாகக் கருதிக் கொண்டனர். ஒரு சில படைகள் ஐரோப்பிய முறையில் பயிற்சியளிக்கப்பட்டுமிருந்தன. இப்படை வீரர்களுக்குத் 'துணிச்சல்காரர்கள்' (Braves) என்று பெயர். இவர்கள் மேற்படி கொடியதிகாரிகளால் பயிற்றுவிக்கப்பட்ட படையைவிடச் சிறந்து காணப்பட்டனர். 1884-ல் மஞ்சூரியாவிலுள்ள மூன்று மாநிலத்திலுமிருந்து ஏறத்தாழப் பத்தாயிரம் வீரர்கள் மேனாட்டு முறையில் பயிற்சியளிக்கப்பட்டுக் கொரியப் போருக்கு அணியப்படுத்தப்பட்டிருந்தனர்.

தீவினைப் பயனாக இலீஃகாங்சாங்கின் படைகள்யாவும் பிச்சிலி (Pichili) வளைகுடாக் கடற்கரை முழுவதும் நிறுத்தப்பட்டு விட்டன. 13,000 பேரரசுப் படைகளும் கொடியதிகாரிகளும் பீகிங்கைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்தனர். இவர்கள் யாவரும் புதிய படைக்கருவிகளையேந்தி மேற்கத்திய முறையில் பயிற்சி பெற்றவர்கள். இருந்தும் திறமை வாய்ந்த இலீஃகாங்சாங்கின் கீழ் இப்படைகள் இல்லாமல் போனது சீனுவின் தீவினைப் பயனேயாகும். சீனுவில் 1894-ல் மொத்த மக்கள் தொகை 40 கோடியாக இருந்தும் 4 இலக்கம் பேர்களே பயிற்சி பெற்ற படை வீரர்களாயிருந்தார்கள். சாண்டுங், சிஃலி, மஞ்சூரியா ஆகிய மூன்றிடங்களில் சேர்ந்து 1,25,000 வீரர்களே இருந்தார்கள். இவர்களிடம் புதிய வேட்டெஃகங்களும், குண்டுகளும் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. அத்தோடு இரண்டு படைவீரர்கள் சேர்ந்து இயக்கும் போர்க்களக்

குண்டுகளும் இவர்களிடமிருந்தன. ஆனால், இவற்றை விரைவாகப் பயன்படுத்தும் பயிற்சியும், நுண்ணறிவும் இவர்களிடமில்லை. இதேயொசி சீனவின் மீது படையெடுத்தபோது கொரியர்கள் சீனவுக்குத் துணை நின்றனர். ஆனால், 1894-ல் கொரியர்களிடம் அத்தகைய வீரமும், வலிவும் இல்லாமல் போய்விட்டது. எனவே சீன கொரியாவின் வலிமையைப் பெரிதாக நம்பி அதன் துணையால் ஜப்பானை வென்றுவிடலாமென்னும் நம்பிக்கையும் ..ர தருவதாக இல்லை. மேலும் சீனப் படையிலிருந்த ..காரிகள் யாவரும் செருக்குள்ளவர்களாகவும், அறியாமையில் ..ியவர்களாகவும், ஊழலில் வல்லவர்களாகவும் இருந்தனர்.

மேலே கூறப்பட்ட ஜப்பானியப் போர்ப்படைத் தன்மைகளை ..யும், சீனப் போர்ப்படைத் தன்மைகளையும் கொண்டு நடக்க ..விருக்கும் சீன, ஜப்பானியப் போரின் போக்கையும் முடிவையும் நாம் ஒருவாறு முன்கூட்டியே ஊகிக்கலாம். அதற்கு முன்பாகச் ..சீன, ஜப்பானியப் போர் உண்டாவதற்கான உடனடிக் ..ரணியங்களை அறிவோம். சீனவுக்கும், ஜப்பானுக்கும் ஏற்கனவே ..கொரியா தொடர்பாகவும் உலூச்சுத் தீவு தொடர்பாகவும் ..பகைமையிருந்து வந்ததை அறிவோம். கொரியாவைத் 'துறவி நாடு' என்று அழைப்பர். இஃதொரு சிறு தீவக்குறை நாடாகும். ..நானூறு கல் நீளமும், நூற்றைம்பது கல் அகலமுமுள்ள இச் ..றிய நாடு ஜப்பானுக்கு மேற்கிலமைந்திருக்கிறது. ஜப்பானுக்கும், ..காரியாவுக்குமிடையில் ஜப்பான் கடல் இருக்கிறது. இதன் ..ற்கில் மஞ்சள் கடலும், தெற்கிலும், தென்கிழக்கிலும் ..காரிய நீரிணைப்பும் இருக்கின்றன. இக் கொரிய நீரிணைப்புத்தான் ..ப்பானையும், கொரியாவையும் பிரிக்கிறது. யாலு ஆறு ..கொரியாவின் வழியாக ஓடி மஞ்சள் கடலில் கலக்கிறது. யாலு ஆறு கடலில் கலக்குமிடத்தில் வடகரையில் யாண்டங் பட்டினம் இருக்கிறது. மற்றொரு ஆறான தூமன் என்பது வடகிழக்குப் பகுதியிலோடி ஜப்பான் கடலில் கலக்கிறது. இது கடலில் கலக்கும் இடத்திலிருந்து ஏழத்தாழ 75 கல் தொலைவில் உருசியாவின் முகாமைத் துறைமுகமான விளாடிவாசுடாக் இருக்கிறது. திரான் சைபீரியன் இருப்புப் பாதை முடிவுறுமிடம் விளாடிவாசுடாக் என்பதை நாம் அறிவோம். பிப்பிரவரி 1890-ல் உருசியாவை ஆண்ட மூன்றும் சார் அலெக்சாண்டர் சைபீரியாவின் குறுக்காக ஒரு நீண்ட இருப்புப் பாதை அமைக்க வேண்டுமென அறிவித்தார். இத் திட்டம் 1893-ல் தொடங்கி 1903-க்குள் முடியுமென அறிவிக்கப்பட்டது. இத் திட்டம் நிறைவேறிவிட்டால் உருசியா, கொரியாவை எப்படியும் தன் ஆட்சியில் சேர்த்துக்கொள்ளு மென்பதை ஜப்பான் உணர்ந்தது. 1891-ல் சார் இரண்டாம்

நிக்கோலசு ஜப்பானுக்கு வருகை தந்தபோது ஜப்பானிய வெறியன் ஒருவனால் தாக்கப்பட்டார். இதனால் உருசியாவுக்கும் ஜப்பானுக்குமிடையே பகை மூண்டது. மேலும் உருசியா ஆண்டு முழுவதும் பனியால் மூடப்படாத துறைமுகமொன்றைத் தான் பெறவேண்டுமென்று நினைத்தது. எனவே உருசியாவும், கொரிய நாட்டின்மீது ஒரு கண் வைத்திருந்ததென்பதை அறிகிறோம்.

யாலு ஆற்றுக்கும், தூமன் ஆற்றுக்கும் வடக்கே காடுகளடர்ந்த மலைகளும், அம் மலைகளின் வழியாகப் போகும் பெரும் பாதைகளும் சீனா, கொரியாவிற்குள் தடையின்றி நுழைவதற்கு வாய்ப்பாக அமைந்திருந்தன. அப் பெரும்பாதைகளில் மிகவும் முகாமையானது பீகிங் பேரரசுப் பெருவழி (Imperial Peking Highway) ஆகும். இப் பெருவழி இலியோதுங் தீவக்குறையின் வழியாகச் சீனாவின் தலைநகரான பீகிங்கிற்குச் செல்கிறது. இப் பெருவழியில் மோதின்லிங் எனப்படும் 4000 அடி யுயரமுள்ள பெருங் கணவாய் ஒன்றிருக்கிறது. இப் பெருங்கணவாயைத் தேவுலகுக் கணவாய் (Heaven Reaching Pass) எனப்புகழ்வர். இக் கணவாய்க்கு மேற்குப் புறமாகவும் பல கணவாய்கள் இருந்தன. இவ்வாறு கொரியா இயற்கை எழிலின் இருப்பிடமாகவும், எண்ணிறந்த நீரூற்றுகள் பாய்ந்தோடும் மலைகளைத் தன்னகத்தே கொண்டும், பண்பட்ட விளைநிலமாய் விளங்கியது. இஃதொரு சிறந்த வேளாண்மை நாடு. கி. பி. 19ஆம் நூற்றாண்டில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பெருகிவரும் மக்கள் தொகையைக் கொண்ட ஜப்பான், பருவக் கோளாறுகளால் அடிக்கடி பஞ்சத்தால் வாடியது. எனவே கொரியா போன்ற ஒரு நன்னிலம் தனக்குக் கிடைக்குமாயின் வயிறார உண்டு வாழலாமென ஜப்பான் எண்ணியது. மேலும் கொரியாவில் மிகச் சிறந்த துறைமுகங்கள் இருந்தன. கொரியாவின் கிழக்குக் கரையில் கென்சன் (Gensan) என்னும் ஒன்சன் (Wonsan) துறைமுகமிருந்தது. இதற்குத் தென்மேற்கில் 330ஆம் கல்லில் விளாடிவாசுடாக் இருந்தது. கொரியாவின் தெற்குக் கரையில் உள்நாட்டுக்குள் வெகு தொலைவுவரை கப்பல்வர ஏந்தாக அமைந்த இயற்கைத் துறைமுகமான மசாம்போ (Masambo)வும் அதனை யடுத்து ஃபூசான் (Fusan) என்னும் துறைமுகமும் இருந்தன. மேற்கில் மொக்போ (Mokpo) துறைமுகமும், அதற்கு வடக்கில் செமுல்போ (Chemulpo), செவுள் (Seoul) ஆகிய துறைமுகங்களும் இருந்தன. இவற்றைத் தவிர பிங்கியாங் (Pingyang) ஆற்றுமுகத்தில் சினாம்போ (Chinambo) என்னும் துறைமுகமும் இருந்தது. இத் துறைமுகம் ஆண்டில் இரண்டு மாதங்கள் பனியுறைந்து காணப்படும். கென்சன், ஃபூசான், செமுல்போ, செவுல் ஆகிய துறைமுகப்பட்டினங்களில்

ஜப்பான் தனது குடியேற்றங்களை அமைத்திருந்தது. கொரியாவுக்கும் ஜப்பானின் தென்கோடியின் மேற்குப் பாகத்தில் நுசிமா என்னும் தீவு ஒன்றுள்ளது. இது ஜப்பானுக்குச் சொந்தமானது. ஃபூசானுக்கும் நுசிமாவுக்குமிடையிலுள்ள கொரிய நீரிணைப்பின் தொலை 40 கற்களாகும். இவ்வளவு அருகிலுள்ள இத்தனை ஏந்துகள் உள்ள கொரிய நாட்டைச் சீனுவோ அல்லது உருசியாவோ கவர்ந்து கொள்ள, அல்லது அதன் மீது ஆளுமை செலுத்த ஜப்பான் விடாதென்பதை நில நூலடிப்படையில் நாம் உணரலாம். மேலும் கொரியாவைக் கைப்பற்றும் ஒரு நாடு நுசிமாத் தீவின் வழியாக ஜப்பானுக்குள் எளிதாக நுழையலாம் அல்லவா? தற்காப்புக்காகவும், மேற்கண்ட தேவைகளுக்காகவும் கொரியாவை ஜப்பான் தன் ஆளுமையின் கீழ் வைத்திருந்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டது.

## நிகழ்ச்சிகள்

1859-ல் தேய்ந்தெஃகு (Teinteh) என்னும் மத வெறியன் ஃபூசானுக்கருகில் புத்தம், தாயிசம், கன்ஃபூசியம், கிறித்தவம் ஆகிய சமயங்களின் கொள்கைகளைக் கொண்ட ஒரு புதிய சமய முறையைப் போதிக்கலானுன். இவனை உரோமன் கத்தோலிக்க மதப்பிரிவைச் சேர்ந்தவனென்று கருதி 1865-ல் கொன்று விட்டனர். ஆனுல், இவனுடைய சமயக் கொள்கைகளை 'தைப்பிங்' போன்றவர்கள் அதிதீவிரமாகப் பரப்பத் தொடங்கினர். இந்த சமய வெறிக்கூட்டம் தோங்காக்சு (Tonghaks) எனப்படும் அரசியல் கட்சியோடு சேர்ந்து கொண்டது. இவ் வெறியர் கூட்டம் அயலாரை வெளியேற்ற வேண்டுமெனக் கொரியாவெங்கிலும் 1894-ல் பெருங்கலகம் செய்தது. இக் கலகத்தை அடக்குவதற்குக் கொரிய அரசர் தனது காப்பு நாடான சீனுவை அழைத்தார். சீனு தன்னுடைய படைகளை சூன் 8, 1894-ல் செவுல் நகருக்குத் தெற்கேயுள்ள ஆசானுக்கு அனுப்பியது. சீனுவின் படை கொரியாவில் நுழைந்ததையறிந்த ஜப்பான் தனது முற்போக்குக் கட்சியாளருக்குச் சார்பாகத் தனது படையை சூன் 12ஆம் நாள் செமுஸ்போவுக்கு அனுப்பியது. அப் படைக்குத் தலைமைதாங்கிச் சென்ற தளபதி ஒசிமா (Oshima), சூன் 13-ல் தனது 8000 படைவீரர்களுடன் தலைநகரான செவுலை அடைந்தார். ஆசானில் தங்கியிருந்த சீனப்படையின் மொத்த எண்ணிக்கை 2500 ஆகும். இவ்விரு படைகளும் கொரியாவுக்குள் நுழைந்து செயல்படு முன்பே கொரியாவில் தோன்றிய உள் நாட்டுக் கலகம் அடக்கப்பட்டு விட்டது. ஆனுல், இவ்விருபடைகளும் கொரியாவை விட்டு வெளியேறவில்லை. சீனு, இருநாட்டின்

படைகளும் கொரியாவை விட்டு வெளியேற வேண்டுமென்றும், கொரியாவின் உள்நாட்டுச் செய்திகளில் தாம் தலையிடக்கூடா தென்றும் ஜப்பானுக்குக் கூறியது. ஆனால், ஜப்பான், 1876-ல் தான் கொரியாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி கொரியாவின் தன்னுரிமை ஒப்புக் கொள்ளப்பட்டதென்றும், எனவே சீனாவும் அதன் தன்னுரிமையை ஒப்புக்கொள்ள வேண்டு மென்றும் வலியுறுத்தியது. வேண்டுமானால் ஜப்பானும், சீனாவும் கொரியாவின் அரசியலைச் சீர்திருத்தி, அதன் முன்னேற்றத்திற்குப் பாடுபடலாமென ஜப்பான் அறிவுரை கூறியது. இந்த அறிவுரை யைக் கொரிய அரசு ஏற்றுக் கொண்டது. இவ்வாறு ஜப்பான் தலையிடுவதைப் பிற்போக்காளர்களும், சீனரும் எதிர்த்தனர். சீனா வுக்கும் ஜப்பானுக்குமிடையே பகைமையுணர்ச்சி வளர்ந்தது. தன் நாட்டில் அயலார் இவ்விருவரும் மோதிக் கொள்வார்களோ என அஞ்சிய கொரியா, ஜப்பானைத் தன் நாட்டிலிருந்து வெளியேறும் படி வேண்டிக் கொண்டது. ஜப்பான் தனக்குப் பதிலாகச் சீனப் படைகளை வெளியேற்றும்படி கொரியாவுக்குக் கூறியது. இதற் கிடையில் மேலும் 1000 சீனத்துருப்புகள் கொரியாவுக்குள் நுழைந்தன. இதனையறிந்த கொரியா சீனப்படைகளை வெளி யேற்ற மறுத்துவிட்டது. ஜூலை 22, 1894-ல் கொரியாவில் சீனப் படைகளின் எண்ணிக்கை 11,000 ஆகப் பெருகியது. அவற்றில் 3000 ஆசானிலும், 8000 பிங்கியாங் ஆற்றுமுகத்திலும் நிறுத்தப் பட்டன. ஜூலை 23ஆம் நாள் ஜப்பானியப் படைகள் தலைநகரைக் கைப்பற்றி அரண்மனைக்குள் புகுந்து, சீனப்படைகளை வெளியேறு மாறு உத்தரவிட சீன அரசரைப் பணித்தது. ஜப்பானியத் தளபதி தலைநகரைத் தனது படையினுள் ஒரு பகுதியிடம் ஒப் படைத்துவிட்டு செவுலிலிருந்து பிங்கியாங் ஆற்று வழியே சென்று, அதற்குத் தெற்கேயுள்ள ஆசானை அடைந்தார். ஜூலை 25ஆம் நாள் ஆசானை வந்தடைந்த மூன்று சீனப் போர்க்கப்பல் வீரர்களும் ஜப்பானியரால் தோற்கடிக்கப்பட்டார்கள். போர்க் கப்பல்களிலிருந்து இரண்டு தளபதிகள் ஜப்பானிடம் அடிபணிய மனமில்லாமல் கடலில் மூழ்கி இறந்தனர்.

இவ்வாறு சீனாவுக்கும் ஜப்பானுக்கும் நேரடி மோதல்கள் தொடங்கின. ஆசானில் தோற்கடிக்கப்பட்ட சீனப்படைகள் அங்கிருந்து ஒசிமாவைச் சந்திக்கச் சென்றன. மீண்டும் செவுலுக் கருகில் சீனப்படைகள் ஒசிமாவால் தோற்கடிக்கப் பட்டன. இதற்குள் ஜப்பானிலிருந்து தளபதி சாதோ (Sato) தன் படை களுடன் சென்சன் துறைமுகத்தில் இறங்கினார். பிங்கியாங் கரையில் தங்கியுள்ள சீனப்படையுடன் பேசிட இத் தளபதி சென்றுவிட்டார். இவருக்குப் பின், செப்டம்பர் 12-ல் தளபதி

சுந்சுரா செமுல்போவில் வந்து இறங்கினர். இவருக்கு முன்பாகவே வந்திருந்த தளபதி நோத்சு, (Notzu)வும், ஓசிமாவும், சாதோவும் கூட்டாகச் சேர்ந்து செப்டம்பர் 15, 16ஆம் நாள்களில் பிங்கியாங் கரையில் தங்கியிருந்த 17,000 சீனப்படை வீரர் களுடன் போரிட்டு அவர்களைத் தோற்கடித்தனர். இப் போர்க் களத்தில் 6000 சினர்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் போயினர். ஆனல், ஜப்பானியப் படையில் 189 பேர் கொல்லப் பட்டனர். 516 பேர் காயமுற்றனர். பிங்கியாங் போர்க்களம் சீன, ஜப்பானிய வரலாற்றில் மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும்.

இதனையடுத்து நடந்த நாவாய்ப் போரில் யாலு ஆற்றங்கரை யில் நடந்த போர் முகாமையானதாகும். சீன, ஜப்பானிய நாவாய்ப் படைகள் செப்டம்பர் 17-ல் யாலு ஆற்று முகத்தில் போரிட்டன. இப் போரில் நான்கு சீனக் கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டன. இரு கப்பல்கள் தப்பியோடிவிட்டன. இவ்விரு நாவாய்ப் போர் வெற்றிகளுக்குப் பின் ஜப்பான் கொரியாவைச் சுற்றிலும் கடலாளுமை பெற்றது. தோற்கடிக்கப்பட்ட சீனப் படைகள் யாலு ஆற்றிலிருந்து வடக்கேயுள்ள மஞ்சூரியாவை நோக்கிப் பின்னடைந்தன. ஜப்பானியப் படையொன்று மஞ் சூரியாவின் மீது படையெடுத்தது. மற்றொரு படை இலியோதுங் தீவக்குறையின்மீது படையெடுத்தது. குளிர் காலத்தில் சீன, ஜப்பானியப் படைகள் மஞ்சூரியாவிலும் இலியோதுங் கிலும் பலவிடங்களில் போரிட்டன. 38,620 படை வீரர்களை இலியோதுங் தீவக்குறையின் மீது செலுத்திச் சென்ற ஜப்பானியத் தளபதி ஓயமா (Oyama) பல இடங்களில் வெற்றி கண்டு, ஆர்தர் துறை முகத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார். ஆர்தரை வந்தடைவதற்குள் இவருடைய படையில் ஏறத்தாழ 400 பேர் கொல்லப்பட்டிருந்தனர். ஆர்தரை முற்றுகையிட்டிருந்த சீனப் படைகளைத் தோற்கடித்து, அதனை ஜப்பானியப் படைகள் கைப்பற்றின. இதற்குப் பின் ஒன்றன்பின் ஒன்றுக மஞ்சூரியாவின் தென்கிழக்கிலுள்ள எல்லாத் துறைமுகப்பட்டினங்களும் ஜப்பானி யரால் கைப்பற்றப்பட்டன. 1895-ல் பிப்பிரவரி 2-ல் வெய்ஃகாய் வெய் (Wei-Hai-Wei) துறைமுகப்பட்டினம் ஜப்பானியரால் கைப் பற்றப்பட்டது. இதற்குப் பின் நடந்த சண்டைகளில் ஜப்பான் தனது போர்க் கப்பலொன்றையும், போர்ப் படகொன்றையும் இழந்தது. சீனுவின் போர்ப் படகுகள் குண்டுக்கிரையாகி மூழ்கின. அடுத்து நடந்த தகரிப் போரில் இலியூ-குங்தோ (Liu-kung-to) துறைமுகப்பட்டினம் ஜப்பானியக் குண்டுக்கு இரை யாகியது. சீனத் தளபதி திங் (Ting) என்பார் தற்கொலை செய்து கொண்டு மாண்டார். இதற்குப்பின் ஜப்பானியப் படை

பெச்சிலி (Pechili) வளைகுடாவின் வழியாக உள்நாட்டில் புகுந்து முன்னேறியது. மஞ்சூரியாவின் தலைநகரான முகுதன் (Mukdan) தளபதி கத்சுராவால் கைப்பற்றப்பட்டது. இதனையடுத்து நடந்த போரில் 30,000 சீனப் படைவீரர்கள் லியோ ஆற்று முகத்தில் தோற்கடிக்கப்பட்டனர். ஆர்தர் துறைமுகப்பட்டினத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜப்பானியப் படைகள் வடக்கிலும், தெற்கிலுமாகப் பிரித்து அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தன. தெற்கில் வெய்வாவை வென்ற படை, சாண்டுங் வழியாகச் சீனுவினுட் புகுந்து வெற்றிமேல் வெற்றிகண்டு, தலைநகரான பீகிங்கை நோக்கி முன்னேறியது. செய்வதறியாத சீனு வேறு வழியின்றிச் சமைதியை நாடியது.

### சிமோனேசகி உடன்படிக்கை

ஏப்பிரல் 17, 1895-ல் சிமோனேசகி என்னுமிடத்தில் ஏற்பட்ட சமைதிய உடன்படிக்கையில், சீனுவின் மாபெரும் அரசியலறிஞரான இலீஹ்காங்சாங்கும், ஜப்பானின் அரசியல் சட்டத் தந்தை இத்தோவும் கலந்து கொண்டனர். இவ்வுடன்படிக்கை செய்யும்போது இரு தரப்பிலும் அமெரிக்க நிகராளிகள் அறிவுரையாளர்களாக இருந்தனர். இவ்வுடன்படிக்கையின்படி கொரியா 'தன்னுரிமை நாடாக்கப்பட்டது. அதன் தன்னுரிமையைச் சீனு ஏற்றுக்கொண்டு, தன் ஆளுமையைக் கொரியாவின்மீது செலுத்துவதில்லையென ஒப்புக்கொண்டது. பார்மோசா, இலியோதுங் தீவக்குறை, பெசுகடோர்சு ஆகிய இடங்களைச் சீனு ஜப்பானுக்குக் கொடுத்தது. ஆர்தர் முதலிய நான்கு துறைமுகங்களில் ஜப்பான் வாணிகம் செய்ய இசைவளிக்கப்பட்டது. போர் இழப்பீடாக 2,51,60,256 பொற்காசுகளைச் சீனு ஜப்பானுக்கு வழங்க ஒப்புக்கொண்டது. அத் தொகை கொடுத்து முடியும் வரையில் வெய்ஹ்காய்வெய் துறைமுகப்பட்டினத்தை ஜப்பானிடம் பிணையமாக வைத்தது. இவ்வாறு ஜப்பான் சீனுவின்மீது கொண்ட வெற்றியினுல் பெரும் பலனடைந்ததைக் கண்ட செருமனி, உருசியா, உருசியாவின் நட்பு நாடுகள், ஃபிரான்சு ஆகிய நாடுகள் ஜப்பான்மீது பொருமை கொண்டன. இலியோதுங் தீவக் குறையினின்றும் ஜப்பானை வெளியேறும்படி இந் நாடுகள் அறிவுரை கூறின. ஜப்பானும் இந் நாடுகளின் அறிவுரைக்கிணங்க இத் தீவக் குறையிலிருந்து வெளியேறியது.

இதேயொசி கொரியாவை மையமாகக் கொண்டு, சீனுவின் மீது படையெடுத்துப் பணிய வைக்க முடியாமல் கைவிட்டு விட்டார். ஆனால் முட்சுகிதோ சீனுவைத் தோற்கடித்துப் பெரும்

பயனையும் அடைந்தார். கொரியாவிலும், மஞ்சூரியாவிலும் இவர்கள் பெற்ற வெற்றி இனி வரும் போர்களுக்கு அடித்தளமாய் நின்றது. பார்மோசாவும், பெசுகடோர்சும் ஜப்பானுக்குக் கிடைத்ததால், ஆங்காங்கையும், விளாடிவாசுடாக்கையும் அளப்பதற்கான அளவுகோல்களாய் நின்றன. ஜப்பானின் போர் வல்லமையை மேற்கத்திய நாடுகள் அறியலாயின. இதனால் மேல் நாட்டரசுகள் ஜப்பானால் ஏற்படப்போகும் பேரேதத்தை எண்ணிப் புழுங்கின. அதே சமையத்தில் மாபெரும் அரசான சீனா ஜப்பானிடம் தோற்றதால் சீனாவின் வலுவின்மை எல்லா நாடுகளுக்கும் வெளிப்படையாய்த் தெரியலாயிற்று. சீனாவின் வலுவின்மையையும் அதன் உள்நாட்டுச் சீர்கேடுகளையும் நன்கறிந்த ஐரோப்பிய நாடுகள் அதனைத் தங்களிடையே கூறுபோட்டுக்கொள்ளப் போட்டியிட்டன.

## ஆங்கில - ஜப்பானிய உடன்படிக்கை (1902)

சீன-ஜப்பானியப் போருக்குப் பின் ஏற்பட்ட சிமோனோசகி உடன்படிக்கைக்குப் பின் உருசியாவும் மற்றும் ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானின் ஆளுமை வளர்ச்சியைக் கண்டு அஞ்சின. ஜப்பானின் ஆளுமை வளர்ச்சியைத் தடுக்க வழிவகைகளைச் செய்யா விட்டால் அஃது தொலை கிழக்கு நாடுகளையும், ஆசியா, ஐரோப்பாவையும் சிறிது சிறிதாக விழுங்கிவிடுமென இந் நாடுகள் அஞ்சின. ஜப்பானில் பெருமளவில் வளர்ந்துவரும் தொழில்களும், மக்கள் தொகையும், புதிய கருவிகளின் வளர்ச்சியும் கண்டு உறுதியாக அதிவிரைவில் அஃதோர் உலக வல்லரசாக மாறி வருகிறதென்பதை இந் நாடுகள் உணரலாயின. எடுத்த எடுப்பிலேயே சீனப் போரில் அது கண்ட வெற்றியும் அப் போரினால் அதற்குக் கிடைத்த நாடுகளையும், வணிக ஊதியங்களையும் கண்ட உருசியாவும், மற்ற ஐரோப்பிய நாடுகளும் இரண்டு வகைத் திட்டங்களில் மூழ்கலாயின. ஒன்று வலுவற்ற சீனாவைத் தங்களுக்குள் கூறு போட்டுக் கொள்வது; மற்றொன்று வளர்ந்துவரும் ஜப்பானின் ஆளுமை வளர்ச்சியைக் கட்டுப் படுத்துவது. இரண்டாவதாக கூறப்பட்ட கருத்தில் செருமனியும், உருசியாவும், ஃபிரான்சும் ஒன்று சேர்ந்து ஜப்பானை இலியோதுங் தீவக் குறையிலிருந்து வெளியேற்ற முற்பட்டன. இத் தீவக்குறை சீன-ஜப்பானியப் போரினிறுதியில் ஏற்பட்ட சிமோனோசகி உடன்படிக்கையின்படி ஜப்பானுக்குக் கொடுக்கப் பட்டது. இம் மூன்று நாடுகளும் ஒன்று சேர்ந்து ஜப்பானை அத் தீவக்குறையினின்று வெளியேற்றக் கட்டளையிட்டு அதனைச் சீனாவுக்கே திருப்பியளிக்கும்படி செய்தன. இலியோதுங்

தீவக் குறையில் ஜப்பானிய ஆதிக்கம் ஏற்படுமேயானால் அது சீனவுக்கு மட்டுமல்லாமல் மற்ற ஆசிய நாடுகளுக்கும் ஏதமாக முடியுமென இம் மூன்று நாடுகளும் கருதின. ஆனல், உருசியா தான் மட்டும் கொரியா, மஞ்சூரியா போன்றவற்றில் தன் ஆளுமையை வளர்த்துக்கொள்ள ஜப்பானின் இடையீட்டை அங்கிருந்து ஒழிக்க விரும்பி, செருமனியோடும், ஃபிரான்சோடும் சேர்ந்து இவ்வாறு ஜப்பானை இலியோதுங்கிலிருந்து வெளியேற்ற ஒத்துழைத்தது. ஃபிரான்சு உருசியாவுக்கு இம் முறையில் ஒத்துழைத்தால்தான் தெற்கே தன் ஆளுமையைச் செலுத்துவதற்கு உருசியா துணை புரியுமென எண்ணியது. உருசியா ஐரோப்பியச் செய்திகளில் தலையிடுவதைத் தடுத்து அதன் சிந்தனையைத் தொலை கிழக்கு நாடுகளின் பக்கம் திருப்பவே செருமனி இச் செய்தியில் உருசியாவுடன் ஒத்துழைத்தது. ஆனல், பொதுவாக நோக்குமிடத்துச் சீனவைத் தோற்கடித்தபின் ஜப்பான் அதனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தன் செல்வாக்கைச் சீனவில் பெருக்கிக் கொள்வதை மேற்படி உருசியாவும், ஐரோப்பிய நாடுகளும் அச்சத்தோடும், அதிர்ச்சியோடும் நோக்கியதால்தான் ஜப்பானை இலியோதுங் தீவக்குறையிலிருந்து வெளியேற்றின.

இவ்வாறு தங்களை இலியோதுங் தீவக்குறையிலிருந்து வெளியேற்றிய மூன்று நாடுகளில் முகாமையான நாடான உருசியாவின் மீது பழி தீர்த்துக்கொள்ள ஜப்பான் முனைந்தது. மாபெரும் நாடான சீனவையே தோற்கடித்த பெருமையும், அதனல் இலியோதுங் தீவக்குறையைப் பெற்ற பெருமையும், உலக வல்லரசு நாடுகளில் ஒன்ருகத் தான் மதிக்கப்பட்ட பெருமையும் பெற்ற ஜப்பான் இவ்வாறு இலியோதுங்கிலிருந்து வெளியேறியதைத் தன் நாட்டுத் தேசியப் பெருமைக்கு இழிவானதெனக் கருதியது. இலியோதுங்கிலிருந்து ஜப்பானை வெளியேற்றியதோடு நிற்காமல் உருசியா தன் ஆளுமையை வளர்த்துக்கொள்வதற்காகப் பல செயல்களில் ஈடுபட்டது. பிப்பிரவரி 1895-ல் உருசியா சிமோனேசகி உடன்படிக்கையிலுள்ள கடுமையான கட்டுப்பாடுகளை எவ்வாறு ஜப்பான் சீனவின்மீது சுமத்தியுள்ளதென்பதை மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு விளக்கிக் காட்டி அதற்கு அந் நாடுகளின் கருத்துகளையும் கேட்டது. இதனையொட்டி செருமனி ஜப்பானுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்தது. ஃபிரான்சு முன்னரே உருசியாவுடன் 'திரான்சைபீரியன் தொடர்வழி' அமைப்பதில் நட்புறவு கொண்டிருந்தது. இந்தத் தொடர்வழிச் சாலை போடப்பட்டு நிறைவேறினல் மஞ்சூரியாவிலும், கொரியாவிலும் பனியுறையாத துறைமுகங்களைத் தானடையலாமென உருசியா

திட்டமிட்டிருந்தது. ஃபிரெஞ்சு நாட்டுக்குச் சொந்தமான தாங்கிங் (Tonging) அன்னம் முதலிய இடங்கள் தனக்கு நிலைத்திருக்க வேண்டுமானால் உருசியாவோடு உறவு கொள்ள வேண்டுமென நினைத்தது. எனவேதான் இம் மூன்று நாடுகளும் ஜப்பானுக்கு எதிராக ஒன்று சேர்ந்தன. ஆனால், பிரிட்டன் இம் மூன்று நாடுகளுடன் சேர்ந்து ஜப்பானுக்கு எதிராகச் செயல்பட விரும்பவில்லை. ஏனென்றால் உருசியாவும், ஃபிரான்சும் செருமனியும் தனது நட்பு நாடான பிரசியாவுக்கு எதிராக நின்றதாலாகும். ஜப்பான் ஆர்தர் துறைமுகத்திலிருந்த உரிமைகளைச் சீனவுக்கு விட்டுக் கொடுத்து விட்டு 49,06,250 பொற்காசுகளைச் சீனவிடமிருந்து பெற்றுக் கொண்டது. இப் பணத்தைச் சீன உருசியாவிடமிருந்து கடனகப் பெற்றுக் கொடுத்தது. இந் நன்றிக்காகச் சீன உருசியாவுக்கு 'திரான்' சைபீரியன் தொடர்வழியை வட மஞ்சூரியா வரையில் அமைத்துக் கொள்ள இசைவளித்தது. ஃபிரான்சுக்கு மேற்படி அன்னம், தாங்கிங் ஆகியவற்றில் பாதுகாப்பளிக்க ஒப்புக்கொண்டது; செருமனிக்கு தியென்சின் நகரத்தின் ஒரு பகுதியை அளித்தது. இவ்வாறு உருசியா கொரியாவிலும், மஞ்சூரியாவிலும் ஆளுமை பெற்றது. செருமனி பீகிங் நகர வாயிற்படிக்கே சென்று விட்டது. ஃபிரான்சு ஐரோப்பாவிலிருந்துகொண்டு ஆசியாவில் செல்வாக்குப் பெற்றது. இம் மூன்று நாடுகளின் நன்மைக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் சீன காவாக அமைந்தது. முதன் முதலாகச் சீனவின் வலுவின்மையைப் பயன் படுத்திச் சீனவைத் தங்களுக்குள் கூறுபோட்டுக் கொண்ட நாடுகள் உருசியாவும், ஃபிரான்சும், செருமனியுமாகும். இவை ஜப்பானைப்போல் சீனவோடு போர் புரியாமல் அடுத்துக் கெடுக்கும் படலத்திலிறங்கி அந் நாட்டைத் தங்களுக்குள் கூறுபோட்டுக் கொண்டன.

1895-க்குப்பின் செருமனியும், ஜப்பானைப் போல் ஒரு வல்லரசு நாடாக விரும்பியது. அதனையாண்ட இரண்டாம் கெய்சர் வில்லியம், சிறிதளவே உள்ள ஜப்பான் மாபெரும் சீனவை வென்றதற்குக் கரணியம் அதன் படை வல்லமைதான் என்பதைச் சுட்டிக்காட்டி அவ்வாறு சிறந்த படையை அமைக்க வேண்டுமென வலியுறுத்தினர். வளர்ந்து வரும் ஜப்பானிய அச்சமும், அமைதியே உருவான புத்தரை வைத்துக் கொண்டு நாடுகவரும் பேராசையால் நகர்ந்துவரும் ஆசிய நாடுகளையும் உருசியாவின் பேரரசர் இரண்டாம் நிக்கோலசையும் கெய்சர் வில்லியம் சுட்டிக் காட்டினர். கெய்சர் வில்லியத்தின் பெரு முயற்சியால் செருமனியின் நாவாய்ப்படையும் பிரிட்டானிய நாவாய்ப்படையோடு போட்டியிடுமளவுக்குத் திறம்பட அமைக்கப்பட்டது. இவ்வாறு புதிதாய் எழுந்த மூன்று பேராசைக்

காரர்கள் தன் அண்டைவீடான சீனுவின் கதவைத் தட்டுவதைக் கண்டு ஜப்பானுல் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. பிரசியாவின் கருத்துகளால் புகழ்பெற்ற செருமனியின் வரலாறும், மாவீரன் பிரடெரிக்கும், இரும்புமாந்தன் பிசுமார்க்கும் அவர்களின் சிந்தனையில் தோன்றினர். அதே சமையத்தில் தங்களின் மரபு சாமுராய் வீரப்பண்பையும், ஜப்பானியப் பேரரசரின் புனிதத் தன்மையையும் அவர்கள் மறந்தாரில்லை. நெப்போலியனின் எழுச்சி வரலாற்றை அவர்கள் ஏளனமாய்க் கொண்டனர்.

ஆயாஷி (Hayashi) போன்ற ஜப்பானிய நாட்டுத் தேசியக் காரர்கள் எப்படியும் ஜப்பான் மேற்கத்திய வல்லரசுகளோடு நட்புறவு வைத்துக் கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்தலாயினர். அவ்வாறு நட்புக் கொள்ள வேண்டுமானுல் அன்றைய நிலையில் ஜப்பான் உருசியாவோடும் ஃபிரான்சோடும் நட்புக் கொள்ளலாம்; அல்லது பிரிட்டனோடு நட்புக் கொள்ளலாமென இரு வகைக் கருத்துகள் ஜப்பானில் நிலவின. இத்தோவும் அவரைச் சார்ந்தவர்களும் உருசியாவோடும், ஃபிரான்சோடும் உறவு கொள்ளலாமென்றனர்; கத்சுரா, கொமுரா, கதோ ஆகிய அரசியற்காரர்கள் பிரிட்டனோடு நட்புக் கொள்ளலாமென்றனர். ஆயாஷி பிரிட்டனோடு நட்புக் கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்தி மிகாடோவின் இசைவும் பெற்றுர். இவ்வாறு ஆசியாவின் ஆளுமை வளர்ச்சிப் போட்டியில் உருசியாவின் பிறவிப் பகையான பிரிட்டனோடு ஜப்பான் நட்புக் கொள்ளத் தீர்மானித்தது, ஒரு மிகச் சிறந்த அரசியல் தந்திரமாகும். இச் சமையத்தில் செருமனி தொலை கிழக்கு நாடுகளில் ஆளுமை பெற விரும்பி, அவ்வாளுமைப் போட்டியில் முதற்பரிசு பெற முயலும் உருசியாவுக்கு எதிராகப் பிரிட்டனோடும், ஜப்பானோடும் சேர்ந்து கொள்ள விரும்பியது. ஆனுல், மஞ்சூரியச் செய்தியை இவ்வுடன்படிக்கையிலிருந்து நீக்கினுல் தான், உருசியாவுக்கு எதிராக ஜப்பானோடும், பிரிட்டனோடும் சேருவதாகக் கூறியது. ஏனெனில் மஞ்சூரியச் செய்தியில் பிரிட்டனோடும், ஜப்பானோடும் ஒத்துழைக்க நேர்ந்தால் உருசியா தன்னை எதிரியாகக்கருதி, நேரடியாகப் போர் தொடுக்குமோவென செருமனி அஞ்சியது. எனவே செருமனி இக் கூட்டுறவிலிருந்து ஒதுங்கி நின்றது. கடைசியாக ஆங்கிலேயருக்கும், ஜப்பானியருக்கும் 1902-ல் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது.

இச் சமையத்தில் பிரிட்டன் எந்த நாட்டுடனும் நிலையான உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாதென்ற கொள்கையிலிருந்தது. மேலும் உருசியா, மஞ்சூரியா போன்ற நாடுகளில் ஆளுமை பெறுவதால் பிரிட்டனின் வாணிகச் செல்வாக்குக் கீழ்த்

திசை நாடுகளில் குறைந்து விடாது. அப்படியிருந்தும் பிரிட்டன் உருசியாவுக்கு எதிராக ஜப்பானோடு ஏன் உறவு செய்து கொண்டது? உருசியா ஃபிரான்சுடன் சேர்ந்து கொண்டு சீனாவின் மஞ்சுப் பேரரசைத் தங்களுக்குள் கூறு போட்டுக் கொள்ளத் திட்டமிட்டுள்ளதைப் பிரிட்டன் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதற்காகவே இவ்வுடன்படிக்கையில் ஈடுபட்டது. ஜப்பான் உருசியாவை மஞ்சூரியாவிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற முகாமை நோக்கத்திற்காகவும், அண்டை நாடான சீனாவை உருசியாவும், ஐரோப்பிய நாடுகளும் தங்களுக்குள் கூறு போட்டுக் கொள்வதைத் தடுக்கும் நோக்கத்தோடும் இங்கிலாந்துடன் நட்புறவு கொண்டது. எனவே 1902-ல் ஏற்பட்ட ஆங்கில ஜப்பானிய உடன் படிக்கையில் ஜப்பானின் விருப்பத்திற்கு பிரிட்டன் இழுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஜப்பான் பிரிட்டனோடு நட்பு கொள்ள விரும்பியதென்பதை விட பிரிட்டன் ஜப்பானுடன் நட்பு கொள்ள விழைந்து நின்றதெனலாம். பிரிட்டனின் ஆளுமை வளர்ச்சிக்குத் தடையாக உருசியா குறுக்கே நின்றதே அதற்குக் காரணியமாகும். உருசியாவின் ஆளுமை நண்ணிலக் கடலை நோக்கி வளர்வதைத் தடுத்து நிறுத்தவே பிரிட்டன் கிருமியப் போரில் ஈடுபட்ட தென்பதையும் நாம் உணர வேண்டும். காசுபியன் கடலுக்குக் கிழக்கேயுள்ள பகுதிகளை உருசியா 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கைப்பற்றிக் கொண்டு, அங்கொரு தொடர்வழியை ஏற்படுத்தியது. இதனைத் தன்னுடைய இந்திய எல்லையின் வட மேற்கில் தனக்கு ஏற்பட்ட பேரிடராகவும், பேரேதமாகவும் பிரிட்டன் கருதியது. சுருங்கக் கூறின் தெற்கே கொரியாவிலும், மஞ்சூரியாவிலும் ஏற்பட்ட உருசியாவின் செல்வாக்கு தனக்கு ஏதமானதென பிரிட்டன் கருதியது. உருசியாவைத் தங்களின் பொது எதிரியாகக் கருதிய பிரிட்டனும் ஜப்பானும் இவ்வுடன்படிக்கையைச் செய்து கொண்டன.

### உடன்படிக்கையின் கூறுபாடுகள்

இவ்வுடன்படிக்கையின் முன்னுரையிலேயே சீனா, கொரியா ஆகிய நாடுகளின் ஒற்றுமையையும், தன்னுரிமையையும் காக்கவும், மற்ற நாடுகளுடன் இவை சமமாக வைத்து எண்ணப்படவுமே இந்த உடன்படிக்கையில் ஜப்பானும், பிரிட்டனும் இறங்குகின்றன எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தின் முழுநோக்கம், சீனாவைக் கூறுபடாமல் காக்க வேண்டுமென்பதாகும். ஆனால், ஜப்பானின் முழுநோக்கம் கொரியாவின் நலன்களைப் பாதுகாப்பதாகும். அத்தோடு இவ்விரு நாடுகளும் தங்களுக்குள்ள உறவு முறைகளையும், கட்டுப்பாடுகளையும் வெளிப்படையாக

வலியுறுத்திக் கொண்டன. இரு நாடுகளும் காசில்லா நுழைவுச் சலுகைக் கொள்கையை (Open Door Policy) ஏற்றுக் கொண்டன. சீனுவிலும், கொரியாவிலும், பிரிட்டனும், ஜப்பானும் பெற்றிருந்த உரிமைகளைக் காப்பாற்றும் பொருட்டு, இவ்விரு நாடுகளில் ஒன்று மற்ருெரு நாட்டுடன் போரிட நேர்ந்தால், மற்ருென்று நடுநிலைமை தாங்க வேண்டும். ஆனுல், இவைகளி லொன்று இரண்டு நாடுகளுக்கு எதிராகத் தன்னுடைய உரிமை களைக் காப்பதற்காகப் போரிட நேர்ந்தால் மற்ருென்று அதனுடைய உதவிக்குச் செல்ல வேண்டுமென இவ்வுடன் படிக்கையில் ஒப்பந்தமாயிற்று. இந்த உடன்படிக்கை 1902-லிருந்து 1907 வரையில் நடைமுறையில் இருக்குமென்றும், பின்பு சூழ்நிலைக்கேற்ப மாற்றியமைக்கப்படலா மென்றும் தீர்மானிக்கப் பட்டது. ஆனுல், இந்த உடன்படிக்கை 1922 வரை இரு நாடுகளுக்குமிடையே நிலைத்து நின்றது.

இவ்வுடன்படிக்கையால் விளைந்த பயன்களை நோக்கினுல், இதுவே உருசிய-ஜப்பானியப் போருக்கு ஒரு கரணியமாக அமைந்ததெனலாம். இதுவரை மேற்கத்திய வல்லாட்சிகளால் மிகத்தாழ்வாகக் கருதப்பட்ட ஜப்பான் மிகப்பெரிய பிரிட்ட னுடன் கைகோர்த்து நின்றதால் அதன் பெருமை உலக நாடு களின் நடுவில் மேலும் உயர்த்தப்பட்டது. இதனுல் ஜப்பானுக்குச் செருக்கும், ஆளுமையார்வமும் மேலும் வளரலாயின. இவ்விரு மனப்பான்மைகளே அதனை 1904-ல் உருசியாவுடன் போர் தொடுக்கத் தூண்டின. இவ்வாறு ஏற்பட்ட ஆங்கில-ஜப்பானிய உறவால் சீன அரசவையில் உருசியாவின் செல்வாக்குக் குறைந்து இவ்விரு நாடுகளின் செல்வாக்கு மேலோங்கத் தொடங்கியது. ஜப்பான் பிரிட்டனேடு உறவு பூண்டு தொலை கிழக்கு நாடுகளில் தனது அரசியல் செல்வாக்கை அதிகரித்து ஆளுமையைப் பெருக்கத் திட்டமிட்டு விட்ட தென்பதனையும் தனக்கு எதிராக அது பிரிட்டனேடு சேர்ந்திருக்கிறது என்பதனையும் நன்குணர்ந்த உருசியா இவற்றிற்கு எதிராக ஃபிரான்சுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. முதலில் உருசியா ஜப்பானையோ பிரிட்டனையோ எதிர்த்துத் தன் ஆளுமையை நிலைநாட்ட வேண்டுமென்று நினைக்க வில்லை. சமைதியாகவே சீனுவிலிருந்து தன்னுடைய படைகளைப் பதினெட்டு மாதங்களில் வெளியேற்றிவிடுவதாக 1902-ல் உருசியா சீனுவோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. ஆனுல், பதினெட்டு மாதங்களுக்குப் பின்பும் தன் படைகளை உருசியா வெளியேற்றிக் கொள்ளவில்லை. மாருகக் கொரியாவின் தலை நகரான செவுலிலும், மஞ்சூரியாவிலும் தன் அரசியல் செல்வாக்கை மிகவிரைவாக வளர்த்துக்கொள்ள முற்பட்டது.

இதன் காரணியமாகத்தான் உருசிய ஜப்பானியப் போர் ஏற்பட்டது. கொரியா, ஜப்பானின் பாதுகாப்பு நாடாவதை இங்கிலாந்து ஒப்புக்கொண்டதென்பதையும், ஒரு நாடு மற்றொரு நாட்டை விழுங்காமல் தூரக்கிழக்கு நாடுகளில் அமைதியை ஏற்படுத்த இவ்வுடன்படிக்கை பயன்பட்டது என்பதையும் அறியலாம். இவ் வுடன்படிக்கையால் ஜப்பானுக்குத் தான் பிற்காலத்தில் பெரு நன்மை விளைந்தது. 1917-ல் ஜப்பான் சீனாவில் தனது உரிமைகளைச் சமைதி முறையில் நிலைநாட்டிக் கொள்வதற்குப் பேராதரவு கொடுத்தது. முதல் உலகப் போருக்குப்பின் பாரிசு நகர உடன் படிக்கையிலும் இங்கிலாந்து ஜப்பானுக்கே பரிந்துரைத்தது.


இந்த உடன்படிக்கை 1922-க்குப்பின் முறித்துக் கொள்ளப் பட்டது. ஜப்பான் தன்னுடைய செல்வாக்கைச் சீனாவில் அதிக மாக ஏற்படுத்திக் கொண்டதால் பிரிட்டனின் சீன வணிக வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் அது தடையாக நின்றதே அதற்குக் காரணியமாகும். இரண்டாவதாக இங்கிலாந்தின் நட்புறவால் ஜப்பான் தொலைகிழக்கு நாடுகளில் அசைக்க முடியாத பெரும் வல்லமை பொருந்திய நாடாக மாறி விட்டது. மூன்றாவதாக, இங்கிலாந்தும், ஜப்பானும் ஒன்று சேர்ந்திருப்பதை அமெரிக்க ஒன்றிய நாடுகள் விரும்பவில்லை. எனவே 1902-1921ஆம் ஆண்டுகளில் வாசிங்டனில் கூடிய மாநாட்டில் தொலை கிழக்கு நாடுகளைப் பற்றிய சிக்கல்கள் ஆயப் படும்போது இங்கிலாந்து ஜப்பானுடன் கொண்ட உறவை முறித்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

## உருசிய-ஜப்பானியப் போர் (1904-'05)

### காரணியங்கள்

உருசியாவுக்கும், ஜப்பானுக்கும் போர் ஏற்படுவதற்கு அடிப் படைக் காரணியம், இவ்விரு நாடுகளும், கீழ்த்திசை நாடுகளில் குறிப்பாக மஞ்சூரியாவிலும், கொரியாவிலும் தங்கள் தங்கள் அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ளப் போட்டியிட்டதேயாகும். சீனாவின் வலுவின்மை இவைகளின் அதிகார வளர்ச்சிக்குத் துணை நின்றது. 1895-ல் ஏற்பட்ட சிமோனோசகி உடன்படிக்கையால் ஜப்பான் தன்னுடைய பேரதிகாரத்தைக் கொரியாவில் நிலை நாட்டியதை யறிவோம். தன்னை இலியோதுங்கிலிருந்து, வெளி யேற்றிய உருசியா 'துறவி' நாடாகிய கொரியாவில் அதிகாரம் செலுத்த முற்படுவதை ஜப்பான் கடுமையாக எதிர்த்தது. ஆனால், உருசியா மே 13, 1896-ல் கொரியாவுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு தன்னுடைய தூதரகத்தை அதனுடைய தலை

# உருசிய-ஜப்பானியப் போர் (1904-1905)



நகரான செவுலில் அமைத்துக் கொண்டது. ஜப்பானும், சிமோனேசகி உடன்படிக்கையின்படி ஒரு தூதரகத்தை ஏற்படுத்திக் கொண்டு அதனைக் காக்க எண்ணூறு வீரர்களடங்கிய ஒரு படையையும் அங்கு நிறுத்தியதை யறிவோம். அதே எண்ணிக்கையுடைய காப்புப்படையொன்றை உருசியாவும் செவுலில் தன் தூதரகத்தைச் சுற்றி நிறுத்தியது. 1897-ல் ஜப்பானைக் கேளாமலேயே உருசியா, கொரிய அரசவையின் அறிவுரையாளராகவிருந்த பிரௌனிங் என்னும் ஆங்கிலேயரை நீக்கிவிட்டுத் தன் நாட்டைச் சேர்ந்த அலெக்சியெஃபு (Alexeieff) என்பவரை அறிவுரையாளராக அமர்த்தியது. இச் செயல் ஜப்பானுக்குச் சின மூட்டுவதாக அமைந்தது. ஆனால், ஜப்பான் தன் உரிமையைக் கொரியாவில் வெளிப்படையாக நிலைநாட்டக் கருதி, ஃபூசான் துறைமுகத்திலிருந்து செவுல் வரையில் ஒரு தொடர்வழி அமைக்க முற்பட்டது. முன்னரே இவ்விரு நகர்களுக் கிடையே ஜப்பான் நாட்டு முதலாளிகளால் அமைக்கப்பட்ட தந்திப் பாதையுமிருந்தது. இவ்வாறு உருசியாவுக்கும், ஜப்பா னுக்கும் கொரியாவில் வளர்ந்துவரும் மனவேற்றுமையை அகற்றுவதற்கும், சிமோனேசகி உடன்படிக்கையின்படி கொரியாவின் தன்னுரிமையைப் பேணிக்காக்க இவ்விரு நாடுகளும் ஏப்பிரல் 1898-ல் தோக்கியோவில் கூடி ஆராய்ந்தன. பேச்சின் முடிவில் இவ்விரு நாடுகளுக்குமிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதற்கு 'நிசிரோசன் ஒப்பந்தம்' என்று பெயர். இவ் வொப்பந்தத்தின்படி கொரியாவின் தன்னுரிமை ஒப்புக்கொள்ளப் பட்டது. தங்களுக்குள் ஒப்புதலின்றி எவரும் கொரியாவுக்குத் தங்கள் படைகளை அனுப்புவதில்லையென்றும், படைத்துறை அறிவுரையாளர்களையும், பொக்கச அறிவுரையாளர்களையும் கூட அனுப்புவதில்லையென்றும் உருசியாவும் ஜப்பானும் ஒப்புக் கொண்டன.

இதற்கிடையில் செருமானிய நாட்டைச் சேர்ந்த இரண்டு பாதிரிமார்கள் சாண்டுங்கில் சீனர்களால் கொல்லப்பட்டனர். அவர்களைத் தண்டிப்பதற்கு செருமனி, பிரசியநாட்டு இளவரசர் என்றியின் தலைமையில், ஒரு படையை சாண்டுங்குக்கு அனுப்பியது. இப் படை சாண்டுங்கின்மீது படையெடுத்துச் செல்லும்போது இதற்குத் தெற்கேயுள்ள வெய்ஃகாய்-வெய் வழியாகச் சென்றது. இத் துறைமுகப்பட்டினம் சீன-ஜப்பானியப் போரின் இறுதியிலேற்பட்ட உடன்படிக்கையின்படி ஜப்பானுக்குக் கொடுக்க வேண்டிய போரிழப்பீட்டுத் தொகைக்குப் பிணையமாக வைக்கப்பட்டதென்பதையறிவோம். செருமனி இதன் வாயிலாக அமைந்துள்ள பெச்சிலி வளைகுடாவைக்

கடந்து கியோச்சோ நிலப்பரப்பைக் கைப்பற்றியது. செருமனியின் இத்தகைய அடாத செயலை அதன் கூட்டு நாடான உருசியா தான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென ஜப்பானிய அரசியற்காரர் ஆயாஃசிக்குக் கூறிவிட்டது. இதற்குப்பின் மார்ச்சு 6, 1898-ல் சீனுவுக்கும், செருமனிக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி கியோச்சோ நிலப்பரப்பை செருமனிக்கு 96 ஆண்டுகளுக்குச் சீன குத்தகைக்குவிட இசைந்தது. இளவரசர் என்றி, கெய்சர் வில்லியத்தை அழைத்து ஆர்தரையும், தாலியென்வானையும் கூடச் சீனுவிடமிருந்து பெற்றுக் கொள்ளும்படி தூண்டினூர். செருமனியின் போக்கைக் கண்டு அதிர்ச்சியுற்ற உருசியா மேற்படி ஈரிடங்களையும் சீனுவிடமிருந்து குத்தகைக்கு எடுத்துக் கொண்டது. இதற்குப் பின் இலியோதுங் தீவக்குறையின் கடைசிப் பகுதியை இவ்விரு நாடுகளும் பிடித்துக் கொண்டன. ஃபிரான்சும், தாங்கிங் நகருக்கும், காண்டன் துறைமுகத்திற்கும் இடையிலிருந்த ‘குவாங்செள’ நிலப்பரப்பைச் சீனுவிடமிருந்து குத்தகைக்குப் பெற்றது. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த பிரிட்டன் ஜப்பானின் இசைவோடு ஆங்காங்கை ஒட்டினுற்போல ஒரு பெரு நிலப்பரப்பையும், ஜப்பானிடம் பிணையமாக வைத்துள்ள வெய்ஃகாய்-வெய் துறைமுகத்தையும் சீனுவிடமிருந்து 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டது. மேலும் உருசியா ஆர்தரிலிருந்து வெளியேறியபின்னரே தன்னுடைய உரிமையை சீனுவில் விட்டுக் கொடுக்க முடியுமென பிரிட்டன் வலியுறுத்தியது. இவ்வாறு மஞ்சு அரசர்களின் வலுவின்மையைப் பயன் படுத்திக்கொண்டு ஐரோப்பிய நாடுகள் தங்களுக்குள் சலுகைச் சண்டை (Battle for concessions) நடத்திக் கொண்டு, சீனுவில் பல விடங்களில் வணிகக் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டன.

இதற்குப் பின்னரே செருமனியின் உட்கருத்து வெளிப்படையாகத் தெரிய வந்தது. உருசியா தன்னுடைய ஆளுமை வெறியைச் சீனுவின் பக்கம் திருப்பிவிட்டதால் இனித் தான் ஐரோப்பாவில் எதிர்ப்பின்றி ஆளுமை பெறலாமென செருமனி எண்ணியது. எனவே செருமனி உருசியாவுக்கும், ஜப்பானுக்குமிடையே போர் மூள்வதை விரும்பி எதிர்பார்த்தது! அவ்வாறு போர் ஏற்பட்டால் ஜப்பான் உறுதியாக வெற்றி பெறுமென்பதையும் செருமனி அறிந்திருந்தது. ஏனென்ருல் செருமானியர் பலர் ஜப்பானியப் படையின் பயிற்சியாளர்களாக இருக்கிருர்களென்பதையும், செருமானியப் படைமுறையை

அடிப்படையாகக் கொண்டே ஜப்பானிய தேசியப்படை அமைக்கப்பட்டதென்பதையும் நாம் அறிவோம்.

1899-ல் உருசியா 'திரான்சைபீரியன் தொடர்வழி'யைத்தான் குத்தகைக்கு எடுத்துள்ள ஆர்தர் துறைமுகம் வரையில் நீட்ட விரும்பியது. அவ்வாறு ஆர்தர் துறைமுகத்திற்குத் தொடர்வழி செல்ல வேண்டுமானால் மஞ்சூரியா வழியாக விளாடிவாசுடாக் சென்று ஆர்தரை இணைப்பதாக அமையும். மஞ்சூரிய இருப்புப் பாதையைச் சீனு உருசியாவின் உதவியுடன் 1896-ல் அமைத்தது. மஞ்சூரியாவிலிருந்து விளாடிவாசுடாக் சென்று மீண்டும் ஆர்தருக்குத் திரும்பும் வழி நீளமாக இருப்பதால் மஞ்சூரியாவிலுள்ள ஆர்பினிலிருந்து, மஞ்சூரியாவின் தலைநகரான முகுதன் வழியாக இலியோயாங் சென்று ஆர்தரை யடைவது சுருக்கமான நேர்வழியாகக் கணக்கிடப்பட்டு, திரான்சைபீரியன் இருப்புப் பாதை நீட்டப்படும் வேலை தொடங்கப்பட்டது. அதே சமையத்தில் உருசியா ஆர்தரில் வலிமையான பாதுகாப்புக் கோட்டைகளை அமைக்கவும் தாலின் வளைகுடாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவும் தொடங்கியது. அவ் வளைகுடாவில் தாலின் என்னுமிடத்தில் ஒரு சிறந்த நகரையும் அமைக்க உருசியா திட்டமிட்டது. இவ்வாறு உருசியா தான் குத்தகைக்கு எடுத்த ஆர்தரையும், தாலின்வான் நிலப்பரப்பையும் அடிப்படையாக வைத்துக்கொண்டும் சீன அரசின் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டும் யாருடைய இசைவுமின்றியும் இருப்புப்பாதை செல்லும் வழியிலுள்ள இடங்களையெல்லாம் தன் ஆளுகைக்குட் படுத்தத் தொடங்கியது. ஆனால், அதன் அதிகார ஆணைகளுக்கு இணங்க கொரியா மறுத்து வந்தது.

இவ்வாறு உருசியா தன் இருப்புப்பாதை நிலையில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது சீனுவில் பல அரசியல் குழப்பங்கள் உருவாகிக்கொண்டிருந்தன. அயல் நாடுகள் தங்கள் நாட்டில் புகுந்து இத்தகைய அடாத செயல்களில் ஈடுபட்டிருப்பதைச் சீனர் அடியோடு வெறுத்தனர். அயலாரையும், கிறித்தவ சமயப் பரப்பூழியர்களையும் நாட்டைவிட்டே விரட்ட வேண்டுமென மக்கள் கொதித்தெழுந்தனர். சீனு ஜப்பானிடம் தோல்வியடைவதற்குக் கரணியமாய் நின்ற மஞ்சுப் பேரரசைச் சீர்திருத்த வேண்டுமென ஒருசாரார் கருதினர். மேற்கத்திய நாகரிகத்தைத் தன் நாட்டில் பரப்பியதால்தான் ஜப்பான் தங்களை வென்றது. அத்தகைய நாகரிகத்தைச் சீனுவிலும் பரப்ப வேண்டும். அதற்காக மேலும் பல அயல் நாடுகளுடன் சீனு தொடர்பு கொள்ள வேண்டுமென்று சீன இளந் தலைமுறையினர் விரும்பினர். இத்தகைய புதுமைகளை வரவேற்று, மேற்கத்தியக்

கருத்துகளைச் சீனுவில் புகுத்தவும், மேனுட்டு முறையில் சீனுவைச் சீர்திருத்தியமைக்க வேண்டுமெனவும் கோரிய சீர்திருத்தவாதிகள் இளஞ்சீனு (Young China) என்ற இயக்கத்தைத் தொடங்கினர். மேலும் இவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்கள் அயலரசர்களாகிய மஞ்சு அரசர்களைச் சீனுவைவிட்டு வெளியேற்ற வேண்டுமென்ருர்கள். தனக்கு நேரும் ஆபத்தை உணர்ந்த சீனப் பேரரசர் இவ்வியக்கத்தாரின் கருத்துகளை மேற்கொண்டு பல புரட்சிகரமான சீர்திருத்தங்களைச் சீனுவில் செய்ய முற்பட்டார். அவரின் புதிய சீர்திருத்தங்களைப் பிற்போக்காளர் எதிர்த்தனர். அத்தகைய புரட்சிகரமான சீர்திருத்தங்களைத் தடுத்து நிறுத்தவும், அயலாரை அடியோடு சீனுவிலிருந்து வெளியேற்றவும், ஓரியக்கம் தோன்றியது. அயலாரை விரட்டுவதற்கென வன்முறைகளைக் கையாளும் பல பயிற்சி நிலையங்கள் ஆங்காங்கே கமுக்கமாக அமைக்கப்பட்டன. அவைகளுள் ஒன்று 'பாக்சர் இயக்கம்' (Boxer Movement) ஆகும். இவ்வகை இயக்கங்களால் உள் நாட்டில் பல்வேறு கலகங்களும், குழப்பங்களும் மக்களிடையே தோன்றின. அயலாரோடு அயலாரான மஞ்சுப் பேரரசர்களையும் வெளியேற்றும் வேலையில் இக் கலகக்காரர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். இவர்களின் கருத்தைத் திசை திருப்ப எண்ணிய 'பழம்புத்தர்' எனப் போற்றப்பட்ட தோவாகர் (Dowager) பேரரசியார் 1898-ல் தாமே கலகக்காரர்களுக்குத் தலைமை தாங்கினுர். இக் கலகக்காரர்கள் அயல் நாட்டவரைத் துன்புறுத்துதல், வெளியேற்றுதல், கொல்லுதல் முதலிய கொடுஞ்செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டனர். இதில் பெரும்பங்கேற்ற பாக்சர் கழகம் கொடுமைக் கஞ்சாமல் செயல்பட்டது. 1900-ல் இக் கலகக்காரர்களின் வெறிச் செயல் உச்சக்கட்டத்தை அடைந்தது. அவ்வாண்டில் ஜப்பான் தூதரகத் தலைவரும், செருமானிய நாட்டு அமைச்சர் பரோன் ஒன்கெட்லரும், மற்றும் அயல் நாட்டவரும் பீகிங் நகரில் படுகொலை செய்யப்பட்டனர். பீகிங்கிலிருந்து இக் கலகம் மஞ்சூரியாவுக்குப் பரவியது. மஞ்சூரியாவிலுள்ள ஆர்பின் என்னுமிடத்திலிருந்து ஆர்தர் துறைமுகத்திற்கு இருப்புப்பாதையமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த உருசியர்களும் தாக்கப்பட்டனர். இதனுல் இவ்விருப்புப்பாதையமைக்கும் பணி பாதியிலேயே துண்டிக்கப்பட்டது. பாக்சர் இயக்கம் தோவாகர் பேரரசியாரைத் தங்களுடைய ஒரே தலைவியாகக் கொண்டது.

இத்தகைய நிகழ்ச்சிகளுக்கிடையில் ஜப்பான் தனது போர் வலிமையைப் பெரிதாக வளர்த்துக் கொண்டு வந்தது. ஆயினும் சீனுவின் உள்நாட்டுச் செய்திகளில் தானே தலையிடக் கூடாதென்றும், மற்ற ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் இதற்கு என்ன

நடவடிக்கைகளை எடுக்கிறதென்றும் ஜப்பான் உன்னிப்பாகக் கவனித்து வந்தது. இறுதியில் ஜூலை, 1900-ல் பல நாடுகளின் படைகளும், கூட்டுப் படையாக இணைந்து 'பன்னாட்டுப் படைகளின் பிகிங் மீட்புப் படையெடுப்பு' (International Peking Relief Expedition) ஒன்றைத் தொடங்கியது. இப் படையில் அமெரிக்காவின் படைகளும் ஐரோப்பிய நாடுகளின் படைகளுமாக 3000-க்கு மேற்பட்ட வீரர்கள் இருந்தனர். ஜப்பான் மட்டும் தனது பெயர் பெற்ற ஐந்தாவது படைப்பிரிவிலிருந்து 22,000 வீரர்களைச் சீனாவுக்கனுப்பித் தன் தூதரகத்தை மீட்டதோடு கலகக்காரர்களின் தலைவியான தோவாகர் பேரரசியாரைத் தலைநகரைவிட்டே ஓடும்படி செய்தது. ஜப்பானியப் படைகளின் இத்தகைய வீரத்தைக் கண்ட அமெரிக்காவும், உருசியாவும், மற்ற ஐரோப்பிய நாடுகளும் வியந்து நின்று வாழ்த்தின. இதனால் ஜப்பானின் புகழ் வானளாவப் பரவியது.

சீனாவில் தோன்றிய இத்தகைய உள்நாட்டுக் கலகங்களால் அயல் நாடுகளுக்கு மேலும் செல்வாக்கு ஏற்பட்டது. மஞ்சூரியாவில் பரவிய கலகத்தை அடக்குவதற்கு ஓரிலக்கம் உருசிய வீரர்கள் மஞ்சூரியாவுக்கு அனுப்பப்பட்டனர். இவ் வீரர்கள் கொரில்லாப்போரில் வல்லுநர்களான மஞ்சூரிய வீரர்களை ஒடுக்கினர். அவர்களால் அழிக்கப்பட்ட ஆர்பினுக்கும், ஆர்தருக்குமிடையில் அமைக்கப்பட்ட இருப்புப்பாதை செப்பனிடப்பட்டு முடிக்கப்பட்டது. இவ்வாறு மஞ்சூரியாவில் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டிவிட்ட உருசியர், மஞ்சூரியாவின் பல பகுதிகளையும், இலியோதுங் தீவக்குறையையும் தங்களுடைய ஆளுமைக்குட்படுத்திக் கொண்டு கொரியாவில் வலுத்துள்ள ஜப்பானியச் செல்வாக்கை ஒழிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். உருசியாவின் ஆளுமை வளர்ச்சியைக்கண்ட ஜப்பானும், பிரிட்டனும் அச்சமடைந்தன. எனவேதான் இவ்விரு நாடுகளும் 1902-ல் ஆங்கில-ஜப்பானிய உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டன. இந்த உடன்படிக்கையை அறிந்த செருமனி இதில் சேரவும், உருசியாவை எதிர்க்கவும் மனமின்றித் தனித்து நின்றது. பிரிட்டனும், ஜப்பானும் ஒன்றிணைந்ததை அறிந்த உருசியா 1902, ஏப்பிரல் 8-ல் சீனாவோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி மஞ்சூரியாவின் பெரும்பகுதியை உருசியா அடைந்தது. சனவரி 13, 1904-ல் ஜப்பான் மஞ்சூரியாவில் உருசியாவுக்கிருக்கும் தனியுரிமைகளைத் தாம் போற்றுவதாகவும், ஆனால், அதே சமையத்தில் தனக்குக் கொரியாவிலிருக்கும் தனியுரிமைகளை உருசியா போற்றிக்காக்க வேண்டுமென்றும் கூறியது. சீனாவையோ அல்லது கொரியாவையோ எந்த அயல் நாடும் தங்களுக்குள்

கூறுபோட்டுக் கொள்ளக் கூடாதென்றும், அவற்றின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்றும் ஜப்பான் அறிவித்தது. இவை களுக்கு உருசியா பிப்பிரவரி 6 வரை எத்தகைய பதிலும் தரவில்லை. அதன்பின் அது தன்னுடைய செல்வாக்கையும், அதிகார வளச்சியையும், மஞ்சூரியாவில் தடுத்து நிறுத்த எவருக்கும் உரிமை இல்லையென்றும், ஆனால், கொரியாவில் ஜப்பான் தன் விருப்பம் போல் உரிமைகள் கொண்டாட முடியா தென்றும் அறிவித்தது. எனவே உருசிய—ஜப்பானியப் போர் தொடங்கப்பட்டது.

பொதுவாக நோக்குமிடத்து உருசியாவுக்கும், ஜப்பானுக்கும் போர் ஏற்படுவதற்கான கரணியங்களை இரு கூறுகளாகப் பிரிக்க லாம். ஒன்று, கொரியா தொடர்பாக இவ்விரு நாடுகளுக்கும் ஏற்பட்ட சச்சரவு, மற்றொன்று மஞ்சூரியா தொடர்பாக இவ்விரு நாடுகளுக்கும் ஏற்பட்ட சச்சரவுகள். இவ்விரு சச்சரவுகளுக்கும் அடிப்படைக் கரணியம், இவ்விரு நாடுகளும் அதிகார மனப் பான்மையை வளர்த்துக் கொண்டதும், அதற்கேற்பப் படை வலிமையைப் பெருக்கிக் கொண்டதுமாகும். உருசியா மஞ்சூரியாவில் அதிகாரத்தை வளர்க்க விரும்பியது. ஜப்பான் இவ்விரு நாடுகளிலிருந்தும் தன் நாட்டு மக்களுக்கு வேண்டிய உணவையும் பிற செல்வங்களையும் பெற விரும்பியது. மஞ்சூரி யாவில் உருசியா திரான்சைபீரியன் இருப்புப்பாதையை அமைத்த செயல் சீனாவின் ஒற்றுமையைக் குலைப்பதும், அதன் உரிமையில் தலையிடுவதுமாகும். மஞ்சூரியாவினால் தன் ஆளுமையை நிலை நாட்டியபின் உருசியாவின் செயல்களைக் கூர்ந்து நோக்கினால் மஞ்சூரியாவைச் சீனாவிலிருந்து பிரிப்பதற்காக அது கையாண்ட முறைகள் நமக்கு நன்கு விளங்கும். தீவினைப் பயனாகச் சீனாவிலேற் பட்ட உள் நாட்டுக் குழப்பங்களுக்குப்பின் சீனா மஞ்சூரியாவில் தன் அதிகாரத்தை வலியுறுத்தி உருசியாவின் நிலம் கவரும் செயலைத்தடுத்து நிறுத்த முடியவில்லை. மஞ்சூரியாவைவிடக் கொரியாவிலேயே அதிக நாட்டமிருந்ததால் ஜப்பானும் பெருகி வரும் உருசியாவின் ஆளுமையை உடனடியாக மஞ்சூரியாவில் தடுத்து நிறுத்தவில்லை. கொரியாவெங்கிலும் ஜப்பான் பொருளாக்க வேலைகளுக்கான செயல்களில் ஈடுபட்டிருந்தது. உருசியப் படைகள் கொரியாவின் காடுகளில் அடிக்கடி புகுந்ததால் ஜப்பான் உருசியாவின் உள்ளெண்ணத்தை ஒருவாறு புரிந்து கொண்டது. 1895-ல் ஏற்பட்ட சிமோனோசகி உடன்படிக்கைக்குப் பின் கொரியா தனது சார்புநாடாக இருப்பதை வலியுறுத்தி, உருசியா அதன் செய்திகளில் தலையிட்டால் தான் வாளாவிருக்க முடியாதென்பதை ஜப்பான் உருசியாவுக்குக் கூறி எச்சரித்தது.

உருசியாவுக்கும், ஜப்பானுக்குமிடையே ஏற்பட்ட போரின் நிகழ்ச்சிகளை அறியுமுன் இவ்விரு நாடுகளுடைய போர்ப்படைகளின் நிலைமைகளையும், மற்றவற்றையும் ஒரு சிறிது காண்போமானால் போரின் தன்மையையும், முடிவையும் ஒருவாறு ஊகிக்கலாம்.

உருசியா தனக்கு மேற்பகுதியிலுள்ள பல நாடுகளுக்கும் ஈடு கொடுக்க வேண்டும்; அதே சமையத்தில் கீழ்த்திசையிலுள்ள ஜப்பானோடும் போரிட வேண்டுமென்ற நிலையில் இருந்தது. அதனைச் சுற்றியுள்ள சுவீடன், செருமனி, ஆசுத்திரியா, அங்கேரி, துருக்கி முதலியவற்றைக் கண்காணிக்கத் தன் நாட்டைச் சுற்றிலும் போர்ப் படைகளை நிறுத்த வேண்டும். எஞ்சிய படையைக் கொண்டுதான் ஜப்பான் மீது படையெடுக்க வேண்டும் என்ற நிலையில் இருந்தது. எனவே தன்னுடைய நாவாய்ப் படை முழுவதையும் பசிபிக் மாகடலுக்கனுப்பி ஜப்பானைச் சுற்றி வளைத்துவிட அதனால் முடியவில்லை. தனக்குத் தெற்கேயுள்ள மஞ்சூரியா முற்றுகைக்குக்கூட ஊரல் மலைகளிலிருந்து சைபீரியாவைக் கடக்கும் இருப்புப் பாதை மூலமாகத்தான் அது செல்ல வேண்டியிருந்தது. அவ்வாறு செல்ல நேர்ந்தால் சீனரும் மஞ்சூரியரும் அதனை எளிதாகத் தாக்கலாம். ஆனால், அதே சமையத்தில் ஜப்பான் உருசியாவின் மீது படையெடுக்க வேண்டுமானால் ஜப்பானியக் கடலைக் கடந்து கொரியா அல்லது இலியோதுங் தீவக்குறை வழியாக முகுதனின் தென்பகுதியிலிருந்து எளிதாகத் தாக்கலாம். இவ்வாறு இயற்கையமைப்பே உருசியா ஜப்பானியப் போரில் ஜப்பானுக்குச் சார்பாக அமைந்திருந்தது.

அடுத்தபடியாக ஜப்பானியரையும், உருசியரையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, உருவத்தில் சித்திரக் குள்ளனையும், குன்றன்ன மாந்தனையும் போல் தோன்றினர். உருசியரின் தகரிப்படையும், குதிரைப் படையும், வேட்டெஃகப் படையும் ஜப்பானியப் படைகளை விடப் பன் மடங்கு உயர்ந்து காணப்பட்டன. உருசியரிடமிருந்த தங்கத்தின் இருப்பு, பன்மடங்கு படைக்கருவிகளை வாங்கிக் குவித்துப் பல ஆண்டுகள் போரிடுமளவுக்கு இருந்தது. உருசியாவின் தங்கத்தைப் பெற்றுக்கொண்டு எத்தகைய ஆயுதங்களையும் வழங்க அமெரிக்காவும், ஐரோப்பாவும் அணியமாக இருந்தன. உருசியன் தன்னை ஓர் ஐரோப்பியனென்று எண்ணி உயர்வு தேடி நின்றான். ஆனால், ஜப்பானியன் ஓர் ஆசியன் என்னும் இழிவோடு காணப்பட்டான். ஆயினும் ஜப்பானியன் தன் நாடு, தன் தேசியம் என்ற உணர்ச்சியில் காற்றிலேறி விண்ணையும் சாடும் ஆற்றலும் பெற்றிருந்தான். ஜப்பானியரிடமிருந்த

பல வகைக் கருவிகளும், படைப் பயிற்சியும் அன்றைய கஸ்டு பிடிப்பின் பொருள்களாயிருந்தன. அவர்களிடமிருந்த வேட்டெஃகங்களும், அவர்களைப் போலவே குட்டையானவை. ஆனால், அவர்கள் குறிபார்த்துச் சுடுவதிலோ போற்றத்தகும் ஆற்றல் வாய்ந்தவர்கள். அன்றைய உலகின் மிகச் சிறந்த எஃகு வகைகளை மேசிப் புரட்சியால் வளர்த்துக் கொண்ட ஜப்பானியரின் புதிய வேட்டெஃகங்கள் யாவும் இத்தகைய எஃகால் செய்யப்பட்டவை. கடற்போரில் ஜப்பானியரைத் தங்களையும் விஞ்சும் வண்ணம் பிரிட்டானியர் அளித்த பயிற்சியால் ஜப்பானியர் பசிபிக் மாகடலை ஒரு மீன் பிடிக்கும் குளமாக எண்ணினர்.

உருசியநாடு மாபெரும் நாடு; மக்கள் தொகையோ ஜப்பானை விட அதிகம்; போர்த்தளவாடங்களோ ஜப்பானைவிடப் பன் மடங்கு அதிகம். இவை யாவற்றுக்கும் மேலாக 'ஐரோப்பியன்' என்ற நிறச்செருக்கு; எதிர்க்கப்பட வேண்டிய ஜப்பானோ சித்திரக் குள்ளர்களின் சிறு சிறு தீவுகள்; எனவே தாம் எளிதில் வென்று விடலாமென்று உருசியா எண்ணியதில் வியப்பொன்றுமில்லை. ஆனால், புனிதப் பேரரசரைத் தங்களின் தலைவராகக் கொண்டு வீரத்தின் வித்துக்களாய் விளங்கி நிற்கும் சாமுராய்களையும், தேசிய உணர்ச்சி கொண்டு திரண்டு நிற்கும் ஜப்பானியக் குடிமக்களையும், மேசிப் புரட்சியாலேற்பட்ட புதுமையின் ஆக்கங்களையும், ஊழலே உருவான, பேராசைக்குப் பெயர் போன, செல்வம் சேர்ப்பதையே கருத்தாகக் கொண்டுள்ள உருசிய அரசியலதிகாரிகளால் வெல்ல முடியாதென்பது மனநூல் தரும் முடிவு!

உருசியா தன்னுடைய வலிமையையே பெரிதாகக்கருதிக் கொண்டு, ஜப்பானில் கிளர்ந்துள்ள புதிய வலிமைகளை மேலெழுந்தவாரியாகக்கூட அறிந்து கொள்ள விரும்பவில்லை. ஆனால், மிகாடோ நூற்றுக்கணக்கான ஒற்றர்களை உருசியாவுக்குள் ளனுப்பி அதன் படையமைப்பையும், வலிமையையும் மற்றவற்றையும் மிகத்துல்லியமாக அறிந்து வைத்திருந்தார். ஜப்பானைத்தாழ்வு மனப்பான்மையோடு நோக்கிய ஓர் உருசிய ஒற்றன் ஜப்பானின் படைவலிமையைப்பற்றி விளாடிவாசுடாக்கில், 'ஓர் உருசிய வீரன் மூன்று ஜப்பானிய வீரனுக்குச் சமம்' எனக் கூறினன். ஆனால், அதே சமையத்தில் உருசியத் தொழில் நுட்ப நுண்ணறிவாளர்கள் சிலர் ஜப்பானிய இளம் பொறியாளர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும் தங்களின் முதிய அதிகாரிகளைவிடச் சிறந்து காணப்படுகிறார்களென்பதை

வரையறுத்துக் கூறினர். ஜப்பானியர் மிகக்குறைந்த கருவிகளைக் கொண்டு, மிகக்குறுகிய காலத்தில் மிகப்பெரிய ஆக்கங்களைச் செய்து முடித்தனர். இதனால்தான் இவர்கள் சீனாவின் மீது போர் தொடுக்கும் போது யாலு ஆற்றுச் சண்டையில் ஒரு வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தினார்கள். உருசியர், சாமுராய்கள் இரண்டு கைகளிலும் இரண்டு வாள்களையேந்தி ஒன்றால் எதிரியைத்தாக்க முனைவர்; மற்றொன்றால் தாங்களே தற்கொலை செய்து கொள்வரென்னும் எண்ணத்தையுடையவர்களா யிருந்தனர். மேலும் ஜப்பானியருக்கு இருப்பது தேசியப்படை மட்டும்தானென்றும், அதைத்தவிர பாதுகாப்புப் படைகளோ, ஆயத்தப் படைகளோ இல்லையென எண்ணினர். ஆனால், பிப்பிரவரி, 1904-ல் ஜப்பானியரிடம் 8,50,000 போர்க்களப் பயிற்சி பெற்ற வீரர்களும், 42,50,000 போர்ப்பயிற்சி பெற விருக்கும் வீரர்களுமிருந்தார்கள். 1903-ல் தங்கள் நாவாய்ப் படையின் எண்ணிக்கையைப் பெரிதாகக் கொண்டு அதனை எதிர்த்து ஜப்பானியருக்கு கொரிய வளைகுடாவுக்குள் நுழையக் கூட துணிச்சலிராதென உருசியர் எண்ணினர்.

1904-ல் இருதரப்பிலுமிருந்த நாவாய்ப்படையிலிருந்த எண்ணிக்கைகளையும், கருவிகளையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானால், உருசியா ஜப்பானைப்பற்றிக் கொண்டுள்ள தாழ்வு மனப்பான்மை தவறானதென்பதை உணரலாம். ஜப்பானின் நாவாய்ப்படைத் தங்குதளங்களாக மஞ்சள் கடலில் ஒன்றும், ஜப்பான் கடலில் ஒன்றுமாக இரண்டே இரண்டுதானிருந்தன. மூன்றாவதாக, இஃது சீனாவிடமிருந்து குத்தகைக்குப் பெற்றிருந்த ஆர்தர் துறைமுகத்தில் சிறந்த காவல் கோட்டையும், நாவாய்ப் படைப்பணிமனையுமிருந்தன. ஆனால், ஆர்தர் துறைமுகத்திற்குள் பெரிய போர்க்கப்பல்கள் செல்ல முடியாது. அடுத்தபடியாக ஜப்பான் கடலிலுள்ள விளாடிவாசுடாக் கப்பல் தளத்திற்குள் போர்க்கப்பல்கள் சென்று வர ஏந்துகள் இருந்தனவேயெழிய நாவாய்ப்படைப் பணிமனைக்குத் தகுதியற்றதாயிருந்தன. குளிர் காலத்தில் இஃது பனியால் மூடப்பட்டுவிடும். ஜப்பானுக்குச் சொந்தமான நாவாய்படைத் தளங்களில் மிகச்சிறந்தவை நான்காகும். அதிலொன்று தோக்கியோ வளைகுடாவிலுள்ள யோகோசுகா (Yokosuga) ஆகும். இஃது தலைநகருக்கு மிக அண்மையில் பசிபிக்மாகடலில் அமைந்திருக்கிறது. இங்கிருந்து ஐந்நூறு கல் தொலைவில் அமைந்துள்ள குரி (Kure) என்பது ஜப்பானின் நாவாய்ப்படையின் மிக முகாமையான தங்கு தளமாகும். குரிக்கும், பசிபிக் மாகடலுக்குமிடையில் சிக்கொக்குத் தீவிருக்கிறது. ஒன்சுத்தீவின் வடகரையில் ஜப்பான் கடலை

நோக்கியவாறு மைந்சுரு (Maidzuru) எனும் மூன்ருவது நாவாய்த் தளம் அமைந்திருக்கிறது. நான்காவது நாவாய்த்தளம் நாகசாகிக்கு வடக்கில் குயூசுத்தீவின் மேற்குக் கரையிலமைந் துள்ள சாசேபோ (Sasebo) ஆகும். நாவாய்த்தளம் கொரியத் தீவக்குறையின் தென்முனையை நோக்கி அமைந்துள்ளது. இதற்கும், கொரியாவுக்குமிடையில் கொரிய நீரிணைப்பு இருக்கிறது. இவற்றைத்தவிர சிறிய போர்க்கப்பல்களையும் தகரிப்படகுகளையும் நிலையாக ஜப்பானைச் சுற்றிலும் நிறுத்தப் பட்டுள்ள பல துறைமுகங்கள் இருந்தன. விளாடிவாசுடாக்குக்கு நேரெதிராக ஒன்சுத்தீவையும், ஒக்கைதோத் தீவையும் பிரிக்கும் துசுகாரு (Tsugaru) நீரிணைப்புக்கண்மையிலிருக்கும் ஒமிநோ (Ominato) துறைமுகமாகும். இதே போன்ற மற்ருெரு தளம் கொரிய நீரிணைப்பிற்கு நேராகவுள்ள தகேசிகி (Takeshiki) என்னுமிடமாகும். இவற்றைத்தவிர ஃபார்மோசாத் தீவுக்கும் சீனவுக்குமிடையிலுள்ள பெசுகடோரிசு (Pescadores)த் தீவில் மாகியூ (Makyu) என்னுமிடத்தில் அமைந்திருந்த மற்ருெரு நாவாய்த்தளம் ஜப்பானின் தொலை நோக்காடியாகப் பயன்பட்டது. இத் தளங்களிலெல்லாம் ஜப்பான் மிக விரைந்து செல்லும் பெரும் போர்க்கப்பல்களையும், சிறு போர்க்கப்பல்களை யும், தகரிப்படகுகளையும் வைத்திருந்தது. இவற்றில் பெரிய தகரிகளையும், கண்ணிவெடிகளையும் நாவாய்ப் பொருள்களையும் அவற்றில் நன்கு தேர்ச்சி பெற்ற தொழில் வல்லுநர்களையும் அணியமாக வைத்திருந்தது. எனவே இத் தளங்கள் தாக்கும் தளங்களாகவும், காக்கும் தளங்களாகவும் பயன்பட்டன. நடுக்கடலில் ஜப்பானியக் கப்பலொன்று பழுதடைந்தால் மிக விரைந்து சென்று, அதனைப் பழுதுபார்த்துப் புதுப்பித்து ஓட வைக்கும் உதவிக்கப்பல்களும் இருந்தன; வல்லுநர்களும் அணியமாக இருந்தனர். எனவே குறைந்த எண்ணிக்கையில் கப்பல்களைப் பெற்றிருந்தாலும், இத்தகைய முறைகளால் நிறைந்த கடலாற்றலை ஜப்பான் பெற்றிருந்ததென்பதை அறிகிருேம்.

1904, பிப்பிரவரிக் கணக்குப்படி உருசியாவிடம் ஏழு பெரிய போர்க்கப்பல்கள் இருந்தன. ஆனல், ஜப்பானிடம் பிரிட்டானிய முறையில் கட்டப்பட்ட ஆறு போர்க்கப்பல்களே இருந்தன. உருசியாவிடம் நான்கு படைக் கப்பல்களும் ஐந்து முதல்தரக் கப்பல்களும், இரண்டு மூன்ருந்தரக் கப்பல்களுமிருந்தன. ஆனல், ஜப்பானிடம் நான்கு மூன்ருந்தரப் படைக் கப்பல்களும், நான்கு காப்புக் கப்பல்களும், எட்டு முதல்தரக் கப்பல்களும், பன்னிரண்டு இரண்டாந்தரக் கப்பல்களுமிருந்தன. உருசியாவிடம் இருபது

அழிப்பான்களிருந்தன. ஆனால், ஜப்பானிடம் பத்தொன்பது அழிப்பான்களிருந்தன. ஆயினும் இவை மிக ஆற்றல் வாய்ந்த பிரிட்டானிய மாதிரி அழிப்பான்களாகும். இவற்றைத்தவிர ஜப்பானிடம் எண்பத்தைந்து போர்ப்படகுகள் இருந்தன. ஆனால், உருசியாவிடம் பதினேழு போர்ப்படகுகளே இருந்தன. 1894-ல் ஜப்பான் சீனவுடன் போரிடும்போது பெற்றிருந்த நாவாய்ப் படையைவிடப் பத்தாண்டுகளில் எவ்வாறு பெருகியுள்ள தென்பதை ஒப்பிட்டு நோக்கலாம். சீனப்போரில் கிடைத்த பெருந்தொகையை மேசி மாமன்னரும், அவருடைய அமைச்சர்களும் இயந்திரப் பெருக்கத்துக்கும், பாதுகாப்புப் படைப்பெருக்கத்துக்கும் செலவிட்டதின் பயனே ஜப்பான் இன்று மாபெரும் நாடான உருசியாவை எதிர்க்குமளவுக்கு ஆற்றல் வாய்ந்து நின்றது. இதனால்தான் கொரியாவிலும், மஞ்சூரியாவிலும் உரிமை கொண்டாடி ஜப்பான் உருசியாவை எதிர்த்து நின்றது.

1904-ல் ஜப்பானின் கடற்படைத் துறையிலிருந்த இரு பெருங்குறைகள் தன்னிடத்தில் ஆயத்தக் கப்பற்படைகளை வைத்திராததும், சிறந்த படைத்தளபதிகளைத் தானே பயிற்று வித்துக் கொள்ள முடியாததுமாகும். உருசியாவுக்கு இவ்விரு குறைகளுமில்லை. ஐரோப்பியக் கடல்களிலெல்லாம் உருசியாவின் போர்க்கப்பல்கள் இருந்தன. நினைத்தவுடனே தானே கப்பல்களைக் கட்டிக்கொள்ளவும், தளபதிகளைத் தானே பயிற்றுவித்துக் கொள்ளவும் முடிந்தது. ஆனால், ஐரோப்பியக் கடல்களிலிருந்து நினைத்தவுடனே மஞ்சள் கடலுக்குள்ளும் ஜப்பான் கடலுக்குள்ளும் தன் கப்பல்களைக் கொண்டு வருவது அதற்குக் கடினமாயிருந்தது. உருசிய கப்பற்படைத் தளபதிகளும், வீரர்களும் தீரமிக்கவர்கள். அதைப்போலவே பிறவி மீகாமன்க ளான ஜப்பானியரும் சிறந்த வீரர்களாகவும் எத்தகைய புதிய கப்பலையும் இயக்கக் கூடியவர்களாகவும் இருந்தனர். மொத்தத்தில் இவ்விரு நாடுகளின் கப்பற்படையை ஒப்பிட்டு நோக்கும்போது உருசியாவே அதிகவலுவுடன் விளங்கியது. உருசியாவின் கப்பற்படை விளாடிவாசுடாக்கிலிருந்து ஆர்தர் துறைமுகம்வரை வரிசையாக ஜப்பானியக்கடலில் நிறுத்தப் பட்டிருந்தது. ஜப்பானும் தூசுகாருவிலிருந்து தெற்கே குயூசுத் தீவுவரை தன் கடற்படையை அணியமாக நிறுத்தி வைத்திருந்தது.

நிகழ்ச்சிகள்

விளாடிவாசுடாக் உருசியாவின் கிழக்குக் கரையிலுள்ள ஒரு கப்பல் தளமாயினும் பெரிய போர்க்கப்பல்கள் தங்க ஏந்துக

ளற்றது என்பதையும், குளிர்காலத்தில் பனிபுதைந்து மூடப்பட்டு விடுமென்பதையும் நாம் அறிவோம். இதனை நன்கறிந்த ஜப்பான் உருசியாவுக்கும், ஜப்பானுக்கும் பேச்சுகள் நடந்து கொண்டிருக்கும்போது கொரியாவின் தலைநகரான செவுலை முற்றுகையிட்டு ஆர்தர் துறைமுகத்தைத் தாக்கத்திட்டமிட்டது. 1906, பிப்பிரவரி 6ஆம் நாள் கடற்படைத்தளபதி உரியூ (Uriu), தன் தலைமையில் நான்கு தரைப்படைப் பிரிவுகளையும், ஒரு பெரிய கப்பலையும், இரண்டு சிறிய கப்பல்களையும், மூன்று சிறிய பாதுகாப்புக் கப்பல்களையும், இரண்டு தகரிப் படகுகளையும் செவுலுக்கண்மையிலுள்ள செமுல்போ துறைமுகத்திற்கு நடத்திச் சென்றார். நான்கு நாள்களுக்குள் இப்படை இத்துறைமுகத்தை உருசியாவிடமிருந்து மீட்டுக்கொண்டு தொடர்வண்டி மூலம் கொரியாவின் தலைநகரான செவுலை யடைந்தது. செவுலில் நடைபெற்ற மூன்றும் நாள் போரில் உருசியப்படை தோற்கடிக்கப்பட்டு ஜப்பானியர் கைக்கு வந்தது. ஆனால், மீண்டும் செமுல்போ துறைமுகத்தை உருசியர் கைப்பற்றிக் கொண்டனர். செமுல்போவில் தங்கியிருந்த உருசியர்கள் தலைநகரான செவுலைக்கைப்பற்ற முயன்று கொண்டிருந்தனர். இதற்கிடையில் மற்றொரு ஜப்பானியப் படைத்தளபதியான தோகோ (Togo) ஆர்தர் துறைமுகத்தைக் கைப்பற்ற முனைந்தார். பிப்பிரவரி 8, 1904-ல் நள்ளிரவில் ஆர்தர் துறைமுகப்பட்டினம் தாக்கப்பட்டது. மறுநாள் காலைவரை போர் தொடர்ந்து நடந்தது. இரு தரப்பிலும் சேதங்கள் மாறிமாறி ஏற்பட்டன. போர் தொடர்ந்து ஆறு நாள்கள் நடைபெற்றது. ஆறும்நாள் விளாடிவாசுடாக்கிலிருந்து போர்ப்படைகள் வந்து சேர்ந்தன. ஆயினும் ஆர்தர் துறைமுக முற்றுகையும், போரும் முடிவுறவில்லை. ஆர்தர் துறைமுகத்தி லிருந்து உருசியப்படைகள் கொரியாவின் மேலைக்கடற்கரை யிலுள்ள செவுலுக்குச் சென்ற வண்ணமிருந்தன. எனவே தளபதி தோகோ இரண்டுவகைப் பணிகளை ஓரே சமையத்தில் ஏற்க வேண்டியதாயிற்று. ஒன்று, ஆர்தர் துறைமுகத்திலிருந்து செவுலுக்குச் செல்லும் படைகளைத் தடுப்பது; மற்றொன்று ஆர்தர் துறைமுகத்தையே தாக்கிக் கைப்பற்றுவது. பிப்பிரவரி 25ஆம் நாள் தோகோ ஆர்தரைத் தகரி வைத்துத் தாக்கினார். ஆயினும் அஃது வீழ்ந்தபாடில்லை. மார்ச்சு 15ஆம் நாள் தளபதி கைமா முராவை (Kaimamura) ஐந்து படைக் கப்பல்களுடனும் இரண்டு சிறிய கப்பல்களுடனும் விளாடிவாசுடாக்கைத் தகரி வைத்துத் தாக்கியழிக்கும்படித் தளபதி தோகோ அனுப்பினார். விளாடிவா சுடாக் தாக்கப்பட்டது; ஆனால், கைப்பற்றப்படவில்லை.

ஆர்தர் துறைமுக முற்றுகையை விடுவிப்பதற்காக மக்காரஃப்பு (Makharoff) என்னும் வீரமிக்க உருசியத் தளபதி தலைமை யேற்ருர். இவருக்கும், ஜப்பானியத் தளபதி தோகோவுக்கும் தொடர்ந்து போர் நடைபெற்றது. ஏப்பிரல் 13-ல் ஜப்பானியத் தளபதி தோகோவின் தாக்குதல்களால், உருசியக் கப்பலொன்று நீரில் மூழ்கி அமிழ்ந்தது; தளபதி மக்காரஃப்பும் நீரில் மூழ்கி இறந்தார். இதனையடுத்து இரண்டு நாள்களுக்குள் உருசியக் கப்பல்களும் தகரிகளால் தகர்க்கப்பட்டன. ஆயினும் ஆர்தர் துறைமுகத்திற்குள் ஜப்பானியரால் நுழைய முடியவில்லை. இதே போன்ற நிலையே ஜப்பானியருக்கு விளாடிவாசுடாக்கிலும் இருந்தது.

இவ்வாறு ஜப்பான் ஆர்தரிலும், விளாடிவாசுடாக்கிலும் ஒரே சமையத்தில் கடற்போர் நடத்திக் கொண்டிருக்கும்போது ஜப்பானியத் தரைப் படைகள் செவுலில் போரிட்டுக் கொண்டிருந்தன. இச் சமையத்தில் ஜப்பானியரிடம் 2,57,700 தரைப் படை வீரர்களும், 13,130 குதிரைப்படை வீரர்களும், 13,430 இயந்திரப் படை வீரர்களும் இருந்தனர்; 870 தகரிகளுமிருந்தன. இவற்றைத் தவிர 4,00,000 பயிற்சிபெற்ற வீரர்கள் ஆயத்தமாக வைக்கப் பட்டிருந்தனர். இப் படைகள் கணப்பொழுதில் செயல்படும் முறையிலும், தோல்விக்கும், இழப்புக்கும் பின்னடையா முறையிலும் பழக்கப்பட்டிருந்தன. இவற்றிற்கெல்லாம் மேலாக ஜப்பான் மிகச் சிறந்த மருத்துவப் படையைப் பெற்றிருந்தது. எனவே நோயும், ஏதங்களும் எளிதில் தடுக்கப்பட்டன. இதே சமையத்தில் உருசியாவிடம் பதினேரிலக்கம் பயிற்சி பெற்ற படை வீரர்களும், 27,57,000 கருவிப்படை வீரர்களும் 6,84,000 தேசியப்படை வீரர்களுமிருந்தனர். ஆகமொத்தம் 45,41,000 தரைப்படை வீரர்கள் உருசியாவிடமிருந்தும், ஜப்பானுடன் போரிடுவதற்கு மிகக் குறைந்த படைவீரர்களே அனுப்பப் பட்டனர். மீதிப் படைகள் மற்ற ஐரோப்பிய எதிரிகளைக் கண் காணிக்க மேற்கு உருசியாவில் நிறுத்தப் பெற்றிருந்தன. சீனவும், பிரிட்டனும் உருசியாவின் எதிரிகளாகும். செருமனி, ஆசுத்திரியா, அங்கேரி, இத்தாலி ஆகிய நான்கும் கூட்டுறவு கொண்டிருந்தன. ஃபிரான்சு பிரிட்டனுடன் சேர்ந்து கொண்டிருந்தது. சுவீடன், ஃபின்லாந்து சச்சரவில் உருசியாவுடன் பகைமை கொண்டிருந்தது. எனவே உருசியாவுக்கு உடந்தையாக எந்த நாடும் உதவாதென்பது வெளிப்படை. அதே சமையத்தில் பிரிட்டனே, சுவீடனே அல்லது வேறு நாடுகளோ உருசியாவைத் தாக்கும் வாய்ப்பிருந்தது. இதற்காகத்தான் உருசியாவின் மிகச் சிறந்த படைப்பிரிவுகள் உருசியாவிலேயே நிறுத்தப்பட்டு விட்டன.

ஏறக்குறைய பத்திலக்கம் தரைப்படை வீரர்களே பைக்கால் ஏரியைக் கடந்து கிழ்த்திசைக்கு வந்தனர். ஜப்பானுடன் நடந்த போரில் 196 தகரிகளைத்தாம் உருசியர் பயன்படுத்தினர். உருசியப் படை பாதுகாப்புப் படை, போர்ப் படை என இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆர்தரிலும் விளாடிவாசுடாக்கிலும் இவ் விருவகைப் படைகளுமிருந்தன. மற்றொரு பிரிவு மஞ்சூரியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தது. உருசியப் படைகள் இலியோதுங் தீவக் குறையிலிருந்து கொரியா, முகுதன் வரையிலும் நிறுத்தப்பட்டிருந்தன. அங்கிருந்து யாலு ஆற்றுக்குச் செல்லுவதற்கும், மஞ்சூரியக் கணவாய்களின் வழியாக முன்னேறித் தாக்குவதற்கும் படைகள் அணியமாய் நின்றன. ஆர்தர் துறைமுகத்துக்கும், மாசுக்கோவுக்குமிடைப்பட்ட தொலை 5500 கற்களாகும். ஆயினும் உருசியாவின் போரமைச்சர் இளவரசர் கில்கோஃப்பு (Khilkoff), தன் திறமையால் செய்தித் தொடர்பும், படையுதவியும், படை நடமாட்டமும் கொரியாவில் தொடர்ந்திருக்கச் செய்தார். பைக்கால் ஏரியைக் கடந்தால் மூன்று தொடர் வண்டிகள்தான் இருந்தன. பழுதுபார்க்கும் பணி மனைகளோ, தவசக் கிடங்குகளோ அதற்கப்பால் அமைக்கப்படலாம்.

உருசியாவின் தரைப்படையும், குதிரைப்படையும் சிறந்த பயிற்சி பெற்றிருந்தாலும், தகரிப்படையினர் சுறுசுறுப்பாகச் செயல்படும் முறையை அறிந்திலர். மேலும் இப் படைகளுக்குத் தங்கள் அரசர் சார் மன்னரின்பால், ஜப்பானியருக்கு மிகாடோவின் மீது இருப்பது போன்ற அரசபத்தி இல்லை. பைக்கால் ஏரிக்கு மேற்கேயுள்ள உருசியருக்குப் போரில் விருப்பமில்லை. ஆனால், ஜப்பானியரோ தங்கள் உழைப்பால் தான் தங்கள் நாடு முன்னேற வேண்டும் என அறிந்து அதற்கு எத்தகைய ஈகமும் செய்ய அணியமாயிருந்தார்கள்.

ஜப்பானின் தரைப்படை கொரியாவின் தலைநகரான செவுலை முற்றுகையிட்டதைக் கண்டோம். ஆனால், தளபதி தோகோ ஆர்தர் துறைமுகத்தை முற்றுகையிட்டு அதைப் பன்முறை தாக்கிக் கைப்பற்ற முடியாமல் தவித்ததால் ஃபூசான், செமுல்போ, சினும்போ முதலிய துறைமுகப்பட்டினங்களின் மூலம் ஆர்தர் துறைமுகத்தைத்தாக்க ஜப்பானியப்படைகள் தேவைப்பட்டன. ஆனால், தரைப்படைகள் செவுலிலும் மற்ற இடங்களிலும் தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருந்ததால் ஆர்தர் துறைமுகத்தில் மொத்தமாகக் குவிய முடியவில்லை. தரைப்படைத் தளபதி குரோகி (Kuroki)யின் தலைமையில் சென்ற முதற்படைப் பிரிவு செவுலிலிருந்து 150 கல் வடக்கேயுள்ள வடகொரியாவின் முக்கிய நகரான பிங்யாங்கை (Pingyong)க்

கைப்பற்றியது. இதற்குப் பிறகு தளபதி குரோகி தன் படைகளை யாலு ஆற்றங்கரையில் மிச்செங்கோவின் (Mishchenko) கீழிருந்த உருசியப் படைகளைச் சந்திக்கச் சென்றார். இதற்கிடையில் தளபதி குரோபாத்கின் (Kuro Patkin) உருசியத் தரைப்படைகளின் பெருந் தலைவராக உருசியாவிலிருந்து ஆர்பின் வந்து சேர்ந்தார்.

குரோகி தன்னுடைய படைகளை இலியோதுங் தீவக்குறையின் முகத்திற்குச் செல்லும்படி உத்தரவிட்டார். இங்கிருந்து கொண்டு ஆர்தர் துறைமுகத்துக்கும், உருசியப் படைகளுக்கு முள்ள தொடர்பைத் துண்டித்தார். இவ்வாறு இருதரப்புப்படைகளும் யாலு ஆற்றங்கரையில் போரிட அணியமாய் நின்றன. இச் சமையத்தில் ஜப்பானிடம் 40,000 படைவீரர்கள் இருந்தனர்; 128 தகரிகளுமிருந்தன. உருசியாவிடம் 20,000 படைவீரர்கள் இருந்தனர்; 62 தகரிகளுமிருந்தன. இவ்விரு படைகளும் யாலு ஆற்றின் துணையாறான அய்ஃகோ (Ai-Ho)வில் மோதநெருங்கின. இந்த ஆறு 270 அடி அகலமும், 4 அடி ஆழமும் உள்ளது. ஜப்பானியப் போர்க் கப்பல்கள் இவ்வாறு யாலு ஆற்றோடு கலக்குமிடத்தில் நிறுத்தப்பட்டன. உருசியப் படைகள் யாலு ஆற்றங்கரையில் நிறுத்தப்பட்டன. முதலில் ஜப்பானியப் படைகள் தாக்குதலைத் தொடங்கின. கிஞ்தேய், இக்கியூரி ஆகிய சிறு தீவுகளை ஜப்பான் கைப்பற்றிக்கொண்டு உருசியாவின் புறக்காவல் படைகளைப் பின்னடையச் செய்தது. இதற்குப்பின் ஜப்பான் ஒசேகித்தீவு, புலிக்குன்று, சுகோதைத்தீவு, அண்டுங்கு முதலியவற்றை ஒன்றன் பின்னொன்றாகக் கைப்பற்றிக் கொண்டே சென்று உருசியப்படைகளைத் தோற்கடித்தது. இவ்வாறு உருசிய-ஜப்பானியப் போரில் ஜப்பான் முதல் கட்டத்திலேயே யாலு ஆற்றுச் சண்டையில் உருசியாவைத் தோற்கடித்தது. இச் சண்டையில் ஆயிரம் ஜப்பானியரும், மூவாயிரம் உருசியரும் கொல்லப்பட்டனர். ஜப்பானியத் தரைப் படைத் தளபதி குரோகி வெற்றிப் பெருமிதத்தில் மிதந்தார். ஐரோப்பியப் படைகள், ஆசியப்படைகளால் இவ்வாறு தோற்கடிக்கப்பட்டதை அமெரிக்காவும், மற்ற ஐரோப்பிய நாடுகளும் மனக்கசப்புடன் நோக்கின. ஜப்பானின் முதல் வெற்றியே உருசியப் போரில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம். இதற்குப்பிறகு இலியோதுங் தீவக்குறை போர்க்களத்திலும், முகுதன் போர்க்களத்திலும் ஜப்பானியர் கண்ட வெற்றிகள் யாலு ஆற்று வெற்றியைப் போலவே சிறப்புடன் அமைந்தன.

கடலாளுமையில் ஆசிய நாடுகளைவிட அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் இவற்றுக்கெல்லாம் மேலாகப் பிரிட்டனும் அக் காலத்தில் சிறப்புற்று விளங்கின. ஆனால், கடல்

வல்லமையில் தானும் சிறப்புற்று விளங்க முடியுமென்பதை ஜப்பான் இந்நாடுகளுக்கு ஆர்தர் துறைமுக வெற்றியால் எடுத்துக் காட்டியது. தரைப்போர்களில் வெற்றி பெற்ற ஜப்பான் எளிதில் ஆர்தர் துறைமுகத்தைக் கைப்பற்ற முடியவில்லை. கடற்படைத் தளபதி தோகோ தொடர்ந்து முற்றுகையை நடத்தினர். ஜப்பானியப் படைகள் செமுல்போ, சினம்போ முதலிய இடங்களில் வந்திறங்கின. சினம்போ ஆர்தர் துறைமுகத்திற்குக் கிழக்கேயுள்ளது. இவ்வாறு நெருங்கிக் கொண்டிருந்த ஜப்பானியப் படைகளை ஆர்தர் துறைமுகத்தளபதி சுதோசல் (Stoessel) என்பவரால் தன்னிடமுள்ள முப்பதாயிரம் படைவீரர்களைக் கொண்டு உடனே தாக்க முடியவில்லை. ஆர்தர் துறைமுகத்திற்கும் இலியோயாங்குக்குமிடையிலிருந்த தளபதி சுதாக்கல்பெர்க் (Stakelberk) என்பவராலும் ஜப்பானியப் படையை உடனே தாக்க முடியவில்லை. ஏனெனில் இலியோயாங்கைவிட்டு வெளியேறி ஜப்பானியப் படையைத் தாக்கினாலும், ஆர்தரைவிட்டு வெளியேறிப் போரிட்டாலும், இவற்றுக்குப் பின்னல் நிறுத்தப்பட்டுள்ள ஜப்பானியப்படைகள் பிடித்துக் கொள்ளுமென அஞ்சி, இவ்விடங்களைக் காப்பதிலேயே உருசியப்படைகள் கருத்தாயிருந்தன.

ஆயினும் இடையிடையே ஏற்பட்ட மோதலில் நான்கு ஜப்பானியச் சிறு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இதற்குப்பின் மற்றெரு ஜப்பானியக் கடற்படை கொரியத்தீவக்குறையின் மேற்குக்கரைக்கு வந்து சேர்ந்தது. இதற்குப்பின் தளபதி ஒகு (Oku), துணைத்தளபதி கவாமுரா (Kawamura), தளபதி நொத்சு (Nodzu) முதலிய ஜப்பானியத் தளபதிகள் ஆர்தர் துறைமுகத்தைக் குறிவைத்து யாலு ஆற்றின் முகத்திலிருந்து வரிசையாக நின்றனர். இதைப்போலவே உருசியர்களும் துறைமுகத்தைக்காக்க அணிவகுத்து நின்றனர். திடீரென ஏற்பட்ட மோதலில் 1416 உருசியர்கள் காயமுற்றும், இறந்தும் போயினர். ஜப்பானியர் 82 தகரிகளையும், 10 இயந்திரக் குண்டுகளையும் இழந்தனர். இதற்குப்பின் போர் மஞ்சூரியாவின் தலைநகரான முகுதனில் தீவிரமடைந்தது. உருசியத்தளபதி குரோபாத்கின் 36,000 தரைப்படை வீரர்களையும், 6000 குதிரைப் படைவீரர்களையும், 120 தகரிகளையும் முகுதனில் அணிவகுத்து நிற்கச் செய்தார். ஜப்பானியத் தளபதிகள் குரோகி, நொத்சு முதலியோர் முகுதன் போய்ச்சேர்ந்தனர். முகுதனில் நடந்த கடும் போரில் உருசியா படுதோல்வி அடைந்தது.

ஆர்தர் துறைமுக முற்றுகை இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. ஜப்பானியப் படைகள் துறைமுகத்திற்கு மிக

அண்மையிலுள்ள பல இடங்களைக் கைப்பற்றிக் கொண்டன. இத் துறைமுகம் ஜப்பானியரால் முற்றுகையிடத் தொடங்கி ஆறு மாதத்திற்குள் காயமுற்றவர்களும், கொல்லப்பட்டவர்களும் அறுபதாயிரம் ஜப்பானியராவர். இறுதி வரையில் இம் முற்று கையைத் தொடர்ந்து நடத்திவரும் ஜப்பானியக் கடற்படைத் தளபதி தோகோவின் மனந்தளராமையும், வீரச்செயலுமே ஜப்பானியருக்கு வெற்றியைத் தந்ததெனலாம். இந்நீண்ட முற்றுகையில் பலமுறை இவ்விரு தரப்பினருக்கும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றால் விளைந்த உயிரிழப்புகளும் கலகங்களும் பல ஆயிரங்களாகும். ஆகச்ட்டு 1904-க்குள் உருசியா மஞ்சள் கடலில் ஆர்தர் துறைமுகத்தைத்தவிர மற்ற எல்லாவற்றையும் இழந்து விட்டதால் இதை எப்படியாவது காக்கவேண்டும் என்பதற்காகத்தான் இத்தனை இழப்புகளுக்குப் பிறகும் ஜப்பானியரோடு இடைவிடாது போராடினர். கொரியா, இலியோதுங் தீவக்குறை, தைத்சு ஆறு முதலியவைகளும் ஜப்பானின் கைக்கு வந்தபின் ஜப்பானை இனித் தோற்கடிக்க முடியாதென்பது உறுதியாகிவிட்டது.

ஆர்தர் துறைமுகத்திற்கு மென்மேலும் படை வீரர்களும், புதுப் புதுத் தளபதிகளும் உருசியாவிலிருந்து வந்த வண்ணமிருந்தனர். விளாடிவாசுடாக்கிலிருந்து ஆர்தர் துறைமுகம்வரை ஓயாது உருசியப்படைகள் நடமாடிக் கொண்டிருந்தன. 1905-ல் இரு தரப்பிலும் பெரும் எண்ணிக்கையுள்ள உருசிய, ஜப்பானியப் படைகளும், போர்த்தளவாடங்களுடன் முகுதன் என்னுமிடத்தில் பிப்பிரவரி 23ஆம் நாள் போரிடத் தொடங்கின. இப்போர் உலக வரலாற்றில் மிகச்சிறப்பு வாய்ந்த ஒரு போராகும். இப் போரின் முடிவில் ஜப்பானிடம் உருசியா படுதோல்வியடைந்தது. இதற்குப் பின்னரே ஆர்தர் துறைமுகம் இறுதியாக ஜப்பானியரால் கைப்பற்றப்பட்டது. முகுதன் போர்க்களத்தில் ஒரே சமயத்தில் எண்பது கல் நீளத்திற்குப் படைகள் அணிவகுத்துப் போரிட்டன. இதன் காரணியமாகத்தான் உருசியா தன்னுடைய பெரும் வலிமையையும், செல்வத்தையும் இழந்து விட்டது. இதுவே வீரமிக்க ஆர்தர் முற்றுகையில் உருசியர் தோல்வியடைவதற்குக் காரணியமாய் நின்றது.

ஜப்பான் ஆங்கிலேயருடன் செய்து கொண்ட உடன்படிக்கையால்தான் செருக்குற்று உருசியாவுடன் போர்புரிந்ததென்று கூறிவிடவும் முடியாது. இவ் வுடன்படிக்கை ஏற்படாமல் இருந்தால் கூட உருசியா ஜப்பானை இலியோதுங் தீவக்குறையிலிருந்து வெளியேற்றியதற்காகவும், மஞ்சூரியா, கொரியா ஆகியவற்றில்

ஆளுமையை ஏற்படுத்தியதற்காகவும் உறுதியாக உருசிய ஜப்பானியப்போர் ஏற்பட்டே ஆகவேண்டிய சூழ்நிலை உருவாகி விட்டது. வளர்ந்துநின்ற ஜப்பானின் வளர்ச்சியும், ஆங்கிலேய ருடன் கொண்ட உடன்படிக்கையும் வேண்டுமானுல் இப் போரில் வெற்றிமேல் வெற்றி கொள்ள உதவின எனலாமேயொழிய இவ் வுடன்படிக்கையால்தான் போர் ஏற்பட்டதெனக் கூறிவிட முடியாது. உருசியா, சீனுவைக் கூறுபோட்டுக் கொள்ளும் கொள் கையில் ஈடுபட்டு அந் நாட்டையே விழுங்கத் திட்டமிட்டதை ஆங்கில-ஜப்பானிய உடன்படிக்கையால் தடுத்திருக்கா விட்டாலும், அமெரிக்க ஒன்றிய நாடு இதில் உறுதியாகத் தலையிட்டு உருசியாவைச் சீனுவிலிருந்து வெளியேற்றியிருக்கும். 1905-ல் ஜப்பான் உருசியாவை வெற்றிகண்டபின் இங்கிலாந்து, கொரியாவின் தன்னுரிமையையும், வளர்ச்சியையும், நல்வாழ் வையும், பாதுகாப்பையும் காப்பதற்கான எல்லா நெறி முறை களையும் கையாளவேண்டுமென்று ஜப்பானுக்குக் கூறியது. இதிலிருந்து ஆர்தர் துறைமுகம் ஜப்பானியர் வசமானதற்குப் பிறகும் உருசிய ஜப்பானியப் போர் தொடர்ந்து நடந்த வண்ண மிருந்தது. 1905-ல் மேமாதத்தில் ஜப்பானியக் கடற்படைத் தளபதி தோகோ துசிமா நீரிணைப்பில் உருசியக் கடற்படையைத் தோற்கடித்தார். இதுவே உருசிய-ஜப்பானியப்போரை முடிவுக்குக் கொண்டு வந்த ஒரு மாபெரும் நிகழ்ச்சியாகும். 'திரபால்கார் போருக்குப்பின் இத்தகைய கடற்போர் ஏற்பட்ட தில்லை'யென கெட்டில்பி (C. D. M. Ketelby) வியந்துரைப்பது நோக்கத்தக்கதாம். இதற்குப்பின்னும் உருசியா போரினின்று பின்னடையாமல் தொடர்ந்து போரிட்டது. உருசியாவுடன் நடக்கும் போரினுல் ஜப்பானிய நாட்டுச் செல்வம் சுருங்கிக் கொண்டே போயிற்று. வெறுப்படைந்த ஜப்பானிய மக்கள் பேரரசுக்கு எதிராகக் கலகங்களில் ஈடுபட்டனர். இதனையுணர்ந்த ஜப்பானிய அரசு உருசியாவுடன் உடன்படிக்கை செய்து கொள்ள முடிவு செய்தது.

### போர்ட்சுமவுத் உடன்படிக்கை

உலக நாடுகளும் உருசிய-ஜப்பானியப் போருக்குத் தீர்வு காண முயன்றன. 1905, சூன் 9ஆம் நாள் அமெரிக்கக் குடி யரசுத் தலைவர் உரூசுவெல்டு இவ்விரு நாடுகளுக்குமிடையில் சமைதிப் பேச்சு (வார்த்தை)களை நடத்திப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார். இவ்விரு நாடுகளும் சந்து செய்துகொள்ள ஒப்புக்கொண்டன. இதனுல் செப்டம்பர் 5, 1905-ல் போர்ட்சுமவுத் என்னுமிடத்தில் ஒரு சமைதி உடன்படிக்கை ஏற்பட்டது.

இவ்வுடன்படிக்கையின்படி இலியோதுங் தீவக்குறையில் தனக்கிருந்த உரிமைகளையெல்லாம் ஜப்பானுக்கு உருசியா விட்டுக் கொடுத்து விட்டது. மஞ்சூரியாவின் தெற்குப் பகுதியையும், அதிலோடும் இருப்புப் பாதையையும், சக்காலின் தீவின் தென் பாதியையும் உருசியா ஜப்பானுக்குக் கொடுத்துவிட்டது. ஜப்பானுக்குக் கொரியாவின் மீதிருந்த ஆளுமையும், உரிமைகளும் உருசியாவால் ஒப்புக்கொள்ளப்பட்டன. உருசியாவும், ஜப்பானும் மஞ்சூரியாவிலிருந்து தங்கள் படைகளைத் திருப்பிப் பெற்றுக் கொள்ள இசைந்தன. ஆனல், மஞ்சூரியாவிலோடும் இருப்புப் பாதையைக் காப்பதற்கு மட்டும் உருசியப் பாதுகாப்புப் படைகள் நிறுத்தப்பட்டன. இப் படைகளும் இலியோதுங் தீவக்குறையிலுள்ள இருப்புப் பாதைக்குச் செல்ல இசைவளிக்கப் படவில்லை. இலியோதுங் தீவக்குறை எத்தகைய இடையூறுமின்றி ஜப்பானின் ஆளுமையிலிருக்கவேண்டும் என்பதற்காகவே இருப்புப்பாதைப் பாதுகாப்புப் படைகளும் உள்ளே நுழைய இசைவளிக்கப்படவில்லை. மஞ்சூரிய இருப்புப்பாதையை வணிகப் போக்குவரத்துக்கன்றி அரசியல் கரணியங்களுக்காக இரு நாடுகளும் பயன் படுத்துவதில்லையென்று முடிவு செய்யப்பட்டது. சீனு தன் நாட்டின் தொழில் வணிக வளத்திற்காக எத்தகைய முயற்சியும் எடுக்க ஜப்பானும், உருசியாவும் தடையாக இருக்காதெனெ உறுதியளிக்கப்பட்டது. உருசியப் போர்க் கைதிகளுக்கான செலவுத் தொகையாக 40 இலக்கம் பொற் காசுகளை ஜப்பான் பெற்றது.

### உருசிய-ஜப்பானியப் போரால் ஆசிய வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்கள்

இப்போரின் கரணியமாக உருசியாவிலும், ஜப்பானிலும் ஏற்பட்ட பொருளியல் நெருக்கடியின் கரணியமாக உள் நாட்டுக் குழப்பங்களும் தோன்றின. எனவே இரு நாடுகளும் போரை வெறுத்து, போரினுல் ஏற்பட்ட துன்பங்களை உணரும் தருவாயில் தான் போர்ட்சுமவுத் உடன்படிக்கை ஏற்பட்டதேயொழிய முடிவான தோல்வியோ அல்லது வெற்றியோ கண்டபின் ஏற்பட்டதன்று. அவ்வாறு ஏற்பட்டிருக்குமாயின் வெற்றி கண்ட நாடு மேலும் அதிகார வெறி கொண்டிருந்தால் அல்லது தோல்வி கண்ட நாடு வேருெரு வல்லரசின் துணையைத் தேடியிருந்தால் ஆசியாவின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.

போர்ட்சுமவுத் உடன்படிக்கையால் ஜப்பானின் ஆளுமை கொரியாவில் வலுவடைந்தது. மேலும் ஜப்பானுக்கு இலியோதுங் தீவக்குறையிலும், மஞ்சூரியாவிலும், சக்காலினிலும் உரிமைகள்

வழங்கப்பட்டன. இதனால் இவ்விரு நாடுகளுக்கும் மஞ்சூரியாவிலும் மேற்படி இடங்களிலும் அரசியல் செல்வாக்கைவிட வணிகச் செல்வாக்கு வளரலாயிற்று. இதன் காரணியமாக மஞ்சூரியா எல்லாவற்றிலும் முன்னேறியது. கி. பி. 16ஆம் நூற்றாண்டிலேயே கொரியாவைத் தன் நாட்டுடன் இணைக்க விரும்பிய ஜப்பானுக்கு போர்ட்சு மவுத் உடன்படிக்கை ஒப்புக் கொள்ளப்பட்ட உரிமத்தை வழங்கியது. சீனாவும், உருசியாவும் கொரியாவிலிருந்து அடியோடு வெளியேற்றப்பட்டு விட்டன. எனவே ஜப்பான் கொரியாவை 1905ஆம் ஆண்டிலிருந்து 1910ஆம் ஆண்டுவரை தனது பாதுகாப்பு நாடாக வைத்திருந்து 1910ஆம் ஆண்டில் அதனைத் தன் பேரரசில் ஒரு பகுதியாக மாற்றியது. தென் மஞ்சூரியாவில் உருசியாவின் இடையீடின்றி ஜப்பான் தனித்து ஆளுமை பெற்றதால் தென் மஞ்சூரியா முழுவதையும் தன்னுடைய நேரடி ஆளுமைக்குள் கொண்டு வர முயன்றது. சீன-ஜப்பானியப் போரின்முடிவில் ஏற்பட்ட சிமோனோசகி உடன்படிக்கையின்படி காசில்லா நுழைவுச்சலுகையைப் பெற்றது. ஆனால், ஜப்பான் இதனையும் பின்பற்ற மறுத்துத் தென் மஞ்சூரியாவிலும், கொரியாவிலும், இலியோதுங் தீவக்குறையிலும் தன் பேராளுமையை நிலை நாட்டத் தொடங்கியது. இதனால் சீனாவின் வற்பிடிப்பை ஜப்பானால் தடுத்து நிறுத்தவும், தன் ஆணைக்கு அதனைப்பணிய வைக்கவும் முடிந்தது. ஜப்பான் சாண்டுங்கைக் கைப்பற்றியதும், தென் கொரியாவைக் கைப்பற்றியதும் தனது இருபத்தொரு கோரிக்கைகளை சீனாவையேற்கும்படி வலியுறுத்தியதும், சீனாவுக்குப் பெருத்த அடிகளாயின. சீனாவின் வலுவின்மையைப் பயன்படுத்திக்கொண்டு கொரியாவை மையமாகக் கொண்டு, மஞ்சூரியாவில் இருப்புப் பாதையைப் பயன்படுத்திக்கொண்டு ஜப்பான் தன் ஆளுமை வளர்ச்சியை அதிகப்படுத்திக் கொண்டது. இதன் பலன்களே உலகப்பெரும் போர்களில் நமக்குத் தென்படுகின்றன. ஜப்பானின் அதிகார வன்மை தொலைகிழக்கு நாடுகளில் வலுத்ததால்தான் இருபதாம் நூற்றாண்டில் பல சச்சரவுகள் வளர்ந்து ஆசிய வரலாற்றைப் பல்வேறு கோணங்களில் திருப்பிவிட்டன. உருசியாவுடன் நடத்திய போரில் ஒரு சிறிய ஆசிய நாடு மாபெரும் மேற்கத்திய வல்லாட்சிகளில் ஒன்றான உருசியாவை வென்றதென்னும் பெருமையில் ஜப்பானின் வன்மை மேலும் கூடியது. ஒரு சிறு நாடு மாபெரும் வல்லரசை அசைத்து விட்டதென்ற உண்மை இந்தியா போன்ற அடிமை நாடுகளுக்கு ஒரு தூண்டு கோலாகி ஆங்கிலேயரின் பேராளுமையை எதிர்த்து நிற்கும் வலிமையைத்

தந்தது. இப்போர் ஆசியாவில் தேசிய உணர்ச்சி ஏற்படுவதற்கும், அனைத்தாசியப் பொதுமை உணர்வு வளர்வதற்கும் காரணியமாக இருந்ததெனவயவர் பிரான்சிசு லோ (Sir. Francis Low) என்பார் குறிப்பிடுகிறார். இப் போர் இந்திய தேசிய வாதிகளின் ஒளி விளக்காய் நின்றதென திரு பணிக்கரும், தன்னம்பிக்கைக்கு உணர்வூட்டி இந்திய விடுதலை வீரர்களைத் தட்டியெழுப்பியதெனப் பண்டித நேருவும் பிறரும் கூறினர். ஐரோப்பிய அகம்பாவத்திற்கு முடிவு கட்டியதென்றும், கிழக்காசியாவில் வெள்ளையனின் தலைக்கனத்தைக் குறைத்ததெனவும் இப் போரின் முடிவைப்பற்றி திரு. வெல்சு புகழ்கிறார். கீழ்த்திசை நாடுகளைத் தாழ்வாக எண்ணி வந்த மேற்கத்திய வல்லரசுகளுக்கு ஜப்பானிய வெற்றி ஒரு சிறந்த பாடமாயிற்று. ஜப்பான் இத்தகைய சிறந்த பெருமைகளையும், பண்பாடுகளையும் தன் அதிகார வெறியில் மறந்து பிற்காலத்தில் தன் ஆசியத் தோழனை சீனுவையே கைப்பற்ற முனைந்தது. ஜப்பான் இப் போரில் வெற்றியடைவதற்குப் பல வகைக் கருவிகள் காரணியங்களாக அமைந்த போதிலும், சீனுவை வென்றதிலிருந்து போர் மனப்பான்மையுடன் தன் படைகளைப் பெருக்கிக் கொண்டு, உருசியாவுடன் போரிட அணியமாக இருந்ததே சிறந்த காரணியமாகும். சிறந்த போர்க் கலங்களும், புதிய கருவிகளும், சீரிய தளபதிகளும் நல்ல போர்ப்பயிற்சியும், இவற்றிற்கெல்லாம் மேலாக, அரசியல் துறையும், போர்த் துறையும் இணைந்து நின்றதும், ஜப்பானிய மக்களின் தேசிய உணர்ச்சியும் பேரரசர் பத்தியுமே ஜப்பானுக்கு வெற்றியைத் தந்தன.

உருசியாவுக்கு இப் போரினுல் ஏற்பட்ட இழப்பீடு ஏராளமாகும். கொரியாவிலிருந்தும், தென் மஞ்சூரியாவிலிருந்தும் இதனுடைய படைகள் வெளியேற்றப்பட்ட பின் கீழ்த்திசை நாடுகளில் இதன் பெருமை குன்றிவிட்டது. உருசியாவின் இத்தகைய இழிவைத் தனக்குச் சார்பாகக் கொண்டு ஜப்பான் மற்ற நாடுகளின் நடுவில் பெருமையடைந்தது. இப் போரினுல் உருசிய நாட்டின் அரசியல் பெருமையும், படை வலிமையும் பெரிதும் பாதிக்கப்பட்டதால் உள் நாட்டில் எழுந்த புரட்சிக்காரர்களின் கொள்கைகளுக்கு சார் மன்னர் தலைவணங்க வேண்டியதாயிற்று. இதனுல்தான் 1907-ல் ஆங்கிலேயருடன் உருசியா உடன்பாடு செய்து கொள்ள வேண்டியதாயிற்று. உருசியாவை ஆசிய நாட்டின் ஒரு பகுதியாகக் கொண்டு பார்க்கும்போது அதனுடைய தோல்வி ஆசிய வரலாற்றிலேயே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியதெனலாம். ஏனெனில் இத் தோல்விக்குப்பின் உருசியாவில் புரட்சிக் கருத்துகள் வலுப்பெற்று 1917-ல் ஒரு

பெரும் புரட்சியாக வெடித்தது. அப் புரட்சிக்குக் கரணியங்கள் பலவாயினும் அதன் பொருளியற் போக்கிலும், அரசியல் அமைப்பிலும், குமுகாய வளத்திலும் முதல் இடியை ஏற்படுத்தியது இப் போரேயாகும். எனவே தான் உருசியாவின் தோல்வி ஆசிய வரலாற்றிலும் ஏன் உலக வரலாற்றிலும் கூட ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

இப் போரினால் சீன வரலாற்றிலும் ஒரு திருப்புமுனை ஏற்பட்டதெனலாம். ஜப்பான் தனது பேராளுமையை இப் போருக்குப் பின் படிப்படியாகச் சீனாவில் ஏற்படுத்தியது. இதனையறிந்த மற்ற ஐரோப்பிய நாடுகளும் சீனாவில் 'சலுகைப் போரில்' தீவிரம் காட்டின. இச் சலுகைப் போரில் ஜப்பான் பெரும் வெற்றியைக் கண்டது. புது வல்லமையும் புகழையும் பெற்ற ஜப்பான் பழம் பெரும் நாடான சீனாவின் புகழை மங்க வைத்தது. 'ஆசியா ஆசியருக்கே' என்னும் அதனுடைய கொள்கை முழக்கமும் வலுப்பெறத் தொடங்கியது. தொலைகிழக்கு நாடுகளுக்குத் தலைமை தாங்கும் தகுதியை ஜப்பான் பெற்றவுடன், அண்டை நாடான சீனாவில் தன் தலைமையை நிலைநாட்ட முற்பட்டது. இதன் கரணியமாகச் சீனாவில் சீர்திருத்த இயக்கங்கள் பல தோன்றின. அவ்வியக்கங்களின் முகாமை நோக்கமே அயல்நாடுகளின் ஆளுமையை அடியோடு சீனாவிலிருந்து ஒழிப்பதாகும். இத்தகைய புரட்சிகளால்தான் சீனா அயல் நாட்டவர்களிடையே மேலும் பகிர்ந்துகொள்ளப்படாமல் தடுத்து நிறுத்தப்பட்டது. மஞ்சு அரசர்களின் ஆற்றலின்மையும், ஆட்சியில் மலிந்து கிடந்த ஊழல்களும், அவர்கள் காலத்தில் சீனா பல போர்களில் ஈடுபட்டுத் தோல்வியடைந்ததும், அயலார் சீனாவில் ஆளுமை பெற்றதும், மக்களின் மனத்தில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கும்போது, ஜப்பான் உருசியாவை வென்ற பெருமிதத்தால் தன் தலைமைப்பீட ஆளுமையைச் சீனாவில் நிலைநாட்ட முற்பட்டதைக் கண்ட சீன மக்கள் இதற்கெல்லாம் கரணியமான மஞ்சு அரசர்களை ஒழிக்கத் தீர்மானித்தார்கள். இச் சமையத்தில் கலகக்காரர்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்பித் தன் குலத்தைக் காத்துவந்த தோவாகர் பேரரசியார் இறந்து விட்டார். இதனால் சீனாவில் 1911-ல் புரட்சித் தலைவர் சன்யாட்சென் (Sunyatsen) தலைமையில் மாபெரும் புரட்சி தோன்றியது. இதன் முடிவில் சீனப்பேரரசர் முடிதுறந்தார். சீனா ஒரு குடியரசாயிற்று. குடியரசுத் தலைவராக யுவான் சிகே (Yuan Shi-Kai) அமர்த்தப்பட்டார்.

இத்தகைய கரணியங்களால்தாம் உருசிய-ஜப்பானியப் போர் ஆசிய வரலாற்றின் திருப்புமுனையாக அமைந்ததென்கிறோம்.

# 10. அதிகார வளர்ச்சியின் கூறுகள்

## ஜப்பானும் முதல் உலகப் போரும்

காரணியங்கள்

முதல் உலகப் போர் ஏற்படுவதற்குப் பல கரணியங்களிருந்த போதிலும் போயர்ச் சண்டைகளுக்குப் பின் பிரிட்டன் ஐரோப்பிய நாடுகளிடையே மதிப்பையிழந்ததும், செருமனி ஒரு மாபெரும் வல்லரசாக ஐரோப்பாவில் வளர்ந்ததுமே முதன்மைக் கரணியமாகும். சூன் 3, 1888-ல் முப்பத்தோரகவை நிரம்பிய இரண்டாம் கெய்சர் வில்லியம் (Kaiser William II) செருமனியின் அரசரானதும், அவரது வலக்கையாகப் பெயர்பெற்ற இரும்பு மாந்தர் பிசுமார்க் (Bismarck) நின்றதும், இவர்களுக்கு ஐரோப்பாவையே விழுங்க வேண்டும் என்ற அதிகாரப் பேராசை ஏற்பட்டதுமே இம் முதல் உலகப் போருக்கு அடிப்படைக் கரணியமாகும். இரும்பு மாந்தர் பிசுமார்க் தன்னுடைய 'குருதியும் வாளும்' என்ற கொள்கையால் செருமன் நாடெனும் கப்பலை இருபத்தெட்டாண்டுகள் ஐரோப்பாவெனும் பெருங்கடலில் திக்குத் திசையறியாது செலுத்திச் சென்ற மீகாமன் ஆவார். இவருடைய பெருந் திறமையால் தான் இரண்டாம் கெய்சர் வில்லியமும் 'இந் நாட்டில் ஒரே ஒரு தலைவன் தான் இருக்கின்றான்; அவன்தான் நான்' என்று கொக்கரித்தார். பிரிட்டன் தனது வல்லதிகாரக் கொள்கையைக் கடைப்பிடித்து உலகெங்கும் குடியேற்றங்களை ஏற்படுத்த முயன்றது. இதன் கரணியமாகத்தான் தென்னாப்பிரிக்காவில் 1881-ல் முதல் போயர்ச் சண்டையும், 1889—1902-ல் இரண்டாம் போயர்ச் சண்டையும் ஏற்பட்டன. இச் சண்டைகளில் செருமனி பிரிட்டனுக்கு எதிராகப் போயர்களைச் சார்ந்து பேசியது. ஃபிரான்சை பிரிட்டன் எகிப்திலிருந்து வெளியேற்றிவிட்டது. இதனால் இவ்விரு நாடுகளும் பிரிட்டனின் பகை நாடுகளாயின. போயர்ச் சண்டைக்குப் பின் செருமனி, ஃபிரான்சு, ஆசுத்திரியா, உருசியா முதலிய நாடுகள் பிரிட்டனோடு உறவு கொள்ள மறுத்து விட்டன. 1904—1905-ல் ஜப்பானுக்கும் உருசியாவுக்குமிடையே நடந்த போரில் கெய்சர் வில்லியம் உருசியாவைச் சார்ந்துப் பேசினார். பிரிட்டன் செருமனியின் வளர்ந்துவரும்

நாவாய்ப் படை வலிமையைக் கண்டஞ்சி அதனோடு உறவு கொள்ள வலியச் சென்றும், கெய்சர் வில்லியம் மறுத்து விட்டார். தான் தனித்திருக்க விரும்பாத பிரிட்டன் 1902-ல் ஜப்பானுடன் உடன்படிக்கை செய்துகொண்டது. இவ்வுடன் படிக்கை 1882-ல் செருமனி, ஆசுத்திரியா, இத்தாலி ஆகிய மூன்று நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட முக்கூட்டுறவுக்கெதிராக (Triple alliance) அமைந்தது. முக்கூட்டுறவு ஃபிரான்சுக்கும், பிரிட்டனுக்கும் எதிராக அமைக்கப்பட்டதென்றாலும், ஃபிரான் சும், பிரிட்டனும் தென்னுப்பிரிக்கச் செய்தியில் தங்களுக்குள் உட்பகை கொண்டிருந்ததால் இவையிரண்டும் ஒன்றாக இணைந்து முக்கூட்டுறவுக்கெதிராகச் செயல்பட முடியவில்லை. எனவே ஃபிரான்சு உருசியாவுடன் இரட்டை உடன்படிக்கை (Daubl alliance) ஒன்றை 1891-ல் செய்து கொண்டது. 1895-ல் இவ்வுடன்படிக்கை வெளிப்படையாக அறிவிக்கப்பட்டது. கெய்சர் வில்லியம் 'மூவர் உடன்படிக்கையோடு' 'இரட்டையர் உடன்படிக்கை'யையும் ஒன்றிணைத்து ஓர் ஐரோப்பியக் கட்சியாக்கி பிரிட்டிசு வல்லரசாட்சியைத் தகர்த்தெறியத் திட்டமிட்டார். எனவேதான் 1902-ல் பிரிட்டன் வளர்ந்து வரும் புதிய வல்லரசாகிய ஜப்பானோடு உறவு கொண்டது. ஆயினும் பிரிட்டன் தொலைக் கிழக்காசிய நண்பனை ஜப்பானைவிட ஐரோப்பாவிலேயே ஒரு நண்பனைப் பெற விரும்பியது. அவ்வாறு ஒரு நண்பனைப் பெற்றுவிட்டால் ஐரோப்பிய நாடுகள் முழுவதும் சேர்ந்து தன்னை எதிர்ப்பதிலிருந்து தப்பலாமென எண்ணியது. 'சாட்சிக் காரனின் காலில் விழுவதைவிடச் சண்டைக்காரனின் காலில் விழலாம்' என்ற பழமொழிக்கிணங்க கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக ஆப்பிரிக்காவிலும் மற்ற குடியேற்ற நாடுகளிலும் தன்னுடன் போரிட்டுக் கொண்டிருந்த ஃபிரான்சுடன் உறவு கொள்ளப் பிரிட்டன் விரும்பியது. பிரிட்டானியப் பேரரசர் ஏழாம் எட்வர்டு (1901—1910) ஃபிரான்சுடன் ஆங்கில—ஃபிரெஞ்சு உறவு (Anglo-French entente) ஒன்றை 1904-ல் ஏற்படுத்திக் கொண்டார். 1907-ல் உருசியாவும் இக் கூட்டுறவில் சேர்ந்து கொண்டது. எனவே 1907-ல் ஏற்பட்ட பிரிட்டன், ஃபிரான்சு, உருசியக் கூட்டுறவு முக்கூட்டுறவு (Triple entente) எனப்பட்டது. இம்முக்கூட்டுறவு ஏற்படுவதற்கு 1906-ல் செருமனி நிறை வேற்றிய நாவாய்ச் சட்டமும், 1905—1906-ல் மொராக்கோவில் ஏற்பட்ட சச்சரவுகளும் கரணியமாயினும் 1904—1905-ல் ஏற்பட்ட உருசிய-ஜப்பானியப் போரே இதன் மூலக் கரணியமாயமைந்தது. இவ்வாறு முக்கூட்டுறவும், மூவர் உடன் பாடும் ஐரோப்பாவில் இரு பக்கங்களிலும் வரிந்து கட்டி நிற்கும் கட்சிகளாய் நின்றன. இவற்றிற்குப் பின்னணியாக ஜப்பான்

உட்பட ஒவ்வொரு நாடும் தங்கள் படை வலிமையைப் பெருக்கிக் கொண்டு போருக்கு ஆயத்தமாயின. எனவே ஒரு சிறு சிராய்ப்பு ஏற்பட்டாலும் ஒரு பெரும் போர் வெடிக்கும் நிலைமை ஐரோப்பாவெங்கிலும் உருவாகிவிட்டது. சூன் 28, 1914-ல் ஆசுத்திரிய இளவரசர் ஆர்ச் டியூக்ஃபிரான்சிசு பெர்டினண்டும், அவருடைய மனைவியாரும் செர்பியா நாட்டில் கொலையுண்டனர். இதனால் ஆசுத்திரியா செர்பியா நாட்டின்மீது போர் தொடுத்தது.

## போரில் ஈடுபடல்

ஆசுத்திரியாவின் செல்வாக்கைப் பால்கன் தீவக்குறையில் பரவாமல் தடுக்க உருசியா செர்பியாவுக்கு உதவியாக ஆசுத்திரியாவை எதிர்த்தது. ஆசுத்திரியா மூவர் உடன்பாட்டில் ஓர் உறுப்பினரானதால் செருமனி ஆசுத்தியாவுக்குத் துணையாக உருசியாவின்மீது போர் தொடுத்தது. முக்கூட்டுறவில் உறுப்பின ரான உருசியாவுக்கு உடந்தையாக ஃபிரான்சு போரில் ஈடுபட்டது. இதற்குப் பின் பிரிட்டனும் செருமனுக்கு எதிராகப் போரில் ஈடுபட்டது. பிரிட்டன் தனது தொலைகிழக்கு நேச நாடான ஜப்பானையும் தன்னுடன் போரில் கலந்துகொள்ள அழைத்தது. எனவே ஆகச்ட்டு 23, 1914-ல் ஜப்பானும், பிரிட்டனும் சேர்ந்துகொண்டு செருமனியின்மீது போர் தொடுத்தது. செருமனிக்குச் சீனாவிலிருந்த உரிமைகளனைத்தையும் ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது. குறிப்பாக சீனத் துறைமுக மான கியாச்சோவை ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது. செருமனியின் கீழ்த்திசை படைத்தளமாக இத் துறைமுகப் பட்டினம் இருந்தது. அத்தோடு செருமானியர்க்குச் சீனர் சாண்டுங் பகுதியில் குத்தகைக்கு விடப்பட்டிருந்த எல்லா இடங்களும் ஜப்பானால் கைப்பற்றப்பட்டுவிட்டன. சீனாவில் சிங்தோ (Tsingtao)விலிருந்து சினம் (Tsinam) வரையிலுள்ள இருப்புப் பாதையைக் கைப்பற்றிக்கொண்டு, அதன் நெடு கிலுமுள்ள செருமானியரின் சொத்துக்களையும், சுரங்கங்களையும் ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது. கியாச்சோத் துறைமுகத்தை விட்டு வெளியேற வேண்டுமெனச் சீனா ஜப்பானைக் கேட்டதற்கு ஜப்பான் தான் சீனச் செய்திகளில் உண்மையிலேயே தலையிட விரும்பவில்லை யென்றும், ஆனால், செருமானியக் கப்பல்கள் கிழக் காசியக் கடல்களிலிருந்து வெளியேறும் வரை தான் இத்துறை முகத்திலிருந்து வெளியேற முடியாதென்றும் கூறிவிட்டது. இத் துறைமுகத்தை ஜப்பான் கைப்பற்றிவிட்டதாலேயே செருமனியின் கடலாளுமை ஆசியக் கடல்களில் குறைந்து விட்டதெனக் கூறமுடியாது. பசிபிக் மாகடலில் செருமனி

மார்சல், கரோலினு ஆகிய தீவுகளில் தனது தங்கு தளங்களை அமைத்துக்கொண்டு கடல் வலிமை பெற்று நின்றது. அவற்றைத் தான் கைப்பற்றினாலன்றி செருமனியின் கடலாளு மையைப் பசிபிக் மாகடலிலிருந்து ஒழிக்க முடியாதென ஜப்பான் உணர்ந்தது. எனவே மார்சல், கரோலினு ஆகிய தீவுகளை ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது.

சீனுவில் முன்னரே தான் பெற்ற இடங்களோடும், செல்வாக் கோடும் மனநிறைவு பெருத ஜப்பான் மேலும் சீனுவின் மீது பேராளுமை செலுத்த விரும்பியது. பெரிய வல்லரசுகள் யாவும் உலகப் போரில் ஈடுபட்டுத் தங்கள் கவனத்தை வேறு திசையில் வைத்திருக்கும் போர்க் காலச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கேட்பாரில்லாமல் சீனுவின்மீது தன் மேலதிகாரத்தைச் செலுத்த விரும்பியது. இவ்வெண்ணத்தின் அடிப்படையில்தான் 'இருபத்தொரு கோரிக்கைகளை' ஜப்பான் சீனுவுக்கு அனுப்பியது. அவற்றில் பதினுன்கு கோரிக்கைகளைச் சீனு ஏற்றுக்கொண்டு பல நன்மைகளைப் பெற்றது. இதனையறிந்த உலக நாடுகள் செரு மனியைப் போலவே ஜப்பானின் அதிகார வெறிக்காக அதனை வெறுத்தன. அமெரிக்கா செருமனிக்கு எதிராக நேச நாடுகளுடன் சேர்ந்து முதல் உலகப் போரில் ஈடுபட்டது. அவ்வாறு தான் ஈடுபடும் போது அதிகார வெறியர்களை அடக்கவும், உலக சமைதியைக் காக்கவும் விரும்புகின்ற எந்த நாடும் நேச நாடு களுடன் சேர்ந்து செருமனை எதிர்க்கலாமென அழைப்புவிடுத்தது. ஜப்பானிய அதிகார வெறியிலிருந்து தப்பவும் நேச நாடுகளின் சார்பைப் பெறவும் சீனு, அமெரிக்காவின் அழைப்பை ஏற்று முதல் உலகப் போரில் ஈடுபட்டது.

1917-ல் ஏற்பட்ட உள்நாட்டுக் கொந்தளிப்பால் உருசியா வலுவிழந்து காணப்பட்டதாலும் தொலைகிழக்கு நாடுகளில் ஜப் பான் பெரும் வல்லமை பெற்றுவிட்டதாலும், சம வல்லமை சரிந்து ஜப்பானின் கை மேலோங்கியது. எனவேதான் நேசநாடு என்றும் பாராமல் உருசியாவுக்கு எதிராக வட மஞ்சூரியாவிலும், மங்கோலியாவிலும் பெற்றிருந்த உரிமைகளைக் கைப்பற்றிக் கொண்டு சைபீரியாவின்மீது அதிகாரம் செலுத்த ஜப்பான் முற் பட்டது. இச் செயலை அமெரிக்க ஒன்றிய நாடும் கண்டித்தது. ஆனல், சைபீரியாவைத் தான் கைப்பற்றுவதால் செருமானியக் கைப்பற்றுதலைத் தடுத்து நிறுத்த முடியுமென ஜப்பான் கூறியது. எனவே, ஜப்பானியப் படைகள் யாவும் சைபீரியாவில் குவிக்கப் பட்டன. அங்கிருந்து சைபீரிய இருப்புப் பாதை மூலம் ஜப் பானியப் படைகள் அதிவிரைவாக முன்னேறி, சக்காலின் வடக்குப் பகுதியைக் கைப்பற்றிக்கொண்டன. முதல் உலகப்

போரின் அடிப்படை நோக்கமே அதிகார மனப்பான்மை கொண்ட செருமனியை ஒடுக்குவதாகும். அதற்காகவே நேசநாடுகள் யாவும் ஒன்றுசேர்ந்தன. ஆனால், அந்த நேசநாடுகளில் ஒன்றான ஜப்பான் இந்த அடிப்படைக் கொள்கையைக் காற்றில் விட்டு விட்டுத் தென் மஞ்சூரியாவையும், சைபீரியாவையும், சக்காலினை யும் கைப்பற்றிக் கொண்டு முன்னேறுவதையும், சீனாவைத் தன் காலடியில் வைக்க விரும்புவதையும் நேசநாடுகள் வெறுக்கலாயின. ஜப்பான் மேலுக்கு நேசநாடுகளுடன் உறவுபூண்டு, செரு மனியைப்போலவே பேராளுமைக் கொள்கையைக்கொண்டு, இவ்வாறு நாடுகளைக் கவர முற்பட்டுவிட்டதென நேசநாடுகள் ஜப்பானின் நட்புறவில் ஐயங்கொண்டன. அமெரிக்கா, சைபீரி யாவிலிருந்து உடனடியாக ஜப்பான் வெளியேற வேண்டுமென்று எச்சரித்தது. ஆனால், 1922-ல் வாசிங்டனில் கூடிய மாநாட்டில் ஜப்பானை எதிர்த்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குப் பிறகே ஜப்பான் சைபீரியாவிலிருந்து வெளியேறியது.

முதல் உலகப் போரின்போது ஜப்பான் சீனாவில் செருமனியின் உரிமைகளைக் கைப்பற்றியதென்பதை நாம் அறிவோம். பிரிட்டன், ஃபிரான்சு, இத்தாலி ஆகிய நேச நாடுகளுடன் ஜப்பான் செய்து கொண்ட கமுக்கமான ஒப்பந்தங்களால் இவ்விடங்களைவிட்டு ஜப்பான் வெளியேறவில்லை. 1917-ல் அமெரிக்காவுடன் செய்து கொண்ட 'இலான்சிங் இசி உடன்படிக்கை'யும் ஜப்பான் சீனாவில் பெற்றிருந்த உரிமைகளை அங்கீகரித்து வலியுறுத்தியது. எனவேதான் முதல் உலகப் போரின் முடிவில் பாரிசில் கூடிய சமைதி மாநாட்டிலும் ஜப்பானின் உரிமைகள் சீனாவிலுள்ள சாண்டுங் பகுதியிலும், மார்சல், கரோலினா ஆகிய தீவுகளிலும் உலக நாடுகளால் ஒப்புக்கொள்ளப்பட்டன. பன்னாட்டுக் கழகம் (League of Nations) ஜப்பானால் கைப்பற்றப்பட்ட நில நடுக் கோட்டுக்கு வடக்கே பசிபிக் மாகடலிலுள்ள மார்சல், கரோலினா முதலிய செருமனிக்குச் சொந்தமான இடங்களின் மீது பகர ஆட்சியுரிமையை (Mandatory) ஏற்படுத்தியது. சாண்டுங் பகுதி யையும் சில காலத்திற்குப் பின் ஜப்பான் சீனாவிற்குத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

விளைவுகள்

இவ்வாறு முதல் உலகப் போரில் செருமனி, ஆஸ்த்திரியா, இத்தாலி, துருக்கி ஆகிய பெரும் வல்லரசுகளுக்கு எதிராகப் பிரிட்டன், ஃபிரான்சு, உருசியா, அமெரிக்க ஒன்றிய நாடுகள் முதலிய வல்லரசுகளுடன் தோள் சேர்த்து நின்று ஜப்பான் போரிட்டதால் உலகப் பேரரசுகளில் ஒன்றாகும் பெருமையைப்

பெற்றுவிட்டது. ஆயினும் மேற்கத்திய வல்லரசுகள் யாவும் தங்களை வெள்ளை இனத்தினர் (White Races) என்றும் ஐரோப்பியர்களென்றும் கூறிப் பெருமிதம் கொண்டன. இவ்வித இன மனப்பான்மையால் ஜப்பானையும் ஆசிய இனத்தைச் சார்ந்த அடிமையினமாக மேற்கத்திய வல்லரசுகள் கருதின. இத்தகைய இனவுணர்ச்சிகளைப் போக்கி எல்லா இனத்தவரையும் சம நோக்குடன் நடத்தவேண்டுமெனப் 'பன்னாட்டுக் கழகம்' வலியுறுத்தியது. ஆயினும், வெள்ளையினத்தவர் ஜப்பானைத் தாழ்வாகக் கருதும் மனப்பான்மையை மேலும் வளர்த்துக் கொண்டனரேயொழிய ஒழித்துவிடவில்லை. உட்ரோவில்சனின் பதினான்கு பொருண்மைக் கோரிக்கைகளால் ஜப்பானின் ஆசைகள் நிராசைகளாயின. அத்தோடு அதனுடைய 'இனச் சமத்துவக் கொள்கை'யும் (The Principle of Racial Equality) நிறைவேறாமல் போயிற்று. எனவே, ஜப்பான் எப்படியும் இந்த வெள்ளை இனத்தவரின் இனவெறியையும் ஆணவத்தையும் போக்க வேண்டுமெனத் தீர்மானித்தது. இதுவே ஜப்பான் இரண்டாம் உலகப் போரில் அச்சு நாடுகளுடன் சேர்ந்து பிரிட்டானியப் பேரரசை எதிர்ப்பதற்குக் கரணியமாயிற்று.

நாவாய்ப்படையின் திரச் செயல்கள்

ஏப்பிரல், 1916ஆம் ஆண்டின் கணக்குப்படி நோக்கினால் ஜப்பானிடம் பதினாறாயிரம் முதல் நாற்பதாயிரம் வரை குதிரைத் திறன் கொண்ட பன்னிரண்டு பெரிய போர்க் கப்பல்களும், இருபத்தோராயிரம் முதல் அறுபத்து நான்காயிரம் வரை குதிரைத்திறன் படைத்த எட்டுப் போர்க்கள வேவுக்கப்பல்களும், பதினைந்தாயிரம் முதல் பத்தொன்பதாயிரம் வரை குதிரைத்திறன் படைத்த ஒன்பது முதல்தர வேவுக்கப்பல்களும், ஒன்பதாயிரம் முதல் இருபத்துமூவாயிரம்வரை குதிரைத் திறனுள்ள பன்னிரண்டு இரண்டாந்தர வேவுக்கப்பல்களும், பதினான்காயிரம் முதல் பதினேழாயிரம் வரை குதிரைத்திறன் கொண்ட முதல்தர கடலோரப் பாதுகாப்புப் படகுகளும், ஈராயிரம் முதல் ஒன்பதாயிரம் வரை குதிரைத்திறன் படைத்த பதின்மூன்று இரண்டாந்தரக் கடலோரப் பாதுகாப்புப் படகுகளும், ஆறாயிரம் முதல் எண்ணாயிரம் வரை குதிரைத்திறன் படைத்த மூன்று முதல் தரத் தகரிப் (பீரங்கி) படகுகளும், எழுநூறு முதல் ஈராயிரம் வரை குதிரைத்திறன் படைத்த ஐந்து இரண்டாந்தரத் தகரிப் படகுகளும் இருந்தன. ஆகமொத்தத்தில் பத்திலக்கத்து ஐம்பதாயிரம் குதிரைத்திறன் படைத்த அறுபத்தைந்து கப்பல்கள் இருந்தன.

ஆகஸ்ட்டு, 1914-ல் செருமனி, ஆஸ்த்திரியா, அங்கேரியப் படைகள் சைபீரியா, பெல்சியம், ஃபிரான்சு, உருசியா ஆகிய நாடுகளைத் தாக்கி வெற்றி கண்டன. பிரிட்டானியத் தரைப் படைகள், போருக்கு அணியம் கொள்ளாததால் வலிமையற்றுக் காணப்பட்டன. எனவே, 1902ஆம் ஆண்டு ஆங்கில ஜப்பானிய உடன்படிக்கையின்படி பிரிட்டன், ஜப்பானைப் பெரும் போரில் தனக்கு உதவும்படி அழைத்தது. பிரிட்டனின் அழைப்பிற் கிணங்க ஜப்பான் முதல் உலகப் போரில் ஈடுபட்டது. இதனைத் தொடர்ந்து துருக்கி, பல்கேரியா முதலிய நாடுகளும் போரில் ஈடுபட்டன. ஆகஸ்ட்டு 15, 1914-ல் ஜப்பான் செருமனிக்கு ஓர் உத்தரவை அனுப்பி, அதனுடைய போர்க்கப்பல்களைச் சீனக் கடலிலிருந்தும், ஜப்பானியக் கடல்களிலிருந்தும், கியோச்சௌவி லிருந்தும் செப்டம்பர் 15-க்குள் திருப்பிப் பெறவேண்டுமெனக் கூறியது. செருமனி இதற்கு எவ்விதப் பதிலும் கூருததால் ஆகஸ்ட்டு 23-ல் ஜப்பான் செருமனியின் மீது போர் தொடுத்தது. போரறிக்கையில் 'நாம் நம்முடைய தரைப்படை, நாவாய்ப்படை முதலியவற்றின் வலிமைகளைக்கொண்டு செருமனியைத் தாக்க முற்படுகிறேம்; இதன் நோக்கம் தேசிய நாடுகளின் சட்டப்படி நமது தேசியத்தின் கொள்கையை நாம் அடைவதே ஆகும்' என மிகாடோ அறிவித்தார். பேரரசரின் இப் பேரறிக்கையே ஜப்பானிய நாவாய்ப் படைக்குத் தங்களின் தேசிய உணர்ச்சியைத் தூண்டும் அருமருந்தாகியது. ஜப்பானிய நாவாய்ப்படை பசிபிக் மாகடலைத் தனது விளையாடும் நீச்சல் குளமாக்கிக் கொண்டது. இதனேடு பிரிட்டன், ஃபிரான்சு, உருசியா ஆகிய நாடுகளின் நாவாய்ப் படைகளும் இணைந்து கொண்டன. இப் படைகள் யாவும் செருமானியப் போர் வெறியர்களை ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரையோரத்திலிருந்து அமெரிக்காவின் மேற்குக் கரை வரையிலுள்ள நீர்ப்பரப்பில் தேடிய வண்ணம் அலைந்தன. ஆங்கில ஜப்பானிய நாவாய்ப் படைகள் தென்னமெரிக்காவின் கடலோரப் பகுதிகளிலும் போல்குலாந்துத் தீவுகளிலும் ஜப்பானியரை விரட்டின.

ஜப்பானியத் தரைப் படையும், பிரிட்டானியத் தரைப் படையும் சாண்டுங் தீவக்குறையில் பசிபிக் மாகடலை நோக்கி அமைக்கப்பட்டிருந்த செருமானிய நாவாய்த் தளத்தை அழித்தொழித்தன. இதனுல் செருமனி சீனுவிலும், மஞ்சூரியாவிலும் ஆளுமை பெற்று திரான்சைபீரியன் இருப்புப் பாதை அழித்து ஒழிக்கப்படும் நிலை காப்பாற்றப்பட்டுள்ளது. செருமனி இந்த இருப்புப் பாதையைக் கைப்பற்றிக்கொண்டிருந் தால் ஜப்பானிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் போர்த்

தளவாடங்களைப் பெற்று இந்த இருப்புப்பாதை மூலம் எடுத்துச் சென்றுகொண்டிருந்த உருசியாவுக்கும், ஃபிரான்சுக்கும் தடை ஏற்பட்டிருக்கும். நவம்பர், 1915-ல் வார்சாவுக்குச் சென்ற ஜப்பானியத் தகரிப் படைகள் இண்டன்பர்க்கைத் தாக்கின.

ஜப்பானின் நாவாய்ப்படைகள் போரிலிறங்க முற்படும் போது ஆசுத்திரிய செருமானிய நாவாய்ப் படைகள் அட்லான்டிக் மாகடலிலோ, பால்டிக் அல்லது நண்ணிலக் கடலிலோ காணப்படுவதில்லை, எனவே, ஜப்பானிய நாவாய்ப் படைகள் ஒளிந்தோடும் விளையாட்டில் ஈடுபட்டன. ஆஸ்த்திரிய, அங்கேரிய பெயர்பெற்ற கெய்சரின் 'எலிசபெத்' கப்பலும், சாண்டுங் தீவக் குறையின் தென்கரையில் ஒதுங்கி இருந்தது. செருமானியக் கப்பற் படைகளின் நோக்கம் கிழ்த்திசையில் இந்திய, ஃபிரெஞ்சுப் படைகளை நுழையவொட்டாமல் தடுப்பதும், உருசியாவை ஆப்பிரிக்காவுக்குள்ளும் அல்லது மேற்கு ஐரோப்பாவுக்குள்ளும் வரவொட்டாமல் தடுப்பதும் ஆகும். இந்தியா, இலங்கை, பர்மா மற்றும் கிழ்த்திசையிலுள்ள நீரிணைப்புப் பகுதிகள் ஃபிரெஞ்சுக் காரருக்குச் சொந்தமான தொலை கிழக்குக் குடியேற்றங்கள் முதலியவற்றைப் பிடித்துக்கொள்வது இரண்டாவது நோக்கமாகும். இதனால் எதிரிகளைக் கிழ்த்திசை நோக்கி வாராமல் தடுத்துவிடலாமென்பது செருமனியின் திட்டம். ஆஸ்த்திரேலியா, நியூசிலாந்து ஆகியவற்றின் படைகளையும் இந்தியா, எகிப்து, ஐரோப்பா ஆகியவற்றிற்குச் செல்லவிடாமல் தடுத்து விடலாமென்பதும், இத்தகைய தடைச் சுவரைக் கிழக்குக்கும் மேற்குக்கும் நடுவில் ஏற்படுத்திவிட்டால் ஒப்பந்த நாடுகளின் கடல் வாணிகம் அழிந்துவிடுமென்பதும் கெய்சர் வில்லியத்தின் திட்டமாகும். அவருடைய இத்தகைய திட்டங்களைத் தன்னுடைய கடற்படை வலிமையால் தகர்த்தெறியும் மாற்றுத் திட்டங்களை ஜப்பான் வகுத்தது. தன்னிடமுள்ள மேற்கூறிய அறுபத்தைந்து கப்பல்களையும் ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்குமிடையிலுள்ள பசிபிக் மாகடலிலும், மேற்கேயுள்ள இந்து மாகடலுக்குமிடையிலுள்ள பெரு நீர்ப்பரப்பிலும் அனுப்பி வெற்றிபெறும் திட்டங்களை வகுத்தது.

சீனாவின் தெற்கேயுள்ள சாண்டுங் தீவக்குறையிலுள்ள இருநூறு சதுரக் கல் பரப்பளவுள்ள செருமானியக் குடியேற்றத்தின் தலைநகரான சிங்தோ வைச் (Tsing-Tao) சுற்றிலும் தன்னுடைய கடற்படையை ஜப்பான் நிறுத்தியது. தளபதி சுச்சியா (Tsuchiya), துணைத் தளபதி கைமாமுரா ஆகியோரும் சீனக் கடற் பகுதிக்கு அனுப்பப்பட்டனர். ஒப்பந்த நாடுகளுக்குத் துணையாக இவர்கள்

எதிரிகளைச் சாய்க்க வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டனர். மற்றொரு பிரிவு சிங்கப்பூர், ஃபிலிப்பைன் தீவுகள் முதலியவற்றிற்கு அனுப்பப்பட்டது.

நவம்பர் 7-ல் சிங்தோ வீழ்ச்சியடைந்தது. எனவே, தளபதி சுச்சியா சீனக்கடலிலிருந்து சிங்கப்பூருக்குத் திரும்பினார். சிங்கப்பூரில் இந்தியப் படைவீரர் செய்த கலகத்தை அடக்குவதில் இவர் உதவி செய்தார். இதற்கிடையில் ஜப்பானியக் கடற்படையின் மற்றொரு பிரிவுக்குத் தளபதியான குவாஞ்சிகதோ என்பவர் ஆகஸ்ட்டு, 1915-ல், சிங்கப்பூருக்கு வந்து பிரிட்டன் படைகளுடன் சேர்ந்து கொண்டார். தன் படையை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியினரை செருமானியர்களைத் தேடி வேட்டையாட அனுப்பிவிட்டு, மற்றொரு பகுதியினரை ஆஸ்த்திரேலியா, நியூசிலாந்து ஆகியவற்றிற்குப் போர் வீரர்களை ஏற்றிச்செல்லுமாறு பணித்தார். அக்டோபரில் துணைத்தளபதி தோச்சினே, குவாஞ்சிகதோவுடன் இணைந்து போரிடத் தயாரானார். வெல்லிங்டனிலிருந்த அன்சாகசு (Anzacs) என்பவரும் இவர்களுடன் சேர்ந்து கொண்டார். இத் தலைவர்கள் யாவரும் கீழ்த்திசையில் ஜப்பானுக்கும் ஆஸ்த்திரேலியாவுக்குமிடையில் எதிரிகளை வேட்டையாட அணியமாயினர். போர் தொடங்கியவுடன் ஜப்பானியப் பேரரசர் மேலும் இரண்டு கப்பல்களை அனுப்பிக் கிழக்கிலிருந்த தளபதி சுச்சியாவை அழைத்து வட அமெரிக்காவை நோக்கிச் செல்லும்படி செய்தார். தளபதி சுச்சியா சிங்தோவிலிருந்து தப்பித்து ஓடிய செருமன் ஆஸ்த்திரியப் போர்க் கப்பல்களைத் தேடிய வண்ணம் சென்று கொண்டிருந்தார். மற்றொரு தளபதியான மத்சுமுரா தென் கடல்களை நோக்கித் தன் படையுடன் புறப்பட்டார். தளபதி சுச்சியா, தளபதி மத்சுமுரா ஆகிய இருவரின் கைகளுக்குச் சிக்காமல் எதிரிகள் தப்பித்து விட்டனர். அவர்களின் நாவாய்த் தளங்கள் யாவும் இத் தளபதிகளால் கைப்பற்றப்பட்டன.

மோரியமா என்னும் மற்றொரு கடற்படைத் தலைவர் இசுமோ என்னும் கப்பலுடன் 1913-லிருந்தே மெக்சிகோ வளைகுடாவில் தங்கியிருந்தார். அவருக்குதவியாக அசாமா, அய்சென் ஆகிய கப்பல்களும் அனுப்பப்பட்டன. இவற்றைத் தவிர, பிரிட்டானியக் கப்பலான நியூகேசிலும், கனடியக் கப்பலான ரெயின்போவும் மோரியமாவின் கீழ்ச் செயல்பட அனுப்பப்பட்டன. ஆக மொத்தத்தில் மெக்சிகோவிலிருந்த கடற்படைத் தலைவர் மோரியமாவிடம் ஐந்து கப்பற்படைகள் இருந்தன. வட அமெரிக்காவை நோக்கிச் சென்ற தளபதி சுச்சியாவிடம் காங்கோ இஃகியேயி

ஆகிய கப்பல்களும், தெற்கு நோக்கிச்சென்ற தளபதி மத்சுமுரா விடம் சத்சுமா உள்படப் பல கப்பல்களும் இருந்தன. நவம்பர் 7, 1915-ல் செருமானியக் கப்பலான கெய்ல் (Gail), ஒனேலுலு (Honolulu) துறைமுகத்திற்கு வந்தது. இத் துறைமுகம் மெக்சி கோவுக்கெதிரில், பசிபிக் மாகடலிலுள்ள அவாய்த்தீவில் உள்ளது. இதனை அமெரிக்கக் கப்பற்படைகள் வழிமறித்தன. நவம்பர், 1915-ல், பிரிட்டானியக் கடற்படைத் தலைவர் கிரதோகு (Cradock) என்பவரைச் சிலிக் கடற்கரையில் செருமானியக் கடற்படைத் தலைவர் வான்சுபீ (Vonspee) என்பார் தோற்கடித்தார். இத் தோல்விக்குப்பின் செருமானியப் படைகள் யாவும் பசிபிக் மாகடலில் ஒன்றுகூடின.

இத் தோல்வியை வெற்றியாக்கித் தரும்படி மெக்சிகோ விலிருந்த படைத்தலைவர் மோரியமாவுக்கு உத்தரவிடப்பட்டது. அவரும் பிரிட்டன், ஆஸ்த்திரேலியக் கப்பற்படைத் தலைவர்களும் மற்றும் பல கப்பல்களுடன் போல்குலாந்துத் தீவுகளுக்குச் சென்று, செருமானியக் கடற்படைத் தலைவர் வான்சுபீ அட்லான்டிக் மாகடலை நோக்கி வரக்கூடுமென எதிர்பார்த்து நின்றனர். அவர்கள் எதிர்பார்த்த வண்ணம் டிசம்பர் 8, 1915-ல் அவ்வழியே வான்சுபீ கடக்க முயன்ருர். அவருடைய படைகள் யாவும் தோற்கடிக்கப்பட்டு திரெசுடன் என்ற கப்பல் தவிர, மற்ற கப்பல்கள் யாவும் மூழ்கடிக்கப்பட்டன.

செருமானிய நாவாய்ப்படையுடன் பசிபிக் மாகடலில் போரிட தோகிவா, சித்தோசி ஆகிய இரு ஜப்பானியக் கப்பல்கள் தோச்சினே என்பவரின் தலைமையில் அனுப்பப்பட்டன. இதன்பின் பசிபிக் மாகடலிலும் செருமானியப் படைகளும், அதன் நட்புறவுப் படைகளும் நாசமாக்கப்பட்டன. அட்லான்டிக் கடலில் தப்பிவந்த திரெசுடன் கப்பல் பிரிட்டானியத் தளபதி சான்பெர்ஞெண்டசுவினல் அழிக்கப்பட்டது. இவ்வாறு கெய்சர் வில்லியம் மனக்கோட்டை கட்டியிருந்த கடலாளுமைக்குப் பசிபிக் கடலில் சாவுமணி அடிக்கப்பட்டது.

சாண்டுங் தீவுக் குறையிலுள்ள சிங்தோவைக் கடைசிவரை யில் கைவிடமால் காக்க வேண்டுமெனக் கெய்சர் வில்லியம் 5000 படைகளுடன் கடற்படைத் தலைவர்கள் சிலரையும் அனுப்பி யிருந்தார். இப் படைகளுக்குப் பெருந்தலைவராக இருந்தவர் சிங்தோவின் ஆளுநரான தளபதி மேயர் வால்தெகு (Meyer Waldek) என்பவராவார். சிங்தோ துறைமுகமும் அதன் கோட்டைகளும் இரண்டு கோடிப் பொற்காசுகள் செலவிடப்பட்டு மிக வலிவுள்ள தாக அமைக்கப்பட்டிருந்தன. புதிய தகரிகளும், நாவாய்ப்

படைகளும் அங்கு வைக்கப்பட்டிருந்தன. இத் துறைமுகப்பட்டினத்தைச் சுற்றிலும், நடுநிலைமை எல்லைக்கோடு சென்றது. இங்கிருந்து புறப்படும் ஓர் இருப்புப் பாதைத் தொடர் சீனாவின் நிலப் பகுதியைக் கடந்து மற்றொரு கோடியிலுள்ள சிநான்ஃபூ (Tsi-Nan Fu) என்னுமிடத்தைத் தொட்டது. அங்கிருந்து பீகிங் கிழக்கு இருப்புப் பாதைக்கு நேரடியாகச் செல்லமுடியும். சிங்தோவிலிருந்து வடக்கேயுள்ள பிரிட்டானியக் குடியேற்றமான வெய்ஹாய் வெய்க்குச் செல்ல எண்பது கல் தொலைவாகும். இவ்வாறு பல ஏந்துகளுடன் சிங்தோவைத் தலைநகரமாகக் கொண்டு இருநூறு சதுரக் கல் பரப்பில் அமைக்கப்பட்ட செருமானியக் குடியேற்றத்திற்குக் கியாசௌ என்று பெயர்.

போர் தொடங்கியவுடன் ஜப்பானியப் போர்க்கப்பலான கவாச்சி மஞ்சள் கடலுக்கு அனுப்பப்பட்டது. மற்ற இரு கப்பல்கள் துணைத் தளபதி சதாகிச்சிகதோ என்பவரின் தலைமையில் சிங்தோவுக்கு அனுப்பப்பட்டது. இவர் சிங்தோவுக்கண்மையிலுள்ள எல்லாத் தீவுகளையும் வென்று துறைமுகத்தை நோக்கி முன்னேறினர். கவாச்சி என்னும் கப்பல் மஞ்சள் கடல் வழியாக செருமானியக் கப்பல்கள் சிங்தோவுக்குள் புகாமல் பார்த்துக் கொண்டது. இதற்குள் தகாச்சியோ என்னும் ஜப்பானியக் கப்பல் அத் துறைமுகத்தைச் சுற்றிலுமுள்ள செருமானியக் கடல் வழித் தொலைவரிக் கம்பிகளை வெட்டியெறிந்தது. ஐந்து நாள்களுக்குள் ஜப்பானியப் படைகள் சிங்தோவை நெருங்கிவிட்டன. சிங்தோ துணைத் தளபதி காமியோ என்பவரால் முற்றுகையிடப்பட்டது. காமியோ தனது வான் படையை யனுப்பி சிங்தோ துறைமுகத்தின்மீது குண்டுகளை வீசினர். வானொலி நிலையமும், மின்னிலையங்களும், துறைமுகத்தில் நின்றுகொண்டிருந்த கப்பல்களும் வான் படையின் குண்டு வீச்சால் கடுமையாகச் சேதமடைந்தன. காமியோ சிங்தோவுக்கு இருபது கல் தொலைவிலுள்ள கியாசௌ தொடர்வண்டி நிலையத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இதற்குள் பிரிட்டிசு குடியேற்றமான வெய்காய்வெய்யிலிருந்து சீக்கியப்படைகள் கிழக்கிலிருந்து சிங்தோவை நோக்கி முன்னேறின. காமியோ தான் முன்னேறும்போது சீனர்களுக்குச் சொந்தமான சாண்டுங் தொடர்வண்டி நிலையத்தையும் கைப்பற்றினர். கடைசியாக நடந்த போரில் சிங்தோ துறைமுகம் வீழ்ந்தது.

இப் போரில் ஜப்பானியரின் தகாச்சியோ போர்க் கப்பலும், பல தகரிப்படகுகளும் அழிந்தன; 416 ஜப்பானியரும் அழிந்தனர். 1542 ஜப்பானியர் காயமுற்றனர். பிரிட்டிசு படையில் பன்னிருவர்

இறந்தனர்; அறுபத்தொருவர் காயமுற்றனர். செருமானியப் படையில் இறந்தவர்களும் காயமுற்றவர்களும் ஏறத்தாழ ஆயிரம்பேர் இருப்பர். தோல்வியடைந்த செருமானியர் கைது செய்யப்பட்டுத் தோக்கியோவுக்குக் கொண்டுவரப்பட்டனர். தொடர்வண்டியிலிருந்து இறங்கியவுடன் ஒவ்வொரு செருமானியனுக்கும் ஆளுக்கொரு ஜப்பானியக் கட்டழகி, கதம்ப மாலையணிவித்து செருமானிய மொழியில் அச்சிடப்பட்ட வரவேற்பிதழை யளித்து வரவேற்றாள். ஆனால், அதே சமயத்தில் கெய்சர் வில்லியம் பெர்லினிலுள்ள தனது அரண்மனையில் இருந்துகொண்டு, ஐரோப்பியர்களையும் அமெரிக்கர்களையும் ஜப்பானியரால் பெருகிவரும் மஞ்சள் ஏதத்தால் மடிய வேண்டாமென எச்சரித்துக்கொண்டிருந்தார். இத்தகைய தீரச் செயல்களைப் புரிந்த ஜப்பானியர்களை, மாந்தரிலே வேறுபட்ட மிகப் பெரும் சக்தி வாய்ந்த ஒரு தனியினத்தவர் என்று உலகம் வியந்தது. இந்த வியப்பே அவர்களைப் போராளுமை வெறியர்களாய் மாற்றி இரண்டாம் உலகப்போருக்கு இழுத்துச் சென்றதெனலாம்.

### வாசிங்டன் மாநாடு (12-11-1921—6-2-1922)

முதல் உலகப் போருக்குப் பின் தொலை கிழக்கு நாடுகளின்மீது பேராளுமை பெற்று விளங்குவதாய் ஜப்பானும், அமெரிக்க ஒன்றிய நாடுகளும், இங்கிலாந்தும் நின்றன. முதல் உலகப் போருக்கு முன் தொலை கிழக்கு நாடுகளின் அரசியல் செய்திகளில் செல்வாக்குப் பெற்றிருந்த செருமனியும், ஃபிரான்சும், உருசியாவும் போரின் முடிவில் தங்கள் செல்வாக்குகளை இழந்து நின்றன. செருமனி முதல் உலகப் போரில் தோற்கடிக்கப்பட்டுத் தொலை கிழக்கு எல்லைகளிலிருந்த தனது உரிமைகளை ஜப்பானிடம் இழந்தது. ஃபிரான்சு ஐரோப்பாக் கண்டத்திலேயே பிறநாட்டு அரசியல் சிக்கல்களுக்கு ஈடு கொடுக்க வேண்டியிருந்ததால் தொலை கிழக்கு நாடுகளில் தன் செல்வாக்கை நிலைநாட்டுவதைப் பற்றி அவ்வளவாக அக்கறை காட்டவில்லை. பொதுவுடைமை உருசியா முதலாளிய உலகத்தை எதிர்த்துத் தனக்குப் பாதுகாப்பைத் தேடிக்கொள்ளும் வழிகளில் தீவிரக் கவனத்தை செலுத்திக் கொண்டிருந்தது. எனவே, அதுவும் தொலை கிழக்கெல்லைகளில் தனது செல்வாக்கை நிலை நாட்டுவதில் பெரு முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. சீனு வலிமையற்றுக் காணப்பட்டபோதிலும் தனது கற்பனைக் குடியரசையும் (Phantom Republic) அலங்கோலப் படுத்தும் வகையில் உள்நாட்டுப் புரட்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. இத்தகைய சூழ்நிலையில்தான் மேற்கூறிய இங்கிலாந்து, அமெரிக்க ஒன்றிய நாடுகள், ஜப்பான் ஆகிய மூன்று

வல்லரசுகளும் தங்களுடைய கடலாளுமையால் பசிபிக் மாகடலைத் தத்தம் நீச்சல் குளமாக்கிக்கொள்ள முயன்றுகொண்டிருந்தன.

முதல் உலகப் போரின்போது ஜப்பான் சைபீரியாவைக் கைப்பற்றிக் கொண்டு பசிபிக் மாகடற் பகுதியில் அமைதியற்ற சூழ்நிலையை உண்டாக்கியதென்பதை நாம் அறிவோம். இதனை யறிந்த அமெரிக்கா பசிபிக் மாகடலில் எதிர்காலத்தில் ஜப்பான் மட்டுமே தனது ஒரே எதிரியாய் நிற்கும் என முடிவு செய்தது. முன்னரே அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் ஜப்பானியரின் அமெரிக்கக் குடியேற்றத்தால் மனத்தாங்கல் வளர்ந்துவரும் இந்நேரத்தில் இவ்விரு நாடுகளுக்கும் கடலாளுமைப் போட்டி ஏற்பட்டதால், இது பெரும்பகையாக முற்றித் தொலைகிழக்குப் பகுதியில் அமைதி கெடும் நிலைமை உருவாகிவிட்டது. இதில் பிரிட்டனும் பங்கேற்க வேண்டியதாயிற்று. முன்னரே ஜப்பானும், பிரிட்டனும் ஆங்கில-ஜப்பானிய உடன்படிக்கையால் நட்புறவு கொண்டுவிட்டதால் இவ்விரு நாடுகளுக்குமிடையே தொலை கிழக்குச் சிக்கலால் பகை வளராதென்பது உறுதி. ஆனால், சைபீரியாச் செய்தியிலும், மற்றவற்றிலும் ஜப்பானின் ஆளுமையை எதிர்த்து அடிக்கடி எச்சரிக்கை விடும் அமெரிக்கா வுக்கும் ஜப்பானுக்குமிடையே போர் மூளலாமென உலக நாடு களும், குறிப்பாக அமெரிக்க, ஜப்பானிய அரசியல் வல்லுநர்களும் எதிர்பார்த்தனர். கி.பி. 20ஆம் நூற்றுண்டில் ஜப்பான் முதனிலை வல்லரசு நாடாக வளர்ந்துவிட்டது. ஆனால், அதனுடைய அடிப்படைக் கொள்கையும், அமெரிக்க ஒன்றிய நாடுகளின் அடிப்படைக் கொள்கையும் இரு வேறு கோணங்களை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. அவாய், ஃபிலிப்பைன் தீவுகள் ஆகிய வற்றை அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டதால் தொலைகிழக்கு நாடுகளில் தனக்கொரு தங்கு தளத்தை ஏற்படுத்திக்கொண்டு விட்டது. அத்தோடு சீனச் சந்தைகளிலும் தனது செல்வாக்கை ஏற்படுத்திக்கொண்டு விட்டது. தன் நாட்டில் உற்பத்தியாகும் எண்ணிலடங்கா உற்பத்திப் பொருள்களைச் சீனவிலும், மற்றும் தொலை கிழக்கு நாடுகளிலும் விற்பதற்கு மேற்படி அவாயும், ஃபிலிப்பைன் தீவுகளும் அமெரிக்காவுக்கு நுழைவாயில்களாய் நின்றன. இதே முறையில் தனது உருவாக்கப் பொருள்களை உருவாக்கவும், மூலப் பொருள்களை அடையவும், சீனவையும், மற்ற தொலைகிழக்கு நாடுகளையும் தனது சந்தைகளாக்கிக் கொள்ள முயன்றது. குறிப்பாக இவ்விரு நாடுகளும் தங்கள் பொருளாக்கப் போட்டியை நேரடியாக மஞ்சூரியாவில் ஏற்படுத் தின. இப் போட்டியில் ஜப்பான் முதலில் வெற்றி பெற்றதும் அமெரிக்கா அதன்மீது அளவுகடந்த பொறுமை கொண்டது.

இப் பொறுமையும், மனத்தாங்கலும் ஜப்பானியரின் அமெரிக்கக் குடியேற்றத்தைத் தடுக்க நிறைவேற்றப்பட்ட சட்டங்களாலும், மேற்கொள்ளப்பட்ட வன்முறை நடவடிக்கைகளாலும் மேன் மேலும் வளர்ந்துகொண்டே போயின. ஜப்பான் தொடர்ந்து சீனப்பகுதிகளில் தனது ஆளுமையைச் செலுத்தியதும், மஞ்சூரிய இருப்புப்பாதைப் பகுதிகளை இரு நாடுகளுக்கும் பொதுவாக்க வேண்டுமெனக் கோரிய நாக்ஸினுடைய (Knoz) கோரிக்கையை ஜப்பான் மறுத்ததும், அஃது வெளிப்படையாகவே ஆளுமை மனப்பான்மை கொண்டிருக்கிறதென்பதையும், காசில்லா நுழைவுக் கொள்கைக்கு மாறாக நடக்கிறதென்பதையும் அமெரிக்கா மெய்ப்பித்துக் காட்டியது. ஜப்பானின் இத்தகைய ஒவ்வொரு செயலுக்கும் அமெரிக்கா அதனை நேரடியாகக் கண்டித்துத் தடுத்து நிறுத்தவோ அல்லது போர் தொடுக்கவோ முடியவில்லை. ஜப்பானுக்கும், பிரிட்டனுக்குமிருந்த ஆங்கில-ஜப்பானிய உடன்படிக்கையே இதற்குக் கரணியமாகும். மற்ருெரு புறத்தில் தனக்கு நேரெதிரியான செருமனியும் அருகிலிருப்பதால் ஜப்பான் திடீரென செருமனியோடு உறவுகொண்டு தன்னைத் தாக்கக்கூடுமோவென அமெரிக்கா அஞ்சியது.

முதல் உலகப்போரும், உருசியாவில் போல்சுவிக் (பொதுவுடைமை) கட்சியும் முதலாளிய நாடுகளுக்கு அச்சத்தை யறிவிக்கும் அறிகுறிகளாய் நின்றன. இச் சமயத்தில் ஜப்பானுடன் தகராறு வளர்த்துக் கொண்டால் அது தனக்கு பேரேதத்தை வலியத் தேடிக் கொள்வதாகு மென்பதையும் அமெரிக்கா உணர்ந்தது. இத்தகைய சூழ்நிலையில் ஜப்பானுடன் நட்புறவு கொண்டிருப்பதைத் தவிர வேறு வழியில்லையென்பதை அமெரிக்கா உணர்ந்தது. எனவே தான் பலவகையிலும் ஜப்பானுக்கே பயனளிக்கும் இலான்சிங்-இசி உடன்படிக்கையைத் தன் நாட்டு மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் நவம்பர், 1917-ல் அமெரிக்கா ஜப்பானுடன் செய்துகொண்டது. இவ்வுடன்படிக்கையால் ஜப்பான் விரும்பிய நிலவியலாளுமைக் கொள்கைப்படி அதன் அண்டை நாடுகளிலும், குறிப்பாகச் சீனுவிலும் அதனுடைய உரிமைகள் உறுதி செய்யப்பட்டன. ஆகவே, அமெரிக்காவுக்குப் பசிபிக் கடலோரப் பகுதிகளில் உருவாகிவரும் ஏதங்களும், அமைதியற்ற சூழ்நிலைகளும் மேலும் வலுப்பெற்றனவேயொழிய நீங்கிவிடவில்லை.

முதல் உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட வெர்சேய்ல்சு உடன் படிக்கையில் அமெரிக்கா ஜப்பானின் பேராசையை எதிர்த்துப் பேசியது. ~யினும், ஜப்பான் தனது உரிமைகளை ஏற்காவிட்டால்

பன்னாட்டுக் கழகத்தில் சேராமல் தான் வெளியேறிவிடுவதாக அச்சுறுத்தியதால் தனது மாந்தவன்பு (மனிதாபிமானம்) கொண்ட அரிய நோக்கங்களைச் செயல்படுத்த அக் கழகத்தை ஏற்படுத்திய உட்ரோ வில்சன் ஜப்பானின் கோரிக்கைகளை ஏற்று அதைப் பன்னாட்டுக் கழகத்தில் உறுப்பினராக்கிக் கொண்டார். ஆனால், வில்சன் அடுத்த தேர்தலில் தோற்றபின் குடியரசுத் தலைவரான ஆர்டிஞ்சு (Hardinge) வெர்சேய்ல்சு உடன்படிக்கையில் ஜப்பானுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகார உரிமைகளை ஏற்க மறுத்துவிட்டார். இச் சமயத்தில் ஜப்பானும் போல்சுவிக் உருசியாவுடன் தொடர்பு கொண்டு சைபீரியாவில் அதிகாரம் செலுத்த முற்பட்டது. தன் அதிகாரக் கொள்கையை மேன் மேலும் வளர்த்துக் கொள்வதோடு தங்கள் முதலாளியக் கொள்கைக்குப் பிறவிப் பகைவரான உருசியப் பொதுவுடைமையாளர்களோடு ஜப்பான் உறவு கொள்வதைக் கண்ட அமெரிக்கா, ஜப்பானால் தனக்குப் பேரேதம் வந்தேதீருமென்பதை வெளிப்படையாயறிந்தது. எனவே, ஜப்பானைக் கண்டித்துத் தடுத்து நிறுத்தும் ஓர் அமைதியான வழியை அமெரிக்கா ஆராயலாயிற்று. அதற்கு ஒரே வழி ஜப்பானை எப்படியும் ஆங்கிலக் கூட்டுறவிலிருந்து பிரிப்பதுதானென்பதை அமெரிக்கா தீர்மானித்தது. ஆங்கிலேயரிடமிருந்து ஜப்பானைப் பிரித்துவிட்டால் அது தனது எதிரிகளான பொதுவுடைமை உருசியர்களுடனோ செருமானியருடனோ, ஃபிரெஞ்சியருடனோ சேர்ந்து கொண்டால் என்ன செய்வதென அமெரிக்கா பிறகு சிந்திக்கலாயிற்று. இந்தச் சிந்தனையின் முடிவே வாசிங்டன் மாநாடாகும்.

1902-ல் பிரிட்டனுக்கும் ஜப்பானுக்குமிடையே ஏற்பட்ட ஆங்கில-ஜப்பானிய உடன்படிக்கை பிரிட்டன் தன் தனிமையைப் போக்கிக் கொள்ள ஏற்படுத்திக் கொண்டதாகும். அன்றிலிருந்து ஏறத்தாழ இருபதாண்டுகள்வரை பிரிட்டன் எல்லா வகையிலும் அந்த உடன்படிக்கையின்படி ஜப்பானுக்குச் சார்பாகவே நடந்து வந்தது. உருசியாவுக்கும் செருமனிக்கும் எதிராகப் பிரிட்டன் ஜப்பான் பக்கம் நின்றது. மஞ்சூரியப் போட்டியில் அமெரிக்காவும் ஜப்பானும் தீவிரமாக ஈடுபட்டபோது பிரிட்டன் தன் குருதியுறவான அமெரிக்காவை எதிர்த்துத் தன்னோடு உறவு பூண்ட ஜப்பானையே சார்ந்தது. இந்த உடன்படிக்கையை ஊன்றி நோக்கும்போது முதலில் இஃது உருசியாவுக்கெதிராகவும் பிறகு செருமனிக்கு எதிராகவும் செய்து கொண்டதாகக் காணப்படுகிறது. 1920-க்குப் பிறகு உருசியாவும் செருமனியும் தன் செல்வாக்கைத் தடுக்கும்

எதிரிகள் முகாமிலிருந்து மறைந்தபின் ஜப்பான் இந்த உடன்படிக்கையை மூலமாகக்கொண்டு அமெரிக்காவுக்கெதிராகச் செயல்பட்டது. எனவே குருதியுறவு கொண்ட அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்குமிடையே பிடிப்பும், நல்லுறவும் மறைந்து கொண்டு வந்தது. இதனை நன்குணர்ந்த பிரிட்டன் அமெரிக்காவோடு எப்பொழுதும் உறவோடு வாழவும் ஆனால், அதே சமயத்தில் ஜப்பானோடு கொண்டுள்ள உறவை முறித்துக் கொள்ளாமலும் வாழ விரும்பியது. எனவேதான் 1911-ல் ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்குமிடையே போர் ஏற்படும் சூழ்நிலை உருவான சமயத்திலும் பிரிட்டன் தனது கூட்டுறவை ஜப்பானுடன் புதுப்பித்துக் கொண்டது. இதற்குப் பின் சீனாவுடன் கொண்டிருந்த வாணிகத்தில் ஈடுபட்டிருந்த பிரிட்டானிய முதலாளிகளும் வணிகர்களும் தங்கள் வளர்ச்சிக்குத் தடையாக ஜப்பான் சீனாவில் பேராளுமை கொள்வதைக் கண்டு அஞ்சினர். அதே சமயத்தில் அமெரிக்கா தனது பேராளுமையைக் கனடாவிலும், ஆஸ்த்திரேலியாவிலும் ஏற்படுத்துவதையறிந்த பிரிட்டன் தனக்குப் பொருளியற் சம நிலை ஏற்படாதென்பதை நன்குணர்ந்தது. எனவேதான் அமெரிக்காவின் வேண்டுகோளை யேற்று 1902-ல் செய்து கொண்ட ஆங்கில-ஜப்பானிய உடன்படிக்கையைக் கடைசியாக 1921-ல் முறித்துக்கொண்டது. அமெரிக்காவின் விருப்பத்திற் கேற்பப் பிரிட்டனும் பன்னாட்டுக் கூட்டுறவை விரும்பி வாசிங்டன் மாநாட்டை ஏற்படுத்த ஒப்புக் கொண்டது.

1917-ல் ஏற்பட்ட புரட்சிகளுக்குப்பின் சீன மக்கள் தேசிய உணர்ச்சி கொண்டனர். எனவே இவர்களுக்குப் பாதகமாக மற்ற நாடுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளையும், முதல் உலகப்போரின் முடிவில் செய்யப்பட்ட வெர்சேய்ல்சு உடன் படிக்கையையும், வரலாற்று முகாமை வாய்ந்த ஜப்பானின் 'இருபத்தொரு கோரிக்கைகளை'யும் சீன மக்கள் அடியோடு வெறுக்கலாயினர். இவற்றை எதிர்த்து மேத்திங்கள்புரட்சி போன்றவற்றைச் சீனர் செய்தனர். தங்களை மையமாக வைத்துச் சுரண்டுகின்ற நாடுகளைத் தடுக்கவும், சமவுரிமையையும் சம நிலையையும் தங்களுக்குக் கொடுத்து மற்ற நாடுகளோடு வைத்து மதிக்கவும், அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளைச் சீனர் வேண்டிக் கொண்டனர். இத்தகைய சீன மக்களின் கோரிக்கைகளையேற்று அவர்களின் குறைகளை நீக்குவதற்காகவும் வாசிங்டன் மாநாடு கூட்டுவது தேவையாயிற்று.

இத்தகைய மாநாடு பெரும்பாலும் தனக்கு எதிரான கருத்து களையே தெரிவிக்கும் என்பதையும் அயல் நாடுகளில் தான் பெற்

றுள்ள செல்வாக்கை இதனால் தான் இழக்கக்கூடும் என்பதையும் ஜப்பான் நன்குணர்ந்தது. ஆனால், இதுவரை தனக்குச் சார்பாய் நின்ற பிரிட்டனும் தன் உடன்படிக்கையை முறித்துக் கொண்டு விட்டதாலும், பிறநாடுகளின் கொடூரக் கண்களி லிருந்து தான் தப்பமுடியாதென்பதையும் ஜப்பானால் உணர முடிந்தது. இதற்கு எதிராகத் தன் ஆளுமைக் கொள்கையை நிலைநாட்டுவதற்குப் படைவலிமையால் முடியுமா வென்பதையும் ஜப்பான் எண்ணிப் பார்த்தது. கடந்த முதல் உலகப் போரில் படைவலி ஒன்றை வைத்தே உலகை வென்றுவிடலாம் என வெழுந்த செருமனியின் இரங்கத்தக்க முடிவும் ஜப்பானின் கண் முன் தோன்றியது. சீனவில் தோன்றிய தேசிய உணர்ச்சியாலும் சைபீரியப் படையெடுப்பாலும் ஜப்பானின் கருவூலம் வற்றியது. மேலும், உள்நாட்டுத் தொழில் வளர்ச்சியில் கருத்தைச் செலுத்திய முதலாளிய வணிகக் குடும்பத்தினர் ஜப்பானின் அயல் நாட்டு ஆளுமையை வெறுக்கலாயினர். இத்தகைய கரணியங்களால் தான் ஜப்பானும் வாசிங்டன் மாநாடு கூடுவதற்குத் தன் ஒப்புதலை அளித்தது. இம் மாநாடு கூடுவதற்குமுன் பசிபிக் மாகடலிலும், தொலைகிழக்கு நாடுகளிலுமுள்ள சிக்கல்களைத் தெளிவாக ஆய்ந்து அவற்றிற்குச் சரியான முடிவு காணும்படி வல்லரசுகளை ஜப்பான் வேண்டிக்கொண்டது.

வாசிங்டன் மாநாட்டைக் கூட்டுவதில் பிற நாடுகளைவிட அமெரிக்காவே பெரும் பங்கேற்றது. 1921ஆம் ஆண்டின் பிற் பகுதியிலேயே அமெரிக்க மாநாட்டில் கலந்துகொள்வதற்கான அழைப்புகளைக் கரணிய கருமியங்களுடன் அச்சிட்டுப் பிரிட்டன், ஃபிரான்சு, ஜப்பான், இத்தாலி, சீனு, நெதர்லாந்து, போர்த்துக்கல், பெல்சியம் ஆகிய நாடுகளுக்கு அனுப்பியது. ஆனால், உருசியாவை மட்டும் அமெரிக்கா அழைக்கவில்லை. ஏனெனில் உருசியாவில் சிவப்பு நிறம் செம்மையுற்று வளர்ந்ததால் அமெரிக்கா அதனை அடியோடு வெறுத்தது. அமெரிக்காவின் அழைப்பை யேற்று எட்டு வல்லரசுகளும் வாசிங்டன் மாநாட்டில் கலந்து கொள்ள இசைந்தன. அமெரிக்காவுடன் சேர்ந்து ஒன்பது வல்லரசு நாடுகள் அமெரிக்காவின் வாசிங்டனில் நவம்பர் 1921-ல் கூடின. இவ் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மாநாடு 1921, நவம்பர் 12-லிருந்து, 1922, பிப்பிரவரி 6வரை நடந்தது. இம் மாநாட்டின் முகாமை நோக்கம் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஃபிரான்சு, இத்தாலி ஆகிய ஐந்து நாடுகளின் கடற் படைகளைக் கட்டுப்படுத்துவதாகும். இவ்வாறு கடற்படைகளைக் கட்டுப் படுத்துவதால் தொலைகிழக்கு நாடுகளில் எழும் சச்சரவுகளைப் போக்கி, இனி போர் வராமல் தடுக்கலாமென்பது இம்மாநாட்டின் கொள்கையாகும். அடுத்தபடியாகச் சீனச் செய்திகளில் பிற

நாடுகளின் ஆளுமையைத் தடுத்து அவற்றிற்கிடையே உராய்வுகள் ஏற்படாமல் ஒருங்குபடுத்த வேண்டுமென்பது இம் மாநாட்டின் மற்றொரு முகாமை நோக்கமாகும்.

### நான்கு வல்லரசுகள் ஒப்பந்தம் (The Four Power Pact)

முதலில் பிரிட்டன், ஜப்பான், ஃபிரான்சு, அமெரிக்கா ஆகிய நான்கு வல்லரசுகளும் நான்கு வல்லரசுகள் ஒப்பந்தம் ஒன்றை திசம்பர் 13, 1921-ல் ஏற்படுத்திக்கொண்டன. இதன்படி தொலைகிழக்கு நாடுகளின் சிக்கல்களைத் தங்களுக்குள் பேசி அமைதியாகத் தீர்த்துக்கொள்ள இந் நான்கு நாடுகளும் தங்களுக்குள் உயர்வு தாழ்வின்றிப் பசிபிக் தீவுகளில் நடந்துகொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், ஆய்விற்குப்பின் ஜப்பானைத் தவிர மற்ற மூன்று நாடுகளும் தங்கள் உரிமைகளில் சமமாக மதிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

தங்களுக்குள் ஏற்படும் தகராறுகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதோடு, வேறொரு நாட்டால் ஏற்படும் தகராறு அல்லது அச்சுறுத்தலைப் பற்றியும் இந் நான்கு நாடுகளும் கூடிப் பேசித் தீர்வு காண ஒப்புக்கொண்டன. இறுதியாக இவ்வொப்பந்தத்தின்படி 1902ஆம் ஆண்டு ஆங்கில-ஜப்பானிய உடன்படிக்கையும், 1917ஆம் ஆண்டு அமெரிக்க-ஜப்பானிய உடன்படிக்கையும் கைவிடப்பட்டன. இவ்வாறு இவை கைவிடப்பட்டதால் அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்குமிடையிலிருந்த போர் பற்றிய அச்சம் நீங்கியது. இவ்வுடன்படிக்கையால் ஜப்பானும் தான் கொண்டிருந்த உறவு முறைகள் முறிந்துவிட்டதே என வருந்தவோ அஞ்சவோ வேண்டிய தேவையில்லாமற் போய்விட்டது. ஏனெனில் தான் இங்கிலாந்துடன் உறவு கொள்ளாமலிருந்தாலும் அமெரிக்கா அல்லது மற்ற வல்லரசு நாடுகள் தொலை கிழக்கு நாடுகளில் தலையிடாக் கொள்கை (Non-Intervention Policy) யைக் கடைப்பிடிக்கும் என்பதை யெண்ணி அது மகிழ்ந்தது.

### ஐந்து வல்லரசு நாடுகளின் கடற்படைக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் (The Five Powers Naval Treaty)

வாசிங்டன் மாநாட்டின் மற்றொரு முகாமைக் கட்டம் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், ஃபிரான்சு, இத்தாலி ஆகிய ஐந்து வல்லரசுகளின் கடலாளுமையைக் கட்டுப்படுத்திப் பசிபிக் மாகடலில் அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகச் செய்துகொள்ளப்பட்டதே ஐந்து வல்லரசுகளின் கடற்படைக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ஆகும். வளர்ந்து வரும் கடற்படை வலிமையைக்

கட்டுப்படுத்தி ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள பெரும் போர்க் கப்பல்களையே இவ்வைந்து வல்லரசுகளும் வைத்துக் கொள்ள வேண்டுமென அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை இம் மாநாடு ஏற்றுக்கொண்டதால் மேற்படி ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஃபிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகள் முறையே 5 : 5 : 3 : 1 :7 : 1:7 என்னும் மேனியில் போர்க் கப்பல்களைக் கொண்டிருக்க ஒப்புக்கொள்ளப் பட்டது. அத்தோடு கப்பல்களின் எடைகளும் குறிப்பிட்ட அளவே இருக்கவேண்டுமென முடிவு செய்யப்பட்டது. சான்ருக, ஒரு போர்க்கப்பலின் எடை 35,000 கல்லெடையும், வானவூர்திகளைச் சுமக்கும் கப்பல் 27,000 கல்லெடையும் இருக்க வேண்டுமெனவும், போர்க் கப்பலில் வைக்கப்படும் முதல்தரத் தகரியின் குறுக்களவு பதினறு விரல நீளத்திற்கு மிகாமலிருக்க வேண்டுமென்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஜப்பானுக்கு வெகு அண்மையிலுள்ள ஆங்காங், குவாம், மணிலா போன்ற விடங்களில் நாவாய்த் தளங்களை வலுப்படுத்தக் கூடாதென்றும் இந்த உடன்படிக்கையில் குறிக்கப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கையால் ஜப்பான் தான் பசிபிக் மாகடலின் மேற்குப் பகுதியில் பெற்றிருந்த செல்வாக்கிற்குக் குறைவே ஏற்படவில்லை என்பதை யெண்ணி மகிழ்ந்தது. மேலும் இந்த உடன்படிக்கையால் அமெரிக்காவோ பிரிட்டனே மேற்கத்திய வல்லரசுகளோ கீழ்த்திசை நாடுகளில் கடலாளுமை பெற்று ஜப்பானைத் தாக்க முடியாது. அதே சமயத்தில் ஜப்பானும் அமெரிக்காவையோ மற்ற நாடுகளையோ தன் கடல் வலிமை கொண்டு தாக்க முடியாது. போர்க்கப்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கு மட்டும் ஏற்படுத்தப்பட்ட இந்த உடன்படிக்கையால் ஜப்பான் வேறு வகையில் தன்னுடைய படை வலிமையை வளர்த்துக் கொள்ள வாய்ப்பைப் பெற்றது. நீர்மூழ்கிக் கப்பல்களையும் வானவூர்திகளையும் ஜப்பான் ஏராளமாக உருவாக்கியது. இந்த உடன்படிக்கை போர்க் கப்பல்களை ஒரு குறிப்பிட்ட அளவில்தான் வைத்திருக்க வேண்டுமென்று வலியுறுத்தியதே தவிர, நீர்மூழ்கிக் கப்பல்கள், வானவூர்திகள் ஆகியவற்றின் மீது கட்டுப்பாடு விதிக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கதாம். இதனல் ஜப்பான் தன் படைவலியைப் பெருக்கிக் கொள்வதில் பெரும் வெற்றி பெற்றதெனலாம். தான் மேற்கத்திய வல்லரசுகளின் தாக்குதல்களிலிருந்து காப்பளிக்கப்பட்டோம் என்பதற்காகவும், சீனவின் மீதும், சைபீரியாவின் மீதும் தான் ஆளுமை செலுத்துவதைக் குறைத்துக்கொண்டதால், மற்ற வல்லரசுகள் தன்னை நேசிக்கிறது என்பதற்காகவும் ஜப்பான் இந்த ஒப்பந்தத்தை எண்ணி மகிழ்ந்தது.

ஒன்பது வல்லரசுகளின் ஒப்பந்தம் (The Nine Powers Treaty)

வாசிங்டன் மாநாட்டில் கலந்து கொண்ட ஒன்பது வல்லரசுகளும் ஒன்ருக இணைந்து செய்துகொண்ட ஒன்பது வல்லரசுகளின் ஒப்பந்தம் இம் மாநாட்டின் மிக்க முகாமைப் பயனுகும். இதன் படி இந்த ஒன்பது வல்லரசுகளும் சீனுவின் உரிமைகளை மதித்து நடக்கவும், காசில்லா நுழைவுக் கொள்கையை ஒரு மனதாய் ஏற்கவும், அதன் வலுவின்மையைப் பயன்படுத்திக்கொண்டு அதன் மீது பேராளுமை செலுத்தாமலிருக்கவும், அயலார் தலையீடின்றி அஃது அமைதியாக வாழ்ந்து தன் பொருளியல் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ளவும் இந்த ஒன்பது நாடுகளும் ஒரு மனதாய் ஒப்புக் கொண்டன. இத்தகைய உடன்பாட்டை இந்த ஒன்பது நாடுகளுக்கிடையே ஏற்படுத்தியதுதான் இம் மாநாட்டின் மாபெரும் வெற்றியாகும். ஜப்பானின் கோரிக்கைக்கிணங்க சாண்டுங் சிக்கலைப் பற்றி இம் மாநாடு ஆராயவில்லை. இச் சிக்கலைப் பற்றி மாநாட்டுப் பந்தலுக்கு வெளியில், வாசிங்டனில் மற்ருேரிடத்தில் சீனுவும், ஜப்பானும் ஆராய்ந்தன. பின் அவையிரண்டும் இணைந்து சீன–ஜப்பானிய உடன்படிக்கை (Sino – Japnese – Treaty) ஒன்றை ஏற்படுத்திக் கொண்டன. இதன்படி ஜப்பான் சாண்டுங்கை மையமாகக் கொண்டு 1915-ல் தான் செய்து கொண்ட உடன்படிக்கைகளை முறித்துக் கொள்வதாகவும், சாண்டுங்கில் தான் எவ்வகை உரிமையும் கொண்டாடுவதில்லையெனவும் ஒப்புக் கொண்டது. சீனு அதற்காக இழப்பீடுகளை ஜப்பானுக்குத்தரவும் ஒப்புக்கொண்டது. ஆயினும் ஜப்பானியர் பலர் சாண்டுங்கிலிருந்து வெளியேறவில்லை. 1915-ல் ஜப்பானின் இருபத்தொரு கோரிக்கைகளில் பெரும் பாலானவற்றைச் சீனு எவருடைய தூண்டுதலும், அச்சுறுத்தலுமின்றி ஏற்றுக் கொண்டபடியால் அக் கோரிக்கைகளைப்பற்றி இம் மாநாட்டில் வலியுறுத்தக்கூடாதென ஜப்பான் கேட்டுக்கொண்டதன் பேரில் கைவிடப்பட்டது.

மேற்கண்ட இரு மாபெரும் ஒப்பந்தங்களைத் தவிர வேறு சில நன்மைகளும் இந்த வாசிங்டன் மாநாட்டால் ஏற்பட்டன. இந் நன்மைகளில் பெரும்பாலானவை சீனுவுக்கே சார்பாய் முடிந்தன. அயல்நாட்டு அஞ்சல் கட்டுப்பாட்டை ஒழித்துச் சீனுவுக்குச் செய்தித் தொடர்பை எளிதாக்கிக் கொடுக்க இம் மாநாட்டு உறுப்பினர்கள் ஒப்புக் கொண்டனர். வாஞெலி நிலையங்கள், கம்பியிலாத்தந்தி, மின் வழிச் செய்திகள் முதலியவை மிகக் குறைந்த செலவில் கட்டுப்பாடில்லாமல் ...குச் செல்லவும், சீனு பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அயல்நாட்டு வணிகக் கட்டுப்பாடுகளையும், சுங்கச் சட்ட திட்டங்களின் கடினத்தையும் குறைத்துச் சீனாவின் அயல்நாட்டு வணிக வளர்ச்சிக்கு ஒத்துழைக்க இவ்வல்லரசுகள் ஒப்புக் கொண்டன. எல்லையோரத்து நிலப்பரப்புகளையும், அயலாரின் ஆளுமையையும், அதன் குடியேற்ற உரிமைகளையும் உறுதிப் படுத்திக்காக்க இம் மாநாடு ஒப்புக் கொண்டது; இதற்காக ஒரு தனி ஆணைக்குழுவை ஏற்படுத்தவும் இம் மாநாடு ஒப்புக் கொண்டது. சீனாவில் ஏற்பட்ட 'பாக்சர் கலக'த்தின்போது அனுப்பப்பட்ட தங்களின் படைகளைத் திருப்பிப் பெற்றுக்கொள்ள இம் மாநாட்டு உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டனர்.

மதிப்பீடு

வாசிங்டன் மாநாட்டில் உலக முகாமை வாய்ந்த பல ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டன. முகாமையாக இம் மாநாடு படைக்குறைப்பு ஒப்பந்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிப் பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் கடலாளுமைப் போட்டியைக் கட்டுப்படுத்தியது. இதனால் பசிபிக் கடலில் அமைதி நிலவியது. பல நாடுகள் சீனாவுக்கிழைத்து வந்த முறையின்மை நீங்கவும், மாந்தவன்பின் பெயரால் அதற்குப் பன்னாடுகளும் பாதுகாப்பளிக்கவும் தன் முன்னேற்றத் திற்குப்பாடுபடவும் இம் மாநாடு வழிவகுத்தது. இதனால் பன்னாட்டு நயன்மைமுறை வலியுறுத்தப்பட்டது.

ஆக மொத்தத்தில் இம் மாநாட்டால் சீனாவுக்குப் பெரும் நன்மைகள் விளைந்தன. தனக்குச் சொந்தமான இடங்களில் அதிகாரம் செலுத்தியிருந்த நாடுகள் அவற்றைத் தன்னிடத்தில் ஒப்படைத்துவிட்டு வெளியேறியதும், குறிப்பாக ஜப்பான் சாண்டுங்கை விட்டு வெளியேறியதும் சீனாவின் உரிமையைக் காப்பாற்றியதாகும். புதிய வரலாற்றிலேயே முதல் தடவையாகச் சீனா தன்னை மற்ற நாடுகள் சமமாக எண்ணிப் போற்றுவதை இம் மாநாட்டில்தான் கண்டது. மேலும் தன்னுடைய ஆட்சியையும், பொருளியலையும், பாதுகாப்பையும் நிரந்தரமாகப் பெற்று முன்னேற மற்றநாடுகள் ஒரு முகமாய் ஒத்துழைப்பைத்தர முன்வந்ததையும் முதன் முதலாக இம் மாநாட்டில்தான் சீனா கண்டது. சீனா என்னும் முலாம் பழத்தைத் துண்டு போட்டுத் தங்களுக்குள் புசிக்கப் போட்டியிட்ட அயல்நாடுகள் தன்னுடைய கூறுபடா நிலையைக்காத்து முன்னேற்றத்திற்கும் உழைக்க முன் வந்ததைக்கண்டு சீனா இம் மாநாட்டில் வாயடைத்து நின்றது. எனவே வாசிங்டன் மாநாடு சீன வரலாற்றில் ஒரு புதிய படலத்தை ஏற்படுத்தியதெனலாம். ஆயினும் இந்த மாநாட்

ஜப்பான் இருபத்தொரு கோரிக்கைகளை அடியோடொழித்துச் சீனவுக்கு முழு மகிழ்ச்சியைக் கொடுக்க முன்வரவில்லை.

இம் மாநாட்டால் அமெரிக்க ஒன்றியநாடு மற்ற நாடுகளின் கவனத்தைக் கவர்ந்து தலைவரென்ற பதவிக்கு உயர்ந்தது. இதனுல் தொலைகிழக்கு நாடுகளில் அமைதியைக் காக்கும் பெரும் பொறுப்பில் இதன் ஆக்கமும், ஊக்கமும் முன்பைவிடப் பெரிதும் வளர்ந்தன. 'காசில்லா நுழைவுக் கொள்கை' என்பதன் அடிப்படைக் கொள்கையையும், பரந்த நோக்கத்தையும், எல்லா நாடுகளும் உணரும்படி அமெரிக்கா செய்தது. இதற்காகவே அது இதுவரை ஜப்பானுடனும் பிறநாடுகளுடனும் சச்சரவிட்டு வந்ததென்பதை அறிவோம். இதன் அடிப்படையில் தான் சீனவின் உரிமைகளைக் காக்க இம் மாநாடு வாக்குறுதியளித்தது.

இம் மாநாட்டினுல் பிரிட்டன் ஜப்பானின் தேவைப்படாத உறவை முறித்துக் கொண்டு ஆங்கில—ஜப்பானிய உடன்படிக்கையை முறித்துக் கொண்டது. ஆயினும் அதனுடைய நட்பும், பாசமும், ஒத்துழைப்பும் அவ்வுடன்படிக்கையின் முறிவுக்குப்பின்னும் ஜப்பானின் மீதிருந்தன.

தொலைகிழக்கு நாடுகளில் தனது மேலாளுமை வன்மையை விரித்துக் கொண்டே சென்ற ஜப்பானின் பேராசையை இம் மாநாடு கட்டுப்படுத்தியது. எனவே இம் மாநாடு ஜப்பானின் அதிகார வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையிட்டதெனலாம். போர்க் கப்பலின் எண்ணிக்கையை இம் மாநாடு கட்டுப்படுத்திய போதிலும் நாம் முன்னரே குறிப்பிட்டுள்ளது போல ஜப்பானின் மற்ற படைகள் பெருமளவாய்ப் பெருகிவிட்டன. எனவே ஜப்பான் தன்னுடைய ஆளுமையைத் தன்னுட்டுக் கடற்கரைகளிலும், சீனக் கடலிலும் தடையின்றிச் செலுத்தியது. அமெரிக்கா ஆவாய்த் தீவிலும், பிரிட்டன் சிங்கப் பூரிலும் தங்கள் நாவாய்த் தங்குதளங்களை ஏற்படுத்திக் கொள்வதில்லையென முடிவு செய்யப் பட்டதால் ஜப்பான் இந் நாடுகள் திடீரெனத்தாக்குமோ என ஐயப்படவில்லை. மேலும் இவ்விரு நாடுகளும் ஜப்பானுக்கருகிலுள்ள இடங்களில் 'தலையிடாக் கொள்கை'யைக்கையாள முற்பட்டதால் தன்னைச் சுற்றிலுமுள்ள இடங்களில் தன் பேராளுமையைச் செலுத்துவதை ஜப்பான் அச்சமின்றி மேற்கொண்டது. சிங்கப்பூருக்கும், ஆவாய்க்குமிடையில் பசிபிக் மாகடலில் ஜப்பானின் இத்தகைய அச்சமற்ற நடமாட்டம் அதிகரித்தது. ...ான் சாண்டுங்கிலிருந்து வெளியேறினுலும் தன்னுடைய ...மைகளை மஞ்சூரியாவில் நிலைப்படுத்திக் கொண்டது. மேலும்

1915-ல் அது பிறநாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகள் இத்தகைய அதனுடைய பல உரிமைகளை வலியுறுத்தின.

இந்த மாநாட்டால் ஜப்பான் மற்ற நாடுகளின் நல்லெண்ணத்தைப் பெற்றது. இந்த நல்லெண்ணமே அது தன் இடங்களில் தன் அதிகாரத்தை வலுப்படுத்திக் காத்துக் கொள்ள வாய்ப்பளித்தது. சீனு முதலிய பிறநாடுகளிலிருந்து தனக்குக் கிடைத்த மூலப் பொருள்களும், உணவுத் தவசங்களும் இம் மாநாட்டின் முடிவுக்குப்பின் ஜப்பானுக்குக் கிடைக்காமல் போனதால் ஜப்பான் தன் காலிலேயே நிற்க முற்பட்டது. இதனால் ஜப்பானின் தொழில் வளமும், படைவளமும் மிகக்குறுகிய காலத்திலேயே மற்ற நாடுகள் கண்டு வியக்கும் வண்ணம் வளர்ந்து நின்றன. இத்தகைய வளர்ச்சியால் வளர்ந்துவரும் அதன் மக்கள் தொகைக்கு உள் நாட்டு உருவாக்கத்தாலேயே தன்னிறைவு ஏற்பட்டது. இனி போரிட்டு வளம் பெறுவதைத் தவிர்த்து, பொருள் உருவாக்கத்தை வளப்படுத்தி அயல் நாட்டுச் சந்தைகளில் விற்றுவரும் வருமானத்தால் ஜப்பான் வளம் பெறத் தொடங்கியது. இதனால் ஜப்பானின் கைத்திறமும், வாணிகமும் வளர்ந்ததோடு அயல் நாட்டாரின் நல்லெண்ணமும், நல்லுறவும் ஜப்பானுக்குக் கிடைத்தது. தன் உருவாக்கப் பொருள்களுக்குச் சந்தைகளைத் தேடிச் சென்று தொலைகிழக்கு நாடுகளிலும், தென் கிழக்காசியாவிலும் செல்வாக்குப் பெற்றுவிட்ட ஜப்பான் பிற்காலத்தில் அந்நாடுகளையே படைவலியால் வெல்ல நினைத்தது. எனவேதான் வாசிங்டன் மாநாடு ஜப்பானின் அதிகார வெறியைத் தடுத்து நிறுத்தியதென்பதற்குப் பதிலாக அதனை வளர்த்ததென்றும் கூறலாம். அந்தச் சமையத்திற்கு அதன் வெறி தணிந்தது போல் காணப்பட்டாலும், மற்ற நாடுகளின் குறுக்கீடு இல்லாததால் அது தன்னிச்சைபோல் வளர்ந்து பிற்காலத்தில் தன்னுடைய பேராளுமை வெறியைப் பெரிது படுத்தி நின்றது. இதன்முடிவே இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்குக் கரணியமாய் அமைந்தது.

சீன ஜப்பானிய உறவு (1905—1937)

ஜப்பானின் செல்வாக்கு மஞ்சூரியாவில் மட்டும் நிலைத்திருந்தால் போதுமென்று அஃது நினைத்திருந்தால் கூட அஃது சீனவை விட்டு வெளியேறியிருக்கக் கூடும். ஆனால், அது சிறிது சிறிதாகத் தன் செல்வாக்கைச் சீனவில் நிலைநாட்ட வேண்டுமெனத் திட்டமிட்டிருந்தது. மஞ்சூரியாவின் வாணிகமும், சுரங்கங்களும், தொழிலகங்களும் தன்னுடைய செல்வத்தை ஓரா[illegible] உயர்த்துகின்றதெனில் சீன முழுவதிலும் இத்தகைய ஏந்துகளைத்

தான் பெற்றால் மேன்மேலும் தன் செல்வம் வளருமென்பதே ஜப்பானின் பேராசையாகும். மேலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜப்பானின் பெரும் பொருள் உருவாக்கத்தை விற்பதற்குத் தைவான், கொரியா, மஞ்சூரியா ஆகிய சிறு நாடுகளைத் தவிர சீனா போன்ற பெரிய நாடு தனக்குக் கிடைக்க வில்லையே என ஏங்கி அதற்காக ஜப்பான் முயன்று கொண்டிருந்தது. தன்னுடைய உருவாக்கத்திற்கு வேண்டிய மூலப் பொருள்களைச் சீனாவிலிருந்து மிக எளிதாகத் தன் நாட்டுக்கு வெகு அருகில் பெற்றுவிட முடியுமென ஜப்பான் நினைத்தது. தொலைகிழக்கு நாடுகளில் ஆசியப் பிரிவைச் சேர்ந்த சீனாவும், ஜப்பானும் எல்லாவகையிலும் ஒன்றிணைந்து 'ஆசியா ஆசியருக்கே' என்னும் உணர்ச்சியுடன் செயல்படவேண்டுமென்று ஜப்பான் நினைத்தது. இதனால் ஒவ்வொரு முயற்சியிலும் தனது வணிகச் செல்வாக்கைச் சீனாவிலுள்ள பதினெட்டு மாநிலங்களிலும் பரப்புவதில் ஜப்பான் பாடுபட்டது. ஜப்பான் நாட்டு அஞ்சலகங்களும், தூதரகங்களும் சீன நாட்டின் துறைமுகங்களில் ஏற்படுத்தப் பட்டன. நூற்றுக்கணக்கான ஜப்பானிய வணிகர்கள் நாள் தோறும் சீனாவுக்குச் சென்ற வண்ணமிருந்தனர். 1901-லிருந்து ஆயிரக்கணக்கான சீன மாணவர்கள் ஜப்பானின் தலைநகரான தோக்கியோவிலும், மற்றும் பல பல்கலைக்கழகங்களிலும் மேற்கத்தியக் கல்வி முறைகளையும், பண்பாடுகளையும் கற்றுத் திரும்பினர்.

1911-ல் சீனாவில் ஏற்பட்ட புரட்சியும், அதன் பயனாய் யுவான்சிகே குடியரசுத் தலைவரானதும், 1912-ல் புதிய அரசியலமைப்பு ஏற்பட்டதும், அதன் வழி ஒரு குடியாட்சி சீனாவில் ஏற்பட்டதும் நாமறிந்த செய்திகளே. இதற்குப் பின்னும் சீனாவில் அமைதி ஏற்படவில்லை. யுவான்சிகே மிகவும் முதியவர்; புதிய குடியரசை ஏற்று நடத்தும் திறமையை அவர் பெற்றிருக்கவில்லை. புதிய மக்களவையில் கோமிண்டாங் கட்சியினரே பெரும்பான்மையாக இருந்தனர். முதலிலிருந்தே இக் கட்சியினர் யுவான்சிகேயை வெறுத்தனர். இவர் தென் சீனாவில் தன்னுடைய ஆள்களைப் படைத்தலைவர்களாக அமர்த்தினாரென்பதைக் கண்டித்து சன்யாட் சென் தலைமையில் ஒரு பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. அக் கலகத்தை யுவான்சிகே அடக்கிவிட்டு சன்யாட்சென்னை நாட்டை விட்டே ஓடச் செய்தார். இதற்கிடையில் 1913-ல் மக்களவை கலைக்கப்பட்டது. 1915-ல் மீண்டும் மன்னராட்சி ஏற்பட்டதாக யுவான்சிகே அறிவித்தார். இதற்கிடையில் 1914-ல் தொடங்கிய உலகப் பெரும்போரில் ஜப்பான் பிரிட்டனுடன் சேர்ந்து கொண்டு செருமனி மீது படையெடுக்க வேண்டியதாயிற்று. செருமன்

செல்வாக்குப் பெற்றிருந்த சீனுவிலுள்ள சாண்டுங் மாநிலத்தை ஜப்பான் தாக்க முற்பட்டது. சீனு நடுநிலைமை தாங்கியும் தன் நாட்டில் போர்ச் சூழல்கள் ஏற்படுவதை எவ்வளவோ எதிர்த்துக் கூறியும் ஜப்பானும், பிரிட்டனும் கேட்க வில்லை. ஜப்பான் செருமனியின் படைத்தளமான சீனுவிலிருந்த கியோச்சோ என்னு மிடத்தை முற்றுகையிட்டது. முடிவில் சீனுவில் செருமனியின் ஆளுமையிலிருந்த எல்லா விடங்களையும் ஜப்பான் பெற்று விட் டது. தனக்குச் சீனுவின் பகுதிகளைக் கைப்பற்ற வேண்டுமென்னும் உள்நோக்கம் இல்லையென்றும், ஆனுல், கொள்கைக்காகவே தான் பிரிட்டனுடன் சேர்ந்து செருமனியை எதிர்ப்பதாகவும் ஜப்பான் கூறியது. ஆனுல், செருமனியின் ஆளுமையிலிருந்த எல்லா விடங்களையும் வென்ற பின்னும், மேன்மேலும் சீனப் பகுதிகளைச் சேர்த்துக் கொள்ள முற்பட்டது. செருமானியக் கப்பல்கள் ஆசியாவின் கடற்கரையிலிருக்கும் வரை தன் வற்பிடிப்புச் செயலை விடுத்துச் சீனுவிலிருந்து வெளியேற முடியாதென ஜப்பான் அறிவித்து விட்டது. அத்தோடு செருமனிக்குச் சொந்தமான மார்சல், கரோலினு முதலிய தீவுகளையும் ஜப்பான் கைப்பற்றிக் கொண்டது.

நாம் மேலே குறிப்பிட்டது போல முதல் உலகப் போர் நடந்து கொண்டிருக்கும்போது சீனுவிலேற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களால் யுவான்சிகே 1915-ல் மீண்டும் மன்னராட்சியை அறிவிப்புச் செய்து, அயல் நாடுகளுக்கு அதிகமான சலுகைகளை வழங்கினுர். சீனுவில் செருமனிக்குட்பட்டிருந்த இடங்களை யெல்லாம் முன்னரே கைப்பற்றி விட்ட ஜப்பான் யுவான்சிகேயின் இத்தகைய சலுகைகளைக் கண்டதும் மேலும் தன் செல்வாக்கைச் சீனுவில் வளர்த்துக் கொள்ள முயன்றது. தன் செல்வாக்கு படிப் படியாகச் சீனுவில் வளர்ந்தவுடன் அதனை அடியோடு தன் கீழ்க் கொண்டுவர வேண்டுமென்பதே ஜப்பானின் பேராளுமை ஆசை யாகும். இதற்காகத்தான் யுவான்சிகேக்குத் தனது 'இருபத்தொரு கோரிக்கைகளை' ஜப்பான் அனுப்பியது. இந்தக் கோரிக்கைகள் யாவும் முழுக்க முழுக்கச் சீனுவை ஜப்பானின் காலடியில் வைப்ப தாகவே இருந்தன. இவையாவும் சீனுவால் ஏற்றுக் கொள்ளப் பட்டால் அது ஜப்பானின் ஒரு பாதுகாப்பு நாடாகவே இருக்கும்!

### இருபத்தொரு கோரிக்கைகள்

இந்த 'இருபத்தொரு கோரிக்கைகளை'க் கீழ்க்கண்ட ஐந்து தலைப்புகளில் அறியலாம். முதலாவதாக சாண்டுங் பற்றியது. செருமனி உரிமை பெற்றிருந்த சாண்டுங்கை முதல் உலகப்போரின் போது ஜப்பான் கைப்பற்றிக் கொண்டதை மேலே கண்டோம்.

சாண்டுங் தொடர்பாகவுள்ள உரிமைகளைத் தங்களுக்குள் பேசி முடிவு செய்வதற்கு ஜப்பானும், செருமனியும் தவிர, சீனு அதில் தலையிடக் கூடாது; சீனு சாண்டுங்கையும், அதன் கடற்கரைகளையும் ஜப்பான், செருமனி தவிர வேறு மூன்ருவது நாட்டிற்குக் குத்தகைக்கு விடுவதோ அல்லது வேறு வகைச் சலுகைகளைத் தருவதோ கூடாது. ஜப்பானுக்குப் புதிய இருப்புப்பாதை யொன்றை அமைத்துக் கொள்ளும் சலுகையும், அதன் துறைமுகங் களுடன் வாணிகம் செய்யும் உரிமையும் வழங்க வேண்டும்.

இக் கோரிக்கைகளின் இரண்டாம் பகுதி தென் மஞ்சூரியா, கிழக்கு உள் நாட்டு மங்கோலியா முதலியவற்றைப் பற்றியதாகும். இவ்விடங்களில் ஜப்பான் புதிய இருப்புப் பாதைகளை அமைத்துக் கொள்ளவும், புதிய துறைமுகங்களோடு வாணிகம் செய்யவும், இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மட்டுமெனப் பெற்றிருந்த சலுகைகள் 99 ஆண்டுகளாக நீடிக்கப்பட வேண்டும் என ஜப்பான் கோரியது. முன்பு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி இவ்விடங்களில் ஜப்பான் பல கட்டுப்பாடுகளுக் குள்ளான உரிமைகளையே பெற்றிருந்தது. இருப்புப் பாதைகள் செல்லுமிடங்களிலும், ஒப்பந்தத்திற்குட்பட்ட துறைமுகங்களிலும் தான் ஜப்பானியர் பயணம் செய்யவும், வாழவும், நிலங்களை வாங்கவும், விற்கவும், குத்தகைக்கு விடவும், வாணிகம் செய்யவும், வேளாண்மை செய்யவும், பொருள் விளைப்புச் செய்யவும் உரிமை பெற்றிருந்தது. அவ்வாறில்லாமல் சீனுவில் எல்லா இடங்களிலும் ஜப்பானியருக்கு இத்தகைய உரிமைகளை வழங்க வேண்டுமென ஜப்பான் கூறியது. இத்தகைய உரிமை களைச் சீனு இதுவரை கிறித்தவ சமயப் பரப்பூழியர்களுக்குத் தவிர மற்ற எந்த அயல் நாட்டவருக்கும் வழங்கியதில்லையென்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தென் மஞ்சூரியாவிலும், கிழக்கு உள் மங்கோலியாவிலும் சீனு பிறநாடுகளுக்கு எத்தகைய சலுகைகளை வழங்க முற்பட்டாலும் அத்தகைய சலுகைகளை வழங்குமுன் ஜப்பான் நாட்டின் இசைவு பெறவேண்டுமென்றும் ஒரு கோரிக்கை வலியுறுத்தியது. இவ்விரு நாடுகளின் உள்நாட்டுப் பகுதிகளில் பிறநாடுகள் இருப்புப் பாதைகளை அமைக்கவும், வரித்தண்டலைப் பிணையாகக் கொள்ளவும், இசைவளித்து அவற்றிடம் முன்கடன் வாங்கிக் கொள்வது சீனுவின் வழக்கமாகும். இவ்வாறு வழங்கு வதை ஜப்பான் தடுத்து நிறுத்த விரும்பியே இத்தகைய கோரிக்கையை வலியுறுத்தியது. மேலும் ஜப்பான் கிரீனிலிருந்து சாங்சுன் வரை ஓர் இருப்புப்பாதையைக் குத்தகைக்கு விடக் கோரியது. இத்தகைய கோரிக்கைகளைச் சீனு ஏற்றுக்கொண் டால் தென் கொரியாவிலும், கிழக்கு உள் மங்கோலியாவிலும்;

தன்னைத்தவிர மற்ற எந்த நாடும் ஆளுமை பெறமுடியாதென்பதை ஜப்பான் உணர்ந்தது.

ஜப்பானின் கோரிக்கைகளில் மூன்றாவது பகுதி ஆன்-கேபிங் கும்பனத்தைப் பற்றியதாகும். இக் கும்பனம் மையச் சீனாவில் ஆன் ஆற்றைத்தாண்டி ஆங்கௌ துறைமுகத்திற்கண்மையில் அமைக்கப்பட்டிருந்தது. இது சீன நாட்டில் உருவாகும் இரும்பு, நிலக்கரி ஆகியவற்றின் பெரும்பகுதியைப் பெற்றிருந்தது. இக் கும்பனத்தில் ஜப்பானுக்கும் உரிமை இருக்க வேண்டுமென்றும் அத்தகைய உரிமையைத் தன்னுடைய இசைவின்றி ஒழித்து விடக் கூடாதென்றும் ஜப்பான் கோரியது. தன்னுடைய இசைவின்றிச் சுரங்கங்களை வெட்டுவதோ அவற்றில் வேறு நாடுகளை ஈடுபடுத்து வதோ கூடாதென ஜப்பான் வலியுறுத்தியது. இந்தக் கும்பனம் சீன நாட்டின் தொழிலகங்களின் நெஞ்சாங்குலை போல் விளங்கியது. இதன் வளர்ச்சிக்காக ஜப்பானிடமிருந்து சீனா கடன் வாங்கியிருந்தது. அந்த உரிமையை ஒரு சாக்காக வைத்துக் கொண்டுதான் ஜப்பான் இக்கோரிக்கையை விடுத்தது. மேலும் ஜப்பானில் போதிய இரும்புக்கனிகளும் நிலக்கரியும் கிடைக்காத தால் தன் தேவையின் முகாமையை யொட்டி ஜப்பான் சீனாவிடம் இத்தகைய கோரிக்கையை விடுத்தது.

கோரிக்கைகளின் நான்காவது பகுதியில் ஜப்பான் தன்னைத் தவிர எந்தத் துறைமுகத்தையும், வளைகுடாவையும், தீவையும், அல்லது கரையோரப் பகுதியையும் வேறு எந்த நாட்டிற்கும் குத் தகைக்கு விடுவதோ, கொடுப்பதோ கூடாதென சீனாவுக்கு வலியுறுத்தியது.

தனது கோரிக்கைகளின் ஐந்தாம் பகுதியில் ஒன்றன் பின் னொன்றாகப் பலவகைக் கட்டுப்பாடுகளைச் சீனாவின் அயலக உறவு கள் தொடர்பாக விதித்தும், தனக்குப் பல சலுகைகளைக் கோரியு மிருந்தது. சீன அரசு தனது பொருளியல் துறை, படைத்துறை, பாதுகாவல் துறை முதலியவற்றில் அறிவுரை கூறுவதற்கு ஜப்பானிய வல்லுநர்களையே ஏற்றுக்கொண்டு சீன - ஜப்பானிய அதிகாரிகளின் கூட்டு முயற்சியால் சீன அரசை நடத்திச் செல்ல வேண்டுமெனக் கோரியது. போர்க்கருவிகளைச் சீனா வெளி நாடு களிலிருந்து வாங்கும்போது பாதியளவு ஜப்பானிலிருந்தே வாங்க வேண்டுமென்றும் மீதிப் பாதியை அயல் நாடுகளிலிருந்து வாங்க நேர்ந்தால் ஜப்பான் நாட்டு வல்லுநர்களைக்கொண்டே வாங்க வேண்டுமென்றும் கோரியது. சீனாவின் முகாமை நகரங்களில் ஜப்பான் நாட்டு மருத்துவமனைகளும், பள்ளிகளும், கோயில்களும் கட்டுவதற்கு இசைவளிக்க வேண்டுமென்றும், தன் நாட்டுச் சமயக்

கொள்கையைச் சீனுவெங்கிலும் பரப்ப இசைவளிக்க வேண்டு மென்றும் ஜப்பான் கோரியது. யாங்ட்சிகி ஆற்றுச் சமவெளியில் சில இருப்புப் பாதைச் சலுகைகளைத் தனக்குத் தரவேண்டு மென்றும் ஃபார்மோசாவுக்கு எதிரிலுள்ள சீன மாநிலமான ஃபுகினில் ஜப்பானைக் கேளாமல் எந்த வெளி நாட்டவரையும் முதலீடு செய்யச் சீனு இசைவளிக்கக்கூடாதென்றும் கோரியது.

இத்தகைய 'இருபத்தொரு கோரிக்கைகளை' ஜப்பான் யுவான்சிகேக்கு அனுப்பியது. அவற்றை ஏற்றுக்கொண்டால் தான் எத்தகைய நன்மையும் செய்யக் காத்திருப்பதாக ஜப்பான் கூறியது. இக் கோரிக்கைகளனைத்தையும் சீனு ஏற்றுக்கொள்வ தாயின் அது முழுக்க முழுக்கத் தன் அடிப்படையுரிமைகளை ஜப்பானின் காலடியில் வைப்பதாகிவிடும். அக் கோரிக்கைகளைச் சீனு ஏற்றுக்கொண்டால் யுவான்சிகேக்குத் தக்க வெகுமதி அளிப் பதாகவும், இல்லையெனில் போர் தொடுப்பதாகவும் ஜப்பான் சீனுவை அச்சுறுத்தியது. இவ்வச்சுறுத்தலை எதிர்த்து ஐரோப்பிய நாடுகளோ, அமெரிக்காவோ ஜப்பானைக் கண்டிக்கவில்லை. ஏனென்றல் இந் நாடுகள் யாவும் முதல் உலகப்போரிலும், உள் நாட்டுச்செய்தியிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தன. நீண்ட பேச்சு (வார்த்தை) களுக்குப் பின் யுவான்சிகே தன் உள்நாட்டு நிலைமைகளையும், தன் நிலையையும் உணர்ந்து கடைசியாகக் குறிப்பிட்ட ஐந்தாவது பகுதியைத் தவிர, மற்ற நான்கு பகுதிகளில் பெரும்பான்மையானவற்றை ஏற்றுக்கொண்டார். இதனுல் ஜப்பானுக்கு சாண்டுங்கில் செருமனி பெற்றிருந்த எல்லா உரிமைகளும் கிடைத்தன. தென் மஞ்சூரியாவில் ஜப்பானின் ஆளுமை முழுமையாக ஏற்பட்டது. சீன அரசின் அறிவுரை யாளர் ஜப்பானியர் புகுந்ததால் ஜப்பானின் செல்வாக்கு மேன் மேலும் சீன அரசில் வளரலாயிற்று. மங்கோலியாவிலும் இதன் செல்வாக்கு ஏற்பட்டது. ஆக மொத்தத்தில் ஜப்பான் சீன நாட்டில் எல்லாச் சலுகைகளையும் பெற்ற முதல் நாடாக நின்றது. 1916-ல் ஜப்பானுக்கும் உருசியாவுக்குமிடையே ஏற் பட்ட உடன்படிக்கையால் ஜப்பானின் செல்வாக்குச் சீனுவில் மேலும் வலுவடைந்தது. முதல் உலகப்போரில் பிரிட்டனுடன் சேர்ந்து ஜப்பான் செருமனை எதிர்த்துப் போரிட்டதால் செருமனி யின் செல்வாக்கைச் சீனுவிலிருந்து அடியோடொழிக்க முடிந்தது.

ஜப்பானின் இத்தகைய கோரிக்கைகளை யுவான்சிகே ஏற்றுக்கொண்டதால் சீனுவில் ஒரு பெருங் கலகம் தோன்றியது. 1916-ல் யுவான்சிகே இறந்துவிட்டார். தன்னையே மன்னரெனக் கூறிக்கொண்டு, மன்னராட்சி ஏற்பட்டதாகப் பேரறிவிப்புச் செய்து, மக்களின் கோரிக்கைகளை ஏற்காமல் ஜப்பானின்

கோரிக்கைகளுக்கு அடிமையான யுவான்சிகேயின் இறப்புக்குப் பின்னும் மக்களின் கொந்தளிப்பும், கலகங்களும் அடங்கவில்லை. நாட்டில் இரு பெரும் கட்சிப் பிரிவுகள் ஏற்பட்டன. இவற்றில் பிற்போக்காளர் கட்சி வலுப்பெறத் தொடங்கியது. அதில் பெரும்பாலான படைத்தலைவர்கள் இருந்தார்கள். அவர்கள் வட சீனாவில் தங்கள் ஆளுமையை ஏற்படுத்தினார்கள். மற்றொரு கட்சி தென் சீனாவில் ஆளுமை பெற்றது. வட சீனக் கட்சி அமைச்சரவையிலும், தென் சீனக் கட்சி நாடாளும் மன்றத்திலும் ஆளுமை பெற்றன. இவ்விரண்டிற்கும் தலைவராக இலீ—யூவான்—காங் என்பவர் அமைதி காக்கும் சில அறிக்கைகளை விடுத்தார். இச் சமையத்தில் அமெரிக்க ஒன்றியநாடு நடு நிலைமையையும், அமைதியையும் விரும்பும் எல்லா நாடுகளும் தன்னுடன் சேர்ந்து செருமனியை எதிர்க்க வரலாமென அழைப்பு விடுத்தது. இதனால் சீனாவும் நேசநாடுகளுடன் சேர்ந்து கொண்டு முதல் உலகப் போரில் ஈடுபட்டது. நேச நாடுகளுடன் சேர்ந்து போரிட்டால் ஜப்பானின் அதிகார வெறியிலிருந்து தப்பித்துக் கொள்ளலாமென்றும், நேச நாடுகளின் துணைகொண்டு தன் நாட்டிற்குப் பாதுகாப்புத் தேடிக் கொள்ளலாமென்றும் சீனா முதல் உலகப் போரில் ஈடுபட்டது. அமெரிக்க ஒன்றிய நாடுகளின் வேண்டுகோளை ஏற்றுச் சீனா நேச நாடுகளுடன் சேர்ந்து கொண்டு முதல் உலகப் போரில் இறங்கியதை ஜப்பான் எதிர்த்தது. ஏனெனில் சீனாவில் செல்வாக்குப் பெற்றுள்ள தன் மூலமாகவே அமெரிக்கா சீனாவுக்கு அழைப்பு விடுத்திருக்க வேண்டுமென்றும், தன்னைக் கலக்காமல் சீனா போரிலிறங்கியது தவறென்றும் ஜப்பான் கண்டித்துக் கூறியது. ஆனால், செருமனியின் பேராளுமையைத் தடுத்து நிறுத்தவும், உலக சமைதியைக் காக்கவும், சமைதி விரும்பும் ஒவ்வொரு நாடும் அன்றைய முதல் உலகப் போரில் ஈடுபடுவது இன்றியமையாத தொன்றாகி விட்டது.

ஜப்பான், சீனாவைச் சுரண்டி மட்டும் வாழவிரும்பாமல், அதனை மேற்கத்திய நாடுகளின் வற்பிடிப்பிலிருந்து விடுவித்துக் காக்கவும் விரும்பியது. அதற்காகச் சீனாவின் அரசியல், படை, பொருளியல் முதலிய துறைகளைத் திருத்தியமைத்து அதனை ஒரு வலுவுள்ள புதிய நாடாக்க ஜப்பான் விரும்பியது. ஆனால், அதே சமையத்தில் தன் நாட்டு வறட்சியைப் போக்கிக் கொள்ளச் சீன நாட்டு மூலப் பொருள்களைத் தாராளமாக அடைய ஜப்பான் விரும்பியது. சீனாவும், ஜப்பானும் திசையாலும் பண்பாட்டாலும் குருதியுறவாலும் ஒன்றுக்கொன்று பிணைந்துள்ள நாடுகளாகும். எனவே இத்தகைய ஆசிய உடன்பிறப்பாளர்களில் ஒருவரைப் பிரித்து மேற்கத்திய வல்லரசுகள் தங்களுடைய

இரும்புப் பிடியில் அடிமையாக்கிக் கொள்வதை ஜப்பான் விரும்பவில்லை. அவ்வாறு சீனு வல்லரசொன்றின் இரும்புப் பிடிக்குள் சிக்கி விடுமேயானுல் அதே நிலை அண்டை நாடான தனக்கும் ஏற்படுமென ஜப்பான் அஞ்சியதில் தவறில்லை. எனவேதான் அண்டை நாடான சீனுவின் உள்நாட்டுச் செய்திகளிலும் தலையிட்டு அதன் வலுவின்மையைப் பயன் படுத்திக்கொண்டு அந் நாடு முழுவதிலும் குடியேறிவிட்ட மேற்கத்திய நாடுகளை வெளியேற்றிச் சீனு தன் காலாலேயே தான் நிற்கும் வலிமையைப் பெறவேண்டுமென ஜப்பான் விரும்பியது. இத்தகைய மாபெரும் அரசியல் கருத்தைச் சீனுவும் உணராமலில்லை. 'ஆனுல், அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்போல' தன்னை ஏய்த்துச் சுரண்டும் நாடுகளில் ஒன்ருகவே ஜப்பானைச் சீனு கருதியது. எனவேதான் ஜப்பானின் ஒவ்வொரு கூட்டு முயற்சிக்கும் சீனுவின் எதிர்ப்பும், ஒத்துழையாமையும் ஏற்பட்டது. அதே சமையத்தில் ஜப்பானின் அதிகார வெறியும், அதுவிடுத்த இருபத்தொரு கோரிக்கைகளும் சீனரின் கண்ணுக்கு ஜப்பான் ஒரு விழுங்கும் பூதமாகத் தென்பட்டதேயொழிய வழங்கும் அல்லது அணைக்கும் கைகளாகத் தென்படவில்லை. மேலும் ஜப்பான் சீன நாட்டின் மூலப்பொருள்களை மலிவாக வாங்கிச்சென்று தன் நாட்டில் அவற்றைப் பொருள்களாக உருவாக்கி மீண்டும் அவற்றைச் சீன சந்தைகளில் அதிகமான விலைக்கு விற்றது. ஆனுல், ஐரோப்பிய நாடுகளிலிருந்து சீனச் சந்தைக்கு வரும் பொருள்கள் ஜப்பான் நாட்டுப் பொருள்களைவிட மிகவும் மலிவாகக் கிடைத்தன. எனவே ஜப்பான் நாட்டின் உறவும், சார்பும் பொருள்களும் இல்லாமலேயே சீனு தான் சிறக்கக் கூடுமென எண்ணியது. அத்தோடு ஜப்பானுக்குத் தன்னைச் சுரண்டுவதைத் தவிர வேறு கொள்கை இல்லையெனச் சீனு எண்ணியது. ஜப்பானும் தனது புதிய தொழில் வளர்ச்சியாலும், தேசிய உணர்ச்சியாலும் சீனுவையும், உருசியாவையும் எதிர்த்துக்கண்ட வெற்றிகளாலும், அகம்பாவ உணர்ச்சியோடு சீனுவை அரட்டி, மிரட்டி நட்புறவு செய்து கொள்ள விரும்பியதேயொழிய அன்பாலோ அல்லது 'ஆசியா ஆசியருக்கே' என்னும் கொள்கையாலோ சீனுவுடன் நட்புறவு கொள்ளவில்லை. உள்ளபடியே சீனுவும், ஜப்பானும் வரலாற்ருலும், பண்பாட்டாலும், மற்றும் பலவற்ருலும் ஒற்றுமையுடைய ஆசிய இன நாடுகளாக இருந்தாலும் இச் சமையத்தில் அவை ஒன்றுக்கொன்று சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்றே கூறவேண்டும். மிகச் சிறந்த ஜப்பானிய அறிவாளிகளும் தங்களின் அண்டைநாடுகளைத் தாழ்வு மனப்பான்மையோடு

நோக்கினர். இதைப் போலவே மிகச்சிறந்த சீன அறிவாளிகளும் ஜப்பானின் நட்புறவைப் பேரச்சம் விளைவிக்குமென ஐயங் கொண்டனர்.

சீனர் மிகவும் பழைமையான நாகரிகமுடையவர்கள். அந் நாட்டு வணிகர்கள் மிகப் பழங்காலத்திலேயே தொலை கிழக்கு நாடுகளிலெல்லாம் மிகச் சிறந்த வாணிகத்தை நடத்தியவர்கள். ஆனால், அவர்கள் இன்று வளர்ந்து வரும் புதுமைக்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ளும் ஆற்றலற்றவர்களாகக் காணப்பட்டார்கள். எனவேதான் அவர்களுடைய தன்னுரிமை மேற்கத்திய வல்லரசுகளுக்கும், கிழக்கத்திய ஜப்பானுக்கும் ஒரு கேள்விக் குறியாக நின்றது. கொரியாவில் ஆளுமை பெற்ற ஜப்பானியர்கள் சீனாவில் மேற்கத்திய நாடுகள் கால்கோள் கொள்ளுதல் தனக்குப் பேரேதமென உணர்ந்தது. மஞ்சூரியா சீனாவின் ஓர் உறுப் பென்பதை ஜப்பான் ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஏனெனில் அதனுடைய விடுதலைக்கென சீனர் தங்களுடைய பொருளையோ அல்லது ஒரு துளி இரத்தத்தையோ செலவழிக்கவில்லையென்றும், ஆனால், மஞ்சூரியாவில் ஆளுமை பெற்ற ஐரோப்பியரை வெளியேற்றத் தானே எல்லா ஈகங்களையும் செய்ததால் அது தனக்கு மட்டும் உரிமையானதென ஜப்பான் எண்ணியது. மஞ்சூரியாமீது ஜப்பான் கொண்டாடிய இத்தகைய உரிமைக்காகத்தான் சீனாவுக்கும், ஜப்பானுக்கும் மனக்கசப்பு ஏற்படலாயிற்று. 1916-க்குப்பின் ஜப்பானில் அமைக்கப்பட்ட தெராவுச்சி (Terauchi) அமைச்சரவை சீனாவின் ஐயங்களைப் போக்கி அதனை அச்சுறுத்தாமல் தன்னோடு நட்புகொள்ளச் செய்ய வேண்டுமென முயன்றது. இத்தகைய முயற்சிகளில் ஜப்பான் ஒன்றன்பின்னொன்றாக வெற்றி கண்டது. ஆயினும் சீனர் ஜப்பானிய உறவில் கொண்டிருந்த ஐயத்தைப் போக்கிக் கொள்ளவில்லை. அந்த ஐயப்பாட்டை மேலும் வலியுறுத்துவதாக ஜப்பானின் நடவடிக்கைகளும் அமைந்திருந்தன. ஜப்பான் சீனாவின் மீது கொண்டுள்ள ஆளுமை வெறியை ஜப்பானிய அரசியல் கட்சிகள் பலவும் கண்டித்துக் கூறின.

### ஜப்பானும் சைபீரியாவும்

ஜப்பான் கீழ்த்திசை நாடுகளில் அதிவல்லமை படைத்த நாடாக மாறுவதற்கு 1917-ல் உருசியாவில் ஏற்பட்ட புரட்சி மேலும் துணையாக அமைந்தது. ஜப்பான் உருசியாவை மஞ்சூரியாவிலிருந்து வெளியேற்ற முயன்றது. மங்கோலியாவிலும், மஞ்சூரியாவிலுமுள்ள சீன இருப்புப்பாதை முழுவதையும்

தான் கைப்பற்றிக் கொண்டு, சைபீரியாவின்மீது தன் ஆளுமையைச் செலுத்த ஜப்பான் விரும்பியது. இவ்வாறு சைபீரியாவில் ஜப்பான் தலையிடுவதை அமெரிக்க ஒன்றிய நாடுகள் விரும்பவில்லை. ஏனெனில் சைபீரியா மேற்கத்திய நாடுகளுக்கும், அமெரிக்க ஒன்றிய நாடுகளுக்கும் செல்லும் பாதையின் மையத்திலமைந்திருக்கிறது. மேலும் 1917ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் நாள் போல்சுவிக் கட்சியின் தலைவரான இலெனினும், திராட்சுகியும் பிற்போக்காளரை ஒழித்துப் பொதுவுடைமையாளர் (கம்மியூனிஸ்ட்டு)களின் ஆட்சியை ஏற்படுத்தினர். அவ்வாட்சிக்கு இலெனின் தலைவரானார். இத்தகைய சிவப்பு—உருசிய ஆட்சி, வெள்ளை உருசியாவில் பரவாமல் தடுக்க வேண்டுமானால் சைபீரியா எவருடைய ஆளுமையுமின்றித் தனித்திருந்தால்தான் முடியுமென அமெரிக்கா எண்ணியது. எனவே தான் ஜப்பானின் ஆளுமை சைபீரியாவில் பரவுவதை அமெரிக்காவும், பிரிட்டனும், ஃபிரான்சும் விரும்பாவிட்டாலும் விரைவாகப் பரவி வரும் சிவப்பு வண்ணத்தைத் தடுத்து நிறுத்த இம் மூன்று நாடுகளும் ஜப்பானுடன் சேர்ந்து கொண்டு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோவில்சனின் தலைமையில் ஒரு கூட்டுப் படையை யமைத்தன. இதில் ஜப்பான் தனது பெரும் படையைக் கொடுத்து உதவியது. சைபீரியாவில் ஜப்பானியப் படைகள் அதிவிரைவாக முன்னேறி மேற்கத்திய 'திரான்சைபீரியன் இருப்புப் பாதை'யைக் கைப்பற்றின. பின்பு வட சக்காலின் மீது படையெடுத்து அதனையும் கைப்பற்றிக் கொண்டன. தன்னுடைய கூட்டணியிலுள்ள அமெரிக்கா, பிரிட்டன், ஃபிரான்சு ஆகியவற்றின் ஆணைகளை மீறி ஜப்பான் இத்தகைய வற்பிடிப்புச் செயல்களைச் செய்ததால் அந் நாடுகள் ஜப்பானைக் கண்டிக்க முற்பட்டன. அமெரிக்கா ஜப்பானைக் கண்டித்து, சைபீரியாவிலிருந்து வெளியேறும்படி கூறியது. இறுதியாக வாசிங்டன் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி ஜப்பான் வேறுவழியின்றி 1922-ல் சைபீரியாவிலிருந்து வெளியேறியது.

1917-ல் உருசியாவிலேற்பட்ட புரட்சியால் அது வடக்கு, தெற்காகப் பிரிந்து உள்நாட்டுக் கலகத்தாலும் கட்சிகளின் தலைவிரி கோலத்தாலும் பரிதவித்து நின்றது. இதனை வாய்ப்பாக வைத்துக் கொண்டு ஜப்பான், பிரிட்டன், ஃபிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகளுடன் மறைமுக உறுதிமொழிகள் பெற்றுக் கொண்டு சீனாவில் முன்பு செருமனி பெற்றிருந்த உரிமைகளைப் பெற முயன்றது. அவற்றுள் முகாமையானவை சாண்டுங் மாநிலமும்,

நிலநடுக் கோட்டிற்கு வடக்கே பசிபிக் மாகடலில் செருமனி பெற்றிருந்த சில பகுதிகளுமாகும். 1917-ல் அமெரிக்காவும் 'இலான்சிங் இஷி உடன்படிக்கை' (Lansing-Ishii Agreement) ஒன்றை ஜப்பானுடன் செய்து கொண்டு ஜப்பான் சீனாவில் பெற விரும்பும் உரிமைகளை ஏற்றது. இத்தகைய உடன்படிக்கைகளை வைத்துக் கொண்டுதான் ஜப்பான் முதல் உலகப் போரின் முடிவிலேற்பட்ட பாரிசு உடன்படிக்கையில் சாண்டுங்கின் மீதிருந்த தனது உரிமைகளை விட்டுக் கொடுக்க மறுத்துவிட்டது. எனவேதான் நேச நாடுகளும் சாண்டுங்கை ஜப்பானுக்கு அளித்து விட்டன. இதனையறிந்த மற்ற நாடுகளும் சீனாவின்மீதிருந்த தங்கள் உரிமைகளை விட்டுக் கொடுக்க மறுத்து விட்டன.

மக்களின் தேசியக் கட்சி அல்லது கோமிண்டாங் கட்சிக்குத் தலைவராகிச் சீனக் குடியரசை 1912ஆம் ஆண்டு சனவரி முதல் நாள் ஏற்படுத்தி அதன் முதல் குடியரசுத் தலைவரான அறிஞர் சன்யாட்சென் நாளடைவில உருசியாவின் போல்சுவிக் கொள்கையான பொதுவுடைமையை நிலைநாட்ட முற்பட்டார். இதனை விரும்பாத பலர் சியாங்கே சேக்கின் தலைமையில் ஒன்று கூடினர். இவர்கள் நாங்கிங்கில் ஒரு குடியரசை ஏற்படுத்தினார்கள். 1925-ல் சன்யாட்சென் காலமானார். சீனாவில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. அதில் சீனாவின் நான்குதரப்பட்ட பகுதி மக்களும் மோதிக் கொண்டனர். கடைசியில் சீனா காண்டனை மையமாகக் கொண்ட தென் சீனாவாகவும், வட சீனாவாகவும், இதற்கிடைப்பட்ட நாங்கிங் ஆட்சியை மையமாகக் கொண்ட நடுச் சீனாவாகவும் பொதுவுடைமையாளர்கள் பரவியுள்ள இடங்களைக் கொண்ட செஞ் சீனாவாகவும் பிரிந்தது. தென்சீனாவில் கோமிண்டாங் கட்சியினரும், வட சீனாவில் துச்சென்சு (Tuchens) அல்லது படைக்கிழார்களும், மையச்சீனாவில் சியாங்கேசேக்கின் ஆட்சியும், மற்ற இடங்களில் பொதுவுடைமையாளர்களும் முதலில் வலுப்பெற்றிருந்ததால் இத்தகைய உள் நாட்டுப் போர் ஏற்பட்டது. இவ்வாறு சீனா தன்னுள் பிளவுபட்டு அவலப்பட்டு நிற்கும் நிலையைத் தனக்குச் சார்பாக்கிக்கொண்டு ஜப்பான் 1931ஆம் ஆண்டில் மீண்டும் மஞ்சூரியா முழுவதையும் கைப்பற்றிக்கொண்டு சீனாவின் மீது படையெடுத்தது. இந்நிலையில் சீனப் பொதுவுடைமையாளர்கள் உருசியாவோடு தொடர்பு கொண்டு தங்கள் கட்சியை வளர்த்துக் கொள்ள முற்பட்டனர். இதனால் சியாங்கே சேக்குக்கும், பொதுவுடைமையாளர்களுக்கும் தொடர்ந்து சச்சரவுகள் இருந்து கொண்டிருந்தன. இச் சச்சரவுகளைத் தவிர்த்து ஒற்றுமைப் படுத்த சியாங்கேசேக் பெரு முயற்சி எடுத்துக் கொண்டார். அம் முயற்சியில் இந்தியப் பொதுவுடைமைத்

தோழர் எம். என். இராய் என்பவரும் பங்குகொண்டார். ஆனால், கோமிண்டாங் கட்சியினருக்கும், பொதுவுடைமையாளர்களுக்கு மிடையில் தொடர்ந்து போராட்டங்கள் நடந்தவண்ணமிருந்தன. இவ்விரு கட்சிகளுக்கும் சமைதி ஏற்படாமல் போனதற்கும், பொதுவுடைமையாளர்களுக்குச் சீனாவில் பெருஞ் செல்வாக்கு ஏற் பட்டதற்கும் கரணியம் இதில் உருசியா தலையிட்டு எல்லா வகையிலும் பொதுவுடைமையாளர்களை ஆதரித்ததேயாகும். பொதுவுடைமையாளர்களின் கை மேலோங்குவதற்கு மற்றொரு முகாமைக் கரணியம் 1935ஆம் ஆண்டில் சீனப் பொதுவுடைமைக் கட்சிகளின் தலைவராக மா சே துங் (Mao Tse-Tung) ஆனதுதான். இச் சூழலில்தான் 1935ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவின்மீது படை யெடுத்தது. ஜப்பானியப் படையெடுப்பு சீனாவுக்கு நன்மையாக முடிந்தது. 'வீட்டுக்குள்ளே சண்டை போட்டுக்கொள்வோம்; வீடு பற்றிக்கொண்டால் ஒன்று கூடிக் கொள்வோம்' என்ற பாவலரின் கருத்துரையைக் கோமிண்டாங் கட்சியினரும், பொது வுடைமைக் கட்சியினரும் தங்கள் உள்ளத்தில் இறுத்திப் பொது எதிரியான ஜப்பானை எதிர்க்க ஒன்றுபட்டனர். இவ்வாறு ஏறத் தாழப் பத்தாண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்த சீன உள் நாட்டுப் போர் ஜப்பானியரின் படையெழுச்சியால் மறைந்து தேசியப்போராக மாறி 'நாம் சீனர்' என்ற ஒரே உணர்ச்சியோடு எதிர்க்கலாயினர். இதனால் 1937-ல் இரண்டாம் சீன-ஜப்பானியப் போர் ஏற்பட்டது.

# 11. பேராட்சிக் கொள்கையும் குடியாட்சி முறை வளர்ச்சியும்

முன்னுரை

முதல் உலகப் போருக்குப் பின் ஜப்பானில் ஒரு புத்தூழி தோன்றியது. இப் புத்தூழியில், மேசி ஆண்டுமானத்தில் பெரும் பங்கேற்ற பல அரசியல் தலைவர்கள் தங்களுடைய அரசியல் பணிகளைத் தொடர்ந்து செய்தனர். இவர்கள் ஜப்பான் ஒரு பேராட்சியாக (Imperial Government) ஆகவேண்டும் என விரும்பினர். இவர்களுடைய இத்தகைய அரசியல் கோட்பாடு முதல் உலகப் போருக்குப் பின் அரசியலில் பங்கேற்ற இளந் தலைமுறையினருக்கு மாற்றப்பட்டபோது சூழ்நிலையின் கரணியமாக ஜப்பானின் பொருளியல் வளர்ச்சி மலையென வளர்ந்துகொண்டே போயிற்று. பொருளியல் வளர்ச்சியின் கரணியமாக ஜப்பான் நாட்டுக் குமுகாயம், கல்வி முதலியனவும் மிக உயர்ந்து காணப்பட்டன. இத்தகைய வளர்ச்சியின் கரணியமாக அந் நாட்டு அரசியல் கொள்கைகளிலும், அயலகக் கொள்கைகளிலும் மாற்றங்கள் ஏற்படவேண்டியது தேவையாயிற்று. இத்தகைய புதிய அரசியல் மாற்றங்களைச் சில பழைமை விரும்பிகளும், மேசிப் புரட்சியிலீடுபட்ட அரசியற்காரர்களும் எதிர்க்கலாயினர். ஆனால், பெரு வலிமை பெற்றுவிட்ட அதிகாரிகளும், அரசியல் வகுப்பும், படையினரும் இனி மேற்கத்திய முறைகளைப் பின்பற்றி ஜப்பானை ஒரு வலுவுள்ள புதிய நாடாகவும், எல்லாத் துறையிலும் முன்னேறித் தன்னிறைவு பெற்ற நாடாகவும், மக்களாட்சி அடிப்படையில் அதனை மாற்றியமைக்கவும் விரும்பினார்கள். ஆனால், முன்னே கூறிய பழைமை விரும்பிகளும், மேசிப் புரட்சியிலீடுபட்டோரும் ஜப்பான் ஒரு வலுவுள்ள பேராட்சியாகவும், அரசரே எல்லா அதிகாரங்களுக்கும் தலைவராகக்கொண்டு விளங்க வேண்டுமெனவும் விரும்பினார்கள். எனவே இவ்விரு கொள்கைகளுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன. இத்தகைய கொள்கை மாற்றங்கள் மேசிப் புரட்சியின் காலத்திலிருந்தே இருந்ததை நாம் அறிவோம். ஆனால், அப்பொழுது அரசியல் தவிர மற்ற துறைகளில் பழைமைக்கும், புதுமைக்கும் மோதல்கள் ஏற்பட்டன. அதனால்தான் ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட கல்விச் சீர்திருத்

இவ்விரு கொள்கைகளுக்கும் சார்புடைய சட்டமாக ஆக்கப் பட்டது. அஃதாவது புதுமையை விரும்புவோரின் சார்பிலே மேற்கத்திய கல்வி முறை ஜப்பானில் புகுத்தப்பட்டது; ஆனால், அதே சமையத்தில் பழைமையை விரும்புவோர் சார்பாக அக் கல்வி முறையில் ஜப்பான் நாட்டுத் தேசியப் பண்பாடு அப்படியே சேர்க்கப்பட்டது. அஃதாவது தேசிய உணர்ச்சி, கன்ஃபூசிய சமயம், சிந்தோ சமயம், புத்த சமயம் ஆகியவற்றின் கொள்கை கள், பேரரசர் பத்தி முதலியன இப் புதிய கல்வி முறையில் இடம் பெற்றன. இதற்குப் பின்னும் இளைஞர்களின் உள்ளங்களில் நாட்டுப் பற்றும், மாமன்னர் பத்தியும், சமய உணர்ச்சியும் குறைந்து மேற்கத்தியக் கல்வியில் மோகமும், மேற்கத்தியப் பண்பாட்டு உணர்ச்சியும் ஜப்பானில் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சினர். இதனால்தான் எல்லாக் கல்வி நிலையங்களும் அரசு மயமாக்கப்பட்டன. கல்வி நிலையங்கள் அரசு மயமாக்கப்பட்ட பின் பாட நூல்களை உருவாக்கி வெளியிடுதல், ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல் முதலியவற்றையும் அரசே ஏற்றுக்கொண்டு மாமன்னர் பத்தியையும், தேசிய உணர்ச்சியையும் பயிற்று முறையின் முதுகெலும்பாக்கியது. இதனால் ஜப்பானிய ஆட்சி யிலும், குமுகாயத்திலும் உண்மையான ஜப்பானிய உணர்ச் சியைத் தவிர எதிர்ப்புணர்ச்சி விரைவாக வளர்ந்து வலுப்பெற முடியவில்லை. இத்தகைய கடின முயற்சிகளுக்குப் பின்னும் பெரு நகரங்களில் நடத்தப்படும் தனியார் கல்வி நிலையங்களில் அமெரிக்க ஆங்கில நாடுகளின் கொள்கை விளக்கங்கள் பயிற்றுவிக்கப்பட்டு வந்தன.

ஜப்பான் கல்வி முறையில் தன் நாட்டுப் பண்பாட்டையே வளர்க்க விரும்பியது. ஆனால், அறிவு என்பது ஒரு நாட்டுப் பண் பாட்டைக் கொண்டு மட்டும் வளருமானால் அதனை நாம் முழு அறிவு என்று சொல்ல முடியாது. அறிவு எப் பண்பாட்டிலிருந்தும் எம் மொழியிலிருந்தும், எந் நாட்டிலிருந்தும் வரக்கூடும்; அதனை ஏற்றுக்கொள்ளுதலே முழு அறிவு வளர்ச்சிக்கு ஊதியம் தேடுத லாகும். ஆனால், ஜப்பான் தன் நாட்டுப் பண்பாட்டிலிருந்து வழு வாமல் பிற நாட்டுக் கல்வியறிவையும் பெற வேண்டுமென்று விரும்பியது ஒரு புதிரான முயற்சியாகக் காணப்பட்டது. அதற்கொரு தக்க வழியை ஜப்பான் கண்டுபிடித்து விட்டது. அஃதாவது தன் அறிவு வளர்ச்சிக்கு ஊதியமாக அயல் நாட்டு நூல்களைத் தன் நாட்டு மொழியில் மொழிபெயர்த்துக்கொண்டது. அவ்வாறு மொழிபெயர்க்கும்போது எல்லா நாட்டு நூல்களையும் கொள்கை, பொருள் முதலிய வேறுபாடின்றி மொழிபெயர்த்துக் கொண்டது. அவ்வாறு ஜப்பானிய மொழியில் மொழிபெயர்க்கப்

பட்ட நூல்களில் இலக்கியம், அறிவியல், பொதுவுடைமைக் கொள்கை, முதலாளியக் கதைகள் முதலிய எல்லாவற்றைப்பற்றி யும் எண்ணிறந்த நூல்கள் எழுதப்பட்டன. ஒரு நாடு மறுமலர்ச்சி பெறவேண்டுமானுல் அந் நாட்டில் கல்வியறிவு வற்ருத ஊற்ருகக் காணப்பட வேண்டும். இம் முறையில் ஜப்பான் தன்மொழி பெயர்ப்புகளின் மூலம் எடுத்த எடுப்பிலேயே வெற்றி கண்டு விட்டது. ஜப்பானியர்கள் மொழிபெயர்ப்பு நூலாயினும் சரி, தங்கள் நாட்டு நூலாயினும் சரி, எது தங்கள் முன்னேற்றத்திற்கு வழி காட்டியாய் நிற்கிறதோ அத்தகைய நூலேயும் அறிவையுமே தலே மேற்கொண்டு போற்றினர். எனவே நாளடைவில் அவர் களின் எதிர்காலத்தை ஆக்குவதற்குப் பயன்பட்ட மேற்கத்திய நூல்களும், அறிவுமே வலுவடைந்துவிட்டன. அவ்வாறு வலுவடைந்த மேற்கத்தியக் கல்வியால் ஜப்பானியரின் உள்ளத்தில் தன்னுரிமை, குமுகப் பொதுவுடைமை (சோசலிசம்) முதலிய கொள்கைகள் துளிர்விட்டன.

மேற்கத்தியத் தன்னுரிமை, குமுக நிகரமைப்புக் கொள்கைகளின் நுழைவு

மேற்கத்தியக் கல்வி முறையால் மக்களாட்சிக் கொள்கையும், நிகரமைப்புக் கொள்கையும் (Socialism) வெகுவாக ஆட்கொள் ளத் தொடங்கின. இச் சமையத்தைப் பயன்படுத்திக்கொண்டு சாமுராய்கள் ஜப்பானிய அரசுப் பதவிகளேயும், அரசியல் கட்சிப் பதவிகளேயும் கைப்பற்றிக்கொண்டு ஜப்பானிய ஆட்சியிலும், அரசியலிலும் பெரும் பங்குகொள்ள நினேத்தனர். 1918-க்குப் பிறகு ஜப்பானிலிருந்த அரசியல் கட்சிகள் கண்ணே மூடிக்கொண்டு அரசை ஆதரிப்பதைவிட்டு அரசைப் பார்த்து அரசின் குறைகளேச் சுட்டிகாட்டின. ஆகவே இவ்வரசியல் கட்சிகள் அமைச்சரவை யின் அதிகாரங்களேக் கட்டுப்படுத்தின. முன்னிலே மீட்சிக்கு முன் அரசியலதிகாரங்களேக் கைப்பற்றி ஏகபோகமாய் ஆண்ட சத்சுமா சாமுராய்கள் இப்போது எதிர்க் கட்சி என்ற பெயரால் அமைச்சர வையை எதிர்த்து அவர்களின் வல்லதிகாரங்களேக் கட்டுப் படுத்தலாயினர். இத்தகைய எதிர்க் கட்சியின் வளர்ச்சியால் ஜப்பானிய அதிகாரிகளோ அரசியற்காரர்களோ தங்கள் அதிகாரங்களேக் கட்டுக்கடங்காமல் பயன்படுத்த முடியவில்லே. இத்தகைய ஒரு புதிய முறையில் வளர்ந்து வரும் ஜப்பானிய அரசியலும், அமைச்சரவையும், அரசியல் கட்சிகளும் மக்களாட்சியின் அடிப்படையில் வளர்ச்சி பெற்றன.

இவ்வாறு ஜப்பானில் மக்களாட்சிக் கொள்கைகள் வளரு வதைப் பழைமை விரும்பிகளும், முற்ருளுமையாளர்களும்,

வேளாளர் குடும்பங்களும் விரும்பவில்லை. இத்தகையோர் ஒன்று கூடி மக்களாட்சிக் கொள்கைக்கெதிராகக் கலகங்கள் செய்தனர். சான்ருக, ஆயிக்கெந்தாரோ (Oikentaro) என்பவன் தன்னையோர் 'ஏழைகளின் தலைவ'னென்றும், தேசியக்காரனென்றும், அயலகக் கொள்கைகளை எதிர்ப்பவனென்றும் கூறிக் கொண்டு 1892ஆம் ஆண்டில் 'கீழையுலக விடுதலைக் கழகம்' (ஓரியண்டல் லிபரல் கட்சி-Oriental Liberal Party) ஒன்றை ஏற்படுத்தினுன். இக்கட்சி சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்டு ஒப்போலை (Vote) யுரிமை வழங்கும் முறையை எதிர்த்தது. எல்லாருக்கும் ஒப் போலையுரிமை வேண்டுமென்றும், அது சொத்துரிமை அடிப் படையில் அமையக் கூடாதென்றும், அவ்வாறு சொத்துரிமை யடிப்படையில்தான் ஒப்போலையுரிமை வழங்கப் படுமானல் எல்லா ஏழைகளும் சொத்துரிமை பெறுமாறு அரசியல், பொருளி யல் சட்டங்களைச் சீர்திருத்தியமைக்க வேண்டுமென்றும் ஆயிக் கெந்தாரோவின் கட்சி கோரியது. இத்தகைய குமுகப் பொது வுடைமைக் கொள்கையை மிகவெளிய தொழிலாளர்களான கைவண்டி (ரிக்ஷா)க்காரர்களும், செருப்புத் தைப்பவர்களும், கொத்தர்களும், தச்சர்களும், குடிக்கூலிக்காரர்களும் எளிதில் புரிந்து கொண்டு செயலாற்ற முடியவில்லை. இத்தகைய தொழி லாளர்களே தன்னகத்தார் விடுதலைக்கட்சியில் அதிகமாக இடம் பெற்றிருந்தார்களென்பது குறிப்பிடத்தக்கது. ஆயிக்கெந்தாரோ மேற்கத்தியக் கொள்கைகளை எதிர்ப்பவனுயிருந்தும் தன்னை யறியாமலேயே மேற்கத்திய நிகரமைப்புக் கொள்கையைத் தன் கட்சியின் கொள்கையாகக் கொண்டு பரப்பினுன். இவ்வாறு ஜப்பானில் நிகரமைப்புக் கொள்கை வளர முற்பட்டது.

மேற்கத்திய நூல்கள் எல்லாவற்றையும் ஜப்பான் தன் நாட்டு மொழியில் பெயர்த்துக்கொண்டதென்பதைக் கண்டோம். அத் தகைய மொழிபெயர்ப்பு நூல்களில் நிகரமைப்புக் கொள்கை களடங்கிய நூல்கள் மிகுதியாக இருந்தன. அக் கொள்கைகளைத் தங்கள் நாட்டு மொழியில் எளிதாகப் படித்தறிந்த ஜப்பானியர் நிகரமைப்புக் கொள்கையின்மீது தணியாத பற்றும் கொண்டனர். இதனுல் குமுகாயத்தின் ஏற்றத்தாழ்வுகளையும், பொருளியற் குறைபாடுகளையும், உள்ளவன், இல்லாதவன் ஆகியோரின் சிக்கல்களையும் ஜப்பானிய எழுத்தாளர்கள் பலர் தங்களின் படைப்புகளில் புகுத்தினர். சிறுகதைகள், கட்டுரைகள், பாக்கள் (கவிதைகள்), நாடகங்கள் முதலியவற்ருல் நிகரமைப்புக் கொள்கையை இவ்வெழுத்தாளர்கள் ஜப்பானில் பரப்பினர். மேற்கத்தியக் கல்வியறிவும், ஆயிக்கெந்தாரோவின் கட்சியும், இவ்வெழுத்தாளர்களின் நூல்களும் பல படித்த ஜப்பானிய

இளைஞர்களைப் பெரிதும் கவர்ந்தன. இவ்விளைஞர்கள் ஒன்றுகூடி 1898ஆம் ஆண்டில் நிகரமைப்பு மன்றம் ஒன்றினை ஏற்படுத்தினர். இம் மன்றம் முன்னரே ஜப்பானில் நிலவியிருந்த கிறித்தவர்களின் பொதுவுடைமை மன்றத்தோடு இணைந்து ஜப்பான் முழுவதும் பொதுவுடைமைக் கொள்கையைப் பரப்பலாயிற்று. பொதுக் கூட்டங்கள், சிறப்புச் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், நாடகங்கள் முதலியவற்றால் இம் மன்றங்கள் பொதுவுடைமைக் கொள்கைகளை ஜப்பானில் வளர்த்தன. காரல் மார்க்சு, புனித சைமன், ஃபவுரியர், புரவுதான் முதலிய பொதுவுடைமைக் காரர்களின் நூல்கள் ஜப்பானில் புகழடைந்தன. இவ்வாறு தன்னுடைய நிகரமைப்புக் கொள்கைக்கு நாடெங்கிலும் ஆதரவிருப்பதையறிந்த 'தன்னகத்தார் விடுதலைக் கட்சியினர்' ஓசாகாக் கிழமை வெளியீடு (The Osaka Weekly) ஒன்றை வெளியிடலாயினர். இக் கிழமை வெளியீடுதான் முதன் முதலில் ஜப்பானில் தோன்றிய தொழிலாளர்களின் தாளிகையாகும். இதனைத் 'தொழிலாளரின் தலைவன்' எனலாம். இத் தாளிகை அரசியல் தலைவர்களையும், அரசுப் பணியாளர்களையும், செல்வர்களையும் இடித்துரைத்தது. அவர்களின் ஒழுக்கக் கேட்டிற்குக் கரணியம் மேற்கத்திய நாகரிகமே எனவும் தன் நாட்டுப் பண்பாட்டில் வழுவாதவன் ஏழையுழவனும், ஏழைத் தொழிலாளியுமே என இத் தாளிகை கூறியது. எனவே நாட்டுப்புற உழவர்களும், நகர்புறத் தொழிலாளர்களும் பொதுவுடைமைக் கொள்கையிலும், தன்னகத்தார் விடுதலைக் கட்சியிலும் பெரிதும் நாட்டம் கொண்டனர். 1911-ல் பொதுவுடைமைக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு 'குமுக மக்களாட்சிக் கட்சி' (Social Democratic Party) என்னுமொரு கட்சி தோன்றியது. இந்தக் கட்சியில் சிறந்த தலைவர்கள் பலரும் தீவிரவாளர்களும் ஈடுபாடு கொண்டனர். அவர்களில் ஒருவர் தான் பிற்காலத்தில் ஜப்பானிய நாட்டுத் தீவிரப் பொதுவுடைமைக்காரரான காதயமாசென் (Katayamasen) என்பவராவார். இக் கட்சி ஆயிக்கெந்தாரோவின் கட்சியைப் போலன்றிப் பரந்த நோக்கங்கள் பலவற்றைக் கொண்டிருந்தது. உலக உடன்பிறப்பாண்மை, படையொழிப்பு முறை, சொத்து, நிலம் முதலியவற்றைப் பொதுவுடைமையாக்குதல், அரசியலில் எல்லாருக்கும் சமவுரிமை, எல்லாருக்கும் இலவசக் கல்வி முதலியவை இக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளாகும். ஆனால், இக் கட்சி 1904-ல் அரசால் தடை செய்யப்பட்டது.

1903-ல் தொடங்கப்பட்ட 'பொதுமக்கள் செய்தி' (Commoner's News) எனப்படும் மற்றொரு தாளிகையும் பொதுவுடைமைக் கொள்கைகளை ஜப்பானில் பரப்பியது. இத் தாளிகை

பகுத்தறிவுக் கொள்கைகளையும், சிறைச்சாலைச் சீர்திருத்தங்களை யும் பரப்பப் பாடுபட்டது. செல்வர்களுக்கு அதிகவரிகளை விதிக்க வேண்டுமென்றும் கிழான் ('பிரபு') போன்ற பட்டங்களை ஒழிக்க வேண்டுமென்றும் இக் கட்சி வலியுறுத்தியது. முன்னரே 1901-ல் கோதோகு (Kotoku) என்பவரால் வெளியிடப்பட்டிருந்த நூலொன்றில் ஜப்பான் நாட்டின் அயலகக் கொள்கையும், அயல்நாட்டுப் போர்களும், முதலாளிகளுக்கும், கிழார்களுக்குமே நன்மையாய் நின்றனவென்றும், ஏழைகளுக்கு எத்தகைய நன்மையும் இவற்றால் ஏற்படவில்லையென்றும் எடுத்துரைக்கப் பட்டிருந்தது. கோதோகு ஆயிக்கெந்தாரோவின் மாணவனென்பது குறிப்பிடத்தக்கது. இவரையடுத்துப் பல எழுத்தாளர்களும் பொதுவுடைமைக் கொள்கையைப் பரப்பினர். மேற்படி கட்சிகளும், தாளிகைகளும் பொதுவுடைமைக் கொள்கைகளைத் தீவிரமாக ஜப்பானில் பரப்பின. இவர்களுக்கு ஊக்கமளிப்பது போல சீனாவிலும், உருசியாவிலும் இத்தகைய கொள்கை வலுவடைந்து நின்றது. அமெரிக்கர்கள் விதித்த குடியேற்றத் தடைச் சட்டங்களால் நலிவுற்ற ஜப்பானியர் தங்கள் நாட்டில் வாழ வழியிருந்தும், வற்றாத செல்வமிருந்தும், ஏழைகளாய் அயல் நாடுகளில் குடியேறும் அவலநிலைக்கு ஆளானதை எண்ணி வருந்தினர். மேசிப் புரட்சியாலேற்பட்ட செல்வ வளர்ச்சியின் பயனை ஒரு சில செல்வர்களின் குடும்பங்களே துய்த்து வரவும், அரசியலிலும், நாட்டின் செல்வத்திலும் பங்கில்லாமல் ஆயிரக் கணக்கான ஜப்பானியர் பலர் வாழவழியற்றுக் கூலிகளாய் வெளிநாடுகளுக்குச் செல்வதையும் எண்ணிப் பார்க்கலாயினர். இனிச் சிந்திப்பதில் பயனில்லை; செயல் படுவோம்; சமநிலைக் குமுகாயத்தைக் காண்போமெனக் கோதோகு நேரடிச் செயலில் இறங்கும்படி ஜப்பானியரைத் தூண்டினர். பலர் இவருடைய கட்சியில் சேர்ந்து தீவிரப் பொதுவுடைமைக்காரர் களாயினர். இக் கட்சியினரே 1910-ல் மேசி மன்னரைக் கொல்லவும் முற்பட்டனர். எனவே 1911-ல் கோதோகுவும், அவருடைய கட்சியினரும் நாடு கடத்தப்பட்டனர்.

### சமயச் சார்பற்ற தேசியக்கொள்கை (Heterodox Nationalism)

மேற்கண்ட நிகரமைப்புக் கொள்கை ஜப்பானில் வளர்ச்சி பெற்று வளர்ந்து வந்த அதே சமயத்தில், ஜப்பானிய ஆட்சியைக் கடல் கடந்த நாடுகளிலும் பரப்பும் முற்றுருமை அரசியற் கொள்கையும் வளரலாயிற்று. இத்தகைய கொள்கையையே நாம் 'பேராட்சிக் கொள்கை' என்கிறோம். இக் கொள்கை 19ஆம் நூற்றாண்டிலேயே ஜப்பானில் வேரூன்றி விட்டது. கி. பி. 1881ஆம் ஆண்டில் இக் கொள்கையை

சைகோ (Saigo) என்பவர் நிலைநாட்டினர். இவர் முன்னிலை மீட்சியில் ஈடுபட்ட தலைசிறந்த தலைவர்களில் ஒருவரென்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பேராளுமைக் கொள்கையை ஜப்பானிய மக்களின் உள்ளங்களில் பரப்புவதற்காக செனியோசா (Genyosha) என்ெருரு கழகமும் ஏற்படுத்தப்பட்டது. சைகோவின் கட்சியினர் அதிகார வகுப்பினரையும், மேற்கத்திய நாகரிகம் ஜப்பானில் புகுவதையும் தன்னலமிகளையும் வெறுத்தனர். ‘பேரரசர்’, ‘பெருநாடு’ ஆகிய இரண்டுமே இவர்கள் வணங்கும் தெய்வங்களாயின. இவற்றிற்கு மாறுக எழும் எத்தகைய கொள்கையையும் இவர்கள் வெறுக்கலாயினர்.

செனியோசா கட்சியின் மிக முகாமைத் தலைவரான தோயாமா மித்சுரு என்பவர் ஆசிய நாடுகள் முழுவதையும் இணைத்து ஜப்பானின் தலைமையில் ஒரு பேராட்சியை ஏற்படுத்த வேண்டுமெனக் கூறினர். இதனடிப்படையில்தான் இவரும், இவருடைய கட்சிக்காரர்களும், சீனக் குடியாட்சித் தலைவரான சன் யாட் சென்னுக்கும், மற்ற சீனத் தலைவர்களுக்கும் ஆதரவளித்தனர். இவ்வாறு ஆதரவளிப்பதால் சீனு ஆசியக் கூட்டாட்சியில் ஜப்பானின் கீழ் ஒன்றிணைந்து மேற்கத்திய எதிரிகளோடு சேராமல் ஜப்பானுடன் தனித்திருக்குமென இவர்கள் எண்ணினர்.

1900-ல் செனியோசாக் கட்சியைச் சேர்ந்த தோயாமாவின் மாணுக்கர் பலர் பேச்சாளர் மன்றங்களை ஏற்படுத்தி வெள்ளையர் நாடான உருசியாவை வீழ்த்தி ஜப்பானுடைய எல்லையை பிளாக்-திராகான் ஆறு வரையில் பரப்ப வேண்டுமெனத் தீவிர முழக்கம் செய்தார்கள். எனவேதான் இத்தகைய பேச்சாளர்கள் ‘பிளாக் திராகான் கழகத்தினர்’ என்று அழைக்கப்பட்டனர். இக் கழகம் நாளடைவில் மக்களின் பேராதரவைப் பெற்று விட்டது. ஆசியா முழுவதும் ஜப்பானின் தலைமையை ஏற்கச் செய்வதும், மேற்கத்தியப் பண்பாடுகளை ஆசியாவில் அடியோடொழிப்பதும் இக் கழகத்தின் முகாமைக் கொள்கைகளாகும். இக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வன்முறைகளின் மூலம் தங்கள் கொள்கைகளை வளர்க்க முற்பட்டனர். இவர்களின் பரந்த ஆறுல், மதத்திற்கு அப்பாற்பட்ட இத்தகைய தேசியக் கொள்கையை ஆசிய மக்கள் ஊன்றி உணரலாயினர். ஜப்பானில் மூத்தோரவையின் பிடியிலிருந்து அரசியல் விடுபட்டபின் இத்தகைய தீவிரத் தேசியவாளர்களின் கொள்கை சிறிது சிறிதாக ஜப்பானின் அரசியற் கொள்கையாக மாறலாயிற்று.

கிதா இக்கி (Kita Ikki)

மேற்கூறிய சமயச் சார்பற்ற தேசிய உணர்ச்சியை ஜப்பானில் ஏற்படுத்தியவர்களில் மற்ருெரு முகாமை வாய்ந்த தலைவர் கிதா இக்கி என்பவராவார். இவரும் சீனப் புரட்சியாளர்களுக்கு ஆதரவு காட்டினர். ஆனல், சன்யாட்சென் குடியாட்சி முறையிலிருந்து வழுவித் தனிப்பட்ட போக்கில் செல்வதை அறிந்ததும் இவர் சீனவை ஆதரிக்கவில்லை. 1915-ல் சீனப் புரட்சியைப் பற்றிய நூலொன்றை வெளியிட்டார். அதில் சீனவில் எவ்வாறு ஒரு சிலரே குடியாட்சி நன்மைகளை துய்க்கிருர்களென்றும், மற்றவர்கள் எவ்வாறு பழையபடியே ஏந்தற்றுத் தவிக்கிருர்களென்றும் விளக்கினர். எனவே சீன முடியாட்சியினின்று விலக்குப் பெற்ருலும் படைத் தலைவர்களிடமிருந்து அதனல் விலக்குப்பெற முடியவில்லையென்றும், அவ்வாறு விலக்குப்பெற்ற பின்பே அதனல் ஓர் உண்மையான குடியாட்சியை அமைக்க முடியுமென்றும் விளக்கினர். ஜப்பானிலும், சைபத்சு குடும்பத்தினரின் பொருளியல் ஆளுமையிலிருந்து விடுபட்டாலொழிய ஜப்பானில் உண்மையான முன்னிலை மீட்சியும், தேசிய உணர்ச்சியும் ஏற்படாதென்ருர். சோகன்களின் ஆட்சி ஒழிந்து விட்டதென்று கூறுவது தவறென்றும், சைபத்சு செல்வக் குடும்பத்தவர்களின் உருவிலும், அவர்களின் ஆதரவில் அரசை வழுத்துப்பாடி நிற்கும் அரசியல் கட்சிகளின் உருவிலும் சோகன்களின் ஆட்சி நிலைத்திருக்கிறதெனக் கிதா இக்கி கூறினர்.

இவருடைய சொற்பொழிவுகளாலும், நூல்களாலும் பலர் ஈர்க்கப்பட்டனர். 1918-ல் தோக்கியோப் பல்கலைக் கழகத்தின் மெய்ப்பொருட் பேராசிரியரான பர். ஓகாவா என்பவர் கிதாவை சாங்கையில் சந்தித்தார். இவரைப் போலவே படித்த மேதைகள் பலரும் கிதாவின் அரசியல் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டனர். கிதாவின் கொள்கை நாடெங்கிலும் பரவலாயிற்று. ஜப்பானிய அரசியல் முறையை மக்களாட்சி முறையில் மாற்றியமைக்க வேண்டுமென கிதா வற்புறுத்தினர். மக்களும் மாமன்னரும் நேரடித் தொடர்பு கொள்ள வேண்டுமென்றும், படையதிகாரிகளும் அரசியற்காரர்களும் அவர்களுக்குப் பின்னணியாகவுள்ள சைபத்சு செல்வக் குடும்பத்தினரும் மக்களாட்சி வளர்ச்சிக்குப் பகைவர்களாவரென்றும் கூறினர். நாட்டிலுள்ள அரையர் குழு ('பிரிவி கவுன்சில்') நயன்மை மன்றமும், மற்ற நயன்மை மன்றங்களும் இத்தகையோரின் நன்மைகளையும், உரிமைகளையுமே பாதுகாக்கின்றன வென்றும், அவைகளை ஒழித்து விட்டு, நாட்டுப் பற்றுள்ள ஐம்பது பேர்களை அரசருக்கு அறங்கூற வையத்தின் அறிவுரையாளர்களாய் அமர்த்தவேண்டுமென்றும் கிதா கூறினர்.

கிழார்களவையை ஒழித்துவிட்டு மக்கள் மன்றத்தை மட்டும் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், அம் மன்றத்தின்படி நிகராளிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாயிருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். அவ்வாறு தேர்ந்தெடுப்பதற்கு எத்தகைய கட்டுப்பாடுமின்றி அகவையடைந்தோர் எல்லாருக்கும் ஒப்போலையுரிமை வழங்க வேண்டுமென்றார். இவ்வாறு மக்களின் நிகராளிகளால் அமைக்கப்படும் நாடாளும் மன்றம் அரசரின் விருப்பத்திற்கும் முன்னிலை மீட்சியின் தலைவர்களின் கொள்கைகளுக்கும் மாறாக எத்தகைய கொள்கைகளையும் ஆராயக் கூடாதென்றார்.

கிதா அரசியலில் மட்டுமின்றிக் குமுகாயத்திலும் மக்களாட்சிக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றார். தனியார் சொத்துக்கள் பத்திலக்கம் யென்னுக்கு மேற்படக்கூடாதென்றும், ஓரிலக்கம் யென் மதிப்புக்கு மேலுள்ள நிலத்தை ஒருவன் வைத்திருக்கக் கூடாதென்றும், இத்தகைய உச்சவரம்புக்குப்பின் மீதியுள்ள நிலங்களை நிலமற்ற உழவர்களுக்கு விற்று நீண்ட காலத் தவணையில் அவ் விலையை அரசு பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இவர் வற்புறுத்தினர். இவற்றைத் தவிர முதியோருக்கு ஓய்வுக் கால ஊதியமளித்தல், பதினறு அகவை வரையில் இலவசக் கட்டாயக் கல்வியளித்தல், ஆங்கிலத்தை அறவே ஒழித்தல், வன்முறையால் பரந்த ஆசியாவைக் காணல் முதலியனவும் கிதா கட்சியின் கொள்கைகளாகும். 1920-ல் இக் கட்சி அதன் வன்முறைச் செயல்களுக்காக ஜப்பானில் தடை செய்யப்பட்டது. ஆனல், கிதா இக்கியின் இத்தகைய சீர்திருத்தக் கொள்கைகளும், ஜப்பானியப் பேராட்சிக் கொள்கையும் பிற்கால ஜப்பானிய வரலாற்றில் இடம் பெற்றுவிட்டன.

'அறிவாளியே முட்டாள்களை ஆளவேண்டும்; இன்றைய உலகில் ஜப்பானே சிறந்த அறிவாளி; மற்ற ஆசிய நாடுகள் யாவும் ஜப்பானின் தலைமையில் ஒன்று திரண்டு வெள்ளை முற்றுருமையை வெளியேற்ற வேண்டும்; இந்தியாவும், சீனவும் ஜப்பானியரின் உதவியின்றி விடுதலையடைய முடியாது' என்பன போன்றவை கிதா இக்கியின் முற்காணியமாகும். அவற்றில் பல பொய்ப்பினும் ஆசிய நாடுகளுக்கு ஜப்பானே தலைமை தாங்க வேண்டுமென்ற பேராட்சிக் கொள்கை ஜப்பானிய வரலாற்றில் வேரூன்றி விட்டது.

ஜப்பானிலேற்பட்ட இத்தகைய பொதுவுடைமைக் கட்சிகளும், அரசியல் கட்சிகளும் நசுக்கப்பட்டபோதிலும் அக் கட்சிகளின் கொள்கைகள் ஜப்பானில் உயிர் பெற்று நின்றன.

தோக்கியோவிலுள்ள பேரரசர் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர்கள் பலர் புதிய அரசியற் கருத்துகளை ஜப்பானில் பரப்பினர். அவர்களில் ஒருவரே பேராசிரியர் மினோபி (Prof. Minobi) என்பவர். இவர் அரசரின் தெய்விகக் கொள்கையைப் பகுத்தறிவுக்கும், இயற்கை நெறிகளுக்கும் மாறானதென்றும், ஆனால், அரசன்பால் அன்பு கொள்வது தவறானதல்லவென்றும் கூறினார். மற்றொரு பேராசிரியரான டா். யோஷினோ (Dr. Yoshino) என்பவர் அதிகார வகுப்பினர் மக்களின் உரிமைக் குரலுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்றும், பேரரசரின் கீழ் தன்னலமற்ற மக்கள் நிகராளரின் நாடாளும் மன்றம் அமைக்கப்பட வேண்டுமென்றும், தனி மாந்தரின் நலமே நாட்டின் நலமென்றும் கூறினார். இவர்களைத் தவிர சுசூகி (Suzuki) என்ற வழக்குரைஞர் தொழிலாளர்களுக்கான பல கழகங்களைத் தொடங்கி, முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்குமிடையே எழும் சிக்கல்களைத் தீர்த்து வைத்தார். இவருடைய முயற்சியினால்தான் யுவாய்க்கி (Yuaiki) எனப்படும் முதலாளி-தொழிலாளி ஒன்றுபட்ட நட்புறவுக் கழகம் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறு 20ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் ஜப்பானில் வளர்ந்த பொதுவுடைமைக் கொள்கையும், பேராட்சிக் கொள்கையும், குமுக நலக் கொள்கைகளும், தொழிலாளர் கழகங்களும் மேற்கத்தியக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த போதும் ஜப்பானியப் பண்பாட்டின்படியே ஒழுகின. இவை யாவும் வெள்ளையர்களை வெளியேற்றுதல், ஆசியாவை ஆசியருக் காக்குதல், ஜப்பானியப் பேராட்சியைப் பெருக்குதல், குடியாட்சி முறையினை ஏற்றுக்கொள்ளுதல், ஆனால், பேரரசரின் பத்தியிலிருந்து வழுவாமை, ஊழல்களை ஒழித்தல், அரசியல் குமுகப் பொருளியல் சீர்திருத்தங்கள் முதலியவற்றை வலியுறுத்தின. ஆனால், இக் கொள்கைகளில் அரசரே வேண்டாமென்றோ, குடியாட்சிதான் வேண்டுமென்றோ வெளிப்படையாக ஒன்றும் காணப்படவில்லை. மேலும் இவை யாவும் சமயத்தைப் பற்றி ஒரு சொல்லும் கூறவில்லை. எனவே இவை சமயச் சார்பற்ற தேசியக் கொள்கைகள் எனப்படுகின்றன.

### அரசியல் கட்சிகளும், அமைச்சரவைகளும்

ஜப்பானிலேற்பட்ட தொழிற் புரட்சியும், வேளாண்மைப் புரட்சியும் பல புதிய முதலாளியக் குடும்பங்களை உண்டாக்கியதென்பதைக் கண்டோம். நாட்டின் செல்வத்தை ஒரு சில குறிப்பிட்ட குடும்பங்களே துய்ப்பதை எதிர்த்துச் சிலர் தங்களுக்கேற்ற பங்கு வேண்டுமெனப் போராட முற்பட்டனர். அரசு செவ்வனே செயல்பட வேண்டுமென்று அதை நடத்திச் செல்ல ஒரு தனிக்

குழுவாக நின்று செயல்பட்ட மூத்தோரவையை நாடாளும் மன்றத்தின் கிழவை பெரிதும் ஆதரித்தது. இவ்வாறு ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளின் அடிப்படையாகப் பிறந்த பல்வேறு கட்சிகளுக்கும், மேற்கண்ட சைபாத்சு வணிகக் குடும்பத்தார் கையூட்டுக் கொடுத்து, தங்கள் சொத்துகளுக்குப் பாதகமாக அரசியல் சட்டம் ஏற்படாதவாறு காத்துக் கொண்டார்கள். எனவே அரசியற்காரர்களும், அரசு அதிகாரிகளும் பொருளியல் வீக்கத்திற்குத்தீர்வு காண முற்படவில்லை. இத்தகைய ஊழல் களால் ஆட்சியில் ஒரு சார்புப் பண்பு வலுப்பெற்றது. 1901ஆம் ஆண்டிலிருந்து வளர்ச்சி பெற்று நின்ற சையூகாய் (Seiyukai) என்ற அரசியல் கட்சி எப்பொழுதும் அரசையே சார்ந்து ஊழல்களை மறைக்க முற்பட்டது. இதைப்போலவே கென்சை கோந்தோ (Kenseihonto) என்ற கட்சியும் இவ்வூழல்களைச் சார்ந்து அரசின் பக்கம் நின்றது. இவ்விரு கட்சிகளையும் எதிர்த்து 1910-ல் தேசிய அரசியல் கட்சி (Kokuminto) என்னும் பெயரில் ஒரு கட்சி உருவாகியது. ஆனால், இக்கட்சியும் ஊழல்களை அடியோ டொழிக்கப் பாடுபடவில்லை.

1912ஆம் ஆண்டு சூலை 30ஆம் நாள் மேசி மாமன்னர் காலமானார். அவர் மறைவுக்குப் பின்னும் அரசியல் கட்சிகளில் ஒற்றுமை ஏற்படவில்லை. அரசியல் கட்சிகளுக்கும், படைத் துறைக்கும் கருத்து வேற்றுமைகள் வளர்ந்துகொண்டே போயின. இதற்கிடையில் புதிய வளர்ச்சியைப் பெற்றுவரும் மூத்தோரவை, அரசுச் செய்திகளிலும், கட்சிச் செய்திகளிலும் அடிக்கடி தலையிட்டு வந்தது. பேரரசுக்கிருந்த புனிதத் தன்மையையும், மாண்பையும் அழிக்கும் வண்ணம் தோன்றிய ஊழல்களை எதிர்த்து நோகி என்பவரும், அவருடைய மனைவியும் தற்கொலை செய்து கொண்டனர். ஆயினும் நாளுக்கு நாள் அரசியல் குழப்பங்கள் அதிகரித்துக் கொண்டே போயின. முதலமைச்சர் சையோன்சியும், அவரது அமைச்சரவையும் பதவியிழக்க வேண்டியதாயிற்று. இதற்குப் பெரிதும் காரணியமாய் நின்றவர் மூத்தோரவையின் முகாமை உறுப்பினரான எமகதா ஆவார். இவ்வமைச்சரவையின் வீழ்ச்சிக்குப் பிறகு, கருவூலத் தலைவராக இருந்த கத்சுரா என்பவரின் தலைமையில் அமைச்சரவை மீண்டும் உருவாகியது. இச் சமையத்தில் புதிதாகத் தோன்றிய தேசிய அரசியல் கட்சி அமைச் சரவையைக் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றது. தன்னைச் சார்கின்ற பலரை ஒன்றாகச் சேர்த்து தொசிகாய் (Doshikai) என்னும் கட்சியொன்றை புதிய தலைமை யமைச்சர் கத்சுரா அமைத்தார். ஆயினும் தன் அமைச்சரவை யைச் சாரும் பெருவாரியான உறுப்பினர்களைப் பாராளு

மன்றத்தில் இவரால் பெற முடியவில்லை. இதனால் நாடாளு மன்றத்திலிருந்து இவ்வமைச்சரவைக்கு வசை கணைகள் வந்த வண்ணமிருந்தன. அரசரிடமுள்ள தன் செல்வாக்கைப் பயன் படுத்திக் கொண்டு நாடாளும் மன்றத்தைக் கீழ்ப்படியவைக்க கத்சுரா முயன்றார். ஆனால், எப்பொழுதுமே அரசைச் சார்ந்து வரும் சையூகாய் கட்சியும், மற்ற கட்சிகளும் கத்சுராவை எதிர்க்க முற்பட்டன. இதற்குக் காரணியம் மக்களுக்கு அமைச்சரவையின் மேல் இருந்த வெறுப்பன்று; ஆனால், தனிப்பட்ட முறையில் கத்சுராவின் மேல் அவர்களுக்கிருந்த பகையேயாகும். வேறு வழியின்றி கத்சுரா பதவியை விட்டு விலகினார். மீண்டும் சைகாயின் பேராதரவுடன் கப்பற்படைத் தளபதி யமாமொதோ (Yamamoto) அமைச்சரவையை அமைத்தார். இவரை மூத்தோரவையும் சார்ந்தது. இவர் காலத்தில் பொதுத் துறையில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், அவர்களின் சார்பைப் பெற்றவர்களும் அதிகாரிகளாக அமர்த்தப்பட்டனர். பொதுத் துறையில் ஆள்குறைப்புத் திட்டம் கையாளப்பட்டது. போரமைச்சரகமும், நாவாய் அமைச்சரகமும் ஓய்வு பெற்ற அதிகாரிகளாலும், பணியிலிருக்கும் அதிகாரிகளாலும் கைப்பற்றப்பட்டன. யமாமொதோ அமைச்சரவை நெடுநாள்கள் நிலைத்து நில்லாமல் ஏப்பிரல் திங்கள் 1914-ல் வீழ்ந்தது. நாவாய்த்துறை அமைச்சரகமும், அத் துறையிலிருந்த பேரதிகாரிகளும் போர்க் கப்பல் களைக்கட்ட ஒப்பந்தமிட்டதில் கையூட்டு வாங்கியதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஊழல் செய்திச் சச்சரவே இவ்வமைச்சரவை வீழ்வதற்குக் காரணியமாகும். தோக்கியோவில் தெருக் கலகங்களும், சண்டைகளும் ஏற்பட்டன. யமாமொதோ வீழ்ச்சிக்குப் பிறகு ஒகுமா என்பவர் ஜப்பானிய அமைச்சரவையின் முதல்வரானார். இவர் கைசிண்டோ (Kaishinto) என்னுங் கட்சியைச் சேர்ந்தவர். மேலும் இவர் பெயர் பெற்ற வசேதா (Waseda)ப் பல்கலைக்கழகத்தை 1882-ல் ஏற்படுத்தி, அதன் துணைக் கண் காணகராகவும், பெயர் பெற்ற பேச்சாளராகவும் மக்களிடையே புகழ் பெற்றவராவார். இவர் தன்னலத்தினடிப்படையிலமைந்த சையூகாய்க் கட்சியின் கோட்பாடுகளையும், அதன் தன்னலத் தன்மையையும் சாடினார். 1915-ல் நடந்த பொதுத் தேர்தலிலும் ஒகுமா மீண்டும் பெருவாரியான சார்பைப் பெற்றார். ஆனால், அமைச்சரவையில் உள்துறையமைச்சராயிருந்த அவுரா (Oura) என்பவர் நாடாளும் மன்ற உறுப்பினர்களுக்குக் கையூட்டுக் கொடுத்துப் படையை இரண்டாகப்பிரிக்கும் வரைவைக் கொண்டு வந்தார். ஒகுமா தன் பகைக்கட்சியான சையூகாயின் சார்புடன் அவுராவை அமைச்சரவையிலிருந்து நீக்கினார். இவரைப் போலவே அயலக அமைச்சர் கதோ (Kato) என்பவரும் வெளியேற்றப்

பட்டார். இத்தகைய வெளியேற்றங்களையும் சீனாவின் மீது ஜப்பான் விதித்த 21 கட்டுப்பாடுகளையும் மூத்தோரவை எதிர்த்தது. இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக நின்ற படையை இரண்டாகப் பிரிக்கும் வரைவைத் தூக்கியெறிந்துவிட்டு அக்டோபர் 1916-ல் ஒகுமா தன் பதவியைத் துறந்து வெளியேறினார்.

இவருக்குபின் அமைச்சரவையின் தலைவரான சோசு சாமுராய்க் குடும்பத்தைச் சேர்ந்த தளபதி தெராவுச்சி (Terauchi) தலைமையமைச்சரானார். இவர் சனவரி 1917-ல் நாடாளும் மன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத்தேர்தல் நடத்தினார். நெல் அறுவடைக் கலகங்களால் நாட்டிலேற்பட்ட குழப்பத்தைக் காரணியம் காட்டி இவருடைய அமைச்சரவையும் 1918-ல் கலைக்கப்பட்டது. இதற்குப்பின் நடந்த தேர்தலில் ஜப்பானிய வரலாற்றிலேயே முதல் தடவையாக எத்தகைய பட்டமுமில்லாத, உயர்ந்த குடும்பத்தில் பிறக்காத மிக வெளிய ஆரா (Hara) என்பவர் முதலமைச்சரானார். இவர் சையூகாய்க் கட்சியின் சார்பைப் பெற்றுக் கீழவையில் உறுப்பினராகி முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜப்பானிய வரலாற்றிலேயே இப்படியொரு எளியார் முதலமைச்சர் பதவிக்கு வந்தவர் இவரேயாவார். முதன் முதல் கீழவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவரும் இவரேயாவார். வழக்கம் போல் இவர் மூத்தோரவையின் அறிவுரைப்படி முதலமைச்சர் பதவியேற்றார். அச்சமயத்தில் மூத்தோரவையின் முதுபெரும் உறுப்பினர்களாயிருந்த மூவரைக் குறிப்பிடலாம். எண்பத்து நான்கு அகவை நிரம்பிய மத்சுகதா, எண்பத்தோரகவை நிரம்பிய யமகதா, எழுபதகவை நிரம்பிய சையோன்சி ஆகிய மூவராவர். ஆரா ஜப்பானிய அரசியல் கட்சி வரலாற்றில் 'மாபெரும் எளியார்' (Great Commoner) என்று சிறப்பிக்கப்படுகிறார். இவரே முதன்முதலில் அமைச்சரவையை அரசியல் கட்சியின் அவையாக மாற்றியமைத்தவர். ஆயினும் இன்னமும் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குப் போரமைச்சர், நாவாய் அமைச்சர், அயல்நாட்டு அமைச்சர் ஆகிய பதவிகள் வழங்கப்படவில்லை. இப் பதவிகள் கிழார்களவையில் அரசரால் அமர்த்தப்பட்ட உறுப்பினர்களுக்கே வழங்கப்பட்டன.

### ஆராவின் ஆட்சிமுறை (1918—1921)

சையூகாய்க் கட்சியின் தலைவராக செப்டம்பர் 29, 1918-ல் ஆரா தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றிலிருந்து 1921, நவம்பர் 12ஆம் நாள் தான் இறக்கும் வரை ஜப்பான் நாட்டுத் தலைமையமைச்சராயிருந்து அவர் ஆற்றிய பணிகளை நோக்கினால் அவரை

ஒரு மாபெரும் ஆட்சியாளர் என்பதையறியலாம். இவரைத் தொடக்கத்தில் மூத்தோரவையின் தலைவர்களில் ஒருவரான யமகதா தலைமையமைச்சராக அமர்த்தப்பட்டபோது பலரும் எதிர்த்தார்கள். இதற்கு கரணியம் இவர் பெருவாரியான மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லையென்பதுதான். தொடக்கத்தில் ஆராமூத்தோரவை, கிழார்களவை, தன்னுடைய கட்சியினர் முதலியவர்களின் எதிர்ப்புகளைச் சமாளித்து மக்களவைக்கும், மேலவைக்கும், மூத்தோரவைக்குமிடையே சரியான உறவு முறைகளை ஏற்படுத்தினர். தன் நாட்டில் பெருகி விட்ட மக்கள் தொகையின் கரணியமாக இரண்டு மடங்காக வளர்ந்துவிட்ட தொழிலாளர் வகுப்பின் சிக்கல்களை ஒழித்தாலொழிய உள்நாட்டில் அமைதி ஏற்படாதென்பதை அறிந்தார். இதற்காக குமுக நலக் கழகமொன்றை ஏற்படுத்தி அதனை உள்துறையமைச்சரவையைக் கவனிக்கும்படி செய்தார். விலைவாசிகளைக் கட்டுபடுத்தி நய விலைக்கடைகளையும், கூட்டுறவுப் பண்டகச் சாலைகளையும் ஏற்படுத்தினர். சிறு தொழில் வளர்ச்சிகளுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்தல், வணிக வளர்ச்சிக்காகப் போக்குவரத்துக் கட்டணங்களைக் குறைத்தல் முதலியவற்றை மேற்கொண்டு உணவுச் சிக்கலை நீக்கினர். நாடாளும் மன்றம் படையதிகாரிகள், சைபத்சு குடும்பங்களால் ஆதரிக்கப்படும் அரசியல் கட்சிகள் ஆகியோரின் எதிர்ப்புகளுக்கஞ்சாமல் செல்வர்களுக்கு அதிக வரிகளை விதித்து உயர்தரக்கல்வி, இருப்புப் பாதைகள், நெடுஞ்சாலைகள், தொலைபேசி, தந்தித் தொடர்கள் ஆகியவற்றை வளர்த்தார்.

ஆயினும் இவருடைய அமைச்சரவைக்கு முன்னும், பின்னும் இல்லாத அளவுக்கு சைபத்சு குடும்பத்தினர் இவருடைய காலத்தில்தான் அரசியலில் அதிக செல்வாக்குடன் விளங்கினர்கள். அதற்குக் கரணியம், இவர் அவர்களுக்கு எதிராகச் செயற்படமுற்படும்போதெல்லாம் சைபத்சு குடும்பத்தார் அரசியற்காரர்களுக்குப் பெரும் பொருள் கொடுத்துப்பல கட்சிகளை விலைக்கு வாங்கினர்கள். எனவேதான் முதலாளியத்திற்கு எதிராக எத்தகைய சட்டங்களையும் ஆராவால் ஆக்க முடியவில்லை. அரசியல் கட்சிகள் தன்னை ஆதரிக்காததால் பேரரசரின் உதவியுடன் தனக்கு வேண்டியவர்களைக் கிழார்களவையில் நேரடியாக அமர்த்திக்கொண்டார். இதைப்போலவே இவரை ஆதரிக்கும் பலர் அரசியலதிகாரிகளாக அமர்த்தப்பட்டார்கள். ஆயினும் படையையும், அதிகார வகுப்பையும் இவரால் ஆட்டிப்படைக்க முடியவில்லை. பொதுவாக ஜப்பானிய அரசியல் கட்சிகளால் அரசரால் அமர்த்தப்படும் அரசியல் துறைத் தலைவர்களையும்,

படைத்தலைவர்களையும் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் இத்துறைத்தலைவர்களில் பெரும்பாலார் கொடிவழியாகப் பதவிக்கு வருபவர்களாவர். ஆரா எப்படியும் இத்தகைய அதிகார வகுப்பை அமைச்சரவைக்குப் பணிய வைக்கவேண்டுமென விரும்பினார். அதற்காக தன்னுடைய கட்சி வலிமையை அதிகரிக்க விரும்பினார். இச்சமையத்தில் சைபீரியச் சிக்கலும், மஞ்சூரியச் சிக்கலும் ஜப்பானை எதிர்நோக்கி நின்றன. ஜப்பானின் தேசியக் கடனும் பதினான்கு கோடியே ஐம்பதிலக்கம் யென்னாக உயர்ந்தது. ஜப்பானின் அயலகக் கொள்கை அதன் படைகளின் முற்றுரிமையாயிருந்தது. எனவேதான் இப்படைகள் அமைச்சரவையின் கட்டளைகளை மதிக்காது சைபீரியாவிலிருந்து பின்னடையாமலும் மஞ்சூரியச் செய்திகளில் தலையிட்டும் நின்றன. ஆனால், 1920-ல் அமெரிக்க ஒன்றிய நாடுகளின் படைகள் சைபீரியாவிலிருந்து வெளியேறியதும், ஆரா தனது 75,000 படை வீரர்களையும் யாதொரு சேதமுமின்றிச் சைபீரியாவிலிருந்து திரும்பப் பெற்றார். இதனால் மஞ்சூரியாவிலும், கொரியாவிலுமிருந்த ஜப்பானின் செல்வாக்குக் காப்பாற்றப்பட்டது. முதல் உலகப் போருக்குப் பின் ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டுக் கழகத்தில் தன் நாட்டிற்கு ஒரு முகாமையிடத்தைப் பெற்று மிகப் பெரிய ஐந்து வல்லரசுகளில் ஒன்றாகத் தன் நாட்டை மதிக்கும்படி செய்தார். 1919-ல் வாசிங்டனில் நடைபெற்ற பன்னாட்டுத் தொழிலாளர் மாநாட்டிற்குத் தன் நாட்டுப் படிநிகராளிகளை அனுப்பி வைத்தார். இவ்வாறு முதல் உலகப் போருக்குப் பின் ஜப்பான் சமைதி முறையில் பெறவேண்டிய பல நன்மைகளையும், நட்புறவுகளையும் முழுதுமாகப் பெறுவதற்கு வழிவகுத்த ஆரா இறந்த நான்கு நாள்களுக்குப் பின் உலக நயன்மை மன்றத்தில் ஓர் உறுப்பினராக ஜப்பான் பதவியேற்றது. ஆராவின் சிறந்த அரசியலறிவையும், ஆட்சி வன்மையையும் காட்டுகிறது.

எதிர்க் கட்சியின் தலைவராயிருந்த கதோ என்பவர் சைபீரியப் படையெடுப்பையும், மற்ற ஆராவின் அரசியல் சீர்திருத்தங்களையும் கடுமையாகத் தாக்கி வந்தார். ஆரா தன் கட்சியாகிய சையூகாயின் கொள்கைக்கேற்ப மூன்று யென் வரி கட்டுவோருக்கும் ஒப்போலையுரிமை வழங்கினார். இதற்கு முன் பதினைந்து யென்னுக்குக் கீழ் வரி கட்டுவோருக்கு ஒப்போலையுரிமை வழங்கப்படவில்லை. இதனால் ஜப்பானில் ஒப்போலையர் தொகை ஐந்திலக்கமாக உயர்ந்தது. மாநிலங்களைத் 'தேர்தல் மாவட்டங்களாக' (Electoral Districts)ப் பிரித்தார். இத்தகைய மக்களாட்சிச் சீர்திருத்தங்களுக்கிடையிலும் எதிர்க்கட்சிகள் அவருக்கு இன்னல்கள் விளைவித்துவந்தன. அகவையடைந்த

எல்லாருக்கும் ஒப்போலேயுரிமை வேண்டுமென்றும், ஒரு குறிப்பிட்ட தொகையை வரியாகச் செலுத்துவோருக்கு மட்டுமே ஒப்போலேயுரிமையென்பதை நீக்க வேண்டுமென்றும் எதிர்க் கட்சிகள் செய்த கலகங்களைத் தொடர்ந்து பிப்பிரவரி 1920-ல் ஆரா நாடாளும் மன்றத்தைக் கலைத்துவிட்டார். இதற்குப் பின் நடந்த தேர்தலிலும் ஆராவின் சையூகாய்க் கட்சியே பெருவாரியான இடங்களைப் பெற்றது. நாடாளும் மன்றத்தில் பெருவாரியாகத் தன் கட்சி உறுப்பினர்களைப் பெற்ற ஆரா மார்ச்சு 1920-லிருந்து ஜப்பானின் தொழில் வளர்ச்சிக்கான முயற்சிகளையே மேற்கொண்டார்.

இச் சமையத்தில் ஜப்பானிலேற்பட்ட பொருளியலிடர்ப் பாட்டால் சைபத்சு குடும்பத்தினர் சிறு தொழில்கள் யாவற்றையும் கைப்பற்றிக் கொண்டனர். சையூகாய்க் கட்சியிலிருந்த பெரிய நிலக்கிழார்கள் அரிசி விலைச் சரிவை எதிர்க்கலாயினர். தென்மஞ்சூரிய இருப்புப்பாதைக் கண் காணிப்பில் அமர்த்தப்பட்ட ஜப்பானிய அதிகாரிகள் ஊழல் மன்னர்களாக மாறிவிட்டனர். இதைப் போலவே உள் நாட்டு அதிகாரிகளும் ஊழல்களில் ஈடுபட்டனர். இதனால் ஆராவின் அமைச்சரவைமீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. அமைச்சரவைக்கும் சையூகாய்க் கட்சியினருக்கும் மோதல்கள் ஏற்பட்டன. தொழிலாளர்களும், ஏழை உழவர்களும் புரட்சியில் ஈடுபட்டனர். இவைகளைச் சமாளிப்பதற்காக ஆரா, திசம்பர் 1920-ல் 'நிகரமைப்புக் கழகம்' (Socialist League) ஒன்றை ஏற்படுத்தினர். இக் கழகத்தை மக்கள் ஆதரிக்கவில்லை. எனவே இதன் நோக்கங்களும் நிறைவேறவில்லை. ஏனெனில் இதைவிட மிகத் தீவிரமான பொதுவுடைமைக் கட்சியை உருசியா ஏற்படுத்தி ஜப்பானில் தங்கள் பொதுவுடைமைக் கொள்கைகளைத் தீவிரமடையச் செய்திருந்தது. இதனால்தான் 1922-ல் மாசுகோவில் நடந்த தொலை கிழக்கு மக்களின் மாநாட்டிற்கு ஜப்பானியரும் சென்றிருந்தனர். ஜப்பானில் பரவிய பொது வுடைமைக்கொள்கைக்கு முன் ஆராவின் நிகரமைப்புக்கழகம் எடுபடவில்லை. 1919ஆம் ஆண்டிலேயே ஜப்பான் நாட்டுத் தொழிலாளர் கூட்டிணைப்பில் 71 தொழிலாளர் கழகங்கள் ஒன்றிணைந்தன. இதற்குப்பின் பொதுவுடைமைக் கொள்கை யினரும், நிகரமைப்புக்கொள்கையினரும் ஒன்றிணைந்து ஜப்பானில் செயல்பட்டனர். எனவேதான் ஆராவின் நிகரமைப்புக் கழகத்தை இவர்கள் துச்சமாக எண்ணி அதனை ஒரு கண்துடைப்பு வேலையென்றனர். இத்தகைய கொந்தளிப்புகளினால்தான் தொழி லாளர் வகுப்பினர் சைபத்சு குடும்பங்களைச் சேர்ந்த யசூதா

என்பவரையும், ஆராவையும் கொலை செய்துவிட்டனர். 1921ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் தோக்கியோ தொடர்வண்டி நிலையத்தில் ஓர் இளைஞனால் ஆரா கொலைசெய்யப்பட்டார். நாட்டுப் பற்று என்ற பெயரால் ஜப்பானில் வளர்ந்து வந்த தாராளக் கொள்கையைத் தடை செய்ய அடுத்த பத்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் கொலைகளின் படலத்தின் தொடக்கமே ஆராவின் கொலையாகும்.

தகாஃகாசி அமைச்சரவை (Takahashi Ministry)
(நவம்பர் 1921—ஜூன் 1922)

ஆராவின் கொலைக்குப்பின் மூத்தோரவை ஆராவின் அமைச்சரவையில் நிதியமைச்சராயிருந்த தகாஃகாசி என்பவரைத் தலைமையமைச்சராக அமர்த்தியது. தகாஃகாசி சைபத்சு குடும்பத்தைச் சேர்ந்தவர். எனவே இவரைப் படையினரும், அரசியல் கட்சிகளும், தொழிலாளர் இயக்கங்களும், பொருளியலிடர்ப் பாட்டால் நலிவுறும் பொதுமக்களும் வெறுக்கலாயினர். இவருடைய கட்சியான சையூகாய்க் கட்சியும் இரண்டாகப் பிளவு பட்டது. எனவே இவர் தன் கட்சியின் பெருவாரியான வலிமையைக் கொண்டோ, படைக்குழுவினர், பிறகட்சிகள், பொது மக்கள் முதலியோரின் ஆதரவைக் கொண்டோ நாட்டை அமைதியான முறையில் ஆள முடியவில்லை. முதல் உலகப் போராலும், ஜப்பானிய உள் நாட்டுக் குழப்பங்களாலும், கட்சிப் பூசல்களாலும் தன் கட்சிக்குள்ளேயே உள்ள பிளவாலும் இடர்ப்பட்ட தகாஃகாசி நாட்டின் ஆட்சி முறையை ஏற்று அமைதியாகச் செயல்பட முடியாமல் ஜூன் 1922-ல் தன் பதவியைத் துறந்தார். ஏறத்தாழ ஐந்தாண்டுகள் வரை பெருவலிமை பெற்றிருந்த இவருடைய சையூகாய்க்கட்சியும் இரண்டாகப் பிளவுபட்டதால் மக்களவையில் தன்னுடைய பெரும்பான்மைச் செல்வாக்கையிழந்தது.

மேம்பட்ட அமைச்சரவைகள் (Transcendental Cabinets 1922-1924)

தகாஃகாசி தன் தலைமையமைச்சர் பதவியைத் துறந்து அமைச்சரவையைக் கலைத்தபின் படை இரண்டாண்டுகள் வரை அமைச்சரவையைக் கைப்பற்றி 'மேம்பட்ட அமைச்சரவை' (Transcendental Cabinet) யை அமைத்தது. தளபதி கதோ (Admiral Kado) இதன் தலைமையமைச்சரானார். இவர் கப்பற் படைத் தளபதியாவார். இதே பெயரில் ஆரா அமைச்சரவையின் எதிர்க்கட்சித் தலைவராகவும், கென் செய்க்கை (Kensei Kai) க் கட்சியின் தலைவராகவும், கிழார்களவையின் உறுப்பினராகவுமிருந்த கதோ என்பவர் வேறானவரென்பது நினைவு கூரத்தக்கதாம்.

தளபதி கதோ தலைமையமைச்சரானதைச் சையூகாய்க் கட்சி விரும்பவில்லை. எக் கட்சியையும் சேராத ஒருவர் தலைமையமைச்சராக வரவேண்டுமென்றும் கட்சி சார்பற்றோர் அமைச்சரவையில் இடம்பெற வேண்டுமென்றும் அது விரும்பியது. அச் சமையத்தில் தளபதி கவுண்டு யமாமொதோ என்பவர் கட்சிசார்பற்ற சார்பாளர்களைப்பெற்று சையூகாய்க் கட்சியின் உதவியுடன் அமைச்சரவையை அமைக்க முயன்று கொண்டிருந்தார். ஆனால், 1923-ல் ஏற்பட்ட மாபெரும் நில நடுக்கத்தால் ஜப்பானின் அரசியலிலும் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டியதாயிற்று. எனவே யமாமொதோ முயன்று அமைத்த கட்சி சார்பற்ற அமைச்சரவையைத் தானே கலைத்துவிட்டு விசுகவுண்டு கியூரா என்பவருக்கு விட்டுக்கொடுத்து விட்டார். இவர் தன் அமைச்சரவைக்குக் கிழார்களவையிலிருந்து ஆள்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இதனை சையூகாய்க் கட்சியும், கென் செய்க்கைக் கட்சியும் எதிர்த்தன. ஜப்பானிய அரசியல் சட்டப்படி பெருவாரியான அரசியல் கட்சியே அமைச்சரவையை அமைக்க வேண்டுமென்றும், ஆனால், அந்த விதி முறைக்கு மாறாக அமர்த்தம் செய்யப்பட்ட கிழார்களவையிலுள்ள உறுப்பினர்களைக் கொண்டு அமைச்சரவையை அமைத்தது அரசியல் சட்டத்திற்கு மாறானதென்றும் இக் கட்சிகள் கூறின. எனவே சையூகாய்க் கட்சியின் தலைவரான தகாஃகாசியும் கென் செய்க்கைக் கட்சியின் தலைவரான கதோவும் 'அரசியல் சட்டத்தைச் காப்பாற்றுவோம்' என உறுதிபூண்டு ஒன்றாக இணைந்து மூன்றாவது மேம்பட்ட அமைச்சரவையை அமைத்தார்கள். இதன்படி சையூகாய்க் கட்சியும், அதிலிருந்து பிரிந்த செய்யூ கோந்தோ (Seiyuhonto) கட்சியும், கென்சைக்கைக் கட்சியும் ஆக மூன்றும் ஒன்றாக இணைந்து ஜூன் 11, 1914-ல் ஒரு கூட்டு அமைச்சரவையை அமைத்தன. இக் கூட்டு அமைச்சரவையால் ஜப்பானின் பொருளியல் நிலைமையைச் சீர்திருத்தியமைக்க முடியவில்லை. 1923-ல் ஏற்பட்ட மாபெரும் நில நடுக்கத்தாலும், அயல் நாட்டு வணிக வீழ்ச்சியாலும் ஜப்பானின் பொருளியல் வீழ்ச்சியடைந்தது. எனவே இக் கூட்டு அமைச்சரவைக்கு முதலில் ஜப்பானில் நல்ல வரவேற்புக் கிடைக்கவில்லை. இவ்வமைச்சரவையின் தலைவரான கதோ (கென்சைக்கைக் கட்சித்தலைவர்) சைபத்சு குடும்பத்துப் பெண்ணை மணம் செய்து கொண்டார். இவருடைய அயல்நாட்டு அமைச்சரான பரோன்சிதேகாரா (Baronshidehara) என்பவரும் சைபத்சு குடும்பத்துப் பெண்ணை மணந்து கொண்டார். எனவே இந்த அமைச்சரவையை சைபத்சு குடும்பங்கள் பெரிதும் ஆதரித்தன. பொதுவாக ஜப்பானில் ஓர் அமைச்சரவையின் வாழ்வோ, தாழ்வோ சைபத்சு குடும்பங்களின் ஆதரவைப் பொறுத்தே நின்றதென்பதை நாம் அறிவோம்.

கதோ அமைச்சரவை (1924-1926)

கதோ அகவையடைந்தோர்க்கு ஒப்போலையுரிமை அளிக்கவும் ஜப்பானிய அரசியல் சட்டப்படி அதன் அரசியலை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகராளிகளைக் கொண்டே நடத்தவும் விரும்பினர். எனவே 'அகவையடைந்தோர் ஒப்போலையுரிமைச் சட்டம்' (Universal Manhood Suffrage Act) ஒன்றை மே, 1925-ல் கொண்டு வந்தார். இச்சட்டப்படி இருபத்தைந்து அகவையடைந்த எல்லா ஆண்களுக்கும் ஒப்போலையுரிமை அளிக்கப்பட்டது. இதனால் முப்பதிலக்கமாக இருந்த ஒப்போலையர் தொகை ஒரு கோடியே முப்பதிலக்கமாக உயர்ந்தது. இருபத்தைந்து அகவை யடைந்த பெரும்பாலான மாணவர்களுக்கு ஒப்போலையுரிமை கிடைத்ததால் இம்மாணவர்கள் நகர்மன்றத் தேர்தல்களில் நல்லவர்களைத் தேர்ந்தெடுத்து ஊழல்களை ஒழித்தனர். வரி செலுத்துவோருக்கு மட்டும் ஒப்போலையுரிமையிருந்த காலத்தில் பணங் கொடுத்தும், அச்சுறுத்தியும் ஒப்போலைகளைப் பெற்ற செல்வர்கள் செய்வதறியாமல் திகைத்தனர். சிறந்த அறிவாளிகளும் திறமைசாலிகளும் மக்களவையில் இடம் பெற்றனர். கிழார்களவையின் அதிகாரங்களைக் குறைக்கவும், மக்களவையின் அதிகாரங்களைக் கூட்டவும் மன்றங்களும், கட்சிகளும் கோரின; மக்களும் இதனையே கோரினர். ஆனால், கிழார்களவையிலுள்ள உறுப்பினர்களைப் பேரரசரே அமர்த்துவதும் அதிகாரங்களை வழங்குவதும் வழக்கமாதலால் கிழார்களவையின் அதிகாரங்களைக் குறைக்க முடியவில்லை. கதோ கிழார்களவையிலுள்ள ஒரு சில இடங்களுக்கு மட்டும் அமர்த்தம் செய்யவேண்டுமென்றும், மற்ற இடங்களுக்கான நிகராளிகளை வரி செலுத்துவோரும், பல்கலைக் கழகப்பேராசிரியர்களும் தேர்ந்தெடுக்க வெண்டுமென்றும் கோரினர். இதனால் மக்கள் விரும்புவது போல கிழார்களவையின் அதிகாரங்களைக் குறைத்துவிடலாமெனக் கதோ எண்ணினர். ஆனால், அவர் விருப்பம் உடனடியாக நிறைவேறவில்லை.

பொருளியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்காகக் கதோ சில வழிமுறைகளைக் கையாண்டார். அவற்றிலொன்று தேவைப்படாத அரசுத்துறைகளை அகற்றுவது; ஆள்குறைப்புச் செய்வது; செலவைக்குறைத்துச் சிக்கனப்படுத்துவது என்பதாகும். இதன்படி புதிதாக அமைக்கப்பட்ட நான்கு படைப்பிரிவுகள் கலைக்கப்பட்டு அவற்றிலிருந்த 4000 படையினர் வேலையிழந்தனர். அடுத்தபடியாகப் பொருளியல் துறைகளைச் சீர்திருத்தி அமைத்துக் கடுமையான சட்டதிட்டங்கள் மூலம் அவற்றைக் கண் காணிக்கத் தொடங்கினர். தொழிற்சாலைகள், வைப்பகங்கள் முதலியவைகள் சீர்திருத்தியமைக்கப்பட்டுச் சரியான முறையில் கண்காணிக்கப்

பட்டன. வணிகத்துறையும், வேளாண்மைத் துறையும் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டன. வேளாண்மைத் துறையிலிருந்து காட்டுவளத்துறையும், வணிகத்துறையிலிருந்து கைத்தொழிற்று றையும் பிறந்தன. இவற்றிற்குத் தனித் தனியமைச்சர்கள் அமர்த்தப்பட்டனர். இதனால் ஆக்கவேலைகள் விரிவடைந்து வருவாயும் அதிகரித்தது. 1942-ல் ஜப்பான் நிறைவேற்றிய குடியேற்றத் தடைச்சட்டத்தின் பயனாய் ஜப்பானியர் அமெரிக்கா வில் குடியேற முடியவில்லை. இதற்காகக் குடியேற்றங்களை யேற்கும் பிற நாடுகளுக்கு ஜப்பானியரைக் குடியேற்றுவதற்கு ஒரு தனிக்கழகத்தைக் கதோ ஏற்படுத்தினர். இதனால் பெருகி வரும் மக்கள் தொகையை அயல் நாடுகளில் குடியேற்றிப் பொருளியல் சிக்கலைச் சமாளிக்க முடிந்தது.

இவ்வாறு கூட்டமைச்சரவையின் தலைவராகிப் பல அரிய சீர் திருத்தங்களைக் கொண்டுவந்த கதோ தன் பதவியில் நீண்டகாலம் இருக்க முடியவில்லை. ஏனெனில் சையூகாய்க் கட்சியின் தலைவரான தகாஹ்காசி தன் தலைமைப் பதவியையும், அமைச்சர் பதவியையும் துறந்தார். இவருக்குப் பதில் அக் கட்சியின் தலைவரான தளபதி தனகா (Tanaka) கதோவோடு ஒத்துழைக்க மறுத்து விட்டார். ஆயினும் கதோ செய்யூஹோந்தோக் கட்சியின் ஆதரவையும், கிழார்களவையின் ஆதரவையும், அதிகார வகுப்பின் ஆதரவையும் பெற்றுத் தன் அமைச்சரவையை வலுப் படுத்திக் கொண்டார். கதோ நில உச்சவரம்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து ஒவ்வொரு ஜப்பானியனுக்கும் இரண்டரை ஏக்கர் நிலத்தை வழங்க வேண்டுமென்றும், அந்த நிலத்தின் மதிப்பை முப்பதாண்டுத் தவணையில் அரசுக்கு செலுத்த வேண்டுமென்றும் இவ்வாறு செய்தால் 99% ஏழை உழவர்கள் நிலமுள்ளவர்களாக மாறுவார்களென்றும், ஒரு திட்டத்தை வகுத்தார். இவருடைய காலத்தில் தொழிற்கழகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. தொழிலாளர் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இவ்வாறு குமுகாய நலங்கருதி இவர் கொண்டுவந்த திட்டங்களும், சட்டங் களும் ஜப்பானுக்குப் பெரும் நன்மைகளைப் பயத்ததோடு பொது வுடைமைக் கொள்கைகளை ஜப்பானுக்குள் புகவொட்டாமல் தடுத்தன. பொதுவுடைமைக் கொள்கையையும், பொது வுடைமைத் தீவிரவாளர்களின் செயல்களையும் தடுப்பதற்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அச் சட்டங்கள் ஜப்பானிய வாழ்க்கை முறைக்கு ஒவ்வாத கருத்துகளையும், செயல்களையும் பரப்புவதற்கு அமைக்கப்படும் அமைப்புகளையும், பரப்பப்படும் கருத்துகளையும் தீவிரமாகக் கண்டித்தன. இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர்க்குப் பத்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை

விதிக்கச் சட்டங்கள் செய்யப்பட்டன. இதுவே பிற்காலத்தில் மரண தண்டனையாக மாற்றப்பட்டது. இத்தகைய சட்டங்களால் நாடாளும் மன்றத்திற்கும், அமைச்சரவைக்கும் அரசியல் சட்ட முறைகளுக்கும், ஆட்சிக்கும் மாறுகக் கருத்துகளோ, புரட்சிகளோ எழுவது தடுக்கப்பட்டது.

## வாகாத்சுகி அமைச்சரவை (Wakat Suki Ministry–1926-1927)

சனவரி, 1926-ல் கதோ இறந்ததும் அவருக்குப் பதில் கென்சைக்கைக்கட்சியின் தலைவரான வாகாத்சுகி தலைமையமைச்சரானுர். இவர் காலத்தில்தான் சீனச் சச்சரவு அதிகரித்தது. இதனுல் படைத்துறைக்கும், அமைச்சரவைக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன. கதோ கையாண்ட ஆள்குறைப்பு முறையால் வேலையிழந்தவர்கள் உள்நாட்டுக்கலகத்தில் ஈடுபட்டனர். நில நடுக்கத்தால் ஏற்பட்ட சேதத்தைச் சரிபடுத்திப் பொருளியலைச் சீர்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டங்களுக்கும் மக்களிடமிருந்து எதிர்ப்புகள் கிளம்பின. இருபது கோடியே எழுபதிலக்கம் யென் தொகையை வைப்பகங்களிலிருந்து கடனுகப் பெற்றுப் பொருளியல் சீரமைப்புத் திட்டத்தை மேற்கொள்ள அரசு முடிவுசெய்தது. வைப்பகங்கள் முழுவதும் மித்சுபிசி, மித்சு ஆகிய குடும்பங்களின் ஆளுமையிலிருந்ததால் இக் குடும்பங்கள் அரசிற்குக் கடன் கொடுக்க மறுத்தன. மேலும் எதிர்க் கட்சிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பெருந் தொகையைக் கையூட்டாகக் கொடுத்து அரசின் இத்தகைய திட்டத்தை எதிர்க்கும்படி செய்தனர். இதனுல் ஏற்பட்ட கொந்தளிப்பின் கரணியமாக வாகாத்சுகி அமைச்சரவை கலைக்கப்பட்டது.

## தனகா அமைச்சரவை (Tanaka Ministry—1927-1929)

வாகாத்சுகி அமைச்சரவை கலைக்கப்பட்டபின் சையூகாய்க் கட்சியின் தலைவரான தனகா தன் அமைச்சரவையை அமைத்தார். இவருடைய அமைச்சரவையில் போரமைச்சரும், நாவாய்ப்படை அமைச்சரும் தவிர மற்ற யாவரும் சையூகாய்க் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். போரமைச்சரும், நாவாய்ப்படையமைச்சரும் வழக்கமாகப் கிழார்களவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவாரென்பதை நாம் அறிவோம்.

தனகா ஜப்பானில் ஏற்பட்டுள்ள பொருளியற் சீர்கேடுகளை நீக்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார். இவ்வேற்பாடுகளால் சைபத்சு குடும்பத்தினர் அரசியலில் பெரும் செல்வாக்கடைந்தனர். அவர்களுடைய சார்பால் தனகாவின்

அமைச்சரவைக்குச் சரியான நிலைப்பாடு ஏற்பட்டது. ஆனால், உள் நாட்டு நிலைமைகளைச் சமாளித்துவிட்ட தனகாவுக்குச் சீன, ஜப்பானிய உறவு முறைகளால் பேரேதங்கள் சூழ்ந்துவிட்டன. இச் சமையத்தில் சீனர்கள் ஜப்பானியரை மஞ்சூரியாவிலிருந்து வெளியேற்ற ஜப்பானியப் பொருள்களை வாங்க மறுக்கும் மறுப்பியக்கங்களைத் தீவிரப்படுத்தினர்கள். சீனவிலேற்பட்ட தேசியக்கிளர்ச்சிகளின் கரணியமாக சியாங்கே சேக்கின் தலைமையில் ஜப்பானியர்களை வட சீனவிலிருந்தும், மஞ்சூரியாவிலிருந்தும் வெளியேற்ற முற்பட்டனர். இக் கிளர்ச்சியில் ஜப்பானியரின் உடைமைகளைக் காப்பதற்காகப் போரமைச்சரும், நாவாய்ப் படையமைச்சரும் படைகளை வடசீனவுக்கும், மஞ்சூரியாவுக்கும் அனுப்பினர். அமைச்சரவைக்கும், தலைமையமைச்சருக்கும் தெரியாமலும், இசைவு பெருமலும் இவ்வாறு படைகளை அனுப்பியதைத் தனகா எதிர்த்தார். இதனல் படையினருக் குள்ளே கலகங்கள் தோன்றின. மன்னரும், மூத்தோரவையும் தலையிட்டும், படைத்துறைக்கும், பொதுத் துறைக்கும் நல்லுறவை ஏற்படுத்த முடியவில்லை. இதனல் தனகா சூலை, 1929-ல் தன் பதவியைத் துறந்து தன் அமைச்சரவையைக் கலைத்தார்.

### ஆமாகுச்சி அமைச்சரவை (Hamaguchi Ministry—1929-1931)

தனகா அமைச்சரவை கலைக்கப்பட்டபின் மின்சைதோக் (Minseito) கட்சியைச் சேர்ந்த ஆமாகுச்சி என்பவர் தன் அமைச் சரவையை அமைத்தார். ஆயினும் நாடாளும் மன்றத்தில் சையூ காய்க் கட்சியினரே பெரும்பான்மையினராக இருந்ததால் இவர் தன் அமைச்சரவையைக் கலைத்துவிட்டு 1930-ல் பொதுத் தேர்தலை நடத்தினர். அதில் அவருடைய கட்சியே பெரும் பான்மை பெற்றது. இதற்குப் பின் ஆமாகுச்சி தன்னுடைய கட்சியின் கோட்பாடுகளை அரசியல் சட்டங்களின் மூலம் நடை முறைக்குக் கொண்டுவர முற்பட்டார். அக் கோட்பாடுகளில் முகாமையானவை ஊழல்களையொழித்தல், சீனவுடன் நட்புறவு கொள்ளுதல், பொருளியலைப் பெருக்குதல், படைக்குறைப்பு முதலியன. வணிகத் தடைச் சட்டங்களை ஏற்படுத்தி உள் நாட்டுப் பொருளியலைப் பெருக்கினர். பட்டு உருவாக்கத்திற்கு ஊக்க மளித்து அதனை அமெரிக்கச் சந்தைகளில் ஏராளமாக விற்கச் செய்தார். ஜப்பானியத் தங்கம் அயல்நாட்டுக்குச் செல்வதற்குத் தடை விதித்தார். இதனல் இறக்குமதிகள் குறைந்து ஏற்றுமதிகள் அதிகமாயின. இத்தகைய பொருளியல் சீர்திருத்தங்களால் நீண்டகால நன்மையை ஜப்பானுக்குக் கொண்டுவர முடியவில்லை. அதற்குக் கரணியம் அமெரிக்காவிலும், மற்ற ஐரோப்பிய

நாடுகளிலும் ஏற்பட்ட பொருளியற் சரிவேயாகும். ஜப்பானின் பட்டு நூல்கள் அமெரிக்கச் சந்தைகளில் பாதி விலைக்குத்தான் வாங்கப்பட்டன. இச் சமையத்தில் ஜப்பானில் ஏற்பட்ட பருவப் பொய்ப்பின் காரணியமாக உணவுத் தவசங்களுக்கு நெருக்கடி ஏற்பட்டது. அரசு வரவு செலவைச் சரிப்படுத்த 1931-ல் நிறை வேற்றப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கப்பற்படை, தரைப் படை ஆகியவற்றின் செலவுகளைக் குறைத்தார். இதனை யெதிர்த்துப் படையினர் கிளர்ச்சி செய்தனர். 1931-ல் பிரிட்டன் தங்கத்தின் மதிப்பைக் குறைத்தது. இதனால் ஜப்பானின் பொருளியலில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.

ஆமாகுச்சியின் பொருளியற் சீர்த்திருத்தங்களால் உடனடி யாக நெருக்கடிகளைச் சமாளிக்க முடியவில்லை. அரசுப் பணி யிலுள்ள 'பொது'ப் படைத்துறையினரில் மாதத்திற்கு நூறு யென் னுக்குமேல் சம்பளம் பெறுவோரின் சம்பளத்தில் 10% குறைத்து விட்டார். இச்சமையத்தில் வாசிங்டன் மாநாட்டு ஒப்பந்தத்தைப் பின்பற்றி 'இலண்டன் நாவாய்க் குறைப்பு ஒப்பந்தம்' 1930-ல் ஏற்பட்டது. இதனைத் தழுவி ஆமாகுச்சி தனது நாவாய்ப் படை யிலும், தரைப்படையிலும் பல சீர்திருத்தங்களைப் புகுத்த எண்ணினார். இதன்படிப் பல பெரிய பதவிகளை நீக்க வேண்டு மென்றும், படைக் கல்வி முறையை எல்லாருக்கும் அளிக்க வேண்டுமென்றும் திட்டம் வகுத்தார். இத் திட்டங்களால் படைத்துறையைக் கைப்பற்றியுள்ள குறிப்பிட்ட குழுவினருடைய செல்வாக்கை ஒடுக்கி அத்துறை அமைச்சரவைக்குக் கட்டுப்பட்டு நடக்கவும், ஆண்டு தோறும் ஆகும் படைச் செலவைக் குறைக்கவும் ஏற்பாடுகள் செய்தார். இதனால் படையினர் அவருக்கெதிராகக் கலகங்களில் ஈடுபட்டனர். அவற்றிற்கு இலக்காகாமல் ஏப்பிரல், 1931-ல் ஆமாகுச்சி மரணமடைந்தார்.

### வாகாத்சுகி அமைச்சரவை (ஏப்பிரல் 1931 - திசம்பர் 1931— இரண்டாம் முறை)

ஆமாக்குச்சியின் இறப்புக்குப்பின் மின்சைதோக் கட்சிக்குத் தலைவரான வாகாத்சுகி தலைமையமைச்சரானார். இச் சமையத்தில் படையினர், படையமைச்சரான சிதேகாரா (Shidehara) வை யெதிர்த்துக் கலகங்களில் ஈடுபட்டனர். மஞ்சூரியக் கொள்கையில் படையினருக்கும், அமைச்சரவைக்கும் கருத்து வேறுபாடுகள் வலுத்தன. படையினர் சீன—ஜப்பானிய நட்புறவு வளர்வதற் கெதிராக மஞ்சூரியாவைக் கைப்பற்றி மஞ்சுகோ ஆட்சியைத் தங்கள் கைப்பாவையாக்கிக் கொண்டார்கள். இச் சமையத்தில் ஜப்பானிய அரசியல் கட்சிகளும் பலவாறுகப் பிளவு பட்டன.

அரசு அதிகாரிகளும் அரசோடு ஒத்துழைக்காமல் ஊழல்களில் ஈடு பட்டனர். இத்தகைய கட்சிப் பிளவுகளுக்கும், அதிகாரிகளின் ஊழல்களுக்கும், படைகளின் எதிர்மறைச் செயல்களுக்குமிடையில் சிக்கித் தவித்த வாகாத்சுகி திசம்பர் 1931-ல் தன் பதவியைத் துறந்தார்.

படைக்கலகம்

இனுகாய் அமைச்சரவை (சனவரி, 1932 - ஏப்பிரல், 1932)

வாகாத்சுகியின் இறப்புக்குப்பின் நடைபெற்ற தேர்தலில் சையூகாய்க் கட்சியினர் பெரும்பான்மையினராக வெற்றி பெற்றனர். இதன் தலைவராக இனுகாய் (Inukai) என்பவர் தேர்ந் தெடுக்கப்பட்டார். இவருடைய அமைச்சரவை தங்கக் கட்டுப் பாட்டை நீக்கியது. இதனுல் மித்சுயி வணிகக் குடும்பத்தாருக்குப் பெருத்த ஊதியம் ஏற்பட்டது. மக்களாட்சி என்ற பெயரால் சையூகாய்க் கட்சி இத்தகைய வணிகக்குடும்பங்களின் கையாளாகிச் சுரண்டலையும், தன்னலத்தையும் வளர்க்கிறதென்றும் எத்தகைய அரசியல் கட்சிக்கும் உண்மையான தேசிய உணர்ச்சியோ தன்னல மற்றுப் பொதுநலத்திற்கே பாடுபடும் மனப்பாங்கோ இல்லையென ஜப்பானியர் உணர்ந்து கொண்டனர். எத்தகைய அரசியல் கட்சியும் சைபத்சு செல்வக் குடும்பங்களின் ஆதரவாலேயே ஆட்சிக்கு வருவதால் அவைகளால் கொண்டு வரப்படும் திட்டங் களும், சட்டங்களும் செல்வரின் வளர்ச்சிக்குப் பயன்படுகின்றனவே யொழிய ஏழைகளின் நன்மைக்குப் பயன்படவில்லை எனப் பொதுமக்கள் ஒருமனதாய் நம்பினர். ஜப்பானின் பொருளியற் சீர்கேடுகளுக்கு சைபத்சு குடும்பத்தாரே கரணியமாவார்களெனப் படைத் தலைவர்கள் கூறலாயினர்.

இத்தகைய உணர்ச்சி தரைப்படை, நாவாய்ப்படை அதிகாரி களிடையே விறுவிறுப்பாய்ப் பரவியது. இதனுல் இவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து அமைச்சரவைக்கு எதிராக சதித்திட்டங்களில் ஈடுபட்டார்கள். இச் சமையத்தில் நாட்டுப்புறங்களில் வதியும் ஏழைத் தொழிலாளர்களும், குடியானவர்களும் அரசுக்கெதிரான செயல்களில் தீவிரமாக ஈடுபட்டார்கள். பிளாக் திராகான் கழகத் தினர் இத்தகைய புரட்சிகளுக்குப் பின்னணியாக நின்றனர். ஜப்பான் வைப்பகத்தின் ஆளுநரும், மின்சைதோக்கட்சியின் முகாமையான உறுப்பினருமான இனேவுயீ (Inoue) என்பவர் இக் கலகக்காரர்களால் கொலை செய்யப்பட்டார். இதனையடுத்து மே 15, 1932-ல் இருபது கடற்படையதிகாரிகளும், பல தரைப் படையதிகாரிகளும், பொதுமக்களும் சேர்ந்து கொண்டு தோக்கி யோவிலுள்ள காவல் துறைத் தலைமையகத்தையும், பல

வைப்பகங்களையும், அரசியல் கட்சிகளின் அலுவலகங்களையும் தாக்கியழித்துத் தலைமையமைச்சர் இனுகாயைப் படுகொலை செய்தனர். பின் தாங்களே போலீசிடம் புகலடைந்தனர். இவர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்கால் ஜப்பானின் சீர்கேடு களுக்கு சைபத்சு குடும்பங்களும், அரசியல் கட்சிகளும், அதிகாரி களுமே காரணிய மென்பதை நாடு தெளிவாக உணர்ந்தது. உள் நாட்டுச் சீர்கேடுகளும், அயல் நாட்டில் தடைகளும் நீங்க வேண்டு மானால் செல்வர் குடும்பங்களையும், அரசியல் கட்சிகளையும், அதிகார வகுப்பையும் ஒழித்தே தீரவேண்டுமென மக்கள் உணர்ந்தனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் இத்தகைய கருத்துகளை நயன்மை மன்றத்தில் தொடர்ந்து தொடர் சொற்பொழிவாற்றினர். அரசியல் கட்சிகளால் அமைக்கப்படும் அமைச்சரவைக்குப் படைகள் மஞ்சூரியாவைக் கைப்பற்றியதும், தலைமையமைச்சர் இனுகாயைக் கொலை செய்ததும் தங்களுக்கு பெரும் பாடங் களாகக் கொண்டார்கள். இனி அரசியல் கட்சிகளால் ஆட்சியைக் கைப்பற்றி ஆளமுடியாது எனத் தீர்மானித்தார்கள்.

### படையினரின் எழுச்சி

1931ஆம் ஆண்டுவரை ஜப்பானின் ஆட்சியை அரசியல் கட்சிகளே கைப்பற்றி ஆண்டதைக் கண்டோம். ஆனால், இவ் வரசியல் கட்சிகள் யாவும் சைபத்சு செல்வக் குடும்பங்களின் கைப் பாவைகளாகித் தன்னல நோக்கத்தோடு அரசாண்டதால் அதிகாரிகளின் சுரண்டலும் அயல்நாட்டுக் கொள்கையில் முடங்கலும் ஏற்பட்டதென்பதையும் கண்டோம். பெருகிவரும் ஜப்பானின் செல்வத்தைச் சைபத்சு போன்ற செல்வக் குடும்பங் களே துய்க்கவும் அவர்களுக்குச் சார்பாக வாணிகச்சட்டங்களை ஏற்படுத்தியும், தங்கக்கட்டுப்பாடுகளை நீக்கியும், நில உச்ச வரம்புச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வராமலும், எல்லா வைப்பகங்களையும் தொழிற்சாலைகளையும் போக்குவரத்து நிறுவனங்களையும் அவர்களுடைய ஆளுமைக்கே விட்டு வந்த அரசியல் கட்சிகளை மக்களும், குறிப்பாகப் படையினரும் வெறுக்க லாயினர். அமைச்சரவையின் கட்டுப்பாட்டை மீறி அதனைக் கேளாமலேயே மஞ்சூரியாவை ஜப்பானியப் படைகள் கைப்பற்றி யதால் பெருகிவரும் ஜப்பானிய மக்கள் தொகைக்கு மஞ்சூரியா ஒரு புகலிடமாகப் பயன்பட்டது. எனவே இத்தகைய மாபெரும் நன்மையைத் தேடித் தந்த படையினரை மக்கள் பெரிதும் போற்றினர். மே 15, 1932-ல் பொதுமக்களும் படையினருடன் சேர்ந்து கொண்டு தலைமையமைச்சரைக் கொன்று வைப்பகங் களையும், கட்சியலுவலகங்களையும் அழித்த செயல்களால் படை யினரின் தேசிய உணர்ச்சியும், அவர்கள் மக்களின் நன்மையில்

கொண்டுள்ள நாட்டமும் நாட்டுமக்களால் நன்குணரப்பட்டன. இதனால் படையினரைத்தவிர ஐப்பானிய மக்களுக்கு நன்மைபுரிய வேறு எவருமில்லையெனப் பொதுமக்கள் தீர்மானித்தார்கள். மேலும் ஐப்பானிய மக்களின் குருதியை உறிஞ்சும் அட்டைகளாயுள்ள சைபத்சு குடும்பங்களையும், அவர்களின் கைப்பாவைகளாகவுள்ள அரசியல் கட்சிகளையும், அதிகார வகுப்பையும் ஒழிப்பதற்குப் படையினரைத் தவிர வேறு ஆற்றல் வாய்ந்த இயக்கம் ஐப்பானில் இல்லையென்பது பொது மக்களின் முற்காணியமாய் நின்றது.

வேளாண்மையைத் தங்கள் உயிர் நாடியாகப் பெற்றுள்ள ஐப்பானிய மக்களும், நாட்டுப் பற்றையே தங்கள் உயிர் மூச்சாகக் கொண்டுள்ள படையினரும் ஒன்றிணைந்தால்தான் ஐப்பான் நாட்டின் பண்டைய மரபுப் பண்புகள் காப்பாற்றப்படும் எனப் படையினரும் பொதுமக்களும் கருதினர். இத்தகைய தேசியப் பற்றும், பொதுநலத்திற்குப் பயன்படும் தொழிலும் சைபத்சு வணிகக் குடும்பங்களுக்கு இல்லை. அவர்களுடைய நோக்கமெல்லாம் மேன்மேலும் செல்வர்களாவதுதான். ஐப்பான் உலக வல்லரசு நாடுகளில் ஒன்றாகத் திகழவேண்டுமானால் அதற்கொரு சரியான தலைமையும் தன்னலங்கருதாத நாட்டுப்பற்றும் தேவை. அத் தலைமை கொடிவழியாயிருந்துவரும் இடமாகிய பேரரசரின் கையிலேயே இருப்பதுதான் சரியென்றும் அத் தலைமையின் செயல்படும் உறுப்பாகத் திகழப் படையே சிறந்ததென்றும் மக்கள் கருதினர்.

இத்தகைய சூழ்நிலைகள் உருவாகி வரும்போது கிதா இக்கி போன்ற இளம் படைத்தலைவர்கள் ஐப்பானிய நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி மிகத் தீவிரமாக ஆய்ந்து மக்களுக்கு விளக்கினர். ஐப்பான் தன் உழைப்பையே முதலாகக் கொண்டு வேளாண்மைப் புரட்சியிலும், தொழிற்புரட்சியிலும் வெற்றி கண்ட நாடு. இப் புரட்சிகளின் பலனை சைபத்சு போன்ற ஒரு சில வணிகக் குடும்பங்களே துய்க்குமானால் முதலாளியத்தை ஐப்பானில் ஏற்பவர்களாவோம். உழைப்பாளர்களிடையே முதலாளியம் வளருமானால் உறுதியாகத் தீவிரப் பொதுவுடைமைக் கொள்கையை ஐப்பானுக்குள் கொண்டு வந்து விடுமென கிதா இக்கி மக்களுக்கு எடுத்துரைத்தார். இவரைப் பின் தொடர்ந்து கோண்டோ செய்கியோ (Gondo Seiko) என்பவரும் ஒகாவாசுமேய் (Okawa Shumei) என்பவரும் ஐப்பானிய மக்களின் ஒற்றுமைக்கும், தேசிய உணர்ச்சிக்கும், ஆக்கந்தரும் கருத்துகளை வளர்த்து வரலானார்கள். இவர்கள் மூவரும் முதலில் ஐப்பானில் ஒன்றுபட்ட தேசிய உணர்ச்சியும். உடன் பிறந்தார் பாசமும்,

சமநிலைக் குமுகாயமும் ஏற்பட வேண்டுமெனக் கூறிப் பிறகு அவையே உலகம் முழுவதும் பரவ வேண்டுமெனவும் விரும்பினர். முதலில் ஜப்பானில் அத்தகைய கொள்கைகளுக்குத் தடையா யிருக்கின்ற அத்தனை சத்திகளையும் அழிக்க விரும்பினர். இவ்வாறு அழித்துவிட்டால் மீண்டும் பழைய படையினர் ஆட்சியை ஜப்பானில் கொண்டு வந்துவிடலாமெனவும் எண்ணினர். இத்தகையோருடைய முன்னிலை மிட்சி ஜப்பானிய தேசிய வளர்ச்சிக்கு முதுகெலும்பாய்ப் பயன்படுமெனக் கொண்டனர். இதற்காகப் படையிலுள்ள இளம் அதிகாரிகள் ஒரு முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிப் புரட்சிகரமான செயல்களில் ஈடு பட்டனர். இவ்வாறு தொடங்கப்பட்ட இயக்கம் நாளடைவில் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டது. இந்த இயக்கத்தின் முகாமை நோக்கம் ஜப்பானின் ஆளுமையை அயல் நாடுகளில் பரப்புவதும், முதலாளிகளை ஒழிப்பதும், மேற்கத்திய வல்லரசுகளை ஒடுக்குவதும், சமநிலைக் குமுகாயத்தை தேசிய அடிப்படையில் அமைப்பதுமாகும். இத்தகைய இயக்கத்தோரை தீவிரப் பொதுவுடைமையாளர்களென்றோ அல்லது 'பாசிசவாதி' களென்றோ கூறிவிட முடியாது. ஏனெனில் இவர்கள் இவை யிரண்டையுமே வெறுப்பவர்களாக இருந்தனர். முன்னரே ஜப்பானில் ஒரு வகைப் பொதுவுடைமைக் கட்சி வளர்ந்ததையும், அதனை 1923-ல் ஜப்பானிய அரசு ஒடுக்கியதையும் கண்டோம். 1925-ல் மீண்டும் இத்தகைய பொதுவுடைமையாளர் தலை யெடுத்தனர். இவர்களுக்கெதிராக வேறு சில கட்சிகளும், அரசியல் சட்டங்களும் தோன்றியதால் இவர்கள் தொழிலாளர் கட்சியிலிருந்து விலக்கப்பட்டனர்.

### பொதுவுடைமைக் கொள்கை

1926-ல் சான்சன் என்ற உருசியத் தூதரக அலுவலர் ஜப்பானில் பொதுவுடைமைக் கட்சியைத் தோற்றுவித்தார். இக் கட்சி மற்ற நாடுகளிலுள்ள பொதுவுடைமைக் கட்சியைப் போலன்றி ஜப்பானின் தேசியக் கொள்கையாகிய குடியேற்றக் கொள்கையை ஏற்றது. ஜப்பானியத் தொழிலாளர்களையும், வேளாளர்களையும் ஒன்றிணைத்து, முதலாளிகளையும் செல்வர் களையும் அழித்து ஆசியா முழுவதிலும் ஜப்பானியரைக் குடியேற்றிச் சமநிலைக் குமுகாயத்தையமைக்க வேண்டுமென ஜப்பானியப் பொதுவுடைமைக் கட்சி விரும்பியது. இதன் கொள்கைகளை உற்று நோக்கும் போது உருசியாவிலிருந்த பொதுவுடைமைக் கட்சிக் கொள்கைகளுக்கு மாறாகக் காணப் படுவதை அறியலாம். மேலும் இக் கட்சியில் பல தொழிலாளர் கழகங்களின் தலைவர்களும், நிகரமைப்புக் குமுகக் கட்சியினரும்

இணைந்திருந்ததால் இக்கட்சி ஜப்பானில் வலுப்பெற முடியவில்லை. எனவே ஜப்பானில் படையினரைத் தவிர வேறெரு சிறந்த இயக்கத்தால் ஜப்பானின் நன்மைக்குப் பாடுபட முடியாதென்ற உண்மை நிலைநிறுத்தப்பட்டது.

ஜப்பானியப் படைகள் மஞ்சூரியாவைக் கைப்பற்றி அதனைத் தங்கள் தங்குதளமாக்கிக் கொண்டு தங்கள் ஆளுமை வளர்ச்சியை ஆசியா முழுவதும் பரப்பத்திட்டமிட்டது. இத்தகைய தங்களது திட்டங்களுக்கு ஜப்பானிய அமைச்சரவையும் சைபத்சு குடும்பங்களும் இடையூருயிருப்பதைப் படையினர் அறிந்தனர். அவர்களுக்குச் சார்பாக 1932-க்கும் 1936-க்குமிடையில் ஜப்பானில் அமைச்சரவையை அமைக்கும் வலுவான அரசியல் கட்சிகள் இல்லாமல் நிலை குலைந்து போயின. இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு படையினர் அமைச்சரவையைக் கைப்பற்ற முற்பட்டனர். இதற்கு முன்பாகத் தங்களுக்குள்ளேயே இருக்கும் வேறுபாடுகளை ஒழிக்க முற்பட்டார்கள். இச் சமையத்தில் படையினர் இளவதிகாரிகள், முதிய அதிகாரிகள் என இரண்டாகப் பிரிந்து இரு வேறு கட்சிகளாகச் செயல்பட்டனர். இளவதிகாரிகள் சைபத்சு குடும்பங்களையும், அரசியல் கட்சிகளையும் ஒழிக்கும் தீவிரவாளர் களாயிருந்தனர். ஆனல், முதிய அதிகாரிகளோ இதனை மென்மை யான முறையில் ஒழிக்க விரும்பிஞர்கள். சட்டப்படியும் பேரரசருக்கும், பொதுமக்களுக்கும் வெறுப்பைத் தராமல் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது மூத்தோர் களின் கொள்கையாகும். ஆயினும் இத்தகைய வேறுபாடுகளை நீக்கிப் படையினர் ஜப்பானின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டனர்.

### சைதோ அமைச்சரவை (1932—1934)

மே, 1932-ல் தளபதி சைதோ (Saito) ஜப்பான் நாட்டுத் தலைமையமைச்சராஞர். இவர் இனுகாயின் படுகொலைக்குப்பின் தலைமையமைச்சர் பதவியேற்று சூலை, 1934 வரை தலைமை யமைச்சராயிருந்தார். இவர் தனது படையினருக்கும் கிழார்க ளவைக்கும் சைபத்சு குடும்பங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒத்த முறையில் ஆட்சியை நடத்திச் சென்ருர். படையினர் கட்சிகளி லுள்ள சிலரையும் தன் அமைச்சரவையில் இடம் பெறச் செய்தார். இளவதிகாரிகள் கட்சியினர் அதிதீவிரமாக பேராளுமைக் கொள்கையைச் செயல்படுத்த வேண்டுமென விரும்பினர். சைதோ இத்தகைய தீவிரச் செயல்களை மேற் கொள்ளத் தாழ்த்தம் செய்ததால் இவர்கள் அமைச்சர்களையும்

அரசியல் கட்சித்தலைவர்களையும் படுகொலை செய்வதற்கான ஒரு சதித்திட்டத்தை உருவாக்கினர். இச் சதித்திட்டத்தில் ஈடுபட்ட படையினரை 'ஆண்டவனால் அனுப்பப்பட்ட படையினர்' (God Sent Troops) என்று அழைத்தனர். இவர்களுடைய படுகொலை முயற்சி ஜூலை, 1933-ல் அம்பலமாயிற்று. ஆனால், அவர்கள்மீது தொடுக்கப்பட்ட வழக்கு 1941ஆம் ஆண்டு வரை நீடித்துத் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஒகாதா அமைச்சரவை (1934—1936)

ஜூலை, 1934-ல் சைதோ பதவியிலிருந்து விலகினார். அதற்குப் பின் மார்ச்சு 1936 வரை தளபதி ஒகாதா தலைமையமைச்சராயிருந்தார். தளபதி ஆயாகீ என்பவர் போரமைச்சரானார். இவர் படையினரின் அரசியல், குழுகக் கொள்கைகளை வெளிப்படையாக எழுதி வந்தார். இவர் தீவிரவாளர்களான இளம் படையதிகாரிகளை ஒருவர் பின் ஒருவராகப் பதவியிலிருந்து நீக்கினார். இதன் காரணியமாகப் படையினருக்குள்ளிருந்த பிளவு அதிகரித்தது. பிப்பிரவரி 26, 1936-ல் இளம்படையதிகாரிகள் கட்சியினரான ஆயிரத்து நானூறு வீரர்கள் தோக்கியோவின் மீது படையெடுத்து நாடாளும் மன்றக் கட்டடம், தலைமையமைச்சரின் உறைவிடம். போரலுவலகம், காவல் துறையினரின் தலைமையகம் முதலியவற்றைக் கைப்பற்றிக்கொண்டனர். மூத்த படையதிகாரிகளையும், அரசியல் கட்சித் தலைவர்களையும் படுகொலை புரிந்தனர். தலைமையமைச்சர் ஒகாதா நல்வினைப் பயனாகத் தப்பியோடி விட்டார். பேரரசரின் வேண்டுகோளின்படி இப் படைக்கலகம் நிறுத்தப்பட்டது. கலகத்திலீடுபட்ட பதின்மூன்று இளம்படையதிகாரிகள் நாடுகடத்தப்பட்டனர். ஒரு சிலருக்குத் தண்டனைகள் விதிக்கப்பட்டன. இவ்வாறு ஆட்சியைக் கைப்பற்றி நான்காண்டுகள் ஆண்ட படையினர் தங்களுக்குள்ளேயே பிளவுபட்டுக் கடைசியில் படுகொலையிலிறங்கித் தங்கள் ஆட்சிக்கு ஒரு முடிவைத் தேடிக்கொண்டனர்.

இரோதா அமைச்சரவை (1936—1937)

இதற்குப் பிறகு சையூகாய் போன்ற அரசியல் கட்சிகளின் தலைவர்களும், கியாத்தோ, தோக்கியோப்பல்கலைக் கழகப் பேராசிரியர்களும், மற்றும் படைத்தலைவர்கள் பலரும் ஒன்றிணைந்து ஒரு புதிய அரசியல் கட்சியை உருவாக்க முனைந்தனர். பேராசிரியர் மினோபியினுடைய அரசியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஆட்சியை நடத்தத் தீர்மானித்தனர். ஆனால், இவர் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பின்பற்றி அரசரின் தெய்விகக் கொள்கையை வெறுத்ததால் இவரைக் கிழார்களவையி

விருந்து நீக்கியதோடன்றி பேராசிரியர் பதவியிலிருந்தும் நீக்கி விட்டனர். கட்சி சார்பற்ற அமைச்சரவையை அமைக்க முற்பட்டனர். ஒகாதா அமைச்சரவையில் அயல்நாட்டு அமைச்சராக இருந்த இரோதா (Hirota) என்பவரைத் தலைமையமைச்சராகவும், தளபதி தெராவுச்சி என்பவரைப் போரமைச்சராகவும் அமர்த்தினர். இவ்விருவரும் மே, 1936-ல் பதவியேற்றனர்கள்; படைகளின் விருப்பத்திற்கிணங்க நாட்டையாளவும், படை வலிமையைப் பெருக்கவும், படைக்கெதிரான சத்திகளை ஒடுக்கவும் இவ்வமைச்சரவை ஒப்புக்கொண்டது.

ஆகச்ட்டு, 1936-ல் 'தேசிய சீரமைப்புத் திட்ட' மொன்றை இரோதா அமைச்சரவை கொண்டு வந்தது. இதன்படி ஜப்பானிய அரசு படையைப் பெருக்கவும், கல்வி, வரிவிதிப்பு, வாணிகம், தொழிலகங்கள், போர்ப்படைக்கான மூலப் பொருள்கள் முதலிய வற்றின் மீது படை நேரடியாக அதிகாரம் செலுத்தவும், மஞ்சூரியப்படைக் கொள்கையை ஏற்கவும் வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இதனால் நாடு முழுவதும் படையின் நேரடிக் கண்காணிப்பில் கொண்டு வரவும், நாட்டின் பாதுகாப்பைவலுப் படுத்தவும் முடியுமென இத்திட்டம் வலியுறுத்தியது. 1936-ல் இரோதா அமைச்சரவை உருசியாவிற்கெதிராக செருமனியுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அந்த ஒப்பந்தத்திற்கு 'அனைத்து நாட்டு பொதுவுடைமை அமைப்புக்கெதிராக ஏற்படுத்தப் பட்ட ஒப்பந்தம்' (Ante-Comintern Pact) என்று பெயர். இத்தகைய ஒப்பந்தத்தால் பிரிட்டன், அமெரிக்க ஒன்றிய நாடுகள் ஆகிய வற்றின் கடலாளுமைப் போட்டியைத் தன்னால் சமாளிக்க முடியுமென ஜப்பானியப் படையினர் நம்பினர். இந்த ஒப்பந்தம் ஜப்பானிய அரசியல் வரலாற்றில், ஏன் உலக வரலாற்றிலேயே ஒரு முகாமை வாய்ந்த ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தை நாடாளும் மன்றம் போடுவதற்கு முன்பாகவே ஜப்பானியப் படையினர் செருமனியுடன் செய்து கொண்டு அதனை இரோதா அமைச்சரவையை ஒப்புக்கொள்ளும்படி செய்தனர். இதற்கு சையூகாய்க் கட்சியும், மற்ற அரசியல் தலைவர்களும் மனமார ஒப்பந்தமளிக்க விரும்பா விட்டாலும் படையினருக்கு அஞ்சி இதனையேற்றுக் கொண்டனர். ஆனால், சையூகாய்க் கட்சியைச் சேர்ந்த ஆமாதா வுக்கும், போரமைச்சர் தெராவுச்சிக்கும் ஏற்பட்ட மோதலினால் இரோதாவின் அமைச்சரவை கலைக்கப்பட்டது. இதனையே தங்களுக்கு வாய்ப்பாகக் கொண்டு படையினர் தங்களுக்கு வேண்டியவர்களைக் கொண்டு அமைச்சரவையை அமைக்க முற்பட்டனர். தளபதி ஆயாஃசி பிப்பிரவரி, 1937-ல் படையினர் சார்புடன் தலைமையமைச்சரானார். ஆனால், ஏப்பிரல், 1937-ல்

நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப்பின் இவர் தன் பதவி யிலிருந்து விலகினுர். இவருக்குப் பின் சூன் 1937-ல் இளவரசர் கோனுேயி (Konoe) தன் அமைச்சரவையை அமைத்தார். இவருக்குப் பொதுமக்களும், கிழார்களவையும், மக்களவையும், பேரரசரவையும், படையினரும் பேராதரவளித்தனர். சூலை 1937-லிருந்து ஜப்பான் மஞ்சூரியா செய்திக்காகச் சீனுவுடன் போர் தொடுத்தது.

கோனுேயி அமைச்சரவை (சூன், 1937—பிப்பிரவரி, 1939; சூலை, 1940—அக்டோபர், 1941)

சூன், 1937-ல் இளவரசர் கோனுேயி தன் அமைச்சரவையை அமைத்தார். இதற்கு முன்பாகவே ஜப்பானியப் படையினர் மஞ்சூகோ அரசைத்தன் கைப்பாவையாக்கிக் கொண்டு அதன் எல்லையையும் கடந்துக் கிழக்காசியா முழுவதையும் விழுங்க முன்னேறிக் கொண்டிருந்தனர். 1932-லிருந்தே ஜப்பானியப் படையின் மூத்த அதிகாரிகள் யாவரும் ஒன்றிணைந்து தங்களுக்குள் 'கட்டுப்பாட்டு உட்குழு' அல்லது ஆளுமை உள்ளமைச்சரவை (Control Faction) ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு அமைச்சர வையையும், பேரரசரவையையும், மற்றும் நாடாளும் மன்றத் தையும் மதிக்காமல் நாடுகளைக் கவர்ந்து ஜப்பானின் பேராளுமை வளர்ச்சியைப் பெருக்கத் தொடங்கிவிட்டனரென்பதை நாம் அறிவோம். மஞ்சூகோவைத் தங்கள் தங்கு தளமாக வைத்துக் கொண்டு ஒன்றன்பின் ஒன்ருகப் பலவிடங்களை வென்று சென்ற நிகழ்ச்சியை 'ஜப்பானும், மஞ்சூரியநெருக்கடியும்' என்ற தலைப்பில் நாம் விரிக்கக் காணலாம். பேராளுமைக் கொள்கையில் ஜப்பானியப் படையின் இளவதிகாரிகள் அதி தீவிரம் காட்டி னுர்கள். உள் நாட்டில் தங்களுடைய தீவிரச் செயல்களையேற்காத முதிய படைத்தலைவர்களையும், அமைச்சர்களையும் சைபத்சுகளையும் கொன்ற இவர்கள் அயல் நாடுகளை வென்ருவது அங்கு தங்கள் கனவுகளை நினைவாக்கி இன்பவுலகினை அமைக்கலாமெனத் தீவிரம் கொண்டனர். இத்தகைய இரு கூறுபாடுகளான ஜப்பானியப் படைகளின் பேராசைக்கு மஞ்சூரியாவின் வெற்றி ஊக்க மூட்டுவ தாயிற்று. இவர்கள் இங்கிருந்து கொண்டு வட சீனுவிலும், உள் மங்கோலியாவிலும் தங்கள் ஆளுமையைப் பரப்பினர்.

சீனுவுக்கும் உருசியாவுக்குமிடைப்பட்ட நிலப்பரப்பில் தாங்கள் கால் கொண்டு விட்டால் ஆசியக் கண்டத்தை அடிபணிய வைக்கலாமென ஜப்பானியப் படையினர் கருதினர். இதனுல் உள் மங்கோலியாவை ஆண்டுவந்த இளவரசர் தேஃகு (Prince Teh) என்பவரைத் தங்களுடைய நண்பராக்கிக் கொண்டு சீனப்

படையை அங்கிருந்து வெளியேற்ற முயன்றார்கள். ஐப்பானியப் படையின் தலைவரான தளபதி தோசோ (Toja) உருசியாவும் சீனாவும் இணைந்து தங்களை உள் மங்கோலியாவிலிருந்து வெளி யேற்றி விடுவார்களோ என அஞ்சினார். ஏனெனில் வெளி மங்கோலியா முழுவதும் உருசியர்களின் ஆளுமையிலிருந்தது. இதற்காக உள் மங்கோலியாவைப் போலவே வெளி மங்கோலி யாவும் விடுதலையடைவதற்கு அம் மக்களைத் தூண்டினார். அவர் களும் 'மங்கோலியா மங்கோலியருக்கே' என உரிமைக்குரல் எழுப்பி ஐப்பானியத் தகரிப்படையின் உதவியுடன் விடுதலைப் போரைத் தொடங்கினர். ஆனால், இவ்விடுதலைப் படையினர் சீனத்தளபதி ஃபூசோயி (Fu-tso-yi) என்பவரால் தோற்கடிக்கப் பட்டனர்.

இவ்வாறு ஐப்பானியப் படையினர் வடசீனாவிலும், மங்கோலி யாவிலும் 'இடைப்பட்ட ஆட்சி' (Buffer States)களை ஏற்படுத்தி அவற்றைத் தங்கள் கைப்பாவைகளாகவும், தங்கு தளங்களாகவும் ஆக்கிக்கொண்டு ஆசியாவையே வெல்லும் நோக்கத்துடன் முயன்று கொண்டிருக்கும்போது ஐப்பானிய அயல்நாட்டு அமைச் சரகம் சீனாவுடன் நட்புறவு கொள்ள முயன்றது. 1935-ல் ஐப்பானிய அயலக அமைச்சர் இரோதா மூன்று கோரிக்கைகளைச் சீன அரசுக்கு அனுப்பினார். அதன்படி சீனாவை மஞ்சுகோ அரசை ஏற்க வேண்டுமென்றும், அரசியல் பொருளியல் வளர்ச்சிகளில் சீனா ஐப்பானோடு ஒத்துழைக்க வேண்டுமென்றும், பொது வுடைமைக் கொள்கையை அடியோடு ஒழிப்பதில் சீனா ஐப்பா னுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். ஆனால், இந்த மூன்று கோரிக்கைகளையும் சீனா மறுத்துவிட்டது. 1937-க்குள் சீனா ஐப்பானின் வளர்ச்சிக்கு இடையூறாகப் பல செயல்களில் ஈடுபட்டது. மேலும் 1937லிருந்து ஐப்பானின் குவாண்டுங் படைக்குத் தளபதி தோசோ தலைமை யேற்றதால் ஐப்பானுக்கும், சீனாவுக்கும் இனி நல்லுறவு ஏற்படா தென்பது உறுதியாகி விட்டது. ஏனெனில் தோசோ ஐப்பானியப் படையின் ஆளுமை உட்குழுவின் தீவிர உறுப்பினராவார். எனவே இவருடைய நோக்கமெல்லாம் நாடுகளைக் கவர்ந்து ஐப்பானியப் பேராட்சியைப் பரப்புவதைத் தவிர வேறொன்று மில்லை. இவர் சீனாவின் தேசிய அரசும், பொதுவுடைமை அரசும் ஒன்றாக இணையவொட்டாமல் தடுக்கும் முயற்சிகளை மேற் கொண்டார். எனவே வடசீனாவில் இருந்துகொண்டு சீன நாட்டிற்குக் கண்ணி வைத்தார். இவ்வாறு இவர் சீனாவோடு போருக்கு அணியமாவதைச் சீனத்தேசிய அரசும், ஐப்பானிய அரசும் விரும்பவில்லை. ஆயினும் வடசீனாவிலிருந்து தங்கள்

படையை ஜப்பானிய அரசால் வெளியேற்றிக்கொண்டு வர முடியவில்லை.

## சீன-ஜப்பானியப் போர் (1937-1945)

ஜூலை, 1937-ல் பீகிங், ஆங்கௌ இருப்புப் பாதையிலுள்ள மார்க்கோபோலோ பாலத்தில் ஏற்பட்ட ஒரு சிறு நிகழ்ச்சியால் சீனாவுக்கும், ஜப்பானுக்குமிடையே போர் மூளும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. சீனர் அவ்விடத்தில் தங்களுடைய படைகளை வைத்திருந்தனர். அப் படைகளுக்கும் ஜப்பானியப் படைகளுக்கும் ஏற்பட்ட மோதல்களால் கொரியாவிலும், மஞ்சூரியாவிலுமிருந்த ஜப்பானியப் படைகள் மஞ்சளாற்றை நோக்கி முன்னேறின. சீனப் படைகளை பீகிங்குக்கு அண்மையில் ஜப்பானியப் படைகள் தோற்கடித்து, இன்டிசின், பீகிங்குக்கிடையிலுள்ள நிலப் பரப்பைக் கைப்பற்றிக்கொண்டது. இந் நிலையிலும் தலைமையமைச்சர் கோனேயி தேசிய சீனாவின் தலைநகரான நாக்கிங்குடன் தொடர்பு கொண்டு இணக்க முயற்சிகள் செய்து வந்தார். ஆனால், அவை பயனளிக்கவில்லை. சீனாவில் ஜப்பானியப் படைகள் முன்னேறுவதைக் கண்ட அமெரிக்காவும், பிரிட்டனும் பதைபதைத்தனவே யொழிய ஒன்றாக இணைந்து அவற்றால் ஜப்பானைத் தாக்க முடியவில்லை. இச் சமையத்தில் ஜப்பானின் நண்பரான செருமனி சீனாவின் மீது தொடுத்த போரை நிறுத்துமாறு ஜப்பானைக் கேட்டுக் கொண்டது. ஆயினும் ஜப்பான் தான் தொடர்ந்த போரை நிறுத்தவில்லை.

தன்னைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றிக்கொண்டு வரும் ஜப்பானை எதிர்க்கப் போதிய வலிமையற்ற சீனா ஆகசுடு 21, 1937-ல் உருசியாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன்படி ஒன்றுக்கொன்று தங்களுக்குள் வற்பிடிப்புச் செய்து கொள்ளக் கூடாதென்றும், மற்றொரு நாடு சீனா அல்லது உருசியாவின் மீது படையெடுக்கும் போது படையெடுப்புக்காளாகாத நாடு படையெடுக்கும் நாட்டிற்கு உதவக் கூடாதென்றும் இந்த உடன்படிக்கையில் முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு சீனா அண்மையிலுள்ள உருசியாவை நண்பனாக்கிக் கொண்டு செப்டம்பர் 12, 1937-ல் பன்னாட்டுக் கழகத்திற்கு ஜப்பானின் வற்பிடிப்பைப்பற்றி எடுத்துக் கூறித் தனக்குதவுமாறு வேண்டுகோள் விடுத்தது. இதனை உசாவுவதற்காகப் பன்னாட்டுக் கழகத்தால் அனுப்பப்பட்ட தொலை கிழக்கு அறிவுரைக் குழுவும், ஜப்பான் முறையற்றுச் சீனாவைக் கைப்பற்றியுள்ளதென அறிவித்துள்ளது. ஜப்பானுடன் பேசித் தீர்வுகாண வாசிங்டன் உடன்படிக்கையின்படி எல்லா வல்லரசுகளும் பிரசல்சு (Brussels)

என்னுமிடத்தில் ஒரு மாநாட்டைக் கூட்டின. ஆனால், இந்த மாநாட்டில் ஜப்பான் கலந்துகொள்ள மறுத்துவிட்டது. எனவே ஜப்பானை வெளியேற்றச் சீனாவுக்கு உதவும் முயற்சி கைவிடப்பட்டது.

இதற்குப் பின் சாங்கையில் நடந்த சீன, ஜப்பானியப் போருக்குப் பின்னும், ஜப்பானும் சீனாவும் சமைதி முயற்சியில் இறங்கின. இம் முயற்சிக்கு நாங்கிங்கிலிருந்த செருமானியத் தூதுவர் பேருதவி புரிந்தார். இம் முயற்சி முற்றுப் பெறுமுன்பே நாங்கிங்கிலிருந்த தேசிய ஆட்சி வீழ்ச்சியடைந்தது. இதற்குப் பின் சியாங்கேசேக் ஜப்பானியருடன் உறவுகொள்ள முயன்றார். 1938-ல் இரோதாவுக்குப் பதில் தளபதி உகாகி (Ugaki) அயலக அமைச்சரானார். அவருடன் சியாங்கேசேக் கமுக்கமாக ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி மஞ்சூரியாவில் ஜப்பான் ஏற்படுத்திய மஞ்சூகோ ஆட்சியையும், உள் மங்கோலியாவில் குவாண்டுங் படையேற்படுத்திய ஆட்சியையும், தான் ஏற்பதாகவும், பொதுவுடைமையாளர்களை எதிர்ப்பதாகவும் ஒப்புக் கொண்டார். ஆனால், இவற்றைச் சட்டப்படி எழுத்து வடிவில் தர முடியாதென்றும் சீனப் படையெடுப்புக்கு இழப்பீடு கொடுக்க முடியாதென்றும் மறுத்துவிட்டார். இத்தகைய நன்மையற்ற உறுதிகளை ஒப்புக்கொண்டதற்காக உகாகியைத் தோக்கியோ அரசு பதவியிலிருந்து நீக்கியது. இதற்குப் பின் ஆசியச் செய்திகளைக் கவனிப்பதற்கு 'ஆசிய வளர்ச்சிக் கழகம்' (Asia Development Board) ஒன்றை ஏற்படுத்தி அதனை அயலக அமைச்சரவையின் கீழ்ச் செயல்படும் படி ஜப்பானிய அரசு அமைத்தது. படையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரிதா (Arita) என்பவரைக் கோனோயி அயலக அமைச்சராக அமர்த்தினார்.

நவம்பர் 3, 1938-ல் தலைமையமைச்சர் கோனோயி சீன ஜப்பானிய நட்புறவு பற்றி ஓர் அறிக்கையை வெளியிட்டார். இதன்படி சீனாவும், ஜப்பானும் ஒன்றாக இணைந்து தங்களின் பொருளியல், படை, அரசியல் வலிமைகளை வளர்த்துக்கொண்டு பொதுவுடைமைகளுக்கெதிராக முன்னேற வேண்டுமென்று சீனாவுக்கு அறைகூவல் விடுத்தார். இதற்கிடையில் சியாங்கேசேக்குக்கு எதிராகக் கலகம் விளைவித்த பொதுவுடைமையாளர் சியாங்கேசேக் அவர்களை ஒடுக்குவதில் மும்முரமாய் ஈடுபட்டார். இத்தகைய உள்நாட்டுக் குழப்பத்தைச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய ஜப்பானியர் சீனாவின்மீது போரைத் தொடர்ந்து மேலும் பல இடங்களைக் கைப்பற்ற முனைந்தார்கள். இதனால் சியாங்கேசேக் ஜப்பானின் சமைதி யறைகூவல்களை

உதறிவிட்டு ஜப்பானுடன் தொடர்ந்து போரை நடத்தினர். மார்ச்சு 30, 1940-ல் ஜப்பானியர் சியாங்கேசேக்கின் எதிரிகளைக் கொண்டு 'சீனக் குடியரசு' ஒன்றை ஏற்படுத்தினர். நாங்கிங்கை அதன் தலைநகராகவும், வாங்சிங் — வெய் (Wangching-Wei) என்பவரை அதன் தலைவராகவும் ஏற்படுத்தினர். இதற்குப் பின் இவருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு தான் கைப்பற்றிய சீனப் பகுதி முழுவதிலும் தன் செல்வாக்கை ஜப்பான் நிலைநாட்ட முற்பட்டது. இதற்குப் பின் ஜப்பான் மேலும் பல இடங்களைக் கைப்பற்ற விரும்பாமல் இதுவரை கைப்பற்றிய பகுதிகளில் தன் அதிகாரத்தை நிலைநாட்டுவதில் ஈடுபட்டது. இதற்கிடையில் இரண்டாவது உலகப் போர் மூண்டது. இளவரசர் கோனேயியின் அமைச்சரவையும் பிப்பிரவரி, 1939-ல் பதவியிலிருந்து நீங்கியது.

### இரானுமா அமைச்சரவை (பிப்பிரவரி, 1939—ஆகஸ்ட்டு, 1939)

கோனேயிக்குப்பின் தலைமையமைச்சரான இரானுமா (Hiranuma) ஆறுமாதங்களே பதவியிலிருந்தார். இவ் வாறுமாதக் காலத்தில் பல அரிய முயற்சிகளை இவர் மேற்கொண்டார். நாட்டின் எல்லாச் சத்திகளையும் ஒன்றுதிரட்டி ஒரு முற்போக்கு அணியை அமைத்து நாட்டின் பாதுகாப்பிற்குப் பாடுபட முனைந்தார். இவர் காலத்தில் அரசியல் கட்சிகள் யாவும் வலுவிழந்தன. தளபதி அராகி (Araki) என்ற இளம் படையதிகாரி தேசிய உணர்ச்சிகளைத் தீவிர முறையில் ஒன்றுதிரட்டும் திட்டமொன்றை வெளியிட்டார். பிற்போக்கு அரசியற்காரர்களை ஒழிப்பதும் காவல் துறைக்கு அதிக அதிகாரங்கள் அளிப்பதும், தன்னலமிகளை ஒழிப்பதும் பேராட்சியை வளர்ப்பதும் இவர் திட்டத்தின் முகாமைக் கூறுபாடுகளாம். ஆகஸ்ட்டு 1939-ல் செருமனி உருசியாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் காரணியமாக இரானுமாவின் அமைச்சரவை பதவியிலிருந்து விலகியது. இதற்குப்பின் தளபதி அபே (Abe) என்பவரும், தளபதி யோனாய் (Yonai) என்பவரும் தலைமையமைச்சர்களாகச் சூன், 1940 வரையில் இருந்தனர். சூலை, 1940-லிருந்து மீண்டும் இளவரசர் கோனேயி தலைமையமைச்சர் பதவியேற்றார்.

### கோனேயி அமைச்சரவை (சூலை, 1940—அக்டோபர், 1941)

இரண்டாம் முறையாகக் கோனேயி தலைமையமைச்சர் பதவியேற்றபோது சீன—ஜப்பானியப் போரும், இரண்டாம் உலகப் போரும் நிகழ்ந்து கொண்டிருந்தன. ஜப்பானின் பேராட்சிக்கு உதவவும், ஜப்பான் நாட்டிற்குப் பாதுகாப்புத் தேடவும், கட்சி சார்பற்ற ஒரு வலிவான இயக்கத்தைக் கோனேயி ஏற்படுத்த விரும்பினர். அதன்படி, அக்டோபர், 1940-ல் 'பேராட்சி உதவிக்

கழகம்' (Imperial Rule Assistance Association) ஒன்றை ஏற்படுத்தினர். எல்லா அரசியல் கட்சிகளும் கலைக்கப்பட்டன. இதனால் அரசியல் கட்சிகளும், ஆட்சியதிகாரிகளும் பெற்றிருந்த செல்வாக்கைப் படையினரே பெறலாயினர். இந்தக் கழகம் ஏற்பட்ட பின் அரசியல் கட்சிகளின் குழப்பங்களும், 'பொது',படைத் துறைகளுக்குமிடையே இருந்த சச்சரவுகளும் நீங்கின படையே எல்லாத் துறைகளுக்கும் தலைமையேற்றது. கோனேயி நாட்டின் மூலப் பொருள்களையும் செல்வத்தையும், பாதுகாப்புத் திட்டங்களுக்குப் பயன்படுத்தினர். அறிவியலறிஞர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் முதலியோர் படைத் துறையின் கீழ்ச் செயல்பட்டனர். செய்திப் போக்குவரத்து,கல்வி, போர்க்கருவிகள், எரிபொருள்கள் முதலியனவும் கட்டுப்படுத்தப்பட்டு மைய ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. தரைப் படையும், வான் படையும் ஒன்றிணைக்கப்பட்டன. தளபதி தோசோ போரமைச்சராக அமர்த்தப்பட்டார். இவ்வாறு ஜப்பானை எத்தகைய போருக்கும் அணியமாக இருக்கும் நாடாகக் கோனேயி வலுப்படுத்தினர். ஆனால், அவர்களின் நோக்கம் இரண்டாம் உலகப் போரில் இறங்கக் கூடாது என்பதேயாகும்.

இரண்டாம் உலகப்போர் 1939-ல் தொடங்கியது. இதில் தொடக்கத்தில் செருமனியே வெற்றிபெற்றது. தன்னுடைய உறவு நாடான செருமனி உறுதியாகப் பிரிட்டனைப்போரில் தோற்கடித்து விடுமென ஜப்பான் முடிவு செய்தது. பிரிட்டனுக்குச் சொந்தமான பர்மா, மலேயா, போர்னியோ, ஆங்காங் முதலிய இடங்களுடன் அது தொடர்புகொண்டு படைப்பொருள்களைப் பெறுதவாறு ஜப்பான் முட்டுக்கட்டையிடத் தீர்மானித்தது. அப்போது தலைமையமைச்சராயிருந்த ஒனுய் சீனுவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, பர்மா சந்தையைப் பிரிட்டனுக்குப் பயன்படாமல் மூடவேண்டுமெனும் இத்தகைய உடன்பாட்டிற்கு ஏற்பாடு செய்தார். ஆனால், படையினர் இதை எதிர்த்ததால் அவர் தம் பதவியிலிருந்து விலகினர். இதற்குப் பின்னரே கோனேயி தன் அமைச்சரவையை இரண்டாம் முறையாக அமைத்தார்.

கோனேயின் அமைச்சரவையில் தோசோ போரமைச்சராகவும், மத்சோகா அயலக அமைச்சராகவும், யொசிதா நாவாய்ப்படையமைச்சராகவும் பதவியேற்றனர். தன் நட்பு நாடான செருமனி வெற்றிமேல்வெற்றியடைவதைக் கண்ட ஜப்பான் ஃபிரெஞ்சு நாடு இந்தோ சீனுவின் மீது செலுத்தும் அதிகாரத்தை ஒப்புக்கொண்டு தன்னுடைய அதிகாரத்தைச் சயாம் (Tailand) நாட்டின்மீது செலுத்துவதை ஜப்பான் மறுத்தது. பின்பு ஃபிரெஞ்சு நாட்டிற்கும், சயாமிற்கும் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தி அதில் தானும் நன்மை

யடைந்தது. இதைப்போலவே நெதர்லாந்திடமும் ஜப்பான் வணிக ஒப்பந்தத்தால் நன்மையடைந்தது. இவ்வாறு இரண்டாம் உலகப் போரின் தொடக்கத்தில் ஜப்பான் கீழ்த்திசை நாடுகளில் ஆளுமை பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு அதற்கொரு வாய்ப்பினை எதிர்பார்த்து நின்றது.

மூவர் உடன்பாடு (Tripartite Pact)

1936-ல் இரோதா அமைச்சரவை உருசியாவுக்கெதிராக செருமனியுடன் 'அனைத்து நாட்டுப் பொதுவுடைமை அமைப்புக் கெதிராக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம்' ஒன்றை மேற்கொண்டதை அறிவோம். இந்த ஒப்பந்தத்தில் செப்டெம்பர் 26, 1940-ல் இத்தாலியும் சேர்ந்துகொண்டது. இம் மூன்று நாடுகளும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை 'மூவர் உடன்பாடு' (Tripartite Pact) என்கிறோம். இதையே 'உரோம் - பெர்லின் - தோக்கியோ அச்சு' (Rome-Berlin-Tokyo-Axis) என்றும் கூறுவர். இந்த உடன்படிக் கையின்படித் தன்னுடைய ஆளுமையைக் கிழக்காசியாவில் நிலை நாட்டிக்கொள்ளவும், செருமனியும், இத்தாலியும் தங்களுடைய ஆளுமையை ஐரோப்பாவில் நிலைநாட்டிக்கொள்ளவும் இம்மூன்று நாடுகளும் தங்களுக்குள் ஒப்புக்கொண்டன. செருமனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளில் ஏதாவதொரு நாட்டை இரண் டாம் உலகப் போரில் தற்போது ஈடுபடாமல் இருக்கின்ற ஒரு நாடு தாக்குமானால் இம் மூன்று நாடுகளும் ஒன்றாக இணைந்து அதனைத் தாக்கவேண்டுமென்பது இந்த உடன்படிக்கையின் முகாமைக் கூறுபாடாகும். நேச நாடுகளுக்கு உதவியாக அமெரிக்க ஒன்றியம் போரில் ஈடுபடுவதைத் தடுப்பதே இக் கூறுபாட்டின் உட்கருத்தாகும். இவ்வொப்பந்தத்தைக் கண்ட உருசியா, தனக் கெதிராகத்தான் ஜப்பான் இந்த ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருக்கிற தென நினைத்தது. ஆனால், ஜப்பான் பொதுவுடைமைக் கொள்கையை மட்டுமே தான் எதிர்ப்பதாகவும், சோவியத் ஒன்றியத்தைத் (U.S.S.R.)தான் எதிர்க்கவில்லையென்றும் கூறியது. இந்த உடன்படிக்கையின் மூலம் ஜப்பான் தன் ஆளுமையைக் கிழக்காசியாவில் பரப்பிக்கொள்ளவும், உணவுப் பொருள்கள், எண்ணெய்க் கிணறுகள், தொய்வம் (இரப்பர்) முதலியவற்றைப் பர்மா, மலேயா, போர்னியோ முதலிய நாடுகளிலிருந்து பெறவும் திட்டமிட்டது.

சூன் 22, 1941-ல் இட்லர் உருசியாவைத் தாக்கினார். ஜப்பானிய அயலக அமைச்சர் இச் சமயத்தில் செருமனியுடன் சேர்ந்துகொண்டு உருசியாவைத் தாக்கவேண்டுமென்றார். இதனைத் தலைமையமைச்சர் கோனோயியும், போரமைச்சர் தோசோவும்

எதிர்த்தனர். செருமனியுடன் சேர்ந்து உருசியாவைத் தாக்கினுல் ஜப்பான் இரு முனைப்போர்களில் ஈடுபடவேண்டி வரும் எனவும், எனவே தக்க சமையம் வரும் வரை காத்திருக்கலா மெனவும் தலைமையமைச்சர் கூறினுர். அயலக அமைச்சர் மத்சோகா நேரடியாகப் பேரரசரைச் சந்தித்து உருசியாவைத் தாக்க இசைவு வேண்டினுர். ஆயினும் ஜப்பான் உடனடியாக இரண்டாம் உலகப் போரில் இறங்கவில்லை.

அமெரிக்காவுடன் ஜப்பான் கொண்டிருந்த வணிக உறவுகள் முறியுமானுல் ஜப்பானுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் கிடைப்பது அரிது. எனவே ஜப்பான் எந்தவகையிலும் அமெரிக்காவின் உறவை முறித்துக்கொள்வது தனக்கே தீங்கு தேடிக்கொள்வதாகி விடும். ஆகவே அமெரிக்காவின் போக்கையறிந்தே ஜப்பான் போரிலிறங்க வேண்டுமெனக் கோனேயி கூறினுர். ஆயினும் தென்கிழக்காசியாவில் தன் பேராளுமையைப் பரப்பியே ஆக வேண்டுமென்ற கொள்கையைப் பொதுவாக அமைச்சரவையும், படையினரும் கொண்டிருந்ததால் உலகப் போரில்பங்குகொண்டா லொழிய இதனை நிலைநாட்ட முடியாதென ஜப்பானியர் நன் குணர்ந்தனர். இதனுல் கோனேயி அமைச்சரவையிலிருந்த சிலர் அமெரிக்காவின் நட்புறவை முறித்துக் கொள்ளாமல் அதன் போக்கையே பின்பற்றி இதனைச் சாதித்துக் கொள்ளலா மென்றனர். இறுதியாகச் செப்டம்பர் 1941-ல் கோனேயி கூட்டிய மாநாட்டில் ஜப்பான் அச்சு நாடுகளுடன் சேர்ந்துகொண்டு நேச நாடுகளை எதிர்ப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனுல், இது வரையில் போரிலிறங்காமல் நடுநிலைமை தாங்கும் அமெரிக் காவைத் தாக்கக் கூடாதெனச் சிலர் கூறினர். போரமைச்சர் தோசோ அமெரிக்காவின் நடுநிலைமையில் தான் ஐயுறுவதாகவும், அச்சு நாடுகளுடன் சேர்ந்து ஜப்பான் அதனைத் தாக்கினுல் வெற்றி பெறுவது உறுதியென்றும், இவ்வாறு கோனேயியுக்கும், தோசோ வுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் கோனேயி தன் பதவி யைத் துறந்தார். இவருக்குப் பின் தோசோ தலைமையமைச்ச ராகவும், போரமைச்சராகவும், உள்துறையமைச்சராகவும் பதவி களையேற்று அமைச்சரவையை அமைத்து, அதனைப் போரமைச் சரவையாக மாற்றினுர்.

## தளபதி தோசோ அமைச்சரவை (1941-1944)

பேரரசர் இரோஃகிதோ சீனுவுடன் கொண்ட சச்சரவைத் தீர்த்துக் கொண்டு ஜப்பான் உலகப் போரில் ஈடுபடாமல் வாழ வேண்டுமென விரும்பினுர். இதனுல் தோசோவை அமெரிக்கா வுடன் நெருங்கிய நட்புக் கொள்ளுமாறு பணித்தார். ஆனுல்,

தோசோ ஒரு பிறவி அதிகார வெறியராகவும் படைக்கள வாழ்க்கையைத் தவிர மற்ற எந்த வாழ்வையும் அவர் துய்க்காதவராகவும் இருந்ததால் அமெரிக்கக் கூட்டுறவின் நன்மையையும், சமைதி வாழ்வின் மேன்மையையும் அவர் சரியாகச் சிந்திக்கவில்லை. தோசோ ஒரு சிறந்த வீரர். ஜப்பானின் தீவிரத் தேசிய ஒருமைப்பாட்டைப் படையாட்சியால்தான் கொண்டு வரமுடியுமெனத் தீர்மானித்தார். அத்தகைய படைக்கு வலிமையும்,புகழும் வேண்டுமானால் அது போரிலீடுபடவேண்டுமென்பதும், அவ்வாறு போரிலீடுபட்டால்தான் ஜப்பான் தனது ஆட்சியைப் பரப்பி, பெருகி வரும் மக்கள் தொகைக்கு வேண்டிய உணவு, உடை, உறைவிடங்களைக் கொடுத்துதவ முடியுமென்பதும் அவருடைய முற்காணியமாகும்.

தோசோவின் தந்தையும் ஒரு போர்ப்படைத் தலைவரே ஆவார். போர்க் கல்விக் கூடத்தில் பயின்ற தோசோ ஜப்பானியப் படையில் சேர்ந்து, பதவி உயர்வு பெற்று, 1935-ல் படை உசாவற் கழகத்தின் தலைவரானார். பின்பு மஞ்சூரியாவுக்குச் சென்று அங்குள்ள குவாண்டுங் படையின் தலைவரானார். பிறகு மங்கோலியப் புரட்சிகளிலும், மறைமுகப் படைகளிலும் நல்ல பயிற்சியைப் பெற்றார். குவாண்டுங் படையாட்சியின் தலைவரான பின் படையாட்சியை நடத்தும் முறையில் நல்ல பயிற்சி பெற்றார். மஞ்சூரியாவிலிருந்து மீண்டும் ஜப்பானுக்குத் திரும்பியவுடன் கோனேயின் அமைச்சரவையில் துணைப்போரமைச்சரானார். அன்றிலிருந்து தான் மஞ்சூரியாவிலும், மங்கோலியாவிலும் பெற்ற தீவிரப்போர்ப் பயிற்சி முறைகளையும், படையாட்சித்தன்மைகளையும் மனத்தில் கொண்டு ஜப்பானியப் படைகளை ஒரு மாபெரும் போருக்கு அணியமாக்கினார். ஒரு சிறந்த வான் படையை ஏற்படுத்தி செருமானிய முறையில் அப்படையினருக்குச் சிறந்த பயிற்சியை அளித்தார்.

தோசோவின் முறைகளையும், பயிற்சிகளையும், நோக்கங்களையும் நோக்கும் போது தொடக்கத்திலிருந்தே அவர் பேராளுமைக் கொள்கையை விரும்புபவராகவும், பொதுவுடைமைக் கொள்கையை அடியோடு வெறுப்பவராகவு மிருந்தாரென்பது புலனாகிறது. அவர் படையதிகாரத்தின் ஊற்றாக விளங்கினாலும் இட்லரைப் போலவோ முசோலினியைப் போலவோ ஒரு வல்லதிகாரியாக மாற முடியவில்லை. அதற்குக் கரணியம் ஜப்பான் அவர் படையாட்சிக்கு மேலாகத் தெய்விகப் பேரரசரைப் பெற்றிருந்ததேயாகும். அப் பேரரசரே ஜப்பானில் இல்லையென்றால் தோசோவும் இட்லரைப்போல் தன்னாட்டைப் படுபாதாளத்தில்

தள்ளி அழித்திருப்பார். அவர் போர் வெறிகொண்டு துடித்த போதும் பேரரசரும், பேரரசரவையினரும் போரிலிறங்காமல் அமெரிக்காவோடு நட்புறவோடு வாழவே விரும்பினர்.

1941, செப்டெம்பர் 6ஆம் நாள் கோனேயி கூட்டிய மாநாட்டில் அமெரிக்கா ஜப்பானின் கோரிக்கைகளை ஏற்கா விட்டால் அதனுடன் போரிடுவது என்ற முடிவைச் செயல்படுத்து வதாகத் தோசோ அறிவித்தார். இதனைத் தன்னுடைய அமைச் சரவையை ஏற்கும்படி செய்தார். அதற்கு முன்பாகக் கடைசியாக அமெரிக்காவுக்கு ஜப்பானிய நாட்டுக் கோரிக்கைகளை அனுப்பி நவம்பர் 25, 1941-க்குள் அமெரிக்கா தன் முடிவைத் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். அக் கோரிக்கைகளை ஜப்பானியத் தூதுவர் நொமுரா (Nomura) அமெரிக்கச் செயலாளர் அல் (Hull) என்பாரிடம் கொடுத்தார். ஜப்பான் பிரிட்டன், நெதர்லாந்து, உருசியா, அமெரிக்கா ஆகிய நாடு களுடன் தனித்தனியே சமைதியுடன்படிக்கை செய்துகொள்ளு மென்றும், ஃபிரெஞ்சு நாட்டுக்குச் சொந்தமான இந்தோ சீனு, ஃபிரெஞ்சு நாட்டுக்கே உரியதெனத் தான் ஏற்பதாகவும் தன் கோரிக்கையில் கூறியிருந்தது. அமெரிக்கா மற்ற நாடுகளுக்குக் கொடுத்திருப்தைப்போல் ஏற்றத்தாழ்வற்ற வணிக உரிமைகளைத் தனக்கும் தரவேண்டுமென்றும் அக் கோரிக்கையில் அது வலியுறுத் தியது. சீனுவில் தேசீய ஆட்சியோடு மட்டுமே உறவு கொள்ளப் போவதாகவும், மஞ்சூகோ தவிர சீனுவில் மற்ற இடங்களிலுள்ள தம் படைகளைத் திருப்பிப் பெற்றுக்கொள்வதாகவும் ஜப்பான் அக் கோரிக்கையில் கூறியிருந்தது. மேலும் பசிபிக் பரப்பிலுள்ள தன்னுடைய உரிமைகளை விட்டுக்கொடுக்க முடியாதென்றும், வேண்டுமானுல் சீனுவில் புதிதாகக் கைப்பற்றப்பட்ட இடங்களை விட்டுக்கொடுப்பதாகவும் ஜப்பான் கூறியது. பல காலமாக அமெரிக்கா தான் விரும்புகின்ற தாலர், யென் நாணயங்களின் மதிப்புகளை சமநிலைப் படுத்தாமலிருப்பதற்குத் தான் வருந்து வதாகவும், உடனடியாக அதனைச் செய்ய வேண்டுமென்றும் தனது கோரிக்கையில் ஜப்பான் வலியுறுத்தியது. இக் கோரிக்கை களைப் பெற்றுக்கொண்ட அமெரிக்கா சரியான முறையில் பதிலி றுக்காத தன்மையைக்கண்டு தோசோ அமெரிக்காவோடு போர் தொடுப்பதைவிட வேறு வழியில்லையென அறிவித்தார். பேரரசர வையும் தோசோவின் தீர்மானத்திற்கு இசைவளித்தது. எனவே தோசோ போதிய முன்னறிவிப்பின்றி திசம்பர் 7, 1941-ல் பெர்ல் துறைமுகத்தின்மீது குண்டு வீசி அமெரிக்காவோடு போரைத் தொடங்கினுர். அடுத்த கணமே ஜப்பான் அமெரிக்காவையும், பிரிட்டனையும் எதிர்த்து இரண்டாம் உலகப்

போரில் இறங்கி விட்டதாகப் பேரரசரவையும் அறிக்கை விடுத்தது. ஜப்பான் அமெரிக்காவை எதிர்த்துப் போரைத் தொடர்ந்தபின் 'மூவர் உடன்பாட்டின்'படி இத்தாலியும் செருமனியும் திசம்பர் 11, 1941-ல் அமெரிக்க ஒன்றியத்தின் மீது போரைத் தொடர்ந்தன. இதுவரை இரண்டாம் உலகப்போரில் நடுநிலைமை தாங்கிய அமெரிக்க ஒன்றிய நாடுகள் நிகராளிகளைக் கூட்டி எடுத்த காங்கிரசுப் பேரவையின் முடிவுப்படி நேசநாடுகளுடன் இணைந்து அச்சுநாடுகளை எதிர்த்து உலகப்போரில் இறங்கியது.

# 12. ஜப்பானும் மஞ்சூரிய நெருக்கடியும்

முதல் உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட வெர்சேய்ல்சு உடன்படிக்கையும், பாரிசு மாநாடும், வாசிங்டன் மாநாடும் இனி உலகில் போர் ஏற்படாமல் தடுப்பதற்கான பல வழிமுறை ஏற்பாடுகளையும், ஒப்பந்தங்களையும் செய்தன. ஆயினும் உருசியா, சீனு, செருமனி, இத்தாலி போன்ற நாடுகளும், ஜப்பானும் *1918*-க்கும் *1939*-க்குமிடைப்பட்ட இருபதாண்டுக்காலத்திற்குள் எத்தனையோ மாறுதல்களைப் பெற்றுப் புது வலிவோடும், பொலிவோடும் விளங்கலாயின. இந்த வகையில் இதற்கு முந்திய படலத்தில் இவ்விருபது ஆண்டுகளில் ஜப்பான் பெற்ற வளர்ச்சியை விரிவாகக் கண்டோம். *1895*-லிருந்து ஜப்பானுக்கும், மஞ்சூரியாவுக்கு மிடையிலேற்பட்ட உறவுமுறைகளையும்,ஜப்பான் மஞ்சூரியாவைத் தனது அயல் நாட்டுச் செலாவணியின் ஊற்றுகக் கொண்டதையும் பார்த்தோம். வாசிங்டன் மாநாட்டில் தீர்மானித்தது போல எல்லா நாடுகளும் காசில்லா நுழைவுக் கொள்கையை ஒப்புக்கொண்டு சீனுவின் ஒற்றுமைக்கும், உள் நாட்டு அரசியல் வளர்ச்சிக்கும், தன்னுரிமைப் பாதுகாப்பிற்கும், நிரந்தர எல்லைப் பாதுகாப்பிற்கும் பாடுபடத் தீர்மானித்தன வென்பதையும், இவைகளே பன்னுட்டுக் கழகத்திலும் வலியுறுத்தப் பட்டன வென்பதையும் அறிவோம். ஆயினும் மஞ்சூரியாவில் ஜப்பான் ஆளுமை கொண்டதற்கும் அங்கு நெருக்கடிகள் ஏற்பட்டதற்கும் வரலாற்றடிப்படையிலான கரணியங்களை ஆய்ந்தால்தான் அந்த நெருக்கடிகள் எவ்வாறு ஜப்பானை இரண்டாம் உலகப்போரில் ஈடுபட வைத்தனவென்பது நமக்குப் புரியும்.

*1922*-க்குப் பிறகு சீனுவுக்கும், ஜப்பானுக்குமிடையே ஏற்பட்டிருந்த உறவு முறைகளை உற்றுநோக்கினுல், ஜப்பான் சீனுவின் 'நெற்களஞ்சிய' மான மஞ்சூரியாவை விட்டு வெளியேற முடியாத சூழ்நிலையில் இருந்திருக்கிறது. *1915*-ல் ஜப்பானுக்கும் சீனுவுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தால் *99* ஆண்டுகள் வரை குவாண்டுங் பகுதியில் இருப்புப் பாதை உரிமையையும், மஞ்சூரியாவில் வேளாண்மை உரிமையையும் ஜப்பான் பெற்றது. ஆனுல், வாசிங்டன் மாநாட்டிற்குப்பிறகு இந்தக் குத்தகை உரிமைகளை ஜப்பானுக்குக் கொடுக்க மறுத்து விட்டது. ஜப்பானுக்கு அமெரிக்காவும், சீனுவும் சிறந்த சந்தைகளாக விளங்கிய

போதிலும் மஞ்சூரியாவைப்போல் மூலப்பொருள்களைத் தருவதும், உணவுப் பொருள்களைத் தருவதுமான இடம் வேறில்லை. எனவே எப்படியும் மஞ்சூரியாவைத் தன்கீழ் வைத்துக்கொள்ள வேண்டுமென ஜப்பான் விரும்பியது. இதனால் சீனாவுக்கும் ஜப்பானுக்குமிடையே போர் மூளும் சூழ்நிலைகள் ஏற்படுவதும், ஜப்பான் தனது அதிகார மனப்பான்மை மஞ்சூரியாவில் பெருகிக் கொண்டே போவதும், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு வெறுப்பையளித்தன. ஆயினும் ஜப்பானால் மஞ்சூரியாவிலிருந்து முழுமையாக வெளியேற முடியவில்லை. ஜப்பானின் வணிகத்தையும், தொழில்களையும் ஆளுமை செய்துகொண்ட சைபத்சு குடும்பங்கள் தங்களுக்கு வேண்டிய நிலக்கரி, இரும்பு எஃகு ஆகியவையும், மற்ற மூலப்பொருள்களும் மஞ்சூரியாவிலிருந்து கிடைப்பதால் ஜப்பான் மஞ்சூரியாவிலிருந்து வெளியேறுவதை எதிர்த்தன. இக் குடும்பங்களால் புரக்கப்படும் அரசியல் கட்சிகளும் மஞ்சூரியாவிலிருந்து வெளியேறக் கூடாதென்றும், தேவையானால் படை வலிமையைப் பயன்படுத்தியேனும் தங்கள் உரிமைகளை மஞ்சூரியாவில் காக்க வேண்டுமென்றும் இக் குடும்பங்கள் வலியுறுத்தின.

ஒரு புறத்தில் ஜப்பானியர் தங்கள் உரிமைகளை மஞ்சூரியாவில் நிலைநாட்ட எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொண்டிருக்கும்போது, மற்றொரு புறத்தில் சீனர் தாங்கள் இழந்த உரிமைகளை மஞ்சூரியாவில் மீண்டும் பெறவேண்டுமெனத் துடித்தனர். சீனர் மஞ்சூரியாவில் இருப்புப் பாதையொன்றையமைக்கும் திட்டத்தை மேற்கொண்டு அதன் வழித் தங்கள் நாட்டுப் பொருளியலை வளர்க்கத் திட்டமிட்டனர். மேலும் தங்கள் நாட்டின் பிளவை ஒழித்துச் சீனா ஒன்றுபடவேண்டுமாயின் தென் மஞ்சூரியாவில் செல்வாக்குப் பெற்றுள்ள ஜப்பானியரை வெளியேற்றியே ஆக வேண்டுமெனவும் சீனர் தீர்மானித்தனர். இந்த இரு தரப்பு முயற்சிகளின் மோதல்களால்தாம் மஞ்சூரிய வரலாற்றில் பல இக்கட்டான நிலைமைகளும் சிக்கல்களும் ஏற்பட்டன.

1931-க்குள் சீன, ஜப்பானியப் போட்டியின் கரணியமாக மஞ்சூரியச் செய்தி முகாமை பெற்றுவிட்டது. சீனர் சாண்டுங் பகுதியில் பெருகி வரும் மக்கள் தொகையை மஞ்சூரியாவில் குடியேற்றவும் வடக்கிலிருந்து வரும் பேரேதத்தைத் தடுக்க மஞ்சூரியாவில் ஒரு பாதுகாப்பு வேலியை அமைக்கவும் விரும்பினர். ஆனால், ஜப்பானியரோ எல்லாவகையிலும் மஞ்சூரியா தங்களுக்கே உரிமையானதென எண்ணினர். 1905-லிருந்து மஞ்சூரியாவை உருசியரின் பிடிப்பிலிருந்து காப்பாற்றி, அதில் தங்கள் நாட்டுப் பொருள்களையெல்லாம் முதலீடு செய்து,

வேளாண்மையிலும், கனிவளத்திலும், தொழில் வளத்திலும் அதனை முன்னேறச் செய்தவர்கள் தாங்கள் தானென ஜப்பானியர் கருதினர். உருசியாவில் வளர்ந்த பொதுவுடைமைக் கொள்கையை மஞ்சூரியாவிற்குள் புகவொட்டாமல் தடுத்ததற்காக ஜப்பானை மேற்கத்திய வல்லரசுகள் போற்றிப் புகழ்ந்தன. எனவேதான் சீனரின் தேசிய உணர்ச்சிக்கும் நயன்மைக்கும், மாறாக மஞ்சூரியாவில் ஆளுமை செலுத்தும் ஜப்பானை மேற்கத்திய வல்லரசுகள் வெளிப்படையாக வெறுத்து வெளியேற்ற முடியவில்லை. ஆனால், மேற்கத்திய வல்லரசுகளை வெள்ளையரல்லாதவரைத் தங்கள் நாட்டிலிருந்து வெளியேற்ற ஓரியக்கத்தை தொடங்கப் போவதாகவும், அதற்கு முன் ஜப்பானை மஞ்சூரியாவிலிருந்து வெளியேற்றப் போவதாகவும் ஒரு வதந்தியை ஜப்பான் நாட்டு அரசியல் கட்சிகளில் சில கிளப்பி விட்டன. எனவே ஜப்பான் மேற்கத்திய வல்லரசுகள் மஞ்சூரியச் செய்தியில் தனக்குச் சார்பாகக் காட்டும் பரிவுகளில் ஐயங்கொண்டது. இவ்வையப்பாடே ஜப்பானை மஞ்சூரியாவின் மீது உடனடி வற்பிடிப்பைத் தொடங்கத் தூண்டியது. மஞ்சூரியா தனக்குச் சந்தையாகவும், மூலப் பொருள்களை வழங்கும் 'மூர்த்தி' யாகவும் இருப்பதால் அதனைத் தன் படைவலி கொண்டே தன் கையைவிட்டு நழுவாமல் காக்க வேண்டுமென ஜப்பான் உறுதி பூண்டது.

1929-ல் உலகெங்கிலும் ஏற்பட்ட பொருளியல் நெருக்கடியின் கரணியமாகத் தொலைகிழக்கு நாடுகளிலும், ஆசிய நாடுகளிலும் ஜப்பானியப் பொருள்களுக்கு பேரருந்தல் ஏற்பட்டது. அமெரிக்க ஒன்றியத்திலும், மேற்கு ஐரோப்பாவிலுங்கூட ஜப்பானியப் பொருள்களுக்கு அருந்தல் ஏற்பட்டது. இந் நாடுகள் தங்கள் நாட்டு உற்பத்திப் பொருள்களை பெருக்கிக் கொள்ளவும், ஜப்பானின் செல்வாக்கைக் குறைக்கவும், ஜப்பானியப் பொருள்களை இறக்குமதி செய்யக்கூடாதெனத் தடை விதித்தன. ஜப்பானியரும் அமெரிக்க ஒன்றிய நாடுகளிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் குடியேறக்கூடாதெனத் தடுக்கப் பட்டனர். இதனால் ஜப்பான் இவற்றிற்கு எதிர்மாறான செயல்களில் ஈடுபடலாயிற்று. அமெரிக்காவும், பிரிட்டனும் தூண்டியதின் பேரில் சீனாவும் ஜப்பான் நாட்டுப் பொருள்களுக்குத் தடை விதித்தது. சீன நாட்டுடன் செய்துவந்த வணிகம் தட்டுப்படவே ஜப்பானின் பொருளியல் பெரிதும் பாதிக்கப் பட்டது.

இவ்வாறு தன் முதுகெலும்பை ஒடித்துவிட்ட அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் இரண்டகச் செயலை எண்ணி

ஜப்பான் பெரிதும் வருந்தியது. குறிப்பாக அமெரிக்கா, ஆங்கில—ஜப்பானிய உறவுமுறையை முறிக்கச்செய்து, ஜப்பானியரைத் தன் நாட்டில் குடியேருதவாறு குடியேற்றத் தடுப்புச் சட்டங்களை நிறைவேற்றி, வாசிங்டன் மாநாட்டில் தன் கடலாளுமையைக் கட்டுப்படுத்தித் தன் சந்தைகளையெல்லாம் மூடும்படி செய்து, மரபு வழியாக இருந்துவரும் சீன வணிகத்திற்கும் குழிதோண்டி விட்டதேயென ஜப்பான் உளம் வெதும்பியது. தன்னுடன் கொண்டிருந்த உறவை முறித்துக்கொண்ட பிரிட்டன் தன்னைத் தனியாக விட்டு விட்டுத் தான் மட்டும் கடற்படை வலிமையைப் பெருக்கிக் கொண்டு அமெரிக்காவோடு தோள்கோத்து நிற்பதைக் கண்ட ஜப்பான், தன்னை ஒரு படைவலிமிக்க நாடாக்கிக் கொள்வதைவிட வேறு வழியில்லையெனத் தீர்மானித்தது. அத்தோடு அயல் நாட்டுக்கொள்கையில் குறிப்பாக மஞ்சூரியச் செய்தியில் தான் தீவிரமாக ஈடுபடவேண்டுமெனவும் ஜப்பான் தீர்மானித்தது. இத்தகைய கரணியங்களால்தாம் தன் எல்லைக்கு அப்பாலுள்ள மஞ்சூரியாவை ஜப்பான் கைப்பற்ற முற்பட்டது.

1931ஆம் ஆண்டு ஜப்பான் மஞ்சூரியாவின்மீது படையெடுத்தது. ஆனுல், அஃது எதிர்பார்த்ததுபோல அமெரிக்காவோ மேற்கத்திய வல்லரசுகளோ அதன் படையெடுப்புக்கு இடையூருய் நிற்கவில்லை. கரணியம் அவை தங்கள் நாட்டுப் பொருளியற் சீர்கேடுகளைச் செப்பனிடுவதில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தன. சீனுவும் தனது உள்நாட்டுப் போர்களில் ஈடுபட்டுச் சீர்குலைந்து காணப்பட்டது. மஞ்சூரியாவில் வளர்ந்த தேசிய உணர்ச்சியின் கரணியமாக மஞ்சூரியர் யாவரும் ஜப்பானியரை அடியோடு வெறுக்கலாயினர். செப்டெம்பர் 18, 19, 1931-ல் ஜப்பானியர் தென் மஞ்சூரிய இருப்புப் பாதைக் கண்மையில் குண்டு போட்டுத் தாக்கினர். இதனுல் ஏற்பட்ட அழிவு மிகக் குறைந்ததாயினும் இதனுடைய விளைவு பெரிதாகி விட்டது. இதனுல் ஜப்பானியர் தாங்கள் வெடிகுண்டைப் போடவில்லையெனவும் சீனர்களே அச்செயலைச் செய்தனரென்றும் தற்காப்புக்காகத் தாங்கள் திருப்பிச் சுட்டதாகவும் கூறினர். ஆனுல், மஞ்சூரியாவிலுள்ள மிக முகாமையான நகரங்களையும், பாதுகாப்பிடங்களையும் ஜப்பானியர் கைப்பற்றிக் கொண்டனர். சீனர்கள் குண்டு வெடித்தது ஜப்பானியரே என்றனர். இதனுல் சிக்கலும், நெருக்கடியும் மஞ்சூரியாவில் சேர்ந்தன.

இதற்குள் ஜப்பானிய உள்நாட்டில் மஞ்சூரியப் படையெடுப்பைப்பற்றி மாறுபட்ட கருத்துகள் தோன்றலாயின. ஜப்பானிய அரசு, சீன அரசிற்குத் தாங்கள் செய்தது வற்பிடிப்பன்றென்றும், தற்காப்புக்காகச் செய்துகொண்ட ஏற்பாடென்றும்

கூறியது. சீனவிலிருந்த ஜப்பானியத் தூதரகமும், ஜப்பான் மஞ்சூரியாவில் வற்பிடிப்புச் செய்யவில்லையென்றது. இச் சமையத்தில் ஜப்பானின் அமைச்சரவையைக் கைப்பற்றிக் கொண்டிருந்த மின்செய்தோக் (Minseito) கட்சியினரால் படையினரை அடக்கியாள முடியவில்லை. எனவே திசம்பர், 1931-ல் இக் கட்சி பதவியிலிருந்து விலகவேண்டியதாயிற்று. இதற்குப்பின் பழைமையாளரின் கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைச்சரவையை அமைத்தனர். இவர்கள் பிற்போக்கான அயலகக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். இவர்களால் 'பொதுத்' துறைக்கும் படைத் துறைக்குமிடையே எழுந்த பிளவைப் போக்க முடியவில்லை. எனவே ஜப்பானில் கட்சிப் பூசல்களும், பொதுத்துறை, படைத் துறையினருக்குமிடையே சச்சரவுகளும் வலுத்துக்கொண்டே போயின. எனவே, இந்த அமைச்சரவையாலும், 'பொது'த்துறையினராலும் மஞ்சூரியாவைக் கைப்பற்றிய படையைத் திருப்பி அழைக்க முடியவில்லை.

மஞ்சூரியாவில் நயன்மையற்ற முறையில் தாக்குதல் நடத்திப் பல இடங்களில் வற்பிடிப்புச் செய்துகொண்ட ஜப்பானை வெளியேற்றும்படி சீன பன்னுட்டுக் கழகத்தை வேண்டிக் கேட்டுக் கொண்டது. பன்னுட்டுக் கழகத்திலிருந்த ஜப்பான் நாட்டு நிகராளி தன் நாட்டிற்கு நாடு கவரும் நோக்கமே இல்லையென்றும், வேண்டுமானல் சீனவும், ஜப்பானும் தங்களுக்குள் பேசி மஞ்சூரியச் சிக்கலைத் தீர்த்துக்கொள்ளலாமென்றும் கூறினர். ஆனல், ஜப்பானியப் படை மஞ்சூரியாவிலுள்ள இருப்புப் பாதையை விட்டு வெளியேறினலொழிய ஜப்பானுடன் பேச்சு நடத்த முடியாதெனச் சீனர் கூறினர். இதனை நேரடியாகக் கண்ணுற்று உசாவி விளக்கங்களை அவைக்குப் படைக்க பன்னுட்டுக் கழகம் ஒரு 'உசாவல் ஆணைக் குழுவை' அமர்த்தியது. இவ்வாணைக் குழுவுக்கு கிழான் இலிட்டனைத் தலைவராக அமர்த்தியது. இச் சமையத்தில்தான் அமெரிக்க ஒன்றிய நாடும் மஞ்சூரிய நெருக்கடியில் ஒரு சரியான தீர்வு காணவேண்டுமென முடிவெடுத்தது. அமெரிக்க ஒன்றிய நாடுகளின் பொதுச் செயலாளர் எச். எல். சிநீம்சன் ஏற்கனவே இருக்கின்ற உடன்படிக்கைகளுக்கும், ஒப்பந்தங்களுக்கும் பழுது நேராதவாறும், இனி மஞ்சூரியாவில் எப்பொழுதுமே நெருக்கடி நேராதவாறும் பன்னுட்டுக் கழகம் முடிவெடுத்துச் செயலாற்ற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். மேலும் சீன-ஜப்பானிய அரசுகளுக்குத் தனித்தனி எச்சரிக்கை விடுத்து நயன்மைக்குப் புறம்பாக நடக்கும் எந்த நாட்டையும் அமெரிக்காவோ அல்லது பன்னுட்டுக் கழகமோ ஒப்பாதென எச்சரித்தார். அத்தகைய நாடுகளின் 'பட்டறி

வுரிமைகளை' ஏற்க முடியாதென்றும், பட்டறிவுரிமையை வைத்து நயன்மைக்குப் புறம்பாக நடக்கும் எந்த நாட்டுக்கும் பன்னாட்டுக் கழகத்தில் இசைவு மறுக்கப்படுமெனவும் எச்சரித்தார். இவருடைய இந்தக் கொள்கையைத்தான் 'இசைவு மறுப்புக் கொள்கை' என்கிறோம். இந்தக் கொள்கையை மிகக் கடுமையாகக் கடைப்பிடிக்கத் தொடங்கியதால் தான் தவறிழைத்த நாடுகளைக் கண்டித்துப் பன்னாட்டுக் கழகத்திலிருந்து நீக்க வேண்டியதாயிற்று அல்லது அவைகளே வெளியேற வேண்டியதாயிற்று. இதன் பயனாகப் பன்னாட்டுக்கழகம் தோல்வியில் முடிந்தது. வலிய வற்பிடிப்புச் செய்யும் நாட்டை வாயளவிலே அன்றிச் செயலள வில் தண்டித்து நிறுத்தக்கூடிய நிலை அன்றைய பன்னாட்டுக் கழகத்தில் இல்லை. எனவேதான் மஞ்சூரியாவில் வற்பிடிப்புச் செய்த ஜப்பானின் செயல்பற்றி உசாவல் நடத்த அமர்த்தப்பட்ட கிழான் இலிட்டனின் உசாவல் ஆணைக் குழுவும் பயனற்றுப் போய்விட்டது.

பன்னாட்டுக் கழகத்தாலும், அமெரிக்காவின் எச்சரிக்கை யாலும் ஜப்பானியரை மஞ்சூரியாவிலிருந்து வெளியேற்ற முடிய வில்லையென்பதை அறிந்த சீனர் தாங்களே பல வழிகளில் ஜப் பானியருக்குப் பொருள் சேதம் ஏற்படச் செய்தனர். ஜப்பானியப் பொருள்களைச் சீனர் கட்டு மறுப்புச் செய்தனர். இத்தகைய 'கட்டு மறுப்பு இயக்கம்' சீனாவிலும், மஞ்சூரியாவிலும் வலு வடைந்தது. ஜப்பான் நாட்டுப் பொருள்களை வாங்குவாரற்றுப் போனதால் ஜப்பானுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. இந்தக் கட்டு மறுப்பு இயக்கத்தைத் (Boy Cott Movement) தகர்த்தெறிய ஜப்பான் சாங்கையில் படையொன்றை நிறுத்தியது. இப்படை 1932ஆம் ஆண்டு, சனவரி முதல் ஐந்து மாதங்கள் சாங்கையி லிருந்தது. இதனை சாங்கையிலிருந்து வெளியேற்றும்படிச் சீனா பன்னாட்டுக் கழகத்தை வேண்டியது. அதன் ஆணைக்கு முன்பாகவே ஜப்பான் சாங்கையிலிருந்து வெளியேறியது. ஜப்பானியப் படைகள் சாங்கையிலிருக்கும்போது மஞ்சூரிய விடுதலை இயக்கம் ஒன்று தோன்றியது. இவ்வியக்கம் மஞ்சூரியாவைத் தனி நாடாக்கி விடுதலையளிக்க வற்புறுத்தியது. இவ் வியக்கத்திற்கு ஜப்பானியர் சார்பு கொடுத்தனர். இவ்வாறு ஜப்பானின் பொருள்களை வாங்க மறுப்பதால் தங்களுக்குள் தேசிய ஒற்றுமை ஏற்பட்டு ஜப்பானின் செயல்களை ஒருமனதாய் வெறுக்க முடியு மென எண்ணிய சீனரின் திட்டத்தை ஜப்பான் சாங்கைப் படை நிகழ்ச்சியால் சிதறடித்தது. மஞ்சூரியாவில் தோன்றிய விடுதலை இயக்கம் நாளடைவில் வலுவடைந்து பிப்பிரவரி 18, 1934-ல் மஞ்சூரியாவைத் தனி நாடாக்கியது. இதுவே முகுதனைத் தலை

நகராகக்கொண்டு விளங்கிய மஞ்சூகோ ஆட்சியாகும் (Manchucuo). 1912-ல் முடியிழந்த மஞ்சுப் பேரரசரான பூயி (Pu-Yi) புதிதாக ஏற்படுத்தப்பட்ட இம் மஞ்சூகோ அரசின் தலைவரானுர். ஆனுல், உலக நாடுகள் புதிதாக ஏற்படுத்தப்பட்ட மஞ்சூகோ அரசை ஒப்பேற்புச் செய்யவில்லை. இவ்வரசு ஜப்பானின் கைப்பாவை யாதலால் ஜப்பானை மஞ்சூரியாவிலிருந்து இதனுலும் வெளியேற்ற முடியவில்லை. ஜப்பானை வெளியேறும்படி கண்டித்த பன்னுட்டுக் கழகத்திலிருந்து ஜப்பான் 1933-லிருந்து வெளியேறிவிட்டது. எனவே மஞ்சூரிய நெருக்கடி வேரூன்றி நின்றது.

மஞ்சூகோ அரசின் பெயரால் ஜப்பான் படைகள் ஜெஃகோல் (Jehol) பகுதியைக் கைப்பற்றி மஞ்சூகோ அரசுடன் இணைத்தது. இவ்வாறு மஞ்சூரியாவிலிருந்து வெளியேருமலிருக்கப் பல வழிமுறைகளைக் கையாண்டு மஞ்சூகோ அரசின் சார்புடன் மஞ்சூரி யாவில் நிலைபெற்றுவிட்ட ஜப்பான் அதைத் தன் தங்கு தளமாகக் கொண்டு சீனுவின்மீது படையெடுக்கத் திட்டமிட்டது. தன் நிலைமையை வலுப்படுத்திக்கொள்ள இடைவெளி தேவைப்பட்ட தால் சீன அரசோடு தங்க்கு (Tangku) என்னுமிடத்தில் தற்காலிகப் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டு தன்னை எல்லா வகையிலும் ஆயத்தப்படுத்த முற்பட்டது.

தற்காப்பு என்ற பெயரால் மிகக் குறைந்த காலத்திலேயே ஜப்பான் ஐந்திலக்கம் சதுரக்கல் நிலப்பரப்பைத் தனதாக்கிக் கொண்டது. மஞ்சூரியாவிலும், சாங்கையிலும் படைகொண்டு தாக்கிய நிகழ்ச்சிகளை நேர்ச்சிகளென்றும், தற்காப்புச் செயல் களென்றும் கூறிக்கொண்டு இவ்வகை வற்பிடிப்பை ஜப்பான் செய்து கொண்டு வந்தது. இதனுல் புரக்கப்பட்ட மஞ்சூகோ ஆட்சியை இது தவிர மற்ற உலக நாடுகள் ஒன்றுகூட ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தப் புதிய அரசு ஜப்பானின் துணையுடன் மிக விரைந்து முன்னேறியது. மஞ்சூரியாவை ஜப்பான் தனது பொருளியலின் உயிர்நாடியெனக் கருதியதால், தன் வற்பிடிப் பிற்கு மஞ்சூகோ அரசு ஒரு காலகோளாக இருக்கவேண்டு மென்றும், ஜப்பான் தன் திறமைகளையெல்லாம் பயன்படுத்தி மஞ்சூகோ ஆட்சியை வளர்த்தது. ஜப்பானியக் கண்காணிப்பில் மஞ்சூகோ ஆட்சி முறையும், பொருளியல் வளமும் பெருகியது. ஜப்பான் தனது உயிர் நாடியான மஞ்சூகோ ஆட்சிக்குத்தன் படையைக் கொண்டே பாதுகாப்பளித்தது.

மிக எளிதாக மஞ்சூரியாவை வென்று அதனுல் பெரும்பயன் அடைந்த ஜப்பானுக்குச் சீனு முழுவதையும் வெல்ல வேண்டு மென்ற பேராசை 1931-க்குப்பின் ஏற்பட்டது. தன்னுடைய

படைவளத்தையும், பொருள் வளத்தையும் மஞ்சூரியாவின் மூலப் பொருள்களாலேயே வளர்த்துக்கொண்டது. பன்னாட்டுக் கழகமும், அமெரிக்காவும், மற்றும் பல மேற்கத்திய வல்லரசுகளும் ஜப்பான் தங்கள் பிடியிலிருந்தும் தண்டனையினின்றும், தப்பித்துக் கொண்டதை எண்ணிப் புழுங்கிக் கொண்டிருந்தன. அண்மையிலுள்ள உருசியா மஞ்சூரியாவின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சியது. எனவே தானும் அதற்குப் போட்டியாகப் பசிபிக் மாகடலிலுள்ள தன் இடங்களை வலுப்படுத்தியது; மஞ்சூரியாவையொட்டியுள்ள மங்கோலியாவும் தம் எல்லைப்புறங்களை வலுப்படுத்தியது. மஞ்சூரியாவில் வைக்கப்பட்டுள்ள மாபெரும் வெடியாகிய ஜப்பான் எந்நேரத்திலும் வெடிக்கக்கூடும் என்னும் விழிப்புணர்ச்சியோடு அண்டை நாடுகளும், அமெரிக்காவும், பிரிட்டனும் அதனையே உற்று நோக்கியவண்ணமிருந்தன. கிழக்கில் தோன்றியுள்ள இந்த வெடிகுண்டின் அழிவைத் தடுக்கப் பிரிட்டனும், அமெரிக்காவும் நெருங்கி நேசநாடுகளாய் நின்றன.

# 13. ஜப்பானும் இரண்டாம் உலகப்போரும்


## போர்க் கரணியங்கள்

இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் இறங்குவதற்கு தோசோவின் அதிகார வெறிதான் கரணியமென்று ஒரே சொல்லில் கூறிவிட முடியாது. சுற்றுப்புறச் சூழ்நிலைகளும், மற்ற வல்லரசுகளின் போக்குகளுமே இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்கு அடிப்படைக் கரணியங்களாகும். முதல் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட பாரிசு உடன்படிக்கையின் கூறுபாடுகளும், வெர்சேய்ல்சு உடன்படிக்கையில் செருமனியின் மீது சுமத்தப்பட்ட சுமைகளுமே செருமனி இரண்டாம் உலகப் போரிலிறங்குவதற்குக் கரணியமாய் நின்றன. பிரிட்டன் தன்னை விட்டுப் பிரிந்ததும் வாசிங்டன் மாநாட்டில் போர்ப் படைகளை வைத்திருக்க வேண்டிய முறைகளை உறுதிப்படுத்தியதும், சீனாவில் தான் ஆளுமை பெற்றதும் அதற்கேற்றாற்போல் தன் படை வலிமையும், பொருள் வலிமையும், மக்கள் தொகை பெருகியதும், அமெரிக்கா தன் முன்னேற்றத்திற்குத் தடையாய் நின்றதுமே ஜப்பான் இரண்டாம் உலகப் போரில் இறங்குவதற்குக் கரணியங்களாய் நின்றன. மேலும் பன்னாட்டுக் கழகம் தான் மேற்கொண்ட பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடிக்காமல் தோல்வியுற்றதால் வல்லரசுகள் யாவும் வற்பிடிப்பில் ஈடுபட்டன. அதில் ஜப்பானும் பங்கேற்றது.

இவ்வாறு பொதுப்படையாகக்கூறி ஜப்பான் இரண்டாம் உலகப் போரிலிறங்கியதென்பதைவிட, ஜப்பான் இரண்டாம் உலகப் போரிலீடுபடுவதற்குரிய கரணியங்களைக் குறிப்பாகவும், சிறப்பாகவும் அறிந்து கொள்ளுதலே சாலச் சிறந்ததாகும். ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றி அங்கு மஞ்சூகோ ஆட்சியை ஏற்படுத்தி அதனைத் தன் கைப்பாவையாக்கிக் கொண்டதை நாம் அறிவோம். அதற்குப் பின் தன்னுடைய ஆளுமையைச் சீனாவில் பரப்ப முற்பட்டது. இடையிடையே வந்த பன்னாட்டுக் கழகத்தின் எச்சரிக்கைகளை அது அசட்டை செய்தது. கடைசியாக 1933-ல் பன்னாட்டுக் கழகத்திலிருந்து

வெளியேறியது. இதற்குப் பின் ஜப்பானில் ஏற்பட்ட பொருள் வளர்ச்சியும், படை வளர்ச்சியும் ஜப்பானுக்குத் தன் வலிமையில் பெரு நம்பிக்கை கொள்ளும்படி செய்தது. 1931ஆம் ஆண்டுக்கும் 1941ஆம் ஆண்டுக்குமிடைப்பட்ட

1940-இல் ஜப்பான்




இப்பத்தாண்டுக் காலத்தில் ஜப்பான் மிகப் பெரிய அளவில் தன்னுடைய விளைப்பைப் பெருக்கிக் கொண்டது. சான்றாக 1930-ல் அதன் தொழிற்சாலைகள் 52,97,000-லிருந்து 57,00,000 ஆக உயர்ந்தது. அதன் மக்கள் தொகையும் 4,50,00,000-லிருந்து 6,40,00,000 ஆக உயர்ந்தது. இதற்குத்தகுந்தாற்போல் அதனுடைய வேளாண்மையும் புதிய முறையில் வளர்ச்சி பெற்றது. வாணிகமும் போக்குவரத்துக்களும் பெருகின. 1933-க்குப் பிறகு ஜப்பான் மஞ்சூரியா, கொரியா, சீனப் பகுதிகள் முதலியவற்றைக் கைப்பற்றிக் கொண்டதால் தன் நாட்டுக்கு வேண்டிய மூலப் பொருள்களைத் தடையின்றிப் பெற்றது. 1941-க்குள் ஜப்பான் எல்லாத் துறைகளிலும் வளர்ந்து ஆடைகள், கைத்தொழில்

பொருள்கள், இயந்திரச் சாமான்கள், புதிய கருவிகள் முதலிய எல்லாவற்றிலும் உலகச் சந்தையைப் பிடித்துக்கொண்டது. இயந்திரங்கள், புதிய கருவிகள், ஆலைகள் முதலியவை வளர வளரக் குடிசைத் தொழிலாக இருந்த சிறு தொழில்கள் மறைந்தன. பெரும் இயந்திரத் தொழில்களே பரவலாயின. இத்தகைய பெருந் தொழில்களின் உருவாக்கப் பொருள்களை அயல் நாடுகளில் விற்கவும், மூலப் பொருள்களை அங்கிருந்து பெறவும், பெருகிவரும் மக்கள்தொகையை வெளிநாடுகளில் குடியேற்றவும், முறையே சந்தைகளையும், குடியேற்றங்களையும் தேடவேண்டியது ஜப்பானின் தவிர்க்க முடியாத கடமையாயிற்று. மேலும் 1931-ஆம் ஆண்டுக்கும் 1941-ஆம் ஆண்டுக்குமிடைப்பட்ட இக் காலத்தில் பிரிட்டன், அமெரிக்கா, உருசியா, இத்தாலி, செருமனி போன்ற நாடுகளும் தங்களை எல்லா வகையிலும் வலுப்படுத்திக் கொண்டன. உருசியாவில் தீவிரப் பொதுவுடைமையும், இத் தாலியில் பாசிசமும், செருமனியில் நாசிசமும் வலுப்பெற்று ஏமாளி நாடுகளைத் தின்று ஏப்பம் விட எத்தனித்து நின்றன. எனவே ஜப்பானும் தன்னை ஒரு வல்லாட்சியாக ஆக்கிக்கொள்ள முயன்றதில் வியப்பில்லை. நல்வினைப் பயனாக ஜப்பான், தானியங்கி இயந்திரத் தொழிற்சாலை, நுண் கருவிகள், வானவூர்திகள் உருவாக்குவதிலும் மற்ற எல்லாநாடுகளையும் விடச்சிறந்து நின்றது. சான்றாக, 1930-ல் அதனிடம் நானூறு வானவூர்திகளே இருந்தன. ஆனால், 1941-ல் 5000 வானவூர்திகளாயின; 1930-ல் ஐநூறாக விருந்த தானியங்கி இயந்திர உருவாக்கத்திறன், 1941-ல் 48,000 ஆக வளர்ந்தது; 1930-ல் ஆண்டுக்கு 19 கல்லெடை அலுமினிய உருவாக்கத்தைப் பெற்றிருந்த ஜப்பான் 1941-ல் 71,000 கல் லெடையாகப் பெருகியது; எஃகு ஆண்டொன்றுக்கு 18 இலக்கம் கல்லெடையிலிருந்து 68 இலக்கமாகவும், நிலக்கரி ஆண்டுக்கு 2 கோடியே 79 இலக்கத்திலிருந்து 5 கோடியே 56 இலக்கமாகவும், 1931ஆம் ஆண்டுக்கும், 1941ஆம் ஆண்டுக்கு மிடைப்பட்ட காலத்தில் உயர்ந்து நின்றன. மின் உருவாக்கமும், நீர்மூழ்கிக் கப்பல்கள், நாவாய்ப் படைகள் ஆகியவற்றின் உருவாக்கமும் இவையெல்லாவற்றையும் விடத் தலைசிறந்து நின்றன.

1931ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜப்பானியப் படையினர் எழுச்சியுற்றுச் சிறிது சிறிதாக ஆட்சி முறையினைக் கைப்பற்றிக் கொண்டு சைபத்சு குடும்பங்களின் செல்வாக்கைக் குறைத்து உருவாக்கப் பொருள்கள் யாவும் படையின் எழுச்சிக்கும், படை வலிமைக்குமே பயன்படும்படியாகச் செய்துவிட்டனர். இரண்டாம் உலகப் போர் 1939-ல் தொடங்கும்போதே ஜப்பான்

நாட்டின் எல்லாத் தொழில்களும், படைக் கருவிகளை உருவாக்கவும் அவற்றின் துணைத் தொழில்களாகவும் மாறிவிட்டன. இதற்கு முன்பிருந்தே ஜப்பான் நாட்டுப் பேராட்சிக் கொள்கையில் வெறி கொண்ட படையதிகாரிகளின் கலகங்களும் அவற்றால் விளைந்த பயன்களும் அரசியல் கட்சிகளையும், தன்னலமிகளையும் நீக்கிப் படையினரிடம் ஜப்பானை ஒப்படைத்தால்தான் நாடு நலம் பெறுமென்பதை ஜப்பானிய மக்கள் தீர்மானித்திருந்தார்கள். எனவே இவ்வாறு நிலைபெற்றுவிட்ட ஜப்பானிய ஆட்சிக்குத் தோசோவின் தலைமையும், சீனாவுடன் மூண்ட போரும், செருமனி, உருசியாவின் நட்புறவும் வாய்ப்புகளாக அமைந்தன. அமெரிக்காவின் மீது முதன்முதல் போரைத் தொடுத்து ஜப்பான் இரண்டாம் உலகப் போரில் இறங்கியதைக் 'கடைசித் துரும்பு ஒட்டகத்தின் கழுத்தை ஒடித்தது' என்ற முதுமொழியை மெய்ப்பிக்கிறது.

### இரண்டாம் சீன-ஜப்பானியப் போர் (1937—1945)

ஜப்பான் இரண்டாம் உலகப் போரிலிறங்கியதற்கு மிக நெருங்கிய கரணியம் அது 1937-ல் இரண்டாம் முறையாகச் சீனாவோடு தொடுத்த போராகும். மஞ்சூரியாவில் தான் பெற்ற ஆளுமையை வலுப்படுத்திக்கொண்டு, வடசீனாவில் பல பகுதிகளைக் கைப்பற்றிச் சீனா முழுவதையும் விழுங்க ஜப்பான் எத்தனித்தது இந்த இரண்டாவது சீன—ஜப்பானியப் போருக்குக் கரணியமாகும். ஜப்பான் செருமனியோடு ஒப்பந்தம் செய்து கொண்டவுடன் இத்தாலி, செருமனி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் ஒரு வரிசையில் நின்றனவெனலாம். ஜப்பானும், செருமனியும் உருசியாவின் பொதுவுடைமைக்கெதிராக ஏற்படுத்திக்கொண்ட இந்த ஒப்பந்தத்தால் உருசியா தன் நாட்டுக் கருகிலுள்ள சீனாவில் ஜப்பானின் ஆளுமை பெருகி வருவதைக் கண்டு அஞ்சியது.

இந்தச் சீன-ஜப்பானியப் போரின் முதல் கட்டத்தில் ஜப்பான் வட சீனாவிலுள்ள எல்லாப் பகுதிகளையும் கைப்பற்றிக்கொண்டு யாங்ட்சிகி ஆற்றின் கீழ்ப்பகுதியிலும் தன் ஆளுமையை ஏற்படுத்தியது. இப் போரின் இரண்டாம் கட்டத்தில் காண்டன், ஆங்கௌ ஆகியவற்றை ஜப்பான் கைப்பற்றிக் கொண்டது. ஆனால், சீனாவின் தேசியப்படையையும், அதன் தலைவரான சியாங்கேசேக்கையும் முழுதுமாகத் தோற்கடித்து வெற்றிபெற ஜப்பானால் முடியவில்லை. சீனர் கடைசிவரை போராடியே தீரவேண்டுமென முடிவு செய்து விட்டனர். மார்ச்சு, 1938-ல் கோமிண்டாங் காங்கிரசு சூயென்லாய் தலைமையில் கூடியது. எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் அழைக்கப்பட்டனர்.

'மக்கள் அரசியற் குழு' ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த இருநூறு உறுப்பினர்கள் பங்கேற்றனர். இதில் தேசியக் கட்சியின் தலைவர்களும், பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்களும் பெரும் பங்கேற்றார்கள். கட்சி வேறுபாடுகளை மறந்து பொதுப் பகைவனை ஜப்பானியனை வெளியேற்றுவதே தங்கள் கடமையென்றும், வடக்கு தெற்கு வேறுபாடுகளை மறந்து 'சீனர்' என்ற தேசிய உணர்ச்சியுடன் ஒன்று சேர்ந்து விட்டோமென்றும் அந்த உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இவர்கள் யாவரும் சீனாவின் ஒற்றுமைக்கும், நன்மைக்கும் ஏதுவான அரசியல் செய்திகளில் அறிவுரை கூறவும், குறிப்பாகச் சீன-ஜப்பானியப் போரில் நாட்டு மக்களின் ஒற்றுமையைத் திரட்டித் தரும் முயற்சியில் ஈடுபடவும் தொடங்கினர்.

ஜப்பான் வடசீனாவின் மீது போர் தொடுத்து சாங்கை, யாங்ட்சிகி முதலிய பகுதிகளில் வெற்றிபெற்று முன்னேறி வருவதைக் கண்ட சீனப்படைகள் அதனுடைய கடற்படை, வான்படை, தரைப்படை ஆகிய முப்படைத் தாக்குதலுக்கும் ஈடு கொடுக்க முடியாமல் திணறின. கொரில்லாப் போர் முறைகளைக் கையாண்டு ஜப்பானியப் படைகளினிடையே செய்தித் தொடர்புகளைத் துண்டிப்பதிலும் இடையிடையே முன்னேறும் படைகளைத் திணறடிப்பதிலும் சீனப்படைகள் வெற்றி கண்டன. நாங்கிங் ஜப்பானியப் படைகளின் வசமானவுடன் இத்தகைய கொரில்லாப் போர் முறைகளையும் கைவிட்டுச் சீனப்படைகள் பின் வாங்கி விட்டன. சீனத் தலைநகரான நாங்கிங் தங்கள் கைவசமானதும் சீனா முழுவதையும் வெற்றி கொள்வது உறுதியெனக் கொண்ட ஜப்பானியப் படையினர் வெற்றிப் பெருமிதத்தால் கொலை, கொள்ளை, கற்பழிப்பு முதலிய செயல்களில் ஈடுபட்டார்கள். இந்த நிலைமையிலும் பொதுவுடைமைக் கட்சியினர் தங்கள் கொள்கையினை வளர்ப்பதில் தீவிரம் காட்டினர். ஆனால், ஜப்பானியரின் இத்தகைய கொடுமைகளைக் கண்ட சீன மக்கள் ஒன்று கூடி ஜப்பானை எதிர்ப்பதில் மேலும் ஊக்கம் காட்டினர். தலைநகரான நாங்கிங் கைப்பற்றப்பட்டு விட்டதால் சீன அரசின் தலைநகரம் ஆங்கௌவிற்கு மாற்றப்பட்டது. 1938ஆம் ஆண்டினிறுதியில் மீண்டும் தலைநகரம் சுங்கிங்குக்கு மாற்றப்பட்டது. இதுவே சீன-ஜப்பானியப் போர் முடியும் வரை போர்க் காலத் தலைநகரமாக இருந்து வந்தது. ஜப்பானியர் தாங்கள் வென்ற இடங்களில் தங்கள் ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டு மேற்படி கொடுஞ் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது சீனப்படைகள் போரிடத் தங்களை அணியப்படுத்திக் கொண்டன. சீனப்படைத் தலைவர் தளபதி இலிசுங்சென்

என்பாரின் தலைமையில் சென்ற படைகள் வடக்கிலிருந்தும், நடுவிலிருந்தும் வந்து கொண்டிருந்த ஜப்பானியப் படைகளை ஒன்று சேரவிடாது தடுத்து ஏப்பிரல், 1938ஆம் ஆண்டில் தையர்சுவாங் (Taierhuang) என்னுமிடத்தில் வெற்றி பெற்றன. இதுவே சீனரின் முதல் வெற்றியாகும். மஞ்சளாற்றில் பெருகி வந்த வெள்ளத்தின் கொடுமையால் சீனருக்கு ஏராளமான சேதம் ஏற்பட்டது. இதனால் அவர்கள் தொடர்ந்து வெற்றி பெற முடியவில்லை. முன்னேறிவந்த ஜப்பானியப் படைகள் அக்டோபர், 1938ஆம் ஆண்டில் ஆங்கௌவையும், காண்டனையும் கைப்பற்றிக் கொண்டன. இதனால் வடக்கிலுள்ள சமவெளிப் பகுதிகளும், மையத்திலுள்ள நகரங்களும், காண்டனை ஒட்டியுள்ள கடலோரப்பகுதிகளும் ஜப்பானியர் வசமாயின.

இவ்வாறு சீனாவின் பெருநிலப்பகுதியைப் போர் தொடங்கிய பதினான்கு மாதங்களுக்குள் ஜப்பான் கைப்பற்றி விட்டதால் அதன் தொழில் வளர்ச்சிக்கும், பொருளியல் மேம்பாட்டிற்குமான மூலப் பொருள்களைக் கைப்பற்றப்பட்ட பகுதிகளிலிருந்து சுரண்டிச் சென்றது. இச் சமையத்தில் சீனாவில் தேசியவாளர்களுக்கும் பொதுவுடைமையாளர்களுக்குமிடையே இருந்த வேற்றுமை அதிகரித்தது. கோமிண்டாங் கட்சியைச்சேர்ந்த தலைவரான வாங்ஃசிங்-வெய் என்பவர் ஜப்பானியருடன் சேர்ந்துகொண்டார். ஜப்பானியர் அவரைத் தலைவராகக் கொண்ட ஒரு குடியரசை மார்ச்சு, 1940ஆம் ஆண்டில் ஏற்படுத்தி நாங்கிங்கை அதன் தலைநகரமாக்கினர். தேசிய சீனாவின் தலைவரான சியாங்கேசேக் ஒரு புறமும், கோமிண்டாங் கட்சியைச் சேர்ந்த வாங்ஃசிங்-வெய் ஒரு புறமும் பிரிந்து சீனாவை ஆள முற்பட்டதால் எதிரிகளான ஜப்பானியருக்கு எதிர்ப்புகள் குறைந்து விட்டன. ஆயினும் சியாங்கேசேக்கின் தேசிய சீனாவை முழுமையாக வீழ்த்த அவர்களால் முடியவில்லை. ஏனெனில் சியாங்கேசேக்கின் கீழுள்ள சீனா நிலப்பரப்பிலும், மக்கள் தொகையிலும் ஜப்பானியரால் கைப்பற்றப்பட்டதைவிட அதிகமானது. கைப்பற்றப்பட்ட நிலப் பகுதியிலுள்ள சீன மக்களும், சியாங்கேசேக்கின் கீழுள்ள சீன மக்களும் உள்ளத்தாலும், உணர்ச்சியாலும், ஒன்றுபட்டு ஜப்பானியரை விரட்டுவதிலேயே நோக்கமுடையவர்களாய் இருந்தனர். நாங்கிங்கில் தங்கள் கைப்பாவை ஆட்சியொன்றை ஏற்படுத்திய பின் ஜப்பானியர் மேற்கொண்டு பல இடங்களைக் கைப்பற்றும் நோக்கத்தைக் கைவிட்டு இதுவரை கைப்பற்றிய பகுதிகளில் தங்கள் செல்வாக்கை நிலைநாட்ட முற்பட்டனர்.

சீன அரசிற்குப் பெருவாரியான வருமானத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த கடலோர மாநிலங்கள் ஜப்பானியரால் கைப்பற்றப்

பட்டுவிட்டதால் சீன அரசிற்கு வருவாய் குறைந்து வாட்ட மேற்பட்டது. உப்புவரியும், நிலவரியுமே அதன் பெருவாரியான வருமானமாகும். இவையிரண்டுமே ஜப்பானியர் கைவசமாகி விட்டன. நிலவரியை உயர்த்திஞல் மக்கள் புரட்சி செய்வார்களே என சியாங்கேசேக் அஞ்சினர். நிலவள வைப்பகங்கள் யாவும் சியாங்கேசேக்கின் கட்சியைச் சேர்ந்த தலைவர்களின் ஆளுமையில் இருந்தன. மேற்குச் சீனுவிலிருந்த தொழிற்சாலைகள் கோமிண் டாங் கட்சித் தலைவர்களின் ஆளுமையில் இருந்தன. எனவே சியாங்கேசேக்கின் சீன அரசின் வருவாயை உயர்த்துவதற்கு வழி முறைகளை ஆய்ந்து கொண்டிருந்தார். இச் சமையத்தில் வேளாளர்கள் நிலக்கிழார்களுக்கெதிராகச் செய்யும் புரட்சிகளை ஒதுக்கிவிட்டுத் தேசியப் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்புத்தர முன் வந்தனர். நிலக்கிழார்களும் $37\frac{1}{2}\%$ பயிரிடுவோர்க்குக் கொடுக்க ஒப்புக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து பல நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இத்தகைய நிலச் சீர்திருத் தங்களை வலியுறுத்திய பொதுவுடைமைக் கட்சிக்கு மக்களின் சார்பு பெருகியது. இதனையறிந்த தேசிய அரசு அதிர்ச்சி யடைந்தது. பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள் வேளாளர்களி டையே நன்மதிப்பைப் பெற்று அவர்களுடைய ஒத்துழைப்பால் கொரில்லாப்போர் முறையை வடசீனுவிலும், மையச் சீனுவிலும் தொடங்கினர். இவ்வாறு தொடங்கப்பட்ட கொரில்லாப் போர் முறையும், பொதுவுடைமைக் கட்சிக்கார்ரர்களின் போக்கும் சியாங்கேசேக்குக்கு அதிர்ச்சியளித்தது.

தேசிய அரசுக்கும், பொதுவுடைமையாளர்களுக்கும் முதல் முறையாக சனவரி, 1941ஆம் ஆண்டு யாங்ட்சிகி ஆற்றுச் சம வெளியில் மோதல் ஏற்பட்டது. பொதுவுடைமைப் படை நாங்கிங், ஆங்கௌ, சாங்கை ஆகிய மூன்று முனைகளில் தங்கள் செஞ் சட்டை வீரர்களைக் கொண்டு தாக்கத் தொடங்கினர். தேசியப் படைகள், செஞ்சட்டை வீரர்களிடம் தோல்வியுற்றன. இதற்குப் பின் பொதுவுடைமைக் கட்சியினர் தாங்கள் கைப் பற்றிய இடங்களைத் தனியே ஆளத் தொடங்கினர். இவ்வாறு வெற்றி கண்ட செஞ்சட்டை வீரர்களுக்கும், தேசியப் படையி னருக்குமிடையே 1941ஆம் ஆண்டிலிருந்து 1945ஆம் ஆண்டு வரை அடிக்கடி பல மோதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. பொதுவுடைமையாளர்களைப் படை கொண்டு தாக்கி ஒடுக்கும் செயலை சியாங்கேசேக் தீவிரமாக மேற்கொள்ளவில்லை. செப்டெம்பர், 1943-ல் அவர் ஓர் அறிக்கை வெளியிட்டுப் பொது வுடைமைக் கொள்கை என்பது ஒரு கட்சியின் கொள்கையே தவிர அது சீன நாட்டின் பிளவை அதிகப்படுத்தி, ஒற்றுமையைக்

குலைத்து எதிரியாகிய ஜப்பானுக்கு இடங்கொடுக்கக் கூடா தென்றும், நமக்குள்ளேயே இருக்கும் கொள்கை வேறுபாடுகளை நல்லுறவோடு பேசித் தீர்த்துக் கொள்ளலாமென்றும் கூறினர். இவ் வறிக்கைக்கைக்குப் பின் தேசிய அரசும், பொதுவுடைமைக் கட்சியினரும் ஒன்றிணையும் பேச்சு (வார்த்தை)களும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. பொதுவுடைமைப் படைகளைக் கலைப்பது, பொதுவுடைமைச் சிற்ருட்சிக்கும் தேசிய ஆட்சிக்கும் ஒற்றுமையை ஏற்படுத்துதல், பொதுவுடைமைக் கட்சியை ஏற்றுத் தேசியப் பணிகளில் அதனை ஈடுபட இசைவளிப்பது முதலியன பற்றிப் பேச்சுகள் நடைபெற்றன. ஆனுல், இவற்றை சியாங்கே சேக் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். வருவாயுள்ள பகுதிகளை யெல்லாம் ஜப்பான் கைப்பற்றிக்கொண்டதோடன்றி கடற்கரைப் பகுதிகளையும், வட, மைய சீனுவையும் அது கைப்பற்றிக்கொண்ட தால் சீனத் தேசிய அரசுக்கு வெளியுலகோடு இருந்த தொடர்பு களும் ஓரளவு துண்டிக்கப்பட்டன. ஃபிரெஞ்சு இந்தோ-சீனுவி லிருந்தும் அதற்கு உதவி கிடைக்கவில்லை. ஏனெனில் 1940ஆம் ஆண்டிலேயே அது ஜப்பான் வசமாகிவிட்டது.

ஜப்பான் அமெரிக்கக் கப்பற்படையைப் பெர்ல் துறை முகத்தில் குண்டு வீசித் தாக்கி இரண்டாம் உலகப் போரில் கலந்து கொண்டது. இதனுல் சீன-ஜப்பானியப் போர் இரண்டாம் உலகப் போருடன் ஒன்றியமாகிவிட்டதெனலாம். இரண்டாம் உலகப் போரில் 1941ஆம் ஆண்டிலும் 1942ஆம் ஆண்டிலும் ஜப்பானுக்கு வெற்றிமேல் வெற்றி கிடைத்தன. இதனுல் ஜப்பான் தன் ஆளுமையை பர்மா, தாய்லாந்து முதலிய தென் கிழக்காசிய நாடுகள் முழுவதிலும் ஏற்படுத்திக்கொண்டது. எனவே சீனுவுக்கு இத் திசைகளோடிருந்த தொடர்பும் அறுபட்டு விட்டது. சிறிது சிறிதாகச் சீனு இந்தியாவின் வழியாகக் கீழ்த் திசை நாடுகளோடும் மற்ற வெளியுலகோடும் வான்வழி மூலம் தொடர்பு கொண்டது. இதற்குப்பின் சீனத் தேசிய அரசு தன்னை வலுப்படுத்திக்கொள்ள முற்பட்டது. சியாங்கேசேக் 'உயர்தரப் படை மன்றம்' ஒன்றை ஏற்படுத்தித் தன் நாட்டுப் பாதுகாப்பை வலுப்படுத்த முற்பட்டார்.

இச் சமையத்தில் பொதுவுடைமைக் கட்சி மிக விரைவாக வளர்ந்து புதிய திட்டங்களை அரசியலில் புகுத்த முற்பட்டது. சீனுவுக்கும், ஜப்பானுக்கும் போர் நடந்துகொண்டிருக்கும் போதே பொதுவுடைமையாளர்கள் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார்களென்பதைப் பார்த்தோம். திசம்பர், 1937-ல் ஏனன் (Yenen) என்பதைத் தலைமைச் செயலகமாகக் கொண்டு ஒரு தீவிரப் பொதுவுடைமை ஆட்சியை மாசேதுங் (Mao-Tse-Tung)

என்பார் ஏற்படுத்தினர். பொதுவுடைமைக் கொள்கையின் செயல் வீரர்களான இலெனின், சிதாலின் (Stalin) ஆகியோரின் அரசியல் கொள்கைகளை மா சே துங் தீவிரமாகப் பரப்பினர். முகாமையாக சிதாலினுடைய கொள்கைகளை ஏனனிலிருந்து சீன முழுதும் பரப்ப முற்பட்டார். இக் கொள்கைகளின் அடிப் படையில் சீன அரசு எவ்வாறு திருத்தியமைக்கப்பட வேண்டு மென்பதை 1940-ல் 'புதிய மக்களாட்சி முறை' (On the New Democracy) என்ற தலைப்பின் கீழ் எழுதி வெளியிட்டார். இக் கொள்கைகள் யாவும் அன்றைய சீனவுக்குத் தேவையான சிதாலினின் கொள்கைகளாகும். இவற்றை 'மார்க்சிய-இலெனினியக் கொள்கைகள்' என்றும், இவையே சீன வரலாற்றை மாற்றி யமைத்த புரட்சிகரமான வரலாற்று மெய்ப்பொருளென்றும் கூறுகின்றனர். இவ்வாறு மாவோ ஒரு திறமான பொதுவுடைமைக் கட்சியை அமைத்து, ஆட்சியை ஏற்படுத்தி அதன் வல்லதிகாரி போல் விளங்கினர். சீன மக்களில் 80% ஏழை உழவர்களாகவும், தொழிலாளர்களாகவும் இருக்கின்றனர். அவர்களை 20% ஆன முதலாளிகளும், செல்வர்களும் எப்போதும் ஏழைகளாகவே வைத்து ஆட்டிப் படைக்கின்றனர். சீனவில் உண்மையான மக்களாட்சி வளர வேண்டுமானல் தொழிலாளர்களும், வேளாளர் களும், எளிய மக்களும் எழுச்சி பெற வேண்டுமென மாவோ மக்களைத் தட்டியெழுப்பினர், இதனல் மிகக் குறுகிய காலத் திலேயே சீன மக்கள் தொகையில் 10% (ஐந்து கோடி) மக்கள் மாவோவின் புரட்சிக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு ஒன்று சேர்ந்தனர்.

பொதுவுடைமைக் கட்சியின் வரலாற்றிலேயே இத்தகைய வரலாற்றையும், தலைமையையும் மிகக்குறுகிய காலத்தில் படைத் துக் காட்டியவர் மாசேதுங்தான். அதற்குக் கரணியம் சீனவில் அன்றிருந்த அவல நிலைகளேயாகும். முதலாளிகளையும், தொழிலாளிகளையும் ஒன்றிணைத்து நாட்டை ஒருமுகப்படுத்த வேண்டுமென்பதே மாவோவின் நோக்கம். அதற்காகப் புரட்சித் தலைவர்கள் எல்லாரும் ஒன்ருகச் சேர்ந்து 'ஒன்றிணைந்த வல்லாட்சியை'த் தொடங்கினல்தான் குமுகாய ஏற்றத்தாழ்வுகளை ஈவிரக்கமின்றி உடனடியாகப் போக்க முடியுமென்ருர் மாவோ. படித்தவர்கள், சிறிய பணக்காரர்கள் முதலியவர்கள் முன் வருவார்களேயானல் எஞ்சி நிற்கும் ஒரு சில முதலாளிகளையும், செல்வர்களையும் ஒழித்துச் சமநிலைக் குமுகாயத்தை ஏற்படுத்த முடியுமென்பது மாவோவின் கருத்தாகும்.

1942, 1943ஆம் ஆண்டுகளில் சீனவில் 'அரசியல் கட்சிகளைச் சீர்திருத்தும் இயக்கம்' (Cheng-Feng) ஒன்று தோன்றியது.

அரசியலையும், குமுகாயத்தையும் சீர்திருத்துவதற்கு முன்பாகக் கட்சிகளைச் சீர்திருத்தி ஒருமுகப்படுத்துவதற்காக இவ்வியக்கம் பாடுபட்டது. இவ்வியக்கத்தால் மாவோவின் கட்சிக்கு மேலும் வலிமை அதிகரித்தது. சான்ருக, 1937ஆம் ஆண்டில் 40,000 உறுப்பினர்களைக் கொண்டிருந்த மாவோவின் கட்சி 1945 ஆம் ஆண்டில் 12,00,000 உறுப்பினர்களைக் கொண்டதாயிற்று. மாவோவின் வல்லதிகாரத் தலைமையின் கீழ் இக்கட்சியின் உறுப்பினர்கள் யாவரும் இரும்புத் தூண்களாயினர். கொள்கைகளை ஆராய்தல், குறைகளைச் சுட்டிக்காட்டல், வன்முறை அமைப்பை வன்முறைகளைக் கையாண்டே வீழ்த்துதல் இவையே மாவோ கையாண்ட நெறிமுறைகளாகும். 1945 ஆம் ஆண்டில் மாவோ ஐந்திலக்கம் படையினரைத் தன் கீழ்ப்பெற்று ஒன்பது கோடி மக்களை ஆளும் வல்லதிகாரியாக விளங்கினர். அவருடைய அதிகாரம் வடசீனுவில் சென்சி மலையிலிருந்து ஆண்டடங் வரையில் பரவியிருந்தது. இதனுல் ஜப்பான் தன்னுடைய வற்பிடிப்பை விரிவுபடுத்த முடியாமல் இரண்டாம் உலகப் போரின்போது சீனப்படையெடுப்பைத் தொடர்ந்து நடத்தாமல் தென்கிழக் காசியப் பகுதிகளில் தன் கவனத்தைச் செலுத்தத் தொடங்கியது. இதற்குப்பின் சீனுவிலேற்பட்ட உள்நாட்டுப் போரும், மாற்றங்களும், இரண்டாம் உலகப் போரின் முடிவை ஒட்டி முடிந்தன.

இவ்வாறு ஜப்பான் கிழக்காசிய நாடுகளில் தன் புதிய ஆளுமையை (New Order) ஏற்படுத்தத் தொடங்கியதும் சீனு தனக்குக் கீழ்ப்பட்டுத் தன்னேடு ஒத்துழைக்க விரும்பியதும், இரண்டாம் உலகப் போரின் தொடக்கத்தில் மேற்கத்திய வல்லரசுகள் சீனுவிலும், தென்கிழக்காசிய நாடுகளிலும் தங்கள் வலிமையை இழந்ததும், தனக்கு வேண்டிய ஆக்கப் பொருள்களைக் கிழக்கு, தென் கிழக்கு ஆசியப் பகுதிகளிலிருந்து ஜப்பான் பெற விரும்பியதுமே தன்னை அது இரண்டாம் உலகப்போர் எனும் மாபெரும் கடலுக்குள் குதிக்க ஆளாக்கிக் கொண்டது.

உலகப் போரில் ஜப்பான் கிழக்காசிய நாடுகளில் வெற்றி பெற்றபின் சீனுவில் மேலும் பல இடங்களை வெல்ல நினைத்தது. ஆனுல்,உலகப் போரில் உருவாகிவந்த சூழ்நிலைகளும், உருசியாவின் போக்கும், மாவோவின் தலைமையும் ஜப்பான் சீனுவில் மேலும் நாடு கவரும் நோக்கத்திற்குக் கேள்விக் குறிகளாய் நின்றன. போரின் முடிவில் உருசியாவின் நட்பை விழைந்த ஜப்பான் மஞ்சூகோவில் தனக்கிருக்கும் உரிமைகளையும், சீனுவில் பெற்ற உரிமைகளையும் விட்டுக்கொடுக்க அணியமாயிருந்தது. ஆனுல், நேச நாடுகள் ஜப்பானை அடியோடு ஒடுக்கவிரும்பியதால் உருசியா

வாய்மூடி இருந்தது. கடைசியாக போர்ச்சுடேம் பேரறிக்கையை உருவாக்குவதில் சீனவும் பங்கு கொண்டது. ஜப்பானின் வீழ்ச் சிக்குப்பின் சீனவிடம் ஜப்பான் தோற்றதெனக் கொள்ளலாம். எனவே 1937ஆம் ஆண்டில் தொடங்கிய சீன-ஜப்பானியப்போர் இரண்டாம் உலகப் போருடன் கலந்து 1945ஆம் ஆண்டில் பெரும் போரின் முடிவுடன் தானும் முடிவுற்றது.

## ஜப்பானின் வெற்றிகள்

சீனப் போரைத் தொடங்கிய ஜப்பான் அதனை வெற்றிகர மாக முடிக்குமுன்பே இரண்டாம் உலகப் போரிலிறங்கியதைப் பார்த்தோம். 1940ஆம் ஆண்டில் இட்லர் நெதர்லாந்தைப் பிடித்துக் கொண்டதும், ஃபிரான்சு நிலைகுலைந்ததும், ஜப்பானியத் தலைமையமைச்சர் தோசோ, இரண்டாம் உலகப்போரில் கலந்து கொண்டால் தன் நாட்டுக்குப் பெருத்த ஊதியம் கிடைக்குமென எண்ணித்தான் இப்போரில் தலையிட்டார். செருமனியும், உருசியாவும், போலந்தைத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டதும், பின்லாந்தை உருசியா கைப்பற்றியதும், செருமனி, தென்மார்க்கு, நார்வே நாடுகளைக் கைப்பற்றியதும், ஃபிரான்சு செருமனியிடம் தோல்வியுற்றுத் தனது வடபாகத்தை இழந்ததும், அதன் சில பகுதிகளை இத்தாலி கைப்பற்றியதும், ஜப்பானுக்குத் தானும் இவ்வாறு பெருநிலப் பகுதிகளைப் பெற்றுவிடலாமென நைப்பாசை ஏற்பட்டது. 1941ஆம் ஆண்டில் இட்லர் உருசியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி உருசியாவைத் தாக்கி மாசுகோவை நோக்கி முன்னேறினர். உருசியா பிரிட்டனுடைய உதவியை நாடியது. உருசியாவும், ஜப்பானும் தங்களுக்குள் செய்து கொண்ட நடுநிலைமைக் கொள்கையால் ஜப்பான் உருசியாவின் ஏதத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதாக நினைத்தது. எனவே செருமனியின் வான்வழித் தாக்குதலுக்குள்ளாகிய பிரிட்டனே தன் நாட்டின் பெரும்பகுதியையிழந்து விச்சி (Vichy) எனுமிடத்தில் தன் அரசை நடத்தி வரும் ஃபிரான்சோ நடுநிலைமை தாங்கும் அமெரிக்காவோ தன்னை எதிர்க்காதென்ற முடிவுடன் தான் ஜப்பான், பிரிட்டன், ஃபிரான்சு, ஆலந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் தென்கிழக்காசியக் குடியேற்ற நாடுகளைத் தாக்கத் தொடங்கியது. செருமனி மாசுகோவை நோக்கி முன்னேறிய போக்கும், அதனுடைய வான்படைகள் பிரிட்டனைத் தாக்கி அழித்த நிலையும் உறுதியாகக் கிழக்காசிய நாடுகளுக் கெல்லாம் ஜப்பான்தான் தலைமை தாங்கும் என்ற நிலைமையை உருவாக்கிக் கொண்டு வந்தது. ஏற்கனவே தான் செய்து கொண்ட மூவர் உடன்படிக்கையின்படி இத்தாலியும், செருமனியும் ஐரோப்பிய நாடுகளில் தங்கள் ஆளுமையை நிலைநாட்டிக்

கொள்ளுமென்றும், தான்மட்டும் ஆசிய நாடுகளின் தலைமைப் பீடத்தைப் பெற்றுவிடலாமெனவும் ஜப்பான் மனப்பால் குடித்தது. மேலும் தன் நாட்டுக்கு வேண்டிய மூலப்பொருள்களை அமெரிக்காவிலிருந்து பெற முடியாமற் போனதால் அவற்றைக் கிழக்காசிய நாடுகளிலிருந்து பெறலாமென்றும் ஜப்பான் திட்டமிட்டது.

இத்தகைய நோக்கங்களோடுதான் திசம்பர் 7, 1941ஆம் ஆண்டில் பேர்ல் துறைமுகத்தைத்தாக்கி இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் ஈடுபட்டது. அதனுடைய ஆசைகளை நிறை வேற்றிக் கொள்வதற்கு இத்தாலியும், செருமனியும் உறுதி யளித்தன. பேர்ல் துறைமுகத்தைத் தாக்கிய மறுகணமே தன் படைகளையனுப்பி, ஆங்காங், மலேயா, சிங்கப்பூர், பர்மா, நெதர்லாந்துக்குச் சொந்தமான கிழக்கிந்தியத் தீவுகள், பிலிப்பைன் தீவுகள் முதலியவற்றைப் பிடித்துக்கொண்டது. ஆறு மாதத்திற்குள் ஜப்பானின் கொடி பர்மாச் சாலையிலுள்ள இலசியோ (Lashio)விலிருந்து பசிபிக் மாகடலின் மையத்திலுள்ள வாகி (Wake)த்தீவு வரையில் பறக்கலாயிற்று. ஜப்பானிய நாவாய்ப்படை இந்து மாகடலுக்குள் நுழைந்திருக்குமானால் இலங்கை, மடகாசுகர் முதலியவற்றையெல்லாம் வென்று ஆப்பிரிக்காவரையிலுள்ள பிரிட்டன் குடியேற்றங்களையும் வென்று, இந்தியாவுக்கும், கீழ்த்திசை, நாடுகளுக்குமுள்ள தொடர்பை அறுபடச் செய்திருக்கலாம். ஆனால், தோசோ தென் கிழக்காசிய நாடுகளில் தான் வென்ற நாடுகளில் தன் ஆளுமையை நிலைநாட்டிக் கொண்டு சீன நிலப்பரப்பைத் தன் கையிலிருந்து விலகாமல் பார்த்துக் கொள்ள விரும்பினார். எனவே இத்தகைய அரியதொரு வாய்ப்பினைக் கைவிட்டாரென்றே கூற வேண்டும். பிரின்சு ஆப் வேல்சு, இரிப்பல்சு ஆகிய இரண்டு பிரிட்டானியப் போர்க் கப்பல்களை மூழ்கடித்து, இந்தியாவையும், ஆசுத்திரேலி யாவையும் அச்சுறுத்தி நின்றது.

தோசோ எண்ணியபடி செருமனி, உருசியாவைத் தோற்க டித்து மாசுகோவைக் கைப்பற்ற முடியவில்லை. செருமனியின் படைகள் மாசுகோவை முற்றுகையிட்டபோது உறைபனிப் படலங்களில் சிக்கித் தவித்தன. அமெரிக்காவும், ஜப்பான் பேர்ல் துறைமுகத்தைத் தாக்கவே செருமனிக்கும், ஜப்பானுக்கும் எதிராகப் போரில் ஈடுபட்டது. அமெரிக்கா போரில் ஈடுபட்டதும் போரின் போக்கு தலைகீழாக மாறத் தொடங்கியது. நேச நாடுகளின் கை வலுத்தது. அச்சு நாடுகள் தாங்கள் பெற்ற இடங்களை ஒன்றன் பின் ஒன்ருக இழக்கலாயின.

**உள்நாட்டு நெருக்கடியும் சமைதி விழைவும்**

எடுத்த எடுப்பிலேயே வெற்றி பல கண்ட தோசோவின் அமைச்சரவை எல்லா அதிகாரங்களையும் படையின் வசமே ஒப்படைத்தது. நவம்பர், 1942ஆம் ஆண்டில் 'பரந்த கிழக்காசிய அமைச்சரவை' (Greater East—Asia Ministry) ஒன்று அமைக்கப் பட்டது. இது கிழக்காசிய நாடுகளில் வென்ற எல்லா நாடுகளையும் ஜப்பானுடன் சேர்த்து ஆட்சிபுரியத் தொடங்கியது. அயலக உறவு, அரசியல் தந்திரச் செய்திகள், மஞ்சூரியச் செய்திக் கழகம், ஆசிய வளர்ச்சி வாரியம், கடல் கடந்த நாட்டு அமைச்சகம் முதலிய யாவும் இந்தப் பரந்த கிழக்காசிய அமைச்சரவையின் கீழ் வந்தன. தோசோவும், அவருடைய படையினருமே இதனை ஆட்டிப்படைத்தனர்.

1942ஆம் ஆண்டின் பிற்பகுதிக்குள் ஜப்பான் நாட்டுப் படைகளுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் தேவையான அளவு கிடைக்கவில்லை. அமெரிக்காவின் தாக்குதல்களால் ஜப்பான் நாட்டுப் படைகளுக்குப் பெருமளவில் சேதம் விளைந்தது. தென்கிழக்காசிய நாடுகளை வென்றவுடன், மேலும் போரிலிறங்காமல் சமைதி செய்து கொள்ளலாமென்று ஜப்பான் நினைத்ததால்தான் தொடர்ந்து போரிடுவதற்கான ஆயத்தங்களை அது செய்யவில்லை. 1945-க்குள் ஜப்பானின் எஃகு ஐந்திலக்கம் கல்லெடையாகக் குறைந்தது. இரும்புக் கனிச் சுரங்கங்களில் கனிப்பொருள்கள் கிடைக்கவில்லை. எரிபொருளின்றி ஏராளமான போர்க் கப்பல்களை இயக்க முடியவில்லை. போதிய வெடிமருந்துகளும், குண்டுகளும் இல்லை. 1945ஆம் ஆண்டுக் கணக்குப்படி நோக்கினால் ஜப்பானின் தொழில் உருவாக்கத்தில் 40% குறைந்து விட்டது. வானூர்தி எந்திர உருவாக்கத்தில் 73%-ம், வணிகக் கப்பல் உருவாக்கத்தில் 81%-ம் குறைந்து காணப்பட்டன.

தன் கையிலிருக்கின்ற பொருள்களையெல்லாம் வைத்துக்கூட ஜப்பான் தன் திறமையை ஒருமுகப்படுத்திப் போர் புரிய முடியவில்லை. அதற்குக் கரணியம் பொருள் விளைப்பும், வேளாண்மை வளர்ச்சியும், தொழில் வளர்ச்சியும், 'பொது'த் துறையிடமும் பொதுமக்களிடமும் விடாமல் எல்லாவற்றையுமே படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டதால், பொதுமக்களுக்கும், 'பொது'த் துறைக்கும், அமைச்சரவைக்கும் படையதிகாரிகளுக்குமிடையே ஒத்துழைப்பும் ஊக்கமும் இல்லாமல் போய்விட்டது. ஓரளவு வணிகத் துறையினர் மட்டும் அமைச்சரவையோடு ஒத்துழைத்தார்களெனலாம். ஏனெனில் அமைச்சரவையிலுள்ள பெரும்பாலானவர் வாணிகத்தில் ஈடுபட்டிருந்த சைபத்சு

குடும்பத்தாரோடு தொடர்புடையவர்களாக இருந்தனர். இனி போர் எளிதாய் முடியாதென்பதையும் பல ஆண்டுகள் வரை ஜப்பான் போரிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முடியாதென் பதையும் அறிந்த தோசோ உள்நாட்டு விளைப்பை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லையென்பதை உணர்ந்தார். நவம்பர், 1943ஆம் ஆண்டு 'போர்க் கருவிகள் அமைச்சகம்' ஒன்றை ஏற் படுத்தித் திட்டக் குழு, வணிகக் குழு, தொழிற் குழு முதலிய வற்றை ஒழித்துவிட்டு அவை யாவற்றையும் போரமைச்சரவை யையே மேற்கொள்ளச் செய்தார். இம் முயற்சியிலும் தோசோ வின் அமைச்சரவை எதிர்பார்த்த அளவுக்கு வெற்றிபெறவில்லை.

**ஜப்பானின் தோல்விகள்**

1943ஆம் ஆண்டுக்குப்பின் நேச நாடுகள் பல வெற்றிகளைப் பெறலாயின. ஆப்பிரிக்காவினின்றும் அச்சு நாடுகள் விரட்டப் பட்டன. பால்கன் தீவக்குறை செருமனியின் பிடியினின்றும் விடு விக்கப்பட்டது. செருமானியரை உருசியர் சிதாலின் கிராடுப் போர்க்களத்தில் தோற்கடித்து விரட்டினர். இவ்வாறு நேச நாடுகள் பெறும் வெற்றியைக் கூர்ந்து கவனித்து ஜப்பானிய மக்கள் தோசோவைப் போரிலிருந்து பின்னடைந்து அமெரிக்கா வோடும், பிரிட்டனோடும் சமைதி செய்துகொள்ளுமாறு கூறினர். குறிப்பாக மேனுள் தலைமையமைச்சர்கள் யாவரும் ஒன்றுகச் சேர்ந்து 'பெருமக்கள் குழு' (Fushion) ஒன்றைத் தொடங்கி, தோசோவின் போர்ச் செயல்களையும்,அவர் கொள்கைகள் பெற்ற தோல்விகளையும் சுட்டிக்காட்டி, இனி தோசோ போரைத் தொடருவாரானுல் ஜப்பானிய வரலாறே அழிந்துவிடுமென எச்ச ரித்தனர். பிப்பிரவரி, 1943ஆம் ஆண்டு இச்சவையினர் பேரரசரை அணுகி ஜப்பான் போரை நிறுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். ஜப்பானியர் சிலர் செருமனிக்கும், உருசியாவுக்கு மிடையே நல்லுறவுகளை ஏற்படுத்திப் போரை நிறுத்த முயன்றனர். சிலர் பிரிட்டனோடும், அமெரிக்காவோடும் பேச்சு நடத்தி ஜப்பானைப் போரிலிருந்து விடுவிக்க முற்பட்டனர். சூன், 1944ஆம் ஆண்டில் அமெரிக்கா சுபெயினில் காலடி வைத்தது. எதிரி தன்னை வெகு அருகில் நெருங்கி வந்துவிட்டதையறிந்த ஜப்பானியர் இனி அழிவிலிருந்து தப்ப முடியாதென முடிவு செய்துவிட்டனர். பெருமக்கள் குழுவின் வலியுறுத்தலின்மேல் சூலை 18, 1944ஆம் ஆண்டில் தோசோ தன் பதவியைத் துறந்து வெளியேறினுர்.

**கோயிசோ அமைச்சரவை (சூலை, 1944—ஏப்பிரல், 1945)**

தோசேவைப் பதவியிலிருந்து நீக்கியது சமைதிக்கு முதற் படி எனலாம். இவருக்குப் பின் தலைமையமைச்சர் பதவியேற்ற

தளபதி கோயிசோ (Koiso) கொரியாவின் தலைமை ஆளுநராக இருந்தவர். கோயிசோ ஆகச்ட்டு 1944ஆம் ஆண்டு போர்க் குழுவொன்றை ஏற்படுத்தினர். இக் குழுவில் பேரரசரும் கலந்து கொண்டார். இக் குழுவில் மொத்தம் மூன்று அமைச்சர்களும், முப்படைத் தலைவர்களும் இருந்தார்கள். இந்தக் குழுவாலும் அமைச்சரவைக்கும், போர்ப் படைத் தலைவர்களுக்குமிடையே நட்புறவையும், ஒருமனப்பட்ட போக்கையும் உண்டாக்க முடிய வில்லை. இக் குழு உருசியாவுக்கு ஒரு நல்லெண்ணத் தூதுக் குழுவை அனுப்பி 1941ஆம் ஆண்டில் அது ஜப்பானுடன் செய்து கொண்ட நடுநிலைமைக் கொள்கையைத் தொடர்ந்து கடைப் பிடிக்குமாறு வேண்டிக்கொண்டது. ஆனால், உருசியா நேச நாடுகளுடன் சேர்ந்து போரில் ஈடுபட்டிருப்பதால் பகைக்கட்சி யான அச்சு நாடுகளில் ஒன்றான ஜப்பானுடன் நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்க மறுத்துவிட்டது. 1945ஆம் ஆண்டில் அமெரிக்கா தன்னுடைய படைகளை ஒகினவா (Okinawa) விற்குள் செலுத்தியது. கோயிசோவும் தன் தலைமையமைச்சர் பதவியிலிருந்து விலகினர். ஒகினவா தோக்கியோவிலிருந்து 1000 கல் தொலைவிலிருந்தது. இருதரப்புப் படைகளுக்கும் நடை பெற்ற கடும் போரில் ஏராளமான பேர் இறந்தனர். ஒகினவா நேசநாடுகள் கைவசமாயிற்று.

பிரிட்டானியப் படைகளும், இந்தியப் படைகளும் தென் கிழக்காசியாவில் ஜப்பான் கைப்பற்றிய நாடுகளைத் திருப்பிக் கைப்பற்றுவதில் மும்முரமாய் ஈடுபட்டன. இந்தியா அப்பொழுது பிரிட்டானியப் பேராட்சியின் கீழ் அடிமை நாடாக இருந்ததால் பிரிட்டனோடு இணைந்து இரண்டாம் உலகப் போரில் போரிட்டது. இந்தியப் படைகளும், பிரிட்டானியப் படைகளும் பர்மாவில் அரகான் காடுகளில் புகுந்து ஜப்பானியரோடு போரிட்ட வீரச் செயல்கள் வியக்கத்தக்கனவாம். அதே நேரத்தில் அமெரிக்கப் படைகள் பசிபிக் மாகடலில் தென்மேற்குப் பகுதியில் இருந்த ஜப்பானியரின் தங்கு தளங்களைத் தாக்கிப் பிடிக்க முற்பட்டன. ஆயினும் எடுத்த எடுப்பிலேயே அமெரிக்கர்களால் ஜப்பானியத் தளங்களைக் கைப்பற்ற முடியவில்லை. ஆயினும் சிறிது சிறிதாக ஜப்பானுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியவாறு அமெரிக்கா முன்னேறியது. தரைப்படைப் போரில் முனைந்து வெற்றி காண் பதில் தாமதம் ஏற்பட்டதால் அமெரிக்கா தனது விமானப் படைகளைப் பெருமளவில் பயன்படுத்தி ஜப்பானின் தங்கு தளங்க ளாகவுள்ள பல தீவுகளைத் தாக்க முற்பட்டது. விமானப் படைத் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் ஜப்பானியப் படைகள் திக்குமுக்காடின. சாலமன் தீவுகள், மரியனாத் தீவுகள் முதலியன

ஜப்பானிடமிருந்து கைப்பற்றப்பட்டன. சனவரி, 1945ஆம் ஆண்டு பிலிப்பைன் தீவுகள் முழுவதையும் ஜப்பான் இழந்தது. பிரிட்டானியப் படைகளும், இந்தியப் படைகளும், பர்மா, சிங்கப்பூர் முதலியவற்றைக் கைப்பற்றி முன்னேறின. இதற்குப் பின் நடந்த போர்கள் யாவும் ஜப்பானியத் தீவுகளைச் சூழ்ந்து நடக்கத் தொடங்கின.

**சுசூகி அமைச்சரவை (Suzuki Ministry மே, 1945—செப். 1945)**

சுசூகி படைத் தலைவராக இருந்து ஓய்வு பெற்ற முதியவ ராவார். பெருமக்கள் குழுவின் தலைவராயிருக்கும் மேனாள் தலைமையமைச்சர் கோசோயியின் அரசியலுரையையும், அவர் விரும்பும் போர் நிறுத்தச் சமைதியையும் புரிந்துகொள்ளும் ஆற்றலும், செயலாற்றும் வலிமையும் தலைமையமைச்சர் சுசூகிக்கு இல்லை. மேலும் இப்புதிய அமைச்சரவையில் சமைதியை நாடு வோரின் தொகை அதிகமாக இருந்தது. போர்க் குழுவிலிருந்து படைத் தலைவர்கள் நீக்கப்பட்டுவிட்டனர். எனவே சமைதியை விரும்புவோரே எங்குமிருந்தனர். இவர்களுக்குப் போரின் தன்மையையும், உலகப் போரிலிருந்து ஜப்பான் விடுபட முடியா தென்ற உண்மையையும் தக்கபடி எடுத்துக் கூறி அவர்களைச் சமைதிப்படுத்த சுசூகியால் முடியவில்லை. ஒகினாவாவில் வந் திறங்கிய அமெரிக்கப் படையை யெதிர்த்து ஜப்பானியப் படைகள் போரிடுமளவுக்கு ஜப்பானின் பொருள் வளமோ, படைவலுவோ இடந்தராதென இக் குழுவினர் கூறினர். உடனடியாக நேச நாடுகள் விதிக்கும் எல்லாக் கட்டுப்பாடுகளுக்கும் ஒப்புக்கொண்டு ஜப்பான் அடிபணியவில்லையெனில் அழிந்தது போக எஞ்சியதை யாவது காப்பாற்றலாம்; இன்றேல், ஜப்பானிய மக்கள் உண்ண உணவும், உடுக்க உடையுமின்றி இறக்க வேண்டி வருமென இக் குழுவினர் எச்சரித்தனர்.

1945ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம் தோக்கியோவின்மீது பிரிட்டானியப் படைகள் குண்டு வீசித் தாக்கின. சமைதிக் குழுவினர் ஆட்சியை எதிர்த்துக் கலகத்தில் ஈடுபட்டனர். இதனால் அரசு பல நூற்றுக்கணக்கானவர்களைச் சிறையி லடைத்தது. இவர்களில் போருக்குப் பின் தலைமையமைச்சரான சிகேரு யொசிதா (Shigeru Yoshida) என்பவரும் ஒருவராவார். இந் நிலையில் உருசியா ஜப்பானுடன் தொடர்ந்து தான் நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகக் கூறியது. செருமனியைப் பல இடங்களில் தோற்கடித்த நேசப் படைகள் அந் நாட்டிற் குள்ளேயே படையெடுத்துச் சென்று மே 8, 1945ஆம் ஆண்டில் செருமனியை அடிபணியச் செய்தன. செருமானியத் தலைவர்

இட்லர் தற்கொலை செய்துகொண்டார். தன் நட்பு நாடு வீழ்ந்ததும் ஜப்பான் உருசியாவோடு நட்புறவு கொள்ளத் தனது 'பொதுவுடைமைக் கொள்கையெதிர்ப்பு ஒப்பந்தத்தை' உதறித் தள்ளியது. உருசியா தன்னுடன் நட்புறவு செய்துகொண்டால் அது விதிக்கும் எத்தகைய கட்டளையையும் தான் ஏற்றுக் கொள்ளவும், மஞ்சூகோவில் நடுநிலைமைத் தாங்கவும், உருசியக் கடல்களில் தனக்கிருக்கும் மீன்பிடித் துறைகளை விட்டுக்கொடுக்கவும் தான் அணியமாக இருப்பதாக ஜப்பான் கூறியது. இத்தகைய நட்புறவுப் பேச்சுகள் நடத்தி முடிவு கட்டுவதற்காகப் பெருமக்கள் குழுவின் தலைவர் கோனோயி மாசுகோவுக்குச் சென்றார். இதற்கிடையில் அமெரிக்காவும், பிரிட்டனும், சீனாவும் ஒன்றிணைந்து உருசியாவைக் கேளாமலே 'போர்ட்சுடேம் பேரறிக்கை'யை சூலை 26, 1945ஆம் ஆண்டில் வெளியிட்டன.

### போர்ட்சுடேம் பேரறிக்கை

போர்ட்சுடேம் பேரறிக்கையில் இந்த நான்கு நாடுகளும் போர் நிறுத்தத்திற்கான பல கட்டுப்பாடுகளை வெளியிட்டன. 'ஜப்பான் தன்னுடைய நாட்டைத் தவிரப் பிற நாடுகளில் கைப்பற்றியிருக்கும் இடங்களை முழுதுமாகக் கைவிட்டு வெளியேற வேண்டும்; அங்கிருக்கும் படைகளையெல்லாம் திருப்பிப் பெற வேண்டும்; ஒக்கைதோ, ஒன்சு, சிக்கொக்கு, குயூசூ ஆகிய தங்களுடைய நான்கு தீவுகளைத் தவிர உலகின் வேறெங்கும் அதன் ஆளுமை இருத்தல் கூடாது; போருக்குக் கரணியமானவரை உசாவித் தண்டனை வழங்க வேண்டும். அழிவு படுத்தவோ, அடிமையாக்கவோ கூடிய எண்ணங்களே ஜப்பானுக்கு இருத்தல் கூடாது; தன் நாட்டிலுள்ள போர்க்களங்களையும், போர்த் தொழிலகங்களையும், போர்ப்படைகளையும் அறவே ஒழிக்க வேண்டும்; போருக்குப்பின் மக்களாட்சி முறையில் ஜப்பானை நடத்திச் செல்லவேண்டும்' என்பன போன்ற கட்டுப்பாடுகள் போர்ட்சுடேம் பேரறிக்கையில் காணப்பட்டன. இதன்படி நோக்கினால் ஜப்பானில் படையாட்சி முறையோ பேரரசரோ மற்றவையோ இனி இருக்க முடியாதென்பதும், இக்கட்டுப்பாடுகளை ஜப்பான் ஒப்புக் கொண்டால் தன் வளர்ச்சிக்கான மூலப் பொருள்களின்றியும், பாதுகாப்பிற்கான போர்க்கருவிகளின்றியும் வாடவேண்டிவருமென்பதும் உண்மை. எனவே இதனை ஏற்றுக் கொள்வதில் ஜப்பானிய மக்களுக்குக் கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

### அணுக்குண்டுத் தாக்கமும் அடிபணிவும்

பேரரசரும், போர்க்குழு உறுப்பினரில் நால்வரும் இதனை யேற்றுக் கொள்ள விரும்பினர். மற்றவர்கள் உருசியாவின்

முடிவை எதிர்பார்த்து நின்றனர். போர்ட்சுடேம் பேரறிக்கைக்குத் தங்கள் உடன்பாட்டைத் தெரிவிக்கத் தவறிய ஜப்பானின் மீது ஆகச்ட்டு 6ஆம் நாள் 1945-ல் அமெரிக்கா இரோசிமா என்னுமிடத்தில் அணுக்குண்டை வீசி எழுபத்தெட்டாயிரம் மக்களைக் கொன்றது. உலக வரலாற்றிலேயே முதன் முதல் அணுக்குண்டு பயன்படுத்தப்பட்ட நிகழ்ச்சி இதுவேயாகும். ஜப்பானியப் பேரரசர் இனியும் உருசியாவை எதிர்பார்த்துக் கொண்டிராமல் எஞ்சியிருக்கும் மக்கள் உயிரையாவது காப்பாற்றலாமெனப் பேரரசர் கூறினர். அந்நிலையிலும் ஜப்பானிய அமைச்சரவை வாளாவிருந்தது. இரோசிமாவில் அணுக்குண்கு வீசிய மூன்றுநாள்கள் கழித்து ஆகச்ட்டு 9, 1945-ல் அமெரிக்கா மற்றுமோர் அணுக் குண்டை இரோசிமாவுக் கண்மையிலுள்ள நாகசாகியின் மீது வீசியது. இதற்கு ஒரு சில மணி நேரத்திற்கு முன்புதான் உருசியா ஜப்பானின் மீது போர் தொடுத்தது. மறு நாள் காலை ஜப்பான் போர்ட்சுடேம் அறிக்கையை ஒப்புக் கொள்வதாக அறிவித்தது. ஆனல், பேரரசரை நிலைநாட்டவும், போர் குற்றவாளிகளைத் தாங்களே உசாவவும் வேண்டிக்கொண்டது. ஜப்பான் அடிபணிந்த செய்தியையும், போர்ட்சுடேம் பேரறிக்கையை ஏற்றுக் கொண்ட செய்தியையும், சுவிட்சர்லாந்து அரசு உலகம் முழுதும் ஒலி பரப்பியது. பிறகு நேச நாடுகள் யாவும் ஜப்பானின் அடிபணியையேற்றுக் கொண்டன. ஜப்பானியப் போரமைச்சர் தற்கொலை செய்து கொண்டார். அடிபணிவு ஒப்பந்தத்தில் ஜப்பானியக் கடலில் நின்று கொண்டிருந்த மிசவுரி (Missouri) என்னும் போர்க் கப்பலில் நேச நாடுகள் முன்னிலையில் செப்டெம்பர் 2, 1945-ல் ஜப்பான் கையொப்பமிட்டது. இதற்கு முன்பே தலைமையமைச்சர் சுசூகி பதவியிலிருந்து நீங்கினர். ஜப்பான் தான் கைப்பற்றிய எல்லா நாடுகளையும் இழந்தது. சீனவில் தான் பெற்றிருந்த இடங்களையும் இழந்தது. ஜப்பானின் படைகள் கலைக்கப்பட்டன. அதன் தற்காப்பிற்குக் கூட நேச நாடுகளின் படைகளைத்தான் பயன்படுத்த வேண்டியதாயிற்று. இனி, ஜப்பானின் எதிர்காலத்தை நேச நாடுகளே உருவாக்கும். அதுவரை ஜப்பானில் குடியாட்சி முறையை ஏற்படுத்தி, அதில் பயிற்சியளித்துச் சமைதியில் நாட்டங்கொள்ளச் செய்யும் பொறுப்பினை நேச நாடுகளின் படையாட்சியேற்றுக் கொண்டது.

# 14. அமெரிக்க-ஜப்பானிய உறவுமுறை
## (1894 – 1945)

மூடிக் கிடந்த ஜப்பானியக் கதவுகளை வலியத் திறந்து அதனை வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தி, அதன் வழி ஜப்பானை ஒரு புதிய நாடாகவும், உலக வல்லரசாகவும் மாற வைத்த பெருமை அமெரிக்காவையே சாரும். அத்தகைய அமெரிக்க, ஜப்பானிய உறவு முறையை நாம் ஏற்கனவே அறிந்திருக்கிறோம். அதனைத் தொடர்ந்து 1894ஆம் ஆண்டிலிருந்து 1917வரையில் இவ்விரு நாடுகளுக்குமிடையிலிருந்த உறவு முறைகளைச் சுருக்கமாக இங்குக் காண்போம். முதன் முதலாக ஜப்பானியக் கடற்கரையில் தோன்றி, 1853-ல் அதன் கதவைத் திறந்த அமெரிக்கக் கப்பற்படைத் தலைவர் பெரிக்குப்பின் தொடர்ந்து பல அமெரிக்கத் தூதுவர்கள் ஜப்பானில் தங்கி அமெரிக்க ஜப்பானிய உறவு முறைகளைப் பலவகையிலும் வளர்த்துக்கொண்டு வந்தனர். ஆனால், அமெரிக்க ஒன்றிய நாடு தன் மனத்தில் ஜப்பானைக் கவர வேண்டுமென்று எள்ளளவு கூட நினைத்துப் பார்த்ததில்லை. ஜப்பானை மட்டுமேயல்லாமல் பசிபிக் மாகடலையொட்டியுள்ள எல்லா அண்டைநாடுகளிடத்தும் தன் நட்புறவை வளர்த்துக் கொள்ள அது பாடுபட்டதேயொழிய, அவற்றைப் பிடித்துத் தன் நாட்டுடன் இணைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஜப்பான் ஒரு புதிய நாடாகி எல்லாத் துறைகளிலும் வளர்ந்து ஓங்குவதை ஓர் அன்பு அண்ணன் அருமைத் தம்பியின் வளர்ச்சியைக் கண்டு தட்டிக் கொடுக்கும் உடன்பிறப்புப் பாசத்தை அமெரிக்கா கொண்டிருந்ததேயொழிய, ஜப்பானைக் கண்டு பொறாமைப் படவோ அல்லது அதன் வளர்ச்சியால் தனக்குப் பேரேதம் விளையுமென்று அஞ்சி அதனை ஒடுக்கி விடவோ விரும்பியதும் இல்லை; முயன்றதுமில்லை. சான்றாகச் சீனாவிலேற்பட்ட 'பாக்சர் கலகத்'திற்குப் பிறகு அமெரிக்காவும், ஜப்பானும் மஞ்சூரியாவில் காசில்லா நுழைவுக் கொள்கையைக் கடைப்பிடித்துத் தங்களுக்குள் சச்சரவின்றி நடந்து கொண்டதைக் குறிப்பிடலாம். ஜப்பான் உருசியாவுடன் செய்த போரில் அமெரிக்கா ஜப்பானுக்குப் பரிவுகாட்டியது. நியூயார்க்கிலிருந்த வைப்பகத்தினர் ஜப்பானியருக்குப் பெருங் கடன் கொடுத்துதவினர். இதனையறிந்த ஜப்பான் மேற்கத்திய வல்லரசுகளைக் கண்டு அஞ்சுவதைப் போல் அமெரிக்காவைக்

கண்டு அஞ்சுவதற்குப் பதிலாக அதனிடம் நன்றி பாராட்டியது. எண்ணிறந்த ஜப்பானிய மாணவர்கள் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று பல்வேறு புதிய கல்வி முறையினைக் கற்று ஜப்பானுக்குத் திரும்பினர். இவர்களால் அமெரிக்க நாட்டின் அறிவியலும், புதுப் புனைவுகளும் ஜப்பானியரின் வளத்திற்கும், வாழ்விற்கும் பயன்படுத்தப்பட்டன. அமெரிக்க ஒன்றிய நாடுகளில் ஜப்பான் நாட்டுக்குத் தேவையான பல மூலப் பொருள்கள் தடையின்றித் தாராளமாகக் கிடைத்தன. ஜப்பான் நாட்டுத் தேயிலையும், பட்டும் அமெரிக்கச் சந்தைகளில் புகழ்பெற்று விளங்கின. எனவே ஜப்பான் நாட்டுப்பொருள்களை வாங்கும் சீனர்களைவிட அமெரிக்கர்களே அதிகமாயிருந்தனர். அமெரிக்காவில் தனது தேயிலையையும், பட்டையும் விற்றுப்பெற்ற பணத்தைக் கொண்டு ஜப்பான் அமெரிக்க நாட்டுப் பருத்தியையும், இரும்பையும், எஃகையும், இயந்திரப் பொருள்களையும், புதிய கருவிகளையும் வாங்கிக் கொண்டது.

1905ஆம் ஆண்டுக்குப் பின் இவ்விரு நாடுகளுக்குமிடையே ஒரு சில சச்சரவுகள் வளரத்தொடங்கின. உருசிய-ஜப்பானியப் போருக்குப்பின் ஏற்பட்ட போர்ச்சமவுத் உடன்படிக்கையே அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்குமிடையே மனவேற்றுமைகள் வளர்வதற்குக் காரணியமாய் நின்றது. ஆரிமான் (Harriman) எனும் அமெரிக்க வல்லுநர் திரான்சைபீரியன் இருப்புப்பாதையை விரிவுபடுத்தி அட்லாண்டிக்கையும், பசிபிக்கையும் இப்பாதையின் மூலம் நேரடியாக இணைக்க முற்பட்டாரென்றும், இதன் காரணியமாக மஞ்சூரியாவில் தன் ஆளுமைக்குத் தடையேற்படுவதை உணர்ந்த ஜப்பான் அமெரிக்காவை வெறுக்கத் தலைப்பட்டதென்பதையும் நாம் அறிவோம். இத்தகைய மனக்கசப்பும் சிறிது காலத்திற்குள் மறைந்துவிட்டது. இதற்கடுத்தாற்போல் ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் குடியேற்ற முறையில் தகராறுகள் வலுத்தன. அமெரிக்காவின் மேற்குக் கரையில் அமைந்துள்ள பல நகரங்களிலும் உள்ள தொழிலகங்களுக்கும், தோட்டங்களுக்கும் மிகத் தாராளமாகச் சீனக் கூலிகள் குறைந்த கூலிக்கு வேலை செய்தனர். சீனாவிலிருந்து வெளியேற்றப்பட்ட பலர் பசிபிக் மாகடலைக்கடந்து மிக எளிதாக அமெரிக்காவின் மேலைக் கடற்கரையோரங்களில் குடியேறிக் கூலிகளாக மாறினர். ஆனால், ஐரோப்பிய நாடுகளிலிருந்து அட்லாண்டிக் மாகடலைக் கடந்து அமெரிக்காவை அடைந்து, அதன் மேலைக் கடற்கரைக்குச் சென்று பணியாற்றும் வாய்ப்பு ஐரோப்பியர்களுக்கு மிகக் கடினமான ஒன்று. எனவே அமெரிக்காவை வளப்படுத்த தொலைகிழக்கு நாடுகளின் கூலியாள்களே குறிப்பாகச் சீனர்களும், தொழில் நுட்பம் தெரியாத

ஜப்பானியரும் பெரிதும் பயன்பட்டனர். இச் சீன, ஜப்பானியக் கூலிகள் தங்கள் நாட்டில் பெறும் கூலியைவிடப் பன்மடங்கு அதிகமான கூலியைப் பெற்றனர். இவ்வாறு அமெரிக்காவில் சென்று குடியேறிய கூலிகளில் பெரும்பாலோர் கலிபோர்னியாவில் மிகுந்து காணப்பட்டனர். இவர்களோடு பல வணிகர்களும், வேறு சில தொழிலாளர்களும் வந்து குடியேறினர். இதனால் அமெரிக்காவின் மக்கள் தொகை மேலும் வளர்ந்து கொண்டே போயிற்று. ஆவாய் (Hawaii) இணைத்துக் கொள்ளப்பட்டபின் மக்கள் தொகை மேலும் பெருகலாயிற்று. ஆயிரக் கணக்கான ஜப்பானியர், அமெரிக்கத் தேயிலைத் தோட்டங்களில் பணியாள்க ளாயினர். ஆவாயிலும், கலிபோர்னியாவிலும் முதலில் குடியேறிய இவர்கள் 1898ஆம் ஆண்டிற்குப் பிறகு அமெரிக்கா-வெங்கிலும் சென்று குடியேறலாயினர். இவ்வாறு குடியேறிய சீன, ஜப்பானியர்களால் குறைந்த கூலிக்குப் பணியாற்றும் வேலையாள்கள் அமெரிக்காவெங்கிலும் கிடைக்கலாயினர். கூலிக் குறைவையெதிர்த்து அமெரிக்கத் தொழிற்கழகங்கள் பல போராட்டங்களை நடத்தின. அக் கழகங்கள் குறைந்த கூலிக்குப் பணியாற்றும் ஆசிய மக்களை வெறுக்கத் தொடங்கின. இவர்களைத் தடுத்து நிறுத்தாவிட்டால் எதிர்காலத்தில் அமெரிக்கரல்லா தவர்களின் தொகை அதிகமாகி, பசிபிக் கடற்கரை முழுவதும் அமெரிக்கரல்லாதவரே பெரும் வலிமை பெற்று விடுவரென அஞ்சினர். அமெரிக்காவில் குடியேறிய சீனரும், ஜப்பானியரும் நிறைவாக உழைத்துக் குறைவாகக் கூலி பெற்றுத் தங்கள் எளிய வாழ்க்கையை நிறைவாக நடத்தினர். இவர்களோடு தங்கள் வாழ்க்கை முறையை உயர்வாக அமைத்துக் கொண்டு உயர்வாகக் கூலிபெற விரும்பிய அமெரிக்கர்களால் போட்டி போட முடிய வில்லை. குறிப்பாகப் பசிபிக் கடற்கரை முழுவதும் ஜப்பானியரே காணப்பட்டனரெனில் அது மிகையாகாது.

ஆயினும் தங்கள் நாட்டில் குடியேறிய ஜப்பானியரை அமெரிக்கர்கள் அப்பட்டமாக வெறுத்தொதுக்கவோ அல்லது வெளியேற்றவோ விரும்பவில்லை. ஏனெனில் இவர்கள் அமெரிக் காவில் குடியேறியவுடன் அந் நாட்டு மொழிகளைக் கற்று, பண்பாட்டைப் பின்பற்றி, எல்லாவற்றாலும் அமெரிக்கர்களைப் போலவே மாறிப் பழக்கவழக்கத்தாலும், பண்பாட்டாலும் அவர்களோடு ஒன்றி விட்டனர். இவர்களுடைய திறமையிலும், தென் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவில் குடியேறிய வெள்ளையர்களைவிடச் சிறந்தே காணப்பட்டனர். ஜப்பானிலிருந்து அமெரிக்கா சென்று பட்டம் பெற்ற பல மாணவர்கள் அங்கேயே தங்கி மருத்துவர்களாகவும், பேராசிரியர்களாகவும் மற்றும் பல

வகையிலும் பணியாற்றினர். அவர்களுடைய அறிவுத்திறனும், செயல் திறனும் அமெரிக்க நாட்டிற்குப் பயன்பட்டதோடு அமெரிக்கர்களையும் பெரிதும் கவர்ந்தன. ஜப்பானிய வணிகர்கள் பலர் அமெரிக்க நாட்டுப் பெருங்குடிகளோடு வைத்து எண்ணப் படும் மதிப்பைப் பெற்றனர். எனவேதான் விரைவில் அமெரிக்கரோடு எல்லா வகையிலும் ஒன்றிப் போகமுடியாத சீனர்களைவிட, ஜப்பானியர்களே அமெரிக்கர்களால் பெரிதும் விரும்பப்பட்டனர்.

இத்தகைய அமெரிக்க-ஜப்பானிய உறவுமுறையை நாம் தொடர்ந்து காணமுடியவில்லை. இதற்குக் கரணியம் ஜப்பான் நாட்டில் இந்நூற்றுண்டில் அளவுக்கு மீறிப் பெருகி வந்த மக்கள் அயல் நாடுகளுக்குச் சென்று குடியேறினர்; அதில் பெரும் பகுதி அமெரிக்காவில் சென்று குடியேறியது. இவ்வாறு மேன் மேலும் தங்கள் நாட்டில் குடியேறும் ஜப்பானிய மக்களின் பெருந் தொகையைக் கண்டு அமெரிக்கர் அஞ்சினர். இதனால் அவர்களுக்கு இன வெறுப்புணர்ச்சி ஏற்பட்டது. இந்த வெறுப்புணர்ச்சியை மேலும் பரப்புவதற்குப் பல அமெரிக்க நிலையங்கள் முழுமூச்சுடன் பாடுபடத் தொடங்கின. இவை ஜப்பானியரைப் பற்றிய பல தவறான கருத்துகளை அமெரிக்கரிடையே பரப்பின. அவற்றுள் முகாமையானவை ஜப்பானியர்கள் ஒழுக்கங் கெட்டவர்கள், நாணயமற்றவர்கள், இரண்டகிகள், அமெரிக்காவைக் காட்டிக் கொடுக்கும் கருங்காலிகள் முதலியனவாம். இத்தகைய கருத்துகள் அமெரிக்க மக்களிடையே பரவிய பின் ஜப்பானியருக்கும், அமெரிக்கருக்குமிடையே இருந்த நல்லுறவுகள் முறியத் தொடங்கின. இதுவரை இவர்களுக்குள்ளிருந்த திருமணவுறவு முறைகளும், நட்புறவுக் கூட்டங்களும், இன்னபிற குமுகாய வுறவுகளும் தடைப்படுத்தப்பட்டன. இதனையறிந்த ஜப்பானிய அரசு 1900ஆம் ஆண்டில் தன் நாட்டிலொரு சட்டத்தைக் கொணர்ந்து ஜப்பானியர் அமெரிக்க ஒன்றிய நாடுகளில் குடியேறுவதைக் கட்டுப்படுத்தியது. 1903ஆம் ஆண்டில் இச் சச்சரவுகளுக்குத் தீர்வு காண்பதற்காகச் சிக்காகோவில் ஒரு தனி மாநாடு கூட்டி ஆய்ந்தது. அம் மாநாட்டின் முடிவுப்படி தொழிலாளர்கள், அமெரிக்காவில் குடியேறும் அயலார் ஆகியோர் சிக்கல்களை ஆராய ஒரு தனி ஆணைக்குழு அமைக்கப்பட்டது. 1905ஆம் ஆண்டில் சான்ஃபிரான்சிசுகோவில் ஜப்பானியரையும், கொரியரையும் வெளியேற்றுவதற்காக ஒரு கட்சி தோற்றுவிக்கப் பட்டது. இதன் விளைவாக 1906ஆம் ஆண்டில் சான்ஃபிரான் சிசுகோப் பள்ளிகளில் பணியாற்றிய ஜப்பானிய ஆசிரியர்களும், ஜப்பானிய மாணவர்களும் பெரும் சோதனைக்குள்ளானார்கள்.

இதனையடுத்து அமெரிக்கா முழுவதுமுள்ள உள்ளாட்சியில் பணியாற்றும் ஜப்பானிய ஆசிரியர்களும் மற்ற பணியாளர்களும் ஜப்பானை விட்டு வெளியேறும்படி அச்சுறுத்தப்பட்டனர். ஜப்பானியரைப் பற்றிய வெறுப்புணர்ச்சி ஒவ்வோர் அமெரிக்கன் நெஞ்சிலும் காணப்பட்டது. இதனையறிந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உரூசுவெல்டு உள்ளாட்சித் துறைகளுக்கு வேண்டுகோள்விடுத்து ஜப்பானியரை வெளியேற்ற வேண்டாமென்றும், அச் சிக்கலை மேலும் பெரிதுபடுத்த வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டார். அதற்கு மாநில ஆட்சிகள் அமெரிக்கக் குடியரசுத் தலைவரிடம் இனி ஜப்பானியர் ஆவாய், மெக்சிகோ, கனடா முதலிய இடங்களைத் தவிர மற்ற உள்நாட்டுப் பகுதிகளில் வந்து குடியேறுவதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டன. இதனையடுத்து அமெரிக்க பேராயம் (காங்கிரசு) 1906ஆம் ஆண்டில் ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. அச் சட்டம் அமெரிக்கக் குடியாட்சித் தலைவருக்கு அயல் நாடுகளிலிருந்து குடியேறும் வேண்டப்படாத இனத்தவர்களைத் தடுத்து நிறுத்தும் அதிகாரத்தையளித்தது. அதன்படி குடியரசுத் தலைவர் ஒரு பேராணையின் மூலம் ஆவாய், மெக்சிகோ, கனடா முதலிய பகுதிகளிலிருந்து அயலார் எவரும் அமெரிக்க ஒன்றியத்திற்குள் குடியேறக் கூடாதெனத் தடுத்தார். ஆனல், இந்தப் பேராணை 1907ஆம் ஆண்டில் அமெரிக்கப் பேராயப் பேரவை நிறைவேற்றிய சட்டத்தையொட்டி விடுக்கப்பட்டதேயொழிய ஒன்றிய நாடுகளின் அரசியல் சட்டப்படி, குறிப்பாக அதில் கூறப்படும் மாந்தக் குமுகாயத்தின் அடிப்படையுரிமைகளின்படி தவறுனதாகும். இதனையடுத்து குடியரசுத் தலைவர் தோக்கியோ அரசுடன் நேரடித் தொடர்புகொண்டு ஜப்பானியக் கூலிகள் அமெரிக்காவில் குடியேறுவதைத் தடுக்க ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். இவ்வொப்பந்தம் பணிதலும், பகட்டும், அதிகாரமும், தண்டனையுமில்லாமல் இவ்விரு நாடுகளுக்கிடையே பெருந்தன்மையோடு செய்யப்பட்டதால் இஃது 'பெருந்தகையர் ஒப்பந்தம்' (Gentlemen's Agreement) என அழைக்கப்படுகின்றது.

1913-ல் மீண்டும் ஜப்பானியக் குடியேற்றம் பற்றிய சிக்கல் வலுப்பெற்றது. கலிபோர்னியச் சட்டமன்றத்தில் 1913-ல் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டத்தின்படி எந்த ஜப்பானியனும் சொந்தமாக நிலத்தை வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், அவ்வாறு வைத்திருந்தால் அமெரிக்கர்களுக்கு விற்றுவிட்டுக் குத்தகைக்குப் பயிரிடுவோனுக மாறவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. இச்சட்டத்தை மாற்றியமைக்கும்படி குடியரசுத் தலைவர் வில்சன் எவ்வளவோ கேட்டுக்கொண்ட பின்னும் கலிபோர்னியச்

சட்டமன்றம் அவர் வேண்டுகோளை ஏற்கவில்லை. இதனையடுத்து இதாகோ (Idaho), ஒரிகன் (Oregon) ஆகிய மாநிலச் சட்ட மன்றங்களிலும் இத்தகைய சட்டங்கள் கொண்டுவர 1917-ல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், குடியரசுத் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க இஃது கைவிடப்பட்டது. அமெரிக்காவில் பிறந்த ஜப்பானியனுக்கு மட்டும் குடியுரிமையும் வழங்கப்பட்டது. மற்றவர்களுக்குக் குடியுரிமை மறுக்கப்பட்டது. இத்தகைய ஜப்பானியருக்கு எதிரான சட்டங்கள் அமெரிக்க மாநிலச் சட்ட மன்றங்கள் யாவற்றிலும் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப் பட்டதையொட்டி அமெரிக்கக் கூட்டாட்சி மன்றமான வாசிங்டனில் ஜப்பானியக் குடியேற்றத்தைத் தடுத்தல், ஜப்பானியரை வெளியேற்றல், அல்லது இந் நாட்டின் குடிகளாக்குதல் முதலிய பல சிக்கல்களைப் பற்றிய கலந்துரையாடல்கள் தொடர்ந்தன. இவற்றையெல்லாம் கண்ணுற்ற ஜப்பானியர் அமெரிக்காவில் தாங்கள் உரிமையற்ற கூலிகளாய் நடத்தப்படுவதையும், தங்களையும், தங்கள் நாட்டையும் அமெரிக்கர்கள் கேவலமாக மதிப்பதையும், அதற்காக மாநிலச் சட்டமன்றங்கள் பல சட்டங்களைக் கொண்டு வருவதையும் கண்டு மனம் புழுங்கினர். மேலும் அமெரிக்காவும், ஜப்பானும் செய்துகொண்ட 'பெருந்தகையர் ஒப்பந்த'த்திற்கு மாறாக வேறு வழியின்றி அமெரிக்காவில் குடியேறுவதையும் கண்டு தங்களுக்குத் தாங்களே மனம் வருந்திக் கொண்டனர். 1905-ல் அமெரிக்காவில் குடியேறிய ஜப்பானியரின் தொகை ஏறத்தாழ ஓரிலக்கமாகும். இவர்கள் யாவரும் அமெரிக்கா வெள்ளையரைத் தவிர அயலாரை வெளியேற்றும் கொள்கையினைக் கடைப்பிடிப்பதையும், அதிலும் ஜப்பானியரை மிகக் கேவலமாக மதிப்பதையும் ஜப்பானியரின் தேசிய உணர்ச்சிக்கும் புனிதத் தன்மைக்கும் இழிவைத் தேடித் தருவதென எண்ணினர்கள். ஜப்பானியரை வெளியேற்றுவதில் கலிபோர்னியா அதி தீவிரம் காட்டியது.

தன் மக்களுக்கு அமெரிக்காவில் இழைக்கப்படும் கொடுமைகளையும், அமெரிக்கா ஆசுத்திரேலியாவைப் போலவும், பிரிட்டானியக் கொலம்பியாவைப் போலவும் நிறவெறியைக் கடைப்பிடித்துத் தம் மக்களை வெளியேற்றுகின்றதே என்பதையும் அறிந்தும் ஜப்பான் அமெரிக்காவை எதிர்க்கவோ, கண்டிக்கவோ அதன்மீது போர் தொடுக்கவோ வேண்டிய நிலையிலில்லை. அதற்குக் கரணியம் அதனுடைய எண்ணமெல்லாம் சீனவில் ஆளுமை பெறுவதிலேயே நிலைத்திருந்தது. அமெரிக்காவிலேயே சிந்தனையாளர்கள் பலர் ஜப்பானியரை வெறுக்கும் முறையை எதிர்த்து எழுதினர். இவ்வாறு வெறுத்தொதுக்கினால்

ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்கும் போர் மூளக்கூடுமென்றும் அவர்கள் எச்சரித்தனர்.

அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் தொலைகிழக்கு நாடுகளைப் பற்றிய கொள்கையாலும், மன வேறுபாடுகள் தோன்றலாயின. 1898-ல் அமெரிக்கா பிலிப்பைன் தீவுகளையும், ஆவாய்த் தீவையும் தன் நாட்டுடன் இணைத்துக்கொண்டது. இதன் கரணியமாக இவ்விரு நாடுகளுக்கும் மனவேற்றுமைகள் வளரத் தொடங்கின. இதனையடுத்து அமெரிக்கா சீனாவில் காசில்லா நுழைவுக் கொள்கையைப் பின்பற்றிப் பெற்ற சலுகைகளைக்கண்ட ஜப்பான் சீனாவில் தன் ஆளுமைக்கு அமெரிக்கா இடையூறாய் நிற்பதைக் கண்டு வெறுத்தது. 1905ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜப்பான் மஞ்சூரியாவில் பெற்ற செல்வாக்கிற்கு முட்டுக்கட்டையாக அமெரிக்காவின் இருப்புப் பாதைத் திட்டம் அமைவதைக் கண்டு ஜப்பான் அமெரிக்காவின் மீது வெறுப்புற்றது. இதனால் மஞ்சூரியாவில் அமெரிக்காவில் ஜப்பானியரின் இருப்புப் பாதைகளை வாங்கவொட்டாமல் தடுத்தது. அமெரிக்கா சீனாவில் தனது காசில்லா நுழைவுக் கொள்கைமூலம் சீனாவை வளப்படுத்த விரும்பினாலும், அஃது ஜப்பானின் தன்னலத்திற்கும் அது பாடுபட்டுப் பெற்ற மஞ்சூரியாவின் ஆளுமைக்கும் தடையாக இருப்பதால் அமெரிக்காவை வெறுக்க முற்பட்டது. ஆயினும் அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் கருத்துப்படி சீனாவின் முன்னேற்றத்திற்காக மற்ற ஐந்து பெரும் நாடுகளுடன் சேர்ந்து பெரும் கடனைக் கொடுத்துதவியது, இதில் பெரும் முதலீடு செய்தவர்கள் அமெரிக்க நாட்டு வைப்பகத்தினராவர். அமெரிக்க எண்ணெய்க் குழுமம் ('ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி') சீனாவிலுள்ள பெரும்பாலான எண்ணெய்க் கிணறுகளைப் பெற்று அவற்றில் பெரும் முதலீடு செய்தது. பல அமெரிக்க நிறுவனங்கள் இத்தகைய சீனச் செய்தித் திட்டங்களில் தங்கள் பெருந்தொகையை முதலீடு செய்தன. ஓர் அமெரிக்க நிறுவனம் ஜப்பானுக்குச் சொந்தமான ஃபார்மோசாத் தீவுக்கெதிரிலுள்ள சீன மாநிலமான ஃபுகினில் ஒரு துறைமுகத்தைக் கட்டித் தர முன்வந்தது. 1916-ல் சில அமெரிக்க முதலாளிகள் சாண்டுங்கில் இருப்புப் பாதையமைக்கச் சீனர்களுக்கு ஒரு பெருந்தொகையைக் கடனாகக் கொடுக்க முன்வந்தனர். இவ்விருப்புப் பாதை அங்கு அமைக்கப்பட்டால் சாண்டுங்கில் ஜப்பான் பெற்றிருக்கும் செல்வாக்கிற்குப் போட்டி ஏற்படுத்துவதாகும். 1917-ல் அமெரிக்காவின் தூண்டுதலால்தான் சீனா செருமனியோடு கொண்டிருந்த உறவை முறித்துக்கொண்டது. இவ்வாறு சீனாவைப் பொறுத்த மட்டில் அமெரிக்கா செய்த பணிகள் யாவும் காசில்லா நுழைவுக் கொள்கை மூலம் சீனாவை முன்னேற்றுவதற்காகவே என

அமெரிக்கர் பலரும் எண்ணினர். ஆனால், ஜப்பானியரோ தாங்கள் செல்வாக்குப் பெறும் இடங்களிலெல்லாம் அமெரிக்கர் தங்களுக்குப் போட்டியாகச் செயல்படுவதாகக் கருதினார்கள். மேலும் மேற்கு நோக்கி அமெரிக்கர்கள் ஆளுமை பெறுவதற்கு இவ்வாறு சீனாவுக்கு உதவும் பாணியில் எளிதாக நுழைகிறார்கள் என ஜப்பான் ஐயமுற்றது. அமெரிக்கா மிசிசிபி ஆற்றைக் கடந்து, அதற்கப்பாலுள்ள மலைத் தொடரைக் கடந்து பசிபிக் கடலோரப் பகுதிகளைக் கைப்பற்றி, ஆவாய்த் தீவுகளையும், பிலிப்பைன் தீவுகளையும் இணைத்துக்கொண்ட செயலானது ஜப்பானின் கண்களுக்கு அச்சத்தை உண்டாக்கியது. இதற்காகவே சீனாவின் சுரங்கங்களிலும், துறைமுகங்களிலும், இருப்புப்பாதைகளிலும், மற்றும் பெருந்திட்டங்களிலும், அமெரிக்கா முதலீடு செய்கிறதென்றும், அதன் காசில்லா நுழைவுக் கொள்கை அதிகார மனப்பான்மையைக் கொண்ட தன்னலக் கொள்கையேயென்றும் ஜப்பான் எண்ணியது. மேலும் சீனாவின் அன்றைய வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் துணை தேவைப்பட்டதையும் ஜப்பான் உணர்ந்தது. அத்தகைய சீன நாட்டில் தனது அதிகாரத்தை எப்படியும் ஏற்படுத்தித் தீரவேண்டுமென்பதையும் ஜப்பான் திட்டவட்டமாகத் தீர்மானித்துக் கொண்டது. இதற்கு முதல் எதிரியாக அமெரிக்காதான் வரக் கூடுமென்று ஜப்பான் எதிர்பார்த்தது.

ஜப்பான் அமெரிக்காவைக் கண்டு ஐயுற்றதைப்போலவே ஜப்பான் தொலைகிழக்கு நாடுகளிலும், பசிபிக் மாகடலிலும் தன் ஆளுமையைப் பெருக்குவதைக் கண்ட அமெரிக்கா தனக்குச் சொந்தமான பிலிப்பைன் தீவுகளையும், ஆவாயையும் ஜப்பான் கைப்பற்றிக்கொள்ளுமென அஞ்சியது. அதற்கேற்றாற்போல ஆவாய் மக்கள் தொகையில் பெருவாரியானவர்கள் ஜப்பானியராகவே இருந்தனர். மேலும் மெக்சிகோவிலும், மைய அமெரிக்காவிலும், தென்னமெரிக்காவிலும் ஜப்பானியரின் செல்வாக்கு மிகுந்து காணப்பட்டது. பெருகி வரும் ஜப்பானியக் கப்பற்படையைக் கண்ட அமெரிக்கர் அஃது பசிபிக் மாகடலை ஆளுமை செய்து கொள்ளுமோவென அஞ்சினர். ஆனால், உண்மையில் ஜப்பானியரின் நோக்கமெல்லாம் சீனாவைப்பற்றியதேயொழிய அமெரிக்காவைப்பற்றியதன்று. எனவே இவ்விரு தரப்பினரும் ஒருவரைப்பற்றி ஒருவர் கொண்டிருந்த ஐயப்பாடுகள் முற்றிலும் தவறானவை.

### இலான்சிங்-இசி உடன்படிக்கை (நவம்பர், 1917)

ஜப்பானிய ஆணைக்குழுவொன்று இளங்கோமான் இசியின் தலைமையில் அமெரிக்காவுக்குச் சென்றது. இக்குழு அமெரிக்கர்

கொண்டிருந்த ஐயத்தைப் போக்கி ஜப்பானியர் சீனவைத் தவிர மற்ற எந்த நாட்டின் மீதும் ஆளுமை பெறவோ செல்வாக்குப் பெறவோ ஆர்வம் கொண்டிருக்கவில்லை யென்றும், குறிப்பாக அது அமெரிக்க நாட்டின் எப்பகுதியிலும் ஆளுமை செலுத்தா தென்றும் திட்டவட்டமாகக் கூறியது. அதைப் போலவே அமெரிக்கரும் தாங்கள் சீனவின் மீது கொண்டுள்ள ஆர்வம் காசில்லா நுழைவுக் கொள்கையை வலுப்படுத்தவும், அதன் ஒற்றுமையையும், எல்லைகளையும் பாதுகாக்கவும், அதனை முன் னேற்றவுமே ஆகுமென வெளிப்படையாகக் கூறியது. பின் இரு நாடுகளும் ஜப்பானின் தன்னுரிமையைக் காக்கவும், அதற்கு மற்ற நாடுகளுக்குச் சமமாக மதிப்பளிக்கவும், அதன் வணிக வளர்ச்சிக்கும், தொழில் வளத்திற்கும் ஊக்கம் காட்டி ஆக்கம் தேடித்தரவும் உறுதி எடுத்துக் கொண்டன. இந்த உடன் படிக்கை இரு நாடுகளுக்குமிடையே எழுந்த ஐயப்பாடுகளைப் போக்கிக் கொள்ள உதவிய ஒரு வெளிப்படையான பேச்சே என லாம். எனவேதான் இதனை அமெரிக்கா, ஜப்பான் ஆகிய இரு நாட்டுத் தாளிகைகளும், பொதுமக்களும், அயல் நாட்டறிஞர் களும் போற்றவில்லை. இதற்குப் பின்னும் அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்குமிடையே மனமாற்றங்களும், ஐயப்பாடுகளும் வளர்ந்துகொண்டே சென்றதால் ஜப்பானியத் தூதுக் குழுக்கள் அமெரிக்காவுக்குச் சென்ற வண்ணமிருந்தன.

முதல் உலகப் போருக்குப்பின் பாரிசில் ஏற்பட்ட உடன்படிக் கையில் சீன சாண்டுங்கைத் தனக்குத் திருப்பித்தர வேண்டு மென்று கேட்டது. ஆனல், ஜப்பான், அது தனக்குத்தான் சேர வேண்டுமென விரும்பியது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வில்சன் சீனவின் வேண்டுகோளை ஏற்கும்படி கூறினர். ஆனல், இங்கிலாந்து, ஃபிரான்சு, இத்தாலி, ஆசுத்திரேலியா, நியூசிலாந்து முதலிய நாடுகள் வில்சனுடைய கருத்தை எதிர்த்தன. ஜப்பான் தன்னுடைய கோரிக்கை நிறைவேற்றப் படாவிட்டால் சமைதி உடன்படிக்கை மாநாட்டிலிருந்து வெளியேறி விடுவதாக அச் சுறுத்தியது. ஊதியம் கருதாது சமைதியையே விரும்பும் வில்சன் ஜப்பானின் வெளியேற்றத்தால் விளையப்போகும் பெரு விளைவுகளை மனத்தில் கொண்டு போருக்கு முன்னல் செருமனி சாண்டுங்கில் பெற்றிருந்த உரிமைகள் யாவும் ஜப்பானுக்குச் சேரவேண்டு மென்பதை ஒப்புக் கொண்டார்.

அடுத்தபடியாக முதல் உலகப் போருக்குப்பின் 1922-ல் அமெரிக்காவின் தலைநகரான வாசிங்டனில் நடந்த மாநாட்டில் கப்பற்படையொழிப்பு, அரசியல் சமவுரிமை ஆகியவை தொலை

கிழக்கு நாடுகளில் நிலவ வேண்டுவது பற்றி ஆராயப்பட்டது. இந்த மாநாட்டில் அமெரிக்கா, வல்லரசுகள் பெரும் போர்க் கப்பல்கள் வைத்திருப்பது பற்றிய ஓர் ஒழுங்கு முறைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது. இதன்படி அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஃபிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகள் முறையே 5: 5: 3: 1·75:1·75 என்னும் மேனியிலும் போர்க் கப்பல்களை வைத்திருக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டது. இத் தீர்மானம் ஒரு மனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது. இதனால் ஜப்பானை அமெரிக்காவோ, பிரிட்டனோ வெல்ல முடியாது. ஜப்பான் அமெரிக்காவும், பிரிட்டனும் சேர்ந்து தன்னைத்தாக்கு மென்ற அச்சத்தையும், மேற்கத்திய வல்லரசுகள் செய்துகொண்ட 'நான்கு வல்லரசுகள் ஒப்பந்தம்' ஏற்பட்டதிற்குப்பின் தவிர்த்துக் கொண்டது. இவ்வொப்பந்தத்தில் கீழ்த்திசை நாடுகளில் மேற்கத்திய வல்லரசுகள் 'தலையிடாக் கொள்கை'யைக் கடைப்பிடிக்க வேண்டுமென ஒப்புக்கொண்டன. மேலும் ஜப்பான் தன்னிடத்தில் பெருவாரியான போர்க்கப்பல்களைப் பெற்றிராத காரணியத்தால் அமெரிக்காவையோ அல்லது இங்கிலாந்தையோ எதிர்க்க முடியாது. ஒன்பது வல்லரசுகள் சேர்ந்து செய்து கொண்ட ஒப்பந்தத்தால் சீனாவின் பொருளியல், அரசியல் உரிமைகளில் ஒருவரும் தலையிடாமல் பாதுகாக்கப்பட்டது. இதனால் ஜப்பான் சீனாவில் கொண்டிருந்த செல்வாக்கையிழக்க வேண்டியதாயிற்று. ஆயினும் ஜப்பான் முன்னரே தான் பெற்றிருந்த உரிமைகளில் ஐரோப்பிய நாடுகள் தலையிடக் கூடாதென அச்சுறுத்தியது. கடைசியாகச் சீனாவுக்கு வெய்ஃகாய்வெய்யும், சாண்டுங்கும் மட்டும் விடுவித்தளிக்கப்பட்டன. எனவே சீனா, தான் முன்னரே இழந்தவற்றை இழந்தே நின்றது.

வாசிங்டன் மாநாட்டில் அமெரிக்கா ஜப்பானின் ஆளுமைப் பேராசையைப் பலதரப்பட்ட உடன்படிக்கைகளாலும் ஒப்பந்தங்களாலும் ஒழிக்கவேண்டுமெனத் தீர்மானித்தது. அதன்படி ஏற்பட்ட நான்கு வல்லரசுகளின் ஒப்பந்தமும், ஒன்பது வல்லரசுகளின் உடன்படிக்கையும் ஜப்பானின் அதிகார மனப்பான்மையை அடியோடு ஒழிக்க முடியவில்லை. அதன் ஒரு சில இழப்புகள் அதன் எதிர்கால ஆளுமைப் பேராசைக்கு ஊக்கமளிப்பதாகவே நின்றன; இதனால்தான் மஞ்சூரியச் சிக்கல் தொலைக் கிழக்கு நாடுகளின் மையச் சிக்கலாக மாறியது. இவ்வாறு ஜப்பானும், அமெரிக்காவும் தங்களுக்குள் நேரடியான அத்து மீறலும், நாட்டைக் கவர்தலும் இல்லாமல் சீனாவையும், மஞ்சூரியாவையும், ஆவாயையும், பிலிப்பைன் தீவுகளையும் மையமாகக் கொண்டு பகையுணர்ச்சியையும், நட்பையும் இடையிடையே வளர்த்துக்

கொண்டன. 1899-ல் அமெரிக்க ஒன்றிய நாடுகளின் பொதுச் செயலாளர் ஏய் (Hay) 'காசில்லா நுழைவுச் சலுகை'யைக் கொணர்ந்து அதனை இங்கிலாந்து, ஃபிரான்சு, இத்தாலி, செருமனி, உருசியா, ஜப்பான் முதலிய நாடுகளை ஏற்கும்படி செய்தார். இதனால் பல நாடுகளும் பொருளியல் வளர்ச்சிக்கான வணிக உரிமைகளைப் பெற்றன. அத்தோடு சீனு கூறுபடாமல் காக்கப் பட்டது. அதிலிருந்து தொடங்கிய அமெரிக்க, சீன மனத்தாங்கல் சிறிது சிறிதாக வளர்ந்தது. இதற்குப்பின் ஏற்பட்ட சீனக் குழப் பத்தில் பாக்சர் இயக்கத்தால் விளைந்த கேடுகளை அமெரிக்கா நீக்கி மஞ்சுப் பேரரசை உயிர்ப்பித்தது. இதனால் ஜப்பான் சீனுவைக் கூறுபோட்டுக் கொள்ளும் பேராசையில் ஏமாற்றமடைந்தது. அடுத்து உருசிய, ஜப்பானியப் போரில் இரு நாடுகளும் சொல்லொணு இழப்புகளுக்கும், துன்பங்களுக்கும் ஆளானபின் ஜப்பானை இப் போரின் இடுவாயிலிருந்தும், உள்நாட்டுக் குழப்பத் தினின்றும் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உரூசுவெல்டு தலையிட்டுக் காப்பாற்றினர். அவருடைய பெருமுயற்சியால்தான் 1905-ல் போர்ட்சுமவுத் உடன்படிக்கை ஏற்பட்டது. அடுத்து மஞ்சூரியத் தகராறில் அமெரிக்கா தலையிட்டு ஜப்பானின் ஆளுமை வளர்ச்சியைத் தடுத்துச் சீனுவைக் காப்பாற்றியது. இதனால் ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் 1911-ல் ஒரு போரே ஏற்படும் போல் இருந்தது. ஜப்பான் தனது இருபத்தொரு கோரிக்கை களைச் சீனுவின் மீது சுமத்திச் சீனுவை அடிமை கொள்ள முயன்ற போதும் அமெரிக்கா தலையிட்டுத் தடுத்தது. ஆனால், அதே சமை யத்தில் 1917-ல் ஏற்பட்ட 'இலான்சிங்-இசி உடன்படிக்கை'யால் ஜப்பானின் செல்வாக்கு சீனுவில் நிலைத்திருக்க அமெரிக்கா உதவியது. இவ்வாறு அமெரிக்கா முதலிலிருந்தே சீனுவை ஒரு கறவை மாடாகவும் ஜப்பானை அதன் பால்காரனுகவுமிருந்து பயன் துய்க்க இசைவித்ததேயொழிய, அதனைக் கொன்று தின்னும் கொலைகாரனுக ஜப்பானை விடவில்லையென்பது புலனுகிறது. இதைப்போலவே உலக சமைதியை விரும்பிய அமெரிக்கா முதல் உலகப் போரின் இறுதியில் சாண்டுங்கை ஜப்பானுக்குக் கொடுக்க ஒப்புக் கொண்டது. இவையெல்லாவற்றிற்கும் மேலாக நாடுகளி டையே சமவல்லமைக் கொள்கை நிலைபெறவும், வலுவற்ற நாடு களின் உரிமைகள் காக்கப்படவும், வாசிங்டன் மாநாட்டில் அரிய தீர்மானங்களைக் கொணர்ந்து வென்றது.

வாசிங்டன் மாநாட்டுக்குப்பிறகு ஜப்பானின் போர்க்கப்ப லெண்ணிக்கை உறுதியாக்கப்பட்டு விட்டாலும் அது தன் வான வூர்தி; நீர்மூழ்கிக் கப்பல் முதலியவற்றின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்திப் படைவலிமையைப் பெருக்கிக் கொண்டது.

1931-ல் அது மஞ்சூரியாவின்மீது படையெடுத்து அதனைக் கைப் பற்ற முற்பட்டது. அச்சமையத்தில் உலகம் முழுவதும் ஏற்பட்டிருந்த பொருளியல் சீர்கேட்டால் ஐரோப்பிய நாடுகளும், ஐரோப்பாவும் தங்கள் நாட்டின் பொருளியற் சிக்கலைச் சீர்படுத்துவதில் தங்கள் கவனத்தைச் செலுத்தி வந்தன. எனவே தான் அமெரிக்கா வழக்கம்போல் ஜப்பானின் ஆளுமைக் கொள்கையை வெறுத்துரைத்து எச்சரித்ததோடு விட்டு விட்டது. எனவே சீனு பன்னாட்டுக் கழகத்தில் முறையிட வேண்டியதாயிற்று. ஆனல், பன்னாட்டுக் கழகத்தாலும், ஜப்பானை மஞ்சூரியாவை விட்டு வெளியேற்ற முடியவில்லை. கடைசியாக அமெரிக்க ஒன்றிய நாடுகளின் பொதுச் செயலாளர் எச். எல். ஸ்டிம்சன் (H. L. Stimson) தனி அக்கறை எடுத்துக் கொண்டு ஜப்பான் மஞ்சூரியாவை விட்டு வெளியேறித் தொலைகிழக்குப் பகுதியில் அமைதியை நிலைநாட்ட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். ஆயினும் ஜப்பான் மஞ்சூரியாவை விட்டு வெளியேறவில்லை. 1932-ல் ஜப்பான் சாங்கை மீது போர் தொடுத்தது. அப்பொழுதும் பன்னாட்டுக் கழகத்தை வேண்டிக் கொண்டது. அமெரிக்க ஒன்றிய நாடுகளின் பொதுச் செயலாளர் ஸ்டிம்சன் ஜப்பான் சாங்கையிலிருந்து வெளியேறு விட்டால் அதனைப் பன்னாட்டுக் கழகத்திலிருந்து உறுப்பினராயிருக்க விடப்போவதில்லையெனத் தனது 'இசைவு மறுப்புக் கொள்கை' (Doctrine of non-Recognition)யின் மூலம் ஜப்பானை எச்சரித்தார். ஆனல், ஜப்பான் அமெரிக்காவின் வேண்டுகோளையோ பன்னாட்டுக் கழகத்தின் எச்சரிக்கையையோ பொருட்படுத்த வில்லை. தானே மனமுவந்து சீனவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தனது படைகளை சாங்கையிலிருந்து திருப்பிப்பெற்றது.

பொதுவாகவே ஜப்பான் முதல் உலகப்போருக்குப்பின் தனது படைவலிமையை மிக அதிகமாகப் பெருக்கிக் கொண்டது. ஜப்பானின் உள்நாட்டுக் குழப்பத்தைச் சார்பாகக் கொண்டு வட சீனுவில் தன் ஆளுமையை நிலைநாட்டிக் கொண்டது. இதனல் தொடர்ந்து ஜப்பானுக்கும், சீனுவுக்கும் பல சச்சரவுகள் நடந்து கொண்டேயிருந்தன. மற்ற ஐரோப்பிய வல்லரசுகளும் அமெரிக்காவும் ஜப்பானின் ஆளுமைக் கொள்கையை வெறுத்தவண்ணமிருந்தன. ஜப்பானும் தன் ஆளுமையைத் தொடர்ந்த வண்ணமிருந்தது. கடைசியாக 1937ஆம் ஆண்டு சீனுவுக்கும், ஜப்பானுக்கும் போர் மூண்டது. அமெரிக்கா ஜப்பானின் போக்கைக் கண்டித்து அதன் வெறுப்பை அதிகப்படுத்தக் கூடிய பலதரப்பட்ட எச்சரிக்கைகளை விடுத்தது. திசம்பர் 12, 1937-ல் அமெரிக்கத் தகரிப் படகு ஒன்று யாங்கிட்சிகி ஆற்றுத் தீரத்தில் சென்று கொண்டிருக்கும்போது ஜப்பான் அதனைத் தாக்கியது. இதற்காக மன்னிப்புக் கேட்டு அதற்கு இழப்பீடும் அளித்து விட்டது.

இந் நிகழ்ச்சிக்குப் பிறகு ஜப்பான் வலிமையற்ற சீனவைக் கைப்பற்றி அதன்மீது பேராளுமை செலுத்தும் கொள்கையைக் கைவிடும் வரையில் தான் ஓயப்போவதில்லையென அமெரிக்கா தீர்மானித்தது. இதற்கு முதற்கட்டமாகச் சீனவை வலுப்ப படுத்துவதைத் தனது கடமையெனத் தீர்மானித்தது. சீனவுக்குப் பெருந் தொகையைக் கடனகக் கொடுத்தது. 1938-ல் அமெரிக்கா பிற நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்து ஜப்பானுக்கு வெடி மருந்துக் கருவிகளோ, வானவூர்திகளோ படைக்கான மூலப் பொருள்களோ கொடுக்க வேண்டாமென வேண்டிக்கொண்டது. ஜூன், 1939-ல் தான் ஜப்பானுடன் கொண்டிருந்த வணிக ஒப்பந் தங்களை முறித்துக் கொண்டது. ஜூலை, 1940-ல் ஜப்பானுக்கு எந்தப் பொருளையும் ஏற்றுமதி செய்யக்கூடாதெனத் தடை விதித்தது. அவசியமான சில பொருள்களை மட்டும் அரசு இசைவின் பேரில் அனுப்பலாமென இசைந்தது. ஜூலை, 1940-ல் ஜப்பானியருக்கு அமெரிக்காவிலிருந்த உரிமைகள் மறுக்கப்பட்டன. இவைகளின் விளைவாக அமெரிக்கச் சந்தைகளில் ஜப்பானியப் பொருள்கள் கேட்பாரற்றுக் கிடந்தன. இதனல் ஜப்பானும், அமெரிக்க வணிக உறவுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய தாயிற்று.

1939-ல் தொடங்கிய இரண்டாம் உலகப் பெரும் போரின் மையமாக பசிபிக் மாகடல் விளங்கியது. இதனையடுத்துள்ள தென் கிழக்கு, கிழக்காசியப் பகுதிகளில் ஜப்பானின் செல்வாக்கைக் குறைக்க வேண்டியது அமெரிக்கா, பிரிட்டன், சீன, கிழக் கிந்தியத் தீவுகள் ஆகியவற்றின் கடமையாயிற்று. எனவே இப் பகுதிகளில் ஜப்பானின் பொருள்வளமோ, படை வளமோ பெருகாமல் இந்நாடுகள் பார்த்துக் கொண்டன.

1941 ஆம் ஆண்டு அமெரிக்க ஒன்றிய நாடுகளின் பொதுச் செயலாளர் கார்டெல் ஹல் (Cordell Hull) என்பவரும் வாசிங்ட னிலிருந்து ஜப்பானிய நாட்டுத் தூதுவர் தளபதி நொமோரா (Nomora) என்பவரும் தங்களுக்குள் பேச்சு நடத்தி இரு நாடு களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினர். ஆனல், திடீரென திசம்பர் 7, 1941-ல் ஜப்பான் அமெரிக்காவின் கப்பல் தளமான பெர்ல் (Pearl) துறைமுகத்தை முன்னெச்சரிக்கை யின்றித் தாக்கியது. பசிபிக் மாகடலிலிருந்த அமெரிக்கக் கப்பற்படைகள் தாக்கப்பட்டன. எனவே அமெரிக்கா ஜப்பானின் மீது போர் தொடுக்க வேண்டியதாயிற்று. ஜப்பான் தொடக் கத்தில் அமெரிக்காவுக்கெதிராக முன்னேறிக் கொண்டு சென்றது. மெரிக்கா, இங்கிலாந்து, ஆலந்து ஆகிய நாடுகளுக்குச் சொந்த

மாக பசிபிக் மாகடலிலிருந்த இடங்களெல்லாம் ஜப்பானுல் கைப் பற்றப்பட்டு விட்டன. ஜப்பான் இரண்டாம் உலகப்போரி லிறங்கிய ஆறு மாதத்திற்குள் பிலிப்பைன் தீவுகள், தச்சுக் கிழக் கிந்தியத் தீவுகள், மலேயா, பர்மா, இந்தோ சீனு முதலிய இடங்களைக் கைப்பற்றிக் கொண்டு சிங்கப்பூரைக் கைப்பற்றி கொண்டது. இதற்குப்பின் இந்தியாவை வெற்றி கொள்ளவும், ஆசுத்திரேலியாவின் மீது படையெடுக்கவும் முற்பட்டது. இதற்காக அது கிழக்காசிய நாடுகளை ஒன்ருக இணைத்து 'ஆசியா ஆசியருக்கே' எனக் கூறிக்கொண்டு அமெரிக்காவையும், பிரிட்ட னையும் ஒழிக்க முற்பட்டது. இச் சமையத்தில் அமெரிக்காவைத் தவிர அச்சு நாடுகளை ஒடுக்க வேறு வல்லரசு எதுவும் இல்லாமல் போய் விட்டது. எனவே அமெரிக்கா நேரடியாகப் போரிலிறங்கிப் பல வெற்றிகளைக் கண்டு ஆகச்ட்டு, 1945-ல் உலக வரலாற்றி லேயே முதல் தடவையாக ஜப்பானின் தென்பகுதியான குயூசுத் தீவின் மேலைக்கரையிலுள்ள இரோசிமாவிலும் மூன்று நாள்களுக்குப் பிறகு அதற்கண்மையில் குயூசுத் தீவின் தென்கரையிலுள்ள நாகசாகியிலும் அணுக்குண்டுகளை வீசி ஜப்பானை அடிபணியச் செய்தது. செப்டெம்பர் 2, 1945-ல் அமெரிக்கக் கப்பலான மிசவுரி (Missouri) யில் அமர்ந்து கொண்டு தோக்கியோ வளைகுடா வில் ஜப்பானிய நிகராளிகள் அடிபணிவு ஆவணத்தில் கையெழுத் திட்டனர்.

# 15. ஜப்பானின் ஆட்சிப் பொறுப்பை நேச நாடுகள் ஏற்றல்

இரோசிமாவிலும், நாகசாகியிலும் அணுக்குண்டு வீசப்பட்டதையும், தாங்கள் எதிர்பார்த்த உருசியாவும் தங்கள் மீது போர் தொடுத்ததையும் கண்ட ஜப்பான் நேசநாடுகளிடம் அடிபணிவதாக அறிவித்திருந்ததை நாம் அறிவோம். போரிடுவதை நிறுத்திக் கொண்டு ஜப்பான் அடிபணிந்ததை மற்ற பகுதிகளிலுள்ள ஜப்பானியப் படைகளுக்குப் பேரரசர் தனது ஆணை ஒன்றின்மூலம் ஆகச்ட்டு 15, 1945-ல் வெளியிட்டார். அவ்வறிக்கையை அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர் பலரும் சிங்கப்பூர், சீனு, மஞ்சூகோ முதலிய இடங்களுக்கு எடுத்துச் சென்று, அங்கெல்லாம் போரிட்டுக்கொண்டிருந்த ஜப்பானியப் படைகளுக்குப் படித்துக் காட்டி நேசநாடுகளிடம் அடிபணியும்படி உத்தரவிட்டனர். இதற்குப் பின்னரே செப்டெம்பர் 2, 1945-ல் ஜப்பான் மிசவுரி என்னும் கப்பலில் தனது அடிபணிவு ஆவணத்தில் கையொப்பமிட்டது.

ஜப்பான், செருமனியும் இத்தாலியும் கையொப்பமிட்டவுடனே தானும் அடிபணிந்திருக்குமானுல் அணுக்குண்டுகளின் தாக்குதலுக்கு ஆளாகியிருக்காது. ஆனுல், அதன் போரமைச்சரவையும், தோசோவின் பிடிவாதமும், மற்ற அரசியல் குழப்பங்களும் ஜப்பான் எளிதில் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தடையாய் நின்றன. மாமன்னன் இரோஃகித்தோ 'எஞ்சியுள்ள ஜப்பானிய மக்களையும், அவர்தம் பண்பாட்டையும் காப்பாற்ற வேண்டுமானுல் அடிபணிந்தே ஆகவேண்டும்' எனக் கூறியும் ஜப்பானியர் கடைசிவரை அடிபணிவதற்கு விரும்பவில்லை. மேலும் நேசநாடுகள் போர் நடந்துகொண்டிருக்கும் போதே கூடி முடிவெடுத்த கெய்ரோ மாநாடு, டெஃரான் மாநாடு, யால்டா மாநாடு, போர்ட்சுடேம் மாநாடு ஆகியவற்றின் அறிக்கைகள் யாவும் ஜப்பானை அடியோடு நசுக்குவதாகக் காணப்பட்டன. எனவேதான் ஜப்பானியர் தங்களின் வாழ்வும், பேரரசரும் அடிபணிந்த பின் நேசநாடுகளின் கைகளில் சிக்கி மாள்வதைவிடக் கடைசிவரை போரிட்டுப் போர்க்களத்திலேயே மாளத் தீர்மானித்தனர். இம் மாநாடுகளின் தீர்மானங்களில் ஒரு சில மாற்றங்களை ஏற்படுத்தி உதவுவதற்கென்றே

கடைசி வரை உருசியாவை எதிர்பார்த்த வண்ணமிருந்தார்கள். ஆனல், உருசியா நேசநாடுகளின் கூட்டணியில் இருந்தாலும், தன் பொதுவுடைமைக் கொள்கைக்கெதிராக ஜப்பான் செருமனியோடு உடன்படிக்கை செய்துகொண் டிருந்ததாலும், ஜப்பானேடு நடு நிலைமை தாங்குவதை மட்டும் வலியுறுத்திவிட்டு வாளாவிருந்து விட்டது. மாருகக் கடைசி நேரத்தில் அதுவே ஜப்பான்மீது போரைத் தொடுத்தது. இத்தகைய நிலையில் ஜப்பான் முழுவதை யும் ஒருமுகப்படுத்தவோ அல்லது ஆட்சிப் பொறுப்பைக் கட்டுப் படுத்தவோ குறிப்பிட்ட எவர் கையிலும் அதிகாரம் இல்லாமல் போய்விட்டது. அமைச்சரவையைக் கட்டுப்படுத்தி வந்த மூத்தோரவை (Genro) அதன் கடைசித் தலைவரான இளவரசா சையோன்சி (Prince Saionji) 1940-ல் இறந்ததற்குப் பின் கட்டுப் பாடின்றி நடக்கலாயிற்று. 1940ஆம் ஆண்டிற்குப் பின் வந்த அமைச்சரவை வரலாற்றை நோக்குவோமாளுல் அது படைத் தலைவர்களிடமும் அதிகார வெறியர்களிடமும், தீவிரத் தேசிய வாளர்களிடமும் சிக்கிக்கொண்டதை அறியலாம். பரந்த நோக்கம் கொண்டவர்களும், ஒருமித்த கருத்தைக் கொண்டவர் களும் மக்கள் மன்றத்திலும், அமைச்சரவையிலும் மறைந்து விட்டனர். மக்களின் படிநிகராண்மை (பிரதிநிதித்துவம்) கொண்ட மன்றங்கள் யாவும் கலைக்கப்பட்டு நாடாளும் மன்றத்தின் கைகள் ஒடிக்கப்பட்டு, நாட்டின் கொடுங்கோலர் களாகப் படையினரே விளங்கியதும், போரும், போரோடு தொடர்புடைய தொழில்களும் தவிர மற்றவை ஒடுங்கிவிட்டதும், கடைசியாக ஜப்பான் வலுவிழந்து அடிபணியும் இழிநிலைக்கு ஏதுக்களாய் நின்றன.

ஜப்பான் அடிபணிந்தவுடன் ஜப்பானுக் கிடவேண்டிய கட்டளைகளை அமெரிக்க ஒன்றிய நாடுகளின் போர்த் துறையும், நாவாய்த் துறையும் உருவாக்கியளித்தன. அத்தகைய கட்டளை களுக்கு 'ஜப்பானின் அடிபணிவுக்குப் பின் ஒன்றிய நாடுகள் இட்ட தொடக்கக் கட்டளைகள்' என்று பெயர். அவற்றில் மேலே கூறப் பட்ட மாநாடுகளின் அறிக்கைகளின் கூறுபாடுகளே காணப் பட்டன. இவற்றிற்கு செப்டெம்பர் 6, 1945-ல் அமெரிக்கக் குடியாட்சித் தலைவர் திருமன் (Truman) ஒப்புதல் தெரிவித்தார்.

## நேச நாடுகளின் பெருந் தானைத்தலைவர் (Scap)

நேச நாடுகளின் கொள்கைகளின்படி, ஜப்பானின் ஆட்சிப் பொறுப்பையேற்று அதனைக் கண்காணிப்பதற்காக நேசநாடுகளின் பெருந்தானைத் தலைவராக (Supreme Commander for the Allied Powers—Scap) அமெரிக்கத் தானைத் தலைவர் தளபதி தக்ளாசு

மக்கார்தர் (General Deouglas Macarthur) என்பவர் அமர்த்தப் பட்டார். கீழ்த்திசை நாடுகளின் ஆட்சிப் பொறுப்பைக் கண் காணிக்க 'தொலை கிழக்கு ஆணைக் குழு' (Far Eastern Commission Fec) ஒன்று வாசிங்டனில் ஏற்படுத்தப்பட்டது. அதில் அமெரிக்கா, உருசியா, பிரிட்டன், சீனு, ஃபிரான்சு, நெதர்லாந்து, கனடா, ஆசுத்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா, பிலிப்பைன் முதலிய நாடுகள் இடம் பெற்றன. 1949-ல் பர்மாவுக்கும், பாகிசுத் தானுக்கும் இதில் இடமளிக்கப்பட்டது. இவ்வாணைக் குழு ஜப்பானில் நேசநாடுகளின் கொள்கைகளின்படி ஆட்சி முறைகளைப் பரப்பவும், அவற்றைக் கண்காணிக்கவும் ஏற்படுத்தப் பட்டது. இஃது இடும் ஆணைகளைத் தளபதி மக்கார்தர் ஜப்பானில் செயல்படுத்துவார். அவ்வாறு அவர் செயல் படுத்துவதற்கு வேண்டிய எல்லா அதிகாரங்களும் அவருக்குக் கொடுக்கப்பட் டிருந்தன. இம் முறையில் அவரைநேரடியாகக் கண்காணித்து ஆணைக் குழுவுக்கு அவ்வப்போது நடக்கும் செய்திகளைத் தரும் பொறுப்பை அமெரிக்கா ஏற்றது.

இதைத் தவிர நேசநாடுகளின் அவை (Allied Council) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. இதில் அமெரிக்கா, உருசியா, சீனு ஆகிய நாடுகளின் நிகராளிகளும் பிரிட்டன், ஆசுத்திரேலியா, நியூசி லாந்து, இந்தியா ஆகிய நாடுகள் யாவற்றிற்கும் ஒரு நிகராளியும் கலந்து கொள்ள வேண்டும். இந்த அவை ஜப்பானின் தலை நகரான தோக்கியோவில் கூடும்; தளபதி மக்கார்தரும், இந்த அவையினரும் ஜப்பானிய ஆட்சி முறையைப் பற்றிக் கலந்துரையாட வேண்டும். ஆனல், தளபதி மக்கார்தர் இந்த அவைக்கு அவ்வளவாக முதன்மை கொடுக்கவில்லை.

தளபதி மக்கார்தருக்கு நிருவாகத்தில் உதவி செய்வதற்குப் படைத்துறை 'பொதுத்'துறை முதலியவற்றைச் சேர்ந்த பலரடங்கிய ஒரு பெரிய நிருவாக அலுவலகம் ஏற்படுத்தப்பட்டது. இவர்களில் பெரும்பாலார் ஜப்பானிய உள்நாட்டு முறைகளையும், பண்பாடுகளையும், மனப்போக்கையும் அறிந்தவர்களாக இருந்தனர். நேச நாடுகளின் கொள்கைகளை நன்கு புரிந்து கொண்டு ஜப்பானியருக்குப் பாராளுமன்ற ஆட்சிமுறையில் பயிற்சி கொடுப்பது மக்கார்தரின் முதன்மைப் பணியாகும். ஜப்பானியரின் படை வலிமையைக் குறைத்து, படை வலிமை ஒன்ருல்தான் ஒரு நாடு முன்னேற முடியும் என்ற அவர்களின் கருத்தை மாற்றி, சமைதி முறையில் நல்லாட்சி முறையை வளர்ப்பதற்கான வழிகளைக் கற்பிப்பதற்காகவே ஜப்பானின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டன. ஜப்பான் போரில் ஈடுபடுவதற்குக் கரணியமாயிருந்தவர்களையும், தூண்டுதல்

செய்தவர்களையும், பெரும் பொறுப்பிலிருந்தவர்களையும் பேரரசர் தவிர மற்றவர்களை உசாவுவதற்கு 'பன்னாட்டுப் போர்க் குற்றவாளிகளின் மேன்முறையீட்டு மன்றம்' (International War Crimes Tribunal) ஒன்று தோக்கியோவில் ஏற்படுத்தப்பட்டது. இதில் அமைச்சர்களும், ஜப்பானியத் தலைவர்களும் உசாவப் பட்டனர். தலைமையமைச்சர் தளபதி தோசோவும், மற்ற அறுவரும் மரண தண்டனை விதிக்கப்பட்டனர். மற்றும் பலர் கடுந்தண்டனைக்குட்பட்டனர். கீழ்த்திசை நாடுகளைச் சேர்ந்த ஏறத்தாழ 5,000 போர்க் குற்றவாளிகள் உள்நாட்டு நயன்மை மன்றங்களில் உசாவப்பட்டுத் தண்டனையடைந்தனர்.

ஜப்பான் 1914ஆம் ஆண்டுக்குப் பின் கைப்பற்றிய எல்லா நாடுகளையும் இழக்க வேண்டியதாயிற்று. இதன்படி சீனக் குடியரசு, மஞ்சூரியா, தைவான், பெசுகடோரசு முதலிய இடங் களையும், உருசியா 1904-ல் ஜப்பான் கைப்பற்றிய தென் சக்காலினையும் பெற்றன. மேலும் உருசியாவுக்கு வடசீனாவிலும், மஞ்சூரியாவிலும் சில உரிமைகளை வழங்கவும், குர்லித்தீவுகளைத் திரும்பப் பெறவும், யால்டா உடன்படிக்கை வழிசெய்தது. பசிபிக்தீவிலுள்ள போனின், இரியூகியூ, மரீயானா, மார்சல், கரோலினா முதலிய தீவுகள் நேசநாடுகளின் கண்காணிப்பின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. இப்பொழுது ஜப்பான் தன் சொந்தத் தீவுகளிலேயே வாழ வேண்டியதாயிற்று. 1940-ல் பேரரசு எனும் பட்டத்துடன் பல நாடுகளை ஆண்ட ஜப்பான் இரண்டாம் உலகப்போருக்குப் பின் சுருங்கிவிட்டது. ஏறத்தாழ இப்பொழுது அதன் நிலப்பரப்பு கலிபோர்னியா அளவேயாகும். இதில் போருக்குப் பின் உடனடியாகக் காணப்பட்ட வேளாண் மைக்குத் தகுதியான நிலப்பரப்பு மொத்தத்தில் 18% ஆகும். இவ்வாறு சுருங்கிவிட்ட இந்த நிலப்பரப்பில் ஜப்பான் முன்னரே தன்னிடமுள்ள மக்கள் தொகையோடு, கடல் கடந்து சென்றிருந்த 65 இலக்கம் ஜப்பானியரையும் வந்தேறிகளா யேற்றுப் புதுவாழ்வு அளிக்கவேண்டியதாயிற்று.

நேசநாடுகளின் தீர்மானங்களில் ஒன்றான ஜப்பானின் படை யொழிப்புத்திட்டத்தின்படி ஏறத்தாழ 40 இலக்கம் ஜப்பானியப் படையினர் கலைக்கப்பட்டனர். படையாட்சி முறையும், படை யாட்சித்துறையும் ஜப்பானிலிருந்து அடியோடொழிக்கப்பட்டன. நேசநாடுகளின் உயர் தளபதியான மெக்கார்தரும், மற்றவர்களும் ஜப்பான் சுவிட்சர்லாந்தைப்போலாவது ஒரு தற்காப்புப்படையை வைத்துக்கொள்ளலாமெனக் கூறினர். ஆனால், நேசநாடுகள் அதனையேற்கவில்லை. படையே வைத்திருக்கக் கூடாதென்றும்,

போரையே தொடங்கக் கூடாதென்றும், ஜப்பானிய அரசியல் சட்டத்திலேயே தீட்டும்படி கூறினர்.

## பொருளியல், குமுகச் சீர்திருத்தங்கள்

### தொழிற் சீர்திருத்தங்கள்

அமெரிக்காவில் கூடிய அரசியலறிவியலார் கூட்டமொன்றில் ஜப்பான் போரில் ஈடுபடுவதற்கான கரணியங்கள் ஆராயப் பட்டன. ஜப்பானியப் படைவீரக் குடும்பத்தாரின் வீர உணர்ச் சியும், அவர்களால் கைப்பற்றப்பட்ட அமைச்சரவையின் போக்கும், அமைச்சரவைக்கும், அரசியல் கட்சிகளுக்கும் பின்னணி யாக நின்ற சைபத்சு குடும்பத்தார் தங்கள் நலத்தைப் பாது காத்துக்கொள்ள அவற்றின் கவனத்தைப் போர்க்களம் நோக்கித் திருப்பியதுமேயாகும் என்பது இவ் வறிஞர்களின் கருத்தாகும். ஆகவே ஜப்பானிலுள்ள ஒருசில பெரும் பணக்காரக் குடும்பங் களின் செல்வாக்கை ஒழித்துவிட்டால் அதன் பொருளியல் நாடு முழுவதும் சமமாகப் பரவுமென இவர்கள் அறிவுரை கூறினர். இதனால் சைபத்சு குடும்பங்களிலுள்ள செல்வங்கள் பறிக்கப்பட்டு அதன் அதிகாரத்திலிருந்த எல்லாத் தொழில்களையும் நாட்டின் சொத்தாக்கத் தீர்மானித்தனர். அதற்காக கீழ்க்கண்ட பொரு ளியல், குமுகாயச் சீர்திருத்தங்களை ஜப்பானில் கொண்டு வந்தனர். தொழிலாளர்களின் இடர்ப்பாடுகளை நீக்கி, அவர் களுக்குத் தன்னிறைவு வாழ்க்கையை அளிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1935-ல் அமெரிக்க ஒன்றிய நாடுகளில் நிறைவேற்றப்பட்ட 'தேசியத் தொழிலாளர் நலச் சட்டம்' (National Labour Relations Act) என்பதனைத் தழுவி ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டது. அதன்படி புதிய தொழிற்கழகச் சட்டங்கள் நிறை வேற்றப்பட்டன. இதனால் தொழிற் கழகங்கள் யாவும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதுவரை ஏற்பிற்காகப் போராடிக்கொண் டிருந்த ஜப்பானியத் தொழிற் கழகங்களின் முன்னணியில் நின்ற பொதுவுடைமைச் சார்புள்ள கழகங்கள் யாவும் புதுவாழ்வு பெற்று, 1946-ல் 'மே நாள்' விழாவைச் சிறப்பாகக் கொண்டாடின. இதனை வாய்ப்பாகக்கொண்ட பொதுவுடைமைக் கட்சியினர் ஜப்பானியத் தொழிலாளர் இயக்கங்களில் பெரும் பங்கேற்று வளர்ச்சியடைந்தனர். இதனையறிந்த அமெரிக்கத் தளபதி மெக்கார்தர் தன் நாட்டிற்கு எதிரான பொதுவுடைமைக் கட்சியைத் தானே வளர்ப்பதற்குக் கரணியமாய் இருப்பதை யெண்ணி வருந்தினர். சனவரி, 1947-ல் தொழிலாளர் இயக் கங்களை ஒடுக்குவதற்காக உத்தரவுகளைப் பிறப்பித்தார். தொழி லாளர் இயக்கங்கள் வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவதையும்,

அரசியல் கொள்கைகள் தொழிற் கழகக் கொள்கைகளுடன் கலப்பதையும், அதனை வாய்ப்பாக வைத்துக்கொண்டு பொதுவுடைமைக் கட்சித் தலைவர்கள் தொழிற் கழகங்களுக்கும் தலைவராகி அவற்றின் அடிப்படை நோக்கங்களைத் தங்கள் அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதையும் கண்டித்தார். மெக்கார்தர் ஜப்பானிய அரசியல் பொறுப்பைத் தான் ஏற்ற போதிலும், தன்னுடைய கொள்கைகளின்படி அதனை நடத்திச் செல்ல ஜப்பானியரையே பணித்தார். ஜப்பானில் பாராளுமன்ற ஆட்சி முறையில் சமமான அரசியல் நிகராண்மை ஏற்படவேண்டுமானல் முதலில் அதன் பொருளியலும் சமமாக நாடு முழுவதும் பங்கிடப்பட வேண்டுமென்பது மெக்கார்தரின் கொள்கையாம். இதனல் சைபத்சு குடும்பங்களின் ஆளுமையில் இருந்த பெருந் தொழிலகங்களும், வைப்பகங்களும், போக்குவரத்து நிறுவனங்களும், மற்றவைகளும் அரசால் கைப்பற்றப்பட்டன. பிறகு அவை பொதுமக்களுக்கு விற்கப்பட்டுவிட்டன. அத்தோடு அவர்களின்மீது வழக்குகள் தொடரப்பட்டு உசாவல்களும் செய்யப்பட்டன. அவர்களின் சொத்துக்களுக்குக் கணக்கு வழக்குகள் ஒப்புவிக்கப்பட்டன. இவ்வாறு சைபத்சு குடும்பத்தார் மேசிப் புரட்சியிலிருந்து, இரண்டாம் உலகப் போர் வரை ஏறத்தாழ முக்கால் நூற்றுண்டுவரை தம்முடைய செல்வாக்கால் ஜப்பானிய குமுகப் பொருளியல், அரசியல் நிலைமைகளை ஆட்டிப்படைத்த வன்மையினை மெக்கார்தர் அடியோடு ஒழித்து, அவர்களின் மரபு வழிச் சொத்துரிமையைப் பறித்தார். இதனல் ஜப்பானியப் பொருளியலும், ஆக்க வளர்ச்சிகளும் ஓரளவு பன்முகப் படுத்தப்பட்டன.

திசம்பர், 1947-ல் 'பொருளியலைப் பன்முகப்படுத்தும்' சட்டமொன்று கொண்டுவரப்பட்டது. இதன்படி பல தொழிலகங்களும், நிலையங்களும் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவ்வாறு எடுத்துக்கொள்ளும்போது சொந்தக்காரர்களுக்கு அவற்றின் மதிப்பீட்டிற்கேற்ற தொகைகள் நீண்டகால ஆவணங்கள் மூலமாக வழங்கப்பட்டன. போர்க் குற்றவாளிகள் என மெய்ப்பிக்கப்பட்டவர்களும், தண்டனை அடைந்தவர்களும், ஐயப்பாட்டிற்காளானவர்களும் வைத்திருந்த தொழிலகங்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன. இத்தகைய பொருளியல் சீர்திருத்தங்களை மேற்கொண்டபோதிலும், ஜப்பான் நாட்டு நடுத்தரக் குடும்பங்களின் நிலைகளை உடனடியாக உயர்த்த முடியவில்லை.

நிலச் சீர்திருத்தங்கள்

திசம்பர், 1945-ல் நிலச் சீர்திருத்தங்களை உடனடியாக மேற்கொள்ளும்படி ஜப்பானிய அரசிற்கு மெக்கார்தர் உத்தர

விட்டார். ஆனால், இதனை முதலில் ஜப்பானியப் பாராளு மன்றத்தார் எதிர்த்தனர். ஆயினும் நிலச் சீர்திருத்தச் சட்டம் அக்டோபர், 1946-ல் நிறைவேற்றப்பட்டது. இச் சீர்த்திருத்தச் சட்டத்தின் அடிப்படை நோக்கம் பயிரிடுவோர் பலரும் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாயிருக்க வேண்டுமென்பதாகும். அவ்வாறு செய்வதால் பன்முகப் பொருளியல் வளர்ச்சி ஏற்பட்டுப் பாராளுமன்ற ஆட்சி முறையில் பலரும் பங்கேற்க முடியுமென்பது நேசநாடுகளின் நோக்கமாகும். நிலத்தை நேரடியாகக் கண் காணிக்காமல் குத்தகைக்கு விட்டுவிட்ட பெருநிலக்கிழார்களின் நிலங்களைக் கட்டாயமாக விற்கவும், நேரடியாகப் பயிரிட்டாலும் இரண்டரை ஏக்கருக்கு மேலுள்ள நிலக்கிழார்களின் நிலங்களைக் கட்டாயமாக விற்கவும் இச் சட்டம் வழி செய்தது. நேரடியாகக் கண்காணிக்கும் நிலக்கிழார்கள் தங்கள் சொந்தப் பயனுக்காக ஏழரை ஏக்கரையும், குத்தகை விடுவதற்கு இரண்டரை ஏக்கரையும், ஆகமொத்தம், பத்து ஏக்கர் நிலம் வைத்துக்கொள்ள இசைவளிக்கப்பட்டனர். ஆகவே இனி ஜப்பானில் பத்து ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தை எவருமே வைத்துக்கொள்ள முடியாதென்பது உறுதியாகிவிட்டது. இவ்வாறு அவர்களிடமிருந்து வாங்கிய நிலங்களைப் பயிரிடுவோருக்கு நேரடியாக விற்று, அதன் விலையை நீண்டகாலத் தவணையில் கொடுக்க ஏற்பாடு செய்தது. நிலங்களின் மதிப்பீட்டைப் போர் தொடங்குவதற்கு முன்பிருந்த சந்தை மதிப்பை ஒட்டியே கணித்தனர். இதனால் பெருநிலக்கிழார்கள் யாவரும் மிகக் குறைந்த மதிப்பை, அதுவும் பல தவணைகளில் பெறவேண்டியதாயிற்று. ஆயினும் பல ஆயிரக் கணக்கான ஏழை உழவர்கள் தங்களுக்குச் சொந்தமாக நிலங்களைப் பெற்றனர். குத்தகைக்கு விடப்படும் இரண்டரை ஏக்கர் நிலத்திற்கும் விளைச்சலில் 25% குத்தகையாகக் கொடுக்க வேண்டுமென்பது இந்த நிலச் சீர்த்திருத்தச் சட்டத்தால் உறுதியாக்கப் பட்டுவிட்டது. எனவே மிகக் குறுகிய காலத்தில் உழவர்கள் யாவரும் கடனின்றி வாழ்ந்தார்களெனலாம்.

இத்தகைய நிலச் சீர்த்திருத்தச் சட்டத்தால் 87% நிலச் சொந்தக்காரர்களானார்கள். பயிரிடும் நிலத்தின் பரப்பும் அதிகரித்தது. 1955ஆம் ஆண்டு ஜப்பானில் பயிரிடப்பட்ட மொத்த நிலத்தின் பரப்பு 1,02,50,000 ஏக்கர்களாக உயர்ந்தது. ஆயினும் விளைப்புத்திறன் குறைந்தே காணப்பட்டது. இதற்குக் கராணியம் வரிகளுக்கு அஞ்சி உழவர்கள் தங்களின் சரியான விளைச்சலைக் கணக்குக் காட்டவில்லை. நிலச் சீர்த்திருத்தத்தால் ஆண்டான், அடிமை என்ற வாழ்க்கை முறை நாட்டுப்புறங்களில் ஒழிந்து ஒவ்வொருவரும் தன்னிறைவும், தன்னம்பிக்கையும்

கொண்டு குடியாட்சி முறையில் அரசியலை நடத்தும் மனப்பக்குவத்தை அடைவார்கள் என நம்பப்பட்டது. இந்த நம்பிக்கை முழுதுமாகப் பொய்த்திடவில்லை.

## கல்விச் சீர்திருத்தங்கள்

மக்களாட்சி முறை வளர்ச்சிக்கு அடிப்படையாக உதவுவது பொருளாதாரம் என்றாலும், சீர்த்திருத்தங்களை ஏற்பதற்கும், கருத்துக்களை செப்பனிட்டுச் செயல்படுத்துவதற்கும், அதற்குத் தகுந்த கல்விமுறைகள் அமைய வேண்டும். எனவேதான் நேச நாடுகள் ஜப்பானின் கல்விமுறையையும் சீர்த்திருத்தி அமைத்தன. முதலில் சிறந்த ஆசிரியர்களையும், பாடவல்லுநர்களையும் தேர்ந்தெடுத்து, அவர்கள் ஜப்பானியக் கல்விக்கூடங்களின் உலக சமைதிக்கும், குடியாட்சி வளர்ச்சிக்கும், உலக உடன்பிறந்தார் பாசத்திற்கும் கால்கோள்கொண்டு புதிய கல்விமுறைகளை மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறைகளில் பயிற்சியளிக்கப்பட்டனர். இதற்கு முன்பாக ஆளுமை வெறியைக்கிளப்பி, ஜப்பானைத்தவிர வேறு நாட்டைப்பற்றியோ, தேசியத்தைப்பற்றியோ, மக்களைப் பற்றியோ கவலை கொள்ளாமல் நாடு கவரும் நஞ்சையே மாணவர் மனதில் வேரூன்றச்செய்த ஆசிரியர்கள் யாவரும் நீக்கப்பட்டனர். குறிப்பாக ஆசிரியர்கள் யாவரும் அரசாங்க ஊழியர்களாதலால் அவர்கள் பேரரசர் பத்தியும், ஆட்சியின் கொள்கையையும் அப்படியே ஏற்பவர்களாக இருந்தார்கள். எனவேதான் மிகாடோவோ 'கடவுள்' என்றும், ஜப்பானிய இனமே உலகத்தில் மிகவுயர்ந்த இனமென்றும், மற்ற உலக இனங்கள் யாவையும் ஆளப் பிறந்ததும் ஜப்பானிய இனமே என்றும் இவர்கள் மாணவர்க்குக் கற்பித்தார்கள். மேலும் ஜப்பானியப் பள்ளிகளில் அதன் பண்டையக்கால வீரவரலாறும், அரச பத்தியும் தவிர வேறெதுவும் கற்பிக்கப்படவில்லை. ஜப்பானியக் கல்விக் கூடங்கள் தேசியமயமாக்கப்பட்டு, அதன் கல்விமுறையையும், பாடநூல்களையும் அரசாங்கமே வகுத்தளித்ததால் இவற்றைத் தவிர வேறு எண்ணங்கள் இளம் ஜப்பானியத் தலைமுறையினர் உள்ளங்களில்ஊறவில்லை. இத்தகைய கல்வி முறையை அடியோடு மாற்றியமைக்கும் பணியிலீடுபட்ட மெக்கார்தர் நேசநாடுகளின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டநூல்களைத் தவிர மற்றவற்றை நீக்கிவிட்டார். இத்தகைய கொள்கைகளில் மன நாட்டமும், பயிற்சியுமற்ற ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்துவிட்டார். பழைய கல்வி முறையில் ஆறு அகவைக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வியும், ஐந்து ஆண்டுகள் வரை நடுத்தரக் கல்வியும், மூன்றாண்டுகள் உயர்நிலைப் பள்ளிக் கல்வியும், மூன்று அல்லது நான்காண்டுகள் பல்கலைக்கழகக் கல்வியுமாக இருந்ததை மெக்கார்தர் ஒழித்து

விட்டார். ஏனெனில் இம் முறையினால் கல்வி வளர்ச்சி ஏற்படாமல் தேக்கமும், உலகத்தோடு போட்டியிட்டு முன்னேற முடியாத நிலையுமேற்பட்டது.

புதிய கல்விச் சீர்த்திருத்தத்தால் அமெரிக்க முறைப்படி கல்வி கற்பிக்கப்பட்டது. தொடக்கக் கல்வியும், நடுத்தரக் கல்வியும் ஒன்பதாண்டுகளாக்கப்பட்டு, இது கட்டாயக் கல்வியாக்கப் பட்டது. பின்னர் ஆறாண்டுகள் உயர்நிலைக் கல்வியும், நான்காண்டுகள் பல்கலைக்கழகக் கல்விமுறையுமேற்பட்டது. கல்வியைப் பன்முகப்படுத்துவதற்காக நாடெங்கிலும் பள்ளிகளும், பல்கலைக்கழகங்களும் அமைக்கப்பட்டன. மாணவர்கள் கண் மூடித்தனமாகக் கட்டாயத்தின் பேரில் பாடங்களைக் கற்பதற்குப் பதிலாக அவர்களின் விருப்பத்திற்கேற்பப் பாடங்கள் கற்பிக்கப் பட்டன. நகராண்மைக் கழகங்கள் தனிப் பள்ளிகள் வைத்து நடத்த அனுமதிக்கப்பட்டன. முன்பு இவைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு யாவும் அரசாங்கத்தாரால் எடுத்துக்கொள்ளப் பட்டதை நாம் அறிவோம். பொதுவாக எல்லாக் கல்விக் கூடங்களிலும் மாணவரின் மனநிலை நேச நாடுகளின் கொள்கையின்படி வளர்க்கப்படுகின்றதா என்பது கண்டிப்பாகக் கண்காணிக்கப்பட்டது. மேற்கத்திய அறிவியல்களும், புதினங் களும் ஜப்பானியக் கல்வி முறையில் அவ்வளவாகப் புகுத்தப்பட வில்லை. மேற்படிப்பிற்காக அமெரிக்கா போன்ற நேசநாடுகளுக்குச் செல்ல ஜப்பானிய இளைஞர்கள் அனுமதிக்கப்படவில்லை. அதைப் போலவே மற்ற நாட்டவரும் ஜப்பானுக்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை. ஆனால், இந்நிலை 1948ஆம் ஆண்டுக்குப் பின் தளர்த்தப்பட்டு அமெரிக்கரும், மற்ற ஐரோப்பியரும் ஜப்பானிய நாட்டோடு எல்லா விதத்திலும் உறவு கொண்டார்கள். இதனால் போருக்கு முன் எழுபதாக இருந்த பல்கலைக்கழகங்கள் போருக்குப் பின் இருநூறாக உயர்ந்தன.

### அரசியல் சீர்திருத்தங்கள்

நேசநாடுகள் ஜப்பானைப் பாராளு மன்ற ஆட்சி முறையில் ஆள அதன் மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதைத் தன் அடிப்படை நோக்கமாகக் கொண்டிருந்தன என்பதை அறிவோம். அதற்கேற்ப ஜப்பானில் நேசநாடுகளின் நோக்கங்களைத் தங்கள் கொள்கை களாகக் கொண்ட அரசியல் கட்சிகளைத் தேர்ந்தெடுப்பதும், வளர்ப்பதும் நேசநாடுகளின் முகாமைப் பணியாயிற்று. இச் சமை யத்தில் ஜப்பானிலிருந்த 'பேரரசராட்சி உதவிக் கழகம்' மிகச் சிறந்த வலுவுள்ள கழகமாக விளங்கியது. இதைத் தவிர லிபரல் கட்சி, முன்னேற்றக் கட்சி ஆகிய இரண்டிலுமிருந்த உறுப்பினர்களில்

அரசு அலுவலகங்களில் இருக்கக்கூடாதென்றும் தடை விதித்தார். அரசுப் பணியாளர்கள் அம் மதத்தைப் பின்பற்றவோ அல்லது பரப்பவோ கூடாதென உத்தரவிட்டார். இந்த உத்தரவை அடிப்படையாகக் கொண்டு பேரரசரும், இனி தான் சிண்தோ சமயத்தைப் பின்பற்றுவதில்லை யென்று சனவரி, 1946-ல் தமது பேரறிக்கை மூலம் மக்களுக்கு அறிவித்தார். மேலும் தனக்கு இருக்கும் 'தெய்விகத் தன்மையையும்' கைவிடுவதாகவும் கூறினார். இதனால் ஜப்பானிய மக்களின் நெஞ்சங்களில் இதுவரை ஊறிக் கிடந்த 'பேரரசர் கடவுள் வழிவந்தவர்' என்ற கொள்கையும், 'கடவுளால் தங்கள் நாடு ஆக்கப்பட்டது' என்ற கொள்கையும், 'தாங்கள்தான் உலகிலேயே உயர்ந்த இனத்தவர்' என்ற கொள்கையும், 'படைகொண்டு மற்ற நாடுகளை வெல்லும் உரிமை தங்களுக்கு உண்டு' என்ற கொள்கையும் மறைந்து நாமும் உலக மக்களோடு மக்களே; எல்லாரும் சமமானவர்களே; எந்தப் பதவிக்கும் எவரும் மக்களாட்சி முறைப்படி வரலாமென்ற எண்ணங்கள் தோன்றி வளர்ந்தன.

இதற்குப் பிறகு மெக்கார்தர் யார் யார் ஜப்பானைப் படை வெறிக்கும், போர் வெறிக்கும் தூண்டினார்களோ அவர்களை யெல்லாம் அரசுப் பணியிலிருந்து நீக்கும்படி உத்தரவிட்டார். அவ்வுத்தரவின்படி ஜப்பான் சீனாவோடு போர் தொடங்கிய 1937ஆம் ஆண்டுக்குப் பின்னால், அரசுப் பணியில் சேர்ந்த பலர் வேலை நீக்கம் செய்யப்பெற்றனர். இவ்வாறு வேலை நீக்கம் செய்வதற்காகப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பர். மினோபியின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு தன் உசாவலுக்குப்பின் ஓரிலக்கத்து எண்பதாயிரம் பேர்களை வேலை நீக்கம் செய்தது. அவர்களில் படையினரும் 'பொது' துறை அதிகாரிகளும், ஆசிரியர்களும், வணிகர்களும் இருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்களில் 10% நீக்கப்பட்டனர். இதற்குப் பின்தான் ஜப்பானில் பாராளுமன்ற முறையில் பொதுத் தேர்தல் நடத்த உத்தரவிட்டது. இந்தத் தேர்தலில் ஆறு பெரிய அரசியல் கட்சிகளும், பல உதிரிக் கட்சிகளும் கலந்துகொண்டன. மே, 1946-ல் தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலில் லிபரல் கட்சி 139 இடங்களையும், முன்னேற்ற கட்சி 93 இடங்களையும், சோசியல் டெமாக்ரடிக் கட்சி 92 இடங்களையும், கூட்டணி 14 இடங்களையும், பொதுவுடைமைக் கட்சி 5 இடங்களையும் பெற்றன. இதனால் லிபரல் கட்சியே பாராளுமன்ற முறைப்படி அமைச்சரவையை அமைக்கத் தகுதி வாய்ந்ததாயிற்று. அதன் தலைவரான சிகேரு யொசிதா அமைச்சரவையை அமைக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

சிகேரு யொசிதா அமைச்சரவை (மே, 1946—மே, 1947)

இவர் முன்னேற்றக் கட்சியிலிருந்த சிலரைத் தன் அமைச்சரவைக்குத் தேர்ந்தெடுத்துக்கொண்டு கூட்டமைச்சரவையை அமைத்துக்கொண்டார்.

## 1947 ஆம் ஆண்டு புதிய அரசியல் சட்டம்

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை மேற்கத்தியப் பாராளுமன்ற முறைப்படிச் செயல்படத் தொடங்கியது. இதற்கான புதிய அரசியல் சட்டங்களைத் தொகுத்தளிக்கும்படி மெக்கார்தர் தன்னுடைய அலுவலகத்திலுள்ளோரைக் கேட்டுக் கொண்டார். அதன்படியே நேசநாடுகளின் படிநிகராளிகள் பாராளும் மன்ற முறைப்படியும், நேசநாடுகளின் கொள்கைகளின் படியும் ஒரு மாதிரிச் சட்டத் தொகுப்பைத் தயாரித்துக் கொடுத்தார்கள். அதனைப் பேரரசரும், தலைமையமைச்சர் சிகேரு யொசிதாவும் அப்படியே ஏற்று, இங்குமங்குமாக ஒருசில திருத்தங்களைச்செய்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினார்கள். இந்தப் புதிய அரசியல் சட்டம் அக்டோபர், 1946-ல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, மே, 1947ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தது. 1889ஆம் ஆண்டு மேசி மாமன்னரால் கொண்டுவரப்பட்ட அரசியல் சட்டமே மே, 1943ஆம் ஆண்டு வரை ஜப்பானில் நடைமுறையிலிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இப் புதிய அரசியல் சட்டத்தில் பதினொரு படலங்கள் மிக எளிய சொற்றொடர்களாக எழுதப்பட்டிருக்கின்றன. இதில் மொத்தம் 103 சட்ட விதிகள் இருக்கின்றன. இது மேசி அரசியல் சட்டத்தைப் போலல்லாமல் முழுக்க முழுக்க வேறுபட்டுக் காணப்படுகிறது.

இந்தப் புதிய அரசியல் சட்டத்தில் காணப்பட்டும் அடிப்படையான மிக முகாமை அரசியல் தத்துவங்கள் மூன்று. ஒன்று, மக்களின் இறைமாட்சி; இரண்டு, அடிப்படையுரிமைகள்; மூன்று, போரை ஒழித்தல் ஆகியவையாம். உலக அரசியல் சட்டங்கள் எல்லாவற்றிலும் காணப்படாத ஒரு பெரிய அதிசயம் ஜப்பானிய அரசியல் சட்டத்தில் காணப்படுகிறது. அதுதான் போரை ஒழித்தல் அல்லது போரைத் துறத்தல் என்பதாகும். இதுவரை ஈடு இணையற்ற இறைமாட்சியைப் பெற்றிருந்த பேரரசர் மக்களின் நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியவரானார். அம் மாபெரும் இறைமாட்சி இச் சட்டத்தால் மக்களுக்கு அளிக்கப்பட்டுவிட்டது. மக்களின் உரிமைக் குரலே நகர மன்றத் தேர்தலிலிருந்து நாடாளுமன்றத் தேர்தல் வரை ஒலித்தது. மொத்தம் இருக்கின்ற 103 விதிகளில் முப்பத்தொரு விதிகள் மக்களின் அடிப்படையுரிமைகளைப் பற்றியும், அவர்களின் கடமைகளைப்

பற்றியும் பேசுகின்றன. அவ்வுரிமைகள் என்றென்றும் நிலைத்திருப்பதும், யாவராலும் மீறப்படாதவையுமாகும் என இவ்வரசியல் சட்டம் கூறுகிறது. ஒவ்வொரு ஜப்பானியக் குடிமகனுக்கும் அரசியல், குமுகம், பொருளாதாரம் முதலிய துறைகளில் ஏற்றத் தாழ்வற்ற சமமான நிலைகளை வழங்கவும், அகவையடைந்த எல்லாருக்கும் ஒப்போலையுரிமை அளிக்கவும், சுதந்தரம், சமத்துவம், நல்வாழ்வு முதலியவற்றை நல்கவும், இந்த அடிப்படையுரிமைச் சட்டங்கள் காப்புறுதியளிக்கின்றன.

'போரை ஒழித்தல்' என்பதை ஒரு கொள்கையாக வைத்திருக்கலாமேயொழிய, அதை ஓர் அரசியல் சட்ட விதியாக இதில் சேர்த்திருக்கத்தேவையில்லை. ஆனால், அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது விதி,'ஜப்பானிய மக்கள் தங்கள் தேசியத்தின் இறைமாட்சியாகப் பெற்றிருப்பது யாரையும் அச்சுறுத்தாமையும், வலுக்கட்டாயப்படுத்தாமையும், பன்னாட்டிற்கும் அமைதி ஏற்படும் வண்ணம் நயன்மையின் பெயராலும், தம் தேசியத்தின் பெயராலும் உண்மையாகப் பாடுபடுவதுமேயாகும்' எனக் கூறுகிறது. இதையே போரை ஒழித்தல் என்ற தலைப்பில் அரசியல் சட்டம் குறிப்பிடுகிறது. அடுத்தபடியாகத் தரைப்படை, நாவாய்ப்படை, வான்படை ஆகியவற்றையும், போர்க் கருவிகளையும் ஒழித்துப் பன்னாட்டு அமைதியைக் காக்கப் பாடுபடவேண்டுமென இச்சட்டம் கூறுகிறது. ஆயினும், இத்தகைய படைகளை ஜப்பான் தன் பாதுகாப்பிற்கு வைத்துக் கொள்ளலாம் என்பதும், இவற்றைக் கொண்டு பிற நாடுகளை அச்சுறுத்தக்கூடாது என்பதும்தான் இந்த ஒன்பதாவது விதியின் இன்றைய பொருளாகும்.

ஜப்பானிய அரசியல் சட்டம் எழுதப்பட்ட, நெகிழாத, திடமான, பாராளுமன்ற முறைப்படி செய்யப்பட்ட சட்டங்களாகும். எனவே, நாட்டின் எல்லாத் துறைகளும், நாடாளுமன்றத்திற்குட்பட்டு நடக்கவேண்டும். அரசர் பெயரளவுக்குத் தான் நாட்டின் தலைவராக, மக்களின் ஒற்றுமைச் சின்னமாக விளங்குவார்; அவருக்கு அரசியலைப் பொறுத்தவரையில் எவ்வித அதிகாரமும் கிடையாது; நாடாளுமன்றம் நிறைவேற்றுகின்ற எல்லாச் சட்டங்களுக்கும் அரசர் தலையசைக்கவேண்டும்; அவர் அறிவுரை கூறலாம்; ஆனால், அவற்றை ஏற்றுத்தான் ஆகவேண்டுமென்ற விதி கிடையாது; அமைச்சரவையின் உத்தரவின்பேரில் தான் அவர் எத்தகைய செயலிலும் ஈடுபடவேண்டும்; அரண்மனையிலிருந்து நாடாளுமன்றத்தின் உத்தரவின்றி, எந்தப் பொருளையும் ஒருவருக்குக் கொடுப்பதோ, நன்கொடையளிப்பதோ அல்லது பிறரிடமிருந்து பெறுவதோ நன்கொடை வாங்குவதோ கூடாது

என ஒன்றுமுதல் ஆறுவரையிலான அரசியல் சட்ட விதிகள் பேரரசரைப் பற்றி விவரிக்கின்றன.

1889ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஜப்பானிய அரசியல் சட்டம் மாமன்னரால் கொண்டுவரப்பட்டது. அதில் மாமன்னர் அச் சட்டத் தொகுப்பை மக்களுக்கு அளிப்பதாகக் கூறுகிறார்; அதில் அவரின் தெய்விகம் பளிச்சிடுகிறது; பேரதிகாரங்கள் காணப் படுகின்றன; கிழார்களவைக்குத் தானே எல்லா உறுப்பினர்களை யும் அமர்த்துகிறார்; அமைச்சர்கள் யாவரும் கிழார்களவையி லிருந்தே வருகிறார்கள்; ஒப்போலையுரிமை ஒருசிலருக்கே அளிக்கப் பட்டிருக்கிறது; மாமன்னர் நாடாளுமன்றத்தைக் கூட்டாமல் விட்டாலும், மக்களின் அடிப்படையுரிமைகளை மீறினாலும், அல்லது இவை போன்ற எத்தகைய மாபெரும் குற்றங்களைச் செய் தாலும், மாமன்னரின் தெய்விகத் தன்மைக்கு எதிராகத் தட்டிக் கேட்பது பாவமாகக் கருதப்பட்டது; ஆனால், 1947ஆம் ஆண்டின் புதிய அரசியல் சட்டத்திலோ, மக்களே அரசியல் சட்டத்தைத் தொகுத்து மாபெரும் இறைமாட்சியுடன் அடிப்படையுரிமைகளைப் பெற்று மாமன்னரையும், நாட்டையும் நடத்திச் செல்லும் நிலைக்குக் காணப்படுகின்றனர்; இங்கு மக்களே புனிதமானவர்கள்; அவர்களின் ஆட்சியே தெய்விகத் தன்மை பொருந்தியது; அது விரும்பினால் அரசரை அழைக்கலாம்; அறிவுரை கேட்கலாம்; இன்றேல் அதைத் தட்டிக் கேட்பதற்கு அரசருக்கு உரிமையில்லை.

இத்தகைய பாராளுமன்ற அரசியலில் எளியோரும் பயிற்சி பெறுவதற்காகத்தான் உள்நாட்டு ஆட்சி முறைகளை நேசநாடுகள் ஜப்பானின் நாட்டுப்புறங்களிலெல்லாம் ஏற்படுத்தின. அவைகளே கல்வி, சுகாதாரம், பொதுநலம், போக்குவரத்து முதலியவற்றை நடத்தத் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட படிநிகராளிகளை அமர்த்தின. இவ்வாறு ஏற்பட்ட தேர்தல் முறையும் அரசியல் பயிற்சியும் நாடாளுமன்றத்தையும், அமைச்சரவையையும் நடத்திச் செல்லப் பயன்பட்டன.

அரசியல் சட்டத்தில் கூறப்பட்டவண்ணம் நயன்மை, நிருவாகம், காவல் துறை முதலியனவும் அமைக்கப்பட்டன. இவ்வரசியல் சட்டத்தின் மிகவுயர்ந்த மன்றம் நாடாளுமன்ற மாகும். இதில் இரண்டு அவைகள் உள்ளன.

நாடாளுமன்றம் (Diet)

இதுவே ஜப்பான் நாட்டின் தலைவிதியை நிருணயிக்கின்ற மிக உயர்ந்த அவையாகும். இதில் உறுப்பினரவை, படிநிகராளிக ளவை என இரண்டு அவைகள் உள்ளன. இவற்றை முறையே

மேலவை, கீழவை எனக் கூறலாம். பேரரசர் இந்த இரண்டு அவைகளால் நிறைவேற்றப்படும் சட்டங்களை அமைச்சரவையைப் போலவே தானும் அனுமதிப்பார். ஆனால், அவருக்கு இம் மன்றத்தைக் கட்டுப்படுத்தும், அல்லது சட்டங்களைத் தள்ளிவிடும் பேரதிகாரம் எதுவும் இல்லை. அரசரும், அமைச்சரவையும் நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டவர்களாவர். நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படுகின்ற சட்டங்களின்படிதான் அமைச்சரவை செயல்படும். எதிர்க்கட்சிகள் குறைகளை எடுத்துச் சொல்ல உரிமைகளைப் பெற்றிருக்கின்றன. நாடாளுமன்றத்தில் பெருவாரியான உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் தலைவரே தலைமையமைச்சராய் வருவார். நாடாளுமன்றத்தின் நம்பிக்கையை இழந்தால் அமைச்சரவை கலைக்கப்படும்.

உறுப்பினரவை (House of Councillors)

புதிய அரசியல் சட்டப்படி ஜப்பானில் இரண்டு அரசியல் சட்டப் பேரவைகள் அமைக்கப்பட்டன. ஒன்று, 'உறுப்பினரவை' (House of Councillors); இதில் 250 உறுப்பினர்கள் இருப்பார்கள். இதில் பாதிப்பேர் மூன்றாண்டுக்கொருமுறை தேர்தல் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப் பெறுவார்கள். ஆனால், இவ்வவையில் இத்தனை உறுப்பினர்தான் இருக்கவேண்டுமென்று அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. இந்த அவை பழைய 'கிழார்களவை' (House of peers) யைப்போல் மேலவையாக இயங்குகிறது. இதிலுள்ள 150 பேர் தொகுதி வாரியாக 46 தேர்தல் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராவர். எஞ்சியுள்ள 100 பேர் தொகுதி அடிப்படையில் இல்லாமல் நாடு முழுவதிலுமிருந்து தேசிய அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டவராவர். ஒவ்வொரு ஒப்போலையருக்கும் தொகுதியடிப்படையில் ஒரு வாக்குச் சீட்டும், தேசிய அடிப்படையில் ஒரு வாக்குச்சீட்டும் கொடுக்கப்படும். அவை மேற்கூறிய உறுப்பினரவையில் இருவகை உறுப்பினரையும் தேர்ந்தெடுக்கப் பயன்படுத்தப் பெறும். இதன் ஆயுட்காலம் ஆறு ஆண்டுகள்.

இந்த அவையை எக்காரணத்தை முன்னிட்டும் கலைக்க முடியாது. ஏனெனில் மூன்றாண்டுக்கொருமுறை பாதிப் பேர் விலகுவதும், அவர்களுக்குப் பதிலாக பாதிப்பேர் தேர்ந்தெடுக்கப்பட்டும் வருவதால் தொடர்ந்து இந்த அவை கலைக்கப்படாமல் இருக்கிறது. இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்குத் தொகுதி, இனம், பால், கல்வி, சொத்து முதலியவற்றின் பெயரில் எத்தகைய தடையும் கிடையாது. முப்பது அகவையடைந்த எவரும், எத்தொகுதியிலும் வேட்பாளராக நிற்கலாம், ஆனால்,

கீழவையில் உறுப்பினராய் இருப்பவர் வேட்பாளராக நிற்கக் கூடாது. ஒரே சமையத்தில் இரண்டு அவைகளுக்கும் வேட்பாளராக நிற்கக் கூடாது. இவர்களுக்குப் பேச்சுரிமையும், ஆண்டுச் சம்பளமும், மற்ற வசதிகளும் உண்டு. ஓய்வுக்கால ஊதியமும் உண்டு. இந்த அவையிலுள்ளோர் ஏதாவதொரு குழுவில் உறுப்பினராய் இருப்பர். இந்த அவை ஆண்டுக்கொருமுறை திசம்பரில் கூடும். அன்று பேரரசர் தொடக்கவுரை நிகழ்த்துவார். இது தவிர அவசரக் காலங்களில் அடிக்கடி கூடுவதுமுண்டு. கீழவை கலைக்கப்பட்டபின் இந்த அவை நடந்து கொண்டிருக்கக் கூடாது. அமைச்சரவை விரும்பினுல் இது தொடர்ந்து நடக்கும். இந்த அவை தலைவர் ஒருவரையும் (Presiding Officer), துணைத்தலைவர் ஒருவரையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

இந்த அவைக்கு ஆட்சிமுறைப் பணிகள், நயன்மைமுறைப் பணிகள் எனப் பலவகைப் பணிகள் உண்டு. இதுவும் படிநிகராளிகளவையும் ஒரே விதத்தில் செயல் பட்டாலும் இவையிரண்டும் ஒன்றிணைந்தால்தான் எந்த ஒரு மசோதாவையும் சட்டமாக்க முடியும். பொதுவாக ஜப்பானின் அரசியல் சட்டப் பேரவைகளின் சட்டதிட்டங்களும், நடவடிக்கைகளும் மேற்கத்திய நாடுகளில் இருப்பதைப்போல் இருப்பதால் குடியாட்சி முறையின் பொதுவான பண்புகள் இவற்றில் காணப்படுகின்றன. கீழவையில் உள்ளது போலல்லாமல் இந்த அவையில் நாடு முழுவதிலுமுள்ள மக்களின் படிநிகராளிகள் நிறைந்திருப்பதால் பலதரப்பட்ட திறமை சாலிகளை இங்கு காணமுடிகிறது. இவர்களுள் பெரும்பாலார் தொழிற்சங்கங்களின் ஆதரவு பெற்றவர்களாகவும் பெயர் பெற்ற கட்சியினரால் தேர்ந்தெடுக்கப்பட்டவருமாவர். கீழவையிலிருந்து அனுப்பப்படுகின்ற தீர்மானங்களை மிக ஆய்ந்து திறமையாகச் செயல்படுத்தும் தன்மையை இம்மன்றம் பெற்றிருக்கிறது. ஆனுல், ஜப்பானியர்கள் இந்த அவையால் அவசர காலத்திற்குத் தேவையான சட்டதிட்டங்கள் தாமதிக்கப்பட்டு வருகின்றன என எண்ணுகின்றனர்.

### படிநிகராளிகளவை (House of Representatives)

ஜப்பானிய நாடாளுமன்றத்தின் கீழவையாகக் கருதப்படுவது இந்த இரண்டாவது பேரவையான 'படிநிகராளிகளவை' (House of Representatives) யாகும். இதில் மொத்தம் 467 உறுப்பினர்கள் இருக்கிருர்கள். இவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நான்காண்டுகள் வரை பதவி வகிப்பார்கள். இதனை வேண்டும் போது கலைத்துவிடலாம். இந்த உறுப்பினர்கள் யாவரும் நாடு முழுவதிலுமுள்ள 118 தொகுதிகளிலிருந்து

தேர்ந்தெடுக்கப்பட்டவராவர். ஒவ்வொரு தொகுதியிலும் மூன்றிலிருந்து ஐந்து உறுப்பினர் வரை மக்கள் தொகை அடிப் படையில் தேர்ந்தெடுக்கப்படலாம். அமாமித் (Amami) தீவுத் தொகுதியிலிருந்து மட்டும் ஒரே ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் படுவார். இவர்களை தேர்ந்தெடுப்பதற்கு ஒவ்வொரு ஒப்போலைய ருக்கும் ஒரு வாக்குதான் உண்டு. எனவே தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் ஐவராக இருந்தாலுங்கூட அத்தொகுதியில் ஒரு ஒப்போலையர் தம் வாக்கை ஒரு வேட்பாளருக்கு மட்டுமேதான் போடமுடியும்.

1950ஆம் ஆண்டுத் தேர்தல் சட்டப்படி இருபதகவை யடைந்த ஆண், பெண் அனைவருக்கும் ஜப்பானில் ஒப்போலையுரிமை யுண்டு. ஆனல், படிநிகராளிகளவைக்கு வேட்பாளராக நிற்பவர் இருபத்தைந்து அகவை நிரம்பியவராக இருக்கவேண்டும். அவர் எந்தத் தொகுதியில் தன் பெயர் ஒப்போலையர் பட்டியலில் காணப் படுகின்றதோ அந்தத் தொகுதியில் வேட்பாளராக நிற்க வேண்டும். குறைந்தது மூன்று மாதகாலமாவது அத் தொகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும். இத்தகைய கட்டுப்பாடு பல சமையங்களில் பெரும்பாலார்க்கு முட்டுக்கட்டையாக இருக்கின் றது. இப் பேரவையிலுள்ள உறுப்பினர்கள் யாவருக்கும் எல்லாவித உரிமைகளுமுண்டு. தனிப்பட்ட குற்ற வழக்குகளைத்தவிர மற்ற வற்றிற்காக மன்றம் நடந்து கொண்டிருக்கும்போது இவர்களைச் சிறை செய்யக் கூடாது. உறுப்பினரவை, படிநிகராளிகளவை ஆகிய இரண்டு அவையினருக்கும் இத்தகைய உரிமைகள் உண்டு. இவர்களுக்கு ஆண்டுச் சம்பளமும், போக்குவரத்து வசதிகளும், தினப்படியும் உண்டு. ஆனல், ஓய்வுக் கால ஊதியம் இல்லை.

இப் பேரவை சாதாரணமாகவும் அசாதாரணமாகவும் இரு வகைகளில் கூடும். சாதாரணமாக ஆண்டுக்கொருமுறை கூடும். இவ் வவையின் நான்கிலொரு பகுதி உறுப்பினர்கள் அவசரமாக மீண்டும் கூடவேண்டுமென்று விரும்பினல் நாடாளு மன்றம் இந்த அவையைக் கூட வைக்கும். இந்த அவை கலைக்கப்பட்டுவிட்டால் மீண்டும் குறிப்பிட்ட நாள்களுக்குள் பொதுத்தேர்தல் நடந்து அவை கூட்டப்பட்டு விடும். உறுப்பினரவையில் அவசரகாலங் களில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் இந்த அவையின் அனுமதி பெற்றபின்னரே சட்டமாகும். இந்த அவையின் செயல்களை நடத்திச் செல்வதற்கு அவைத்தலைவரும், அவைத் துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த அவையின் உறுப்பினர்களைக் கொண்ட பதினறு குழுக்கள் அமைக்கப்படும். அவை பெரும்பாலும் ஒவ்வோர் அமைச்சகம் அல்லது துறையின் செயல்களைக் கவனிக்கும். ஒவ்வோர் உறுப்பினரும் குறைந்தது

வுடைமைக் கட்சித் தலைவர்களைக் கொண்ட தொழிலாளர் நலக் கழகங்கள் 1947ஆம் ஆண்டிலும், 1949ஆம் ஆண்டிலும் வேலை நிறுத்தங்களையும், போராட்டங்களையும் தொடங்கின. அப் போராட்டங்கள் வன் முறைகளுக்கு வழிவகுத்ததால் மக்களாட்சி முறைக்கு மாறான அழிவுச் சக்திகளாகத் தொழிலாளர் நலக் கழகங்கள் கருதப்பட்டன. எனவே பொதுவுடைமைக் கட்சியை ஒடுக்குவதற்காக யொசிதா அமைச்சரவையும், நேசநாடுகளின் நிலையமும் பல அடக்கு முறைகளைக் கையாண்டன. பல தொழிற் கழகங்கள் கலைக்கப்பட்டன. இத்தகைய புரட்சிகள் படித்தவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், நடிகர்கள் முதலியவர்களை ஈர்த்தன. இதனால் மார்க்சியப் பொது வுடைமைக் கொள்கையில் படித்தவர்கள் யாவரும் ஈடுபாடு கொண்டனர். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகத் திலும் உள்ளவர்கள் பொதுவுடைமைக் கொள்கையில் தீவிர ஈடுபாடு கொண்டனர்.

சனவரி, 1950-ல் தீவிரப் பொதுவுடைமைவாதியும், மாவோ வோடு நெருங்கியிருந்தவருமான நொசாகா சான்சோ (Nosaka Sanzo) என்பவர் அமைதியான முறையில் புரட்சி செய்யும் (Peaceful Revolution) தன்னுடைய கொள்கைகளை வெளியிட்டார். இதனால் முப்பதிலக்கம் ஒப்போலையர்களில் 10% பொதுவுடைமைக் கட்சியினருக்கு வாக்களிக்க அணியமாயினர். இவரை உண்மை யான பொதுவுடைமைக் கட்சியின் நோக்கங்களைத் தன்னுடைய தாளிகையில் வெளியிடுமாறு பலரும் கேட்டுக் கொண்டனர். ஒடுக்கப்பட்டுள்ள ஜப்பான் எழுச்சி பெற வேண்டுமானால் உருசியப் பொதுவுடைமையைப் பின்பற்ற வேண்டுமென்றும், உடனடியாக நேச நாடுகளின் பிடியிலிருந்து விடுபட வேண்டுமானால் புரட்சி கரமான வன்முறைகளில் ஈடுபட வேண்டுமென்றும் கூறினார். இதனால் 1950-ல் அரசாங்கம் அவர்மீதும், அவரைப் பின்பற்றிய தலைவர்கள்மீதும் கடும் நடவடிக்கையை மேற்கொண்டது. பொதுவுடைமைக் கட்சி ஜப்பானியத் தேர்தலில் மிகக் குறைந்த அளவில் வெற்றி பெற்றாலும், அதன் கொள்கையின் வேகமும், விறுவிறுப்பும் ஜப்பான் முழுவதும் பரவியதோடு உலகத்தின் கவனத்தையும், குறிப்பாக நேச நாடுகளின் கவனத்தையும் ஜப்பான் வெகுவாகத் தன்பால் ஈர்த்தது. 1950ஆம் ஆண்டுக்குள் மாவோவின் கட்சி சீனாவில் பிரபலமடைந்து வெற்றி பெற்றது. இதனைத் தங்கள் முன்னோடியாகக் கொண்ட ஜப்பானியப் பொது வுடைமைவாதிகள் அமெரிக்காவின் ஆளுமையை ஒழித்துத் தங்கள் நாட்டையும் பொதுவுடைமை நாடாக ஆக்கத் தீர்மானித் தார்கள். அமெரிக்கா ஒரு முதலாளித்துவ நாடு; எனவே தம்மை

ஆட்டிப் படைக்கிறதெனஎண்ணிய ஜப்பானிய பொதுவுடைமை வாதிகள் அமெரிக்காவை வெறுக்கும் இயக்கங்களைத் தோற்று வித்தார்கள். மே, 1930-ல் பொதுவுடைமை வாதிகளின் தலைமையில் அமெரிக்கரை வெறுக்கும் இயக்கங்கள் யாவும் ஒரு மாபெரும் போராட்டத்தைத் தலைநகரான தோக்கியோவில் தொடங்கின. தோக்கியோவிலிருந்த அமெரிக்கர்கள் தாக்கப் பட்டனர். இதனையறிந்த நேச நாடுகளும், குறிப்பாக அமெரிக்காவும் 'பொதுவுடைமை வாதிகள் குடியாட்சிக்குப் பகைவர்கள்' எனக் கூறின. எனவே, அத்தகையோரை ஒடுக்கும் படி மெக்கார்தர் ஜப்பானிய அரசைக் கேட்டுக் கொண்டார். பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த பலர் அரசுப் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். ஆயினும் இனி, பொதுவுடைமைக் கட்சியைத் தங்களால் தடுத்து நிறுத்த முடியாது என அறிந்த அமெரிக்கர் ஜப்பானோடு உடன்படிக்கை செய்து கொண்டு ஜப்பானுக்கு அமைதியையும், விடுதலையையும் வழங்குவதாக உறுதியளித்தது.

## ஜப்பானின் விடுதலை (ஏப்பிரல், 1952)

ஜப்பானின் ஆட்சிப் பொறுப்பை மூன்றாண்டுகள் வரைதான் ஏற்று நடத்த வேண்டுமென்றும், அதற்குள்ளாக அவர்களுக்கு மக்களாட்சி முறையில் தங்களை ஆண்டுகொள்ளக் கற்றுக் கொடுத்துவிட வேண்டுமென்றும், நேச நாடுகள் முதலில் எண்ணின. மெக்கார்தரும் புதிய அரசியல் சட்டம் தீட்டப்பட்டு, அதன்படி பொதுத் தேர்தலும் நடத்தப்பட்டு மூன்றும் முறையாக அமைச்சரவையும் அமைக்கப்பட்டதற்குப் பின் ஜப்பானியருக்கு விடுதலை வழங்கிச் சமைதியை ஏற்படுத்தி விட்டு வெளியேறுவதே சிறந்த வழியெனக் கண்டார். அவ்வாறு வெளியேறு விட்டால் மீண்டும் ஜப்பானியர் மனத்தில் சுதந்தர உணர்ச்சியும், போர் வெறியும் உதித்துவிடும் என்பதை அவர் மே, 1950-ல் ஏற்பட்ட அமெரிக்க எதிர்ப்பியக்கங்களைக் கொண்டு நன்கு உணர்ந்து கொண்டார். ஆனால், நேசநாடுகள் தயாரித்த சமைதி உடன்படிக்கையை செருமனி ஏற்றுக்கொள்ளாததால் ஜப்பானும் ஏற்றுக் கொள்ளாது என எண்ணி வல்லரசுகள் 1950ஆம் ஆண்டுக்குப் பின்னும் ஜப்பானுடன் உடன்படிக்கை செய்து கொள்ள முன்வரவில்லை.

செப்டெம்பர், 1947-ல் ஆசுத்திரேலியாவின் விருப்பத்திற் கிணங்க தயாரிக்கப்பட்ட உடன்படிக்கையை உருசியா ஒப்புக் கொள்ள மறுத்து விட்டது. சீனாவும், தூரக் கிழக்கு நாடுகளின் சமைதி பிரச்சினைகளை ஆய்வதற்காகக் கூட்டப்பட்ட மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. பிரிட்டனும் அவ்வாறே

செய்து விட்டது. 1948ஆம் ஆண்டுக்குப் பின் ஜப்பானியர்கள் அமெரிக்கர்களின் தனியக்கறையுடன் தங்கள் நாட்டில் ஏற்பட்ட முன்னேற்றத்தை எண்ணி வியந்தனர். ஆனால், அதே நேரத்தில் ஜப்பானில் உருவாகி வந்த பொதுவுடைமையின் வேகம் ஜப்பானை உருசியாவின் பிடிக்கோ அல்லது பழையபடி படைவெறியர்களின் பிடிக்கோ ஆளாக்கிவிடுமோ என அஞ்சினர். தன்னுடைய கட்சி ஜப்பானில் வலுப்பெறுவதை அறிந்த உருசியா தானே ஒரு சமைதி உடன்படிக்கையைத் தயாரித்தளித்து, தன் கொள்கையை மறை முகமாக ஜப்பானில் புகுத்த விரும்பியது. எனவே தன்னை மன முவந்து ஜப்பான் ஏற்குமளவுக்கு அங்கு தன்னுடைய கட்சி வலிமை பெறும்வரை அதற்கு விடுதலையளிக்காமல் உருசியா பார்த்துக்கொண்டது. 1949ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர் தலில் பொதுவுடைமைக் கட்சி 35 இடங்களைக் கைப்பற்றியதை யறிந்த உருசியா ஜப்பானுடன் சமைதி உடன்படிக்கை செய்து கொள்வதைப் பெரிதும் விரும்பி மற்ற நேச நாடுகளை விரைவு படுத்தியது. ஆனால், அச் சமையத்தில் சீனு பொதுவுடைமை யாளர்களின் கைக்குச் சென்றதும் பீகிங் அரசைப் பிரிட்டனும், இந்தியாவும் அங்கீகாரம் செய்ததும் உருசியாவிற்கு மன மாற்றத்தை உண்டாக்கி விட்டது.

1950ஆம் ஆண்டு அமெரிக்கா தனிப்பட்ட முறையில் ஜப்பானோடு ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள விரும்பியது. அதற்கு முன்பாகச் சமைதி மாநாட்டைக் கூட்டி அதற்குப் பிரிட் டானியக் காமன்வெல்த் நாடுகளை அழைத்து ஜப்பானுக்கு விடுதலை வழங்குவதுபற்றியும், தான் ஜப்பானில் படைத்தளங்களை அமைத் துக்கொள்ளுவது பற்றியும் பேச விரும்பியது. இதற்கும் உருசியா முட்டுக்கட்டையிட்டது. பிறகு ஒரு புறத்தில் அமெரிக்காவும், மற்றொரு புறத்தில் உருசியாவும் ஜப்பானோடு தனித்தனியே உடன் படிக்கை செய்துகொள்ள விரும்பின. பிப்பிரவரி, 1950-ல் உருசியா திடீரெனத் தன் கருத்தை மாற்றிக்கொண்டு பொதுவுடைமைச் சீனுவோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டது. சீனுவும், உருசியாவும் ஜப்பானுக்கு விடுதலை வழங்காமல் பார்த்துக்கொள்ள முற்பட்டன. அவ்வாறு விடுதலை வழங்கப்பட்ட பின்னும், மீண்டும் ஜப்பானின் பேராளுமை வலுப்படாமல் பார்த்துக் கொள்ள இரண்டு நாடுகளும் தீர்மானித்தன.

பொதுவுடைமை நாடுகள் இரண்டும் தனக்கெதிராக உடன் படிக்கை செய்துகொண்டதைக் கண்ட ஜப்பான் அமெரிக்காவுடன் உடன்பாடு செய்துகொண்டால் தனக்கு ஆபத்து அதிகரிக்கும் என்பதை அறிந்து 'விடியும்போது விடியட்டும்' என வாளாவிருந்து விட்டது.

கீழ்த்திசை நாடுகளின் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்காக சுற்றுப்பயணம் செய்து நேரடியாகச் சிக்கல்களை அவற்றில் அறிந்து வருவதற்காக அமெரிக்கா சான் ஃபாசுடர் தல்லசு என்பவரை அனுப்பிவைத்தது. தல்லசு கொரியச் சிக்கலை அறிவதற்கு முதலில் கொரியாவுக்குச் சென்றார். இச் சமையத்தில் பொதுவுடைமைக்காரர்களான வடகொரியர்கள் கொரியக் குடியரசின் மீது படையெடுத்துத் தாக்கினர். இதில் அமெரிக்கப் படையினர் தலையிடக்கூடாதென்றும், குடியாட்சி காப்பாற்றப்பட வேண்டுமென்றும் ஜப்பானியர் விரும்பினர். இச் சமையத்தில் ஜப்பானிலிருந்த பொதுவுடைமையினர் கொரியச் சிக்கலை அதிகப்படுத்திக் கலகத்திலீடுபட்டனர். அவர்களை அடக்குவதற்காக 75,000 வீரர்களைக் கொண்ட தேசியப் பாதுகாப்புப் படையும், 8,000 வீரர்களைக் கொண்ட கடற்பாதுகாப்புக் கழகமும் ஏற்படுத்தப்பட்டன. பொதுவுடைமைக் கட்சி தடை செய்யப்பட்டது. அதனுடைய தாளிகைகள் பறிமுதல் செய்யப் பட்டன. இந் நிலையில் ஜப்பான் ஒரு வலுவான—நிலையான படையை வைத்துக்கொள்ள வேண்டுமென்று லிபரல் கட்சியும், டெமாக்ரடிக் கட்சியும் விரும்பின. அமெரிக்கா ஜப்பானுடன் உடன்படிக்கை செய்து கொண்டு தன் நாட்டுப் படைகளைப் பாது காப்பிற்குக் கொடுத்துதவ விரும்பியது. இவையிரண்டும் ஜப்பான் நாட்டு அரசியல் சட்டத்திற்கு மாறானவை என ஜப்பான் உணர்ந்தது. இதனை ஆய்ந்த தலைமையமைச்சர் யொசிதா இவற்றிற்குப் பதிலாக எல்லா நாடுகளையும் சேர்ந்த பொதுப்படையொன்று ஜப்பானுக்கு அளித்தால் நல்லதெனக் கூறினார். தல்லசு எப்படியும் ஜப்பானை அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து வைக்க வேண்டும் என முயன்றுகொண்டிருந்தார். தன் நோக்கம் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படுவதையறிந்த அமெரிக்க தளபதி மெக்கார்தரையும், தல்லசையும் ஜப்பானிலிருந்து அழைத்துக்கொண்டது. தளபதி மெக்கார்தர் சென்றவுடன் மே, 1951-ல் தளபதி ரிட்சுவே (Ridgeway) ஜப்பானின் தலைமையை ஏற்றார். இவர் வந்த ஆறு வாரத்திற்குள் 2,10,000 கலகக்காரர்களைத் தண்டித்துப் பொதுவுடைமைக் கட்சிக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டார்.

### சான்பிரான்சிசுகோ ஒப்பந்தம் (செப்டெம்பர், 1951)

ஜப்பானுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு அதற்கு விடுதலை வழங்க நேசநாடுகள் விரும்பின. சூலை 20, 1951-ல் அமெரிக்காவும், பிரிட்டனும் இரண்டாம் உலகப் போரிலீடுபட்ட எல்லா நாடுகளையும் சான்பிரான்சிசுகோவில் நடக்கவிருக்கும் மாநாட்டிற்கு வரும்படி அழைத்தன. ஜப்பானுடன் சமைதி

உடன்படிக்கை செய்து கொள்வதே இந்த மாநாட்டின் நோக்கமென்றும், அத்தகைய சமைதி உடன்படிக்கையில் இன்னின்ன கூறுபாடுகள் அடங்கியிருக்க வேண்டும் என்பதனையும் அழைப்பிதழுடன் அமெரிக்கா ஒரு போலிகை உடன்பாட்டையும் எழுதியனுப்பியது. தேசிய சீனுவுக்கும், பொதுவுடைமைச் சீனுவுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பப்படவில்லை. செஞ்சீனு, உடன்படிக்கையை ஏற்று ஜப்பானோடு சமைதி செய்து கொண்டால் பயங்கரமான விளைவுகள் ஏற்படுமென்று மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் நாடுகளை அச்சுறுத்தியது. இந்தியாவும், பர்மாவும் மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்துவிட்டன. 'பிலிப்பைன்—அமெரிக்கப் பரிவர்த்தனைப் பாதுகாப்பு ஒப்பந்தம்' (The Philippine United States Mutual Security Pact) ஒன்றைச் செய்து கொள்ளத் தனியாகப் பிலிப்பைன் அழைக்கப்பட்டிருந்தது. ஆசுத்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும் 'அன்சூஸ் ஒப்பந்தம்' (Anzus Pact) ஒன்றைச் செப்டெம்பர், 1951-ல் செய்து கொண்டன. ஜப்பான் சான்பிரான்சிசுகோ மாநாட்டில் கலந்து கொள்ளும் முன் உருசியாவிடமுள்ள தன் நாட்டுப் போர்க்கைதிகளை விடுவிப்பதற்கான வழிமுறைகளைப் பற்றி அந்த ஒப்பந்தத்தில் குறிக்கப்படவேண்டுமெனக் கேட்டுக் கொண்டது. போர்க்காலத்தில் 3,40,000 ஜப்பானியர்கள் உருசியப்படைகளிடம் கைதானுர்கள். அவர்களில் உருசியர்களின் சிறைச்சாலைகளில் 2,30,000 பேர் இறந்து விட்டனர். ஆனுல், தற்போது 78,000 பேர்களே தன்னிடத்திலிருப்பதாகவும் மற்றவர்கள் காணுமற்போய் விட்டனர் என்றும் உருசியா அறிவித்தது.

சான்பிரான்சிசுகோவில் கூடிய மாநாட்டில் 49 நாடுகள் ஜப்பானோடு செய்து கொள்ளப் போகும் உடன்படிக்கையில் கையொப்பமிட்டன. உருசியாவும், அதன் நேசநாடுகளும் கையொப்பமிடவில்லை. ஜப்பானின் தலைமையமைச்சர் யொசிதா தன் நாட்டின் சார்பில் கையொப்பமிட்டார். அதே நாளில் அமெரிக்கா தான் மட்டும் தனியாக ஜப்பானுடன் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. நவம்பர், 1951-ல் ஜப்பான் சான்பிரான்சிசுகோ ஒப்பந்தத்தையும், அமெரிக்கா தனியாகத் தன்னோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் ஏற்றுக் கொண்டது.

சான்பிரான்சிசுகோ ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட ஜப்பான் அதில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளை ஏற்றுக் கொள்ளத் தான் அணியமாக இருப்பதாகவும், தன்னை ஒன்றிய நாடுகளின்

அவையில் ஓர் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள. வேண்டுமென்றும் கூறியது. இந்த ஒப்பந்தத்தின்படி ஜப்பான் தனது இடையீடற்ற இறைமாட்சியைத் தன்னுடைய நாட்டின்மீது செலுத்த உரிமை பெற்றது; கொரியாவின் சுதந்தரத்தை அங்கீகரித்தது; ஃபார்மோசாவில் தனக்குள்ள உரிமைகளை விட்டுவிட்டது. இதைப் போலவே குர்லித்தீவுகள், தென்சக்காலின் ஆகியவற்றின் மீதும் இனி, தான் எத்தகைய உரிமையும் கொண்டாடுவதில்லையெனவும் உறுதியளித்தது. பசிபிக் மாகடலிலுள்ள தீவுகளையும், லூச்சுத்தீவுகள், போனின் தீவுகள் முதலிய சிறு தீவுகளையும் ஒன்றிய நாடுகளின் பாதுகாப்பவையின் கண்காணிப்பின் கீழ் விடச் சம்மதித்தது. இனி, எந்த நாட்டுடனும் ஏற்படும் எத்தகைய சச்சரவையும் ஒன்றிய நாடுகளின் அவையின் (U. N. O.) மூலமே சமைதி முறையில் பேசித்தீர்த்துக் கொள்ளவும் அதுவன்றி, வன்முறையின் மூலமாகப் படையைப் பயன்படுத்தித் தீர்வுகாண முற்படுவதில்லையெனவும் ஜப்பான் ஒப்புக் கொண்டது. ஜப்பானிடம் போர்ப் படையே இருக்கக் கூடாது என்றிருந்த நிலைமையை மாற்றித் தற்காப்புக்காக மிகக் குறைந்த அளவு படையே அது வைத்துக் கொள்ளலாம் என நேசநாடுகள் அனுமதித்தன. இதற்குப்பின் ஜப்பான் தன்னுடைய பாதுகாப்புக்காக அமெரிக்க-ஜப்பானிய ஒப்பந்தத்தின்படி அமெரிக்காவின் படைகளை நம்ப வேண்டியதாயிற்று. அமெரிக்கா தன்னுடைய படைகளை மட்டும் நம்பியிருப்பதைவிட ஜப்பான் ஓரளவு தன் படையை வைத்திருக்கலாம் என்னும் தன் விருப்பத்தைக் கூறியது.

தன் நாட்டில் ஏற்படும் உள்நாட்டுப் புரட்சிகளையும், கலகங்களையும் அடக்குவதற்கு, அமெரிக்காவின் படைகளைத் தவிர வேறு நாட்டின் படைகளை அனுமதிப்பதில்லையென ஜப்பான் கூறியது. ஜப்பான் ஏப்பிரல் 28, 1952ஆம் ஆண்டுக்குப் பின்தான் தன் நாட்டின் எல்லா அதிகாரங்களையும் தானே சுதந்தரமாக ஆள முடிந்தது. ஆனால், சான்பிரான்சிசுகோ உடன்படிக்கை கையெழுத்தான செப்டெம்பர் 8, 1951ஆம் ஆண்டிலேயே நேச நாடுகள் ஜப்பான் முழுமையாகச் சுதந்தரம் அடைந்து விட்டதென்றும், தன்னக, அயலக உறவுமுறைகளைத்தானே ஏற்று நடத்தலாமெனவும் கூறிவிட்டன. இதுவரை நேச நாடுகளின் படைகளும், அலுவல்களும் தங்கியிருந்த எல்லா இடங்களையும், அலுவலகங்களையும் ஜப்பான் மீண்டும் அடைந்தது. ஆனால், ஜப்பான் நாட்டுப் படைகள் மட்டும் அமெரிக்க-ஜப்பானியப் பாதுகாப்பு உடன்படிக்கையின்படி ஜப்பானில் தங்கியிருந்தன. ஜப்பானியர்களைச் சிறிது சிறிதாக சமைதியில் நாட்டங்

கொள்ளச் செய்யவும் உலக சமைதி நிறுவனங்களில் பங்கேற்கச் செய்யவும் அமெரிக்கப் படைகள் பாடுபட்டன. ஒன்றிய நாடுகளின் சமைதி பண்பாட்டு வளர்ச்சிக்குப் பாடுபடும் ஒன்றிய நாடுகளின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவன'த்தில் (Unesco) ஜப்பானைப் பங்கேற்கும்படிச் செய்தன. ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்குமிடையே ஏற்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி ஜப்பான் நாட்டு அரசியல், நிருவாகம் முதலியவற்றைச் சீர்த் திருத்தியமைப்பதில் அமெரிக்கா பெரும்பங்கு ஏற்றது.

பிப்பிரவரி, 1952-ல் அமெரிக்காவோடு செய்து கொண்ட மற்றொரு பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி ஜப்பான் பொதுப் பாதுகாப்பிற்காகத் தன் நாட்டுத் தேசியச் செலவில் 17% ஒதுக்கியது. கொரியப் போரில் அமெரிக்கா ஈடுபட்டதும் படைச்செலவு அதிகரித்தது. எனவே பரிவர்த்தனைப் பாதுகாப்பில் அமெரிக்காவுடன் ஈடுபட்டிருந்த ஜப்பான் பொதுப்பாதுகாப்புச் செலவிற்காகத் தனது தேசியச் செலவில் 25% ஒதுக்கியது. இதற்குப்பின் ஜப்பான் ஒரு முழுச் சுதந்தரம் பெற்ற இறைமாட்சியுடைய தற்காப்பைப் பெற்ற நாடாக விளங்கியது எனலாம். அதன் அரசியல் சட்டம் ஒன்பதாவது விதியின்படி படைவைத்திருக்கக் கூடாது என இருப்பினும், நடைமுறையில் ஜப்பான் அமெரிக்காவோடு செய்து கொண்ட பரிவர்த்தனைப் பாதுகாப்பு ஒப்பந்தத்தால் அமெரிக்க-ஜப்பானியக் கூட்டுப் படையைப் பெற்றதெனலாம். ஏப்பிரல் 21, 1952-ல் தான் நடைமுறையில் விடுதலையடைந்த மறுநாள் ஜப்பான் சான்பிரான்சிசுகோ மாநாட்டிற்கு அழைக்கப்படாத சீனக் குடியரசோடு ஒரு சமைதி உடன்படிக்கை செய்து கொண்டது. அந்த உடன்படிக்கையில், ஜப்பான் பார்மோசா, பெசுகடோரசு ஆகியவற்றின் மீது இருந்த உரிமைகளைத் தான் விட்டு விடுவதாக சான்பிரான்சிசுகோ உடன்படிக்கையின்படி ஒப்புக் கொண்டது வலியுறுத்தப்பட்டது. இதையே தேசியச் சீனவும் ஜப்பானுடன் உறுதிப்படுத்திக் கொண்டது. இவ்வாறு ஜப்பான் தான் விடுதலை அடைந்த மறுநாளே முழு உரிமையுடன் எந்த நாட்டின் இடையீடுமின்றி அமெரிக்காவால் சான்பிரான்சிசுகோ மாநாட்டிற்கு அழைக்கப்படாத பொதுவுடைமைச் சீனவோடு (Red China) ஒப்பந்தம் செய்து கொண்டதிலிருந்து அதற்கு முழு இறைமாட்சியிருப்பதை அறியலாம்.

இவ்வாறு ஜப்பானை விடுதலை அடையச் செய்து முழுச் சுதந்தரத்தைப் பெற்று அமைதியோடு எல்லா நலனும் ஏற்பட உழைத்த தலைமையமைச்சர் யொசிதா அடிமை ஜப்பானிய வரலாற்றிலும், விடுதலை ஜப்பானிய வரலாற்றிலும் மிகச் சிறந்த

இடத்தைப் பெறுவோராவார். ஆனால், ஜப்பானின் விடுதலைக்குப் பின் அந் நாட்டைச் சூழ்ந்து நின்ற பொருளாதார இடர்ப்பாடு, படையற்ற நிலைமை, உருசிய (பொதுவுடைமை)-ஜப்பானிய உறவு முறைகள் ஆகிய முப்பெரும் இடர்ப்பாடுகள் அவரைக் கலக்கத்தில் ஆழ்த்தின, போருக்குப்பின் இதுவரை ஏறத்தாழ ஏழாண்டுகளாக நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பை நேசநாடுகளின் படைகள் குறிப்பாக அமெரிக்கப் படைகள் ஏற்று வந்தன. இதற்குப் பின் அந்த மாபெரும் பொறுப்பை எவ்வாறு ஏற்று நடத்துவதென்றும், பொதுவுடைமைப் பயத்திலிருந்து தான் எவ்வாறு மீளுவதென்றும் யொசிதா சிந்தனையில் ஆழ்ந்தார். தனக்கு விடுதலை வழங்கும் போதே உலக வல்லரசுகள் அமெரிக்க-உருசியக் கட்சிகளாகப் பிரிந்து நின்றதையும், இனி ஜப்பானின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் எந்த பிரிவோடு எவ்வாறு நட்புக் கொள்வதென்றும் யொசிதா மயக்கமுற்றார். தன் நாட்டிற்கு உடனடியாகத் தேவைப் படுவது பொருளாதார வளர்ச்சியாகும். அதனைத் தான் பெற வேண்டுமானால் எல்லா நாடுகளுடனும் வணிக உறவும் மற்ற ஒப்பந்தங்களும் செய்து கொள்ள வேண்டும். 'பழைய வழியே சிறந்த வழி' என்பதுபோல மேற்கத்திய நாடுகளோடு குறிப்பாக அமெரிக்காவோடு உறவு கொள்ளுதலே சிறந்தவழியென யொசிதா கொண்டார். இத்தகைய அவருடைய கொள்கையை எதிரியான அதோயமா தாக்கிப் பேசலானார். இதற்குக் கரணியம் இவ்விருவருக்குமிடையேயிருந்த தனிப்பட்ட பகைமையுணச்சியேயாகும்.

அதோயமா முதலில் லிபரல் கட்சியின் தலைவராக இருக்கும் பொழுது யொசிதாவும் அக் கட்சியிலிருந்தார். 1946ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் வெற்றி பெற்றதும், தலைமையமைச்சர் பதவிக்கு யொசிதாவும் அதோயமாவும் போட்டியிட்டனர். ஆனால், யொசிதாவே தலைமையமைச்சரானார். இதற்குப் பின் அதோயமா அரசியலைத்துறந்து விட்டார். 1951ஆம் ஆண்டில் மீண்டும் லிபரல் கட்சியில் சேர்ந்து தலைமையமைச்சர் பதவிக்குப் போட்டியிட்டார். அதிலும் தோல்வியடையவே லிபரல் கட்சியைவிட்டு 1953-ல் தானே ஒரு தனிக் கட்சியைத் தொடங்கி, அதற்கு 'ஜப்பானிய லிபரல் கட்சி' என்று பெயர் வைத்தார். அக் கட்சி மக்களின் ஆதரவைப் பெறவில்லை. எனவே மீண்டும் பழைய லிபரல் கட்சியிலேயே சேர்ந்தார். அங்கும் அவர் பிடிபடாமல் போகவே அக் கட்சியிலிருந்து வெளியேறிவிட்டார். பிறகு லிபரல் டெமாக்ரடிக் ஆகிய கட்சிகளிலுள்ள முற்போக்குவாதிகளைக் கொண்டு ஒரு புதிய டெமாக்ரடிக் கட்சியை அமைத்தார். இக் கட்சி யொசிதா அமைச்சரவை அமெரிக்காவுடன் உறவு கொண்டு உதவிகளுக்குக் கையேந்தி நிற்பதைக் கண்டித்தது. முதலாளித்துவ

நாட்டின் கூட்டுறவும், அதனிடமிருந்து உதவிகளைப் பெறுவதும் வருங்காலத்தில் ஜப்பானை ஓர் அடிமை நாடாக வைத்திருப்பது போலாகும் என்றும், ஜப்பானின் தன்மானத்தை யொசிதா அமெரிக்க முதலாளியிடம் அடகு வைக்கிறார் என்றும் அதோயமா கட்சியினர் கூறினர்.

இச் சமையத்தில் யொசிதா அமெரிக்காவுக்குச் சென்று, தென் கிழக்கு நாடுகளின் அமெரிக்க உதவித் திட்டத்தில் தன் நாட்டிற்கு பத்து கோடி தாலர் மதிப்புள்ள உதவித் தொகையைக் கேட்டார். ஆனால், ஜப்பானுக்கு உதவி செய்ய அமெரிக்கா மறுத்து விட்டது. இத் தோல்வியை அடிப்படையாக வைத்துக் கொண்டு அதோயமா நாடாளுமன்றத்து உறுப்பினர்களைத் தன் கட்சியில் சேர்த்துக் கொண்டு யொசிதாவைத் தலைமையமைச்சர் பதவியி லிருந்து இறக்கிவிட்டார். தன் நாட்டின் முன்னேற்றத்திற்கு அய ராதுழைத்து அடிமைத்தனம், விடுதலை ஆகிய இரு கட்டங்களி லும் அதன் முன்னேற்றத்திற்குழைத்த யொசிதா திசம்பர், 1854-ல் தன் தலைமையமைச்சர் பதவியைத் துறக்க வேண்டிய தாயிற்று.


அதோயமா அமைச்சரவை (திசம்பர், 1954)

திசம்பர், 1954-ல் புதிய டெமாக்ரடிக் கட்சியின் தலைவரான அதோயமா தலைமையமைச்சராகித் தன் அமைச்சரவையை அமைத்தார். இவர் அமைச்சரவையில் முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த சிகே மித்சு (Shige Mitsu) என்பவரும், டெமாக்ரடிக் கட்சி யின் துணைத்தலைவரும், பிறரும் அமைச்சர்களானார்கள். சிகேமித்சு இரண்டாம் உலகப்போரின்போது அயலக அமைச்சராக இருந்து நேச நாடுகளின் நயன்மை உசாவல் மன்றத்தின் தீர்ப்புப்படி ஏழாண்டுகள் சிறைத் தண்டனை பெற்று விடுதலையானவராவார். இந்த அமைச்சரவை தம் கொள்கைப்படி அமெரிக்காவோடு உறவு கொள்ளாமல் பொதுவுடைமைச் சீனுவோடும், வணிக, அரசியல் உறவு முறைகளைக் கொள்ள முற்பட்டது. அச் சமையத்தில் ஜப்பா னியரும் அமெரிக்காவை வெறுத்தனர்; எனவே இப்புதிய அமைச் சரவையின் போக்கை மக்கள் வரவேற்றார்கள். இதோயமா போருக்கு முன்பு இருந்தது போலவே எல்லா நாடுகளுடனும் அரசியல் உறவு முறைகளைக் கொள்ள விரும்பினார். தென்கிழக் காசிய நாடுகளான பர்மா, தாய்லாந்து, பிலிப்பைன் ஆகிய நாடு களுடன் வணிக ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு அந்நாடுகளில் போர்க் காலங்களில் ஜப்பானால் ஏற்பட்ட பெருஞ் சேதங்களுக்குப் பெருந்தொகைகளை இழப்பீடாகக் கொடுக்கச் சம்மதித்தார்.

யொசிதாவின் அமைச்சரவை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் கவிழ்க்கப்பட்டது என்பதையறிவோம். முறைப்படி அதோயமாவின் அமைச்சர்கள் தேர்தலில் நின்று வெற்றி பெற்று வர வேண்டும். அதற்காக பிப்பிரவரி, 1955-ல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதில் அதோயமாவின் டெமாக்ரடிக் கட்சி 185 இடங்களையும் பெற்றது. லிபரல் கட்சி 112 இடங்களையும், சோசலிசிட்டு இடதுசாரி 89 இடங்களையும், சோசலிசிட்டு வலதுசாரி 67 இடங்களையும் பொதுவுடைமைக் கட்சி 2 இடங்களையும், உதிரிகள் 12 இடங்களையும் பெற்றன. மொத்த இடங்கள் 467 ஆகும். இந்தத் தேர்தலுக்குப் பின்னும் அதோயமாவே அமைச்சரவையை அமைத்தார். இப் புதிய அமைச்சரவையும், உருசிய ஜப்பானிய உறவு முறைகளை வளர்த்துக் கொள்வதில் தீவிரம் காட்டியது. ஆனால், அயலக அமைச்சராக அமர்த்தப்பட்ட சிகேமித்சு உருசியாவுடன் உறவு கொண்டு, ஒக்கைதோ, குர்லி, சக்காலின் ஆகிய தீவுப் பகுதியிலுள்ள கடல்களில் மீன் பிடிக்கும் உரிமையையும் அமெரிக்காவோடு வணிக உடன்பாடுகளையும் பிற உதவிகளையும் பெற வேண்டுமென்றார்.

அதோயமா அமைச்சரவை ஜப்பான் எல்லாவகையிலும் முழு விடுதலை பெறவேண்டுமென்று விரும்பியது. மக்களும், அமெரிக்காவின் முதலாளித்துவக் கொள்கையோ, உருசியாவின் பொதுவுடைமைக் கொள்கையோ தங்களை ஆட்கொண்டு விடாமல் விடுதலையுணர்ச்சியோடு எல்லா வகையிலும் தனித்துச் செயல்பட விரும்பினார்கள். இதனால் ஜப்பானில் மீண்டும் அதன் பண்பாட்டு மறுமலர்ச்சி ஏற்பட்டது. சிண்தோ சமயம் உயிர் பெற்றது. மக்கள் மீண்டும் சிண்தோ கோயில்களுக்குச் சென்றார்கள். தலைமையமைச்சர் அதோயமா தான் ஒரு கிறித்தவராக இருந்தும் சிண்தோ கோயிலுக்குப் போகலானார். பேரரசரும் தன் ஆணையின் மூலமல்லாமல் தனிப்பட்ட முறையில் 'மூதாதையர் வணக்கம்' மறுமலர்ச்சி பெற மறைமுகமாக உதவினார். தானே இத்தகைய வழிபாடுகளைத் தொடங்கினார். 1955ஆம் ஆண்டு போருக்குப் பின் முதன் முதலாக ஜப்பானியப் பேரரசின் 1615ஆம் ஆண்டு விழாவை நாடு முழுவதும் கொண்டாடியது. ஜப்பானியப் பேரரசை முதன் முதல் ஜிம்மு தென்னோ என்பவர் கி.மு. 660-ல் ஏற்படுத்தியதால் 1955ஆம் ஆண்டை 1615ஆம் ஆண்டாகக் கொண்டாடினார்களென்பது குறிப்பிடத்தக்கது. அதற்காகத் தேசிய விடுமுறை விடப்பட்டது. மீண்டும் தெய்விகக் கொள்கையும், பேரரசர் வழிபாடும் பள்ளிகளில் புகுத்தப்பட்டன. சிலர் அரசியல் சட்டத்தையே மாற்றியமைக்க வேண்டுமென்றார்கள். இவ்வாறு மீண்டும் ஜப்பான் தன் பழைய பண்பாட்டை அறுபடாமல் தொடரச் செய்தது.

# இன்றைய ஜப்பான்


ஜப்பான்
ஜப்பான் கடல்
பசிபிக் மகா சமுத்திரம்
ஹொக்கைடோ
சப்பொரா
அக்கிதா
நகோயா
கோச்சி
தொக்குஷிமா
ஹிரோஷிமா

# 16. இன்றைய ஜப்பான்

வளர்ச்சி

(இரண்டாம் உலகப்போரில் அமெரிக்க விமானங்களால் வீசப் பட்ட இரண்டு அணுக்குண்டுகளால் நாகசாகியும், இரோசிமாவும் எரிந்து சாம்பலாயின. இச் சாம்பல் ஜப்பானிய மக்களின் எல்லாத் திட்டங்களுக்கும் முடிவு கட்டும் சாவு மணியாயிற்று. அவர் களுடைய பொருளாதாரம், குமுக, அரசியல் வளங்கள் யாவுமே தவிடு பொடியாயின. இரண்டாம் உலகப் போருக்கு முன் உலகக் கடல் வாணிகக் களத்தில் மூன்றும் இடத்தைப் பெற்றிருந்த ஜப்பானின் கடல் வாணிகம் அடியோடு அழிந்து விட்டது. இவ்வாறு ஜப்பான் 1945-ல் நேசநாடுகளிடம் சரணடைந்த மறு திங்களில் அதன் உற்பத்திப் பெருக்கத்தைக் கணக்கெடுத்து நோக்கினுல் எட்டு விழுக்காடே விஞ்சி நின்றது என்பதை அக்காலப் புள்ளி விவரங்கள் நமக்கு விளக்குகின்கிறன. 1946, பிப்பிரவரித் திங்களில் அதன் உற்பத்தி எட்டிலிருந்து பதினுறு விழுக்காடுவரை உயர முடிந்தது.

இவ்வாறு அதன் உற்பத்தியில் மட்டுமேயல்லாமல் இருக்கை வசதியிலும் போதிய அளவு வசதியின்றி வதைந்தது. இரண்டாம் உலகப் போரின்போது பகை நாடுகளில் வான்வழித் தாக்குதல் களால் ஜப்பானிலிருந்த மூன்றிலொரு பகுதி வீடுகள் அழிக்கப் பட்டன. இதைப்போலவே பல பொதுக் கட்டடங்களும், தொழிற்சாலைகளும், வணிக நிறுவனங்களும், பிறவும் தரை மட்டமாக்கப் பட்டன. இத்தகைய அழிவுகளைக் கணக்கெடுத்தால் 1948-49 பொருளியல் ஆண்டின் மொத்த தேசிய வருமானத்தைப் போல் இரண்டு மடங்காகும் எனப் பேராசிரியர் சி. சி. ஆலன் (Prof. G. C. Allen) என்பார் மதிப்பிடுகிருர்). இந்நிலைமையில் ஜப்பானிய மக்கள் உணவு, உடை, உறையுள், குளிர்ப்பாதுகாப்புச் சாதனங்கள் முதலியவையின்றி எவ்வாறு அல்லலுற்றிருப்பார்கள் என்பது சற்று ஊகித்தால் தெரியும்.

இத்தகைய அவல நிலையில்தான் அமெரிக்காவின் தலைமையி நேச நாடுகள் ஜப்பானின் அரசியல் பொறுப்புகளையேற் அதற்குக் குடியரசு முறையைக் கற்பிக்க முன்வந்தன. பி

குறுகிய காலத்தில் 1953ஆம் ஆண்டுக்குள் ஜப்பானின் பொருளா தாரம் பழையபடி சீரடைந்ததோடு ஏறத்தாழ ஒன்பது விழுக்காட்டிற்கு அதிக உற்பத்தியைப் பெற்றது. இதற்குக் கரணியம் ஜப்பானிய மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாறுதலும், அமெரிக்கரின் பேருதவியுமே ஆகும். அமெரிக்கர்கள் உணவுப்பொருள்கள், மூலப் பொருள்கள், பணஉதவி முதலிய வற்றைக் கொடுத்ததோடு தங்களின் புதிய, தொழில் நுட்ப அறிவையும் ஜப்பானியருக்குதவினர். இதனால்தான் தரைமட்ட மாக்கப்பட்ட ஜப்பான் உலகமே வியக்கும் வண்ணம் மிகக் குறுகிய காலத்தில் பல துறைகளிலும் முன்னேறிவிட்டது. ஜப்பானிய மக்களும், அரசியல்வாதிகளும், வணிகர்களும் ஒருமனதாய்ப் பொளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்னும் ஓரே நோக்கத் துடன் முழு மூச்சாகப் பாடுபட்டனர். 1947ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜப்பானின் பொருளாதார வளர்ச்சிக்கு இடப்பட்ட மூலத னம் 20 கோடி தாலர்கள்தான். இப்பொருளாதார வளர்ச்சிக்கு அறிவுரை வழங்குவதற்காக அமெரிக்காவின் நாடாளுமன்ற உறுப்பினர் தாட்சு (Dodge) ஜப்பானுக்கு வந்தார். இவரால் வகுத்தளிக்கப்பட்ட ஜப்பானியப் பொருளாதாரத் திட்டத்திற்கு 'தாட்சு திட்டம்' (The dodge plan) என்று பெயர். இத்திட்டம் அவ்வளவாகச் சிறந்து காணப்படவில்லை. அதற்குக் கரணியம் தாட்சுக்கு ஜப்பானைப் பற்றிய போதிய அனுபவ அறிவு குறைந்து காணப்பட்டதாகும். ஆயினும் இத்திட்டத்தால் ஜப்பா னுக்குப் பிற்காலத்தில் பெரும் பயன் ஏற்பட்டது.

1952-ல் ஜப்பான் நேச நாடுகளின் பிடியிலிருந்து முழுவிடுதலை பெற்றது. இதற்குப் பின் தானே பல திட்டங்களை வகுத்துத் தன் நாட்டின் மேம்பாட்டிற்கு ஜப்பான் பாடுபடத் தொடங்கியது. ஜப்பானிய வணிகர்கள் யாவரும் ஒன்றிணைந்து பொருளா தாரத்தைப் பெருக்க முற்பட்டார்கள். 1950-ல் ஏற்பட்ட கொரியப் போரில் ஈடுபட்ட ஐக்கிய நாடுகளின் படைகளுக்கு வேண்டிய உணவு, உடை முதலியவற்றைப் பிற நாடுகளிலிருந்து கொடுக்க வேண்டியதாயிற்று. இதனால் ஜப்பானுக்கு நேச நாடுகள் விதித்திருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு ஜப்பானும் ஐக்கிய நாடுகளின் படைகளுக்குப் பொருள்களை வழங்கும்படி அழைக்கப்பட்டது. இவ்வாறு ஜப்பான் தம் பொருள்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பினைப் பெற்றதால் பல இலக்கம் தாலர்கள் ஜப்பானுக்கு வருவாயாகக் கிடைத்தது. இவற்றைக் கொண்டு ஜப்பான் தன் தொழிலகங்களைத் திருத்தியமைத்து அதிகரித்தது. 1955-56-ல் தன்னுடைய ...தில் சமநிலை ஏற்படுத்திக் கொண்டு புதிய

தொழிலகங்களையும், வணிகக் கூடங்களையும் அமைத்துக் கொண்டது. இதன் பயனாக 1930ஆம் ஆண்டிலிருந்ததைவிட இரண்டு மடங்கு உற்பத்தி ஜப்பானில் ஏற்பட்டது.

இத்தகைய உற்பத்தித்திறன் ஜப்பானில் வளர்ச்சியடைந்ததற்கு அது போரில் தோல்வியடைந்து வெறுங்கையோடு நின்ற காலத்தில் அமெரிக்கா அதற்குக் கொடுத்த ஊக்கமும், ஆக்கமும் மற்றொரு காரணியமாகும். அமெரிக்கா பிறநாடுகளுக்குச் செய்த பொருளுதவியைவிட ஜப்பானுக்குச் செய்தது மிகக் குறைந்த அளவேயாயினும், அது காலத்தினால் செய்த உதவியாதலின், அந்நாட்டு மக்களின் மனோ நிலையை மாற்றியமைக்கும் ஒரு பேருதவியாகக் காணப்பட்டது. இவற்றிற்கெல்லாம் மேலாக அந்நாட்டின் பண்டைய பண்பாட்டியல்பும், தன்னம்பிக்கையும், உழைப்பையே முதலீடாகக் கொண்டுள்ள தன்மையுமே ஆகும். 1956-ல் ஏற்பட்ட சூயசுக் கால்வாய்த் தகராறால் ஜப்பானியப் பொருளாதார வளர்ச்சிக்கு வசதிகள் ஏற்பட்டன. எனவே கொரியப் போரைப் போலவே சூயசுக் கால்வாய்த் தகராறும் ஜப்பான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பட்ட இரு பெரும் நல்லூழ் நிகழ்ச்சிகள் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். திறமையும், தன்னம்பிக்கையும்தான் தங்களுக்கு நல்லூழே தவிர, வேறெதுவுமேயில்லை என்கின்றனர் ஜப்பானியர். 1965-ல் ஜப்பானியப் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ள சாதனங்களை ஆய்ந்தறிந்த அந்நாட்டு 'கார்டியன்' (Guardian) என்னும் தாளிகை எஃகு உற்பத்தியும், எஃகுத் தொழிற்சாலைகளும் கப்பல் கட்டுதலும், கடல் வாணிகமும், சிறு தொழில் வளர்ச்சியும், மின் உற்பத்தியுமே ஜப்பானின் அசுர வேக பொருளாதார முன்னேற்றத்திற்குக் காரணியம் என்றது. 1930ஆம் ஆண்டிலேயே ஆடையுற்பத்தியில் அதிகக் கவனம் செலுத்தாமல் தொழிலாலைகளைப் பெருக்குவதில் ஜப்பான் ஈடுபட்டது என்பதை அறிவோம். 1950ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் அதே முறையை ஜப்பான் பின்பற்றத் தொடங்கியது. இதனால் ஜப்பானிய ஆலைப் பொருள்கள் மேலை நாட்டுப் பொருள்களைப் போல் தரத்தில் சிறந்தனவாய்க் காணப்பட்டன.

1956ஆம் ஆண்டின் ஜப்பானிய நாட்டுக் கப்பல் கட்டும் தொழிலை எடுத்து ஆய்வோமானால் அது பல இடையூறுகளுக்கிடையே வளர வேண்டியதாயிருந்தது. குறித்த எடைக்கு மேலும், குறித்த எண்ணிக்கைக்கு மேலும் ஜப்பானியர்களையேற்று வணிகக் கப்பலைக் கூடக் கட்டக்கூடாது என்று [illegible]ந்தன.

விதித்த தடைகளால்தான் ஜப்பான் நாட்டுக் கப்பல் தொழில் தானே முன்னேற முடியவில்லை. நேசநாடுகளின் விதிகளின்படி பதினைந்திலக்கம் டன் எடைக்கு மேலாக எந்த ஜப்பானிய வணிகக் கப்பலையும் கட்டக்கூடாதென்றும், அதன் வேகம் பதினைந்து கடல் மைலுக்கு மேல் இருக்கக் கூடாதென்றும் இருந்த தால் ஜப்பான் இத்தனை தடைகளையும் மீறித் தன் கப்பல் கட்டும் தொழிலில் ஓரளவு முன்னேறி நின்றது. 1950ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொரியப்போரின் போது இத்தகைய தடைகள் நீக்கப் பட்டதால் ஜப்பான் தன் முழு வலிமையையும் பயன்படுத்திக் கப்பல் கட்டும் தொழிலை வளப்படுத்தி, மேற்கத்திய வல்லரசுகளுக் கொப்பாக இத்தொழிலில் முன்னேறி விட்டது.

இதைப்போலவே ஆலை வளர்ச்சியிலும் ஜப்பான் சில நுண்ணிய முறைகளைக் கையாண்டு முன்னேறியது. அச்சு வார்த்தல், பற்றவைத்தல் முதலிய முறைகளைக் கையாண்டு பெரும் பொருள் உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்தி மேற்கத்திய நாட்டு ஆலைப்பொருள்களைவிடக் குறைந்த விலைக்குத் தன் நாட்டு ஆலைப்பொருள்களை விற்கத் தொடங்கியது. இதனால் பரந்த சந்தையை மிகக் குறுகிய காலத்தில் பிடித்து விட்டது. இன்று அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் விலையுயர்ந்த ஆலைப் பொருள்களில் டாங்கிகள் மிகவும் பெயர் பெற்றவையாகும். ஜப்பான் நாட்டுப் பெயர் பெற்ற கப்பல்களும் பல பெரிய இயந் திரங்களும், மித்சு, பிசி கப்பல் கட்டும் நிறுவனம் போன்ற நிறுவனங்களாலும் பல குத்தகை நிறுவனங்களாலும் செய்யப்படு கின்றன. ஆனால், நாட்டுப் பாதுகாப்புச் சாதனங்கள் யாவும் 'யவாதா தொழில் நிறுவனம்' போன்ற அரசாங்க நிறுவனங்களில் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. மற்ற பெருந்தொழில் நிறுவனங்கள் அரசாங்கத்தின் உதவி பெற்றோ அல்லது அதன் நேரடிப் பார்வையிலோ நடைபெறுகின்றன. 1930ஆம் ஆண்டி லிருந்து இன்றுவரை மிகச் சிறந்து காணப்படும் அரசாங்க நிறுவனம் 'யவாதா தொழில் நிறுவனம்' ஆகும். இந்நிறு வனத்தோடு தொடர்புள்ள ஆறு பெரிய நிறுவனங்களை அரசாங்கம் தனியாரின் கண்காணிப்பில் விட்டிருக்கிறது. 1937-ல் சீனாவுடன் நடத்திய போரின்போது ஜப்பான் ஆசியாக் கண்டத்தில் வடசீனா, மஞ்சூரியா, கொரியா முதலிய இடங்களில் தன் தொழிலகங்களை ஏற்படுத்தியதை அறிவோம். இரண்டாம் உலகப்போரின்போது தன் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை இவ்விடங்களுக்கெல்லாம் ஏற்றுமதி செய்து நிறைந்த வருவாயைப் பெற்றதோடு, அவ்விடங்களிலிருந்து தேனிரும்பு, இரும்புத்தாது, நிலக்கரி முதலியவற்றை ஜப்பான்

பெற்றது. வடசீனவும் சக்காலின் தீவும் இப்பொருள்களை ஜப்பானுக்கு அதிகமாக உதவிய நாடுகளாகும். இரண்டாம் உலகப் போருக்குப்பின் இத்தகைய மூலப் பொருள்களின் இறக்குமதி குறைந்து காணப்பட்டாலும் நேசநாடுகளின் உதவியால் பெறப்பட்டன.

ஜப்பான் நாட்டில் எஃகு, நிலக்கரி முதலிய மூலப் பொருள்கள் அதிகமாகக் கிடைப்பதில்லை என்பதை அறிவோம். எனவேதான் அது மலேயாவில் தனக்குச் சொந்தமாகவுள்ள சுரங்கங்களிலிருந்து இரும்புத் தாதுக்களையும், பிலிப்பைன் தீவுகளிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் தேனிரும்பையும் பெற்று வந்தது. மற்ற மூலப் பொருள்களைச் சீனு, குவாண்டுங், மஞ்சூரியா, கொரியா முதலிய நாடுகளிலிருந்து பெற்றது. 1948ஆம் ஆண்டுக்குப்பின் ஜப்பான் உலக வைப்பகத்திலிருந்தும், அமெரிக்காவிடமிருந்தும் பெற்ற உதவியால் தனது மூலப் பொருள்களின் பெரும் பகுதியை அமெரிக்காவிடமிருந்து பெற்றது. தன் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக ஜப்பானிய அரசாங்கம் பல தொழிற்சாலைகளிலிருந்த தனது உரிமையைத் தனியாருக்கு விற்றுவிட்டது. இதனுலும், 'டாட்ஜ்' திட்டத்தாலும், ஜூன், 1950-ல் ஏற்பட்ட கொரியப் போரினுலும் ஜப்பான் திட்டமிட்டுத் தன் தொழில்களை வளர்ப்பதில் வெற்றி கண்டது. குறிப்பாக 1951ஆம் ஆண்டிற்குப் பின் அதன் இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள் போருக்கு முந்திய நிலையை அடைந்ததோடு தொழில் நுட்பப் புரட்சியையும் ஏற்படுத்தின. இதனுல் நாடெங்கிலும் புதிய இயந்திரங்கள் இயங்கத் தொடங்கியதோடு மின்விசையால் இயக்கப்படும் பல புதிய தொழிற்சாலைகளும் ஏற்படுத்தப்பட்டன. 1951-ல் தொடங்கிய அதன் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தால் இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள் திட்டமிட்டதற்கேற்றுற்போல் வெற்றி பெற்றுவிட்டன. 1956-ல் தொடங்கப்பெற்ற அதன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தால் தொழில் நுட்பங்கள் மிகச் சீரிய முறையில் வளர்ச்சி பெற்றன. இதனுல் பொருள் உற்பத்தியின் செலவு மிகவும் குறைந்தது. மிகச் சிறந்த இயந்திரத்தையும், மிகக் குறைந்த செலவில் ஜப்பானியர் உற்பத்தி செய்தனர். 'யவாதா தொழில் நிறுவனம்', 'நிப்பன் செய்தேத்சு நிறுவனம்', 'ஃபூசி இரும்பு, எஃகு நிறுவனம்,' 'நிப்பன் கோகன் நிறுவனம்' ஆகியவை புதிய முறையில் திருத்தியமைக்கப்பட்ட இயந்திர நிறுவனங்களில் முக்கியமானவையாகும். இவற்றைத் தவிர சிபாவிலுள்ள 'கவாசகி எஃகு நிறுவனமு'ம், 'சுமுதோமு மாழைத் தொழிற்சாலை நிறுவனமு'ம், 'கோபி தொழில் நிறுவனமு'ம் ஜப்பானின் மிகப் பெரிய நிறுவனங்களாகும்.